உ

சிவகணபதி துணை

பராசர ஸ்மிருதி

மாதவியவுரை

தமிழ் மொழி பெயர்ப்பு.

முதற் புத்தகம்.

VOL. I.

இஃது

சகலசாஸ்திர விளக்கச் சங்கத்தார் கேட்டுக் கொண்டபடி

பிரஹ்மிடென்ஹீகாலேசு கன்னடபண்டிதர்

பிரமஶ்ரீ, சித்தாந்தி-பெங்களூர்

சுப்பிரமணியசாஸ்திரியார் உதவியால்

கூட பிரஹ்மிடென்ஹீ காலேசுதமிழ்ப்புலமை

சமரசவேத சன்மார்க்க சங்கத்து வித்வான்

தொழுவூர். வேலாயுதமுதலியாரால்

மொழிபெயர்க்கப்பட்டு

கவுண்டான்டுசெனரல் ஆபீசு சூப்பரிண்டெண்டான்மி

ம-ரா-ரா-ஶ்ரீ,

கூடலூர். கனகசபைபிள்ளை

ம-ரா-ரா-ஶ்ரீ,

மயிலை. சிக்கிட்டிசெட்டியார் குமாரர்

சோமசுந்தரசெட்டியார்

இவர்களால்

மிமோரியல் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1880ஆவ



வி ள ம் ப ர ம் .

இப்புத்தகம் வேண்டியவர்கள் சென்னப்பட்டணம் (Memorial Press.) மிமோரியல் அச்சுக்கூடம் மயிலை. வீராசாமிசெட்டியார்.

அல்லது

சென்னப்பட்டணம் முத்தியாலுப்பேட்டை இராமசுவாமித்தெருவு உ0 - வது நெம்பர் வீட்டில் கூடலூர். நமசிவாயம்பிள்ளை இவர்களிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகக் கிரயம்.

	Rs.	A.	P.
முதல் புத்தகம் VOL. I. (ஆசாரகாண்டம் ழ-வது அத்தியாயம் பாரம்எசு முழுமையும் காலிக்கோ கட்டடம்)	4	8	0
தபால் கூலி	0	6	0
2-வது புத்தகம் VOL. II. (ஷ காண்டம் உ-ங-வது அத்தியாயங்கள்) முடிவாகி வருகின்றது உடனே வெளிப்படுத்தப்படும்.			

உ

பராசரம்.

அத்தியாய அட்டவணை.

—:o:—

அத்தியாயம்.	விடயம்.
	ஆசாரகாண்டம்.
ஸ்-வது. அத்தியாயம்...	சதுர் வருணங்களின் பொதுச்சிறப்புத் தருமம்.
உ-வது. ,, ...	உழவு முதலிய ஜீவனோபாயம், ஸ்ரகஸ்தாதி ஆசிரமங்கள்.
ஙு-வது. ,, ...	ஆசூசவகைகள், பிதிர் சிராத்தத்தொகுதிகள்.
	பிராயச்சித்தகாண்டம்.
ச-வது. ,, ...	பிரகிரண பாவங்களுக்குப் பிராயச்சித்தம், புத்திரபேதங்கள், பரிவேதனப் பிராயச்சித்தம்.
ரு-வது. ,, ...	நாய்கடித்தன் முதலியவற்றின்பிராயச்சித்தம், தன்மரணப்பிராயச்சித்தம், ஆகிதாக்கினிப் பிரேதகருமவிதிகள், பிறவும்.
சு-வது. ,, ...	மலினீகரணப்பிராயச்சித்தம், சண்டாளந்தபோஜனமுதலியவற்றின் பிராயச்சித்தம், செம்புமுதலியவற்றின் சுத்தி, அந்தசுத்தி, இரதசுத்தி, பிறவும்.
எ-வது. ,, ...	பூமிசுத்தி, கிரகசுத்தி, பிறவும்.
அ-வது. ,, ...	கோவதை முதலியவற்றின் பிராயச்சித்தம் பிறவும்.
க-வது. ,, ...	அழுதல், பசுவினையடித்தல், அரசர்கள் மாதர்கள் மயிர் கழித்தன்முதலியவற்றைப்பற்றிச் செய்யத்தக்க பிராயச்சித்தம், பிறவும்.
கo-வது. ,, ...	புணரத்தகாத மாதனைப் புணர்தலின் பிராயச்சித்தம்.
கக-வது. ,, ...	புசிக்கத்தகாதனவற்றைப் புசித்தன் முதலியவற்றின் பிராயச்சித்தம்.
கஉ-வது. ,, ...	கூறுதொழிந்த எல்லா ஒழிபுகளையுந் தொகுத்துக் கூறுதல்.

உ

பராசரம்.

பஞ் - வது, ஆசாரகாண்டம்.

அதிகார அட்டவணை.

—:o:—

பஞ்-வது-அத்தியாயம் சாதுர்வருண பொதுச்சிறப்புத்தருமம்.

	பக்கம்.
பாயிரம்.	
கடவுள்வாழ்த்து ...	1
உரையாசிரியர்கடவுள்வாழ்த்து	,, 5
உரைசெய்வித்தஅரசன்சிறப்பு...	11
உரையாசிரியர்வரலாறு ...	12
தலிலுகாப்பாயிரம் ...	,,
நூல்பிரமாணமாதற்குக்காரணம்	,,
வேதம்பிரமாணமாமாறு ...	13
மிருதிகாட்சி அனுமானம் உரை யென்னும்அளவையுளொன்று மாகாதென்னுமறுப்பு ...	14
ஷ சித்தாந்தம் ...	15
இப்பாசாரம்பிரமாணமாமாறு...	17
பராசரர்பெருமை ...	19
பராசரன்மிருதிவகைமை ...	20
விகாரசொரூபம் ...	,,
பிராயச்சித்தசொரூபம் ...	23
இந்நூலிலுள்ளஅத்தியாயங்களும்பொருட்பிரிவுகளும் ...	25
பராசரத்திற்கு மற்றையவற்றிற் சிலுள்ளபேதம் ...	32
மீமாம்சைத்வம் ...	
நூல்.	
முதல் அத்தியாயம் ஆசாரகாண்டம் தல்லாலது அனுபந்த சதுட்டயம் ...	35
சருமவுணர்ச்சிகாரணம் ...	37
பிரமாதிகாசிகள் ...	38
தலஞ்செய்பூமி—விசேடம் ...	39
தலைச்சித்தபூமி ...	41
யோகியினுடயன், ஆகாயம்வழி, தடை, ...	42

	பக்கம்.
அனுபந்த சதுட்டயத்துள்சம்பந்தம்வருமாறு ...	43
இருடியென்பதனுணை ...	44
அதிகாரிவருமாறு ...	45
தேவர்கட்குக்கருமாதிகாரவிடயம்பற்றி ...	46
பிரதற்பதிகருமம் ...	47.
அக்கினிஆதானவிதி ...	49
ஆதானமில்லாவேள்வி ...	51
பசுக்களுக்குக் கருமாதிகாரவிடயம்பற்றி ...	52
பயன்வருமாறு, தருமத்திற்குப்பயன் ...	54
நித்தியகருமத்தின்விடயம் ...	55
நித்தகருமம் சுவர்க்கப்பேற்றுக்குஞ்சித்தமாகும்விடயம்பற்றி.	,,
நித்தகருமம்மந்திரமும்பலமும்..	56
காலசந்திவிடயம் ...	,,
மாத்தியாநீகசந்தி ...	,,
மாலைச்சந்தி ...	,,
நித்தகருமம்முத்திக்குமேதுவாதற் பற்றியது ...	59
பயன்பற்றிய நித்தகருமத்தினளவு ...	60
நித்தகருமத்திற்கும் காமியகருமத்திற்கும்உள்ளபேதம் ...	61
அந்தித்தகருமவகைமை ...	62
விடயம்வருமாறு ...	63
தருமலக்ஷணம் ...	,,
சுரௌதஸ்மார்த்ததருமம் ...	64
வேதங்களை வழங்கு வித்தவரிவரை ...	66

	பக்கம்.
வியாசனைமுனிவர்கள்தருமம்வி ளுதற்குக் காரணம் ...	67
வியாசரும்முனிவர்களும்பராசர னிடஞ்செல்லல் ...	68
தருமவிலக்கணம் ...	69
பராசரர்தவமகிமை,வதரிகச்சிற ப்பு ...	72
வியாசர்குருசேடபரம்பரைவிளக் கல் ...	74
பராசரர்என்னும்மொழிப்பொரு ள் ...	75
குரு'பத்திவிடயம் ...	,,
பராசர்வியாசனை ஆசீர்வதித்த ல் ...	77
அவனைவியாசர்முதலியோர் உப சரித்தல் ...	78
வியாசர்தருமம்விளுதல் ...	79
தருமத் தோற்றக் காலமும் நிலை மையும் ...	81
தருமவகைமை ...	82
தருமம்இடபரூபமாய்யுகபேதத் தால்-சு-சு-உ-க-பாதங்களால் நடக்கும். ...	,,
பொதுத்தருமம் (சு - வருணங்களுக் கும்) ...	84
சிறப்புத்தருமம் ,, ...	85
தருமவழிவம்பற்றியவிசாரம் ...	87
தருக்கர் ...	,,
மீமாம்சகர் ...	,,
பாட்டர் ...	88
பிரபாகரர் ...	,,
தருமம்பிரிப்பதுஅருமை ...	,,
தருமவழிவம் ...	89
மனுக்கூற்றுமேல்விளுவிடை ...	,,
தூலதருமம் ...	91
சூக்குமதருமம் ...	,,
உலகவழக்கு ...	,,
வேதவழக்கு ...	,,
தருமராஜன்கூறியது ...	,,
பராசர்விடை ...	92
தருமவியாசோபாக்கியானம் ...	,,
தருமநூல்களின்தோற்றம்ஒடுக்க ம்கூறியது ...	93
கற்பபேதம் ...	94
மஹாகாலகற்பங்கள்அளவின்மை	95

	பக்கம்.
பிரளயபேதம் ...	95
பிராகிருதபிரளயவிசாரம் ...	96
உபநிஷத்துள்கூறியஉலகஒடுக்கம்	98
வேதத்துள்கூறியசிருட்டிமுறை.	100
உபாதானகாரணபேதவாதியர்ப கூம் ...	102
பரமாணுவாதி முதலியோர்பக்ஷ ம் ...	105
ஈச்சுரன்சங்கற்பவிசாரம் ...	106
ஆகாயமுதலிவற்றின் சிருட்டிமு றை ...	108
வேதவிளக்கஞ்செய்தவர்கள் ...	110
வேதத்தைப்பிரித்தவர் ...	,,
வேதசாகைகளைவிளக்கினவர்கள்	,,
கற்பசூத்திரக்காரர்கள் ...	,,
மீமாம்ஸைசெய்தவர்கள் ...	,,
ஸ்மிருதிகருத்தர்கள் ...	,,
தருமசிருட்டிகாரணம் ...	112
வேதத்திற்குக்கருத்தர்இல்லையெ ன்பது ...	114
தருமம் வெள்ளம்போலு நித்த மென்பது ...	119
யுகபேதத்தாலுள்ள தருமவிசே டம் ...	120
யுகதருமபேதங்கள் ...	122
யுகபேதத்தாற்பிரமாண பேதமா மாறு ...	125
காலம்பற்றி இடத்தால் விளையு ங்குற்றம் ...	,,
ஒழிக்கத்தக்க பாவங்களினது நி மித்தவகை ...	126
சாபம்பலிக்குங்காலபேதம் ...	127
தருமத்தின் ஏற்றக் குறைவுக்குரி யநிமித்தம் ...	,,
நிமித்தத்தாலுண்டாகிய தானத் தினளவு ...	128
கலிவல்லமை ...	,,
யுகதருமபேதங்களுக்குக்காரண ம் ...	129
பிராணசொரூபவிசாரம் ...	130
யுகவல்லமையுணர்ச்சியா லாம்ப யன் ...	132
கலியுகத்தில்ஒழிக்கத்தக்கன ...	137
பராசரர் நூற்சிறப்பு, அவர்மகி மை ...	151

	பக்கம்.
மேற்பெறுகையின்காலம்	... 229
ஏற்றவினாவை	... 230
தானமேலாதகாலமும்இடமும்	.. 231
அரசனுற்பெறுதலே யாகாதென்பது	... ,,
ஏற்கத்தக்க அரசன்விடயம்	... 233
தானம்வாங்கத்தகாதவன்	... 235
கற்றவன்விடயம்	... 236
சத்தாத்தராதிகரணநியாயம்	... 237
சிரத்தையில்லாக்கருமவிடயம்	... 238
அத்தேவதாசொருபநிச்சயம்	... ,,
இனி அச்சுருதிக்கு மாதவாரியர் கூறியவுரை	... 243
மூதற்கடவுணிலக்கணம்	... 245
உபாசனை அநுட்டானபேதத்தால் பயன் வேறுபாடு	... 250
கடவுளேபயன்றருவோர் என்பது	... 257
ஆதலால்கடவுளருளே பயனுக்கு வழியென்பது	... 259
அதிதிபூசை=விருந்தோம்பல்	... 260
பூசியாதவன் தின்பமுறுவன்	... ,,
விருந்தினர்புலந்து போதலால்வரும்பயன்	... 261
பூசித்தவன்பெறும்பயன்	... ,,
தனக்கென்றுசில யேற்றலாகாது.	262
ஓதற்பின்னுஞ் சொல்லின்பொருள்	... 263
இனிவேதியனிலக்கணம்	... ,,

மூதன் மூன்று வருணத்தாருக்கும்.

பொதுநித்த வனுட்டானம் ஷட்கருமம்	... 265
(மூதற்காலகருமம்)	
யவாகூபாகநியாயமாமாறு	... 266
படுக்கைவிட் டெழுங் காலமுஞ் செய்யத்தக்கதும்	... 267
பிராமமுகூர்த்தத்தில் சிந்திக்கத்தக்கபொருள்விசேடம்	... 269
காலையிற்கடவுளை வழிபடுதல்	... ,,
விழித்தவுடன் நோக்கத்தக்கன நோக்கத்தகாதன	... ,,
மூத்திரபுரீடங்களை யொழிக்கும் விதி	... 270

	பக்கம்.
மேற்பரப்பக் கூறியபுல் வகைகூறுகின்றது	... 271
அவற்றிற்குரியதிசைகள்	... ,,
அக்காலத்தில் பூணநூலிருக்குமிடம்	... ,,
அக்கருமத்திற் குரியதிசைகளைவகுக்கின்றது	... 272
மலங்களைப்பந்திக்கலாகாதென்பது	... 273
இனிஇடநியமம்	... 274
செய்யத்தகாதவிடம்	... ,,
சௌசம்=சுத்திவிதி	... 276
சௌசத்திற்குரியமண்	... 277
விலக்காகியமண்	... 278
சௌசத்துக்குரியகை	... 279
சௌசத்திற்குரியதிசை	... ,,
மண்ணிடவேண்டியஅளவை	... ,,
இன்னவனுக்குஇத்தனை சௌசம் என்பது	... 280
ஒழிபு	... 281
சௌசம்செய்யுமுறை	... ,,
சௌசமண்ணினளவை	... 282
சௌசத்தைக் குறைக்கலாகாதென்பது	... 283
மனஞ் சுத்தமாகாவழி சௌசத்தால்சுத்தமில்லை	... ,,
சௌசம்செய்யவேண்டியநிமித்தம்	... 284
வாய்கழுவுதலின்வகை	... ,,
ஆசமனவிதி	... 285
தீர்த்தவிலக்கணம்	... 286
ஆசமனதீர்த்தவிதி	... 287
அங்கீரளவையும்வகைமையும்	... 288
ஆசமனத்துள் தொடுமிடம் = அங்கஸ்பரிசம்	... ,,
ஆசமனத்திற்குநிமித்தம்	... 289
ஆசமன மிருவிசை செய்தற்குக் காரணம்	... 291
ஆசமனத்திற்குமறுப்பு	... 292
உண்டபின்பற்சோதித்தல்	... 293
எச்சிலல்லாதன	... ,,
முகரோமசுத்திவிடயம்	... 295
ஆசமிக்கத்தகாதன	... ,,
ஆசமனத்திற்குப்பவித்திரம்	... 297
ஆசமனத்திற்குரியபாத்திரம்	... 298

	பக்கம்.
ஆசமனத்திறுல் திருத்தியடைபவர்	... 299
ஆசமனம் செய்யாவழி வருங்குற்றம்	... 300
தந்தாவனவிதி	... 302
பற்கோலளவு	... 303
பற்கோலுக்குரியமரம்	... ,,
பற்கோல் தொடுவதற்குரியமந்திரம்	... 304
பல்விளக்குதலுக்கு விலக்காயுள்ளன	... ,,
ஒழிபு	... 306
தருப்பைவிதிபவித்திரம்	... 307
தருப்பைவகையும்தகுதியும்	... 308
தருப்பையில்லாவழி	... ,,
தருப்பையுள் எழுவகை யாகிய "பருஹிசு"	... ,,
விலக்காகியதருப்பைகள்	... ,,
தருப்பைபறிக்குங்காலம்	... 310
பவித்திரந்தரித்தலின்பயன்	... ,,
பவித்திரத்திரம்	... ,,
(க)—ஸ்நான விதிவருமாறு	... 311
உதயமுழுக்கு	... 312
ஸ்நானவகை	... 313
காலநீராடல்வகை	... ,,
ஸ்நானகாலநியமம்	... 314
நீராடலினுறுப்பாகிய தருப்பணம்.	... ,,
ஆடையுடுத்தல்	... 316
நீராடியபின்செய்யலாகாதன	... 317
ஆடையுரிமை	... ,,
தக்க ஆடையில்வழிகருமஞ்செய்யலாகாது	... 318
நக்கினனிலக்சணம்	... 319
ஓராடையாகாதென்றது	... ,,
ஒழிபு	... ,,
புண்டரவிதி	... 320
வைதிக வெண்ணீற்றுப் புண்டரவிதி	... ,,
திருவெண்ணீறு தரியாமலிருக்கலாகாது	... 321
ஊர்த்துவபுண்டரம்	... 322
இதுவும்-ஸ்நானவிதி	... 325
அறுவகைநீராடலாவன	... ,,

	பக்கம்.
நித்தஸ்நானம்வருமாறு	... 325
நைமித்தஸ்நானம்	... 326
காமியஸ்நானம்	... ,,
கிரியாங்கஸ்நானம்	... ,,
மலமொழிக்கும் ஸ்நானம்	... ,,
கிரியாஸ்நானம்	... 327
மாத்தியாங்கிகஸ்நானம்	... ,,
மத்தியாங்கஸ்நானவிதி	... ,,
உச்சியின் முழுகத்தக்கவனும் தகாதவனும்	... 328
ஆச்சிரமம்—நிலைமை வேறுபாட்டால்ஸ்நானவேறுபாடு	... ,,
நீராடலின்விசேடம்	... ,,
மந்திரம்வேண்டாதார்	... 329
நீராடலுக்குரியமண்ணின் விசேடம்	... ,,
அங்கப்பிரக்ஷாளனம்	... ,,
மிருத்திகை ஸ்நானம்	... 330
கோமய ஸ்நானம்	... 331
தாருவை ஸ்நானம்	... ,,
அபாமார்க்கஸ்நானம்	... ,,
தீர்த்தெய்வப்பிரார்த்தனை	... ,,
தீர்த்தஆவாஹனம்	... 332
ஸ்நானத்திற்கு எய்தியதன்மேலெய்துவித்தல்	... 334
நைமித்திக ஸ்நானம்	... ,,
சுசேல ஸ்நானம்	... ,,
ஸ்நானத்திற்குரியசலம்	... 337
காமிய ஸ்நானம்	... ,,
மலாபகர்ஷண ஸ்நானம்	... 340
வேண்டும்போதுளண்ணெயிட	... 341
கிரியாங்க ஸ்நானம் வருமாறு	... ,,
கிரியா ஸ்நானவிதி	... 342
ஸ்நானசலம்	... ,,
நீரின் ஏற்றக்குறைவு	... 343
கங்கை நீரின் சிறப்பு	... ,,
விலக்காகியநீர்	... ,,
பிராயச்சித்தஞ் செய்துக்கொள்ளத் தக்கநீர்	... 344
அதன் ஒழிபு	... ,,
வெந்நீர் விடயம்	... ,,
அவ்வெந்நீர்முழுகும் விசேடவிதி	346
இதுவும் ழூ-வது.	
சந்தியாவந்தனவிதி	... ,,
சந்தியின் வேறுபாடு	... 347

	பக்கம்.
சந்தியா தேவதையின் பெயர் வேறுபாடு	... 347
சந்தியாதெய்வநிறம்	... 348
சந்திமும் முதற்றலைவர் வழிவா மாறு	... ,,
காயத்திரி மூர்த்தித்தியானம்	... ,,
சந்திகாலம்	... 350
சந்தியோபாசனைவகை	... 351
பிராணயாம விலக்கணம்	... 352
பிராணயாமபேதம்	... 353
சந்திக் கடனுக் குரிய மார்ஜனம்	354
மந்திரோதகபானம்	... 356
பாவக்கழிவு	... ,,
அருக்கியம்	... 357
சூரியோபஸ்தானம்	... 358
உபஸ்தானம்=பிரார்த்தனை	... ,,
மாத்தியாந்நிகவிசேடம்	... ,,
சந்திக்கு இட விசேடம்	... 359
சந்தியின் விசேடம்	... 363
சந்தி செய்யாவிடிற் பாவமென் பது	... 364
சூதக முதலிய காலவிதி	... 365
பிறிதுவிதி	... ,,
(2)—வது. செபவிதி	... 366
செபவிலக்கணம்	... ,,
செபவகை	... 367
வாசிகசெபவிலக்கணம்	... ,,
உபாம்சுசெபவிலக்கணம்	... ,,
மானதசெபவிலக்கணம்	... 368
இச்செபத்தின்தரம்	... ,,
அச்செபத்தின்பயனதிதரம்	... ,,
செபத்தில் எண்ணிடும் கர இலக் கணம்	... ,,
செபசம்பத்தின்காரணம்	... 369
செபகாலவரையறை	... ,,
மத்தியாந்நசெபம்	... ,,
செபகாலத்தில் ஓழிக்கத்தக்கன.	,,
செபத்திற்குரியஇடம்	... 371
செபத்தின்தொகை	... ,,
செபமாலிகை	... 372
செபமாலையின்பயன்	... ,,
செபமாலைமணியின் கணக்கு	... 373
காயத்திரி செபத்தின் சிறப்பு	... ,,

	பக்கம்.
(3)—வது. ஹோமவிதி	... 374
ஹோமஞ்செய்வோனியல்பு	... 375
அவருள் ஏற்றக்குறைவு	... ,,
ஹோமத்திற்குத் தானிருக்கு மிடம்	... 376
நிலவனில்லாவழி	... ,,
ஹோமத்திற்குரியகாலம்	... ,,
அநுதிதகாலம்	... 377
சமயாத்தயுஷிதகாலம்	... 378
உதிதகாலம்	... ,,
ஹோமகாலத்திற்குரிய அநுகற் பம்	... ,,
ஹோம விடயத்தில் ஆபற்கால தருமம்	... 379
மீட்டும் தானஞ் செய்தல்	... 380
ஹோமத்திரவியங்கள்	... ,,
ஆருதிக்கு அளவு	... 381
ஹோமஞ்செய்தற்குரியவிதி	... 382
ஹோமஞ்செய்தற்குரியதீ தியின்வகையும் தொழில் வகை யும்	... 383
அவ்விருவகைத்தியினையும் அணைட் டிக்கும்முறை	... ,,
அத்திக்காரியஞ் செய்யத் தக்கவ ன் திறம்	... ,,
வேள்வித்தீக்காரியமும் சித்தசரு மமே என்பது	... 384
ஹோமத்தின் சிறப்பு	... ,,
வேள்விமுடிந்தபின்திருநீறுபுனை தல்	... 385
இனித்தேவதார்ச்சனைக்குரிய கர முதலியன	... 386
வேள்வித்தீக்கருமம் முடிந்தபின் செய்யத்தக்கன	... 387
மங்கலப்பொருளைநோக்குதல்	... ,,
நெய்நோக்கு	... ,,
ஆட்டமங்கலம்	... ,,
மூதற்கண் வணங்குதற் குரியார்	389
அபிவாதனமுறை	... ,,
இனி வணங்கப்பட்டவன் விட யம்	... 390
ஹோமம் விலுதல்	... 392
பணிவுமுதிர்முத்தானிலக்கணம்	... ,,
பணிவுமுதிர் சிறியோர் விடயம்	... ,,
வேதியன்மாட்டேனையர்விடயம்	393

பக்கம்.

அஷ்டவசுக்கள் ... 430
ஏகாதசருத்திரர் ... ,,
துவாதசாதித்தர் ... ,,
அதிவ்வியபிதிர்தருப்பணம் ... 431
தருப்பணத்தில்பிதிரர்முறை ... ,,
தந்தையுள்ளவன்செய்யும் தருப்பணம் ... 432
மூடிவானீராஞ்சலி ... 433
சருக்கமானதருப்பணம் ... ,,
இயமதருப்பணம் ... 434
பீஷ்மதருப்பணம் ... 435
தருப்பணச்சிறப்பு ... ,,
தருப்பணஞ்செய்யாவழி வருங் குற்றம் ... ,,
ஆடைபிழிதல் ... 437
சூரியதருப்பணம் ... 438

(ச)—வது. தேவபூசனை ... ,,
அறுவகைத்தரிசனம் ... 439
விஷ்ணுஅருச்சனை ... ,,
பூசிக்கத்தக்கவிடம் ... 440
அதிகாரியர்பேதம் ... 441
புருடசூக்தநியாசம் ... ,,
புருடசூக்தத்திறற்பூசித்தல் ... 442
சூரியமண்டலத்துள் விஷ்ணுத்தியானம் ... 443
விஷ்ணுபூசனைச்சிறப்பு ... 447
சிவபூசைவிதி ... 448
சிவபூசைச்சிறப்பு ... 453
திருமாலியபிரசாதம்தரித்தல் ... ,,
அருச்சனைசெய்யாதார்குற்றம் ... 454
சூருபூசை ... ,,

(ஐந்தாங்கால கருமம்)

(ஞ)—வது-வைசுவதேவப்பிரகரணம் ... 455
வைசுவதேவவிதி ... 457
பஞ்சசூனம் ... 458
வைசுவதேவகாலம் ... 459
வைசுவதேவஹோமம் ... ,,
வைசுவதேவாக்நிசமஸ்காரம் ... 460
வைசுவ தேவத்திரவிய அநுகற்பம் ... ,,
அதக்கினிகன்வைசுவதேவம் ... 461
பூதயாகம் ... 462

பக்கம்.

அந்தியர்மாட்டு வேதியன் விடயம் ... 393
சூத்திரனுக்கு வணங்கிய வேதியன் விடயம் ... ,,
அபிவாதனஞ் செய்யத்தகாத விடம் ... 394
பாதோதகசங்கிரகணம் ... ,,
பாதோதகசங்கிரகணவிலக்கணம் ,,
அவ்வந்தனஞ்செய்யத்தகாதவிடம் ... 395
அபிவாதனஞ்செய்யலாகாதவன் செய்யப்படாதவன் ... 396
குரவனியல்பு ... 397
குரவராவார் ... 398
அவ்வுள்ளேற்றத்தாழ்ச்சிமுறை ... 399
இனி உபாத்தியாயர் இலக்கணம் 401
ஆசிரியனிலக்கணம் ... ,,
குரவன்வயதின்றரம் ... ,,
மூத்த சகோதரன் விடயம் ... 402
சகோதரர் ஒழுக்கம் ... 403
பரமாசிரியன் விடயம் ... ,,
ஆசிரியன் முன் ஏனையர் விடயம் ,,
அபிவாதனச்சிறப்பு ... 404

(இரண்டாங்கால கருமம்)

வேதாப்பியாசகாலநிண்ணயம் .. ,,
வேதாப்பியாசத்தின்சிறப்பு ... 405
வேதமுணராதோனிழிவு ... ,,

(மூன்றாங்காலகருமம்)

பொருள்செய்யும்வகை ... 406
தன்னுற்காக்கப்படுவோராவர் .. 408
பொருளீட்டும்வகை ... ,,
இவ்விருத்தியிலக்கணம் ... 411
சூத்திரன்ஈவனஞ் செய்யும்வகை 412

(நான்காங்காலகருமம்)

பிரமவேள்வி ... 413
பிரமவேள்வித்குரியகாலம் ... 414
தருப்பணவிதி ... 421
தேவதருப்பணம் ... 423
இருடிதருப்பணம் ... ,,
பிதிர்தருப்பணம் ... ,,
தருப்பணத்திற்குரியகாலம் ... 426
கலமில்லாதவிடயம் ... ,,
நிலதருப்பணம் ... ,,
நிலதருப்பணம்கூடாதகாலம் ... 427
தருப்பணஞ் செய்யப்படுவோர். 428

பக்கம்.

வைசுவதேவஞ் செய்யத்தக்கவர் 462
வழிதடப்போன் செய்யும்ஐவகை வேள்வி ... ,,
பலிகரணவகை ... 463
பிதிர்வேள்வி ... 465
நித்தியசிராத்தவிதி ... 466
நித்தியசிராத்தத்திற்கு அணுகற்பம் ... 467
வைசுவதேவத்தின்பயன் ... 469

(சு)—வது. விருந்துபசரித்தல் ... 471
மானுடவேள்வி ... ,,
அதிதியிலக்கணம் ... 475
விருந்தினர்க்குச்செய்யுமுபசாரம் ... 480
விருந்துபசரியாவழிவருங்குற்றம் 482
விருந்தோம்பலின்சிறப்பு ... 484
பிரமசரியன், சந்தியாசிவிடயம்.. 487
பிக்ஷாடனத்தக்கோர் ... 492
வைசுவதேவஞ் செய்யாவழிவருங்குற்றம் ... 493
விருந்தோம்பாக்குற்றம் ... ,,
அந்தமிடுதலின்றிறம் ... ,,
ஐம்பெருமம்வேள்விச்சிறப்பு ... 494
செய்யாவழிவருங்குற்றம் ... 495
உண்டவிதி ... ,,
மண்டலம்செய்வகை ... 496
உண்ணுதலின்மரபு ... 497
உண்கலவிதி ... ,,
பிராணாகுதிகற்பம் ... 499
உண்டிச்சுவைமுறை ... 504
உண்டியளவை ... ,,
பரிகலச்சேடம்வைத்தல் ... 505
அச்சேடம்கூடாதவிடயம் ... ,,
உண்ணுங்காலவளவை ... ,,
நீர்குடித்தல் ... 509
பந்திபோசனம் ... ,,
மௌனபோசனம் ... 510
அன்னம்பரிமாறல் ... 511
உண்ணும் போது பார்க்கலாகாதன ... 512
அரக்கவுணவு ... ,,
போசனபந்திதோஷம் ... 513
பந்திபேதவகை ... ,,
காமியவுண்டி ... ,,

பக்கம்.

உண்டிக்குவிலக்காகியதினம் ... 514
உண்டபின்செய்வன ... ,,
உத்தராபோசனம் ... 515
உத்தராசமனம் ... ,,
வாய்கழுவும்விதி ... ,,
புராசமனம் ... 516
உண்டபின்கடவுளோர்தியானித்தல் ... 517
தாம்பூலவிதி ... 519
நகணம்வரில்உண்டிவிதி ... 520
பாலர்முதலியோர் போலியமம்.. 522
நகணத்திலுண்டோன்பிராயச்சித்தம் ... ,,
நரஸ்தோதய சுத்தாத்மநகணவிடயம் ... ,,
நரஸ்தாஸ்தமானவிடயம் ... ,,
நிராத்நி சிராத்தவுண்டிவிடயம் ... 523
நரஹமேஜ்பவாசம் ... 526
(சு-எ-அ-வது-காலெல்லைனின் கருமம்)
தேசாந்நரநிராகரணவிடயம் ... 527
உண்டபின்செய்வன ... ,,
போதுகழிக்கச் செய்யும் புராணநிகேள்வி ... 528
நிராத்நிரிணவசுவதேவம் ... ,,
படுக்கைவிதி ... 529
படுக்கைநிலை ... 530
சுகநித்திரைசெய்வோர் ... ,,
படுக்கலாகாதவிடம் ... ,,
நித்நிரையின்காலம் ... 532
பகற்கருமத்தின்பயன் ... ,,

கூடத்நிரியகருமம்.

வருணாசிரமநிலைபேறு ... 534
நாடோஜனத்நிறம் ... 535
நாண்டோஜனச்சிறப்பு ... ,,
நாண்டோஜனத்துவகை ... 536
நாண்டோஜனவகை ... ,,
அரசனுரிமையாவன ... ,,
அரசனென்னும் பெயர்த்தகுதி.. 538
அவேஷ்டிஅதிகாரணம் ... 539
படைக்கலவுரிமை ... 546
ஒறுத்தலின்வகை ... 547
சிகைகூயின்வேறுபாடு ... ,,
தண்டிக்கத்தக்கவிடம் ... 548

பக்கம்.

கொலைத்தண்டஞ் செய்யலாகா தார் ... 548
நற்றண்டனையின்பயன் ... 549
பகைவர்மேற்சேறல் ... ,,
அறுவகைப்படையாவன ... 551
படையணிவகுத்தன்முதலியன .. ,,
இறைகூறு ... 556
அரசனுக்குரிய அகப்பாட்டொழுக்கவியல்பு ... 558
அரசனதுபுறப்பாட்டொழுக்கவியல்பு ... 560
மந்திரர்தொகை ... ,,
மந்திராலோசனை ... 561
முதல்அமைச்சன் ... ,,
வினைமுடிப்போனைநியமித்தல்... 562
அரண் ... ,,
அரண்களைச்சமைக்கவேண்டும்வகை ... 563
அரண்மனை ... 564
அரசன்மனைவினைவிதி ... ,,
அரசன்ஒழுக்கம் ... ,,
இராஜபுரோகிதன் ... 565
நாட்டிலிருக்கத்தக்கவர்கள் ... ,,
இறையியாழிப்பு ... ,,
அரசன்செய்கை ... 566
இனியகாப்பு ... ,,
வேதியனைப்புரத்தல் ... 567
வீரதருமம் ... ,,
கொடுங்கோல் ... ,,
அரசன்நித்தகருமம் ... ,,
நித்தஸ்நானம் ... 568
தேயவிசாரம் ... ,,
மந்திராலோசனை ... ,,
ஆராய்ச்சிவிடயம் ... 569

பக்கம்.

அரசனுண்டி ... 572
உண்டிசோதனை ... ,,
அரசன்விஹாரம் ... 573
அரசன்கண்ணோக்கம் ... ,,
அரசனதுமாலைவதிகவினை ... ,,
அரசனதுதனிவிசாரவிருப்பு ... 574
அரசன்இராத்திரிவினை ... ,,
அரசாட்சிகருமத்தைநடத்துவோர் ... ,,
அரசன்ஏனையதருமம் ... ,,
உலகோம்பலின்பயன் ... 576
காவாவழிவருங்குற்றம் ... 577

வைசியதருமம்.

விற்றற்குரியபண்டங்கள் ... 579
ஆனிரையோம்புதல் ... ,,
வைசியன்அறுதொழின்முவகைச்சீவனம் ... 580
வைசியன்சிறப்புத்தருமம் ... ,,
வைசியதருமத்தின்பயன் ... 582
வைசியன்இவ்விதிதவறியவழிவருங்குற்றம் ... ,,

சூத்திரதருமம்.

சூத்திரனியல்பு ... 584
சூத்திரன்விசேடதருமம் ... ,,
சூத்திரனுக்குரியகருமாதிகாரம்.. ,,
சூத்திரன்ஜீவனமார்க்கம் ... 586
சூத்திரன்கடன் ... ,,
சூத்திரனுக்குவேதியன்பணியேசிறந்ததருமம் ... 587
சூத்திரன்வாணிபம் ... 589
சூத்திரன்விலக்கு ... ,,
மாதவியசுலோகவுரை ... 590

நித்தகருமம்.

—:o:—

காலம்.	நாழிகை அளவு.	மணியளவு.	செய்யுள்.
	பகற்காலம்.		
வைகறை விடிய நு-நாழிகை ஸ்..	.....	.....	படுக்கைவிட்டெழுதல், கடவுளை வழிபடுதல், மலசலங்கழித்தல், பல்விளக்கல், திருப்பள்ளிகரித்தல். * ஸ்நானம், ஆடையுடுத்தல், நீறணிதல், * காலைச்சந்தி * ஜெபம். * ஹோமம்.
ஸ் காலம்...	க-ஸ்ஸ் நஹ, வரையில்.	சு-ஸ்ஸ் - எஒ வரையிலும்.	
உ ,, ...	நஹ-,,-எஒ ,,	எஒ -,,- சு ,, ...	வேதாப்பியாசம்.
ந ,, ...	எஒ-,,-ககவ ,,	சு -,,-கoஒ ,, ...	பொருள்சேகரித்தல்.
சு ,, ...	ககவ-,,-கு ,,	ஜoஒ-,,-கஉ ,, ...	பிரமவித்தை அல்லதுவேதாந்தம், மாத்தியாகிகசந்தி, செபம், * தேவபூசை.
கு ,, ...	கு ,, கஅஜ ,,	கஉ -,,- கஒ :, ...	* ஸ்நானதேவம், * விருந்து பசரித்தல், உண்டி, தாம்பூலம்
சு ,, ...	கஅஜ, உஉஒ ,,	கஒ -,,- ந ,, ...	புராணேதிகேள்வி, மாகியச்சந்தி அக்கினிகாரியம்.
எ ,, ...	உஉஒ, உசுவ,,	ந -,,- சஒ ,, ...	
அ ,, ...	உசுவ, நoஒ,	சஒ-,,- சு ,, ...	
	இராக்காலம்.	.....	வேதாமோதல், ஸ்நானதேவம், விருந்துபசரித்தல், உண்டி, தாம்பூலம், நித்திரை.

* நித்தகருமம்.

శ్రీగణపతయేనమః.

ప్రమిడతాత్పర్య సహిత

పరాశరస్మృతిమాధవీయమ్.

మఙ్గళశ్లోకః.

గణేశదీపోహృదయస్థితోసౌ । వ్యాఖ్యాకసంజ్ఞేషుచదర్పణేషు।
అథాత్మనాబింబితసప్తలోక । ఉచ్చావచోభాతివిచిత్రరూపః॥

ప్రథమస్సపురుషార్థేషు ప్రతిపాద్యస్త్రయీగిరామ్।
వృషభగపాతుధర్మాత్మా జగన్నిశపవాహనః॥

ప్రతిజ్ఞా.

పరాశరస్మృతేరర్థ మ్మాధవీయానుసారతః।
షష్ఠితానాంసహాయేన వక్ష్యేప్రమిడభాషయా॥

ఉద్దేశః.

ధర్మంన్యాజ్ఞానతామత్ర ధర్మబుద్ధిసమృద్ధయే।
కలాపరాశరప్రోక్త ధర్మశాస్త్రంప్రకాశ్యతే॥

ஓம்

ஓம் சிவமயமாகிய பரம்பொருள்

ஸ்மிருதிகளாகிய தருமநூன் முப்பத்தாறனுள்

ஒன்றாகிய

பராசரஸ்மிருதிமூலமும்.

அதற்கு

வடமொழிக்கண்ணே மாதவாசாரியர்

செய்த விருத்தியுரைக் கருத்தின்படி

தமிழ் மொழி பெயர்ப்படம்.

மூலமாவது

ஆசாரகாண்டம்.

பாயிரம்.

கடவுள் வாழ்த்து.

சொற்பொரு ளின்னளத் துணையியை பெரிதிக்
கற்பி னிலேயிய கடவுட் டருமம்
வினைடப்பெறும் பாகஞ்சய் வினைறுத்தென் னுள்ளத்
தினைடக்குடி யிருந்த வெண்குணத் தொருதனி
யம்மை யப்ப னருளிய களிற்றின்
செம்மலர்ச் சேவடி சென்றடைத் தலையே.

மாயாசிரியர் எழுதிய கடவுள் வாழ்த்து.

ఓమ్ ॥ వాగీశాద్యాస్సుమనస స్సర్వార్థానాముపక్రమే।
యస్మ త్వాకృతకృత్యాస్యు స్తస్మా మామిగజాననమ్॥

என்பது சுலோகம்.

குறுமுனி தேற நெடுமறை விரித்த
திருவ னருட்பிர காச னெஞ்சிறைகொள்
பரமா சிரியன் பதமலர் பழிச்சி
முன்னவ ணுய்ந்த பண்ணுறு பசுந்தமிழ்
தென்மொழி யாவது தேற்றூர் தென்மொழிப்
பொருட்கட லெழுந்த திருந்தகு போறன்
இயலிறை பெருமை யியலுறீஇக் கிடந்தவின்
வடமொழி யன்றஃ தில்லென் றிசிலோர்
இடனுறக் கடுப்புக் காணிய விருடியர்
தத்தம் பெயரிய தக்காங் குணர்பு
பாற்படக் கிளந்த பண்பமை மிருதியுட்
கலிகெழு சிறப்பிற் பராசர மதனுக்
கொலிகெழு நீர்வல னுடுத்த வனைப்பிற்
கலைமலி மாதவ மாதவன் றன்கே
ணிலைபெறச் செய்தவந் நீடுறு மொழியின்
விருத்தி யொன்றே மேவலி னிலையோர்
கருத்துற வதனைக் காட்டுறு மருத்தியி
னமிழ்தினு மினிய தமிழ்மொழி பெயர்ப்பான்
எண்ணிய வெந்தை செந்தாப் போதார்
“ வெண்மை யெனப்படுவ தியாதெனி னெண்ணமை
யுடையம்யா மென்னுஞ் செருக்கெ ” னலஞ்சாது
“ புல்லா வெழுத்திற் பொருளில் வறுங்கோட்டி
கல்லா வொருவ னுளைப்பவுங் கண்ணேணி
நல்லார் வருந்தியுங் கேட்பரோ மற்றவன்
பல்லாரு ணெல் பரிந்தெ ” னுகாலடி
சிறுமதி நெஞ்சினுக் கூனது பயப்ப
வுறுதி நாடி யெடுத்துக்கொண்ட விதனுள்

இம்முதற் சுலோகமென்ன வுதயத்தேறுவெனின், மாதவாரியர் தாமெடுத்துக்கொண்ட விப்பராசர தூலுரையிடையூறின்றியினிது முடிதற்பொருட்டு, ஏம்புடைக் கடவுளைவாழ்த்துதலின், மூத்தபிள்ளையாரை வாழ்த்துதலுதயத்தது. (இதன் பொருள்) கலைமகள் கேள்வனுகிய பிரமன் முதலிய வெல்லாத் தேவரும்

அறிஞருரும் நல்லெண்ணத்தினர் யாவருரும், பயன்றருமெவ்வகைத் தொழிலினையும், தாம்தொடங்குரும்போது, யானை வண்ங்குதல் செய்து தந்தந் தொழிலினை யினிது முடித்துக்கொள் வாரோ, அத்தகைய மூத்தபிள்ளை யானை, யானுந்தொழுவேன் - எ-று. எனவே, யானது செய்தலால் இந்நூலுனையினிது முடியுமென் பதுகருத்து. இதுவுரையாசிரியர் தம்முரையினிது முடிந்துலகினிலவுதல்வெண்டி மங்கலம்பட எழுதியவாழ்த்தாமாகலின் இதற்குரை விரித்தெழுதாது, விரிவஞ்சி விடப்பட்டது. மேல்வருவனவெல்லா மிக்கருத்தே யெனக்கொள்க. இச்சுலோகம், ஆசிரியவசனம். (க)

శ్లో ॥ సోహంప్రాప్యవివేకతీర్థపదవీ మామ్నాయతీర్థేపరం।
మజ్జంస్సజ్జనతీర్థసంగినిపున స్సద్వృత్తతీర్థంశ్రయన్।
లబ్ధామాకలయన్సుభావలహరీం శ్రీభారతీతీర్థతో।
విద్యాతీర్థనుపాశ్రయన్హృదిభజే శ్రీకంఠమవ్యాహతమ్॥ ఇతు.

என்னுதலிற்றேறுவெனின், எல்லாமுடையவிறைவனவாழ்த்துதலானினிது தாம்வழிபடுகடவுளை வாழ்த்துதலுதலிற்று. இ-ள். அத்தகைய அறிவற்றவரு யிருக்குமெனக்கு நல்லுணர்ச்சியென்னும் புனிதநீராடுவதற்கோர் துறைகிடைத்த பின்பு சாதுக்களாகிய நன்னீரோடுகலந்த வேதமென்னுஞ் சுத்தநீராடி நல்லொழுக்கமென்னுந் தெண்ணீரையடைந்து சீராற்றலாகிய வெள்ளத்தைப்பெற்றுப் "பாரதீதீர்த்தர்" என்னுமாரியரூர் கிடைத்தனராகவுவர்முன்னிலையால் "வித்தியாதீர்த்தர்" என்னும்பெரியனையுமடையப் பெற்றேறுதலிற் றடையறச் சீகண்டரையவிறைவனை வழுத்துவேனுக - எ-று.

இதனானே குருவணக்கமும் கூறினராயிற்று. அறிவிலானையென்னுவாரொண்ணுங்கால் முதற்கண்ணேசுட்டியறியத்தக்கவறிவின்மையையுடையே னென்பார் "సోహం" என்றார் பிறவுமன்ன. இத்துணையுங் கடவுள்வாழ்த்து. (உ)

శ్లో ॥ సత్పైక్యప్రతపాలకోద్విగుణధీ స్త్రయ్యర్థీచతుర్వేదితా।
పంచస్కంధకృతీషడన్వయపృథ స్సప్తాజ్ఞసర్వంసహాः।
అష్టవ్యక్తికలాధరోనవనిధిగ పుష్యద్దశప్రత్యయ।
స్థానత్రోచ్చాయుధురంధరోవిజయతాం శ్రీబుక్కణక్ష్మాపతిः॥ ఇతు.

என்னுதலிற்றேறுவெனின், எடுத்துக்கொண்ட நூல் அரசநீதியோடியையபுடையதாதலின் அவ்வரசன் இவனென்பதும் அவனியல்பு முதலியனவுங்கூறி அவனை வாழ்த்து முகத்தான் விவ்வுரைசெய்த காலமுங்களனுமுணர்த்துதனுதலிற்று.

இ-ள். "सत्यैकव्रतपालकः" என்பதனுள் "सत्य" எ-து, வாய்மை "ऐक" எ-து, முக்கியம் "व्रत" எ-து, நியமம் "पालकः" எ-து, காப்பவன் எனவே சத்தியத்தையே சிறந்ததாகக் கொண்டொழுகு நியமத்தைக்காப்பவன்-எ-று. ஏகமென்றசொற் பொருட்டொனியால் அஃது அரசனிடத்தேநார் குணமாக விருத்தலை யுணர்த்துகின்றது. சத்தியமொன்றினையே காப்பது விரதமாகக் கொண்டவ னென்பதுகருத்து.

"द्व्यगुणधीः" "द्व्यगुण" எ-து, இரண்டுகுணமுடைய என்றுபொருவிரீஹிசமாசார்த்தம். எ-து, அன்மொழித்தொகைப்பொருளாம் இனி திவிகுணமெனில் இரட்டிப்பு என்று ஆதிக்கார்த்தம்-எ-து, (விசேடப்பொருள்) எனக்கொள்வதுவழக்கு "धी" எ-து, புத்தி. எனவே, திவிகுணமான புத்தியுடையவனென்றவாறு. நன்மைதீமைகளைக் கோடல் ஒன்று, தீமையை யொழித்தலொன்று இவ்விரண்டு குணமுள்ள புத்தி யுள்ளவனென்றபடி. ஏனையமானிடரிற் சிறந்த வறிவினையுடையவ னெனினுமமையும். சத்துவ ரஜோகுணங்களிரண்டினையுமுடையவன் என்பாருமுளர். தாமதகுணமில்லாதவ னென்பது கருத்து.

"शीघ्रः" "अर्थ" எ-து, இச்சிக்கப்படுவது. எனவே, பயன்-எ-று. அந்த அருத்தம் என்பது, அவ்வப்பொருளேக்கங்களிற் பலவகையானும்பொருள் கொள்ளப்படுகின்றது; அவையெல்லாம் ஈண்டு தருமம், அருத்தம், காமம், என்னும் மூன்றுபுருடார்த்தங்களையு முடையவ னென்பது.

"चतुर्वेदित" "वेदित" எ-து, அறிந்தவன் "चतुः" நான்கு என்பன சாமம், தானம், பேதம், தண்டம், என்னும் உபாயங்களை யுணர்ந்தவன் என்பது.

"पंचस्कंधकृती" "स्कंध" என்பது, அமைச்சியலங்கம்ஐந்து அவையாவன, துணைவலியறிதல், கருவியறிதல், இடங்காலமறிதல், வினைத் திறந்தெரிதல், தெரிந்துதெளிதல். இதனை "காமந்தக

நூல்" கஉ - வது சருக்கம் ஙஉங - வது சுலோகத்திற்காண்க "மாகம்" உ-ம் சருக்கம்-உஙக-சுலோகத்துள் இவை கந்தமெனக் கூறப்பட்டன. "கதி" எ-து. தேர்ந்தோன் மேற்கூறிய ஐவகைக் கந்தங்களினுலு மாராய்தல் வல்லவன்-எ-று.

"ஷடன்வயதிருக்ஷ:" என்புழி "அன்வய" எ-து, சம்பந்தம், மரபு. அல்லதூஉம் - "அய" என்ற, தாது=பகுதி- பொருள்- (கதி)=(நடை) ஆகவே, கதியருத்தமுடைய பகுதிகளுக்கு எல்லாம் ஞானமென்றும் பொருள்கூறப்படும். அது, எ-து, உபசருக்கை. இவ்விரண்டும் புணர்த்து அவ்வப்பொருணோக்கத்து வேறு வேறுபொருள்களில் நூலாசிரியர்களும்கவிஞரும்வழங்கியிருக்கின்றனர். என்னை? செய்யுளின்கண்ணேசாற்களொன்றேடொன்றியைபுபெறக்கொண்டு கூட்டல்என்னும்பொருளிலே அன்வயம்எனவும், ஐம்பொறியுணர்ச்சிக்கும் அவற்றின் விடயங்களுக்கும் உண்டாம் தொடர்பை அன்வய மெனவும், தந்தைமகன்என்னுங் கால்வழித்தொடர்பும் குருசீடன்என்னும் பரம்பரைத்தொடர்பும் சம்பந்தத்தையுணர்த்துமாகலின் அதுவுமன்வயமெனவும், அங்காங்கி-எ-து, உறுப்பும்உறுப்பினையுடையதுமாம். இவற்றின்றொடர்பும் அன்வயமெனவும், ஒருவிடயத்திற்கும் அவ்விடயத்தைக்கூறும் நூலுக்குமுள்ள சம்பந்தமும் அன்வயமெனவுங்கூறுப. "தி" எ-து, அழுத்தமுடையது. ஆகவே அரசியலுக்கு அங்கமாகிய சந்தி, விக்கிரகம், யானம், ஆசனம், துவைதீபாவம், சமாசிரயம், என்னும்ஆறும் அன்வயமாம். ஆதலின் இந்தஆறு அன்வயங்களையும் ஊன்றப்பெற்றுள்ளவன்-எ-று. இவற்றுள் சந்தி=பொருந்தல். விக்கிரகம்=போர். யானம்=படையெடுத்துச்செல்லல். ஆசனம்=தங்கல். துவைதீபாவம்=எதிர்தோற்றல். சமாசிரயம்=ஒருவனையொருவர்பற்றி செல்லுதலாம். இனி வேதாங்கங்களாகிய சிக்ஷை, வியாகரணம், சந்தசு, நிருத்தம், சோதிடம், கற்பம், என்ற ஆறுவித்தைகளிலும் வல்லவன் என்பதும் ஒன்று. அறியத்தக்க விடயங்களைக்கூறத்தக்க அக்ஷபாதம், காணாதம், ஜைமினியம், பாணினியம், பாதஞ்சலம், வியாசம், என்னும் ஆறுசாத்திரமாகிய தரிசனைகளிடத்தும் வல்லன் என்பதுமாம். தாய்மரபு, தந்தைமரபு, மனைவிமரபு, மகன்மனைவிமரபு, மகளைவேட்டோன்மரபு, குரவன்மரபு, என்னும் ஆறுமரபையும் சுத்தமும் புகழும்பெற உடையான் என்றுகூறினும் அமையும்.

என்னுதலிற்றேறுவெனின், எடுத்துக்கொண்ட நூல் ஆசா நீதியோ டியைபுடையதாதலின் அவ்வரசன் இவனென்பதும் அவனியல்பு முதலியனவுங்கூறி அவனை வாழ்த்து முகத்தா லிவ்வுரைசெய்த காலமுங்களனுமுணர்த்துதனுதலிற்று.

இ-ள். "सत्त्यैकव्रतपालकः" என்பதனுள் "सत्य" எ-து, வாய்மை "ऐकं" எ-து, முக்கியம் "व्रतं" எ-து, நியமம் "पालकः" எ-து, காப்பவன் எனவே சத்தியத்தையே சிறந்ததாகக் கொண் டொழுகு நியமத்தைக்காப்பவன்-எ-று. ஏகமென்றசொற் பொ ருட்டொனியால் அஃது அரசனிடத்தோர் குணமாக விருத்தலை யுணர்த்துகின்றது. சத்தியமொன்றினையே காப்பது விரதமாகக் கொண்டவ னென்பதுகருத்து.

"द्व्यृणवीः" "द्व्यृण" எ-து, இரண்டுகுணமுடைய என்றுபொ ருளீறுசாரார்த்தம். எ-து, அன்மொழித்தொகைப்பொருளாம் இனி திவிகுணமெனில் இரட்டிப்பு என்று ஆதிக்கார்த்தம்-எ-து, (விசேடப்பொருள்) எனக்கொள்வதுவழக்கு "वी" எ-து, புத்தி. என வே, திவிகுணமான புத்தியுடையவனென்றவாறு. நன்மையைக் கோடல் ஒன்று, தீமையை யொழித்தலொன்று இவ்விரண்டு குண முள்ள புத்தி யுள்ளவனென்றபடி. ஏனையமானிடரிற் சிறந்த வறிவினையுடையவ னெனினுமமையும். சத்துவ ராஜாகுணங்க ளிரண்டினையுமுடையவன் என்பாருமுளர். தாமதகுணமில்லாதவ னென்பது கருத்து.

"ऋृत्तः" "ऋृ" எ-து, இச்சிக்கப்படுவது. எனவே, பயன்-எ-று. அந்த அருத்தம் என்பது, அவ்வப்பொருணேக்கங்களிற் பலவகையானும்பொருள் கொள்ளப்படுகின்றது; ஆயினும் மூன்று தருமம், அருத்தம், காமம், என்னும் மூன்றுபுருடார்த்தங்களையு முடையவ னென்பது.

"चतुर्वेदिता" "वेदिता" எ-து, அறிந்தவன் "चतुः" நான்கு என்பன சாமம், தானம், பேதம், தண்டம், என்னும் உபாயங்களை யுணர்ந்தவன் என்பது.

"पञ्चस्कन्धकृती" "स्कन्ध" என்பது, அமைச்சியலங்கம்ஐந்து அவையாவன, துணைவலியறிதல், கருவியறிதல், இடங்காலமறிதல், வினைத் திறந்தெரிதல், தெரிந்துதெளிதல். இதனை "காமந்தக

நூல்" கஉ - வது சருக்கம் ஙஉங - வது சுலோகத்திற்காண்க "மாகம்" உ-ம் சருக்கம்-உஙக-சுலோகத்துள் இவை கந்தமெனக் கூறப்பட்டன. "கந்தி" எ-து. தேர்ந்தான் மேற்கூறிய ஐவகைக் கந்தங்களிலுஞ் மாராய்தல் வல்லவன்-எ-று.

"ஷடன்வயதபுக்ஷ" என்பதனி "அன்வய" எ-து, சம்பந்தம், மரபு. அல்லதூஉம் - "அய" என்ற, தாது=பகுதி- பொருள்- (கதி)=(கடை) ஆகவே, கதியருத்தமுடைய பகுதிகளுக்கு எல்லாம் ஞானமென்றும் பொருள்கூறப்படும். அது, எ-து, உபசருக்கை. இவ்விரண்டும் புணர்த்து அவ்வப்பொருணேக்கத்து வேறு வேறு பொருள்களில் நூலாசிரியர்களுங்கவிஞருமவழங்கியிருக்கின்றனர். என்னை? செய்யுளின்கண்ணே சாற்கள்என்றோடொன்றினையபுபறக்கொண்டு கூட்டல்என்னுமபொருளிலே அன்வயம்எனவும், ஐம்பொறியுணர்ச்சிக்கும் அவற்றின் விடயங்களுக்கும் உண்டாம் தொடர்பை அன்வய மெனவும், கண்ணுமகன்என்னுங் கால்வழித்தொடர்பும் குருசிடன்என்னும் பரம்பரைத்தொடர்பும் சம்பந்தஞ்சையுணர்த்து மாகலின் அதுவுமன்வயமெனவும், அங்காங்கி-எ-து, உறப்புமுறப்பினையுடையதுமாம். இவற்றின்தொடர்பும் அன்வயமெனவும், ஒருவிடயத்திற்கும் அவ்விடயத்தைக்கூறும் நூலுக்குமுள்ள சம்பந்தமும் அன்வயமெனவுங்கூறுப. "தாத்" எ-து, அடுத்தமுடையது. ஆகவே அரசியலுக்கு அங்காமாகிய சந்தி, விக்கிரகம், யானம், ஆசனம், துவைதீபாவம், சமாசிரயம், என்னும் ஆறும் அன்வயமாம். ஆகவின் இந்த ஆறு அன்வயங்களையும் ஒருங்கறப்பெற்றுள்ளவன்-எ-று. இவற்றுள் சந்தி=பொருந்தல். விக்கிரகம்=போர். யானம்=படையெடுத்துச்செல்லல். ஆசனம்=தங்கல். துவைதீபாவம்=எதிர்சார்தல். சமாசிரயம்=ஒருவனையொருவர்பற்றி செல்லுதலாம். இனி வேதாங்கங்களாகிய சிக்ஷை, வியாகரணம், சந்தசு, நிருத்தம், சோதிடம், கற்பம், என்ற ஆறுவித்தைகளினும் வல்லவன் என்பதும் ஒன்று. அறிவதற்குக்கருவியாங்களோக்கூறுதற்குக் அங்கமாதலும், கரணமும், ஸ்ரமவினியமும், பரிணிஷ்யமும், பரதந்திரமும், விபாசமும், என்னும் ஆறுசாத்திரமாகிய தன்மைகளிடத்தும் வல்லவன் என்பதுமாம். காய்மாடி, கண்ணுமாடி, மகன்மாடி, மகன்மகன்மாடி, மகளேவிட்டோன்மாடி, ருவல்மாடி, என்னும் ஆறுமாடையும் சுற்றமும் பகைமுன்பெற உடையவன் என்றுங்கூறினுமாம்.

அன்றியும் ஷடங்வயர் என்னின் அறுதொழிலுடைய வேதியர். ஆகவே அவர் பெரியரென்னும் நிலைபெற்ற பதினையுடையரன் என்று கூறுவாருமுளர்.

"सप्ताङ्गसर्व्वंसहः" என-து, எழுவகை அங்கத்தின் சமையல் லாவற்றையும்பொறுப்பவன்-என-று. எழுவகை அங்கமாவன, அரசு, அமைச்சு, நட்பு, கோசம், நாடு, அரண், படை, என்னும்வழுமாம். இவ்வாறுகூறுதலால் இவ்வேழினையும்ஈட்டல், காத்தல், செலுத்தல், முதலியதொழில் வருத்தத்தைப்பொறுப்பவன் என்பது கருத்து. "படைகுடி கூழமைச்சு நட்பரண் நாலுமுடையானரசரு ளேறு" என அங்கம் ஆறு என்றார்க்கு அரசினையுங்கூட்டி எழங்கம் என்ற வடநூல் கருத்தும் உடன்பாடுபோலும் "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கறேனென்றாங்கைம்புலத்தாரோம்ப றலை" என்றலின். கோசம்-எ-து, பொருள்வைப்பு. கூழென்பதுமது.

இனி இந்த ஏழுறுப் பிலக்கணத்தையுடைய சமையின் காரியத்தைச் சீர்செய்பவன் எனினும் அமையும்.

"अष्टव्यक्तिकलाधरः" எ-து, அஷ்டலூர்த்தியான வடிவுடைய சிவனது கலைகள் எனவே ஞானம், புகழ், செல்வம், ஆற்றல் முதலிய சத்திகளின் கூறுபாடு. அவற்றைத்தரித்தவன் - எ-று. இன்னும் "அஷ்டவியக்தி" எ-து, திக்குப்பாலகருடைய கூறுகிய ஞானம், செல்வம், சுத்தம், தண்டம், ஆணைமுதலியன உடையவன் எனினுமமையும். இதனை மநு "அஷ்டாபிश्चेन्द्रादीनां மாத்ராபி ர்நிர்மிதோ நृபः" என்றதனாலுமுணர்க.

"नवनिधिः" என்புழி "नव" எ-து, புதிது, ஒன்பது "நிதி" எ-து, ஒருபொருள்மிகவும் வைக்கப்பட்டுள்ளது. மேலுமேலும் ஈட்டிய பொருளுடையவன்-எ-ம், ஒன்பதுவகைநிதியையுடையவன்-எ-ம், ஆம். ஒன்பதுவகைநிதி - ஒன்பது வகைமணியாலாகியது. அவ்வியும், ஞானநிதி, தருமநிதி, தானநிதி, பராக்கிரமநிதி, தனநிதி, உலோகநிதி, தானியநிதி, அலக்கிரகநிதி, நிக்கிரகநிதி, எனவுமாம். இவைமுறையே புலவர், புண்ணியவொழுக்கர், சற்பாத்திரர், சூரர், புதையல், ஆகரம், (ஆகரம்-எது-பொன், வெள்ளிமுதலியன விளையும் நிலவகைகள்.)களஞ்சியம், சிட்டர், துட்டர், என்னப்படும்.

"पुष्यर्क्षप्रत्ययः" என்புழி "प्रत्ययः" உடன்பட்டுநிற்றல்-அல்லது-வசப்பட்டிருத்தல், சபதம், ஞானம், நம்பிக்கை, ஹேது என்

னும் பொருள். "அமரம் கூ-ம் காண்டம் காகார்த்தவர்க்கை" கூ0கூ-வது சுலோகத்திற்காண்க. ஆகவொண்டுநம்பிக்கைப்பொரு ளில்வந்தது. பத்துவகைநம்பிக்கையாவன-புரோகிதன், பிரதானி, அமைச்சன், சேனாபதி, பண்டாரத்தலைவன், மருத்துவன், மடைத் தலைவன், சேனாதிபன், ஒற்றன், மெய்காப்பாளன், என்னும் பதின் மரது நம்பிக்கையையுங்காப்பவன். எனவே அவரால் விரும்பப் பட்டவன் என்பது கருத்து. பண்டாரத் தலைவன் = திரவிய சாலைக்கு அதிபதி. மருத்துவன்=வைத்தியன். மடைத் தலை வன்=சமையல் சாலைக்கு அதிபன். ஒற்றன்=தூதன். மெய்காப் பாளன்=அரசன் தேகத்தைக்காப்பவன். இனி பகையரசன், உட்பகையான அரசன், பகைவனுக்கு நட்பான அரசன், தன் நண்பனுக்கு நட்பானஅரசன், உண்ணட்பு உடையஅரசன், நட் பரசன், (இவ்வறுவரும் முன்வருவோர்) பார்சணிக்கிராகன், ஆக் கிராந்தன் (பின்படைத்துணையாகும் அரசர்) ஆசாரர், (பக்கத் துணைவருவோர்), இப்பதின்மரையுமுணர்ந்தோன் எனினுமமை யும். "காமந்தகம்" அ-ம் சருக்கத்திற்காண்க.

"స్మృత్యుచ్చారియధురంధరః" எ-து, ஸ்மார்த்தர் எனவே ஸ்மிருதி யால் கூறப்பட்ட தருமத்தையநுட்டிப்பவர்கள். இனி அத்துவிதி களாகிய ஒருசார் வேதியரெனக்கூறுவாருமுளர். "ఉచ్చారియ" எ-து, விருத்தி. கொடையால் அவர்களைக்காப்பவன்-எ-று. இனி ஸ்மிருதிகளிற்கூறியபடி அரசாள்வோன் என்பது மொன்று.

"శ్రీబుక్కణక్ష్మాపతిః" இப்படிப்பட்ட செல்வமுகிய புக்கண் ணென்னுமிக்ஷ்வாகுவேந்தன்-எ-று. "విజయతాం" வெற்றிபெற்றுவாழ் வாணுக-எ-று. (கூ)

శ్లో ॥ ఇంద్రస్యాంగిరసోనలస్యసుమతి ర్వైశ్వభ్యస్యమేధాతిథి।
ర్ధామ్న్యాధ ర్మసుతస్యవైన్యనృపతేస్సో ఽజానిమేగా ఽతమిః।
ప్రత్యగ్రష్టిరరుంధతీసహచరో రామస్యపుణ్యాత్మనో।
యద్వత్తస్యవిభోరభూత్కులగురు ర్మంత్రీతథామాధవః॥ இது.

என்னெனின், அவ்விறைமகனுக்குந் தமக்குமுள்ள தொடர் புரிமை கூறுதலுதலிற்று. இ-ள். இந்திரனுக்குப் பிரகற்பதியும், கனலுக்குச் சுமதியும், சைப்பியனுக்கு மேதாதிதியும், உதிட்

டிரனுக்குத்தெளமியரும், வைகியனுக்கு சோஜா எள்பவனும், நிமிச் சக்கிரவர்த்திக்குக் கௌதமியென்னுங் கோதமன்மகனும், தருமவடிவணிய சோமனுக்கு ஞானக்கண்ணினையுடைய வருந்ததி கேள்வணிய வசிட்டனும்போலும், அந்தப்புக்கணனென்னு மிறைமகனுக்கு மாதவாரியரும், குலகுருவு மந்திரியுமாயிருந்தனர்-எ-று. எனவே யிவ்வுரையாசிரியர் குலம், கல்வி, செல்வம், சிறப்பு, அறிவு, ஒழுக்கம், அதிகாரம், வாழ்நாண்முதலியவற்றுள் ஒன்றுனுங் குறைவிலொன்று கூறியவாறுயிற்று. இங்ஙனங் காமேகூறுதல் வடநூல்வழக்கு. "தோன்றுதோற்றித் துறைபல முடிப்பினுந்தான்றற்புகழ்தறகுதியன்றே" என்பதுதமிழ்வழக்கு. இம் முறையீண்டு விரிப்பிற் பெருகுமாகலின், நல்லாசிரியரை யடைந்துணர்கவென்க. (சு)

శ్లో ॥ ప్రజ్ఞామూలనుహీవివేకసలిలై స్సిక్తాబలోపఘ్నికా।
మంత్రైర్లపల్లవితావిశాలవిటపా సంధ్యాదిభిష్టక్షుణైఃI
శక్త్యాకోరకితాయశస్సురభితా సిధ్యసముద్యత్ఫలా।
సంప్రాప్తాభుపిభాతినీతిలతికా సర్వోత్తరం మాధవమ్॥ இது.

என்னெனின், அச்செங்கோன் முறையிறைக்கமும் பயனுங் கூறுதனுதலிற்று. இ-ள். நீதியென்னுங் கொடியானது உலகா வென்னும் பாத்தியை பருத்தறிதலென்னுநீரால் நனைத்து, தன்வலி, உணர்ச்சிவலி, நட்புமுதலிய துணைவலி, வினைவலி யென்னும் எருவினையிட்டு, இடந்தரப்பெற்றதாய், ஆராய்ச்சி யென்னுந்தளிர்தளிர்த்தலையும், சந்தி, விக்கிரகம், யானம், ஆசனம், துவைதீபாவம், சமாசிரயம், என்னும் அறுவகை யிறைமைக் குணமாகிய கிளைகிளைத்தலையும், பிரபுசத்தி, மந்திரசத்தி, உச்சாகசத்தி யென்னுமூவகையரும்புகளை யரும்புதலையும், புகழென்னுமணம் வீசுதலையும், பயன்கையுறுதலென்னும் பழம்பழுத்தலையுமுடையதாய் எல்லாவற்றினுமுயர்ந்த மாதவத்தை யடைந்துலகின்கண்ணே ஒளிசிறந்தது-எ-று. மாதவம் எ-து. இவ்வுரையாசிரியரினியற் பெயராதலின் அவனையும் இளவேனிற் பருவத்தையும் குறித்து நின்றது. நீதியைக்கொடியென வுருவகஞ்செய்தலால், மாதவம் அதுபடர்தற் கேதுவாகிய வேனிற் பருவமென்றபடி. இனி மாமெனினுமமையும்: கொடிபடர்தற்கு அதுவும் இடனாதலின். இது சிலேடை விசேடவணி. (கு)

ஸ்லோ ॥ யஸ்யபோதாயனம்சூத்ரம் சாகாயஸ்யசயாஜுஷீ।
பாரத்வாஜகுலம்யஸ்ய சர்வஜ்ஞஸ்சஹிமாதவஃ।
ஸ்ரீமதீயஸ்யஜனனீ சுகீர்த்திர்மாயணஸ்தபிதா।
சாயணோபோகனாதஸ்ச மனோபுத்திசஹோதரா॥
சமாதவஸ்சகலபுராணசம்ஹிதா ப்ரவர்தகஸ்ஸ்மிருதிசுஷுமாபராசரஃ।
பராவரஸ்மிருதஜகதீஹிதாப்தயே பராசரஸ்மிருதிவிவ்ருதோ ப்ரவர்ததே।
பராசரஸ்மிருதிகபூர்வ்வர்வ்யாக்யாதானிபம்தபிஃ।
மயாதோமாதவார்யேண தத்வ்யக்யேயம்ப்ரவர்த்யதே॥ இவை.

என்னெனின், இவ்வுரையாசிரியரது வரலாற்றினையும் நூற்றன்மையையும் உரைசெய்தற்குக் காரணத்தையு மூணர்த்துதனுதலிற்று. (இதன்பொழிப்பு) போதாயக சூத்திரமும், யஜுர் வேதசாகையும், பாரத்துவாச கோத்திரமும், உடையவர்யார்? அம்மாதவாரியர் எல்லாக்கலைகளையு மூணர்ந்தவரல்லவா? அவர் சௌபாக்கியவதியாகிய சுகீர்த்தியாரைத் தாயாகவும், மாயணசாரியரைப் பிதாவாகவும், சாயணாரியர் போகநாதாரியரென்னு மிருவரையும் மநமும் புத்தியும் போலும் சகோதரராகவுமுடையராம். அம்மாதவாரியர் எல்லாப் புராணங்களையும், சங்கிதைகளையும் கடாத்தவல்ல ஸ்மிருதிகளுக்கு விளக்கஞ் செய்யவல்லராதலின், மேலோர்முதல் கீழோர்வரையுமான வுலகமெல்லாம் இன்பமடையும்படிப்பராசரஸ்மிருதிக்குரைசெய்யத்தொடங்குகின்றனர். என்னையெனில், நிபந்தன நூலாசிரியர்களாகிய மூன்னோரால் இப்பராசர நூலுரை செய்யப்படாமையால், அம்மாதவாரியரால்இப்போதுரைசெய்யப்படுகின்றது. எ-று. வடநூலாதலின்அவ்வழக்குப்பற்றிப்படர்க்கைமுகத்தாற் கூறினர். தற்புகழ்ச்சியன்று.பிறவுமன்ன. இம்மாதவாரியர் தாம் வேதத்திற்குப்பாஷ்யஞ்செய்த வித்தியாரணியர் என்பவர்.

நூலின் உரைப்பாயிரம்.

இனி, உரைசெய்ய வெடுத்துக்கொண்ட நூலினது திறமும் நூலாசிரியர் சிறப்பும், நூலுட் கூறப்படும் பாகுபாடும், பொருளும், பிறவும்இன்னது இதுவென முன்னர்க்கடாவிடையாகவுரைப் பாயிரங் கூறுகின்றார். கற்போருக்கு ஊக்கம் இனிது செல்லுகற்பொருட்டு. அல்லாக்கால், குன்றக்கையடைக்க குரீஇத்தங்குகற்கோர் நிலைகாணுது தளர்வதுபோலும் மாந்தளருமாதலின். (கடா_எ-து, விடை. குரீஇ-எ-து, பறவை). அற்றேலஃதாக.

அதுவருமாறு.

"ननुनेयंस्मृतिर्व्याख्यानमर्हति"

என்றதுமுதல்.

"तद्विवेकायकुर्व्वेहं व्याख्यांपाराशरस्मृतेः"

என்றவளையுமாம்.

அதாவது, இந்தஸ்மிருதியுரைசெய்வதற்குத்தக்கதன்று. அதுபிராமாணியமாவதைப்புலப்படுத்தக்கூடாமையால்.

என்னெனின்.

வேதம் பிராமாணியமே யென்பதற்குக் காரணம், ஆரியர், ஜைமினியார், "तत्प्रमाणंबादरायणस्यानपेक्षत्वात्" என்றதமது சூத்திரத்தில், வேதம் ஒருபுருடனாற் செய்யப்பட்டதன்றாகலின், வேறொரு மூலப் பிரமாணத்தைத் தான் வேண்டுவதொன்றல்ல. எனவே, சுவயம்பிரகாசமாகிய வேதத்திற்குப் பிரமாணமாகுந் தலைமை இயற்கையாகவே உள்ளது. எல்லாம் வியாசர்மதமேமதமக்கும் உடன்பாடென்றனர். (பிரமாணம். எ-து, அளவை. பிராமாணியம். எ-து, அளவாதலையுடையது. சுவயம் பிரகாசம் எ-து, தானே விளங்குவது).

ஒருபுருடனாற் செய்யப்பட்டதும் வேறோர், மூலப்பிரமாணத்தையே வேண்டியுள்ளதுமாகிய நூல்களினிடத்தில் அச்சூத்திரக்கருத்தை விசாரித்தல்கூடாது. எனவே ஏனைய நூல்க

ளெல்லாம் பரப்பிரகாசம் - என்றல், வேறொன்றல் விளங்குவ தாம் ஆகலின், ஜைமினியார் கூறியபடி வேதத்திற்குப் பிரமாண மாந்தலைமை பிறவற்றிற்குச்செல்லாதென்றவாறும்.

அங்ஙனமாறல், வேறொரு மூலப்பிரமாண முண்மையால், அதுகொண்டிதற்குப் பிரமாணிய முண்மை கொள்ளலாமோ வெனின்? அங்ஙனமுமன்று.

மூலம் இதுவென்று கூறுதற்கு இடனில்லை யாதலால்.

காட்சி மூலம் என்று கூறுவாம் எனில்? அதுவும் அமை யாது: அதுபொறிகளுக்கு விடயமாகாமையால். (மூலம் எ-து, ஈண்டு பிரமாணம் என்னும் பொருளில்வந்தது.)

அநுமாநம் மூலம் என்று கூறுவாமெனில்? முன்கண்ட காட்சிப் பிரமாணத்தையே வேண்டி நிற்ப தொன்றாகலின் அநுமாநமும் மன்று. எனவே, அநுமித்தறிவதற்குக் கருவியாகிய பிரத்தியக்ஷகாரண மில்லை என்றவாறு. (அநுமித்தறிதல் எ-து, ஊகித்தறிதல்). (பிரத்தியக்ஷம் எ-து, கண்ணாற்கண்டது).

புருடவாக்கியம் பிரமாண மெனில்? அதுவும் பிரமாண மன்று: வஞ்சகமுடைமையாற் புருடன்கண்டவாறு கூறுதலில்லை யாதலின். வஞ்சகமில்லாதவனது உளையினிடத்தோ வெனில்? சங்கேத விபரீதங்கள் விளைவது உண்மையாதலால் அதுவும் அமையாது. புருடவாக்கியம், சத்தம், உளை, என்பன வொரு பொருட்கிளவி.

எனவே, இந்நால் காட்சி, அநுமாநம், ஆகமம், என்னு மூவகையளவைகளுள் ஒன்றும் அல்ல என்றபடி.

இனி "சோதநா" = சோதனை என்பதும் இல்லை. என்னை? அந்த சோதனை உடைமையாண்டுங் கிடைத்ததில்லை யாதலால். சோதனை, பிரோரணை, ஏவல், கட்டளை, ஆணை, விதி என்பனவொரு பொருட்கிளவி. அதுநிற்க.

வ்ஸிருதிகளால் கூறப்பட்ட சுத்தம் முதலிய வொழுக்கங் களுக்கு மூலகாரணமாகிய ஆணையொன்று, வேதத்துள் யாண்டும் எடுத்துக் காட்டியவாறு பெற்யதுமில்லை யல்லவா?

அப்பிரோஜை அளவற்ற வேதத்தில் யாண்டேனும் இருக்கலாமென்று, அநுமானித்து எண்ணுவதற்கும் ஆகாது. என்னை? அங்ஙனம் எண்ணுமிடத்துச்சாக்கியர் முதலியநாஸ்திகர்கள் கூறும் "சைத்தியவந்தாதிகள்" இடத்தும் பிராமாணியமான ஆஜை உண்டென்றும், அதிப்பிரசங்கமாக எண்ணும்படி நேரிடுமே யெனின்? மேற்கூறுவாம். ("சைத்தியவந்தம்." எ-து, வெளியிடத்துச் செய்யும்வந்தனை. அதிப்பிரசங்கம் = இல்லாததைக் கூறுதல். சாக்கியர்=புத்தர்).

மநுமுதலிய ஸ்மிருதிகளுக்கும் சாக்கியர் முதலிய நாஸ்திகர் நூலுக்கும் விசேஷம் ஏற்றத் தாழ்ச்சியுள்ளன. என்னை? வேதம், மநுமுதலிய பிராமாணியங்களை யெடுத்துக்காட்டி யுடன் பட்டதுபோல, சாக்கியர்முதலியோர் நூல்களை யுடன்பட்டுக்கூறி யதில்லை.

எங்ஙனமென்னில்? "யத்வைகிஞ்சமநுரவதத்தத்பேஷஜம் பேஷஜதாயாஃ" என்ற வேதவாக்கியம் (மநுவதைச் சிறிது கூறிற்றே, அது மருத்துவத்திற்கு மருந்துபோலாம்) என்றது. அவ்வாறேசாக்கியர் முதலியோர் நூல்களினுடைய பிராமாணியத்தை அநுகிரகிக்கும் வைதிகவாக்கியம் ஒன்றுமில்லை. (வைதிகம் - எ - து, வேதசம்பந்தம்).

எண்ணிறந்த வேதத்தில் யாண்டாயினும் நாஸ்திகநூற்பிராமாணியத்திற்கும் ஆஜை இருக்கலாமே யென்று கூறுமோ வெனில்? அங்ஙனங் கூறுவதற்கு இடமில்லை.

அற்றேல். முன் "யத்வைகிஞ்ச" என்றவேதவாக்கியம் அருத்தவாதவாக்கியமாதலால், சுவார்த்தத்தில், கருத்து இல்லை. (அருத்தவாதம்=புனைந்துரை=துதி. சுவார்த்தம்=தன்னைப்பொருள்). பிறவெனில் "ஸ்தாவீயுச்சோத்தாய்யேகுர்யாத்" என்றுவிதித்த அவ்விதிவாக்கியப்பொருளைப் புகழ்வதற்கு அந்த "யத்வைகிஞ்ச" என்றது எழுந்தகாமாதலால்.

இனி யவ்விதிவாக்கியப்பொருளாவது "ஐந்த்ரக்ருதஃ" என்னும் கருமத்தில். "ஸோமாக்ரா" என்பது சோமதேவதாகமாயும் உருத்திரதேவதாகமாயும் உள்ள "சரு" என்ற ஹோம

அங்ஙஞ்செய்ய வேண்டுவதென்னுங் கருமத்துள் "அதிதேசத்தால்" "ஸ்மிருதி" என்னுமந்திரங்கள் வருகின்றன. (அதிதேசமென்பது வேதோரிடத்தில் விதிக்கப்பட்டுள்ள தொன்றையேற்றவிடத்தி லெடுத்தாளுதல்). அவற்றினுள் "தர்ய்ய" என்னுமிரண்டு மந்திரங்களைச் சேர்க்கவேண்டியதாக விருக்கின்றது. அவையாவையெனில்? "மானவதர்ய்ய" என்னும் மந்திரங்களே சேர்க்கத்தக்கதாக விருக்கின்றன; என்றதாதலால், மேற்சொன்னது அருத்தவாதமாக விளங்குகின்றது. ஆகவே, ஸ்மிருதிப் பிராமாணியங்கள் வேதத்தாற் கூறப்பட்ட தல்ல ஆதலின், சாக்கியர் முதலிய நாஸ்திகர் நூல்போலவே மநுமுதலிய நூல்களும் பிரமாணமாகாது! என்று கூறப்பட்டுமிருக்கின்றது. (தேவதாகம்-எ-து, தேவதைகளுடையது).

அன்றியும் பெரும்பாலும் மாதுடர்க்குப் பொய்யுரையும் மயக்கமும் நேரிடுவதாலும், வேதத்தில் ஆணை காணப்படாமையாலும், நம்பிக்கை மாத்திரத்தினால் பிரமாணமென்று கொள்ளுவதன்றி வேறு நிமித்தமில்லை. அங்ஙனமிருந்த போதிலும் பெரிது முயன்று மநுஸ்மிருதி பிராமாணியமே யென்னும் விஷயத்தில் ஏதேனுமோர்வகையால் உடன்படுவோமாயினும், ஈண்டெடுத்துக்கொண்டபாராசரஸ்மிருதிமட்டில், பிராமாணியம் எங்ஙன முண்டாகும். வேதமானது மநுவின் பெருமையைக்கூறியதுபோலப் பராசரருடைய பெருமையைக்கூறியதில்லை. ஆதலால், அப்பராசரர் கூறிய ஸ்மிருதி பிராமாணிய முள்ளதென்று கூறுவதமையாதெனில்? மேற்கூறுவாம்.

பிராமாணியமென்பது காரணமின்றித் தானேவிளங்குவது. அப்பிராமாணியம் என்பது காரணமில்லாதது. ஆதலால் ஸ்மிருதிகள் பிராமாணியமேயாம்.

எங்ஙனமெனில், அப் பிரமாணமென்று சாதிப்பதற்குக் கூறிய பொய்யுரை மயக்கம் ஆணை இல்லாமை என்னு மூன்று மேதுக்களும் உள்ளதன்று. (ஏது-என்பது-காரணம்).

ஏனெனில், பிறந்தது முதல் தபோசித்தர்களாயுள்ள மநு, பராசரர், முதலிய சிறந்த விருடிகளிடத்தில், அசத்தியம், மயக்கம், முதலிய குற்றங்கள் எவ்வளவும் உள்ளதாக எண்ணுவதற்கு

மிடமில்லாமையால் ஏது சொரூபாசித்தியாம். (ஏது சொரூபாசித்தி) எ-து, காரணமாக வெடுத்துக்காட்டிய அவயவம், அவயவியினிடத்தில் இல்லாமற்போதல் (உதாரணம்). மனிதனுக்கு இயற்கை அறிவு இல்லை: கொம்புடைமையால், என்றவிடத்துக் கொம்புடைமை இயற்கையறிவில்லாமையைத் தெரிவிப்பதற்கு, ஏதுவாகக் கூறப்பட்டது. ஆதலால், கொம்பு - அவயவம். மனிதன் - அவயவி. இதனுள் மனிதனுக்குக்கொம்பு இல்லாமை "ஏது சொரூபாசித்தி" ஆம்:—

அப்பராசராதியர்கள், பிறந்ததுதொட்டுத் தவச்சித்தியையுடையவர்கள் என்பதற்கு ஐயமில்லை. என்னை? அப்பராசர் முதலியோரது உண்மைநிலைமையைத்தெரிவிக்கும் மந்திரார்த்தவாதங்களானும், இதிகாசபுராணங்களானுமே, சித்தியையுடையார்களென்பது உணர்த்தப்பட்டுள்ளது.

இனி, அம் மந்திரமுதலியன பிரமாணியம் என்று கூறலாகாது; என்பையேல்? அப்பராசர்முதலியோரோ இல்லையென்றவாறும். ஆகவே, "ஏது ஆசிரயாசித்தி" யாம். (ஏது ஆசிரயாசித்தி - என்பது-தான்கூறும் ஏதுவுக்குப் பொருந்தும் இடமில்லாமற் போதல். (உதாரணம்) மலடிமகன் ஆதலால், அழகுள்ளபுருடன் ஆயினன் என்னுமிடத்து, அழகுண்மையாகிய சாதியம்பிறத்தற்கு ஏது, மலடிமகன் என்னவே, மலடியென்னுஞ் சொல்லே மக்கள் இல்லாதவள் என்னும்பொருளை வெளிப்படுத்தலால், மலடிக்கு மகனுதல் யாண்டையது? அவளின் இடமாக உடைய அழகுண்மை யாண்டையது? என்று விளைப்பதனால் மலடிமகன் இன்மையே "ஏது ஆசிரயாசித்தி" ஆம்.

இங்ஙனமாகலின், இதனையாவரால் மறுக்கக்கூடும்:—

வேறு பிரமாணங்களுக்கு மாறுபாடில்லாத மறுமுதலிய ஸ்மிருதிகளுக்குச்சுவார்த்தத்திலும், என்றால், கன்னைப்பொருளிலும் பிரமாணியம் உண்டு என்று உத்தரமீமாம்ஸையின், தேவதாதிகரணத்தில் விளக்கஞ் செய்யப்பட்டிருக்கின்றது.

பூர்வமீமாம்ஸம், அர்த்தவாதாதிகரணத்தில்சுவார்த்தமாகிய கன்னைப்பொருளில் பிரமாணியம் இல்லை என்று கூறப்பட்டது.

இவ்விரண்டும் தம்முள் விரோதமுடையதாய் அநுவாதத்திற்கு இடமுண்டாகின்றது. (அநுவாதம் என்பது முன்கூறப்பட்டதொன்றை வேறொருகாரணம்பற்றி மீட்டுங்கூறல்).

ஆதலால் "యద్వైకించ" என்ற அருத்தவாத மானது "మానవీఋచా" என்னும் விதிவாதத்துக்குத்தகுதிவடிவமாயினும், சுவார்த்தமாகிய தன்னுரைப்பொருளிலும் தாற்பரியம் உண்டென்று நிச்சயமாயிருத்தலின், சாக்கியர் முதலிய நாஸ்திகர்நூல அதற்கு ஒப்பாகக்கூறலாகாதுஎன்றுநினைத்து "சதுர்விம்சதிமதம்" என்னும் கிரந்தத்தில்,

"అత్రచార్వాక వాక్యాని బౌద్ధాది పఠితానితు
విప్రలంభకవాక్యాని తానిసర్వాణివర్జయేత్"

என்பது, உலகாயுதர் புத்தராதி நாஸ்திகர் வஞ்சகர் முதலியோர் வார்த்தைகளை யெல்லாம் ஒழிக்க வேண்டுவது. என்று கூறிற்று. அற்றேல் அற்றாக.

இனிப்பராசரருடைய பெருமை வேதத்தாற் கூறப்படாததல்ல: கூறப்பட்டதேயாம். என்னை? "సహోవాచవ్యాసః పారాశర్యః" என்னும் வேதவாக்கியத்தில் பராசரருடையமகன்வியாசனென்று மகன்மையைச்சிறப்பித்துவியாசனைப்புகழ்ந்தது. (மகன்மை-என்பது - மகனுக்குரியன்மை). இங்ஙனம் யாவராலும் மதிக்கப்பட்ட பெருமையையுடைய வியாசனையும் பராசரர் மகனென்றே துதித்ததனால் பராசரருடைய மகிமை வேறுகூறுவது என்னுளது. "వాజసనేయం" என்னுஞ்சாகையில், வமிசப்பிராமணத்தில், வேதசம்பிரதாயத்தை வழங்குவிக்கும் குருபீட பரம்பரையைக் கூறுமிடத்தில் பராசரருடைய புத்திரர் பௌத்திரர்களையும் கூறக்கேட்டோம். என்னை? "కాణ్వోఋతకాశికాఋత కాశికః పారాశర్యాయణా త్పారాశర్యాయణఃపారాశర్యాత్ పారాశర్యోజాతుకర్ణ్యాత్" என்றது (இதுசுருதி) அதனால்பராசரனுரும் மநுவிற்றொடர்ப்பாவர். இன்னுமிவ்வாறே வசிட்டர், அத்திரி, யாஞ்ஞவல்கியர், முதலியோர்களின் விடயத்திலும் ஆராய்ச்சிசெய்யத்தக்கதாகவிருக்கின்றது. அவ்விடயத்தில் சுருதிப்பிரமாணமுங் காணப்படுகின்றதாவது "ఋషయోవా ఇంద్రంప్రత్యక్షం నాపశ్యన్-తంవశిష్ఠఃప్రత్యక్షమపశ్యత్"

அத்ரிரததாதேர்ய்ய ப்ரஜாம் புத்ரகாமாய அதஹ யாஜ்ஞவல்க்ய-ஸ்ய தேஹாத்ய బభూవతుः." என்பவை முதலியனவாம்.

ஆகலால், மநு முதலிய ஸ்மிருதிகளிடத்தில் ப்ராமாண்யம் இல்லையென்று விலக்குவதற்கிடனில்லை: மநு முதலிய ஸ்மிருதிகளுக்கு மேதாதிதி முதலியோரால் உரையுரை செய்யப்பட்டிருக்கின்றதனால்.

இனி இந்த ஸ்மிருதிகளுக்கு மூலகாரணமாகிய சுருதியின் ப்ரமாணம் கிடைப்பது இல்லையென்பது கூடாது. என்னை? "பஞ்சவாப்தே மஹாயஜ்ஞா ஸ்ரதிப்ரதாயம்தே ஸததிஸந்திஷ்யம்தே தேவயஜ்ஞः பித்ருயஜ்ஞோ பூதயஜ்ஞோ மநுஷ்யயஜ்ஞோ ப்ரஹ்மயஜ்ஞः." என்றது முதலிய சுருதிவாக்கியங்களால் ஸ்மார்த்த தருமத்திற்கு மூலமான வேதப்ரமாணமும் கிடைத்திருக்கின்றதனால். ("ஸததி" = "ஸததம்" நித்தியம் என்பதுபொருள்) யாண்டும், சௌசமுதலிய வொழுக்கங்களுக்கு வேதப்ரமாண கிடைத்ததில்லை யென்பது ஏத்த விவகார மொழியன்று.

அன்றியுமிதனை, பாட்டாசிரியரும்.

వైదికైஃస్మార్యమాణత్వా త్తత్పరిగ్రహదార్ఢ్యతః।
సంభావ్యవేద మూలత్వాత్స్మృతీనాం మానతోచితా.

என்பழி, வேதமுநிவர்களால் உணர்த்தப் பெற்றனவாதலும், அவற்றை அங்கீகரிப்பதில் நிச்சயத்தன்மை யுண்டாயிருப்பதாலும், நம்பத்தக்க வேதமே மூலமாயிருப்பதாலும், ஸ்மிருதிகளுக்குப்ப்ரமாணத்தன்மை சிறந்ததாகவிருக்கின்றது. எ-ம்.

மநுவானவரும்.

శ్రుతింపశ్యంతిమునయः స్మరంతిచతథాస్మృతిం।
తస్మాత్ప్రమాణముభయం ప్రమాణైः ప్రమితంభువి।
యోవమన్యేత తేమూభే హేతుశాస్త్రాశ్రయాన్నరः।
ससాధుభిర్బహిష్కార్యోనాస్తికోవేదనిందకः॥

என்பழி. முநிவர்கள் வேதங்களை யிடைவிடாது காண்கின்றனர்: ஸ்மிருதிகளை யெப்பொழுதுங்ர சிந்திக்கின்றனர்: ஆகலால், சுருதிஸ்மிருதிகளிரண்டும் அளக்கத்தக்க அளவைக

ளாகவும், உலகம் அளக்கப்பட்ட பொருளாகவுமிருக் கின்றன. இவ்விரண்டினையும் இவற்றிற்கு வேறுகிய தருக்கமுதலிய கருவி நூலைக்கொண்டு அவமாகஞ் செய்கின்ற வொருவனை நாஸ்திகன் எனவும், வேதநிந்தகன் எனவும், அறிவுடையோர்யாவரும் முற் றுந் துறக்கின்றார்கள்-எ-ம்.

பாரதம் அநுசாசநீகபருவத்திலும்.

धर्मजिज्ञासमानानां, प्रमाणंप्रथमंश्रुतिः॥
द्वितीयं धर्मशास्त्रंतु, तृतीयं लोकसंग्रहः॥

என்புழி, தருமத்தையறிய விரும்புவோர்க்குச் சுருதியானது முதலளவையாம். தருமசாஸ்திரமாகிய ஸ்மிருதிகள் இரண்டாமளவையாம். சான்றோர் ஒழுக்க வழக்கமானது மூன்றுமளவையாம். எனவுங்கூறுப. (அளவை=பிரமாணம்) ஆதலால், பாராசர ஸ்மிருதியுரைசெய்வதற்குத் தக்கதென்பதே தேற்றம்.

பராசர ஸ்மிருதியின் வகைமை.

இப்பராசர ஸ்மிருதியென்னும் நூலின்வகைமையைக் கூறுமிடத்தில், இரண்டுகாண்டமும், பன்னிரண்டு அத்தியாயமும், ஐந்நூற்றுத்தொண்ணூற்றிரண்டு சுலோகங்களும் அடங்கியிருக்கின்றன. அவற்றுள், முதல் ஆசாரகாண்டமும் இரண்டாவது பிராயச்சித்த காண்டமுமாம். இவ்விரண்டனுள், ஆசாரம்-என்பது, இச்சித்த பொருளைத் தருவது. எனவே, புண்ணிய முண்டாவது. ஆசாரம், ஒழுக்கம், என்பன ஒருபொருட் கிளவி. பிராயச்சித்தம்-என்பது, வெறுப்பைத்தருகின்ற பாவத் தையொழிப்பது. பிராயச்சித்தம்-எனினும், கழுவாய்-எனினு மொக்கும்.

இவ்வாசாரம், பிராயச்சித்தமென்னு மிரண்டனையும் உலகத்துள் யாவருஞ் புண்ணியலோகத்தையடைகின்றனர் என்று வேதங்கூறிற்று. வேதத்தாற்கூறப்பட்ட ஆச்சிரமவொழுக்க முதலியவற்றுல், மறுமையில்-அல்லது-பரலோகத்தில் இச்சித்த

பயன்உண்டாகின்றது. நூல்களால் விலக்கப்பட்ட கருமத்தைச் செய்தால் நரகம் என்னும் அநிஷ்டம் உண்டாகும். அநிஷ்டம்-என-து-வெறுப்பைத்தருந்துன்பமாம். அந்துன்பத்தையொழித்துக் கொள்வதாகிய மார்க்கத்தைவிளக்குநூல் பிராயச்சித்தமெனப் கூறப்படும்.

இவ்விரண்டும் மறுமைக்குக்காரணமாகிய கருமம் ஒன்றினுடைய கதிகளாயிருக்கின்றன.

"சுவௌத கருமத்திலும்" (என்றூல் வேதசம்பந்தமானகருமம்). அந்தப் பிராயச்சித்தமும் ஒழுக்கமுமேயுள்ளதாகக் காணப்படுகின்றது.

அக்கினிஹோத்திரமுதலியவற்றில் ஒழுங்குகளோ அநுட்டிப்பதே "சுவௌதகருமம்" என்னப்படும். விதித்தகர்மமாகஒருவன் ஒருகருமத்தைச் செய்தால், அதனுலுண்டாகிய தோஷம் நீங்குவதற்குப் பிராயச்சித்தஞ்செய்யும்படி வேதத்திற் கூறப்பட்டது. கற்பசூத்திரங்களைச் செய்த ஆசிரியர்களும், இப்பிராயச்சித்தவொழுக்கங்களையே அநுட்டிக்கத்தக்கதாகச் சூத்திரங்களில்லாமல், விவகாரத்தைக் கூறினரில்லை. ஆகலால், ஆசிரியர் பராசரனும் அவ்வண்ணமே மறுமைக்குக் காரணமாயிருப்பனவாகிய தருமங்களை யுணர்த்தத் தொடங்கி யவ்விரண்டிலுமே இரண்டு காண்டங்களாகக் கூறினரென்றுணர்க.

அற்றேல், அந்த சுருதி சூத்திரங்களாலும் விரோதிக்கப்பட்ட விவகாரம் தருமமாகாவோ வெனில்?

அற்றன்று. தருமமா யிருக்கினுமிருக்க. அது இம்மை யொன்றற்கே பயன்படுவதாகின்றது.

என்னை? "காரீரி" என்னும், இஷ்டிமுதலியசௌதகருமங்களுக்கு மழைபெய்தல் ஒன்றுமேபயனுவதுபோல, விவகாரத்திற்கும் இலாபம், மேன்மை, புகழ்; என்னும் இவ்வளவேபயனுகவிருக்கின்றது. (இஷ்டி=யாகம்).

ஆகவே, விவகாரத்தில் வெற்றியடைந்தவனுக்கு இலாபமும் அதுபோலத் தோற்றவனுக்குத் தண்டனையுமாகிய அவ்வி

ரண்டினளவே, விவகாரத்தில் விதித்த கருமத்திற்கும் விலக்கிய கருமத்திற்கும் பயனுகியசுவர்க்க நரகமாக விருக்கின்றன.

அங்ஙனமன்று. அரசனுக்கும், அரசனையோர்க்கும், சான்றினர்க்கும் முறைதவறி நீதிசெய்வாராயின் விவகாரத்தாற்பாவம் வருகின்றது. ஆகலால்விவகாரத்திற்கு மறுமைப்பயனுமுண்டாமன்றே? (சான்று-எ-து. சாகூஷி). என்னை?

అపండ్యాన్దండయన్రాజా దండ్యాంశ్చై వాప్యదండయన్।
అయశోమహదాప్నోతి నరకం చాధిగచ్ఛతి।
సభావానప్రవేష్టవ్యా వక్తవ్యంవాసమంజసం।
అబ్రువన్విబ్రువన్వాపి నరోభవతికిల్బిషీ।
సాక్ష్యేనృతం వదన్వాశై ర్బధ్యతెవారుణైర్నరః।
ఇవశశ్వత వర్షాణి తస్మాత్సాక్ష్యీవదేదృతం॥ என்புழி.

அரசன் நண்டிக்கத் நகாதவர்களைத் நண்டித்தாலும் நண்டிக்கத்தக்கவர்களை நண்டியாது விட்டாலும் பழியையடைகின்றான். அன்றியும் நரகத்திற்குச் செல்கின்றான். எ-ம், ஒருவன் நீதி புரியும் அவைக்களத்துக்குச் செல்லலாகாது. சென்றால்உண்மையையேகூறல்வேண்டும்.தானறிந்ததை அறிந்தபடிச் சொல்லாவிடினும் வேறுவிதமாகச்சொல்லினும், மனிதன்பாவத்தை யடைகின்றான். சான்றில், பொய்கூறினவன் வருணன்பாசத்தால் கட்டப்பட்டவனாய் நூறுவருடபரியந்தமும் நண்டனையநுபவிக்கின்றான். ஆகலால் சான்று உண்மையையேகூறவேண்டும்.

என்று மநு கூறுதலின் அரசன் முதலியோர்க்குக்குற்றம் உண்டாவதாகக் கூறியமாத்திரையால் விவகாரத்திற்குப் போந்தது என்னை? அரசனுக்கும் சான்றினர்க்கும் விவகாரத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை யல்லவா? அது வாதி பிரதிவாதிகளுக்கே சம்பந்தப்பட்டிருக்கின்றது. அவ்வாதி பிரதிவாதிகளுக்கோபாவமுள்ளதாக யாண்டுங் கூறப்பட்டதில்லை. தோற்றவனுக்குந்தோல்விக்காரணத்தால்வேறு பிராயச்சித்தமும் கூறியதில்லை ஆகலின்.

கடன்பட்டவனுக்குநரகம்உண்டாகின்றதுஎன்றுசொல்வழக்கும் ஆசாரத்தைப்பற்றி வந்தது. அங்ஙனம் தருமசாத்திரத்திற்கு

மாமுக விவகாரஞ்செய்தவனுக்கும் நரகம் உள்ளதேயாயினும், இந்தவிவகாரம் மறுமைப்பயனுக்குச்சிறந்த தென்பது தெரிவிக்கத் தக்கதேயாம். ஆகவே, இம்மைப் பயனுக்கே சிறந்த தெனவும் மறுமைக்குச் சிறுபான்மை பயன்படுத லுளதெனவும் கொள்க.

விவகாரமும் அத்தரும மாகுமேயாயினும் ஆசாரத்தினும் வேறுபட்டேயிருக்கின்றது.

இனி, இவ்விவகாரம் இம்மைக்குக்காரணமானதேயாயினும் அதற்கு மூலமாகிய வேதவாக்கியமும் உள்ளதாக விருக்கின்றதே யெனில்?

காந்தருவம் முதலிய வுபவேதங்களின் விடயத்தும் அவ் வாறுளதாகக் காணப்படுகின்றது. என்னை?

ఋగ్రాహపాదమృగ్వే దాత్సామభ్యోగీతిమేవ చ।
యజుర్వేదాదభినయం సామాన్యాథర్వణాదపి॥

என்புழி, இருக்குவேதத்தினின்றும் காலாஸ்திரத்தையும், பமும், சாமத்தில் நின்றும் இசை விகற்பமும், யஜுர்வேதத்தி னின்றும் அபிநய விகற்பமும் அதர்வண வேதத்தி னின்றும் இவற்றினெழுபும் பொதுவுமாகிய சுருதி, லயை, ஸ்தாயி, காளம் பாவம் முதலியனவும் கொள்ளப்பட்டன என்றதனாலுணர்க. (பாவம் எ-து கருத்து).

இனி, விரித்துக்கூறுவதிற் பயனென்னுளது? இவ்வாசிரியர் பராசரனர் மறுமை யொன்றனையே சிறந்ததாகக் கொண்ட நோக்கமுடையாராதலின் விவகாரகாண்டத்தை விரித்துக்கூறி னரல்லர்.

ஆயின், இராஜதருமத் தைக்கூறவந்தவிடத்தில் "மிஷ்டஞ்ஞ பாலயேத்" எ-து, அரசன் - பூமியைத் தருமத்தோடு காக்கக் கடவன் - என்றவாறு. இவ்வளவு கூறியதால் அரசன் விசாரிக்க வேண்டுவனவாகிய விவகாரத்தினையும் குறிப்பித்தவாறு யிற்று.

இனி, ஆசாரம் ஒருவன் இச்சித்ததைப்பெறுவதற்கு நேரே காரணமாதலால் அதுமுதற்கண்ணே கூறப்பட்டது.

அவ்வாசாரம் வழுவியவிடத்தே உண்டாவது பிராயச் சித்தம் ஆகலால் அப்பிராயச்சித்தம்பின்னே கூறப்பட்டது.

இந்த ஆசாரகாண்டத்தில் மூன்று அத்தியாயங்களும், பிராயச்சித்தகாண்டத்தில் ஒன்பது அத்தியாயங்களு முள்ளன வாம்.

இனி, அம்முதல் அத்தியாயத்துள் கூறியுள்ளன நால்வகை வருணத்தினர்க்கும் உரிய பொதுத்தருமமும் சிறப்புத்தருமமு மாம். சான்றோரொழுக்கம் பொதுத்தருமம் மென்றும்; ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல், என்னும் அறுவகைத்தொழிலும் உலகோம்பல் முதலியனவும் வருணங் களின் சிறப்புத் தருமங்களென்றும் கொள்க.

இரண்டாம் அத்தியாயத்துள் உழவுமுதலிய சிவோபாயங் களும், பிரமசரியம், கிரகஸ்தம், வாநப்பிரஸ்தம், சந்நியாசம், என்னும் நால்வகை ஆச்சிரமவொழுக்கங்களும் கூறப்பட்டன. ஆச்சிரமம் - எது - நிலைமை.

மூன்றும் அத்தியாயத்துள் ஆசூசவகைகளும், பிதுர்சிராத் தத்தொகுதிகளும், கூறப்பட்டன. (ஆசூசம் - எது. நீட்டு). இம் மூன்று அத்தியாயங்களுமே ஆசாரகாண்டமாம்.

நாலாவது அத்தியாயத்துள் பிரகீரண பாவங்களுக்குப் பிராயச்சித்தமும், புத்திரபேதங்களும், பரிவேதநப் பிராயச்சித் தமும், கூறப்பட்டன.

ஐந்தாவது அத்தியாயத்துள் நாய்கடித்தன் முதலியவற் றின் பிராயச்சித்தமும், தன்மரணப் பிராயச்சித்தமும் ஆதிதாக் கினிப் பிரேதகருமவிதியும், பிறவும் கூறப்பட்டன.

ஆறாவது அத்தியாயத்துள் மலிநீகரணப்பிராயச் சித்தமும் சண்டாளாங்க, பொஜ்ஜ முதலியவற்றின் பிராயச் சித்தமும், செம்பு முதலியவற்றின் சுத்தியும், அங்கசுத்தியும், இரதசுத்தி யும் (எ-து-சுவைப்பண்டங்களின் சுத்தியும்) பிறவுங்கூறப்பட்டன.

ஏழாவது அத்தியாயத்துள் பூமிசுத்தி, கிரகசுத்திமுதலிய எல்லாச் சுத்திகளுங் கூறப்பட்டன.

எட்டாவது அத்தியாயத்துள் - கோவலை முதலியவற்றின் பிராயச்சித்தமும், சாமாகியமாகப் பரிஷத்திலக்கணமுதலியவும், கூறப்பட்டன. (பரிஷத்து-எது. சபை).

ஒன்பதாவது அத்தியாயத்துள் - அழுனைகளைப்பற்றியும், பசுவினையடித்தலைப்பற்றியும், அரசர்கள் மாதர்கள் மரிக்கும் தன்முதலியவற்றைப்பற்றியுஞ் செய்யத்தக்கப் பிராயச்சித்தமும், பிராயச்சித்தஞ்செய்து கொள்ளாதவழிவரும் பலவும் பிறவுங் கூறப்பட்டன.

பத்தாவது அத்தியாயத்துள், புணரத்தகாத மாதரைப் புணர்தலின் பிராயச்சித்தம் முதலிய கூறப்பட்டன.

பதினோராவது அத்தியாயத்துள், புசிக்கத்தகாதனவற்றைப் புசித்தன் முதலியவற்றின் பிராயச்சித்தங் கூறப்பட்டன.

பனிரண்டாவது அத்தியாயத்துள் கூறுது ஒழிந்த எல்லா ஒழிபுகளையுந் தொகுத்துக் கூறப்பட்டன.

இதனுனே சொல்லப்படாத பாவங்களுக்கெல்லாம் பிராயச்சித்தங்களை உபலக்கணவிதியால் கொள்ளப்படும். (உபலக்கணம் - எது. ஒன்றற்குக்கூறிய விதியைக்கொண்டு, அதனோடு இயைபு உடையதாய்க்கூறது ஒழிந்துள்ள பிறவற்றிற்கும் ஏற்றுதல்).

சில விடங்களில், சிலமுக்கியமான அநுபாதகங்களுக்குப் பிராயச்சித்தங் கூறவில்லை. சிலவிடங்களில் சிலதிரவியமாயபிராயச்சித்தங்களைக் கூறுதுவிட்டனர்.

சௌமிய பங்கமுதலிய சிருட்டிரங்களை வேறொன்றிடத்துங் கூறவில்லை.

கருமவிபாகமுங் கூறவில்லை. கருமவிபாகம் - எ - து - முன் ஜகங்களிற் செய்ததீவினை. அவற்றையெல்லாம் உபலக்கணத்தால் கொள்ளப்படும்.

இவ்வொன்பது அத்தியாயங்களும் பிராயச்சித்தகாண்டமாம். இது இக்கலியுகத்தையே பற்றிக் கூறவந்த தருமதாலாதலின், பிராயச்சித்தகாண்டமே இதனுள் விரித்துக்கூறப்பட்டது.

என்னை? இக்கலியுகத்தில் பார்வையாலும் எண்ணத்தாலுமே தீவினை மிகவும் விளைவதாயிருக்கின்றது. அதனையொழிக்கத்தக்கப் பிராயச்சித்தத்தைச் செய்துகொள்ளுதற்குரிய மாநுடர்களும் சத்தியில்லாதவர்களாகவும் இருக்கின்றனர்: என்றுநினைத்து இந்த ஸ்மிருதியில் சிறுகத்தொகுத்துத் தயவிஞல் கூறினர்.

எங்ஙனமென்னில்? வேதம் முற்றும் ஓதவேண்டிய அந்தணன் ஒருவன் அவ்வேதத்துள் சிறிதேயோதினும் அமையுமென்றும், வேதியன்செய்யத்தகாத வழுவையேயஞ்சு செய்து ஆபற்காலத்திற் பிழைக்கலாமென்றும், கோவதைக்குப் பிராஜாபத்தியஞ்செய்தலாலும், பிரமஹத்திக்குச் சேதுதரிசனத்தாலும் பாவவொழிவு உண்டாமென்றும், கூறியதால், பெருத்தபிராயச்சித்தங்களைச் சிறிதேதொகுத்துக் கூறினென்பது விளங்கும். இருபிறப்பாளராகிய மூவரும் அவ்வகைத் தொழில் செய்யமுயலுதல், புகவல்லமையேயல்லது அவர்கள்தோஷமல்லாமையால், அவர்களை அதுபற்றி நிந்தைசெய்யலாகாதென்று முதலிலும் முடிவிலுங் கூறுதலால், இவ்வாசிரியர் தயவுடையவ ரென்பது விளங்குகின்றது.

உலகத்திலுள்ள எல்லாஸ்மிருதிகளுக்கும் சம்மதமாகும்படி, ஒவ்வொரு பாவத்திற்கும் தக்க முழுப்பிராயச்சித்தத்தைக் கடைப்பிடிப்பதற்கு, எம்போலியர்க்கு ஆற்றலின்று. அன்றியும் ஸ்மிருதிகள் எல்லாவற்றிற்கும் ஒரோவாக்கியத்தால் ஒப்பக்கூறுதல், எவ்வகைப்பட்ட நிபந்தநூலுக்கும் முடியாததாயுள்ளது. அல்லதூஉம், அங்ஙனம் வரம்புசெய்து மறுக்கத் தொடங்கினல், தருமநூலுக்குத்தருப்பணஞ்செய்யவேண்டுவதாம். எனின்? தருமநூலெல்லாம் இறந்துவிடு மென்பதுகருத்து.

ஆயின், வரம்புகடவாத வொழுக்கத்தையுடைய வுத்தமர்கள் துணிந்த நெறியாவது? பிரசித்தமான அருத்தத்தில் ஒன்றேடொன்று மாறுபாடில்லாதவழி எல்லாஸ்மிருதிகளும் பிரமாணமென்பதேயாம். ஆயின், இந்தப் பராசரஸ்மிருதி மற்றையஸ்மிருதிகளைப்போல அங்கிய ஸ்மிருதிகளால் எவ்விடத்தும்மாறுபடுதலில்லை. ஆதலால், இப்பராசரர் நூலிற் கூறப்பட்ட விதி

விலக்குகளே, கலியுகத்தில் முக்கியமாக வுபயோகப்படுத்தக்கன. மற்றைய தருமநூல்களின் வாக்கியங்களோ வெனில்? எவ்வளவு மாறுபடுதலில்லையோ? அவ்வளவு இப்பராசரநூலோடு ஒப்பக் கொள்ளப்படும்.

ஸ்மிருதிகளில்சொல்லப்பட்டவிஷயங்களை ஆராயுமிடத்து, திருத்தியாகும்படி, ஆகாரத்திற்குச் சோளம், கேழ்வரகு, மெல், கோதுமை, முதலியபலவகைத்தானியங்களையும் கொள்வதுபோல, ஒவ்வொருபாவங்களையும் ஒழிப்பதற்கு அவ்வவ்விருடிகள்வெவ் வேறு பிராயச்சித்தங்களையுங் கூறியவாறுகக் காணப்படுகின்றது. அவ்வாறே இச்சித்தபயனைத்தரும் புண்ணியங்களுங் கூறப்பட்டனவாம்.

எங்ஙனமெனில்? சுவர்க்கப்பேறு ஒன்றினைக்கே "விசுவஜித்துயாகம்", "அக்நிஷ்டோமம்", "அக்நிஷ்டோமம்", "தரிசவிதி". முதலிய அநேகசாதனங்கள் கூறப்பட்டுள்ளன.

பிரம காண்டத்தில் பிரமலோகப் பேற்றைக் குறித்துச் "சாண்டில்யவித்தை," "தகரவித்தை," "சதந்தராவித்தை," முதலியவநேக உபாசனைகள்கருவியாகக் கூறப்பட்டுள்ளன.

அதுபோலவே, கருமகாண்டத்திலும் ஒவ்வொரு பாவநிவர்த்தியின் பொருட்டுப் பிராயச்சித்த விரதங்கள் வேறுவேறு பலகூறப்பட்டுள்ளன.

ஒருபாவத்திற்குக் கழுவாயாக வொருபுறம் பிருகுவியமுதலியனவும், மற்றொருபுறம் மரணாந்தப் பிராயச்சித்தமும், ஒத்தனவென்று விகற்பநடையாகக் கூறப்பட்டன (மரணாந்தம், எதுதேகநாசம்வரையும்).

இங்ஙனங் கூறுவது சாகசமாக விருக்கின்றது. (சாகசம்= வல்லான் வகுப்பு). என்னை? ஒரே கருத்தாவுக்கு அநுபவமாயினும், அல்லது இதுவாயினும், பிராயச்சித்த மாறுமென்று விகற்பம் படக்கூறுவது, வல்லான் வகுத்தபடியன்றி நியாயசம்மதம் ஆக மாட்டாது.

தருமம் அதிகமாகச்செய்தால் பயன்மிகுதியாக விருக்கின்ற தென்னும் நியாயத்தை அநுசரித்து, வல்லான்வகுப்பென்னும்

குற்றத்திற்குப் பரிகாரம் சொல்லலாமே யென்னும் பக்ஷத்தில், அது நம்மிருதிறத்தாருக்கும் ஒத்தவாறும்.

ஆகவே, நியாயத்தைப்பற்றி இவ்வுரைசெய்தலாற் போந்த முடிபு என்னெனின்?

தேயபேதத்தாலும், காலபேதத்தாலும், அதிகாரிபேதத்தாலும், சாத்திரங்களின் கருத்துக்கள் வேறுவேறாய் முடிகின்றனவென்று முன்னமே கூறினும்.

இன்னம், விதிவாக்கியங்களில் அருத்தவாத பாகங்களைவிட்டுச்சொல்லின் அளவாலும், விலக்குஎன்றேகூறுதபக்ஷத்தில்எந்தவாக்கியத்திற்கு எவ்வாறு பொருள் படுகின்றதோ? அவ்வாறு பொருள் கொள்ளலாம்.

ஆகவே, ஸ்மிருதிகளுக்கு உரைசெய்த உரையாசிரியர்கள் இதற்கிதுவே பொருளென்று எங்ஙனங்கூறினரெனில்? உள்ளவாறுபொருளையுணருந்திறமில்லாதமந்தஅறிவினர்க்கு, உணர்ச்சியுண்டாம்படிக்கூறியதன்றிவேறல்ல. அங்ஙனங்கூறுக்கால் அற்பமான பாவத்திற்குப் பன்னிரண்டாண்டளவும் பிராயச்சித்தஞ் செய்துகொள்ளினும் பரிகாரமில்லையாம். ஆதலால் அங்ஙனம் வரம்புசெய்து கூறியதென்றுணர்க.

ஆயின், பல பாவங்களின் ஒறிவுக்கும் ஒரே மகாவிரதஞ் சாலுமாக, வேறுபல கழுவாய்கள் கூறுவானேன்எனில்? பெரிய பாவத்திற்குப்பெரியபிராயச்சித்தமும், சிறியபாவத்திற்குச் சிறிய பிராயச்சித்தமும், ஆற்றலுடையவனுக்கு அதிகப்பிராயச்சித்தமும், அற்பசத்தியுடையவனுக்கு அற்பபிராயச்சித்தமும் உண்டாவது தகுதியாக விருக்கின்றது என்றபடியாம்.

ஆயின், பெரிய பிராயச்சித்தத்தால் சிறுபாவமொழிவாம். சிறுபிராயச்சித்தத்தால் பெரியபாவமொழியாதென்பாமெனில்? இதுபெரியது, இதுசிறியது, என்னுமிந்நியமம்யாண்டுபெற்றவாறு? பெருமுயற்சியாலாயது பெரிது. சிறுமுயற்சியாலாயது சிறியது. என்பாயேல்? நன்றுகூறினாய்! மகாவிரதத்தினும் உழுவு பெருவருத்தமுயற்சியது: ஆதலால் அதனையே பெரியதென்று கூறவேண்டும். பஞ்சகவ்வியத்திற்குக்கோமூத்திரம்வேண்டுமெனில்?

கிடைத்தற்கு எளியகோமூத்திரத்திலும், கிடைத்தற்கு அரியசிங் கம்புலிமுதலியவற்றின்மூத்திரங்கிடைப்பதுபெரிதென்றுஎண்ணவும் படும்: ஆயின், அதுவிரதத்திற்குத் தக்கதோ? தக்கதன்று. மகாவிரதமெனில்? தருமசாத்திரத்தில் எந்த அதிகாரிக்கு எதனைப் பெரிதாக விதிக்கப்பட்டதோ? அதனை அவ்வாறே பெரிதென்று தெரிந்துகொள்ளவேண்டும்.

இனி, விரித்து வாதிப்பதிற் பயனென்னை? எதனிடத்து முயற்சிவருத்தமிகுதியாம் உள்ளதோ? அதுவே மகாவிரதமென்னினும் அதனையுமுடன்படுவோம்: ஆயின், பெரியபிராயச்சித்தத்தால் சிறியபாவத்திற்குப் பரிகாரம் வருவதுபோலச் சிறியபிராயச்சித்தத்தால் பெரியபாவத்திற்கும் பரிகாரம் கோருமாம்: சிறுகெருப்புப்பொறிவிரிந்தபெருங்காட்டையும் அழிப்பதுபோலும். சத்தியில்லாத வோர் பெரிய மண்ணுங்கட்டி அக்காட்டினைக் கொளுத்த வல்லதோ? ஆதலால், சாத்திரங்களிற் கூறப்பட்டது சிறியதோர் கழுவாய் ஆயினும், பெரியபாவங்களையும் போக்கத் தக்கதாம் எனில்?

அங்ஙனமன்று. சிறுகெருப்புத்தன்னளவில்நில்லாதுமூண்டு பெரியகெருப்பான பின்னர், அக்காட்டைக் கொளுத்தவல்லதாம். சிறுபிராயச் சித்தமும் அவ்வாறு தன்னளவிற் பெருத்துப் பெரும் பாவங்களை யொழிக்கலாற்றாது: ஆகவின், ஈண்டுக்கூறிய உவமை பொருந்தாது.

அற்றேல், வடிவம் அற்றபாவத்தில் சிறிது ஒழியும் என்பது என்னை? சிறிது ஒழியாது என்பது என்னை? ஒழியுங்கால்எல்லாம் ஒருங்கு ஒழிய வேண்டுவதாமே யெனில்?

அற்றன்று. பாவம்கட்புலன்ஆகாதுஆயினும், அவ்வப்பாவங் களுக்குத்தக்கவாறு ஒவ்வொருவடிவமும் உண்டாயிருக்கின்றது.

அங்ஙனம் பாவத்திற்கு வடிவம் என்பது ஒன்று இல்லை யெனில், ஒருபாவத்திற்கு ஒரோவகையான துன்பமே உண்டாக வேண்டும்: அவ்வாறின்றிப்பலதுன்பம் உண்டாவதால், பாவங்களுக்கு அவயவங்களும் உள்ளனவென்றுணர்க.

ஆகவே, அற்பமாகிய பிராயச்சித்தத்தால் பாவத்தின் அவயவங்களாகிய சிலபாகங்களை ஒழித்துவிடின், மற்றையவற்றிற்குப் போம்வழியாது? ஆதலால் மகாவிரதங்களில் ஒரு பாகமாகிய பிராயச்சித்தத்தால், பாவத்தின் ஒரு பங்கு நாசமடையின், ஒழிந்த பாவத்தின் பாகங்களை ஒழிப்பதற்காக, விரதங்களிற்சேடமாயிருக்கிற பிராயச்சித்த பாகங்களை யெல்லாஞ் செய்துமுடித்தால், அப்போது அப்பாவம் முற்றும் ஒழிந்து சுகமுண்டாம் என்னுங்கருத்தால் ஸ்மிருதிகள் கூறுகின்றன. ஆதலால் சிறியதேயாயினும் பெரியதேயாயினும் எவ்வகைத்தீவினைக்கு எவ்வகைக் கழுவாய் தக்கதென்று, தருமநூலாசிரியர் அனைவரும் ஒருநெறிப்படக் கூறியிருக்கின்றனரோ? அதுவே உண்மையானதாகவிருக்கின்றது.

சிறியதோர் பாவத்திற்காகப் பெரும்பிராயச்சித்தஞ் செய்தால், அப்பெரும் பிராயச்சித்தத்தின் சிலபாகத்திலே அவ்வினை யொழிதலால், ஏனையபாகங்கள் பயனிலி ஆகின்றன: ஆதலால், மகாவிரதஞ்செய்வது வீணெனில்? அற்றன்று. சிலபாகம், பாவத்தை ஒழித்தலால், மற்றையன சுகத்தை யுண்டாக்குவதற்கு வேறதுவாதல் அன்றி வீணுதல் இல்லையாம்.

அல்லதூஉம், அங்ஙனங்கூறுக்கால் பாவம் இவ்வளவிற்றுஎன்று, உணரலாற்றுதான் ஒருவனுக்குப் பெரியதோர் பிராயச்சித்தத்தைச் செய்துகொள்ளுவதற்கு எங்ஙனம் ஊக்கமுண்டாம்: ஆதலால், பாவம்இத்துணையென்று வரையறை பெறுவிடினும், பெரிய பிராயச்சித்தஞ் செய்துகொள்ளுவதே முறைமையாம். என்னை? அங்ஙனஞ்செய்தால், பாவம் சிறியதேல், அஃதுஒழிந்து சுகமுண்டாகின்றது: பெரியதேல், முற்றும் தொலைகின்றது: ஆகவே, மகாவிரதம்பூண்ட புருடன்பெருமையையேஅடைகின்றுன்னென்பதற்கு ஐயமின்று: என்னும் இக்கருத்தைஉள்ளிட்டனனெனைய ஸ்மிருதிநூலாசிரியர் அனைவரும்பிராயச்சித்தங்களைமிகுதிப்படக் கூறிவந்தனர்.

இனி, இப்பராசரரோவெனில்? இக்கலியுகத்தில் மக்களுயிர்க்குச் செய்துமுடித்தற்கு, எளியவாகவும் பெரியபாவங்களைப்போக்கடிக்கத் தக்கவாகவும் உள்ள சிறிய பிராயச்சித்தங்களையேஆராய்ந்து எடுத்துக்கூறியிருக்கின்றனர்.

ஏனைய விருடிகள் பெரிதுஞ்சிறிதுமாகக்கூறிய பிராயச்சித்தங்களெல்லாம், விரதங்களில் உபயோகப்படுவன வாகுமன்றி, இவ்வாறு ஒத்தபடி இராவாம்.

ஆயினும், ஓர் இருடியால் நியமிக்கப்பட்ட பிராயச்சித்தம் வேறோர் இருடியால் ஒத்தது அல்லவென்று, யாண்டும் மறுக்கப்பட்டதில்லை. ஆதலால், யார் யார் எவ்வெவ்விடயங்களைக் கூறியிருக்கினும், அவற்றையெல்லாம் உடன்பட்டுக் கொள்ளலாம். முனிவர் எல்லாரும்கூறியபிராயச்சித்தங்களெல்லாம் யாவருக்கும் உடன்பாடேயாம்.

அங்ஙனமாயின், இத்துணை விரித்துக்கூறுவதிற் பயனில்லையேயெனில்? ஒவ்வோர் இருடிகூறியகூற்று ஒவ்வொருநூலாக இருக்கின்றது.

ஒன்றனுள் இருக்கும் குணப்பொருளைமற்றொன்றில் கொள்வதுமுறைமை அல்லவாம் அன்றோ எனில்?

ஓ மீமாஞ்சக மந்நியரே! முனிவர் வாக்கியங்களில் நீராக வலிமையில் விரோத விளக்களை யெழுப்பி, நுமது பண்டிதத்திறமையை விளக்குகின்றனீர்போலும். அங்ஙனமன்று. ஒரு பாவத்திற்குக் கழுவாயாக ஒருஇருடி ஓர் விரதத்தைக் கூறியிருந்தால், அதே பாவத்திற்குப் பிராயச்சித்தமாக மற்றோர் இருடி வேறோர் விரதத்தைக் கூறியிருக்கின்றனர். அதனால், அவ்விருடியர்வாக்கியங்களிரண்டும் தம்முள் ஒன்றோடொன்று மாறுகொண்டதாமோ? ஆகாவாம். எங்ஙனமெனில்?

அவ்வவ்விருடிகள் கூறிய விரதங்கள் எல்லாவற்றையும் ஒருங்குசேர்த்துச் செய்யவேண்டுமென்னும் சமுச்சயபக்ஷத்தை உடன்படினும், அவ்வாறன்றி, அதைச் செய்யினும் போதும் அல்லது இதைச்செய்யினும் போதுமென்கிற விகற்பபக்ஷத்தை உடன்படினும் உண்டாம் தடையாது? ஒன்று மில்லையல்லவா? (சமுச்சயம் எ-து, கூட்டிக்கொள்வது), (விகற்பம் எ-து, வேறுபடுப்பது).

எங்ஙனமென்னில், கிரஹணம்வந்தால் ஸ்நானம், தானம், ஜபம், ஹோமம், என்னும் நைமித்திய விதிகளை அவ்வவரும்

வேறுவேறு கூறியிருந்தால், அவற்றையெல்லாம் ஒப்பக்கொள்ளுஞ் சமுச்சயபக்ஷமே ஒத்ததுஎன்று, உடன்பட்டீர்அன்றே? அவ்வாறே கூறியுள்ள விரதங்களையும் ஒப்பக்கூறும் சமுச்சயபக்ஷத்தை நீர் ஏன் உடன் படலாகாது?

ஒரு விரதத்தால் பாவம் பரிகாரமாஞல் மற்றொருவிரதம் வீணுகும் என்கிற பக்ஷத்தில், தவம் முழுதும் சுவர்க்கத்துக்குச் சாதகம் என்றுசொல்லியிருக்கும் நியாயத்தைப்பற்றி, அதனையும் உண்மைப்பொருள்என்று ஒப்புக்கொள்ளலாம்: ஆயின், "சாந்திராயணம்" முதலிய விரதங்களைத் தவமென்று கூறியதுபோல "பிக்ஷாசாரியம்," "பிரமசபாலதாரணம்," முதலிய விரதங்களைத் தவமெனக்கூறியது இல்லையாதலால், வேறு விரதங்களால் தீவினைதீர்ந்தவன் ஒருவன், இவ்விரதங்களைச் செய்யவேண்டியது இல்லை: ஆகலின் சமுச்சய பக்ஷம்வேண்டா: ஆகவே, விகற்பப் பக்ஷத்தை நீர் ஏன் உடன் படலாகாது?

இப்படிப்பட்ட இடங்களில் விகற்பத்தை உடன்படினும், கிரஹணகாலத்திற்கு விதித்த ஸ்நாந தாந ஜெப தருப்பணம் என்னுமிவற்றுள், விகற்ப பக்ஷத்தை யெங்ஙனம் உடன்படலாம் என்பாமேல்? அதற்கு விடைமுன்னரே கூறினும்: விகற்பமே யாயினும் சமுச்சயமேயாயினும் கூடுமாதலின், நின்வினவுக்கு இடனின்று.

எங்ஙனம், ஆயினுமாக. மூலப்பிரமாணமாகிய வசனமின்றி, நம்மறிவால் வகுத்துக்கொள்ளப்பட்ட முடிபுகளை யாம் உடன் படுவதில்லை. என்னை? தான்அறிந்தேவண்டுமென்று இச்சையாற் செய்த பாவத்திற்குக் கழுவாய்மிகுதியாகவே இருக்கின்றது. அறியாதுசெய்த பாவத்திற்குக் கழுவாய் சிறுகியிருக்கின்றது என்பையேல்? நன்று கூறினாய்.

மூலவசனங்களில் தான் அறிந்தும் அறியாதும் என்றசொல் உள்ளதாயின், அவற்றிற்கு ஆண்டு அங்ஙனம் யாமும் உடன்படுகின்றும். மூலப்பிரமாணத்தையே அடைக்கலம்புக்க யாமன்றே?

எம்மறிவானேயாம் வரம்புசெய்து கொள்வது ஒன்று உண்டாகுமாயின், கபிலமுனிஎல்லாம் உணர்ந்தவரன்றே? அவர் எல்லாம் உணர்ந்தவராகவே, கணாதமுனிவர் அல்லர் என்று

எங்ஙனம்? என்னும்பெருவழக்குக்கு இடனுய்த்தருமவழி முற்றும் கெடுகின்றது. இக்கருத்தை "பிரமசூத்திரம்" உ-ம் அத்தியாயம், முதற்பாதம், முதலாவது, ஸ்மிருதி அதிகரண பாஷியத்துட் காண்க.

இனி, மீமாம்ஸகத்துவம்என்பதுஎன்னை? மூலவாக்கியங்களை அனுசரித்துவிசாரஞ்செய்துபொருட்டிறத்தை வரம்புசெய்வதே யாம். அங்ஙனமின்றிச் செய்தவிசாரங்களெல்லாம் அவ்வவர்கல் விக்திறத்தினைக்காட்டும் அளவாவதன்றி மீமாம்ஸையாகமாட்டாது. (மீமாம்ஸகத்துவம் எ-து, நியாயம் விளங்குந்தன்மை).

அறிந்துசெய்யாத பாவங்கட்கு இங்ஙனம் இது பிராயச்சித்தமாகிய சுத்தியென்று கூறப்பட்ட விடத்தில், அவ்வாறு செய்தால் அத்தீவினைமுற்றும் தொலைகின்றது. அதே பிராயச்சித்தத்தை அறிந்துசெய்த பாவங்களில் செய்தால் ஒன்றும் ஆவதில்லையாம்.

ஒருஸ்மிருதியில் ஒருசுத்தியைக் கூறியிருந்தால், வேறு ஸ்மிருதிகளில் அச்சுத்தி வேறுவகையாகக் கூறப்பட்டிருக்கின்றது. இங்ஙனங் கூறுவதனுள்ளும் சாமாந்தியமாகவும் விசேடமாகவும்கூறும். விசேடங்கூறும் நூல்கிடைக்குமளவும் சாமானியத்தைக்கூறும் நூலுக்குப் பொருள்நிச்சயமாவதில்லை. விசேடவிதிகிடைத்தால் சாமாந்தியவிதியாற் பயனில்லை. அவ்வாறுகூறுக்கால் பிரமாணமென்பதே வேறுகமுடியும்.

இங்ஙனம் பிரமாணம் இதுவென வரம்புசெய்த ஆசிரியர்கள் எல்லாமுணர்ந்தவர்கள்: ஆதலின், ஒவ்வொரு விடயத்தின் எல்லாக் குணங்களையும் உபசங்காரஞ்செய்தே கூறியிருக்கின்றனர். ஈண்டு (உபசங்காரம்-எ-து-சுருக்குதல்) ஆதலால் அதற்குச் சம்பந்தமாகிய நூல்களெல்லாமுழ் எவ்வாறு இருக்கின்றனவோ? அவ்வாறே உடன்படல்வேண்டும்.

ஒருஸ்மிருதிக்கண்ணே கூறப்பட்டிருக்கும் பிராயச்சித்தங்களை ஆராய்ந்துநிச்சயிக்கும்போது, ஆண்டுகாணப்படாது இருப்பவைகளாகவும் வேறுஸ்மிருதிகளால் வெளிபெற வுணரத்தக்கவைகளாகவும் இருக்கின்றன. ஆகவே அவற்றிற்குச் சம்பந்தப்பட்டவிடயங்களெல்லாவற்றையும்உபசங்காரஞ்செய்து, ஒருங்கு

கொள்ளாவிடத்து, அவ்விரதத்தால் யாதொரு பயனும் இல்லை யாகமுடிகின்றது.

விதிவாக்கியங்கள் எவ்வாறு காணப்படுகின்றனவோ? அதிகாரியின் ஆற்றல் எவ்வளவினதோ? அவ்வளவில் வினைமுடித்தல் வேண்டும்: அன்றி, குணமில்லையென்னும் ஆசங்கையால் அதனை வெறுத்துக் கைவிடுதல் ஒத்தபடியன்று.

பிராயச்சித்த விடயங்களிலும் ஆசாரவிடயங்களிலும்வேறு யுள்ள ஏனையதருமநூலுள் யாம் கண்டவாறு, அவ்வவற்றையெல்லாம் அவ்வவ்விடங்களில் விளங்கக் குறித்துக்காட்டி, ஆண்டாண்டு வேண்டுவனவாகிய அவ்வவற்றின் குணங்களை யெல்லாம் உபசங்கரித்துக் கூறியிருக்கின்றும். இந்தக்குறைபசங்கார வகைமைகளை "பிரமசூத்திரம்" கூடம் அத்தியாயம், கூடம்பாதம், முதற் சூத்திரத்துட்காண்க.

மந்தராயினர்க்கு உணர்ச்சி உண்டாகும்படி, முற்காலத்து நிபந்தன நூலாசிரியர் எவ்வாறு கூறியிருக்கின்றனரோ? அவ்வாறு யாமும் ஒவ்வொருவிடயங்களையும் ஆராய்ச்சிசெய்து முடிவு கூறியிருக்கின்றும்.

எவ்விடயத்தில் எது கூறப்பட்டிருக்கின்றதோ? அவ்விடயத்தில்அதுசிறந்தது அன்றி ஏனையசிறந்தது அன்றும்: ஆயின், அவ்விடயத்தைக்குறித்து வேறு சிலவிடங்களிற்கூறப்பட்டிருக்கின்ற விசேடம் ஏதேனும் கிடைக்கும் பகுதித்தில், அதனை வேண்டாம் என்று யாம் விலக்குவதில்லை: ஆகலின், மேற்கூறிய எல்லாவிடயங்களிலும், யாவர்க்கும் உணர்ச்சியுண்டாம் பொருட்டு இப்பராசரஸ்மிருதிக்கு உரைசெய்யத் தொடங்கினம் என்றுணர்க.

ஓம்

உ சிவகணபதியேநமஃ.

ஸ்ரீபராசரஸ்மிருதிஸாரமும்,

மாதவீய வியாக்கியாநக் கருத்தின்படித்.

தமிழ் மொழி பெயர்ப்பும்,

முதலாவது - ஆசாரகாண்டம்,

முதல்

அத்தியாயம்.

ஸ்ரீ ॥ అథాతోఽమశైలాగ్రే దేవదారువనాలయే।
వ్యాసమేకాగ్రమాసీన మపృచ్ఛన్నృషయఃపురా ॥ ❊ ౧
ఓం ॥ మానుషాణాంహితంధర్మం వర్తమానేకలౌయుగే।
శౌచాచారంయథావచ్చ వదసత్యవతీసుత ॥❊ ❊ ౨

என்பன சுலோகங்கள்.

இவை யென்னுதலிற்றே வெனின்:—எடுத்துக்கொண்ட நூலின்கண்ணே கேட்போருக்கு ஊக்கஞ் செல்லுதற்பொருட்டு நூலினுக்குரிய அநுபந்த சதுட்டயமாகிய சம்பந்தம், அதிகாரி விடயம், பயன், என்னுமிந்நான்கினையுங் கூறுதல் நுதலிற்று.

(இவற்றின் பொருள்).

ஒருவன் வேதமோதிய பின்னர், "ధర్మేణపాపమపనుదతి" எனவும், "ధర్మంచర" எனவும், வரும் சுருதிகளால், சாதாரணமாகத் தருமத்தாற் பாபத்தைப் போக்கிக்கொள்ளுகிறான், என்றும்; தருமத்தைக் கடைப்பிடிக்கவேண்டும், என்றும்; உணர்ந்திருத்தலின், அத்தருமவடிவம் யாது? அதனை அறியவேண்டும் என்னும் இச்சைபிறத்தல் இயல்பு ஆதலால்; முற்காலத்து அங்ஙனம் அவ்வெண்ணம் வாய்த்தவிருடியர், இமயமலையின் கொடுமுடிக்கண்ணதாகிய தேவதாரு வநத்தினிடத்து, ஒருவழிப்பட்ட மநத்தின

ராய் வீற்றிருக்கும் வியாசனையடைந்து, ஓ! சத்தியவதிபுத்திரரே! இக்கலியுகத்தில் மக்களுயிர்க்கு இதமாகிய தருமத்தையும் சுத்தமாகிய ஒழுக்கத்தையும் உண்மையாகக் கூறவேண்டுமென்று விஞ்வினர்-என-று.

"மங்களானந்தரारंभप्रश्नकर्त्रेन्व्यृष्यूंश्च अथ" என்ற நிகண்டின்படி, "அத"என்னும் அவ்வியயம், "மங்கலம்", "ஆனந்தரியம்", "ஆரம்பம்", "பிரசினை", "கார்ச்சிரியம்"என்னும்பல பொருள் ஒருசொல். ஆனந்தரியம்=பின்னர். ஆரம்பம்=தொடங்குதல். பிரசினை=வினாதல். கார்ச்சிரியம்=எல்லாம். அவற்றுள், ஆனற்று ஈண்டு பின்னர் என்னும் பொருளிலேயே கூறுவரோவென் எனில்?

மங்கலம் என்பதும், பின்பு என்பதும், குறியப்பிறபொருளாக்கூறுங்கால், பின்வரும் விஞவினர் என்னும் விசேடச்சொல்லோடு இயைபு இல்லையாம்.

ஆதலின், பின்னர் விஞவினர் என்றுகூறின், அவ்வயத்திற்குத் தகுதியாக விருந்தவின், "அத" என்பதற்கு ஆனந்தரம் என்றே பொருள் கூறப்பட்டது. ஆனந்தரியம் = ஆனந்தரம்= பின்பு=பின்னர், என்பனதம்முள் ஒக்கும். அவ்வயம்=சொல்லும் பொருளும் இயைபு பெறநிற்றல்.

ஆரம்பம் என்று பொருள் கூறினால், தொடக்கத்தில் விஞவினர் எனவே இயைபு இல்லையாம்.

வினதல் என்று பொருள்கூறின், வினவி வினவினர் எனப்படுதலால், கூறியது கூறல் என்னும் குற்றத்திற்கு இடமாம். அன்றி இயைபும் இல்லையாம். இயைபு=சம்பந்தம்.

எல்லாம் என்று பொருள் கூறின், எல்லா வற்றையும் வினவினர்; எனச்சொல் இயைபுபெற்று இருப்பினும், முன்னேயசம்பந்தம் குறியாது செல்கின்றது.

ஆனந்தரியப்பொருளாக உணர்த்தால், முன்னடந்ததற்கும் பின்வினவுதற்கும், உள்ளகாரணகாரியப்பொருட்டானசம்பந்தம் குறிக்கப்படுகின்றது ஆகவின்.

ஆயின், "हृदयस्याग्रेवदत्यथजिह्व्याऽथवक्षसः" என்பது-மந்திரத்தின் முடிவில் கூறுகின்றனன்: பின்பு காவினல்: அதன்

பின்னர் நெஞ்சினுடைய. எ – று. இந்தசுருதி வாக்கியத்துள் "அத" என்னுஞ் சொல்லினுக்குப் பின்பு என்பதுபொருளாக இருந்தும், காரணகாரியப்பொருட்டான சம்பந்தம் குறித்தது இல்லையே என்பாயேல்!

அங்ஙனம் அதுவழுவு அன்று. அவ்விடத்தில்விரும்பப் பட்ட கருமத்தினுடைய அநுட்டாந முறை மாத்திரையில் கூறப்பட்டு இருக்கின்றது. ஈண்டோனனில்? சாமக்கிரியை யாகிய துணைக்காரணம், அல்லது, கருவிக்கும் அதன்காரியத்திற் கும் உள்ள முறைவழுவாத விசேடம் எதுவோ? அதுவே சிறந் ததாம்: ஆதலின், அஃது உடன்பாடு ஆகின்றது.

அந்தச் சிறப்பு என்பது, முன்னும் பின்னுமாயுள்ள எவ் விரண்டினுக்கு, விளம்பம், வியபிசாரம், என்னும் காலநீட்டித்த லும் முறைகடந்து செல்லுதலுமாகியகுற்றம் உண்டாவது இல்லை யோ? அதுசிறப்புத்தன்மையாம். துணைக்காரணமுற்றும்கிடைத்த பின்பு, காரியம்பிறவாது காலந் தாழ்த்தல் இல்லை. காரணம் இல்லாமல் காரியம் பிறத்தலாகிய முறைகடத்தலும் இல்லை. இக்கருத்து, "அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா" என்ற "பிரமசூத்திரத்தில்" விவராணசாரியரால் விரித்து உரைக்கப்பட்டுள்ளது.

இவ்விடத்தில் துணைக்கருவி என்பதுயாது என்னின்? விளைதல் என்னும் காரியம்பிறத்தற்கு விளைவத்தக்க விடயத்தின் சாதாரண உணர்ச்சியே யாம். ஒருவிடயத்தை ஒருவன் சிறிதும் உணராத இடத்தும் முற்றும், உணர்ந்த இடத்தும், விளைதல் இல்லையாம் ஆதலின்.

"தர்ஶனபாபமபநுததி", "தர்மஂசர", என்பன தருமத்தால் தீவினையைப் போக்கடிக்கின்றன். எ-ம், தருமத்தில் ஒழுகுக. எ-ம், கூறியவாறு, இவ்வேதவாக்கியங்களை ஓதுவதனல் ஒரு வனுக்குத் தருமஞ்செய்ய வேண்டும் என்னும் பொது உணர்ச்சி உண்டாகின்றது. (பொது = சாதாரணம், சாமாந்தியம், என்பன ஒருபொருள்). ஆதலால், "அத" என்னும் மொழிக்கு வேதாத்தி யயநம் செய்தபின்பு என்று பொருள்படுகின்றது.

அல்லதூஉம், "வர்தமாநேக்ல" என்றுமூலத்துள்ளே, ஆசிரிய ரால் விசேடித்துக்கூறப்பட்டதனல், ஈண்டு, "அத" என்பதற்கு

வனையயுகங்களின் தருமங்களை அறிந்தபின்பு எனப்பொருள் கூறினும் அமையும். (விசேடித்தல்=அடைகொடுத்தல்).

எடுத்துக்கொண்டநூல் இனிது முடிதற்பொருட்டு, மங்கலமொழியால் தொடங்கவேண்டும், என்பது சான்றோர் வழக்காம் ஆகலின், இந்த "அத" என்பதற்கு மங்கலம் உண்டாகன்று வன் பொருள்கூறலாகாது எனின்?

இங்ஙனம் அந்த அருத்தத்தைக் கூறவேண்டுவது இல்லை. எனெனில்? பின்னர் என்று பொருள்கூறப்பட்ட "அத" என்னுஞ் சத்தத்தைக்கேட்ட அளவிலே, விஷ்ணு மந்திர முதலியவற்றின் ஓசையைப்போலும் மங்களகரமாகவே இருக்கின்றது ஆகலின்.

என்னை? "ஓங்காரஶ்சாதஶப்தஶ்சத்வாவேதா ப்ரஹ்மணஃபுரா । கண்ட²ம்பி⁴த்வா ஸனிர்யாதௌதஸ்மான்மாங்க³ளிகாவுபௌ" என-து- ஓங்காரமும், "அத" (அநந) என்னும் சொல்லும், ஆகிய இரண்டும், முன்னம் பிரமனுடையமிடற்றைப் பிதித்துக்கொண்டு வெளிப்பட்டன ஆகலால், இவ்விரண்டும் மங்கலசத்தமாகும். என-று.

இங்ஙனம் ஆயின், இவ்விடத்தில் ஓங்காரத்தை என்கூறலாகாது? எனின், அங்ஙனம் அன்று. அது வேதவிஷயத்தில் மாத்திரம்கூறத்தக்கதாக இருக்கின்றது. அதனால்தான் "அஸ்யுவேதாதி த்வாத்ஸர்வமனூனாம்ப்ரயுஜ்யதேஹ்யுதா" என-து, இப்பிரணவம் வேதத்திற்கு ஆதியாம், ஆதலால், எல்லாமந்திரங்களுக்கும் முதலில் பிரயோகிக்கப்படுகின்றது. என-று. இது "பிரபஞ்சசாரம்" என்னும் நூலுள் சங்கராசாரியராலும் கூறப்பட்டது.

ஆதலால், ஸ்மிருதிகளின் முதற்கண்ணே முனிவர்கள் எல்லாம், "அத" (அநந) என்பதனையே கூறினர்கள். ஆகவே, ஓதத்தக்க அதிகாரிகளின் நாத்தை விசாரித்துப் பிரணவத்தையும், "அத" என்பதனையும், இடம்வருத்துக் கூறியவாறாக வெளிப்படுகின்றது.

பிரணவத்தை ஓதுதற்கு உரிய அதிகாரிகள் ஆவார்:—வேதியன், அரசன், வைசியன் என்னும் மூன்றுவருணத்தினர் மாத்திரமே; என்று வேதங்கூறிற்று. என்னை? ஸாவித்ரீம்ப்ரணவம் யஜுர்ஸ்ரீ ஸ்ரீ ப்ராஹ்மணாம்நேச்ச²தி." என-து, காயத்திரி, பிரணவம், யஜுர்வேதம்,

இலக்குமி, இவைகளை மாதரும் சூத்திரரும் விரும்பத்தக்க அதிகாரிகள் அல்லர்; எ-று. இது சுருதிமொழி. (மாதர் சூத்திரர்) பிரணவாதிகளுக்கு அதிகாரியர் அல்லர்! எனவே, ஏனையர் அதிகாரியர் என்றபடி.

"பௌருஷேயம்" ஆகிய நூல்கள் எல்லாவருணர்க்கும் பொது! ஆதலால், அதற்குப்பிரணவத்தை ஒழித்து "அத்" என்பதனை மங்கலமொழியாகக் கூறுவதே தகுதியுடைத்து என்று உணர்க. பௌருஷேயம்=மாந்தரால் சொல்லப்பட்டது. இருடிகளும் மாந்தரே ஆவர். திருவள்ளுவனரும் "நிறைமொழி மாந்தர்" என்றதனாலும்உணர்க.

இனி "அதः" என்பது எதுப்பொருளில் வந்தது. எதுவாவது, என்னெனில்? எந்த எதுவால் ஒரு வேதசாகையை ஓதினவனுக்கு ஏனையசாகைகள் எல்லாம் கூறியதரும உணர்ச்சி முழுவதும் உண்டாவது இல்லையோ? அதுவும்; எந்த எதுவால் வேறு ஒருயுக தருமத்தை உணர்ந்த உணர்ச்சியைக் கொண்டு,ஏனையயுகதருமங்களை உணரலாகாதோ? அதுவும், எதுவாம். (எனவே, முழுவதும் உணராமையே எது என்றபடி).

தருமங்கள் அனைத்தும் தோற்றுவதற்கு ஒருதாராயும், பரந்து சிதறிக்கிடக்கும் கிளைகளை உடையதாயும் இருக்கின்ற முடிவு இல்லாத வேதவாக்கியங்களின் துணிபு, "யோகியினது" யோகக்காட்சியிலேயே பெறத்தக்கதாக இருக்கின்றது. அக்காட்சியோ? யோகாசனத்தில் இருந்தபொழுதே கிடைக்கத்தக்கதாக இருக்கின்றது. அந்த யோகாசன இருக்கையோ? தக்க இடம்பற்றியதாக விருக்கின்றது. ஆதலால், அவ்விசேடத்தைக் குறிப்பதற்கு "हिमशैलाग्रे देवदारुवनालये." என்றார். (தார்=மேல்), (சாகை=கிளை), (யோகாசனத்தில் இருத்தல்=தியானசமாதியின் பொருட்டு ஓரிடத்தில் பீடம் இட்டு உட்கார்ந்திருத்தல்).

இனி, அவ்விசேடமாவது என்னெனில்? हिमशैलाग्र=பனிமலைஉச்சி. எனவே, ஏனையஉயிர்கள் அவ்விடத்தை அடைவதற்கு அருமையாதல் கூறப்பட்டது. ஆகவே, அது இரகசிய

மான இடம் என்று விளங்குகின்றது. இக்கருத்து உபநிடதங்களிலும்கூறியபடி.

என்னை? "கைவல் யோபநிடதத்தில்".—"விவிக்ததேசேசுகாஸநஸ்தஃ." எ-து, இரகசியமான இடத்தில் சுகமான ஆசனத்தில்-எ-ம்-"க்ஷுரிகோபநிடதத்தில்."—"நிச்சித்ரம்தேசமாஸ்தாய தத்ராஸநமதாஸ்தித:." எ-து, சத்தமில்லாத இடத்தில் ஆசனமிட்டு உட்கார்ந்து, எ-ம், கூறியவாறுகாண்க.

தேவதாரூபத்தைக்கூறினர்: தவம்செய்வார் மனத்திற்கு ஒத்த இடம் என்பது குறித்தற்கு. என்னை? "சுதேவதாசுவதாரசாகையின் மந்திரோபநிஷத்தில்," "சமேசுசோசர்க்ராவஹ்நிவாலுகாவிவர்ஜிதேசப்ரஜலாச்ரயாதிபிஃ।மனோனுகூலேநதுசக்ஷுஃபீடனே குஹாநிவாதாச்ரயணேப்ரயோஜயேத்." — எ-து, ஒத்தபடியாயும், புனிதமானதாயும், வன்னிலமாயும், வெப்பம் மணலுறுத்தல் முதலியவாணைகள் இல்லாததாயும், பேரிரைச்சல்நீர்கோத்தல்முதலிய இல்லாததாயும், மனத்திணக்கு இசைந்ததாயும், கண்ணுக்குத் துன்பம்தராததாயும், காற்றின் பீடைக்கும்குளிர்பனிஉபாதிக்கும் அமைந்தகுகையுடையதாயும், உள்ள இடத்தைத்தவத்திற்கு உபயோகிக்கவேண்டும். என்றவாறு காண்க. கண்ணுக்குத் துன்பந் தராமையாவது, கொசுமுதலிய வற்றால் வாதைப்படுதல் இல்லாமையாம்.

அங்ஙனம் அன்று. "யத்ரைகாக்ரதாதத்ராவிசேஷாத்." என்ற இந்த அதிகரணத்தில், (அதிகரணம்=இடம்) யோகமுயற்சிக்குத் திக்கு, தேசம், காலம், இவற்றினது நியமம் வேண்டுவது இல்லை, என்றதேயெனில்? நல்லது, அம்முயற்சிக்குக் காட்சிப்படாத ஏதுக்களை நியமமாகக் கூறுவிட்டாலும், காட்சிப்பட்டுள்ள மனம் ஒருவழிப்படுதலாகிய ஏது நியமமாகலைக் கூறுதுவிட்டது இல்லை என்று உணர்க.

இனி, "ஏகாக்ரம்" என்றதனால் ஐந்துவகையான உள்ள நிலைக்களத்துள், ஐம்பொறிக்கும் விடயமாகாத அல்லது எட்டாதபொருளை அறிவதற்குத் தக்க நான்காவது நிலைக்களத்தைக் குறித்தவாறு ஆயிற்று. இங்ஙனம், ஆசிரியர், பதஞ்சலியார் கூறிய "யோகசூத்திரத்தின்" உரையாகிய வையாசகபாஷியம்." எ-து, வியாசர்செய்தமாபாடியத்துள், உள்ளத்தின் நிலைக்களம் ஐந்து

எனக் குறிக்கப்பட்டது. உள்ள நிலைக்களத்தை "சித்தபூமி" எனவும் கூறுவர்.

அவைவருமாறு:— "க்ஷிப்தம்மூடம் விக்ஷிப்தமேகாக்ரம் நிருத்தமிதிசித்த பூமயஃ." என-து, கூஷிப்தம், மூடம், விகூஷிப்தம், ஏகாக்கிரம், நிருத்தம், என்னும் ஐந்தும் சித்தபூமியாம். எ-று. இவற்றை முறையே:—உழல்நிலை, உறக்கநிலை, இருமைநிலை, ஒருவழிநிலை, தன்னிலை என்னப்படும்.

அவற்றுள், முதலாவது:—கூஷிப்தம்=உழல்நிலை, என்பது, ஒவ்வொருகணத்திலும் இருவினையாகியகாற்றிலால் அநுபவிக்கப் படும் பலபொருளிலும்ஆசையுடையதாய் விளைவில்சுழலும்படிச் செலுத்தப்பட்ட மனத்தின் நிலைமையாம்.

இரண்டாவது:—மூடம்=உறக்கநிலை - என்பது, தூக்கம், சோம்பல், நெடுநீர் முதலியவற்றோடுங்கூடிய மனநிலைமையாம். (நெடுநீர்=வறிதுகாலங்தாழ்த்தல்=தாமசம். வறிது=வீண்).

மூன்றாவது:—விகூஷிப்தம்=இருமைநிலை-என்பது, எப்போ தாயினும் ஒருபோது சமாதியோடுகூடி, மற்றைப்போதெல்லாம் விடயங்களில் உழலுகின்ற மனநிலைமையாம். (சமாதி=கருவிக ரணங்கள் எல்லாம் தன்னிலையில் ஒத்துநிற்றல்). (விடயம்=பற்றப் படும்பொருள்).

நான்காவது:—ஏகாக்கிரம்=ஒருவழிநிலை-என்பது, இயமம், நியமம், முதலிய அட்டாங்கயோகப்பயிற்சியின் வல்லபத்தால், ஓரேபொருளினிடத்தில் மனத்தின் ஒழுக்கமானது, இடைவிடாது தொடர்ந்துசெல்லும் வெள்ளம்போல, செல்லும் நிலைமையாம். (ஒழுக்கம் - என்பது, இவ்விடத்தில், நடக்கும் நடை).

ஐந்தாவது:—நிருத்தம்=தன்னிலை - என்பது, மனம், தன்னை மறந்து சோர்ந்துபோகாமல் விழித்திருந்தும், வேறு ஒரு புற விடயத்திலும் உணர்ச்சி பிறவாது இருத்தலும், அவ்வுணர்ச்சி யொருகால் வேண்டும்போது, பிறப்பதற்கு ஏதுவாகிய அதன் காரியம் விதைப்போல வாசனைமாத்திரையில் சேடப்பட்டுக் கெடாது நிற்றலுமாகிய அந்நிலைமை யாம். (சேடம்=மீதி).

அந்த ஐந்தனுள், சுஷிப்தமூடங்களாகிய உழல்நிலை, உறக்க நிலை, இரண்டும் யோகமார்க்கத்திற்குப்பயன்பட்டன அல்ல: என்பது யாவரும் அறிந்தபடியாம்.

இனி, விசுஷிப்தமாகிய இருணம நிலையோவெனில்? பலகாலும்விடயப்பற்றுப் உழலுகின்றனெஞ்சு, அவ்வுழலுதலைநிறுத்து ஒருபோது சமாதி கூடுவதால் அதுயோகம் என்றுகூறப்படாது. என்னை? வறுத்தவித்து முளைத்துப் பயன்கொடாதவாறுபோல, அந்த ஏகதேச சமாதி தவறிப்போதலையுடையதாம்; ஆதலின் பயனைக்கொடாதாம்.

ஆகவே, ஏகாக்கிரமாகிய ஒருவழிநிலையோ எனின்? அது உண்மைப்பொருளை விளக்குகின்றது; தவலைகளை காலுக்குகால் குறைந்தொழியும்படிக் கெடுக்கின்றது; தன்னைப்பற்றித்து இருக்கும் வினைக்கட்டுகளை அவிழ்த்து எறிகின்றது, தான்குறிக்துக்கொண்ட இலக்கியமாகியபொருளைத் தன் எதிர்முகமாய்வெளிப்படச்செய்கின்றது; ஆதலால் அது, "சம்பிரதாத யோகம்" என்று பெரியரால் புகழப்படுகின்றது. அதனுள் "சம்மியம" விசேடத்தால் பலவகைப்பட்ட யோகச் செல்வம் உண்டாகின்றன. "தாரணை, தியானம், சமாதி" என்னும் மூன்றும் ஓரோவிடயமாம்: ஆகவின், அது "சம்மியமம்" என்றுசொல்லப்படுகின்றது. (தாரணை=விதித்தவிடங்களில் குறித்தபொருளை நினைவிலை நிறுத்தல். தியானம் ஒருபொருளை மறவாதுநினைத்தல்). சமாதிமேலே கூறப்பட்டது.

ஒற்றுமை நயத்தினைப் பற்றிய பலவேறுபாடுகளை யுடைய சத்தஞானமும், அருத்தஞானமும், ஆகிய அவ்விரண்டில் அந்தச் "சம்மியமம்" என்பது ஒருவனுக்கு உண்டாகுமாயின், அதனால், உலகத்தின்கணுள்ள சத்தங்கள் அருத்தங்கள் எல்லாம் கண்கூடாக விளங்கச்சித்த பறவை முதலியவற்றின் பாடைகள் தாமே விளங்குவனவாம்: என்று ஆசிரியர் - பதஞ்சலியாரால் கூறப்பட்டது. அதுபோலும் நியாயத்தினால், பலபடக்கிடந்த வேதசாகைகளினுடைய எல்லாஞானமும் உண்டாகும் என்னும் கருத்தால் "ஸ்ரோத்ரம்" என்று கூறப்பட்டது. அவ்வொருவழிப்படும் நிலைமைக்கு அங்கமாயுள்ளது, "ஆசாரம்" உடைமை:

ஆதலால் " ஆசீநம் " என்றார். (அங்கம் = அவயவம் = உறுப்பு. ஆசநம் = இருப்பு. ஆசீநம் = இருத்தல்).

எனவே, விடயப்பற்று உள்ளவர்க்கு மநம் அலைவுடைமையால் சமாதிகைகூடாது: சமாதி கைகூடாதவர்க்கு முக்காலத்தும் நிகழ்பொருளை உணர்தல்கூடாது: கூடாதுபோகவே அவர் எல்லாம் உணர்ந்தவர் ஆகார்: ஆகவே அவர் ஆசிரியர் ஆகார் ஆகலின், முநிவர்கணம் விளைவதற்கு நாடிச்சென்ற வியாசர் விளைவி அறிதற்கு இடனாகத்தக்க ஆசிரியர்என்பது, அறிவித்தற்கு இங்ஙனம்கூறியது, கருத்தாகக்கொள்க. (நிகழ்பொருள் = உள்ள பொருள்).

அங்ஙனம் வியாசசூத்திரம், " ஆசீநஸ்ஸம்பவாத் ".— எ-து. (படுத்திருப்பவனுக்குக் காரணம் தோன்றுமலை நித்திரை வந்து சோரச்செய்கின்றது. நின்றிருப்பவனுக்குத் தேகத்தைத் தரிப்பதில் மநம்முயலுகின்றது. நடப்பவனுக்கும் ஓடுகின்றவனுக்கும் மநம்தவறிப்போதல் மிகுதியாக இருக்கின்றது. இக்குற்றங்களை ஒழிக்கவேமிக்கது இருத்தலாம்). ஆகவே, இருப்பவனுக்கு ஆனலோ? சித்தம் ஏகாக்கிரமாதல் = ஒருவழிப்படுதல் கூடுகின்றது; ஆதலால், இருந்துயோகப்பயிற்சி செய்யவேண்டும்: என்றவாறு.

இனி, அநுபந்தசதுட்டயத்துள் சம்பந்தவருமாறு.

அன்வயவியதிரேகங்களால் விளைதல், அறிவதற்குக்கருவியாகஇருக்கின்றது. விளைவுதல் உண்டானால், அறிவதனுக்கு உபாயம் உண்டாகும் என்பது அன்வயவியாத்தி; விளைவுதல் இல்லாவிட்டால், அறிதலுக்குவழி உண்டாவதில்லை என்பதுவியதிரேகவியாத்தினைக்கருதி " அஸ்ருக்ஷ " = விளவினர். என்று மூலத்துள் கூறப்பட்டது. "பகவற்கீதைகளுள்" "తద్విద్ధిప్రణిపాతేనపరిప్రశ్నేనసేవయా" எ-து, வணங்குதலினாலும், வினாதலாலும், பணிசெய்வதனாலும், அவ்வறிவென்றுணர்க-எ-று. இது அன்வயவியாத்தி "ஸ்மிருதியுள்" " నాపృష్టస్యకస్య చిద్బ్రూయాత్ " எது-விளவப்படாதவன் எவனுக்கும் கூறலாகாது. எ-று. இது வியதிரேக வியாத்தி. (அன்வயம் = உடன்பாடு. வியதிரேகம் = எதிர்மறை. வியாத்தி = அடைவு). (கருதல் = நினைத்தல்.)

"ருஷி" என்பது, ஐம்பொறிகளுக்கும் எட்டாத பொருள் உணர்ச்சியுடைமை எனறு. ஆகவே, தெளியப்படுகின்ற தருமங்களை அநுட்டித்தபின்பு அன்றோ? இருடியாகும் தன்மை உண்டாம்: எங்ஙனம், முன் உண்டாகப்போகின்ற குறிகளிலை ("கடம்கூரு") "பாணைச்செய்க" என்றசொல்வழக்கு உண்டாயதோ? அதுபோலும். இல்லையேல் பொறிகளுக்கு எட்டாத பொருளை நோக்கிநிற்கும் அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும்; என்னும் இச்சையால் விளைவுதல் என்பது உண்மையல்லவாம்.

எனவே, இருடிகள் என்பவர் பொறிகளுக்கு எட்டாதனவற்றை யுணர்பவர்: தருமம் என்பது பொறிகளுக்கு விடயமாகாத பொருள்: தருமத்தை அநுட்டியாமல், இருடியாகான். இருடிக்கு அன்றித் தருமம் விளங்காது. உணராதனவற்றை ஒருவன் அநுட்டிப்பது எவ்வாறு? உணர்ந்தவர்களே ஆயின், உணர்ந்ததைக்கேட்பது ஏன் எனில்? ஈண்டு "பாணைசெய்க" என்புழி பாய்வடிவந்தோன்றுமுன்னே, அதற்கு அப்பெயர் வந்தவாறுபோல, இனி இருடித்தன்மை அடைவது உண்மை ஆதலால், தணிவுபற்றி இருடிகள் எனவும், அவர்கள் அத்தரும உணர்ச்சியைத் தருமம் எனப்பொதுவகையால் உணர்ந்தார்களன்றி, இது இத்தன்மைத்து; எனச்சிறப்புவகையால் உணரவில்லை யாதலால், விளைவினர் எனவும், கூறியது கருத்தாகக் கொள்க.

அல்லதூஉம், தாம்தெரிந்து கொள்ளவேண்டும் என்னும் இச்சை இல்லாதவர் ஆயினும், மந்த அறிவினையுடையவர்களை உணர்த்துவதற்காகவேனும், கேட்டே உணர்தல் வேண்டும் என்னும் மரபைத் தமதுமாணாக்கருக்கு உணர்த்துவதற்காகவேனும், இருடியரும் விளைவுதல் கூடும்.

"ஸம்ருச்ச" = விளைவினர். இவ்வினைச் சொல்லே இறந்த காலத்தை உணர்த்துகின்றது. "புரா" - எ-து- முன்பு என்னும் பொருளதாகிய அவ்வியயம். இந்த அவ்வியயமும் இறந்த காலத்தையே உணர்த்துகின்றது: விளைவியபின்பு அன்றோ? விளைவினர் என்று கூறவேண்டும். ஈண்டு முன்பு விளைவினர் எனக்கூறப்பட்டது. ஆகவே, விளைவினர்என்னுஞ் சொல்லானே முன்பு என்னும்பொருள் விளங்குமாக, வேறு முன்பு என்று கூறுவானேன் எனில்? அங்ஙனம் அன்று. கழிந்த எல்லாக் கற்பங்களிலும், தருமசாத்திரம் இவ்வாறேவெளிப்பட்டன; என்னும் கருத்தை அந்த "புரா" என்னுஞ்சொல் குறிப்பிக்கின்றது.

அங்ஙனம் குறிப்பிப்பது, விசேடப்பற்றை உண்டாக்குவதற்குக் காரணம் ஆகின்றது. (அவ்வியயம்=திணைபாலிட முருபுபெறுத சொல்.) (கற்பம்=காலத்தின் பெரும்பகுதி).

ஏனைய முனிவர்களைப் பொருள் படுத்தாது, வியாசமுனிவனையே விளுவிய இருடிகளுக்கு, வைதிகதருமத்துள் வியாசமுனிவரோ சான்ரோர் என்பது கருத்து. (சான்ரோர் எ-து. ஈண்டு உணர்ச்சியில் சிறந்தவர் எ-று).

ஆதலால், இங்ஙனம்செய்ய விரும்பியநூலினுக்கு, முனிவர்கள் விளுவினோடு நேராகவுள்ள சம்பந்தம் ஒன்று; விளுவ வேண்டும்என்னும் இச்சையைப் பிறப்பிக்குமுகமாக, அத்தியயநத்தோடு உள்ள சம்பந்தம் ஒன்று; இவ்விரண்டு சம்பந்தங்களும், இத்தலைச் சூலோகத்துள்கூறியவாரூயிற்று.(ஆகவே, ஓதியவறிவால், விளுவ; உரைத்தநூல் என்றபடி).

இனி, அதிகாரிமுதலிய மூன்று அநுபந்தங்களும், இரண்டாவது சூலோகத்துள் கூறப்படுகின்றன.

அவற்றுள் அதிகாரி வருமாறு.

இனி " ब्राह्मणोबृहस्पति सवसेनयजेत, राजाराजसूयेन, वैश्यो वैश्यस्तोमेन."— எ-து. அந்தணன் " பிரகற்பதி சவநம் " என்னுமகருமத்தால், தேவதைகளின் பூசையைச் செய்யவேண்டும். (எனவே, " பிரகற்பதிசவநம் " என்னும் வேள்விக்கு வேதியனே அதிகாரி என்பது கருத்து). " இராஜசூயம் " என்னும்யாகத்திற்கு, அரசனே அதிகாரி : "வைசியஸ்தோமம்" என்னும்யாகத்திற்கு வைசியனே அதிகாரி. எ-று. இது சுருதி. இங்ஙனம் இக்கருமத்திற்கு இவரோஅதிகாரியர்என்னும்விசேடங்கள், வேதத்துள் எவ்வாறு உணரப்படுகின்றனவோ? அவ்வாறு, பராசரனர்கூறிய தருமங்களை அநுட்டிப்பதற்கு உரியவர் இவர் என ஒரு பிரமாணமும் இல்லை: ஆதலால், அதிகாரியாவார் இவரென எங்ஙனம் கொள்வது எனில்?

" मानुषाणां " என்றதனால், மாநுடரது. எ-று. என்னை? இழிந்த விலங்குமுதலிய உயிர்களுக்கு செய்யும்ஆற்றல் இல்லாமைபால், அவைகளுக்குத் தருமத்தைச்செய்வதற்கு அதிகாரம்

இல்லை. உயர்ந்ததேவர் முதலிய உயிர்களுக்குந் தருமத்தை அநுட்டிப்பதனல், அடையத்தக்க பயன் இல்லை: ஆதலால், அவர்களும் அதிகாரியர் அல்லர். ஆகவே, ஒழிந்து நின்றவர் மாதுடன் ஆகலாலும், வேறுவகுத்துக் கூறுமையாலும், அவரே அதிகாரியர் என்பது பெற்றும். (அதிகாரியின்றி நால்பிறவா தென்பது கருத்து).

தேவர்கட்குக் கருமாதிகார விடயம்பற்றி.

அங்ஙனம் ஆயின், * - நக்ஷத்திரேஷ்டிமுதலிய கருமத்தில் தேவர்கள் அதிகார முடைமை வேதவாக்கியங்களிற் கேள்விப்படுகின்றும்; எங்ஙனம் எனில் ?

"அக்னிர்வாஅகாமயத, அன்னாதோதேவானாக் ஸ்யாமிதி, ஸஏதமக்நயேக்ருதிகாபயக, புரோடாசமஷ்டாகபாலம்நிரவபத்." —எ-று, தேவர்களுக்கு உரிய அந்நத்தைப் புசிப்பவன் ஆவேன் என்று, அக்கினியே இச்சித்தான். அந்த அக்கினி, அக்கினியின்பொருட்டும், கிருத்திகை நக்ஷத்திரத்தின்பொருட்டும், எட்டுக் † "கபாலத்தில்" அமைத்து வைக்கப்பட்ட ‡ "புரோடாசம்" என்னும் ஹோமதிரவியத்தை உர்ப்பித்தான். எ-று.

---

*-"நக்ஷத்ரேஷ்டி" என்றுல் நக்ஷத்திரங்களினுடையதேவதைகளைக்குறித்துச் செய்ய வேண்டுவனவாகிய இஷ்டி எ-து "ஹோமம்"=பிராத்தனைமுதலிய தொழிலோடு கூடியவேள்வி. இதனைக்குறித்த விடயங்கள் இருக்வேதத்தில், பராயாதம், நடம் காண்டம், முதலாவது பிரிவத்தில் கூறப்பட்டது.

† சுத்தமாகியகெல்லை விதிப்படி அரிசியாக்கி மாவுசெய்து வடித்து உண்டைசெய்து அமைத்தால், அதற்குப்புரோடாசம் என்று வைதிகப்பெயர்.

‡ விதிப்படி மண்ணல் ஓடுசெய்து அமைத்தால், அதற்குக்கபாலம் என்று வைதிகப்பெயர்.

இன்னகருமத்தில் புரோடாசத்தை இத்தனை கபாலத்தில்அமைத்துவைக்க வேண்டும் என்பதுமுதலிய விதிகளும் நிடேதங்களும் பிராயச்சித்தங்களும் முறைகளும் வேண்டும் திரவியங்களும் அளவைகளும் தொகைகளும் ஏனைய விடயங்களும் வேதத்துள் விசேடமாகக் கூறப்பட்டுள்ளன. அவற்றை அங்கு காண்க.

*, அங்ஙனம் அன்று. அந்தச் சுருதியால், "அக்னிः" என்து எழுவாய் வேற்றுமைக்கண்வந்த சொல், ஆதலாலே, யாரோ? ஒருமனிதன் இக்கருமத்திற்குத் தலைவனுய் அக்கருமம்முடிந்தபின்பு, அடையத்தக்க தேவத்துவத்தின் பெயராகிய அக்கினி என்பதனை, இவ்விடத்திற் கூறியவாறு ஆயிற்று; என்றுபொருள் கூறவேண்டும்.

இல்லையேல், அக்கினிதேவர் இருவர் ஒருகாலத்தில் சேர்ந்திருப்பர் என்று சொல்லும்படி நேரும்.

ஆயின், எவ்விடத்து ஒரோதேவதை இரண்டுபட்டு இருக்குமென்னும் குற்றம் விளையாதோ? அவ்விடத்துத் தேவர்களுக்கு அதிகாரமுண்டாகலாம் அன்றே? அங்ஙனம், வேதத்துள்ளுங் காணப்படுகின்றதே. என்னை?

"బృహస్పతిరకామయతశ్రైష్ఠ్యం దేవాదధీరన్నచ్ఛేయం పురోధామి తిసపతంచతుర్విగ్ం శతిరాత్రమపశ్య త్తమాహరత్తేనా యజతతోవై తస్మై శ్రద్దేవా అదధతాగచ్ఛత్పురోధామ్ని". என்து, தேவர்கள் என்னிடத்து நம்பிக்கைவைத்திடுக; நான்புரோகிதத்தன்மையை அடைவேனுக; என்று பிரகற்பதி என்ணினுன். அப்பிரகற்பதி இருபத்து நான்கு அஹோராத்திரங்களில் செய்பதற்கு இந்தச் "சத்திரயாகத்தை" நோக்கினுன். அதனைக் கொண்டுவந்தான். அதனல், யஜ்ஞம்செய்தான். பின்பு பிரசித்தமாக அவன் பொருட்டுத் தேவர்கள் விசுவாசத்தை

---

* அக்கினிதேவதை, அக்கினிதேவதையைக்குறித்துக் "கிருத்திகாநக்ஷத்திரோக்ஷட்டி" என்னும் கருமத்தைச் செய்ததாக வேதத்தால் தெரியவருகின்றது. இவ்வாறே அநேகம்தேவர்கள் "இஷ்டி" கருமத்தைச்செய்தனர்: ஆதலால், தேவர்களுக்குக் கருமாதிகாரம் உண்டே எனில்?

தேவர்களுக்குக் கருமஅதிகாரம் உண்டு என்பதற்கு எடுத்துக்காட்டிய பிரமாணச் சுருதிக்கு அது கருத்து அன்று. என்னை? தேவர்களுக்கு உரிய அவிர்ப்பாகத்தைப்புசிக்கத்தக்க அதிகாரமுடைய தெய்வம், அக்கினிஎன்னப்படுகின்றனன். அந்தஅக்கினி, மறுபடியும் அதேநிலைமையை இச்சித்துத்தேடினன் என்றுசொல்வது ஒவ்வாது; அன்றியும்பிறர்க்கு அதிகாரத்தைக்கொடுக்கும் தானே தன்னைப்பூசித்துத்தனக்கு ஒருஅதிகாரத்தை அடைந்தான் என்று சொல்வதும் ஒவ்வாது; என்ற கருத்தால், "அங்ஙனம் அன்று," என்றுமேல் மறுப்பு வந்த கருத்து.

வைத்தனர். பௌரோஹித்தியத்தை அடைந்தான். எ-று. இது சுருதி. "ஶ்ரத்" = நம்பிக்கை = விசுவாசம். "மே = யை" = என்னிடத்து. (நான்காவது அல்லது ஆறுவது வேற்றுமைப் பொருளில் வரத்தக்க "மே" என்பதற்கு வடமொழி உரையாசிரியர், ஏழாம்வேற்றுமையாகப் பொருள் உரைத்திருக்கின்றனர்). "புரோஹ்ரம்" = பௌரோஹித்தியம். "சதுர்விம்சதி ராத்ரம்" = இப்பெயரையுடைய சத்திரயாகத்தை. எ-று. இது முதலியவற்றுள் தேவர்களுக்கும் கருமத்தால்பயன் உள்ளதாகக் கேள்விப்படுகின்றும்; ஆதலால், அவர்கள் கருமத்தை அநுட்டிப்பதில், எவ்வாறுபயன் இல்லையென்பதென்னில்? (தேவர்களுக்குக் கருமஞ் செய்வதால் பயன்உண்டு; ஆதலால், கருமாதிகாரம் உண்டே என்பது) புரோகிதன் = முன்னுக்கு இடம் செய்பவன். பௌரோஹித்தியம் = புரோகிதத்தன்மை.

அங்ஙனமன்று. ஏனெனில்? இவ்விடத்தும், முன் உண்டாகப்போகின்ற பெயரையே போற்றி ஆளப்பட்டதாக, விருக்கின்றது. அவ்வாறு இல்லையேல் பிரகற்பதிக்குச் சிலகாலத்தில் தானே, கம்பப்படுதலும், பௌரோஹித்தியமுமாகிய இவ்விரண்டும் உண்டாவது இல்லையென்று கூறுதலுமாம். ஆயின் அது எனையசுருதிகளுக்கும் முரண் ஆகின்றது. என்னை? "பிருஹஸ்பதிர்வா நாம் புரோஹிதஆஸீத்" எது, தேவர்களுக்குப் புரோஹிதனாகிய பிரகற்பதி, ஆயினன்-எ-று. இந்தச்சுருதியால், பௌரோஹித்தியத்தை முன்னிட்டுக்கொண்டே பிரகற்பதி யிருந்ததாக விளங்குகின்றது. போற்றி ஆளுதல் = ஆதரித்தல் = சோராமற்காத்தல். ஒரு பொருட்கிளவி. முரண் = விரோதம்).

அல்லதூஉம், தமக்கு உபயோகம் இல்லை ஆயினும், மனிதர்களைச்செய்யச் செய்யும்படித் தேவர்கள் கருமங்களை அநுட்டிக்கவுங் கூடுமே. என்னை? "யத்யதாசரதிஶ்ரேஷ்ட ஸ்தத்ததேவேதரோஜன:" எ-து. சிறந்தவன் எதனை ஆசரிக்கின்றானே? எனையரும், அதனையே ஆசரிப்பர்கள் - எ-று. இப்பகவற்கீதை வாக்கியத்தால் அவ்வாறு உடன்படலாமன்றே? (ஆசரித்தல் = மேற்கொண்டு நடத்தல்).

அன்றியும், தமக்குப் பயன்உண்டு எனினும் குற்றமில்லை. உலகம் தாங்குவதில் அதிகாரிகளாகிய தேவர்கள், அநுமித்

கம் தவஞ்செய்யவேண்டுவதாகவே இருக்கின்றது. (உலகந்தாங் குதல்=சராசரவுயிர்களை நிலைபெறக்காத்தல்).

இன்னும், "వసంతే బ్రాహ్మణోగ్ని మాదధీత, గ్రీష్మే రాజన్య అదధీత, శరది వైశ్యోదధీత," என்று, வசந்தகாலத்தில், வேதியன் "ஆதானம்" செய்து யாகத்தினைச் சேகரித்துக்கொள்ளவேண்டும். கிரீஷ்ம காலத்தில் அரசன் "ஆதானம்" செய்யவேண்டும். சரற்காலத்தில் வைசியன் "ஆதானம்" செய்யவேண்டும். என-று. இங்ஙனம், விதித்து இருக்கப்பட்ட "ஆதானகருமம்" பிராமணக்ஷத்திரியவைசியர்களில்உண்டாவதுபோல, தேவர்களிலும் உண்டாவது இல்லை; எனவுங்கொள்க. *

அங்ஙனம் அன்று. மூன்றுவருணத்துள்ளும் சோதரதகாரனுக்கு ஆதானம் இன்றியே, வேள்விசெய்தற்கு அதிகாரம் உண்டாயிருப்பதுபோலும், தேவர்களுக்கும் உண்டு என்றுகூறினல், ஒத்திருக்குமே எனில்? இரதகாரன் என-து, மரத்தேர்செய்பவன்=தச்சன்.

இனி, இரதகாரனுக்குவேதமந்திரத்தோடு "ஆதானம்" விதிக்கும் வசனங்கள் உண்டாயிருப்பதுபோலும், தேவர்க்கும் உண்டு என்றுகொள்ளுவாய்போலும். என்னை? "ఋభూణాంత్వాదేవానాం వ్రత పతేవ్రతేనాదధామీతిరథకారస్య." என-து. இருபு தேவர்களுடையவிரதத்தால், விரதபதியே! உன்னை ஆதானம்செய்கின்றேன்; என்று இரதகாரனுக்கு.என-று. இதுசுருதி. இவ்வாறுதேவர்களுக்கு "ஆதானம்" விதித்தது இல்லை: ஆதலால் இரதகாரனைப்போலும் தேவர்களுக்கு அதிகாரம் உண்டு என்று எங்ஙனம்கூறப்படும்? அங்ஙனம் ஆனல் "నిషాదస్థపతింయాజయేత్" வேடர்களின்அரசனல், வேள்விசெய்வித்தல்வேண்டும். என-று. இதுசுருதி. ஆதலால், வேடத்தலைவ

---

* (அத்நிநி) "ஆதானம்," என்பது இன்றி வேள்விசெய்யலாகாது. தேவர்களுக்கு "ஆதான" விதிகூறுமையால் வேள்வி அதிகாரம் இல்லை என்பது கருத்து. "ஆதானம்" என-து, சொளதவிதிப்படி அரணியைக்கடைந்து தீயை உண்டாக்கிக்கொள்ளும் கருமம்). வசந்தருது=இளவேனில்: அது சித்திரை, வைகாசி. கிரீஷ்மருது=முதுவேனில்: அது ஆனி, ஆடி. சரதிருது=கூதிர்=முன்பனிக்காலம்; அது ஐப்பசி, கார்த்திகை, மாசங்களாம்.

னுக்குஅக்கினி, "ஆதானத்தை" விதிக்கும் வாக்கியங்கள் வேதத்துள் இல்லை. வேள்வியை மாத்திரம் ஒப்புக் கொள்ளப்பட்டது. அது எவ்வாறு? அவ்வாறு தேவர்களுக்கும், "ஆதான" அதிகாரத்தை விதிக்கும் சுருதிமொழிகள், இல்லாவிடினும், வேள்விக்கு அதிகாரம் உண்டு என்று உடன்படக்கூடும்.

ஆயின், தேவர்களுடைய விடயமாய் முன் எடுத்துக் கூறிய சுருதிமொழிகளுமறந்தாய்போனும்; அவை, "அருத்தவாதவாக்கியம்"=புனைந்துரை ஆயினும், வேறுபிரமாணங்களோடு மாறுபடுதல் இல்லாமையாலும், அநுவாதம் ஆகாமையாலும் அம்மொழிகளுக்குத் தன்னுரைப்பொருளிலும் கருத்து என் இல்லாமற் போகும்?

இனி, ஸ்மிருதிகள் தருமநூல் ஆதலால், அவற்றுள், தரும மீமாம்ஸை சாஸ்திரநியாயங்கள் அநுசரிக்கத்தக்கனவாய் இருப்பனவன்றே? அந்தமீமாம்ஸையில் ஒருபுனைந்துரை ஆயினும், வாச்சியார்த்தம்=சொல்லுக்கு உரியபொருளில் பிரமாணமுடைமை ஒப்புக்கொள்ளப்படவில்லை: ஆதலால், தன்னுரைப்பொருளில் கருத்து உண்டென்று எங்ஙனம் கூறலாம்?

ஆ!! இம்மொழி ஸ்மிருதிகளிலும் மீமாம்ஸைத்திலும், சிறந்தோரை மதித்திருக்கும் உனக்கு அநர்த்தமாகவேமுடிகின்றது. "எலிபயத்தாற்றன்னில்லங்கொளுத்தினன்" என்னும் வழக்கு இவ்விடத்துவந்தவாறுஆயிற்று. அங்ஙனம்கூறலாமோ? எதேனும் ஒரு புனைந்துரைக்கு தன்னுரைப்பொருளில் பிரமாணமுடைமை சொல்லக்கூடாது, என்றபயத்தால், புனைந்துரைகள் எல்லாவற்றிற்கும் தன்னுரைப்பொருளில், கருத்தும் பிரமாணமும் இல்லை என்றல், ஸ்மிருதிநூல் ஆசிரியர்களாகிய மநுமுதலியோர்மீமாம்ஸைநூல்ஆசிரியராகியஜைமினியார்முதலியோர் அனைவரும் "அருத்தவாதவாக்கியத்திலே, புகழ்பெற்றவராய்இருத்தலால், அவர்கள் இருந்தார்கள், என்பதேநம்பக்கூடாததாகஇருக்கின்றது. அந்த, பகுதித்தில், "இதிகாசம்" ஆகியமுன்னடந்தகதைகளெல்லாம்உலோபித்துப்போய் விடுகின்றன; ஆதலால், அதுமுறையன்று. இறந்தகாலத்தினது நிகழ்ச்சிகூறிய அருத்தவாதங்கள் பிரமாணமாகவே இருக்கின்றன.

அங்ஙனம்ஆனால், "தம்மனுரాధత்த,தம்பూసాధత్త,తంత్వష్టాధత్త, తంధాతాధత్త" எது, அந்த அக்கினியைமநு ஆதாகம் செய்தார்; பூஷா என்னும் தேவதை ஆதாகம்செய்தார்; துவஷ்டா என்னும் தேவதை ஆதாகம்செய்தார்; தாதாஎன்னும் தேவதை ஆதாகம் செய்தார்; எ-று. இந்த அருத்தவாத சுருதிமொழியினல் ஆதாக கருமமும்,தேவர்களுக்குஎன்இல்லாமற்போகும்? பிராமணத்துவ முதலிய சாதிநியமம் தேவர்களுக்கு இல்லையே எனில்? அதைக் குறித்த வசந்தவிருது முதலியகால நியமம் இல்லாது ஒழிக: ஆதாகத்திற்குத்தடை என்னுளது எனில்?

இவ்வளவேயன்றி, ஆதாகம் இல்லாமலே இலௌகிக அக்கினியால் சிலவிடங்களில் வேள்விவெளிப்படுகின்றது. "అనగ్నిపశుశ్చ తద్వదాధానస్యాప్రాప్తకాలత్వాత్."-இது,ஆ-ஜைமினியார்சூத்திரம்"యోబ్రహ్మచారీస్త్రీయముపెయాత్సగద్భంపశుమాలభేత."-இதுசுருதி,எ-து, எந்தப் பிரமசாரி,பெண்புணர்ச்சிசெய்கின்றானே? அவன் அப்பாவத்தின் பிராயச்சித்தமாகக் கழுதையைப் பசுவாகச்செய்து,வேள்விசெய்யவேண்டும்-எ-று. அதற்கு" அவகீர்ணிபசுஎனப்பெயராம்." பிரமசாரியானவன், மனைவிஇல்லாதவன்: ஆதலால், அவன் அக்கினி ஆதாகம்செய்வதற்குஇடனில்லை. அவன், " அவகீர்ணிப்பசுவேள்விசெய்யவேண்டுவது: ஆனல், எந்தத்தீயால்செய்யவேண்டுவது? என்றால், முதற்கண் அந்தணன் ஆவதற்கு உரியபெரிய ஏதுவாகிய " உபநயநத்தை" இலௌகிக அக்கினியாற் செய்வது போல; இதனையும்செய்யலாம் : என்பது அந்தஜைமினிசூத்திரப் பொருளென்க. (இலௌகீகத் தீயாவது, வேதியர்மனை அடுக்களைத்தீயாம்.) (அவகீர்ணி=விரத ஒழுக்கம் கெட்டவன்.)

இவ்வளவு உழைப்பினல், தேவர்சுருக்குக் கருமாதிகாரம் உண்டுஎன்று சாதித்தால், உமக்கு வரும்பயன்யாது? அங்ஙனம் மீமாம்ஸகர்கள்நின்றனர், என்னவேறுபாடு உண்டாகின்றது? ஒன்றுமில்லை. பிடித்தது சாதித்தல் ஒன்றே பயனாகின்றது. ஆனல், தேவர்கள்பயனே? உலகந்தாங்குதலே என்பதனையாம், முன்னரே உடன்பட்டுக்கூறினும். இங்ஙனமானல், புராணமுதலிய எல்லாமும், நிலைநிறுத்தப்பட்டன வாகின்றன. ஆதலால், மனிதனைப்போல;சுவர்க்கப்பேற்றின்பொருட்டுத்தேவர்களுடை

யது கருமம் அல்ல; உலகு ஓம்புதற்பொருட்டுக் கருமம் உண்டாகின்றது. தவத்திலுலே தானே அவ்வோம்புதல் உண்டாகும் (ஓம்புதல்=காத்தல்).

அங்ஙனமன்று. தானம், யாகம், ஹோமம், மௌனம், தியானம், இவைமுதலியவற்றினும்வேறுகிய தவம் உள்ளதாகக்காணப்படுவதில்லை, ஆதலால், பரமேஸ்வரன் சத்தியசங்கற்பனும், ஆலும், இராமகிருஷ்ணாதி அவதாரங்களில், வைதிக லௌகிக கருமங்களைச்செய்பவனைப்போலநடித்தலாலேயே, உலகநாயகனை முடித்துவந்தார்: தேவர்களும் அவ்வாறு நடித்தலைச்செய்க.

இங்ஙனமாயினும், நடிக்கத்தக்க கருமாதிகார மேனும், தேவர்களுக்கு உண்டுஎன்று உம்மால் உடன்பட்டவாறு சாலும். இங்ஙனம், நீர் ஒப்புக்கொள்ளவேண்டும் அன்றோ? ஆலல், "மானுஷாணாம்" என்புழி, கருமாதிகாரம் மனிதருடையது என்று, எங்ஙனம் கூறப்பட்டது எனின்?

பௌருஷேயமாகிய மாந்தர் மொழிகளினுடைய வேண்டுகையால் என்று கூறுகின்றும். என்னை? தானே தன்னறிவில் தோற்றிவருகின்ற எல்லாவேதப்பொருள்களையும் முடைய தேவர்களுக்குத் தருமத்தை உணர்த்து கொள்வதற்காக, மாந்தரால் செய்யப்பட்டநூலினிடத்து இச்சையில்லையல்லவா? மக்களுக்கு ஆலோ? அந்தத்தரம்இல்லாமையால், மிகவும்மாந்தரால்சொல்லப்பட்ட நூலின் கண்ணே விருப்பம் உண்டு: ஆகலின்.

பசுக்களுக்குக் கருமாதிகார விடயம்பற்றி.

இனி, "గావోవాఏతస్త్రయ మాసతాశృంగాస్సతీః శృంగాణినోజాయంతామితికామేనతా సాంవత్సరమాసానిష్ణా అసన్నథశృంగాణ్యాజాయంతతా ఉదతిష్ఠన్నదాత్స్న తిథమాసాంనాజాయంతతా స్సంవత్సరమాప్త్వోదతిష్ఠన్నరాత్స్న." எ-நி - ஆல் இனங்களுக்குக் கோடுகள் உண்டாயிருந்தில்லை. எங்களுக்குக் கோடுகள் உண்டாகுக; என்னும் இச்சையால், கிடந்திருந்து இந்தச் "சத்திர யாகத்தைச் செய்திருந்தன. அவை அவ்வாறு கிடந்திருக்கையில், பத்துத் திங்களும் கழிந்தபின்னர், கோடுகள் பிறந்தன. அவை இச்சித்த பேற்றை அடைந்தோம் என்று எழுந்தன. எந்தப்பசுவினுக்குக் கோடுகள் பிறக்கவில்லையோ? அது வருடத்தைக்கடந்து இச்சித்தபேறுபெற்றுஎழுந்தனர்-எ-று.

"அரூத்ர" எ-து-இச்சித்த பொருட்பேறு பெற்றோரும் என்னும் பொருளது. இந்தச்சுருதியால், "திரியக்கு ஜந்துக்" களாகிய ஆன் இனங்களுக்கும் "சத்ரயாக" அநுட்டானம் கூறப்படுதலின் பசுக்களுக்கும் கரும அதிகாரம் உண்டு என்பது வேதமுடிபு. ஆன் இனம்=பசுநிரை=திரியக்குஜந்து, ஒருபொருள். வேள்விக் குரியன, பசுவென்பது மரபு.

இங்ஙனம் கூறுதலால் பழுது இன்று. ஏன் எனில்? இந்தச் சுருதி அருத்தவாதமாக இருக்கின்றது "யஏவம்வித்வாகம் ஸஸ்ரம்வத்ஸர முபயந்தி." எ-து, யாவர் இங்ஙனம் உணர்ந்தவர்களோ? அவர்கள் இந்தச் "சம்வச்சர சத்ரயாகத்தை" அடைகின்றார்கள் எ-று. இச்சுருதியால், ஆக்கத்தை விரும்பின வனுக்குச் சத்ரயாகத் தை விதித்தற்பொருட்டு மூதற்கண், "கோஸத்ரம்வை ஸம்வத்ஸரஃ." எ-து, "கோசத்ரயாகமே" வருடபரியந்தம் செய்யத்தக்கது; என்று புகழப்பட்டது. அந்தத் துதிமொழியைநிலைநிறுத்தும்பொருட்டு, மேல், "கவோவாஏதத்ஸத்ரம்" என்றது முதலிய சுருதிகூறப்பட்டன.

இந்த அருத்தவாத சுருதிக்கு, "யத்ப்ரோக்ஷணமனுரவதத்த்ஹ்ருஷஜம்" என்ற சுருதியைப்போலத் தன்னுரைப் பொருளிலும், கருத்து உண்டுஎன்று சொல்வதற்கு அமையாது. என்னை? காட்சியளவைக்கும், வேறு ஒரு சுருதியுரை அளவைக்கும், மாறுபடுதல் உண்டாகின்றது. எங்ஙனம் என்னில்? "திரியக்கு ஜந்துக்களுக்கு" மந்திரங்களைப் படனஞ்செய்தலிலும், கரும அநுட்டானம் செய்தலிலும், ஆற்றல் இல்லாமற் போதல் பிரத்தியக்ஷமாக இருக்கின்றது. "உதேதரேஷாம்பஹூனாம ஶனாயூபிபாஸேவா அபிஜ்ஞானம நபிஜ்ஞானம்வதந்தி நபிஜ்ஞாதம்பஶ்யந்தினபஶவஃஶ்வஸ்தனம்" எ-து, இப்பசுக்கள் வேறு பசுக்களுடைய பசிதாகங்களையும், குறிகளையும் தங்கருத்தையும், கூறுதலில்லை. தாம் உணர்ந்ததை நோக்குவதில்லை. (எனவேமறக் கின்றனை). காளைய இருப்பை அறியா. (எனவே, உளகித்த லில்லை) என்றுவேறு ஒருசுருதியும், பசுக்களுக்கு அறிவில்லை என்பதனை வெளிப்படுத்துகின்றது. ஆகலாலே "கவோவா" என்ற அருத்தவாத சுருதிக்குத் தன்னுரைப்பொருளில், கருத்து உண்டு என்றால், இச்சுருதியோடு மூரணுதல் உண்டாகின்றது.

அருத்தவாதத்திற்குச் "சுவார்த்தத்திலும்" கருத்துஉண்டா யினும், குற்றம் இல்லை: எனெனின்? "கோ" என்னும் மொழிக்கு,

பசு இனங்களுக்கு அபிமானியாகிய தெய்வம் என்று பொருள் கூறுகின்றும்: ஆதலால். "அபிமானிவ்யபதேசஸ்து." என்ற "பிரம சூத்திரத்தில்," பகவராகிய "வாதராயணசாரியர்" மண்முதலிய எல்லாப்பொருளுக்கும், வேதமே மூலமாயிருத்தலால், (=சொல்லுதலால்), அபிமானிதேவதை வழிவம் என்று கூறியிருக்கின்றனர். (வாதராயணர்=வியாசர்).

எல்லாவகைகளாலும், ஸ்மிருதி சாஸ்திரத்திற்கு மாறுடர் மாத்திரமே அதிகாரியர் என்பது துணிபு.

இனிபயன்வருமாறு, தருமத்திற்குப்பயன்

"ஹிதம்." எது, இனிமையாகிய-என்று. இந்தமொழியால்பயன் குறிக்கப்படுகின்றது. இனிமையாகிய பயனுக்குக்கருவியாய்இருப்பதே, தருமத்தினுடைய இனிமையாம். அந்தப்பயன், இம்மையது என்றும், மறுமையது என்றும், இருவகைப்பட்டு இருக்கின்றன. இம்மை=ஐஹிகம். மறுமை=ஆமுஷ்மிகம். எனக்கூறுப. "*அஷ்டகாசிராத்தம்" முதலியவற்றால், சாதிக்கத்தக்கபுஷ்டி முதலிய பயன், இம்மையதாக இருக்கின்றன். (புஷ்டி=தேகவிருத்தி. சாதிக்கத்தக்க=அடையத்தக்க).

("அப்பியுதயம்") எ-து சுவர்க்க முதலிய சுகவழிவாகிய செல்வம் என்றும், நிஸ்ரேயசம் எ-து வீடுபேறு என்றும், மறுமை இருவகையதாகஇருக்கின்றது. தருமம், சுவர்க்கமுதலிய செல்வத்திற்குத் தான் நேரே எது ஆகின்றது. வீடுபேற்றிற்குக் காரணமாகிய ஞானத்தைத் தருமம் உண்டாக்குவதனால், ஞானத்தை முன்னிட்டுக்காரணம் ஆகின்றது. ஈண்டுக்கூறிய உரை "धर्मात्सुखंचज्ञानंच ज्ञानान्मोक्षोधिगम्यते." எ-து தருமத்தாற் சுகமும் ஞானமும், அதினின்று முத்தியும், அடையப்படுகின்றது. எ-று இங்ஙனம் ஸ்மிருதியுள் கூறப்பட்டது.

---

*-"அஷ்டகாசிராத்தம்" எ-து, மார்க்கசிரம், புஷியம், மாகம், என்னும் மாதங்களில், அபரபக்ஷத்தில், சதுர்தமி, அஷ்டமி, நவமி, என்னும் மூவகை நாளினும், செய்யத்தக்க காமிய பலத்தைத்தரும் ஒன்பது காலைய சிராத்தம். இவை "நிஸ்ராவஷ்டகம்" எனவும் படும். சிராத்தம்=பிதிர்க்களுக்குச்செய்யும் கருமக்கடன்.

நித்திய கருமத்தின் விடயம்.

சண்டுச்சிலர், நித்தியகருமத்திற்குப் பயனென்பதேயில்லை ஆயின், செய்யாவிடில் பாவம் வருதலால், அச்சமுண்டையவரால் மாத்திரம்செய்யப்படுகின்றது. அதனல் சுவர்க்கபோகச் செல்வத்திற்கேனும், வீடுபேற்றிற்கேனும், தருமம் எவ்வாறு காரணம் ஆகும் என்று கூறுகின்றனர்.

வேறுசிலர், அபாவத்தினின்றும் பாவம் உண்டாவதாகத் தோற்றுவதில்லை.(அபாவம்=இல்லாமை. பாவம்=உண்மை), ஆதலால், செய்யாவிட்டால் பாவம் வருகின்றது ; என்பது யுத்திசம்மதி அல்லவாம். அவ்விடத்தில் பிரமாணங்களும் இல்லை என்று கூறுகின்றனர்.

ஆயின், உபாயகம், அத்தியாயகம், முதலிய செய்யத்தக்ககருமங்களைச்செய்யாவிட்டால், பாவம்வருகின்றதென்று, ஸ்மிருதி கூறுகின்றது. என்னை? "அதஊர்஧ ்வம்பதம்த்யே யதாகால மஸம்ஸ்கృதாஃ। సావిత్రీపతితావ్రాత్యా భవంత్యార్య విగర్హితాఃI యోనధీత్యద్విజోవేదా నన్యత్రకురుతే శ్రమం।సజీవన్నేవశూద్రత్వ మాశుగచ్ఛతిసాన్వయఃI అకుర్వన్విహితంకర్మనిందితంచ సమాచరన్ ।అనిగ్రహాచ్చేంద్రి యాణాం నరఃపతనమృచ్ఛతి." எ-று இவர்கள் காலங்கடவாது, சமஸ்காரஞ்செய்து கொள்ளாவிட்டால், அதன் பின், சாவித்திரிஇழந்தவர்களாகவும், விராத்தியராகவும், பதிதராகவும், சான்றோரால் இழிக்கத்தக்கவர்களாகவும், ஆகின்றார்கள். எந்த இருபிறப்பாளன், வேதம் ஓதாமலே வேறுவகையால் பயிற்சி செய்கின்றானே ? அவன் தன் மரபோடும் பிழைத்திருக்கும் போதே,வினைவில் சூத்திரத்தன்மையைஅடைகின்றான். செய்யத்தக்க கருமத்தைச்செய்யாமலே, விலக்காகிய கருமங்களை நன்றாகச்செய்து, இந்திரியங்களை அடக்கா விட்டால், மனிதன் நிலை கெட்டவன் ஆவான்-எ-று : என்று. உணர்க. (சமஸ்காரம்-எ-து, செய்யத்தக்கனவற்றைத் திருந்தச்செய்தல்).

நித்தியகருமம் சுவர்க்கப் பேற்றுக்கு நிமித்தமாகும் விடயம்பற்றி.

அங்ஙனமன்று. இந்த வசனங்கள், நித்தகருமஞ்செய்பவனுடைய சோர்வுக்கு நிமித்தமாகிய முன்னேயசஞ்சிதபாவம் எது

வோ? அதனது உண்மையைக் குறிக்கின்றன. இந்த அருந்தம், "கைதந்திரீய வுபநிடதத்தி" னுடையவுரையில். "பாஷ்யகாரர்களாலும், அதன்வார்த்திக காரர்களாலும்", கூறப்பட்டது. என்னை? "యద్యకరణంప్రత్యవాయస్యోత్పాదకం యదివాసూచకముభయథాపి నిత్యకర్మానుష్ఠానే నప్రాగభావపరిపాలనం ప్రధ్వంసాభావోత్పాదనంచసంపాద్యతే. మరిత ప్రధ్వంసిత్వంచ, త్రిసంధ్యమనుష్ఠీయమానేషు. "సూర్యశ్చ".—"ఆపఃపునంతు."—"అగ్నిశ్చ,"—ఇతిమంత్రేషు విస్పష్టమవభాసతె." எ-து - கருமம் செய்யாது. ஒழிவது, பாவத்தை உண்டுபண்ணுவ தாயினும், ஆகும்; ஆலல், இரண்டுவகையாலும், நித்தகரும அநுட்டானத்தால், "பிராக பாவத்தைக்" காத்தலும், "பிரத்துவம்ஸாபாவத்தைப்" பிறப் பித்தலும் தேடப்படுகின்றது. மூன்று காலத்திலும் அநுஷ் டானம் செய்யப்படுகின்ற "சந்தியாவந்தன" கருமத்தில், செய் யப்படுன்ற மூன்று மந்திரங்களால், பாவத்தினது பின்னில் லாமையை உண்டாக்குவது வெளிப்படக் காண்கின்றது.

(பிராகபாவம் - எ-து - முன்னில்லாமை. பிரத்துவம்ஸாபாவம் - எ-து - பின்னில்லாமை. அவற்றுள், நித்தியகருமம் செய்யாவிட்டால், பாவம் வரும்; எனவே, செய்தால்வராது; என்று, பொருள்தருதலால், முன்னில்லாமையைக் காத்தவாருயிற்று. இன்னும் அச்செய்கை கழிந்தபிறவிகளில், செய்தபாவத்தை ஒழிக்கும்எனவே, பின்னில்லாமையை உண்டுபண்ணிற்று; என்றவாறு. இவை அன்வயவியதிரேகியாம்).

"సూర్యశ్చ" இந்த மந்திரத்தைக் காலைச்சந்தி வந்தனத்தில். சலத்தில் ஜெபித்துக்குடிப்பதற்கு, உபயோகிக்கின்ருர்கள். (அம்மந்திரத்தின் பொருள்) சூரியனும் கோபத்தெய்வமும், அக்கோப அதிதேவதையு மாகிய; இவர்கள், கோபத்தினல் உண்டாகும் பாவத்தினின்றும் எம்மைக்காக்க. மனம், வாக்கு, கை, கால், வயிறு, ஆண்குறி, இவைகளால் இரவில் எந்தப் பாவத்தைச் செய்தேனே? அந்தப் பாவமும், இன்று மென்னிடத்துள்ள மற்றைப் பாவங்களும், நாசம் அடைக. இந்தயான்என்னை "அமிர்தயோனி" னின், வீடு பேற்றிற்குக் காரணமாகிய "சூரியப்பிரகாசத்தினிடத்தில்", "ஹோமம்" செய்கின்றேன்: எ-று. "స్వాహా" என்னும் மந்திரத்தால், அந்தச் சலத்தை ஆசமனம் செய்கின்றனர்.

"ఆపస్పునంతు" இம்மந்திரம் "மாத்தியந்தின சந்தியவர்தனத்தில்" அவ் வாருயது. (அம்மந்திரத்தின் பொருள்) ஜலதத்துவம் பிருதிவிதத்துவத்தைச் சுத்திசெய்க. பிருதிவிதத்துவம் என்னை சுத்திசெய்க. "ప్రమ్మణ స్పతి—గణపతి-విష్ణు" ప్రమ్మణస్పతా—பிரமவித்தை. இவைகள் என்னைப்

பரிசுத்தனுக்குக, யாது எச்சிலோ? யாது புசிக்கலாகாததோ? யாது என்னுடைய தியவினையோ? தகாதவரிடத்தில் வாங்கியது யாதோ? அவற்றாலுண்டாகிய என்பாவங்கள் அனைத்தினையும், இந்தமந்திர நீர்த்தெய்வம் ஒழித்துப் புனிதஞ்செய்க.

"அக்நிச்ச" இம்மந்திரத்தை மாலைச்சந்திவந்தனத்தில் அவ்வாறு உபயோகிக்கின்றனர். இதன்பொருள். அக்கினிமுதலிய தேவர்கள் பகலிற்செய்த பாவங்களை ஒழிக்க, சத்தியப் பிரகாசத்தில் ஹோமம் செய்கின்றேன். மற்றையன காலைச்சந்தி மந்திரப்பொருளையே ஈண்டுங்கொள்க.

இவ்வாறு, அநுபவிக்கத்தக்க பயன் இல்லாத நித்தகருமங்கள் சுவர்க்கச்செல்வத்திற்குக்காரணம் என்பது தூரத்தேசென்று ஒழிந்தது.

இனி, ஈண்டு கூறப்படுவதாவது, பாவத்திற்குப் பகையாக இருக்கினும் இருக்க. இவ்வளவினாலே வேறுபயன் இல்லாமல் போகவில்லை. "மயிவர்ச்சோபலமோஜோநிதத்து" - எது, என்னிடத்தில் பிரமவொளி, பலம், சத்தி, வைப்பீர்களாக. எறு. இம்மந்திரலிங்கத்தால் நித்தியகருமத்திற்குப்பயன் உள்ளது என்று காணப்படுகின்றது. இவ்வாறே சுருதிஸ்மிருதி வாக்கியங்களாலும் நித்தியகருமங்களுக்குப்பயன் உள்ளதாக வெளிப்படுகின்றது. (இலிங்கம்=குறிப்பு=ஞாபகம் - ஒருபொருள்)

"சாமவேதமொழி," மூன்று ஆச்சிரமங்களும் புண்ணியவுலகத்திற்கு ஏதுவாகுந் தன்மையுடைமையும் நான்காவது ஆச்சிரமம் வீட்டுக்கு ஏதுவாகுந்தன்மையுடைமையும் குறிப்பிக்கின்றது. அச்சுருதி வருமாறு. " त्रयोधर्मस्कंधायज्ञोध्ययनं दानमितिप्रथमस्तु पएवद्वितीयोब्रह्मचर्यादा चार्यकुलवासी, तृतीयो त्यंतमात्मानमाचार्यकुलेव सादयंत्सर्वएतेपुण्यलोकाभवंति ब्रह्मसंस्थो मृतत्वमेति" எ-து, வேட்டல், ஓதல், ஈதல், எனக்கருமத்திற்கு மூன்று கிளைகள் உள்ளன, அவற்றுள் முதலாவது, தவம். இரண்டாவது, பிரமசரியத்தினின்றும் ஆசிரியன் மனைக்குச்சென்று பணி செய்து இருத்தல். மூன்றுவது. ஆசிரியன்மனையிற்றானே தனது ஆயுளைக்கழிப்பது. இவற்றைச்செய்தவர்கள் அனைவரும்புண்ணிய லோகத்தை அடைபவர்களாக இருக்கின்றனர். பிரமநிட்டன், அமிர்தத்துவம் = சாவில்லாமை=வீடுபேற்றை அடைகின்றான்.

என-று. வேட்டல்=வேள்விசெய்தல். இது ஆச்சிரமத்தைப் பற்றி யதென்று "ஶ்ரௌநம்" "என்றவியாசசூத்திரத்தில்" கூறப்பட்டது.

இனி, ஸ்மிருதிமொழி வருமாறு. "தஸ்யதாம்ரேஷலாஜேர்நிமித்தே ஷாயாகந்த இத்யனூத்யேதேவம்தர்மம் சர்யமாணமஷ்டா அனூத்யந்தே" — என-து. அஃது எங்ஙனம் எனில்? கனிகளுக்கு நிமித்தமாகி மாமரத்தில், நிழலும் மணமும் எவ்வண்ணம் கூறப்படுகின்றனவோ? அவ்வண்ணமே இங்ஙனம்செய்யப்படுகின்றதருமத்தைப்பற்றிப்பொருட்பயன் கூறப்படுகின்றது. என-று. இம்மொழி நித்தியகருமத்தைப் பற்றிக் கூறுகின்றது என்று * "விசுவரூபாசாரியார்" கூறியிருக்கின்றனர்.

அது வருமாறு. "ஆம்ரேநிமித்தஇத்யாதி ஸ்யாபஸ்தம்ப ஸ்ம்ருதேர்வசஃ। ஫லவத்த்வம்ஸமாசஷ்டே நித்யானாம்கர்மணாமபி" என-து "ஆம்ரேநிமித்தே" என்ற ஆபஸ்தம்ப ஸ்மிருதிமொழி நித்தகருமத்திற்கும் பயன் உண்டு என்று கூறுகின்றது. என-று.

இன்னும் அவ்வாறு, மறுவுங்கூறி இருக்கின்றனர். வருமாறு. "வேதோதிதம்ஸ்வகம்கர்மநித்யம்குர்யாததம்த்ரிதஃ। தத்ஹிகுர்வன்யதாஶக்தி ப்ராப்னோதிபரமாம்கதிம்" எது. வேதத்துள்கூறப்பட்டதனது நித்தகருமத்தைச் சோர்வு இல்லாமல் செய்யவேண்டுவது. ஆற்றலுள்ளவாயில் அதைச்செய்தவன் மேலானகதியை அடைகின்றான். என-று.

இனி, கூர்மபுராணத்துள்ளும் கூறப்பட்டது. வருமாறு. "யதாஶக்திசரேத்கர்ம நிம்திதானி விவர்ஜயேத்। விதூயமோஹகலிலம் லப்த்வா யோகமனுத்தமம்। க்ருஹஸ்தோ முச்யதேபம்தா ந்நாத்ரகார்யா விசாரணா." — தன் ஆற்றல் அளவைக்குத் தக்கபடி, கருமத்தைச் செய்யவேண்டும். விலக்கிய வினைகளை ஒழிக்கவேண்டும். அதனல் அறியாமையையும் பாவத்தையும் உதறித்தள்ளி எல்லாவற்றிற்கு மேலாகிய "சிவயோகச் செல்வத்தைப்பெற்று, இல்லறத்தான் பற்றுக்களினின்றும் விடப்படுகின்றான். ஈண்டு விசாரித்தல் ஒன்றும் வேண்டாம் என-று.

---

* - சங்கர பாஷ்யத்திற்கு விவரணம் செய்த "சுரேசுவராசாரியார்" இவர் மண்டநமிசிரர் எனவும் கூறப்படுவர்.

இனி, நித்தியகருமம் முத்திக்கும் ஏதுவாதற்பற்றியது.

நித்தியகருமம் அப்பியுதயமாகிய சுவர்க்க முதலிய செல்வங்களுக்கு ஏது வாயினுமாக: முத்திக்கும் ஏது என்பது கூடாது. என்னை? பிரமாணம் இல்லாமையால். அல்லதூஉம், சுருதிமிருதிகளால் அது விலக்கப்படுகின்றது. என்னை? "நகர்ணாநப்ரஜயாधனேந" எது, கருமத்தால் வீடுபேறு உண்டாவதில்லை. புதல்வரால் வீடுபேறு உண்டாவதில்லை, பொன்னால் வீடுபேறு உண்டாவதில்லை என-று. இது சுருதி. "ஜ்ஞானாதேவது கைவல்யம்" = ஞானம் ஒன்றினானேமுத்தி உண்டாகின்றது. என-று. எனஸ்மிருதி. கூறுவதெயெனில்?

அங்ஙனம் அன்று. "பரமான்மப் பிரகரணத்தில்" வீடுபேற்றிற்கு ஏதுவாகிய ஞானத்தைத்தேடிக் கொள்வதற்குக்கருவியாதலால் வேள்விமுதலிய கருமங்கள் விதிக்கப்பட்டன. என்றது. என்னை? "தமேதம்வேதானு வசனேனப்ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேனதானேந" எது, இப்பரமான்மாவை உணர்வதற்கு வேதியர்கள் வேதமொழிகளாலும் வேள்வியாலும் தானத்தினாலும் விரும்புகின்றார்கள். என-று. இது சுருதி விதி.

இனி, மூற்கூறிய அவ்விலக்குவிதி ஆரலோ? அக்கருமம் தான், சோ முத்திக்குக் கருவித் தன்மையை நாடி நிற்கின்றது. (எனவே, கருவிக்குக் கருவியென்பதுகருத்து) ஆகலால், முத்தருக்கு அக்கினி ஆதானம் முதலிய கருமத்தில் விருப்பம் இல்லை, ஞானம் உண்டாகவேண்டிய விஷயத்தில் அவ்விருப்பம் உண்டு. இவ்விரண்டும் "அதஏவசாக்நிந்ஹோத்ரம்" — என-து. அதனாலேயே அக்கினி, சமித்து முதலியவற்றில் விருப்பம் இல்லை என-று. இது பிரமசூத்திரம் "சர்வாபேக்ஷாசயஜ்ஞாதிச்ருதேஃ". — எது. எல்லாவற்றின்விருப்பமும் "யஜ்ஞேதானேந" என்ற சுருதியால் உண்டு என-று. இதுவும் பிரமசூத்திரம் இவ்விரண்டு அதிகரணத்தாலும் நிச்சயிக்கப்பட்டன.

அவ்வாறே, கருமங்கள் பரம்பரையினின்றும் வீடுபேற்றிற்கு ஏதுவாகும் என்று "வாயுசங்கிதை" யுட்கூறப்பட்டிருக்கின்றது. (பரம்பரை. எது. ஒன்றிலிருந்து ஒன்றுபிறந்து

வருவது) என்னை? "கர்மாதிசயமாஸாத்ய பசுபாசபரிக்ஷயः। ஏவம்ப்ரக்ஷீண பாபஸ்ய பஹுஸஃ ஜன்மபிஃ க்ரமாத்। பவேத்விஷயவைராக்யம் வைராக்யாத்பவசோதனம்। பாவசுத்யுப பன்னஸ்யசிவஜ்ஞானசமன்வயः। ஜ்ஞானத்யானனியுக்தஸ்ய பும்சோயோகஃ ப்ரவர்ததே। யோகேனதுபராபக்திஃ ப்ரசாதஸ்ததனந்தரம்। ப்ரசாதாத்முச்யதேஜந்து ர்முக்தஶ்சிவசமோபவேத்." கருமங்களைச்செய்து உயர்வை அடைந்த பசுக்களுக்குப்பாசங்கள் கெட்டு ஒழிகின்றன. இவ்வாறு பலபிறவியிலும் முறையே பாவத்தை ஒழித்துக்கொண்டவனுக்கு விடயங்களில் வைராக்கியம் பிறக்கின்றது. வைராக்கியத்தினால் சித்தம் சுத்தப்படுகின்றது. அந்தக்காரணங்கள் முழுவதும் சுத்தமான பின்பு அவனுக்குச் சிவஞானசம்பந்தம் உண்டாகின்றது. ஞானத்திலும் தியானத்திலும் நன்றாகக்கூடிய புருடனுக்கு யோகப்பயிற்சி தடக்கின்றது. யோகத்தால் மேலான பத்திவிளைகின்றது. அதன்பின், சிவப்பிரசாதம் உண்டாகின்றது. அப்பிரசாதத்தினின்றும் சிவன்முத்தியை அடைந்து, சிவனைப் சமானன் ஆகின்றன். எ-று. வைராக்கியம்=வெறுப்பு.

பயன்பற்றிய நித்தகருமத்தின் அளவு.

இனி, பாவபரிகாரம், புண்ணியலோகம், பிரமஞானம், ஆகிய இம்மூன்றுபயனுக்காக நித்தகருமத்தை காள்தோறும் மூன்று விசை செய்யவேண்டுவது அன்றோ எனில்?

அஃதன்றன்மன்று. "ஶுசிர்பவத்" —எது. கருங்காலிபோலும். எ-று. ஒருக்கால் பிரயோகித்ததற்கே சொல்லின் புனர்ச்சிபேதத்தால் பயன் வேறுபாடுகள் அமைகின்றது. "என்னை?" "ஶுசிர்ஹ்யூபபவத". — எ-து, கருங்காலிமரத்தின் வேள்விக்தம்பம் ஆகின்றது. எ-று. இதுசுருதி. கிரதுவின்பொருட்டு இம்மொழி கூறப்பட்டது. (கிரது=வேள்விபேதம்.) "வீர்யகாமஸ்யயூபங்கர்வீத." — எது. வீரியத்தை விரும்பினவன் யூபம்செய்யவேண்டும். எ-று. இதுசுருதி. இம்மொழி புருடார்த்தத்தின் பொருள் உள்ளது. இவ்விரண்டுசுருதிகளும் ஒருகருங்காலிக்கே இருவகைப்பயன் உண்டாவதற்கு ஏது ஆகின்றன. "ஏகஸ்ய தூபயஶ்ருதிஸம்யோகபृதக்த்வே." —எது, ஒன்று இருவகையாகுமிடத்தில்செய்கைவேறுகஇருக்கும். எ-று. இது "ஜைமினிசூத்திரம்". (எனவே, செய்கைவேறுபாட்டால் ஒன்றேபலபயனைத் தருமென்பது கருத்து).

அவ்வாறே, இவ்விடத்து, முன்உதகரித்த மூன்றுபிரமாணமொழி களின் பலத்தினால் பயன் மூவகையாக இருக்கினும் பிரயோ கிப்பது ஒருவிசையாகவேயிருக்கின்றது. இக்கருத்து "விஹிதத்வாச்சாச்ரமகர்மாபி." — எது, விதித்து இருத்தலால் ஆச்சிரமகருமங் களைச்செய்யவேண்டுவது. என்று. இங்ஙனம் பிரமசூத்திர அதி காரணத்திலும் கூறப்பட்டு இருக்கின்றது.

நித்தகருமத்திற்கும் காமியகருமத்திற்கும் உள்ளபேதம் கூறுகின்றது.

ஆயின், நித்தகருமத்திற்கும் பயன் உண்டாகுமேயானால் அந்த நித்தியகருமத்திற்கும் காமியகருமத்திற்கும் வேறுபாடு என்னை? என்பது மேல்வினா (எனவே பயனுண்டாகிய கருமங்களெல்லாம் ஒன்றே யென்பது வினவின்கருத்து).

அவ்விரண்டற்கும் செய்கையால் பயன் ஒத்தனவே ஆயினும், செய்யாதுவிடுதலால் பாவம் உண்டு, பாவம் இல்லை என்பதனால் அவ்விரண்டற்கும் வேறுபாடுஉள்ளது. (எனவே, நித்தகருமஞ் செய்யாவிட்டால் பாவம் உண்டு. காமியகருமம் செய்யாவிட்டால்பாவம் இல்லை: என்பதுகருத்து). ஆயுள்விருத் தியைவிரும் பினவனும் மழையைவிரும்பினவனும் செய்யத் தக்க "ஆயுஷ்டோமேஷ்டி," "காரீரியாயஜ்ஞம்," என்னும் காமியகருமங்கள் செய்யாவிட்டால், பாவம்வருகின்றது என்று, வேதத்துள்யாண்டும் கூறப்பட்டதில்லை அன்றே?

"ஸந்த்யேஜுஹோதி, திர்ஷ்ணேஜுஹோதி" - எது, தவறினால் ஹோமஞ் செய்க. பிழைப்பட்டால் ஹோமம்செய்க. என்று. இது சுருதி. இங்ஙனம் நியமம் இல்லாத பிழைமாதல் முதலிய செய்கை விசேடனைத்தோடு கூடி உள்ளது நைமித்திக சுருமம். ஆதலால் நித்த கரும நியாயத்தையே நைமித்திகத்திலும் ஒப்புக்கொள்ள வேண்டும். (பிழைம்=இடையூறு).

ஆகவே, நித்தகருமம்போல நைமித்திககருமமும் விதிக் கப்பட்டிருக்கின்றது: சுத்திக்கும் காரணமாக இருக்கின்றது: ஆதலால், வீடுபேற்றிற்கும் ஏது ஆமேனில்?

காமிய கருமத்தில், இச்சை * முக்கியமாக இருக்கின்றது. சுத்தமோ ? † கௌணமாக இருக்கின்றது. சுத்தி கௌணமாதலால், அது இச்சையின் விடயமாகிய போகத்தைக்கொடுத்துத் தான்கெடுகின்றது. அதனால், "பகவற்கிங்கையில்." மோக்ஷத்தை விரும்பின அருச்சுனனுடையபயன் விருப்பம், விலக்கப்பட்டிருக்கின்றது. அதுவருமாறு "யோகஸ்தஃ குருகர்மாணிசங்கம் த்யக்த்வாதனஞ்ஜய! சித்த்யசித்த்யோ ஸ்சமோபூத்வாசமத்வம்யோகஉச்யதே! கர்மண்யேவாதிகாரஸ்தேமாபலேஷுகதாசன! மாகர்மபலஹேதுபூர்மாஃ" எது, ஓ! 'அருச்சுனா!' நீ கூடுதலில் ஒழிந்துவிட்டு, யோகநிஷ்டனாய் பலிப்பிலும் பலிப்பு இல்லாமையிலும் ஒத்தவனாய். கருமங்களைச்செய்வாய். அவ்வொத்த தன்மையே யோகம் என்று கூறப்படும். உனக்குக்கருமத்தில் மாத்திரம் உரிமைஉண்டாய் இருக்கக்கடவது. பயனிடத்து இல்லாது ஒழிக. கருமப் பயனுடையகாரணன் ஆகாது ஒழிக. என்று.

நித்தகருமத்தில், புத்தியும்சுத்தியும் முக்கியமாய் உள்ளது. பயன் இரண்டாம்பக்கூமாய் உள்ளது. அதனாலே, பயன் அருடவிக்கப்பட்டிருந்தாலும் அந்தப்பயன் நித்தியமானது அல்ல என்பது, அதனிலும் சிறந்தபயன் உள்ளது என்பது, முதலிய தோஷங்களைக்கண்டு பிடிக்கும் உணர்ச்சிஉண்டாவதற்குத் தடையில்லை. இது "வார்த்திக" உரையாசிரியரால் கூறப்பட்டிருக்கின்றது. என்னையெனில் ? "நித்யேஷுசுத்திஃ ப்ராதான்யாத்பூர்வஸ்ய ப்ரதமஃ பலஃ! பூர்வஃபூர்வஃபலப்ராப்தேருத்தரோத்தரதஃ." — எது. நித்தியகருமத்தில் சுத்திசிறந்ததாம் ஆதலின்பயன் நுகர்ச்சியும் தடைபடுவதில்லை (ஆகவே) சித்தசுத்தினையப் பற்றிப்பயன்நுகர்தலே நிலை அற்றது என்று சொக்குகின்றனர் - எ-று (நுகர்ச்சி-எது, அநுபவிப்பு).

அந்நித்தகருமவகைமை.

அந்த நித்தகருமம், இருவகைப்படும். அவையாவன, ஸம்ஸ்காரகம் எனவும், விதி ஜாதகம் எனவும்படும். ஸம்ஸ்காரம்-என்பது புத்திமுதலிய காரணங்களைச் சுத்திசெய்வது. "விதி

---

* முக்கியம்=பிரதானம்=பெரும்பான்மை=மிகுதி. என்பன ஒரேபொருள்.

† கௌணம்=உபசர்ஜனம்=சிறுபான்மை. என்பன ஒரேபொருள்.

ஜாஜகம் - எது, ஞாநத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்னும் இச்சையை உண்டுபண்ணுவது. இவ்விரண்டனுள் முதலாவதாகிய "ஸம்ஸ்காரகம்" என்னும் கருமம். விதியால் விதிக்கப்பட்டுள்ளது என்ற உணர்ச்சிமாத்திரையால் செய்யப்படுகின்றது. அங்ஙனம், ஸ்மிருதியும் "யஜ்ஞோபவீதாதிஸம்ஸ்காராஅஸ்யாத்மகுணா ப்ரஹ்மணஸ்ஸாயுஜ்யம் ஸலோகதாம்கச்சதி."— எது, காற்பது கிரியைகளும் எட்டு ஆன்மகுணங்களும் யாருக்குள்ளனவோ ? அவன் பிரமத்தினுடைய சாலோக்கியத்தையும் சாயுச்சியத்தையும் பெறுவன். என்று கூறிற்று. இனி, இரண்டாவது "விவிதிஷாஜாகம்" என்னும் கருமம், ஈசுவரனுக்குப்பிரீதியாகுக என்னும் எண்ணத்தால் செய்யப்படுகின்றது. அத்தக்கருமம் ஞாநத்தில் இச்சையும் முயற்சியையும்உண்டுபண்ணி, அவருக்கு ஞாநத்தை அடையப்பண்ணுகின்றது. ஆதலால், வீடுபேற்றில் விருப்பமுடையவன், கருமப்பயனை ஈசுரப் பிரீதிசெய்வதே தக்கது.

ஆதலால், இங்ஙனம் "ஹேயம்" என்பதனால் கருமம், தான் எண்ணிய பயனைக்கொடுப்பதற்கு ஏற்றகருவி என்று கூறுதலின் இந்நூலுக்கு இச்சித்த பொருள்கிடைப்பதே பயனென்றுகூறிய வாறாயிற்று.

இனிவிடயம்வருமாறு.

"ஹேயம்" என்பதனால், விடயம் குறிக்கப்படுகின்றது. என்னை ? சுவர்க்கப்பேற்றை வீடுபேற்றினுக்குக்கருவியாகத்தரிக்கின்றது : ஆதலால் கருமம் என்னப்படும். இனி அக்கருமம், இலக்கணத்தாலும், அளவையாலும், வேத ஆணை ஒன்றினிடத்தேலுருக்கப்பட்டது.

இனி, யாது, வேத ஆணையால் உணரத்தக்கதோ ? அது. ஸ்மிருதிகளுக்கு விடய மாகாது. என் எனில் ? எல்லா இடங்களிலும், வேறொன்றால் உணரக்கூடாதனவாய் இருப்பது எதுவோ ? அதுவே, விடயமாய் இருத்தல் வேண்டும் என்பது ஒருதலை ஆதலால். அற்றேல் வேத ஆணையால் உணரத்தக்கதே ஆயினும் புனைந்துரையை ஒழிப்பதால், மற்றொரு "சாகை" யில் உள்ள விதேசடங்குகளை முடித்துக்கொள்வதனால் அநுட்டாநமுறையில் இனிது முடிதற்பொருட்டுச் சுருக்கப் படுகின்றது : என்

றுகொள்வாய்போலும் அங்ஙனமன்று. "கற்ப சூத்திரங்களில்" அவ்வாறு, சுருக்கப்பட இல்லை. ஆதலால், தருமம், இந்த சாத்திரத்திற்குவிடயம் அல்லவே? என்னும் வினைவளழுப்பிக்கொண்டு மூலத்துள் "சிஷ்டாசாரம்" என்று கூறினர்.

இதன் கருத்தாவது, தருமம் இருவகைப்படும், ஒன்று "சுரௌதம்" மற்றொன்று "ஸ்மார்த்தம்" அவற்றுள், "ஆதானம்" முதலாகவுடையதும், தான் ஓதி உணர்ந்த வேதமேமூலமாகவுடையதுமாகிய, "தரிச பூர்ணமாசம்" முதலியனவைகளை அந்த "சுரௌததருமமாம்" உளகிக்கத்தக்க=புலப்படாத "வேதசாகைகளை" மூலமாகவுடைய "சௌசம், ஆசமனம்" முதலியவை ஸ்மார்த்த தருமமாம். அவற்றுள், "ஆதானம்" முதலியனகற்பசூத்திரங்களில். தொகுக்கப்பட்டிருந்தாலும் "சௌசம்" முதலியன தொகுக்காமையால், ஸ்மார்த்ததருமமேஇந்தஸ்மிருதிகளுக்கு விடயமாம் என்பது. (உளகிக்தல்=அநுமிக்கறிதல்.)

இனி, அங்கியஸ்மிருதிகளிலும் "சௌசம்" முதலிய ஆசாரங்கள் சொல்லப்பட்டிருக்கின்ற தன்மை எனில்? அதனையொழித்து, இது இக்கலியுகத்தில் என்பதற்கு "வர்த்மாநேகாலயுகே".—என்றார்.

இக்கலியுகத்தில் வேள்விசெய்வித்தல், வேதம் ஓதுவித்தல், இவ்விரண்டு கருமத்தால் உண்டாகும் பயன் சீவகத்திற்குப்போதாமையால் மாறுடற்குச் சீவனோபாயமாகவும், சுவர்க்கப்பேற்றிற்கும் வீடுபேற்றிற்கும் இனிமையாகவும், எளிதில் அடையத்தக்கனவாகவும் உள்ளதருமங்களும் உழவுமுதலியமுயற்சிகளும் வேதியன்செய்யத்தக்கன: எனவும், பிறவும், முக்கியமாகக் கூறப்படுகின்றன. இவை வேறு யாண்டும் கூறப்படாமையின் விடயமாகலாம்: என்பது கருத்து.

இனி, "யதாவத்" என்றதனால் எப்படியுள்ளதோ? அப்படி. எனவே, உண்மையாய் எனவும், எவ்வளவுள்ளதோ? அவ்வளவு. எனவே எல்லாமும். எனவும் வரும் பொருளுடைய இம்மொழியால் சுருக்குதலை ஒழித்தார் என்பது. அங்ஙனமில்லையேல். சொல்லாமற் போதலே தடையின்றிச்செல்லும்.

வ்விருதியை உணர்ந் தவர்களுக்கு மயக்கம், பிறரால் உடன்படாமற்போதல், ஐயம், முதலிய குற்றங்களினுடைய சம்பந்தமில்லையாம். ஆகவின் "சத்யவதீசுத" என்று விளிவேற்றுமையாக உரைக்கப்பட்டது. எப்பொழுது, பெண்பாலே ஆயினும் சத்தியவதி யென்னுந்தாய் உண்மையையே கூறத்தக்கவளாயிருக்கின் ரூளோ? அப்பொழுது அவளது புதல்வராயும் வேத ஆசிரியராயும் உள்ள வியாசர் சத்தியத்தையே கூறுகின்றவர் என்று வேறுசொல்வானேன். "ச" எ-து. அவ்வியயம், இதலுல் எளிதுகொள்ளத்தக்கனஎன்பதை உணர்த்தப்பெறுகின்றது.

ஈண்டு, முன் சொல்லப்பட்ட அதிகாரி பயன், விடயம், இவற்றுள் ஒன்றிலே டொன்றனுக்குள்ள சம்பந்தம் விளக்கப்பட்டது. எங்ஙன மெனில்? பயனுக்கும் அதிகாரிக்கும், இச்சிக்கப் படுதலும் இச்சித்தலும் ஆம். அதிகாரிகளால் பயன் இச்சிக்கப் படுகின்றது. என்பதுகருத்து. இனிபயனுக்கும் விடயத்திற்கும், பிறப்பதுவும் பிறப்பிப்பதுவுமாம். தருமம் உணர்த்தப்பட்டால் பின்பு அதனை அநுட்டாநம் செய்தலால் சுவர்க்கப் பேறும் வீடுபேறும் உண்டாகின்றது என்பது கருத்து. இனி அதிகாரிக்கும் விடயத்திற்கும் உபகரிக்கப்படுதலும் உபகரித்தலும் சம்பந்தமாம். விடயம் பயனை உண்டுபண்ணி அதிகாரியை உபசரிக்கின்றது. விடயத்திற்கும் நூலினுக்கும் கூறப்படுதலும் கூறுதலுமாம். நூல்விடயத்தைக் கூறுகின்றது என்பதுகருத்து.

இங்ஙனம், அநுபந்தநான்கும் இனிது பெற நிற்றலின் ஒத்தகருத்தினராகிக் கேட்போரால் இந்நூல் கேட்கத்தக்கது என்பது இவ்விரண்டு சுலோகங்களின் கருத்து. எனக்கொள்க. (உ)

ஸ்ரீ ॥ తత్ర్శుత్వామునివాక్యంతుసశిష్యాగ్నిర్కసన్నిభాः।
ప్రత్యువాచమహాతేజాः శ్రుతిస్మృతివిశారదः ॥3॥
ஸ்ரீ ॥ నచాహంసర్వతత్త్వజ్ఞోకథంధర్మంవదామ్యహమ్।
అస్మత్పితైవప్రష్టవ్యఇతివ్యాసస్సుతోబ్రవీత్ ॥4॥

என்பன, பராசரஸ்மிருதியைப் பெறுவதற்கு வியாசனை வினவுதல் (வியதிகரணம்) இடனில்லாமை என்னும் ஐயத்தைக் கருதி அதனை ஒழித்தலைக்கூறுகின்றன.

(இ-ள்) சீடர்களோடு கூடியவராய், அக்கினிக்கும் சூரிய னுக்கும் ஒப்பானவராய், மிக்க ஒளியை யுடையவராய், சுருதி மிருதிகளில் விசேடஞானமுடையவராய் இருக்கின்ற பராசரரு டைய புதல்வராகிய வியாசர் அம்முனிவர்கள் வாக்கியங்களைக் கேட்டு, நான்எல்லாவுண்மைகளையும்தெரிந்தவன் அல்லன். நான், தருமத்தை எவ்வாறு கூறுவேன்? எமது பிதாவே விரிவுபடுவோராம்; என்று விடைகூறினர். எ-று.

"ஸஶிஷ்யஃ".— என்றார். சுமந்து, வைசம்பாயனர், ஜைமினி, பைலர், இந்நால்வரும் முறையே நான்கு வேதங்களையும் சீட பரம்பரையால் வழங்குவித்த மாணாக்கர்களாம். சூதர் புராணசங் கிதைகளை எல்லாம் வழங்குவித்த மாணாக்கராம். இம்மாணாக்க ரோடு கூடியவர் வியாசர் என்பது குறித்தற்கு.

"அக்ந்யர்காஸந்நிபஃ" என்றார். அக்கினி எவ்வாறு சுவாலை களோடு கூடியிருக்கின்றாரோ? சூரியன் எவ்வாறு கிரணங்களோடு கூடியிருக்கின்றாரோ? அவ்வாறே இவ்வியாசர் தம்மோடொத்த கல்வி அறிவுள்ள சீடரோடு கூடியிருப்பவர் என்பது குறித்தற்கு.

"மஹாதேஜாஃ" என்றார். பிரமவொளி யுடையவர் என்பதற்கு அங்ஙன ஒளியாற்பயனில்லை ஆகலின். இக்கருத்தை "ஶ்ருதஸ்ம்ருத விஶாரதஃ" என்பதனால் விளங்கக் கூறினர்.

சுருதி ஸ்மிருதிகட்கு முறையே அக்கினி சூரியரது உவமை யைக்கொள்ளத்தக்கது. அக்கினி அடுத்தபொருளையே சுடுவதாயி னும் பகலிலும் இரவிலும் வேறுபாடின்றி ஒத்துச்சுடுகின்றது. அவ்வாறே தன்னால் ஓதப்பட்டுவரும் அச்சுருதிகளில் சிலதரு மங்களே தோன்றுவனவாகின்றன; ஆயினும், அது, யுக்தாவஸ்தை யிலும் அயுக்தாவஸ்தையிலும் அவ்வேறுபாடு இல்லாமலே தோன்றுகின்றன. (யுக்தம் = கூடியது - அயுக்தம் = கூடாதது. அவஸ்தை=பொழுது).

சூரியன், பகற்பொழுது மாத்திரமே விளக்குபவன் ஆனாலும், சமீபத்திலும் தூரத்திலும் உள்ள எல்லாப்பொருளையும் விளக்கு கின்றான் இவ்வாறே அதுகூடிய பொழுதிலேயே நினைக்கப்பட் டனவாயினும் தானுணர்ந்த வேதத்தால் காணப்படாது சிதறிக் கிடக்கும் அளவு இறந்தவேதங்களிலும் உள்ள தருமங்கள்

எல்லாம் ஞாபகத் திற்குக் கொண்டுவரப் படுகின்றன. அல் லக்கால், தவத்தினல் மிகவும் பரிசுத்தரிவர் என்னும் பொ ருளில் அக்கிநி உவமை கூறப்பட்டது. "அக்நிஷ்டுசிः" = அக் கிநி பரிசுத்தமானது; என்றது சுருதி ஆகலின். பலவிடயங்களை வெளிப்படுத்துவதில் ஆற்றலுடையவர் ஆதலின் சூரியனேடு உவமிக்கப்பட்டனர் எனினும் அமையும்.

இனி, இங்ஙனமாயின், "नचाहंसर्वतत्त्वज्ञः" = நான்எல்லா வுண்மைகளையும் உணர்ந்தவன் அன்று. என்று வியாசர் மேற் கூறிய கூற்று மாறுகொளலாம் அன்ரே எனில்? (கூற்று= சொல்). அங்ஙனம் அன்று. அக்கூற்று, அவரது தந்தையைச் சிறப் பிக்க ஏழுந்தகூற்றும் "अपशवोवाअन्येगोअश्वेभ्यः." =ஆன் இனங் களுக்கும்குதிரைகளுக்கும் வேறுகிய ஐந்துக்கள் பசுக்கள் அல்ல. என்ற இச்சுருதிமொழி, ஆனினங்களையும் குதிரைகளையும் சிறப் பிக்கின்றதே அன்றி யாடு முதலியவற்றிற்குப் பசுத்துவத்தை விலக்குவது இல்லை. (யாடு=ஆடுஎன மருவிற்று). அந்தயாடு முதலியன பசுக்கள் அல்லவெனின் காட்சி அளவைக்கு விரோ தம் உண்டாகின்றது. அன்றியும் "அக்நிஷோமீயயாகத்திற்கு" யாடேபசு என்னும் சுருதிமொழிக்கும் விரோதம் வருகின்றது. அதுபோலவே; இந்த வியாசர் மொழியும் வியாசருடைய முற்று ணர்ச்சியை விலக்குவது இல்லை. பிற என்னெனின்? அவர்தந்தை யைப்புகழ்கின்றது.

அங்ஙனமில்லையேல், ஆசிரியன் விடயத்தில் விநயம்செய்ய வேண்டுவது என்னும் ஒழுக்கத்தை மாணக்கர்க்கு அறிவுறுத் தற்பொருட்டு அவ்வாறு கூறியது எனினும் அமையும். (விந யம்=அடங்கி ஒழுகுதல்).

அல்லதூஉம், "नचाहंसर्वतत्त्वज्ञः" என்றவியாசரது கருத்து இதுவெனினும் அமையும். என்னை? ஈண்டுகலிதருமம் விளைவப் படுகின்றது. நான் ஆளலோ? தானே கலிதருமத்தை உணர்ந் தவன் அல்லன். எமது தந்தையார் அக்கலிதரும உணர்ச்சியால் சிறந்தவராக இருக்கின்றார். ஆதலின் "कलेरादौसंस्मृताः" = கலியுகத்தில் பராசரர் கூறியஸ்மார்த்தகருமங்களே சிறந்தன. என்று கூறப்படுகின்றது. அதனல், பிதாவின் அருளினல் எனக்கு

ஞாகம் உண்டானதாயினல், எமது தந்தையே விளுவப்படத் தக்கவர். முதற்கண்கூறினவனே கிடைக்குமிடத்தில் பரம்பரை யால் உணர்ந்தவர் தக்கவர் அல்லர் அன்று என்றதுமாம்.

"ஹ" "=வளர்த்தலால் பிதா எனப்படும். ஈண்டுவளர்த் தல் கலிதருமத்தை உபதேசித்ததால் உண்டாயது என்று இடம் பற்றி உணரத்தக்கது. இந்த இச்சையினலேயே. "ஜனக:, தாத:," என்ற பிறபரியாயச்சொற்களைக் கூறுது "ஹத்ரு" என்னும் அரு மொழியையே கூறினர் (பரியாயம்=ஒருபொருளைக் குறிக்கும்பல மொழி).

"ஸ்வ" என்ற தேற்றச்சொல்லால் வேறு ஸ்மிருதிகால் ஆசிரியர்களை ஒழித்தபடி அன்றுயினும், மநுமுதலிய பெரியரும் கலிதருமத்தை உணர்ந்தவர்களே ஆவார் ஆனலும், இவ்விட யத்தில் பராசரருடைய தவமிகுதிவலிமையால் உள்ளதுபோல வேனயர்க்கு இல்லை என்னும் சிறப்புஉண்டுஎன்று உணர்க. எய் நனம் "காண்வம், மாத்தியந்திநம், காடகம், கௌதுமம், கைத் திரீயம்" என்பன முதலியசாகைகளில் முறையே கண்ணுவர் முதலியவர்களுக்குச் சிறப்பு இயற்கையாக உள்ளதோ? எண் ணும் அவ்வாறே உள்ளதென்று உணரத்தக்கது.

"ஸுதோவ்யாஸ:=" புதல்வர் வியாசர் என்கிற தென்னெனின்? கலிதருமத்தின் சம்பிரதாயங்களை உணர்ந்தவர் ஆனலும் பராச ருடைய புதல்வர் அந்தத்தரும இரகசியங்களை உணர்த்துவதில் எப்போது அடக்கம்கொண்டனரோ? அப்போது வேனயர் கோப் பற்றிக் கூறத்தக்கது என்ன? உள்ளது. (எனவே, பெரியோர் முன்சிறப்புச் செய்துகொள்வதில் அடங்கிஒழுகவேண்டும் என் பது கருத்து).

இங்ஙனமாக, வியாசர் முன்னிலையில் பராசரரிடத்தில் மதிக்கத்தக்க சிறந்த அறிவுடைமைவெளிப்படுத்துவதற்கும் பரா சரஸ்மிருதி தோற்றுவதற்கும் வியாசனை விளுவது "வியதிக ரணம்" அன்றும். என்று உணர்க. (கூ-சு)

ఓం॥ తతస్తైఋషయస్సర్వే ధర్మతత్త్వార్థకాంక్షిణ:।
ఋషింవ్యాసంపురస్కృత్య గత్వాబదరికాశ్రమమ్ ॥౫॥

என்பது, விதிப்படி ஆசிரியனை அடுத்தலால் கல்விப்பேறு உண்டாகின்றது, என்ற அக்கருத்தால், ஆசிரியனை அடைதலைக் கூறுகின்றது.

(இ-ள்). பின்பு அம்முனிவர் யாவரும் தருமத்தினுடைய உண்மையான அருத்தஞானத்தை விரும்பினவர்களாய், வியாசமஹரிஷியை முன்னிட்டுக்கொண்டுவதரிகாச்சிரமத்தை அடைந்து எ-று.

யாவருக்கும் பொதுவகையால் அறியப்பட்டதும், சிறப்புவகையால் அறியப்படாததுமாகிய விடயங்களில் தெரிந்துகொள்ளவேண்டும் என்னும் விருப்பம் உண்டாகின்றது. "ధర్మ" என்றஇம்மொழி இவ்விடத்து, பொதுத்தருமத்தை உணர்த்துகின்றது. "ధర్మ్య" என்றது சிறப்புத் தருமத்தை உணர்த்துகின்றது.

அவற்றுள், பொதுத்தருமம், ஓதப்பட்ட வேதமுடையவனுகியும், வியாகரணத்தை நன்றுக உணர்ந்தவனுகியும், ஏனைய இலக்கணத்திலும் அளவையிலும் சதுரனுகியும் இருக்கப்பட்ட புருடனால் அறியப்படுகின்றது, "ధర్మోఽశ్వస్యజగతఃప్రతిష్ఠా" தருமம் எல்லாவுலகத்தினையும் நிலைபெறச்செய்கின்றது. என்ற இது (கிருஷ்ணயஜுர்வேதம் - அஉ - வது பிரசிநம். உபநிடதம்). பொதுத்தருமத்தைக் கட்டளையிடுகின்றது.

அங்ஙிய சாகைகளை ஓதினவனுக்கானலோ? வியாகரணவன்மையால் சுவர்க்கப் பேற்றதனையும் வீடு பேற்றதனையும் தரித்தலால் தருமம் என்னப்படும் என்று சொல்லாக்கத்தின்றிறமே காட்டுதலினால் அந்த ஞானம் உண்டாகின்றது. வியாகரணத்துள் ள "ஔணாதிகப்பிரக்கிரியை" யில் தேற்றமில்லாதவன் ஆனால், இலக்கணத்தால் அறிந்துகொள்ளுகின்றன். "ஔணாதிகப் பிரக்கிரியை" = "உணு" முதலியவற்றின் மொழியாக்கம் "உணாதி" என்னும் அந்தவியாகரண சூத்திரத்துட்காண்க.—

தருமவிலக்கணம்.

"చోదనాగమ్యోధర్మఃఽ" = பொருளாகியும், வேதஆணையால் அறியத்தக்கதாயும், இருப்பது தருமம்; என்பது தருமத்தின் இலக்க

ணமாம். அவ்விடத்தில் "அருத்தம்" என்றமொழியால், "சோம பிசரணம்" முதலிய அநர்த்தங்கள் ஒழிக்கப்பட்டன "ஜ்யேனாபி சரன்யஜேத்"=அபிசாரம்=சத்துருமாரணத்தை விரும்பினவன் வல்லூறு என்னும் பறவையால் யாகம் செய்யவேண்டுவது; என்று சுருதியாற் கூறப்பட்ட அந்த "சோமபிசரணம்" என்னும்யாகத்திற்குப் பயனுய சத்துருவதை, "நஹிம்ஸ்யாத்ஸர்வ்பூதானி"=எந்தவுயிரையும் துன்பம் செய்யலாகாது. என்றசுருதிமொழியால் உணர்த்தப்பட்ட விலக்குக்கு விடயமாதலால் அநர்த்தமாகின்றது. அவ்வநர்த்தத்திற்குக் காரணமாதலின் வல்லூறும் அநர்த்த மாகின்றது. (அருத்தம்=பயனுள்ளதாக இச்சிக்கத்தக்கது. அநர்த்தம்=இச்சிக்கத்தகாதது). வல்லூறுதன்வடிவால் விலக்குவதற்கு விடயம் அல்லாதபடியால் விதிக்கு விடயமாவது விரோதம் அல்ல. விலக்கினுக்கு விடயமாதலால், "அக்நிஷ்டோமீய யாகத்து" உள்ளவதையும் "அருத்தம்" என்னும் மொழியால், வேறுபடுத்தத்தக்கதா யிருப்பதனல் அவ்வியாத்திதோஷம் உண்டாகின்றது என்று சங்கித்தல் கூடாது. அவ்வியாத்தி எ-து. ஒருபொருளுக்கு இது அமைதி என்று வகுத்துச்சொல்லிய இலக்கணம் அப்பொருளினிடத்தில்இல்லாமை.(வல்லூறுஎன்பது ஓர்பறவை அதனை டகைஎன்றும் இக்காலத்து வழங்குவர்).

அவ்விடத்து விசேடவிதியால், சாமான்யமாகிய விலக்கு ஒழிக்கப்பட்டிருக்கின்றது.

(எனவே, எந்த உயிரையும் கொல்லலாகாது என்பது சாமான்ய விலக்கு "அக்நிஷ்டோமாதியாகத்தில்" பசுக்கொலைசெய்யவேண்டும்என்பது விசேடவிதி. சாமான்ய வுரையிலும் விசேடவுரை வலுவுள்ளது. வலுவுள்ளதால் வலியற்றது ஒழிக்கப்படுகின்றது. ஆதலால் "அக்நிஷ்டோமீய யாகத்தின்" பசுக்கொலை அநர்த்தம் அல்ல என்பது மீமாம்ஸகரது கருத்து.) விதி=செய்யவேண்டும் என்பது.விலக்கு=செய்யவேண்டாம் என்பது. உரை-எது, விதி, விலக்கு. வசனம்,என்னும்பொருட்டு.

"சோதனா" (சோதனை) என்ற மொழியால் காட்சிமுதலிய வை வேறுபடுத்தப்படுகின்றன. அங்ஙனமாயின் "குட்டுங்கரு"= "குட்டத்தைச்செய்" என்னும் உலகவழக்கில் அவ்விதி அநிவியாத்திவருகின்றது: எனில்? அங்ஙனம் அன்று. (அநிவியாத்தி எ-து.

ஒன்றற்கு உரியதென்று எடுத்துச்சொல்லிய இலக்கணம் மற்றொன்றிலும் இருப்பது).

அந்த "சோதனை" என்றசொல், வேதவிடயத்தில் வழங்கும் வழக்கமுடையது ஆதலின், பங்கயம்முதலிய சொற்களைப் போல் அவயவப்பொருள் வெளிப்படுதற்கு நிமித்தமில்லை. பங்கயம் என்பது சேற்றில் பிறந்தது=தாமரை.

மேலே, இலக்கணம் சொல்லப்பட்டு இருத்தலாலே தருமத்தில் அந்த "சோதனை" பிரமாணம் என்று சொல்லுவோன் குறிப்பினல் அப்பொருள் ஆகின்றது. சொல்லுவோன் குறிப்பினல் பொருள்படுவதனை (முன்னத்தினுணருங்கிளவி என்பர்.)

இங்ஙனம், இலக்கண முதலியவற்றால் பொதுத் தருமம் உணர்ந்த பின்பு, சிறப்புவகையால் தெரிந்துகொள்வதில், இருடிகளுக்கு விருப்பம் உண்டாவது நியாயமேயாம்.

தருமவிடயத்தில், விசேடமாய் வினவுவதில் சமர்த்துடையவர் ஆதலால், வியாசனையே இருடிகள் முன்னிலையாக்கிக் கொண்டனர்: என்று கூறியது.

கலிதோஷத்தைப் போக்கடிப்பதற்குக் காரணம் ஆகையினலும், கெடாதகல்லபயனுக்குவதுவாகையினலும், வதரிகாச்சிரமத்தில், வாசம் செய்வது சிறந்ததாக இருக்கின்றது. கூர்மபுராணத்திலும் "బదర్యాశ్రమ మాసాద్య ముచ్యేతకలికల్మషాత్। తత్రనారాయణో దేవో నరేణాస్తేసనాతనః। అక్షయ్యంతత్రదత్తంస్యాజ్జప్యంవాపితథావిధం।మహాదేవప్రియం తీర్థంపావనంతద్విశేషతః।తారయేచ్చపితౄంస్సర్వాన్దత్వాశ్రాద్ధంవిశేషతః." =வதரிகாச்சிரமத்தை அடைந்து கலிதோஷத்தினல் விடப்பட்டான். அங்குநரனென்று பழையவனுகிய நாராயணன் இருக்கின்றன். அவ்விடத்துக் கொடுக்கப்படும் தானமும் அவ்விடத்து செபிக்கப்பட்டமந்திரமும், பிறவும், கெடாத பயனைத் தருகின்றன. விசேடமாய் அவ்விடத்தில் மஹாதேவர்க்குப் பிரியமாகிய தீர்த்தம்=(கங்கை)பரிசுத்தமாக இருக்கின்றது. அவ்விடத்தில் பிதிர் கருமம் செய்பவன்தன்னுடையபிதிர்க்கள் எல்லாரையும் கடத்திவிடுகின்றன். என்று கூறிற்று.

ஸ்ரீ ॥ நானாபுஷ்பலதாகீர்ணம் ஫லபுஷ்பைரலங்கிருதம் ।
நதீப்ரஸ்ரவணோபேதம்புண்யதீர்த்தோபஶோபிதம் ॥௬॥
ஸ்ரீ ॥ ம்ருகபக்ஷினினாதாட்யம்தேவதாயதனாவ்ருதம் ।
யக்ஷகந்தர்வஸித்தைஶ்சந்ருத்தகீதைரலங்கிருதம் ॥ ஏ ॥

என்பன, பராசரருடைய தவத்தின் பெருமையை விளக்குதற்பொருட்டு, அவரிருக்கும் இடமாகிய ஆச்சிரமத்தின் இயல்பைக்கூறுகின்றன.

(இ-ள்) (அவ்வதனிகாச்சிரமமானது) பலவகைப்பட்ட பூங்கொடிகளால் படரப்பட்டுள்ளது. பழங்களாலும் பூக்களாலும் அலங்கரிக்கப்பட்டது. யாறுகளும் அருவிகளும் கூடியுள்ளது. புண்ணிய தீர்த்தங்களால் ஒளிவிடுவது. விலங்கு பறவைமுதலியவற்றின் சத்தங்கள் நிரம்பியுள்ளது. தேவர்கள் ஆலயங்களால் சூழப்பட்டது. இயக்கர், கந்தருவர், சித்தர்களின் ஆடல், பாடல்களால் அலங்கரிக்கப்பட்டது. எ - று. யாறு, ஆறு எனமருவிற்று.

எல்லைகடந்த தவத்தினால், பயன் உடனே கிடைக்கின்றது: ஆதலால், எவ்வளவு சிறந்தபயன் காணப்படுகின்றனவோ? அவ்வளவு தவத்தின் பெருமை சிறந்தது என்று நிச்சயிக்கத்தக்கதாக இருக்கின்றது.

இந்த ஆச்சிரமத்தில் அந்தந்தப் பருவத்தில் கிடைக்கத்தக்க பலவகைப்பட்ட பூக்கள், எல்லாக்காலத்திலும் கிடைப்பதனால், கடவுள் பூசை என்னும் தவப்பயன் பலித்துள்ளதாகக் காணுகின்றது.

பயன்படத் தக்க மரங்கள் விசேடப்பட்டு இருத்தலால், ஆகார நியமங்களின் பலிப்பு நிச்சயிக்கப் படுகின்றது.

வேனிற்காலத்திலும் ஒழியாதயாற்றுப்பெருக்கினால், ஸ்நான நியமங்களினுடைய பலிப்பு வெளிப்படுகின்றது.

சுடுகையோடும் கூடிய தீர்த்தம், விஷ்ணுதீர்த்தம், கங்கைமுதலிய புண்ணிய தீர்த்தம் இவற்றின் விளக்கமிகுதியால் இந்த ஆச்சிரமம், சிறந்த தவத்திற்குக் காரணமாயிருக்கின்றது என்பதற்கு ஏது சொல்லியபடியாயிற்று.

விலங்குகள் பறவை முதலியவை நட்பாய் ஒன்றற்கொன்று பகையைவிட்டு அச்சமில்லாமல் நம்பிக்கையோடு கூச்சலிட்டுக் கொண்டு இருக்கின்றன என்றதனல் "அஹிம்ஸை" = கொலை யில்லாமை என்னும் தவப்பலிப்புப் பெற்றுள்ளதாக வெளிப்படு கின்றது. அவ்வாறே "யோக சாத்திரத்துள்", ஆசிரியர், பதஞ் சலியார் இயமநியமமுதலிய யோக அங்கங்களுடைய சித்திக்கு அடையாளங்களைக்கூறி, கொல்லாவிரத முதலியவற்றையும்குறிப் பித்தனர். வருமாறு. "अहिंसाप्रतिष्ठायां वैरत्यागः" = கொல்லாதவிரதசித்தி யடைந்த பெரியோர்கள் சந்நிதியில், பகைக்குணமுள்ள மிருக முதலிய பிராணிகளின் பகை ஒழிந்துபோகின்றது என-று.

முன்னம், மஹா ரிஷிகள் இந்த ஆச்சிரமத்தில் தவம்செய்து கொண்டு, தங்கள்தங்கள் காலத்தில் ஒவ்வொருதேவாலயங்களைப் பிரதிஷ்டைசெய்தார்கள். அவற்றுல் சூழப்பட்டிருத்தல், சிறந்த தவத்திற்கு இந்த ஆச்சிரமம் தக்கது என்று யாவரும் விரும்பு தற்குக் குறியாக இருக்கின்றது. அன்றியும், சந்திரசூரியர் முத லியதேவர்கள் முற்பிறப்பில் மனிதராக இருந்து இந்த ஆச்சிர மத்திலேயே பல பல இடங்களில் தவம்செய்து, தேவத்துவத்தை அடைந்தார்கள் என்று சொல்லவேண்டிய விருப்பத்தால் அவ் வத் தேவர்களுடைய பெயர்க்குறியையுடைய கோயில்களால் சூழப்பட்டது என்று சொல்லப்பட்டது எனவும் கூறுதலுமாம்.

இயக்கர் முதலியவர்கள் முற்பிறப்பிற்செய்த தவத்திற்குப் பலமாகிய தேவயோனித் தன்மையை=தெய்வப்பிறப்பினை, அநு பவிப்பவர்கள் ஆனலும், இவ்விடத்திற்குவந்து, இத்தவத்தினு டைய பெருமையை நோக்கிக்களித்து ஆடுவதும் பாடுவதும் செய்கின்றனர். இதனல், இவ்வாச்சிரமம் தேவர்களாலும் இச் சிக்கத்தக்கது என்று குறிப்பிக்கின்றது. இதுதகுதி யுள்ளதே. தெய்வப்பிறப்பினும் மேலான பயனை இவ்விடத்துத் தேடிக் கொள்வதுகூடுமானதாகஇருக்கின்றமையால். அல்லதூஉம், இயக் கர் முதலியோர் முத்தியை விரும்பினவர்களாய் அந்தமோக்ஷத் திற்கு ஏதுவாகிய ஆடல்பாடல்களால் கடவுளைத்துதிக்கின்றனர். என்பதுமாம்இக்கருத்தை யோகியாகிய யாஞ்ஞவல்கியரும் கூறி னர். வருமாறு. "वीणावादनतत्त्वज्ञः श्रुतिजातिविशारदः। तालज्ञश्चप्रयासेन मोक्षमार्गंनिगच्छति." = வீணைவாசிக்கும் இரகசியத்தை அறிந்த

வணும்*சுருதிசெய்வதிலும் ஸ்வராஜாதியிலும்சமர்த்தனும், காளத்தையுணர்ந்தவனும், "ச" என்பதனல் கருக்கைத்தெரிந்தவனும் ஆகிய மனிதன், "நாதானுசந்தாந உபாசனையால்"=தோத்திரத்தால், வருத்தம் இன்றியே மூத்திமார்க்கத்தை, (எனவே, கடவுள் அருளை) பெறுகின்றான். எ-று.

ஸ்லோ॥ తస్మిన్మృషిసభామధ్యేశక్తిపుత్రంపరాశరమ్।
సుఖాసీనమమహాతేజాంమునిముఖ్యగణావృతమ్ ॥౭॥
కృతాంజలిపుటోభూత్వావ్యాసస్తుఋషిభిస్సహ।
ప్రదక్షిణాభివాదైశ్చస్తుతిభిస్సమపూజయత్ ॥౮॥

என்பன, ஆசிரியனை வழிபடுதலின்கண் மாணாக்கன், அநுட்டிக்கத்தக்க முறைமையைக் கூறுகின்றன.

(இ-ள்.) அவ்விடத்தில் அந்த இருடிகள் கூட்டத்தின் நடுவிலே முனிவர்களில் சிறந்தவர்களுடைய கூட்டத்தால் சூழப்பட்டு இன்பத்தோடும் வீற்றிருக்கின்ற சக்திரிஷிபுத்திரராகிய பராசர முனிவனை, மிகுந்த பிரகாசத்தையுடைய வியாசர், முனிவர்களோடு அடைந்து இரண்டு கைகளையும் குவித்து அஞ்சலிசெய்தவராய், கோத்திரம்பிரவரம் பெயர் முதலியவற்றைச் சொல்லிச்செய்யும் நமஸ்காரமாகிய அபிவாதனங்களாலும், வலம்வருதலாலும், தோத்திரங்களாலும் நன்முகப்பூசித்தார் எ-று. பிரவரம்=கிளைமரபு.

முன்னர்சொல்லப்போகின்ற தருமமானது, முனிவர்கள் எல்லார்க்கும் உடன்பாடானதாயிருக்கும் என்பதைக் குறித்தற்கு "ருஷிஸங்கா" என்று கூறப்பட்டது.

முனிவர்களிலும்விசேடமாகத்தருமநூலாகிய ஸ்மிருதிகளைச்செய்த நூலாசிரியர்களாகியும், கோத்திரங்களை வளர்த்தவர்களாயும் இருக்கின்ற அத்திரி, யாஞ்ஞவற்கியர் முதலானவர்களுடைய உடன்பாட்டுண்மையைச் சொல்ல விரும்பி "முனிமுக்ய" என்று கூறப்பட்டது.

---

* சுருதி எ-து. எழால், அது ஈண்டு கண்டத்து ஒலியும் நரம்பொலியும் ஒத்திருக்கச்செய்தல். ஸ்வரம் - எ-து, எழுத்துக்களின் எடுத்தல் படுத்தல் முதலிய வோசைத்திறம். நாளம் - எது - எழுத்துக்களின் உச்சாரணகாலமாத்திரை. கருத்து=பொருள் = பாவம்.

தவம்ஒன்றினாலேயே பராசரர்க்கு மகிமை கிடைத்தபடியல்ல; சான்றோர் வழியிற்பிறந்தபிறப்பினாலும் பெருமைகிடைத்தது; என்பது குறித்தற்கு "சக்தி புத்ரம்" என்று கூறப்பட்டது.

இந்த மகிமை "பராசரர்" என்னும் சொல்லினுடைய பொருளின் இலக்கணத்தை விசாரிப்பதினாலும் நன்றாக விளங்குகின்றது. அப்படிப்பட்ட பொருள்வகை பெரியோர்களால் கூறப்பட்டது. என்னை? "பராக்ருதாஶ்ச ராக்ஷஸ்த்ராத்ருஸானாம்அவதாத்ரீணாம்। அதஶ்சபராஶரோநாமருஷிருக்தோமநீஷிபிः।"=கொல்லவேண்டிய அரக்கர்களால்விடப்பட்ட அம்பைப் பின்னிட்டுப்போகும்படி, செய்ததால், அறிந்த முனிவர்கள் பராசரர் என்று பெயரிட்டனர். எ-ம்.

"பரஸ்யகாமதேவஸ்யஶராஸ்தம்மோஹனாதயः।நவித்யம்தேயதஸ்தேனருஷிரக்தஶ்சபராஶரः." = யாவரினும் சிறந்த மன்மதனுடைய சம்மோஹநம் முதலிய அம்பின் வேதனை இவர்க்கு இல்லை ஆதலால், பராசரர் என்று பெரியாரால் சொல்லப்பட்டார். எ-ம்.

"பஶுஷுபாபசித்தேஷு நாதத்தேகோபலக்ஷணம்। ஶரண்யஸ்தாத்ததஶ்ப்ரோக்த ருஷிரேவபராஶரः"=பாவ எண்ணத்தையுடைய அந்தியரிடத்துத் தமது ரோகாவம் என்னும் அம்பைச்செலுத்துவது இல்லை ஆதலால், பராசரர் என்றுகூறப்பட்டார். எ-ம்.

"பரம்மாதுர்நிஜாயாயாஸ்துதரந்தத்தயம்ஸுதः। ருசமுச்சார்யநிர்பித்யநிரகாத்ஸபராஶரः."=தாயின் கருப்பத்தில் இருந்தபோது, ஒரு இருக்கு மந்திரத்தை உச்சரித்து அந்தவலிமையால் தாய்வயிற்றைப் பீறிக்கொண்டு அவ்வழியால் வெளிப்பட்டனர் ஆதலால் பராசரர் என்னப்பட்டார். எனவும்வருும்.

மகத்திற்கு எவ்வகைப்பட்ட விகேஷப தோஷங்களும் இல்லாமல் ஓரேகுறியால் நிலைபெற்று இருக்கும்படி வீற்றிருப்பவர் என்பது குறித்தற்கு "ஸுகாஸீநம்" என்றுகூறப்பட்டது. ஐகாரம் "ஸுகாஸீநः" என்னும் இவ்விரண்டு மொழிகளுடையவகைமை முன்னரே கூறினும்: ஆண்டுணர்க. விகேஷபம்=கவலை.

குருபத்திவிடயம்.

"க்ருதாஞ்ஜலிபுடः" எ-து. கைகுவித்து அஞ்சலிசெய்து, எ-று. இதனால் விசேடமான பத்தியுடைமை தோற்றுவிக்கப்பட்டது.

மிகச்சிறந்த பத்தியால் குரு உபதேசித்த உண்மைப் பொருள் வெளிப்படுகின்றது. இங்ஙனம் "சுவேதாஸ்வதர சாகையால்" சுருதிமொழி கேட்கப்படுகின்றது. அதுவருமாறு. "యస్యదేవేపరా భక్తిర్యథాదేవేతథాగురా। తస్యైతేకథితాహ్యర్థాఃప్రకాశంతే మహాత్మనః॥" = யாவன் ஒருவனுக்குக் கடவுளிடத்தில் சிறந்தபத்தி உண்டாய், அவ்வாறே ஆசிரியனிடத்திலும் பத்தி உண்டாகுமோ? அந்தப் பெரியவனுக்கு இங்கே கூறியபொருளெல்லாம் விளங்கும். எ-று.

குருபத்தியில்லாவிட்டால் பொருள் உபதேசிக்கப் பட்டாலும் பலியாதாம். இவ்வாறு, வேதமும் கூறிற்று. அதுவருமாறு. "అధ్యాపితాయెగురూన్నాద్రియంతేవిప్రావాచానునసాకర్మణావా।యథైవతేనగురుభిర్హ్యే జనీయాస్తథైవతాన్నభునక్తిశ్రుతంతత్" =குருவால் ஓதுவிக்கப்பட்டு, பாரமம்மொழிதொழில்களால் அந்தக்குருவை வழிபடாதுவிட்டானே? அவ்வாறேஅந்தக்குரவனும், அந்தச்சீடனுக்குஉணவைக்கொடுக்கலாகாது. அவ்வாறேஅவன்படித்தபடிப்பும்அவனுக்குப்பயன்படமாட்டாது. எ-று. எனவே, எவ்வாறுகுருவைவழிபடாதசீடர்கள்குருவால் காக்கப்படுகிறதில்லையோ? அவ்வாறே அக்கல்வியானது கற்றமாணாக்கர்களைத் தன்பயனைக்கொடுப்பதனாற் காப்பாற்றுவதில்லை. என்பதுகருத்து. கடவுளைப்போலவே ஆசிரியனையும் பூசிக்கவேண்டுவது ஆதலாலே அவ்வாசிரியன் விடயமாக பிரதக்ஷிண நமஸ்காரம் செய்வது தக்கதாக இருக்கின்றது.

ஆனால், கடவுளுக்குச் செய்வதுபோல ஆசிரியனுக்கும் "ஆவாஹநம், ஆசநம்" முதலியஉபசாரங்களையும்செய்தல் வேண்டுமே எனில்? செய்யலாம் ஆதலால், பிரதக்ஷிணநமஸ்காரம் என்றதனால் மற்றைய உபசாரங்களையும் செய்ததாக உபலக்ஷணவிதியாற்கொள்க.

அன்றியும், தூரத்திலிருந்து வந்து குருதரிசனை செய்துகொள்பவர்கள், அப்போதைக்குச் செய்யத்தக்கது வலம்வருதல் முதலியவே போதுமானதாக இருக்கின்றது என்று அங்ஙனம் கூறியது எனினும் அமையும். (அ-கூ)

ஶ్లో॥ తతస్సంతుష్టహృదయస్సపరాశరమహామునిః।
ఆహసుస్వాగతంబ్రూహీ త్యాసీనోమునిపుంగవః ॥౧౦॥

என்பது, மேற்கூறப்பட்ட வழிபாடு, விதிப்படி உள்ளது என்பது விளக்குவதற்குக் களிப்பு முதலிய ஆசிரியன் கருணை விசேடத்தைக் கூறுகின்றது.

(இ-ள்.) அதன்பின்பு, களிப்பை அடைந்த உள்ளத்தினை யுடைய பராசர மஹாமுனி, இருடிகளிற் சிறந்தவர் ஆதலால் தாமிருந்தபடியே "சுகமாகவந்தாயோ? சொல்வாயாக" என்று வினவினர். எ-று.

ஆசிரியன் களிப்படைவது, சீடனுடைய விருத்திக்குக் காரணமாக இருக்கும்: என்னும்கருத்தை * உடன்பாட்டாலும் மறுதலையாலும், புராணசாரத்தில் கூறப்பட்டது. வருமாறு "குரா வதுஷ்டேதுஷ்டாஸ்யுஸ்ஸர்வ்தேவாத்விஜோத்தமாஃ। துஷ்டேதுஷ்டாயதஸ்தஸ்மாத்ஸர்வ்தேவமயோகுருஃ। ஶ்ரேயோர்தியதிகுர்வ்ஜ்ஞாம்மனஸாபினலம்஘யேத் ।குர்வ்ஜ்ஞாபாலகோயஸ்தாத்ஜ்ஞானஸம்பத்திமஷ்நுதே"= ஆசிரியன்சந்தோஷத்தை அடைந்தால் தேவர்கள் எல்லாரும்சந்தோஷப்படுகின்றனர் ஆதலால் ஆசிரியனேஎல்லாத்தேவர் களுடையவடிவமாகியிருக்கின்றார். தனது விருத்தியை விரும்பினவனாக இருந்தால், அவன் ஆசிரியர் கட்டளையை மறுத்தாலும் கடக்கலாகாது. ஆசிரியர் கட்டளையைத்தவறுதபடி, காப்பவன்ஞாநச் செல்வத்தை அநுபவிக்கின்றான். எ-று.

அன்போடு வரவை விசாரித்தபடியால் சிறந்த தயவை உடையவர் என்பது குறிக்கின்றது.

"ஸுஸ்வாகதம்" என்பதில் "ஸு, ஸு" என்று இரண்டுவிசை=மிகைபடக் கூறியது, அன்பின் மிகுதியைக் குறிக்கின்றது. அன்றி, ஒரு "ஸு" என்பதனால், உலக சுகமும், இரண்டாவது "ஸு" என்பதனால், செய்தவழிபாடு விதிப்படியுள்ளது என்பதற்கு அறிகுறியாகிய சாஸ்திரீயசுகமும், எனக்கொள்ளினும் அமையும்.

"ஆஸீனஃ" = உட்கார்ந்திருப்பவனாகிய என்ற இச்சொல், இருடிகள் வந்தபோது அவரும் எழுந்து உபசரிக்கவேண்டுவது அன்

---

* குருவுக்கு சந்தோஷமுண்டானால். சீடனுக்குச் செல்வம் உண்டாகின்றது என்பது அன்வயம். குருவுக்கு சந்தோஷம் இல்லாவிட்டால் மாணாக்கனுக்கு யாதொரு பயனும் இல்லை என்பது வியதிரேகம். இவற்றால் குருவின் சந்தோஷம் சீடனுடைய செல்வவிருத்திக்குக்காரணம்என்பது அநுபவ சித்தமாயுள்ளது.

ரோ? என்னும் வினாவை ஒழிக்கின்றது. அதற்கு அநுகூலமாக "மஹர்ஷயஃ" — சிறந்தமுனிவர்: "முனிபுங்கவஃ" = முனிவர்கள் தலைவர்: என்னும் இவ்விரண்டு சொற்களால் விசேடம்கூறப்பட்டது. இவ்விரண்டு சொற்களும் முறையே ஒன்று பருவத்தாலும், மற்றொன்று கல்வியாலும் மூத்திருக்குந், தன்மையைக் குறிக்கின்றன. பருவம்=வயது. அவ்விருவகைப்பெருமையும்உடையவராயிருந்தலால் பராசரனர் எழுந்திருந்து உபசரிக்கத்தக்கவர் அல்லர் என்பது. (கo)

శ్లో॥ కుశలంసమ్యగిత్యుక్త్వావ్యసర్పత్పృచ్ఛత్యతర్పరమ్ ॥౧౦౫॥ *

என்பது, இருந்தவர், வந்தவருடைய வரவை எவ்வாறுவினரோ? அவ்வாறே வந்தவரும் இருந்தவருடைய இருப்பை விசாரிக்கவேண்டுவது ஆதலால், முன்பாக உண்மை உணர்ந்த ஆசிரியர்களுக்குத்தனதுவரவுமுதலியவற்றை விண்ணப்பித்தபின் தாமுணர்ந்து கொள்ள வேண்டுவனவற்றை வினவுதின்றார் என்பது.

(இ—ள்.) சேஷமம் நன்றாக இருக்கின்றது என்று சொல்லி, வியாசர் அதன்பின் இவ்வாறு வினவத்தொடங்கினர். எ—று.

இவ்வாறு சொல்லி, குருமுகமாக சேஷமங்களையும் வினவி என்னும் பொருளை வருவித்துக் கொண்டு, கருத்தை முடித்துக் கொள்ளவேண்டும். (கoஉ)

శ్లో॥ యదిజానాసిభక్తింమేస్నేహాద్వాభక్తివత్సల।
ధర్మంకథయమేతాతహ్యనుగ్రాహ్యోస్యహంతవ ॥౧౧౫॥

என்பது, அறியத்தக்கபொருளை விளவுதலின் முறைமையைக் கூறுகின்றது.

(இ-ள்.) பத்திசெய்பவரிடத்தில் கருணையை உடையவரே! என்னுடைய பத்தியைத்திருவுளத்திற்கொண்டீராயினும், தந்தையே! மகன்என்னும் அன்பினாலாயினும் எனக்குத் தருமங்களைக் கூறியருளும். எவ்வண்ணமாயினும், அடியேன் தேவரீரால் அருள்கூரத்தக்கவனாகியிருக்கின்றேன். எ—று.

* இதன்பின் அனைசுலோகம் இருக்கவேண்டியதாக இருக்கின்றது ஆனால் அது காணப்படவில்லை.

அன்புடைய மாணாக்கன் ஆயினும் மகனாயினும், இரகசிய மான் உபதேசசத்திற்குத் தக்கவர்களாம். ஏனையர் தக்கவர்களல் லர். இந்த அருத்தம் சாமவேதிகளால் "மதுவித்தை" அச் சுருதிமொழியில் சொல்லப்படுகின்றது. வருமாறு. "இதம்வாவ ஜ்யேஷ்டாயபுத்ராயபிதா ப்ரஹ்மப்ரப்ரூயாத், ப்ராணாஜ்ஜ்யாயஸ்தேவாஸினேனான்யஸ்மைகஸ்மைசன" பிதாமூத்தமகனுக்குக்கூறுவன். தன்னுயிரிலும் சிறந்த மாணாக்க னுக்காயினும் கூறுவன், அந்நியன்ஒருவனுக்கும் கூறலாகாது. என்றது. ஆதலால்இவ்விடத்து, வியாசனுர் பராசரனுர்க்குமகனு கியும் மாணாக்கனுகியும் இருக்கின்றனர் என்னும் கருத்தால் அவ் விரண்டினையும்கூறினர்.

எவ்வகையா லாயினும் என்மனத்தில் பத்திவிசேடம் உண்டு என்று தேவரீரால் கருதப்பட்டதாலும், நீர் அடியவர்களிடத்தில் அன்புடையவர் ஆதலால், இவன் மாணாக்கனே யென்னும் திரு வுளத்தால் அருள்செய்யும் அவ்வாறுகருதா விட்டாலும் மகன் என்னும் கருணையினு லாயினும் அடியேன் கருணைக்குத்தக்கவன் ஆகின்றேன். எவ்வகையாலும் தருமம், உபதேசிக்கத்தக்கதாகவே யிருக்கின்றது: என்றபடி.

(ககஅ)

ஸ்ரோ ॥ శ్రుతామేమానవాథమా౯వాసిష్ఠాఃకాశ్యపాస్తథా।
గాగీ౯యాగౌతమేయాశ్చతథాచాశనసాఃశ్రుతాః ॥౧౩౫॥

ఆత్రేర్విష్ణోశ్చసంవర్తాద్దక్షాదంగిరసస్తథా।
శాతాతపాచ్ఛహారీతాద్యాజ్ఞవల్క్యాత్తథైవచ ॥౧౩౬॥

ఆపస్తంబకృతాధర్మాశ్శంఖస్యలిఖితస్యచ।
కాత్యాయనకృతాశ్చైవతథాప్రాచేతసాస్మృతేః ॥౧౩౭॥

என்பன, பலவணகப்பட்ட தருமங்கள் மநுமுதலியவர்க ளாற் சொல்லப்பட்டுள்ளன. அவற்றுள், எந்தத்தருமம் உம்மால் அறியத்தக்கதோ? என்ற வினுக்கருத்தால் அறியவேண்டிய தரு மங்களைப் பிரிப்பதற்குத் தாம்; முன் உணர்ந்ததருமங்களைவகுத்து முறையே கூறுதலையுணர்த்துகின்றது.

(இ-ள்.) மநு, வசிஷ்டர், கசியபர், கர்க்கர், கௌதமர், உச நர், அத்திரி, விஷ்ணு, சம்வர்த்தர், தக்ஷர், ஆங்கிரசு, சாதாத பர், ஹாரீதர், யாஞ்ஞவற்கியர், ஆபஸ்தம்பர், சங்கர், இலிகிதர்,

காத்தியாயனர், பிராசேதசர், இப்பத்தொன்பதின்மரும் வேறு வேறுகக் கூறியிருக்கும் தருமசாத்திரங்கள், அக்கம்ச இருடிக ளினின்றும் என்னல் உணரப்பட்டது.

"மே", "மயா" = என்னுடைய என்னும்-ஆறும் வேற்று மைக்கு என்னல் எனமூன்ற னுருபின் பொருள்படக் கூறப்பட் டது. இவ்விடத்தும் சாமாந்தியமாய்ச் சம்பந்தப் பொருளதாகிய ஆறும் வேற்றுமைக் கருத்தாவின் புடைபெயர்ச்சி இலக்கண விசேடத்தில் முடிகின்றது.

இருடிகளினின்றும், என்னும் ஐந்தாவதனுருபிற்கு கூறப் பட்டதனேடு சம்பந்தம். ஆபஸ்தம்பரால் செய்யப்பட்டனவைகள், எனில்? சொல்லப்பட்டவை என்பதுகருத்து. சங்கர், இலிகிதர், என்பன இந்த ஆறும் வேற்றுமைக்கு சம்பந்தமேபொருள். அவ ராற் கூறப்பட்டதே அந்த சம்பந்தம்ஆகின்றது. "ப்ராசேஸ" என் பது, "வாயஸ" ரஂக்ஷஸ என்பனபோல் "ஸ்வார்த்தத்தில்வந்த தத் திதம்" = (தன்னுனைப் பொருளாக்குறிக்கும் பெயர்ப்பகுபதம்) "ப்ரசேதாஃ" என்பதற்கு பொருள் வருணன் என்பது. அல்லது, (அபத்தியார்த்தம்) = அவன்மகன், என்னும் பொருளிலாயினும் "தத்திதப்பிரத்தியயம்" ஆகலாம். அந்தபகூத்தில் "பிரசேத தன்" மகன் என்பவன் ஒருவன் தருமநூல்செய்தவனென்ற கருத் தும் ஆகின்றது. (பிரத்தியயம்=விகுதி.) (சம்பந்தம்=நிழமை= உரிமை.)

(கசஅ)

ஶ்ரு॥ ஶ்ருதாஹ்யேதேபவத்ப்ரோக்தாஃ ஶ்ருத்யர்தாமேனபஸ்ம்ருதாஃ
அஸ்மிந்ன்வ்யந்தரேதர்தாகஸ்கிருதத்ரேதாதிகேயுக ॥0ஸ்ரு॥

என்பது, மநுமுதலியோராற் கூறப்பட்ட ஸ்மார்த்த தருமம் கேள்விப்பட்டிருத்தலால் அவற்றை விரிவி அறிய வேண்டுவ தில்லை. "அக்நிஹோத்ராதிகம்" முதலிய "சுரொளததருமங்களோ" விரிவியறியத்தக்கதென்று சங்கித்துக் கூறுகின்றது.

(இ-ள்.) வேதமீர் கூற இங்கு, கிடைத்துள்ள வேதங்களும் சுரொளத தருமங்களும் எவ்வாறு என்னல் கேட்கப்பட்டனவோ? அவ்வாறு இந்த மநு வந்தரத்தில், கிருதம், திரேதம், முதலிய யுகங்களில் வழங்கும் தருமங்களும், என்னல் மறக்கப்பட்டன அல்ல. எ-று.

அறியப்பட்டுள்ள சுருதிகளுக்கு அருத்தமாகிய "அக்கினி ஹோத்திரம்" முதலிய தருமங்கள் என்னல் கேட்கப்பட்டன. "ஹி" என்னுஞ் சொல், இதனைத்தாமும் உணர்ந்து உள்ளீர் அன்றே? என்னும் பொருளைத்தருகின்றது, உம்மாற் கூறப்பட்ட என்றது, அதற்குக்காரணத்தை விளக்குகின்றது. பராசரனிடத்தில் வியாசனர் ஓதியதாகப் புராணக்காரர்கள் கூறுகின்றனர். கேட்கப்பட்டதும் மறந்ததானல் மறுபடியும் ஞாபகத்திற்குக் கொண்டுவருவதற்காக விரும்பவும் படுமே? என்னும் ஐயத்திற்கு இடமில்லாதபடி, மறக்கவில்லை என்று கூறினர்.

கலியுகத்தில், அக்கினிஹோத்திரம் முதலிய தருமங்கள் மிகுதியாகக்கிடையாது என்னுங்கருத்தால் திரேதாயுக முதலியவற்றுள் என்று கூறப்பட்டது. "ஆதி" என்றதனல் துவாபரயுகமுங் கொள்ளப்பட்டது. இந்த மநு வந்தரத்தில் என்று சொல்வது நிகழ்காலத்தை உணர்த்துகின்றது. ஆனல், இறந்த மநு வந்தரத்தையும்வரும் மநு வந்தரத்தையும் விலக்கியது அன்று. அவ்விலக்கினலும் பயனில்லை. வேறு வேறுவகைப்பட்ட மநு வந்தரங்களில் தருமங்களும் வேறுபட்டிருப்பதாக யாண்டும் கண்டதில்லை. இந்த மநுவந்தரத்தில், கிருத திரேத துவாபரயுகங்களில் பெரும்பாலும் அநுட்டிக்கப்பட்டனவாகியும் பிரத்தியக்ஷ சுருதி அருத்தமாகியும் உள்ள இந்த சுவௌததருமங்களும் மநுமுதலியோர்கூறிய ஸ்மார்த்ததருமங்களைப்போல ஸ்மரிக்கப்பட்டிருத்தலினல் தெரிந்துகொள்வதற்கு இச்சிக்கவில்லை. (ஸ்மரித்தல்=நினைத்தல்).

(கருஉ)

శ్లో॥ సర్వేధర్మాఃకృతేజాతాస్సర్వేనష్టాఃకలాయుగే।
చాతుర్వర్ణ్యసమాచారంకించిత్సాధారణంవద ॥౧౬౫॥

என்பது, இப்போது, கூறுதொழிந்த அறிபொருளை விளவுதல் கூறுகின்றது. (அறிபொருள் = அறியவிரும்பியபொருள்).

(இ-ள்.) எல்லாத்தருமங்களும் "கிருத" யுகத்தில் பிறந்தன. கலியுகத்தில் இறக்கின்றன. ஆதலால், நான்குவருணத்தினுடைய பொதுவாகிய சில ஒழுக்கங்களைச் சிறிது கூறவேண்டும். என்று.

"सर्व" = எல்லாம். என்றது, தேசகால அவஸ்தை முதலிய பேதத்தால், தருமம் பலவகைப்பட்டிருக்கின்றது என்பதுரைக்கின்றது. இவ்வாறு, "மஹாபாரதம், அநுசாசநீகபருவம், உமாமஹேச சம்வாதத்தில்," கூறப்பட்டுமிருக்கின்றது.

அதுவருமாறு, "धर्म्माबहुविधालोकेश्रुतिभेदमुखोद्भवा:। देशधर्म्माश्च दृश्यंतेकुलधर्म्मास्तथैवच। जातिधर्म्मा वयोधर्म्मा गुणधर्म्माश्चशोभने। शरीरकालधर्म्माश्चउपधर्म्मास्तथैवच। एतद्धर्म्मस्यनानात्वंत्रियलोकवासिभि:॥." = உலகத்தில் வேறு வேறு சுருதிகளாகிய முகங்களில் இருந்து பிறந்த தருமங்கள் பலவகைப்பட்டுள்ளன. அவை, தேசதருமங்கள், குல தருமங்கள், சாதிதருமங்கள், பருவதருமங்கள், குணதருமங்கள், தேகதருமங்கள், காலதருமங்கள், ஔபத்துத்தருமங்கள் எனப்படும்: இங்ஙனம் தருமங்கள் பலவகைப்பட்டனவாக, உலகத்துள்ளவர்களாற்செய்யப்படுகின்றன.

இத்தருமங்கள் எல்லாம் உயிர்களால் "கிருதயுகத்தில்" உள்ளவாறு அநுட்டிக்கப் பட்டனவாகின்றன. யுகவில்லைமையால் தான்குபாதங்களையுடைய தருமங்களுக்கும் கேடுஇல்லை. திரேதாயுகமுதலியவற்றுள் தருமங்கள் படிப்படி சுருங்கிப் போவதாய் கலியுகமுடிவில் ஒன்றும்இல்லாமற்கெட்டு ஒழிகின்றது. இவையெல்லாம் "புராண சாரத்துள்" கூறிக்கப்பட்டன. வருமாறு, "कृतेचतुष्पात्सकलो व्याजोपाधि विवर्जित:॥ वृषप्रतिष्ठितोधर्म्मो मनुष्यैष्वभवत्पुरा। धर्म्मोपादविहीनस्तु त्रिभिरंशैर्प्रतिष्ठित:। त्रेतायांद्वापरेचैव व्यामिश्रो धर्म्मइष्यते। त्रिपादहीनस्त्वेष्वेतुसत्यात्मात्रेणतिष्ठति." = கிருதயுகத்தில், "வியாஜஉபாதிவிட்ட". = வெள்ளை நிறத்தினையுடையில்லாத முழுத்தருமம் முதலில் நான்கு கால்களையுடைய இடபருபமாய், மனிதரிடத்தில் நிலைபெற்றதாயிருந்தது. திரேதாயுகத்தில், தருமம் ஒருகால் குறைந்து மூன்று பங்கொடு அமைக்கப்பட்டிருந்தது. துவாபரயுகத்தில், இரண்டு அல்லது அனைப்பங்காகி "மிசிரதருமம்" என்று பெயர்பெற்று இருந்தது. மிசிரதருமம்=பாவத்தோடு கூடியதருமம். "कलि=कर" = கலியுகத்தில் மூன்றுகாலு மற்று, இருக்கின்றது என்னும் அவ்வளவில் நின்றது.

அங்ஙனம், பிரகற்பதியும் கூறினர். வருமாறு, "कृतेभूत्सकलोधर्म्मस्त्रेतायांत्रिपदीस्थित:। पादश:प्रक्षयोधर्म्मस्य सुत्सरद्व्यसंभव:। धर्म्माध

ர்ஸமாபூத்வாத்விபாதாத்வாபரேஸ்திதா। திஷ்யேதர்மஸ்திதஸ்பாதைர்தர்மஸ்பாதனஸம்ஸ்திதஃ.” =கிருதயுகத்தில், தருமங்கள் முழுவதும் நடந்தன. திரேதாயுகத்தில், மூன்று பாதங்களையுடையனவாயிருந்தன. மச்சரம், துவேஷம், உண்டாகின்ற அதருமத்தின் ஒருகால் அவற்றுட்கலந்திருந்தது. துவாபர யுகத்தில், அறம் பாவங்களிரண்டும் இரண்டிரண்டு கால்களால், ஒத்தனவாகி விரவிநின்றன. கலியுகத்தில், பாவம் மூன்றுகாலுடன் நிற்கின்றன; அறம் ஒருகாலுடன் நின்றுள்ளது. எறு. மச்சரம் = பிறர்துயர்கண்டு களித்தல். துவேஷம்=பகை பாராட்டல்.

அன்றியும், “ இலிங்கபுராணத்துள்,, கலியுகத்திலுள் உள்ளதருமத்தின் கேட்டினைக் கூறி அதற்குக் காரணமாகிய புருடதோஷத்தை உபநியசித்திருக்கிறார். “ ஆத்யேகிலேதுயோதர்மஸ்த்ரேதாயாம் ப்ரவர்ததே। த்வாபரேப்யாகுலீபூதஸ்பாப்ரணஸ்யதிகலாயுகே। திஷ்யேமாயாமஸூயாஞ்ச வதஞ்சைவதபஸ்விநாம்। ஸாதயந்திநராஸ்த்ரேதமஸாவ்யாகுலேந்த்ரியாஃ॥ ” = முதலாவது கிருதயுகத்தில், தருமம் எதுவோ? அதுவே, திரேதாயுகத்தில், வழங்குகின்றது. துவாபரயுகத்தில், வியாகூலத்தைஅடைந்திருக்கின்றது. கலியுகத்தில் நாசத்தை அடைகின்றது. அக்கலியுகத்தில், மாறுடர் காமசருணத்தால் கவர்ந்து அலைக்கப்பட்ட பொறிபுலன்களை யுடையவராய் வஞ்சகத்தையும், அழுக்காற்றையும், தவத்தினைக்கொலை வதையையும் செய்கின்றார்கள். எறு. உபநியசித்தல்=வரம்புசெய்து எடுத்துக்கூறுதல்.

அல்லதூஉம், “ விஷ்ணுபுராணத்திலும்” = வர்ணாஸ்ரமாசாரவதீப்ரவ்ருத்திர்நகலௌநராம்। ஸஸாமயஜுர்ருக்ஸ்வர்கவினிப்பாவனஹேதுகா. = சாமம், யஜுசு, இருக்கு, இவ்வேதங்களினுடைய பயனை அடைவதற்குக் காரணமாகிய வருணச்சிரம ஒழுக்கங்களையுடைய நடை, கலியுகத்தில் மனிதருக்குள் இல்லாமல் ஒழியும். எ-று.

இன்னும், “ ஆதித்திய புராணத்திலும்”= “ யஸ்துகார்த்தயுகோதர்மோநகர்த்தவ்யஸ்கலாயுகே। பாபப்ரஸக்தாஸ்துயதஃ கலௌநார்யோநராஸ்ததா.” = மாதர்களும், மைந்தரும் பாவத்தில் சிறந்தவராவார் என்னும் நிமித்தத்தினால், கிருதயுகத்துள்ள தருமம்கலியுகத்தில் அவ்வாறு செய்யத்தக்கதல்ல. எ-று.

ஆகலால், கலிகாலத்தில், சிவர்களுக்குவருத்தத்தால்முடிக்கத்தக்கதருமங்களில் செல்லுகை உண்டாவதில்லை. ஆகலால், செய்வதற்கு எளியதாகிய தருமம் எதுவோ? அதனை இங்கு அறிந்து கொள்வதற்கு விருப்பம் உண்டாயிருக்கின்றது. அத்தருமம், நான்குவருணங்களுக்கும், பொது எனவும், சிறப்பு எனவும், இருவகைப்பட்டிருக்கின்றது.

பொதுத்தருமம்.

அவற்றுள் பொதுத்தருமம், பிரகற்பதியால் விளக்கப்பட்டது. வருமாறு, "தயாத்மானசூயாசசௌசானாயாஸமங்களம்। அகார்ப்பண்யஸ்ப்ருஹத்வேசசர்வஸாதாரணாஇமே."=தயவுடைமை, பொறுமை, அழுக்காறின்மை, சுத்தமுடைமை, சோர்வின்மை, மங்கலமுடைமை இவறலின்மை=உலோபமில்லாமை, அவாவின்மை, அவா=ஆசை இவையாவர்க்கும் பொதுவாகியதருமம். என்று. காண்க.

அங்கனம், விஷ்ணுவும் கூறியிருக்கின்றனர். வருமாறு "க்ஷமாஸத்யந்தமசௌசஞ்சாநமிந்த்ரியஸம்யமः। அஹிம்ஸா குருசிச்ரூஷா தீர்த்தானுசரணந்தயா। ஆத்மவத்ஸ்வமலோபத்வம் தேவதானாஞ்சபூஜனம்। அனப்யஸூயாசததாதர்ம்ஸாமான்யமுச்யதே." = பொறுமை, உண்மை, மனமடக்கம், சுத்தம், கொடை=தானம், பொறியைத்தன்வழிப்படுத்தல், கொல்லாமை, குருபணிவிடையில் இச்சை, தீர்த்தயாத்திரை, அருளுடைமை=சீவகாருணியம், தன்னிலை யுணர்ச்சியுடைமை, உலோபமில்லாமை, கடவுளைப்பூசித்தல், பொறாமையில்லாமை, இவை பொது அறங்கள் என்று கூறப்படுகின்றன. என்று. *

---

* தானம்=சற்பாத்திரத்தில் கொடுக்கப்படுவது. பொறியைத் தன்வழிப்படுத்தல்=பொருளல்லாத விடயங்களில் மனந்தானதவிடாமை. கொல்லாமை=விதியில்லாக்கொலை என்பாருமுளர். தன்னிலை யுணர்ச்சியுடைமை=தன்னென்னம் அமைந்திருத்தல் எனவும் படும். அல்லது - ஆத்மாத்மதன்மை யுண்டாயிருத்தல். அதாவது, மறுமை வீடு கடவுளுண்டெனக் கொளவது. ஆன்மா என்பது சிவன், ஊக்கம், நிலைபடுதல், உடம்பு, இயற்கைக்குணம், ஞானம்-எம், பரமான்மா=கடவுள் எனவும் கூறுப. உலோபம் = தருமத்திற்கு மாறுகி ஆசையால் இறுகப்பற்றுதல். கடவுளைப் பூசித்தல்=உலகபாலராகியதேவர் களனைவரையும் அருச்சித்தல்.

இனிச்சிறப்புத்தருமம் வருமாறு.

பிரகற்பதி ஸ்மிருதியில் கூறப்பட்டது ; బృహస్పతిः॥ స్వాధ్యాయోధ్యాపనంచాపియజనంయాజనంతథా। దానంప్రతిగ్రహశ్చేతి షట్కర్మాణ్యగ్రజన్మనः." "ఇజ్యాధ్యయనదానేచ ప్రజానాంపరిపాలనం। శస్త్రాస్త్రిధారణంసేవాకర్మాణిక్షత్రియస్యతు." "స్వాధ్యాయోయజనందానంపశూనాం పాలనంతథా। కుసీదకృషివాణిజ్యంవైశ్యకర్మాణిసప్తవై." "శౌచంబ్రాహ్మణశిక్షాసత్యమక్రోధఏవచ। శూద్రకర్మతథామంత్రోనమస్కారోప్యచోదితः." =வேதமோதல், ஓதுவித்தல், வேள்வி வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்=தானம் வாங்குதல், இந்த ஆறு கருமங்களும் முதற்பிறந்த வேதியனுக்குச் சிறப்புத் தருமமாம். வேள்விசெய்தல், வேதமோதுதல், ஈதல், உலகோம்புதல், படைக்கலம் பயிலுதல், சேவைசெய்தல், என்னும் கருமங்கள் அரசனுக்குச் சிறப்புத்தருமமாம். வேதமோதல், வேள்விபுரிதல், ஈதல், பசுக்காத்தல், வட்டியீட்டல், உழவுத் தொழில் செய்தல், பண்டமாற்றுதலாகிய வியாபாரம், இவ்வேழு கருமமும் வைசியனுக்குச் சிறப்புத் தருமமாம். சுத்தமுடைமை, அந்தணர் பணிவிரும்புதல், சத்தியம், சினமின்மை, வேதவிதியில்லாத மந்திரம், அவ்வகை நமஸ்காரம், இந்த கருமங்கள் சூத்திரனுக்குச் சிறப்புத் தருமமாம். *

இனி, பகவற்கீதையுள்ளும் இங்ஙனம் கூறப்பட்டது. வருமாறு, " బ్రాహ్మణక్షత్రియవిశాంశూద్రాణాంచపరంతప। కర్మాణిప్రవిభక్తాని స్వభావప్రభవైర్గుణైः॥ " శమోదమస్తపశ్శౌచంక్షాంతిరార్జవమేవచ। జ్ఞానంవిజ్ఞానమాస్తిక్యం

---

* சத்திரம்=ஆயுதம். அத்திரம்=பாணம்=அம்பு. இவ்விரண்டும் படைக்கலம் என்னப்பட்டு, தநுர்வேத மந்திரங்களால் ஆற்றல் பெறும். அரசனுக்குச் சேவையாவது, தேவபிராமண அதிதிகுரு பசுப்பணியாம். வைசியனுக்கு அத்தியயநம் சிலபாகம் என்பது. இதுபிறர்மதம். சூத்திரனுக்கு மந்திரத்தைச் சிந்திக்கும் அதிகாரமும் நமஸ்காரம்செய்யும் அதிகாரமும் சொல்லப்படவில்லை எனறு சிலர் கூறுகின்றனர். அங்ஙனம் அன்று. வேதத்திலுள்ள மந்திரமும், வேதத்துட் கூறிய நமஸ்காரமும், சூத்திரனுக்கு இல்லை என்பது அன்றி அப்பொருளை யுடைய புராணமுதலியவற்றுள்ளமந்திரங்களும் அவைதிக நமஸ்காரமும் அவனுக்கு ஆம். அன்றியும் வைதிகமந்திரநமஸ்காரங்களை தேவதைகளின் பொருட்டுஉபயோகிக்கவேண்டிய விருப்பமுடைய சூத்திரனைவன், ஆசிரியன், புரோகிதன், இருத்துவிக்கு, என்னும் அந்தணர் முன்னிலையால் செய்விக்கக்கூடுமென்று சூத்திர கமலாகரமுதலிய நூல்களால் கூறப்பட்டது. இத்துணையும் பிறர்மதம் கூறியது.

ப்ராஹ்மாங்கர்மஸ்வபாவஜம்॥ "சௌர்யம்தேஜோ த்ருதிர்தாக்ஷ்யம் யுத்தேசாப்யபலாயனம்। தான மீச்வரபாவஶ்ச க்ஷாத்ரங்கர்மஸ்வபாவஜம்। "கிருஷிகோபசுவாணிஜ்யம் வைஶ்யகர்மஸ்வபாவஜம்। " "பரிசர்யாத்மகங்கர்ம சூத்ரஸ்யாபிஸ்வபாவஜம்॥ " = பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் கருமங்கள் அவரவரியற்கைக்குணத்தால் பிரிக்கப்பட்டது. சமம்=அந்தக்கரணம் அடக்கல், தமம்=புறக்கரணங்களை யடக்கல், தவம், சுத்தம், க்ஷாந்தி=பொறுமை, ஆர்ஜவம்=கபடமின்மை, ஞானம், விஞ்ஞானம்=விசேடஞானம், ஆஸ்திக்கியம்=கடவுள், தருமம், மறுமை உண்டென்னுநம்பிக்கை, இவை அந்தணனுக்குரிய இயற்கைத் தருமமாம். சௌரியம் சூரத்தன்மை தேஜஸ=புகழ், திருதி=தைரியம், அல்லது நாங்கல், தாக்ஷியம்=சாமர்த்தியம், போரிற்புறங் கொடாமை, தானம், ஈசுரபாவம்=ஆணையாற்றல், இவை அரசனுக்குரிய இயற்கைத்தருமமாம். உழவு, ஆன்நிரைகாத்தல், வணிகப் பசுவின மேய்த்தல், இம்மூவகையாலும் வாணிபம் செய்தல், இவை வைசியனுக்குரிய இயற்கைத் தருமமாம். பரிசரியை=பணிசெய்து நிற்றல் சூத்திரனுக்குரிய இயற்கைத்தருமமாம். எ-று. *

இவ்வாறு தருமம், பொதுவும் சிறப்புமென இருவகைப்பட்டிருத்தலால், அவற்றுள், இக்கலியுகத்துள் வழங்கும் பொ

* தவம் என்பதனுள் "தப" என்பது பகுதி அதற்கு ஆராய்ச்சி என்பது பொருள். அது நியாகமெனவும் கூறப்படும். ஆகவே யோகம் என்பது பொருள். தவம்-எது, மெய்கூறுதல் எனவும் சொல்தவறுமை எனவும், சார்தருமைடமை எனவும், வேள்வியெனவும், பிரம உபாசனை எனவும் உண்டியொழித்தல் எனவும்; சுருதி கூறுகின்றது.

தேஜஸ என்பது சூட்டினை யுடைய ஒளி அது எவ்வாறு யுக்க முடியாதோ? அவ்வாறு பகைவர்க்கு அரியணையிருத்தல் அரசனுக்கு உரியதாதலால் இலக்கணையால் பராக்கிரமம்=ஆற்றல் என்றும் கூறுகின்றனர்.

பரிசரியை=பணிசெய்தல் எனப்பொதுவகையால் கூறப்பட்டது, அப் பணிசெய்யப்படுவார் இவரென்பது ஈண்டு, குறித்ததில்லை. ஆதலால், இடம் பற்றி உயர்ந்த மூவருணர்க்கும் அவரவர் தரத்தின்படி சூத்திரன் பணிசெய்தல் என்பது. மேற்கூறிய பிரகற்பதி ஸ்மிருதியில் சூத்திரன் அந்தணன்பணி செய்யவேண்டும் என்றமாத்திரையே கூறி ஒழிந்தது. ஆதலால் இக்கதை மொழிக்கும் அதே உரைகூறுவாருமுளர்.

"அபி" எது, உம்மை. இவ்வும்மையால், அரசன் அந்தணனுக்கும், வைசியன்மேலிருவர்க்கும், பணிசெய்யவேண்டுமென்பதும்பெறப்படும்.

துத் தருமத்தை விரைவினர். "కించిత్" என்றதனல் சுருக்குதலை உணர்த்து கின்றது: ஆதலால், சிறிது எனவே பொதுத்தருமத் தைச் சுருக்கிக் கூறவேண்டுமென்று விரைவியவாருகப்பொருள் படுகின்றது. இங்ஙனம் பொருள் கூறுவது ஒத்ததே. ஏனெனில்? மேல் சிறப்புத் தருமங்களை விரித்துக் கூறவேண்டுமென்றுவிரைவு வாராதலின். (கள)

శ్లో॥ చతుర్ణామపివర్ణానాం కర్తవ్యంధర్మకోవిదైః।
బ్రూహిధర్మస్వరూపజ్ఞ సూక్ష్మంస్థూలంచవిస్తరాత్ ॥౧౪॥

என்பது சிறப்புத்தருமங்களை விரைவுதல் கூறுகின்றது.

(இ-ள்.) தருமவடிவ முணர்ந்தஐயரே? நான்கு வருணங்களி லும் தருமங்களை நன்றாக அறிந்தவர்களால் செய்யவேண்டு வனவும் சிறியதும் பெரியதுமாகிய தருமங்களை விரித்துக்கூற வேண்டும். எ-று.

தருமவடிவம் பற்றிய விசாரம்.

தருமசொரூபத்தில், சமயவாதிகளுக்கு சந்தேக முண்டா வதால், அவர்களுக்கு அறிவுறுத்துவது அருமையாம் ஆகலின், அவ்விடத்து, அறிவுடைமைகூறத் தொடங்கி, "ధర్మస్వరూపజ్ఞ" என்றவிசேடணத்தால் விளிக்கப் பட்டது. (விளித்தல் = அழைத் தல்).

தருக்கர்,

தருமம், அதருமம், என்னும் இரண்டினையும் ஆன்மாவின் குணமென்று கூறுவர். என்ன ? "విహితక్రియయాసాధ్యఃపుంసోధర్మోగుణో మతః॥ ప్రతిషిద్ధక్రియాసాధ్యస్తు పుంగుణోధర్మఉచ్యతే." = விதிக்கப்பட்ட கரு மத்தால் அடையத்தக்க புருடனுடைய குணமே தருமம் என்று உணரப்பட்டது. விலக்கிய கருமத்தால் அடையத்தக்க புருட குணமே அதருமம் என்று கூறப்படுகின்றது. என்பர்.

மீமாஞ்சகர்,

"చోదనాలక్షణోర్థోధర్మః" = வேதவாணையையே யிலக்கணமாக வுடையது தருமம் என்று சூத்தரித்தனர்.

அவருள்பாட்டர்,

"द्रव्यक्रियागुणादीनां धर्मत्वंस्थापयिष्यति। तेषामैन्द्रियकत्वेपिनतान्त्री ण्यधर्मता। श्रेयस्साधनतान्यासां नित्यंवेदात्प्रतीयते। तान्त्रीण्यचधर्मत्वं तस्मान्नेन्द्रियगोचरः" = திரவியங்கள், தொழில்கள், குணங்கள், முதலியவை தருமம் என்று நிலைபெறுத்தத் தொடங்குகின்றார். ஆயின் அவை, பொறிகளுக்கு விடயமாவது: தருமம் அப் பொறிகளுக்கு விடயமாகாதது: ஆகவே, அத்திரவிய முதலியன எவ்வாறு தருமமாம். எனவே, அவ்வுருவமாகத் தருமம் இல்லை, ஆனல், அவை, அத் தருமத்திற்குக்கருவி என்று நித்தமாக வேதத்தால் உணர்த்தப் படுகின்றது. அதனல் அத் தருமம் அவ்வடிவமென்று கூறப்பட்டது, ஆதலின், உண்மையை விசாரிக்குமிடத்து தருமம் பொறிகளுக்கு விடயமாகாததாம்.

பிரபாகரர்,

* காரியம், நியோகம் = ஏவல, அபூர்வம் = முன்னில்லாது வருவது. இம்மொழிகளாற் கூறப்பட்டதும், † தாது = பகுதிப் பொருளால் அடையத்தக்கதும்; சுவர்க்க முதலிய பலன்களைப் பெறுதற்கு ஏதுவாகியும், உள்ள ஆன்மகுணமே தருமம்என்று கூறுவர்.

தருமம்பிரிப்பது அருமை.

இக்கருத்தினைமஹாபாரதத்துள், திருஷ்டத்துய்மன்கூறப் பட்டது. வருமாறு, "अधर्मोधर्मइतिच व्यवसायोनशक्यते। कर्मनुस्मद्विधैर्मूढै र्मुह्यन्तेनव्यवसाम्यहं." = இது அறம், இது பாவம், என்று தேறுவது நம்மாலாவதன்று. ஆதலின், ஐய! வேதியரே! நான் அந்த முயற்சிக்குச்செல்வோன் அல்லன். எ-று. காண்க.

---

* அபூர்வம், எது, நியமை செய்வதற்கு முன்னில்லாதிருந்து செய்தபின் உண்டாவது. எனவே, புண்ணியம் பாவம் என்றபடி.

† பகுதிப்பொருளால் அடையத்தக்கது = தாதுவர்த்த சாத்தியம். எ-து, "யஜேத" எது, விதிப்பொருட்டாகியவினைச்சொல், அதனுள் "யஜ" என்பது தாது. அதன்பொருள் "யஜனம்" = வேள்வி. அதனல் அடையத்தக்கது. எனவே, வேதத்துள் விதிக்கப்பட்ட விதிப்பொருள் வினைச்சொற் பகுதிக்கு யாது பொருளோ? அதுதருமம் = வேதவிதியாற் செய்யப்பட்ட கருமத்தா லுண்டாவது தருமம். என்றபடி.

இப்படிப்பட்ட அருமுயற்சியால் அடையத்தக்க தருமத்தையும் மாந்திற்குத் துன்பம் இல்லாமல் அறிந்து கொள்ளக் கூடும் என்பதனுள்ளும் ஒரு அறிவுடைமையுள்ளது என்றுணர்க.

தருமவடிவம்.

விசுவாமித்திரர். அந்த அறத்தின் வடிவத்தைக் கூறினர். என்னை? "యమార్యాఃక్రియమాణంతు శంసంత్యాగమవేదినః। సధర్మోయంఃగర్హ్యంతె తమధర్మంప్రచక్షతే। ఈదృశస్యహిధర్మస్య స్వరూపంవ్యాకులోనతు। జానాతీత్యస్తితత్రాపి ప్రాపీణ్యంధర్మశాలినాం." ஆகமங்களையுணர்ந்த ஆரியர்கள், செய்து கொண்டிருக்கப்பட்டதாகிய. எதனைப் புகழ்கின்றார்களோ? அதனைத் தருமமாகவும், எதனை இகழ்கின்றார்களோ? அதனை அதருமமாகவும் கூறுகின்றனர். இப்படிப்பட்ட தருமத்தின் வடிவத்தை மனந்தெளிந்து கவலையற்று இராதவன் அறியமாட்டான். அங்ஙனம் அரிதில் அடையத்தக்க விடயங்களிலும் புண்ணியர்களானவர்க்கு உணர்ச்சித் திறம் உண்டு. எ—று. காண்க.

மறுக்கூற்று.

மறுவானவர், "విద్వద్భిస్సెవితస్సద్భి ర్నిత్యమద్వేషరాగిభిః। హృదయెనాభ్యనుజ్ఞాతో యోధర్మస్తంనిబోధత." = வித்துவான்களும் காமம் வெகுளி யில்லாதவர்களும் ஆகிய சற்புருடர்களால் தினந்தோறும் சேவிக்கப் படுவதாகியும், மனம் ஒத்துக்கட்டளை யிடப்பட்டதாகியும், உள்ள தருமம் எதுவோ? அதனைத் தெரிந்து கொள்வீர்களாக. எ—று. காண்க.

மேல் விழு.

அங்ஙனமாயின், இங்ஙனம் கூறியதனால் தருமம் இதுவெனத்துணிவு பெறக்கூறியவாறு இல்லையாயிற்று. அவ்வாறே, விசுவாமித்திரர் மறுவாக்கியங்களால், தருமத்தின் சாமான்யமான வடிவந்தோற்றுவ தல்லாமல், பொருள், தொழில், குணமுதலிய வடிவமாகிய விசேடம் தோற்றுவதில்லை. அன்றியும், வாதிகள், இவ்விடயத்தில் ஒருவர்க்கொருவர் ஐயத்தை அடைகின்றார்கள் என்று உம்மாலேயே கூறப்பட்டது. இக்கருத்தைப் பற்றியே மஹாபாரதத்து, அரசநீதியுள்ளும் கூறப்பட்டது. "నకల్పాఃనకపిలో నకృష్ణోనతులోహితః। అణీయాన్క్షురధారాయాఃకోధర్మంవక్తుమర్హతి." =

கலனவ வண்ணம் அன்று ; புகர் வண்ணம் அன்று ; கருவண்ணம் அன்று ; செவ்வண்ணம் அன்று. மயிர்வினை நன்மயிர்க்கொளியும் கருவிக் கூர்மையினும் நுண்ணியதாய், உள்ள தருமத்தை வாயாற் கூறத்தக்கவன்யாவன் ஒருவன் இருக்கின்றன். எ-று. என்னெனில்?

விடை.

இதுகுற்றமன்று. சொல்லப்பட்ட வாக்கியங்களில், அதருமத்திற்கு வேறுகிய ஒருவுருவ விசேடம் வெளிபெறத் தோற்றுதலின். சமயவாதிகளது வாதவுரைகள் சமாதானம் கூறுவதற்குக் கூடுமானதாக விருக்கின்றது. சுவர்க்கமுதலிய வற்றிற்கு ஏதுவாயும், நூல் ஒன்றிலேயே துணியப்படுவதாயும், உள்ள பெரிய தனுடைய தருமதரத்திலை யாவர்க்கும் சம்மதம் ஆதலின்.

அவ்வதிசயம், இருவகைப்படும். பொருண்முதலியவைகளினிடத்துள்ளது; ஆன்மாவினிடத்துள்ளது; என.

அவற்றுள், ஆன்மாவி னிடத்துள்ள அதிசயத்தின் கண் கண்டபயனுக்கு ஏதுவாகுந் தாழுடைமையாலும், பயனுண்டாகுறவுரையில், நெடுங்காலமும் அடுத்திருத்தலினாலும், அதனைக் கூறவேண்டி, அறிவின்குணமாயும், அபூர்வவாசகத்துக்கு வாச்சியமாயும் உள்ளது தருமம் என்று, தருக்கரும் பிரபாகரரும் கூறினர்.

கூறப்பட்ட அபூர்வத்தின் தோற்றகாலவரையில் இருப்பதற்கு உடன்பட்டு, அதற்குக் கருவியாகிய பொருண்முதலியவற்றினுடைய அதிசயம் தருமமென்று கூறுவர்பாட்டர். இத்தருத்து பிரமவாதிகளுக்கும் விரோதமின்று. என்னை? "व्यवहारेभट्टनयः"=வழக்கிலே பாட்டர் நியாயம். என்று உடன்படுதலின்.

இனி இங்ஙனமாக, தருமவடிவம் தோற்றப்படுதலின், கவலையில்லாமையால் அதனை உணர்ந்தவுணதலே யாம். நான்கு வருணங்களுள்ளும், தருமமுணர்ந்த அறிஞரும் சிறப்புத் தருமங்களை உணர்ந்தவருமானவர்களால் செய்யத்தக்கனவற்றை விரித்துக்கூறுக, எனில்?

அங்ஙனம் செய்யத்தக்கனவும் இருவகைப்படும்: தூலம் எனவும், சூக்குமம் எனவும்.

தூலதருமம்,

மந்த அறிவினை யுடையவர்களாலும் எளிதில் உணரப் படுகின்ற சௌசம், ஆசமநம், சந்தியாவந்தநம் முதலியன, தூல தருமமாம்.

சூக்குமதருமம்,

சாத்திரமுடிபுணர்ந்த அறிஞர்களாலேயே அறிவதற்கு உரி யதாயும், ஏனையரது அறிவுக்கு அதருமம் என்று கொள்ளத்தக்க தாயும் உள்ள துரௌபதை விவாகம் முதலியன சூக்குமதரும மாம். அங்ஙனம் மஹாபாரதத்துள், துருபதராஜன் ஒருமாதுக்கு பலநாயகர் உண்டாயிருப்பது உலகவழக்கிற்கும் வேதவழக்கிற் கும் மாறுனது என்று உட்கொண்டு கூறினன்.

உலகவழக்கு.

அவற்றுள், உலகவழக்குக்கு மாறுபாடு என்பது யாவரு முணர்ந்தபடியாம். விலங்குயிர்களிலும் ஒருபெற்றத்தின் விடய மாக (பெற்றம்=பசு) இரண்டு ஏற்றின் (இடபம்) போர்வெளிப் படலால் என்றுணர்க.

வேதவழக்கு.

வேதத்துள்ளும், இங்ஙனமுள்ளதாகக் காணப்படுகின்றது. என்னை? "ఏకస్యబహ్వ్యో జాయాభవంతినైకస్యాబహవస్స్యుఃపతయఇతి యదేక స్మిన్ యూపేద్వేరశనేపరివ్యయతి। తస్మాదేకోద్వేజాయేపిందతే। యన్నైకాగ్ంరశనాంద్వ యోర్యూపయోఃపరివ్యయతి। తస్మాన్నైకాద్వేపతీవిందతే. = ஒருபுருடனுக்குப் பலமனைவியர் உளவாகின்றார்கள். ஒருமாதுக்கு பலநாயகர் உண் டாதல் இல்லை. எந்தகாரணத்தினல்ஒருயூபத்தம்பத்தில், இரண்டு தாம்புகள் = கயிறு, சுற்றப்படுவனவோ? அதனல், ஒருவன் இருமனைவியரை அநுபவிக்கின்றான். எந்த காரணத்தினல், ஒரு தாம்பினை இரண்டு யூபத்தம்பத்தில். சுற்றுவதில்லையோ? அத னல், ஒருத்தி இரண்டுபதிகளை = நாயகரை அநுபவிக்க மாட் டாள். என்று. காண்க.

தருமராஜன்கூறியது.

அவ்விடயத்தில், துருபதராஜனுடையமமபக்கத்தையொழிப் பதற்கு, உதிட்டிரன் கூறுகின்றனர். அதுவருமாறு, பாரதம்,

"లోకవేదవిరుద్ధోయం ధర్మోధర్మవతాంవర! సూక్ష్మోధర్మోమహారాజ నాస్యద్ర్యోగతం వయం." = தருமத்தை யுணர்ந்தவருள் சிறந்தது துபதாராஜனே! இத் தருமம் உலகத்திற்கும் வேதத்திற்கும் மூணையுள்ளது. ஆயின் தருமம் சூக்குமமானதாயிருத்தலால், இதனை ஓழுங்குற்ற யாம் அறியோம். என்று. துரோபதைக்குப்பலராயகர் உண்டாதல் தருமம் என்பதற்குத் தக்க நியாயப்பிரமாணங்கள் அவ்விடத்து விரித்துக் கூறப்பட்டது.

தருமவியாதோபாக்கியானம்.

கல்விகற்பதினும் தாய்தந்தைகளை உபசரிப்பது சிறந்தது. கல்விகல்லாமலே அவர்கள் பணிவிடை ஒன்றிலேயே ஒருவனுக்குஞானமுண்டாமாதலின் - என்று தருமத்தின் சூட்பமானது தேற்றுவிக்கப்பட்டது. என்னை? బహుధాదృశ్యతేధర్మ సూక్ష్మరూపవద్వ్యవస్థిత." = அந்தணரிற் சிறந்தோனே! சூக்குமதருமமே மிகுதியாகக் காணப்படுகின்றது. என்று. அறிக.

இங்ஙனமாக, தூலதருமமும், சூக்குமதருமமும், உண்டாயிருத்தலால், அவ்விரண்டினைப்பற்றி வியாசர் விளைவியது தருதியாகவே யிருக்கின்றது. (கூ)

శ్లో॥ వ్యాసవాక్యావసానేతు మునిముఖ్యోపరాశరః।
ధర్మస్యనిర్ణయంప్రాహ సూక్ష్మంస్థూలంచవస్తుతః ॥౧౯॥

என்பது, கூறப்பட்ட விளை, இனி, கூறப்படும் விளை என்னும் மிரண்டினுடைய மயக்கம் இல்லாமைக்கு ஓர்ந்த விளையைத்தேற்றுவிக்கின்றது. விளை = மறுமொழி.

(இ-ள்.) வியாசர் வாக்கியத்தின் முடிவிலே, முனிவரிற்சிறந்த பராசரனர், சூக்குமமும் தூலமும் ஆகிய தரும நிச்சயத்தை விரித்துக் கூறினர். என்று.

"ముని ముఖ్యః" என்றவிசேடணைத்தால், சூக்குமநிச்சய விளக்கம் குறிக்கப்பட்டது.

ஆயின், இந்த சுலோகம் யார் கூறியது? வியாசர் கூற்றல்ல, வினவல்லாமையின். பராசரனர தாமன்று; விளை அல்லாமையின். யாவர் கூற்றுமன்றிச் சிறுபொருளாகக்கூறப்பட்டுள்ளதன்றே? மூதல் சுலோகத்துள்ளும். இந்த ஆராய்ச்சி ஒக்குமே. இங்ஙன

மானல், இதுபோன்றன எல்லாவற்றுள்ளும் பரிகாரம் தேடத் தக்கதாக விருக்கின்றது. எனின்?

கூறுதும். பராசரரோ எதிர்காலத்து மாணக்கர் அறிவுக்கு உடன்பாடுஉண்டாம்பொருட்டு, தமது சரித்திரமுதலியவற்றைத் தெரிவிக்கத்தக்க இவ்வகைய சுலோகங்களைக் கூறினர் என்று உணர்கவென்க. பாரதம் முதலியவற்றுள் வியாசர் சரித்திர சுலோகங்களை வியாசரோ கூறியதாக யாவரும் உடன்பட்டு மேற் கொண்டிருத்தலின். (ககூ)

శ్లో॥ శ్రుణుపుత్ర ప్రవక్ష్యామి శ్రుణ్వంతుమునయస్తథా ॥౧౯౫॥

என்பது, கூறப்படும் தரும இரகசியத்தை உணர்ந்துகொள் ளுதற் பொருட்டு கவலையற்றிருருமை மனத்தோடு இருத்தல் வேண்டும் என்பதனை யுணர்த்துகின்றது.

(இ-ள்.) குமாரனே! நன்றுகச் சொல்லுவன்கேள். முனிவர் களே! அவ்வாறே கேட்பீராக. எ-று.

இவ்விடத்து, முனிவர்களை விளித்தலானே மகனையழைத்த லும் அமையும்; ஆயினும் சம்பிரதாயம்=மரபு ஒழுக்கம் உண்டா தல் உடைமையின் அவ்விளி மிகுத்து வந்தது. (ககூ)

శ్లో॥ కల్పేకల్పేషయోత్పత్త్యా బ్రహ్మాఽష్ణుమహేశ్వరాః॥
శ్రుతిస్మృతిసమాచార నిర్ణేతారశ్చసర్వదా ॥౨౦౫॥

என்பது, தருமத்தில், ஊக்கம் விசேடமாதற் பொருட்டு, தருமத்தி னுடைய பிரவாகரூபத்தால் அநாதித் தன்மையைக் கூறுவதற்கு தருமசாத்திரத்தின் கருத்தர்களுடைய தோற்றவொடுக் கங்களைச் சுருக்கிக் கூறுகின்றது.

(இ-ள்.) கற்பங்கள்தோறும், தோற்ற வொடுக்கங்களால், பிரமா விஷ்ணு உருத்திரன் என்னும் மூவரும் எப்பொழுதும் சுருதிஸ் மிருதிகளின் ஒத்தவொழுக்கங்களைவிதிப்பவர்களாகின்றார்கள். எ-று.

"కల్పః" என்பது இன்னகாலத்தில் உலகம் படைக்கப் படு கின்றது: என்னும் விற்பத்தியால், சிருட்டி முதற்கொண்டு, பிர ளயத் தொடக்கம் வரையிலும் இவ்வுலகத்தோடு பிளவு படாது கலந்து நிற்கும் காலம். எ-று.

கற்பபேதம்.

அக்கற்பம், இருவகைப்படும். மஹாகற்பம்-எம், அவாந்தரகற்பம்-எனவும். அவற்றுள், மூலப்பகுதியினின்றும் உண்டாம் கிருட்டிமுதல் பிரமாவின் ஆயுள்வரையும் ஏற்பட்டுள்ளகாலம், மஹா கற்பமாம். சதுமுகப்பிரமனுடைய ஒருநாளைக்குரியகாலம், அவாந்தரகற்பம் எனப்படும். இது கூர்மபுராணத்துட் கூறப்பட்டது. வருமாறு. "ब्राह्ममेकमहर्यत्तत्कल्प स्तावतीरात्रिरुच्यते। चतुर्युगसहस्रंतत्कल्पंब्रह्मदिनंविदुः।" = பிரமனது ஒருபகல், ஒருகற்பமாம். இரவுமவ்வளவிற்றே என்று கூறப்படுகின்றது. அந்த * கற்பம் ஆயிரம் சதுர்யுகமாக அறிந்தோர் கூறுவர். எறு. இதுவே அவாந்தர கற்பம். இனி † மஹாகற்பம், பிரமனளவையால் நூறு வருட அளவை யுடையது: என்று புராணமுதலியவற்றுள் கூறப்பட்டது.

---

* சூரியன் மேட்டராசிக்கு வந்தமுதல் மறுபடியும் மீனராசியை விடுகிறவரையில், (கூசுரு) நாளும், (கரு) நாழிகையும், (கூக) விநாடியும், (கூக) பரையும், (உசு) தற்பரையும் உடையகாலம் ஒருசௌரவருடம் என்றுசொல்லப்படும், இவ்வருடம். பதினேழுலக்ஷத்து இருபத்து எண்ணாயிரம் கொண்டது ஒரு கிருதயுகம். பன்னிரண்டுலக்ஷத்துத் தொன்ணூற்றாறாயிரம் கொண்டது திரேதாயுகம். எட்டுலக்ஷத்து அறுபத்துநாலாயிரம்கொண்டது துவாபரயுகம். நாலுலக்ஷத்து மூப்பத்தீராயிரம் கொண்டது கலியுகம். இந நாலுயுகமும் கூடியவருடம் நாற்பத்து மூன்றுலக்ஷத்து இருபதாயிரமாம். இது ஒருமஹாயுகமென்று சொல்லப்படும். இது ஆயிரங்கொண்டது பிரமாவுக்கு ஒருபகல். அந்த சகூஉ,000,000 வருடம். அவாந்தரகற்பம். எனவே ஒரு கால்படைக்கப்பட்ட உலகம் அந்நாளோடு காணப்பட்டு நிற்கும். பின்சிருட்டி கருத்தாவுக்கு அத்தனைகாலம் இரவாதலால், உலகந்தோற்றுவ தின்மையின், அதனை அவாந்தரப்பிரளய மென்று சொல்லுவர். இந்த அவாந்தரகற்பமும் பிரளயமும்கூடி, அப்பிரமாவுக்கு இரவும்பகலுமான ஒருநாளாம்.

† பிரமனளவையால் அவன் ஒருதினத்திற்கு அசுகூ,000,000 மனிதர் வருடம் ஆகின்றது. அந்தநாள், கூசுரு பிரமாவுக்கு ஒரு ஸாவன வருடமாம் அவ்வருடம் நூறுகொண்டது பிரமாவாயுள். அது மனிதர் அளவையால். மூன்றுபதுமம் ஒரு மஹாகருவம் ஒருகருவம் நாலுஅற்புதவருடமாகின்றன. இதற்கு மஹாகற்பமென்றுபேர். இதனையே பிரமகற்பம் என்பர். பின் அத்தனை காலம் மஹாப்பிரளயம் என்று சொல்லப்படும். இவ்விவரம் சூரிய சித்தாந்தமுதலியவற்றிலும் புராணங்களாலும் கூறப்பட்டது.

மஹாகாலகற்பங்கள் அளவின்மை.

"కల్పకోటి" என்று இரட்டித்தது அளவில்லை என்னும் கலப்பினைக் குறித்தற்கு. இதனால் இருவகைப்பட்ட கற்பத்திற்கும் இத்துணை யென்னும் எண்ணின் வரையறையில்லாமை கூறவேண்டிய வாறு யிற்று, இங்ஙனம் இலிங்கபுராணத்துள்ளும் கூறப்பட்டது. அதுவரு மாறு "ఏవంకల్పాస్త్వసంఖ్యాతా బ్రహ్మణోవ్యక్తజన్మనః। కోటికోటినహాన్యాణి కల్పానాం మునిసత్తమాः"=ஓய்! முநிசிரோட்டமே! இவ்வாறுக * அவ்வியத்த தத்துவத்தினின்றும்பிறந்த சதுர்முகப்பிரமனுடையகற்பங்கள் எண்ணிறந்து உள்ளன. கோடிகளாற் பெருக்கி அத்தொகையினை ஆயிரத் தொகையாற் பெருக்கினாலும் கற்பங்கள் அளவுபடாவாம். எ-று.

பிரளயபேதம்.

இனி, அக்கற்பங்களுள், இவ்விரண்டுகற்பத்தின்நடுவே ஒவ் வொரு ஒடுக்கம் உண்டாகின்றது. அவ்வொடுக்கம்நால்வகை. நித் தம், நைமித்திகம், பிராகிருத்திகம், ஆத்தியந்திகம், என. இதுகூர்ம புராணத்துட் கூறப்பட்டது. வருமாறு. "నిత్యోనైమిత్తికశ్చైవ ప్రాకృతాత్యంతికాతథా। చతుర్థాయంపురాణేషు ప్రోచ్యతేప్రతిసంచరః॥ యోయంసందృశ్యతే నిత్యంలోకేభూతక్షయస్త్విహ। * నిత్యస్సంకీర్త్యతేనామ్నా మునిభిస్తత్త్వ ప్రతిసంచరః॥ బ్రాహ్మో † నైమిత్తికోనామ కల్పాంతే యోభవిష్యతి। ‡ మహదాదివిశేషాంతంయదాసంయాతి సంక్షయం॥ ప్రాకృతస్తప్రతిసర్గోయం ప్రోచ్యతేకాలచింతకైः। జ్ఞాన ॥ దాత్యంతికస్తప్రోక్తో యోగినస్తపరమాత్మని." நித்தியம், நைமித்திகம், பிராகிருத்திகம்,

---

* அவ்வியத்த தத்துவமென்பது நாராயணன் என்று பகவற்கீதை சங் கரபாஷியத்துட் கூறப்பட்டது.

---

* மரணமே நித்தியப் பிரளயம். பிறந்தவன் இறப்பது நியதியாதலின்.

† பிரமனுடைய பகல், அவன் ஆயுள் முடிந்தது, என்னும் நிமித்தத்தினால் உண்டாவது நைமித்திகம்.

‡ மகத்தத்துவம் - எது. சதுமுகப்பிரமன் என்று, உபநிடதங்க ளால் அறியப்படுகின்றது. பரமாணுக்கள்முதலிய நித்தப்பொருள்களில் இருந்து, ஒன்றற்கொன்று வேறுபாடுகளையுணர்த்துவதற்கு ஏதுவாக இருக்கும் விசேடங் கள் பலவாம் : என்று தருக்கர் கூறுவர்.

|| பிரமத்தினிடத்தில் சிவனுக்கு ஐக்கியமுண்டானபின் கடலிற் கலந்த யாற்று வெள்ளநீர், அக்கடலில் வேறுபாடின்றி நிற்பதுபோல பிரமத்திற் கும் சிவனுக்கும் அபேதம்பட நிற்பது. எனவே பேதமுழுவதும் ஒழிந்தமை என்றபடி. இது அத்துவிதிகள் கூற்று.

ஆத்தியந்திகம், என்ற இப்பிரளயங்கள் புராணங்களில் நான்கு வகையாகக் கூறப்பட்டன. அவற்றுள், இவ்வுலகத்தில், நித்தியமாகக் காணப்பட்டுவருகிற சீவகோடிகளது சகஜமே நித்தியப் பிரளய மென்று பெரியாரால் கூறப்பட்டது. பிரமனுடையகற்பமுடிவில், உண்டாகின்ற ஒடுக்கம் எதுவோ? அதுநைமித்திகப்பிரளயமாம். மகத்தத்துவமுதல் விசேட பரியந்தம் எப்போது ஒடுக்கத்தை அடைகின்றதோ? அதுபிராகிருதப் பிரளயமென்றுகாலமுணர்ந்த பெரியரால் கூறப்படுகின்றது. நித்தவஸ்தானத்தால், யோகிக்குப்பிரமத்தினிடத்தில் உண்டாகும் ஒடுக்கம் ஆத்தியந்திகம் என்னப்படும். எ-று. காண்க.

பிராகிருதப்பிரளயவிசாரம்.

அவற்றுள் பிராகிருதப் பிரளயத்தை காந்தபுராணம், ரூதசங்கிதையில், இங்ஙனமாகக் கூறியது, என்னை? "த்ரிசத்தஷ்டிபிர்கல்பைர்ப்ரஹ்மணோவர்ஷமீரிதம்। வர்ஷாணாம்யச்சதந்தஸ்யதத்பராக்ஷ்யமிஹோச்யதே। ப்ரஹ்மணோ தேமுனிஶ்ரேஷ்டாமாயாயாம்லீயதேஜகத்। ததாவிஷ்ணுஶ்சருத்ரஶ்சப்ரக்ருதௌவிலயம்கதா। ப்ரஹ்மணஶ்சததாவிஷ்ணோ ஸ்ததாருத்ரஸ்யசுவ்ரத। மூர்த்தயோவிவிதாஸ்தஸ்யஷுகாரணேஷுலயம்யயுஃ। மாயாசப்ரளயேகாலேபரஸ்மிந்பரமேஶ்வரி। ஸத்யாபோதசுகானந்தே ப்ரஹ்மாரூபாதிஸம்ஜ்ஞிதே." = மூன்றாற்று அறுபது கற்பங்களால் பிரமாவுக்கு ஒருவருடம் கூறப்பட்டது. அவனது நூறுவருடம் பரகாலம் என்னப்படும். ஓ! முனிவரிற் சிறந்தவர்களே! பிரமாவினுடையமுடிவிலே, உலகம் மாயையில் ஒடுங்கும். அவ்வாறே, விஷ்ணுவும் உருத்திரரும் மூலப்பகுதியில் ஒடுங்குவர். அவ்வாறே, பிரமவிஷ்ணுஉருத்திரர்களுடைய பலவகைப்பட்டவடிவமூர்த்திகளும் தத்தம் காரணத்துள் ஒடுக்கத்தையடைவர். அந்த மாயையும், பிரளயகாலத்தில் பரமனும், பிரம உருத்திரர் என்னும் பெயரையுடையவரும், சத்தியவடிவரும், ஞானமே திருமேனியாகவுடையவரும் இன்பவுருவரும், அநந்தருமாகிய பரமேச்சுரனிடத்தில் ஒடுங்கும். எ-று. அநந்தர்=நாசமில்லாதவர்.

இங்கு பிரம உருத்திரவடிவமொன்று கூறியது சங்காரகாரணனே சிருட்டிகாரணன் என்றகருத்து. இதனைச் சிவஞான போதம் - "அவனவளது" என்னுமுதற் சூத்திரத்துட்காண்க:

இன்னும் கூர்மபுராணத்துள்ளும், பிரமவிஷ்ணு முதலியோர் இலயத்தை அடைந்தபின்பு, பஞ்சபூதலயங்கூறப்பட்டது.

வருமாறு, "சம்ஹிதேஷ்வததேவேஷு ப்ரஹ்மவிஷ்ணுபினாகிஷு। குணைரசேஷைஸ்துபிருதிவீ விலயம் யாதிவாரிஷு। தத்வாகிதத்த்வம்சகுணம் க்ரஸதேசாவ்யவாஹனः। தேஜஸ்துகுணசம்யுக்தம் வாயூசம்யாதிசம்க்ஷயம்। ஆகாசேசகுணோவாயுஸ்ப்ரளயம்யாதிநிச்வபுத்। பூதாதௌ சததாகாஷோலீயதேகுணசம்யுதः। இந்த்ரியாணிசசர்வாணி தைஜனேயாம்திசம்க்ஷயம்। வைகாரிகஸ்தைஜசஸ்சபூதாதிச்சேதிசத்தமாः। த்ரிவிதோயமஹம்காரோமஹதி ப்ரளயம்வ்ரஜேத்। மஹம்தமேபிஸ்ருஹிதம் ப்ரகிருதிஷ்டசதேத்விஜாः."=பிரம விஷ்ணு உருத்திரர்கள் தேவர்கள் இலயத்தை அடைந்தபின்பு, பிரிதிவிபூதம் தனது எல்லாக்குணத்தோடும்நீரில்ஒடுங்கும், அச்சலபூதத்தைஅதன்குணத் தோடு அக்கினி உண்டுவிடும். அந்தத்தீ தன்னுடைய குணத்தோடு வாயுவில் மூடினவை அடையும். உலகத்தைத் தாங்கும் அவ் வாயுதன் குணத்தோடு ஆகாயத்தில் அடங்கியொழியும். அந்த ஆகாயம் தன்குணத்தோடு பூதாதியில் எனவே அகங்காரதத்து வத்தில் ஒடுங்கும். எல்லா இந்திரியங்களும், தைஜசத்தில் அடங் கும். வைகாரிகம். எனவும், தைஜசம் எனவும், பூதாதி எனவும் மூவகைப் பட்ட அகங்காரங்களும் மகத்தத்துவத்தில் ஒடுங்கும். இவற்றோடு கூடியிருக்கும் மகத்தத்துவத்தை மூலப்பகுதி விழுங் கும். சாதுக்களாகிய அந்தணர்களே! கேட்பீராக. எ-று. இவ் வாறே விஷ்ணுபுராணம் மூதலியவற்றுள்ளும் பிராகிருதப் பிர ளயமும் கூறப்பட்டன. அதனை யங்கு காண்க.

இங்ஙனமாகப்பிரளயத்தைஉடன்பட்டு,பகவர்-வாதராயண சாரியர் பிரமசூத்திரத்துள்ளுங்கூறினர். வருமாறு, "விபர்யயேணக்ர மோதஉபபத்யதேச." = "அதः" = இச்சிருட்டி முறையினும் "விபர்ய யேண"=மூரணைக "க்ரமः."=பிரளயக்கிரமம் உடன்படத் தக்கது. அவ்விடத்துள்ள மூன்னைய சூத்திரங்களில், சிருட்டி முறையை விசாரஞ் செய்து இருப்பதால், "அதः" என்றமொழி அதனை நோக்கு கின்றது. "உபபத்யதேச."=இம்முறைமை நியாய நிறை வையுடையது அன்றே, எ-று. உபாதாநகாரணம்=மூதற்காரண மாகிய மண்ணிருக்கச்சிதேயும் காரியமாகிய குடம்கெடுதலையடை தலின். சிருட்டி முறையே ஒடுக்கத்திற்கும் ஆதரிக்கப்படுமே யாதலால், குடமிருக்கும் போதே மண் அழியவேண்டிவரும். அவ் வாறு ஓரிடத்தும் காணப்படுவதில்லை. ஆதலின், ஒடுக்கத்திற்கு விபரீத முறையென்று கூறியது நியாய நிறைவையுடையதாக விருக்கின்றது.

ஆற்றேல், சிருட்டியில், பிரமம்முதல் இத்தவுடம்பு வரையிலும் முறைகூறுவார் ஆதலின், ஒடுக்கத்தில் அதற்குமாறாக நமது உடம்புமுதல் பிரமம்வரையிலும் ஒடுக்கமுறைகூறுவது, ஒத்தபடியாம். பிராகிருதப் பிரளயத்திலாதலோ? பிராகிருத வரையிலும் கூறவேண்டும் எனில்?

இனி, உபநிடதத்துட்கூறிய உலகவொடுக்கம்.

இதற்குவிடை ஒன்றாகக் கூறப்படும். பிரமத்தினேதே பருதித் தன்மையாமாதலின். அவ்வாறு, இருக்கு வேத உபநிடதத்திலும் பிரமமே உலகத்திற்குப் பிராகிருதி என்று கூறப்படுகின்றது. வருமாறு, ஐதரேய உபநிடதம். "ஆத்மாவாஇதமேகஏவாக்ரஆஸீன்நான்யத்கிஞ்சன மிஷத் - ஸஈக்ஷதலோகான்நுநிஜாஇதிஸஇமாம்ஸ்லோகான்ஸ்ருஜத இதி." = முதற்கண் இங்கே ஆன்மா ஒருவனுகவே இருந்தான் வேறொன்று ஒருபொருளும் தோற்றியதில்லை. அவ்வான்மா உலகங்களைச் சிருட்டிக்க வேண்டுமென்று நோக்கினான். அவன் இவ்வுலகங்களைப் படைத்தான். என-று.

ஆயின், சுவேதாசுவதரோபநிடதத்தில் மாயைக்கே பிராகிருதித்தன்மையும் அதற்குப்பிரமத்தின் அதீனயுடைமையும், கூறப்படுகின்றது. வருமாறு. "மாயாந்துப்ரக்ருதிம்விந்த்யான்மாயினந்துமஹேச்வரம்." = பிராகிருதியை மாயையாகவும், மகேசுவரனை மாயைஉடையவனாகவும் அறியத்தக்கது. என-று. மாயன் = மாயையை உடையவன். * என்றதென்னெனில்?

இது தோஷமன்று. மாயை பிரமத்தின் சத்தியாதலால். சத்தியையுடையவளாயினும் அவ்வான்மாவினது பிராகிருதித்தன்மை இன்றியமையாது = அவசியம் ஆதலாலும், தெய்க்க வல்லதியினிடத்து, தாஹரகன் என்னும் விவகாரமுண்டாதல் காண்கையாலும் என்க. மாயை ஆன்மாவிற்குச் சத்தியாயிருப்பது அதேதபநிடதத்திற்கூறப்பட்டது. வருமாறு "தேத்யானயோகானுகதாமபச்யன் - தேவாத்மசக்திம்ஸ்வகுணைர்நிகூடாம்." = தியானயோகங்களிற் கூடினவர்கள், தன்

---

* இவ்வாறு பிராகிருதிவேறு ஆன்மாவேறு என்று கூறியிருத்தலால், ஆன்மாவே பிராகிருதி யென்று எவ்வாறு கூறப்படும் என்பது. மேலைய வினாவின்கருத்து.

குணத்தோடும் அடங்கியிருக்கின்ற கடவுளுடைய சத்தியைப் பார்த்தார்கள். எ-று. காண்க.

இங்ஙனம் வாதராயண சாரியரும், பிரமசூத்திரம், முதல் அத்தியாயத்தின் ஈற்றுக் கயலாகிய அதிகரணத்தில், மாயையோடு கூடியிருக்கும் பிரமத்தின் பகுதித்தன்மை=முதற்காரணமாதல், நிமித்தத்தன்மை=நிமித்தகாரணமாதல், என்னும் இருவகைக் காரணமும் குறித்திருக்கின்றனர். (எனவே, பிரமமே இருவகைக்காரணம் என்பதுகருத்து.) என்னெனின்? குயவனைப் போலச்சேதநன் ஆதலால், பிரமம், நிமித்தகாரணமாம். குடத்தினிடத்தில் மண்ணைப்போல, காரிய சாமாநியத்தில் பிரமம் ஒத்துநிற்றலாற் பகுதியாகின்றது.

உலகத்தினிடத்தில் பிரமம், மாயாவிசிட்டமாய் தெரியவருகின்ற தல்லவா? அவ்விடத்து, சச்சிதாநந்தத்துவம்=மெய், அறிவு, இன்பமாதல் பிரமத்துக்கு இலக்கணம். விகாரியாதல், மாயைக்கிலக்கணம். இவ்விரண்டனையும் உலகத்தின் கண்ணே பார்க்கின்றனம். எங்ஙனமெனில்? "ஷட்ஸ்தி"=குட முள்ளது, என்புழி, சத்துரூபத்துவம் = உள்ளவடிவைக் காண்கின்றோம். "ஷட்ோ்தி" குடம்தோன்றுகின்றது; அல்லது, பிரகாசிக்கின்றது. எனவே, தெரியவருகின்றது. என்புழி, சித்துரூபத்துவம்=அறிவுருவாதலைப் பார்க்கின்றோம். "ஷட்ப்ரியஃ"=குடம் விருப்பமானது. என்புழி, ஆநந்தரூபத்துவத்தைப் பார்க்கின்றனம். "ஷடஉத்பத்யதேவினஶ்யதிச" = குடம் பிறக்கின்றது; நாசத்தையும் அடைகின்றது, என்புழி, விகாரத்தன்மையைக்காண்கின்றோம். இக்கருத்து, உக்தாநுபபத்தியோப நிடதத்தில், கூறப்படுகின்றது. வருமாறு, "ஸச்சிதாநஂதரூபமிதஂஸர்வஂதத்ஸதிசிதீத்஥ஂப்ரகாஶதேசேத்யதி." = "இதஂ." = இது. எனவே காணப்படுகின்ற காட்சி உலகம். "இத்஥ஂ." = இவ்வாறு. எனவே, தோற்ற ஒடுக்கமுதலிய விகாரமுள்ளது. "ஸர்வஂ." = எல்லாம். சச்சிதாநந்த ரூபமானது. எவ்வாறெனில்? உள்ளதுள்ளது; என்றும், அல்லது. இருக்கின்றதிருக்கின்றது என்றும். சித்தினிடத்தில் பிரகாசிக்கின்றது. எ-று. காண்க.

ஆதலால், உபநிடதசம்மதமாகிய மதத்திற் பிரமமே மூலப்பகுதியாதலாலும், ஸ்மிருதிகளும், புராணங்களும், சுருதிகளைத்

தொடர்ந்துநிற்றலாலும், இங்ஙனம் கூறப்பட்டது. இவ்விடத்தில், பிரமமுதல் எல்லாப் பிரபஞ்சத்தினுடைய ஒடுக்கமும் சொல்ல வேண்டி வந்ததென்று உணரத்தக்கது.

வைசேடிகர் முதலிய மதங்களில், கூறப்பட்டுள்ள ஒடுக்கம் ஈண்டு எம்மால் விரித்துக்கூறப்படுவதில்லை. ஏனெனில்? அவை, மானிடர் புந்திவடிவமாகிய தருக்கமே மூலமாகவுண்டாயிருந்தலால் விசேஷங்கள், அவற்றைத் தாங்களே உணர்ந்து கொள்ளக் கூடுமானதாகவிருக்கின்றது.

வேதத்துட் கூறிய சிருட்டிமுறை.

இனி, வேதத்துட்கூறியபடி, சிருட்டி சொல்லப்படுகின்றது. சிருட்டியை விரித்துக் கூறுகின்ற சுருதிகள், மிருதியாகவுள்ளன அன்றோ? அவையாவையெனின்? "ஆத்மாவாஇதமேகஏவாக்ரஆஸீதான்யத்" = இவ்வுலகமுதல் ஆன்மாவொருவனேயாகி இருந்தான். என்பது முதலிய அருந்தந்தை யுடைய இருக்குவேதம் ஐதரேயாரண்யக வாக்கியம் முன்னமே உதாகரிக்கப்பட்டது.

"सत्यंज्ञानमनंतंब्रह्म." = சத்திய வடிவம், ஞானவடிவம் உடையது; முடிவற்றது; பிரமம். என்றவாறாய்த் தொடங்கி, "तस्माद्वाएतस्मादात्मनआकाशस्संभूतः.." = இவ்வுலகச் சொல்லப்பட்ட அந்த ஆன்மாவினாலேயே அந்த ஆகாயம் பிறந்தது. என்பது முதலிய கிருஷ்ண யஜுர்வேதம் தைத்திரீயாரண்யக வாக்கியம்.

"सदेवसोम्येदमग्रआसीत्." = ஓய்! சுவேதகேதுவே! இவ்வுலகு முதலில், சத்துருபமாயிருந்தது. என்று தொடங்கி, "तदैक्षतबहुस्यांप्रजायेयेतितत्तेजोसृजत." = சத்தினுருவமாகிய அந்தப்பிரமம், அநேகம் பிரஜைகளைச் சிருட்டிப்பவனாகின்றேனன். அல்லது, பலவாகப் பிறக்கின்றவனாகின்றேனன். என்றுதோன்றினான். எனவே சங்கற்பித்தான் = நினைத்தான். அல்லது, விரும்பினான். பின்பு, அப்பிரமம், தேஜஸ் = ஒளியையுடைய தீயைப்படைத்தது. என்று. (இது சாம வேதம், சாந்தோக்கியாரண்ய நிதித்துவாக்கியம்).

"यथासुदीप्तात्पावकाद्विस्फुलिङ्गाःसहस्रशःप्रभवंतेसरूपाः। तथाक्षराद्विविधास्सोम्यभावाः प्रजायंतेतत्रचैवापियंति," = ஒளிசெய்திருக்

கும் தீயினின்றும் அதுபோலும் உருவமுடைய பொறிகள் அநேகமாய் எவ்வாறு வெளிப்படுகின்றனவோ? அவ்வாறே நாசமற்ற ஆன்மாவினின்றும் சீவர்கள் பிறக்கின்றார்கள். அவ்விடத்தே ஒடுக்கத்தையும் அடைகின்றார்கள். எ-று. * இது அதர்வண வேதம், முண்டகோப நிஷத்துவாக்கியம்.

"తదేవంతర్హ్యవ్యాకృతమాసీత్తన్నామరూపాభ్యామేవవ్యాక్రియతే." = ஆனால் அப்பிரமம் இவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கவில்லை. அதே பிரமமே, பெயராலும், உருவத்தாலும், பிரிக்கப்படுகின்றது. எறு. (எனவே, நாமரூபமற்ற பிரமமே நாமரூபமுடைய பிரபஞ்சமாயிற்று. என்பது). இது சுக்கில யஜுர்வேத உபநிஷத்து வாக்கியம்.

ஆயின், இவ்வாக்கியங்களில், சிருட்டியை ஒருவகையாக நிச்சயிப்பதற்கு அமையாது. விப்பிரதிபத்தி மிகுதியா யிருப்பதால். (விப்பிரதிபத்தி=ஐயத்திற்கிடமாக முன்னெடு பின்மலை வாதல்). ஆன்மா, பிரமம், சத்து, அக்ஷரம், அவ்வியாகிருதம், என்னும் இவ்வாக்கியங்களால் வாச்சியமாகிய=சொல்லப்பட்டவைகளாகியபொருள்கள் காரணமாய்க்கூறப்படுகின்றது. ஆகவே, ஒரு உலகத்திற்கு வேறுவேறு இலக்கணமுடைய பல உபாதான காரணம்=முதற்காரணம் இல்லையே எனில்?

அது குற்றமன்று. ஆன்மா முதலிய அச்சொற்களால் ஒரே பொருள் கூறப்படுதலின். ஆன்மா, பிரமம், இவ்விரண்டு மொழிகட்கும் ஒரேபொருள் உண்டாயிருப்பது, விளங்குகின்றது. எங்ஙனமெனில்? மேற்பிரமவாக்கிய சேடத்தில் "తస్మాద్వాఏతస్మాదాత్మన ఆకాశస్సంభూతః" என்று கூறப்பட்டிருத்தலின். எனவே, சச்சிதானந்தவடிவம் பிரமம் என்றுகூறி அந்த ஆன்மாவால் அந்த ஆகாயம் பிறந்தது என்று மேலே கூறப்பட்டது, அன்றே? அவ்விடத்து,

---

* எனவே, மஹாகாயத்தால், குடமுதலிய உபாதியையுடையசிறியஆகாயங்கள் பிறந்து உபாதி ஒழிந்தால், சிறிய ஆகாயங்கள் மஹாகாயத்தில் ஒடுக்கமுற்றதுபோலத் தோன்றுகின்றது. அவ்வாறே, கேடற்ற பிரமத்திலுல், கேட்டையுடைய அவித்தை=மாயை உபாதியோடு சீவான்மாக்கள் பிறந்ததாகவும் இறந்ததாகவும் தோற்றுவர். தோற்றவொடுக்கங்கள் உபாதிகளுக்கே அன்றி ஆன்மாவுக்கல்லவென்று, சங்கரபாஷியக்கருத்து. உபாதி-எ-று. அடுத்ததால் வருந்தன்பம். இதனை ஏனையர் மறுப்பர் அவையாண்டுணர்க.

பிரமத்தை அந்த ஆன்மா என்று கூறியதால், பிரமம் ஆன்மா என்னும் சொல்லிரண்டும் ஒருபொருள்குறித்த பரியாயச்சொல் லென்பது.

சத்து, ஆன்மா, என்னும் இவ்விரண்டு மொழிகளுக்கும், ஒரே பொருளா யிருப்பது நியாயத்திற்கு ஒத்ததாக விருக்கின்ற தது. எவ்வாறெனில்? ஆன்மாவென்னும் சொல், சொரூபவாசக மாதலாலும், சத்தாவினைதும் உபநிடதப்பிரமாண முடையவர்க ளால் சருவசொரூபத்தன்மை எனஉடன் படுதலினாலும். சத்தா என்பது, சருவசொரூபமாயிருப்பது அநுபவத்திற்கு ஏற்பாளது அல்லவா? "மனிதன்கோடு" முதலியவற்றிற்கும் நாகத்தை யுண்டுபண்ணுதல் என்னும் ஆகாரத்தால் சத்தாகிய வடிவமாத லின். *

அகூரம், என்னும் சொல்லும் "அநுத்தரத்யுரம்" அநுப விப்பதால் அகூரம் என்னப்படும். "நத்துரத்தீவா" "அத்துரம்" சுகம்= நாசம் அற்றது ஆதலால் அகூரம் என்னப்படும். ஆதலால் இச் சொல், பரமான்மாவைக்குறிக்கின்றது.

அவ்வியாகிருதம், என்னும்சொல்லும், அதனிடத்தேதானே சேர்ப்பதற்குக் கூடுமானதா யிருக்கின்றது. என்னை? "அ" "வ்ய" "கிருதம்" "வ்யாகிருதம்" என்பதனுள் "அ" விசேடம். "வ்ய" அவ் வளவில் "கிருத" செய்யப்பட்டது. இத்தவியுத்பத்தி=மொழியாக் கத்தால், வியாகிருதம் என்னும்சொல், உலகந்தோற்றுவதற்குத் தகுதியான தூலதசையைக் குறிக்கின்றது. தூலதசை=பெருங் காலம். அதன்மேல். அ. என்னும் எதிர்மறை யுபசருக்கத்தால் அவ்வியாகிருதம் என்றாயிற்று. அது. சூக்குமமாகிய தசையை= நுண்ணிய காலத்தைக் குறிக்கின்றது, ஒரே பொருளினுடைய தூல சூக்குமதசைகள் சுகம், பிரமம், என்னும் மொழிகளால் கூறப்படுகின்றன. (எனவே, தூலதசையோடுங் கூடியது சகம், சூக்குமதசையுடன் கூடியது, பிரமம் என்பது. (என்றால் கால

* (எனவே, "மனிதன்கோடு" என்பது, இல்லாப்பொருளாயினும், அத் தமொழியால் உண்டான அறிவிலே உள்ளதாகத் தோற்றியவிடயம் அறிப வனுடைய வடிவமே என்பதாகருத்து) சருவசொரூபத்தன்மை=எல்லா வடி வம். ஆகாரம்=உருவம், கோடு=கொம்பு. இது. பிறர்மதம்.

பேதமன்றிப் பொருட்பேத மில்லை பொருள்ஒன்றே என்பது கருத்து.,). இதுபரிணமோபாதான வாதி பக்ஷதாற்பரியம்.

விவர்த்தோபாதான வாதிகளும் "அகண்டைகரசமாகிய"= பிரிவற்ற வொருமைச் சுவையாகிய பிரமமே உலகவடிவமாகத் தோற்றுகின்றதென்று உடன்படுகின்றனர். ஆதலால், அவ்வியாகிருதம் பிரமம் முதலியஐந்துமொழிகளுக்கும் ஓரே பொருளென்றுணர்க.

அற்றேல், சிலவிடங்களில் உலககாரணம் சூந்தியம்=இல்லாததொன்றேயென்றுவேதத்துள்ளேகூறப்படுகின்றது. என்னை? "அஸத்வா இதமக்ரஆஸீத் - ததோவைஸதஜாயத." = முதற்கண் சத்தில்லாததேயாகியிருந்தது. பின்பு, சத்துப்பிறந்தது. எ-று. கிருஷ்ணயஜுஸ்தைத்திரீய உபநிஷத்து வாக்கியம். என்பதிபாதெனில்? (இங்கு அசத்துஎன்னும் சொல்லுக்கு இல்லாதபொருள்.எனவே அபாவமே பொருளென்று பூர்வபக்கத்தார் தாற்பரியம்).

அங்ஙனமன்று. அவ்விடத்து, சத்து, அசத்து, என்னுமொழியால், வியாகிருதம், அவ்வியாகிருதங்களே கூறப்படுதலின்.

அன்றியும், மற்றொருசுருதியில் "కథమసత్సజ్జాయేతేతి."=அசத்தாகியபொருளினின்றும் சத்தாகியபொருள், எவ்வாறுபிறக்கும்? என்று எதிர் மறுத்தலின். அபாவத்தால் பாவம் பிறப்பதில்லை. ஆகலால், சூந்தியப்பொருள் உலகத்திற்குக் காரணம் என்று கூறுவது ஒத்தவழக்கன்று; என்று சூந்தியகாரணத்து வாதம் விலக்கப்பட்டுள்ளது.

ஆயின், தோற்றிவருகின்ற இந்த வுலகத்திலுள்ள எந்தவடிவமும் இல்லாதது, சூந்தியமாகாதே விலக்ஷணமாம். என்றால், அப்பிரமம் எப்படிப்பட்டதென்றுகருத்துட்கொள்ளப்படும். எனில்?

ஈண்டு நீர்விளைவுவதற்கு, யாது உம்மால் கூறப்பட்டதோ? அந்த வாசகத்துக்கு இலக்கியமானதே அது என்று உள்ளத்துட் சமாதானம்செய்க. அதற்கு வேறு உவமை வேண்டின்கூற எம்மால்அமையாது. என்னை? அதனைத் ஒத்தபொருள் வேறொன்று இல்லாமையின். இங்ஙனம் சுருதியும்கூறிற்று. வருமாறு, சுவேதாசுவதரோபநிஷத்து, "నతస్యకార్యంకరణంచవిద్యతేనతత్సమశ్చాభ్యధికశ్చదృ

ஞ்ஞே." =அவனுக்குத் தொழிலுமில்லை; காணமுமில்லை; அவனை ஒத்தவனும் ஒருவனில்லை; அவனுக்கு உயர்ந்தானுங் காணப்படுவதில்லை. எ-று. காண்க.

ஒருக்கால், மாணாக்கர்க்கு அறிவுண்டாதற் பொருட்டு, உவமைகளை எடுத்தாளவேண்டியிருக்குமாயின், அத்தன்மைத்தாகிய சுழுத்தியை எடுத்துக் காட்டாக அமைத்துக்கொள்க.

புருடார்த்த மென்பது தனதுவடிவமே என்பதற்கு, விடயி இன்பத்தை எடுத்துக்காட்டாகக் கொள்க. எடுத்துக் காட்டு, நிதர்சனம், ஓர்பொருள். இங்ஙனம் நிருஷ்ணைய ஜனை உபநிஷத்துள்ளுங் கூறிற்று. அதுவருமாறு. "ஆனந்தோ ப்ரஹ்மேதி வ்யஜானாத்." = இன்பமே பிரமம் என்று உணர்ந்தான். எ-று. இன்னும், "விஜ்ஞானமானந்தம் ப்ரஹ்ம" = பிரமம் விஞ்ஞானாகவடிவமும் இன்பவடிவமும் ஆனது. எ-று. மற்றும் வருவன வற்றிலும் உணர்க. இந்த ஐயங்களைப்பற்றற வொழிக்க வேண்டின், பிரமமீமாம்ஸையாலுணர்க. இனிவிரித்துக் கூறலமையும்.

எவ்வளவுகாலம், பிரமம் அறிவியக்கமாகிய—வேறுபாட்டோடுங் கூடிய உலகத்தின் வடிவத்தோடு முன்னங் கூடியிருப்பதாயிருந்ததோ? அவ்வளவுகாலம் பின்பு, உருவ வெளிப்பாடாகத் தசையிலிருந்து, மறுபடியும், உருவத்தோடும்வெளிப்படுகின்றது.

ஆனால், மஹாப்பிரளயத்தில், காலமாவது அதனது அளவையாவது எவ்வாறுபெறப்படுமெனில்? (எனவே, பிரளயத்தில் உலகமே தோன்றாதிருக்கச்சிலை அவ்வுலகத்துள்ள பொருள்களில் ஒன்றாகிய காலம் மாத்திரம் எங்ஙனம் உணரப்படும்? அது அருவாகத்துக்கு மூரணதலால் இத்தனைவருடம் பிரளயமிருந்ததென்னும் வரையறைகூறலாகாது. என்றது அவ்வினாவின் கருத்து).

அற்றன்று. இவ்வதிசயம் யாரைவினாவுவது? பிரமவாதியைக் குறித்ததன்று. அவன் மதத்துள் அதாயமுதலிய பலபேதமுடைய உலகத்தினுடைய தோற்றத்தைக் கற்பித்து வைத்திருக்கும் மஹாமாயைக்கு ஒரோவொருபிரளயம் இவ்வளவுகால அளவையுடையதாயிருந்தது என்று, இவ்வாறாகிய தோற்றத்தை மாத்திரம் உண்டுபண்ணுவதில் அருமை என்னையுள்ளது? ஒன்றுமில்லை.

* பரமாணு வாதத்திலும், இதேவகையாகிய காலம் நித்த மாகவிருக்கும்.

§ பிரதான வாதத்திலும், இருபத்தைந்து தத்துவங்களினும் வெளிப்பட்ட காலதத்துவ மென்பது இல்லாமையால், பிரதான தத்துவமே, காலம் என்னும் மொழியால் விவகரிக்கப்படும்.

---

* எனவே, பரமாணுவாதிகளாவார் தருக்கர். அவர்கள்மதத்தில், "जन्य मात्रकालोपाधि." பிறந்த பொருளெல்லாம் காலவுபாதியுடையன. எனவே, பிறந்தது எனில்? எப்போது? என்னும் விணவிற்கு இடனுகின்றது. ஈண்டு, உலக அழிவே பிரளயமென்று கூறப்படுதலின், தோற்றத்தையுடைய அழி வாகிய இல்லாமை=துவம்ஸாபாவத்திற்கு அதிகரணம்=இடமாகிய கால மூண்டு. எனில்? உலகமழிந்து இல்லாம லிருந்தது என்றல், எப்போது? என் னும் விணவிற்கு இடனுகின்றது. "अतीतादिव्यवहारहेतुःकालः। सचैकोविभुर्नि त्यश्च" இது அன்னம்பட்டீயதருக்கசங்கிரகவாக்கியம் "व्यवहारैव्यवहर्तव्य तावच्छेदकस्यकारणत्वं" இது நீலகண்டப் பிராகாசிகாவாக்கியம் "व्यवहारो नामशब्दप्रयोगः" இது நிருத்திநூல்வாக்கியம், காலம் என்பது, ஆனது, ஆகின் றது, ஆவது, என்னும்விவகாரத்திற்கு, எனவே, சொல்லின் பிரயோகத்திற் குக் காரணமானது. எவ்வாறெனில்? புசித்து ஆயிற்று என்புழி, இறந்தகாலத்தை யுடைய புசிப்பு எது, விவகரிக்கத்தக்கது. அப்படிப்பட்ட புசித்தற்றன்மை எனவே இறந்தகாலத்தோடுங் கூடியிருத்தல், விவகர்த்தவ்விய தாவச்சேதகம் என்று சொல்லப்படும். அது இறந்தகால மன்றே? ஆதலால், புசித்தாயிற்று என்னும் வழக்கில் இறந்தகாலம் காரணமாக இருக்கின்றது. இக்காரணத் தன் மையால் இறந்தகாலம் என்னும் பொருள், உண்டாகின்றது. இவ்வாறே ஏனைய நிகழ்கால எதிர்காலங்கட்குங்கொள்க. அப்படிப்பட்டகாலம் ஒன்றே யாம். அன்றியும் விடு, எ-து, எல்லாவுருவப்பொருளினுடைய கூட்டமும் உடையது. உருவப்பொருள்=மூர்த்தத் திரவியம், என்பது, அசைதற் றொழிலுடையது. அவை, மண், நீர், தீ, காற்று, மனம், என்னும் ஐந்துமாம். அன்றியும் காலம் நித்தியம், எனில், அழிவற்றது. காலம், எல்லாவற்றிற்கும் இடமாதலால் பிர ளயத்திற்கும் ஆதாரமானது. ஆகவே பிரளயத்தில் நித்தியமாகக் காலம்உண்டு என்று கூறுகின்றனர்.

---

§ பிரதானவாதிகளாவார் சாங்கியர். அவர்கள் மதத்துள்பிரதான தத்து வம் முதலிய இருபத்தைந்து தத்துவங்களே கூறப்பட்டது. அதற்குமேல் இரு பத்தாறுவதாயுள்ள பொருளொன்றில்லை. அவ்விருபத்தைந்தனுள் காலங்கூறப் படவில்லை. ஆகவே, காலம் எதனுள்ளடங்கும் எனில்? அவர் கூறும் பிரதான தத்துவ மென்பதனையே காலமென்று கூறப்படும் என்பது கருத்துஎன்க.

ஈச்சுரசங்கற்பவிசாரம்.

ஆதலால், பிரளயகாலத்தின் முடிவிலே, இறைவன் திருட்டியை விரும்புகின்றான். என்று சுருதிகூறிற்று. வருமாறு "திருஷ்ணயாஜஸ்ய அருணத்துள்" "காமஸ்தத்ரோபமவர்ணயதி." அவ்வுலகத்தோற்றத்தின் மூதற்கண்காமமே அதிகாரியாய திருந்தது. என்று (என்பது, கடவுளுரையது). எம்; கௌஷீதகிபிராமணத்துள், "ஸோகாமயதபஹுஸ்யாம்ப்ரஜாயேயேதி." = "பலபிரஜைகளாப் பிறப்பிப்பவனேவென்" என்று அவன் விரும்பினான். என்று. எம்; காமம், சாந்தோக்கியத்தில் "தத்தைக்ஷதபஹுஸ்யாம்ப்ரஜாயேயேதி."="பலனைகளாகப் பிறப்பன வாகின்றேன்" என்று அப்பிரமம் நோக்கிற்று. என்று. எம், "ஸஈக்ஷாஞ்சக்ரே." அவன் நோக்குதலைச் செய்தான். என்று. என்னும் வருவனபிறவும் என்க. (உலகத்தைப்படைக்கும் பொருட்டு, கடவுள் இச்சித்தார், நோக்கினர், என்பது அவ்வேதப்பொருள்.

அங்ஙனமாயின், காமம் என்பது மனத்தின் லுண்டாகும் உணர்ச்சி விருத்தியுள் ஒன்றாக இருக்கின்றது. எங்ஙனமெனில்? "சுருதி" "காமஸ்சங்கல்போவிசிகி தாஸ்ரத்தாஸ்ரத்தாதிருதிரதிருதி ஹ்ரீர்தீர்பீரித்யேதஸ்ர்வம்மனஏவேதி." காமம்=விருப்பம், சங்கற்பம் = எண்ணம், விசிகிச்சை=செய்யவேண்டும், சிரத்தை=ஐயம்பரியநிச்சயம்=இதுவே சிறந்ததனைத்துணிந்துகொள்ளை, அசிரத்தை=அத்துணிவில்லாமை, திருதி=தரிந்தல் விருத்தி, அதிருதி=அஃதில்லாமை, "ஹ்ரீ" "ஹ்ரா" =நாணம், "தீ" தீ=திருத்தியை உண்டாண்டும் சித்தம், "பீ" பீ=பயம்=அச்சம், இவைகளெல்லாம் மனோமயமாம். என்று. இங்ஙனமாகிய மனம் பௌதிகமானது = பூதசம்பந்தத்தாற் பிறந்தது. இவ்வாறு, சாந்தோக்கிய உபநிடதமும் கூறிற்று. என்னை? அன்னமயம்ஹிஸோம்யமனஃ."=பிரியதரிசனையுடைய ஓ! சுவேதகேதுவே! எந்தக்காரணத்தால், மனம், அன்னமயமாயிற்றோ? என்று. ஆகவே, பூதங்களினது தோற்றத்திற்குமுன்னே, பௌதிகமாகிய மனம் இல்லையல்லவா? மனமேஇல்லாவழி அம்மனத்தின் விருத்தியாயுள்ளகாமம் எவ்வாறு உண்டாம்? ஆதலால், சிருட்டிக்குமுன் அச்சிருட்டியின் பொருட்டு, கடவுள் இச்சித்தார் என்று கூறுவது ஒத்தவழக்கன்று. எனில்?

விடைகூறுதும். சிருட்டிகாலத்தில் இது ஓர் ஆச்சரியமாய்ப் பிறப்பதில்லை. ஏனெனில்? அந்தமனத்திற்கு பூதத்தாற்பிறக்

குந் தன்மையில்லை. அன்றியும், நித்தியமாகிய இறைவன் இச்சைக்கு மநத்தினிருப்பு வேண்டுகையு மில்லை. (எனவே, அழியத்தக்க விருப்பமானல் மநத்துட் பிறக்கும்; கடவுளிச்சை என்றும் உள்ளது ஆதலால், அதற்காக மநம் வேண்டுவதில்லை. மனமின்றியே யிச்சையுண் டென்பது கருத்து.) அக்கடவுளிச்சை யென்றும் உள்ளதே யாயினும் அது சருக்கம் = சிருட்டியோடு * உபஹிதமாதல் என்னும் வழிவந்தால், "ஸிஸ்ருக்ஷு" சிருட்டிசெய்ய வேண்டுமென்னும் விருப்பமே யாவது ஒத்தவாருகின்றது.

ஔபநிடத மதத்தில், சீவனது இச்சை, பௌதிகமாகிய மனத்திற்குக்காரியமான போதிலும், எனவே மனத்தால் பிறப்பதாணலும், கடவுள் இச்சை என்பது, மாயையின் பரிணமவழிவமாதலால். அதற்கு மனம் வேண்டுவதில்லை. பரிணமம்=திரிபு. அது தனுகரணங்கள் முதலியவை இல்லாவிட்டாலும் பரமேச்சுரனுடைய எல்லாம் வல்லமை, இவ்வளவினது இன்னதன்மை

* விசிட்டம், உபஹிதம், உபலக்ஷிதம், சுத்தம், எனப்பொருள் நால்வகைப்படும். அவற்றுள், விசிட்டம். எது, நிகழ்காலத்துக் கூடியிருப்பது. உபஹிதம் - எது. இறந்தகாலத்துக் கூடியிருந்து நிகழ்காலத்தில் கூடாம லிருப்பது. எனவே யில்லாமையா யிருப்பது. உபலக்ஷிதம் - எது, இறந்தகாலத்துக் கூடியிருந்ததாகத் தோற்றி நிகழ்காலத்திற் கூடவில்லை என்புழி அவ்வில்லாமை வழிவாயுள்ளது. சுத்தம் - எது, தான் தன்னளவி லுள்ளது. இதற்கு உதாரணம். "ஶுபவத்பூதலம்." குடமுடையது நிலம் எனவே குடத்தோடு கூடிய நிலத்திற்குக் கடவிசிட்டம் என்பது பெயராம். அங்கு நிலம் விசேடிக்கப்பட்டது; குடம் விசேடிப்பது. குடமிருந்த நிலம் என்புழி. அந்தநிலத்தைவிட்டு அக்குடத்தை வேற்றிடத்தில் வைப்புழி, அவ்விடம் குடத்தால் உபஹிதம் - என்று கூறப்படும். எனவே அவ்விடத்திற் குடமில்லா விட்டாலும் வேற்றிடத்தி லாயினும் இருப்பதால், முன்னிருந்த விடத்தில் அக்குடம் உபஹிதமா யிருக்கின்றது என்பது கருத்து. அக்குடமுற்றும் அழிந்த விடத்து, முதற்கண் இருந்த நிலம்குடத்தால் உபலக்ஷிதமென்னப்படும், என்பது, குடம் முழுவதும் அழிந்துவிட்டாலும், அக்குடம் இன்ன இடத்தில் இருந்தது என்னும் விடயம் கருத்துக்குத் தோற்றுவதால், அவ்விடம் குடத்தால் உபலக்ஷிதம் என்று கூறப்படும். எனவே, குடம் உபலக்ஷிதமா யிருக்கின்ற தென்பது கருத்து. அந்த ஞாபகமும் இல்லாதொழியில் அது சுத்தநிலமென்று கூறப்படும். இந்த வுதாரணங்களின் படி, மாயை, அவித்தை, அவற்றின் காரியம் முதலிய விசேடணங்களால், ஆன்மாவை விசேடியமாக வைத்துக் கொண்டு, பற்று, வீடு, என்னும் விவகாரங்கள் சொல்லப் படுகின்றது.

யது என்று நாம் மதிப்பதற்கு முடியாததாக விருக்கின்றது. இக்கருத்துச் சுருதிகளால் விளங்கும். வருமாறு, "னதஸ்ய கார்யங்கரணஞ்சவித்யதேனதத்ஸமஶ்சாப்யதிகஶ்சத்ருஶ்யதே। பராஸ்ய ஶக்திர்விவிதைவ ஶ்ரூயதேஸ்வாபாகீஜ்ஞானபலக்ரியாச."=அவனுக்குக் கொழுவில்லை. அவனுக்குக் காணமில்லை. அவனுக்கு ஒத்தவனும் உயர்ந்தவனும் காணப்படுவதில்லை. அவனுடைய மிகச் சிறந்தவல்லமை பலவிதமாகயுடையதாகக்கேட்கப்பட்டது. ஞானம், பலம், தொழில், முதலிய அவனுக்கு இயற்கையாயுள்ளன. எ-று. எ-ம்; "அபாணிபாதோஜவனோக்ருஹீதாபஶ்யத்யசக்ஷுஸ்ஸஶ்ருணோத்யகர்ணஃ."=கைகாலில்லாதவன், எற்றுக்கொள்ளுகின்றான். விரைந்து நடக்கின்றான். கண்ணில்லாதவன் பார்க்கின்றான், காதில்லாதவன் கேட்கின்றான், அவன், இப்படிப்பட்டவன். எ-று.

இங்ஙனமாதலின், கூடுதலில்லாதவனுக்குச் சிருட்டிசெய்யுந் தன்மை எவ்வண்ணம் உண்டாயிற்று? பிறக்கப்போகின்ற ஆகாயமுதலியபொருள்கள் அதற்குக்கக்க கருவிகளில்லாமலே எவ்வாறு பிறக்கும்? என்பன முதலியவாகவரும் வியப்பு=அதிசயங்களுக்கு இடனில்லாமலே யிருக்கின்றது. மிக்க பிற அதிசய விஞ்ஞக்கள்எத்துணையிருக்கினும், சுத்சுரனுக்கு, முடிவிலாற்றலுடைமையுள்ளதென்பதே அவற்றிற்கெல்லாம் விடையாகக்கொடுக்கப்பட்டு இருக்கின்றது. ஆகலால், சுருதியெவ்வாறு கூறியிருக்கின்றதோ? அவ்வாறு, ஐயமற்றவர்களால் சிருட்டி உடன்படத்தக்கது.

ஆகாயமுதலியவற்றின் சிருட்டிமுறை.

இனி, சுருதி கூறியது; வருமாறு, கைத்திரீய உபநிஷத்து. "தஸ்மாத்வாஏதஸ்மாதாத்மனஆகாஶஸ்ஸம்பூதஃ। ஆகாஶாத்வாயுஃ। வாயோரக்நிஃ।அக்நேராப। அத்ப்யஃபृதிவீ।பृதிவ்யாஓஷதயஃ। ஓஷதீப்யோன்னம்। அன்னாத்புருஷஃ।"=அத்தன்மையுடையதென இங்கு கூறிய ஆன்மாவால் ஆகாயம் பிறந்தது! ஆகாயத்தால்வாயு, வாயுவால் தீ, தீயால் நீர், நீரால் மண், மண்ணால் பைங்கூழ், அப்பைங்கூழால் அந்நம், அவ்வந்நத்தால் புருடன், பிறந்தான் - எ-று. அவ்விடத்து, புருடன் என்னுமொழியால், தலை, கை, முதலிய அவயவங்களோடு கூடியிருக்கும் உடம்பினைக்கூறப்பட்டது. அவ்வுடம்பு, பிரமன்முதல் ஸ்தம்பம் வரையிலும் பலவகைப்பட்டுள்ளன. ஈண்டுத்தம்பம் என்பது தூணையொத்த ஜந்து.

அவற்றுள், பிரமனதுதேகம் ஒப்புயர்வற்ற புண்ணியத்தின் கூட்டத்திற்குப் பயன்வடிவா யுள்ளது. ஏனையவெல்லாத் தேகங்க ளுக்கும் காரணமாதலால், அது அநாதியென்று கூறப்படுகின்றது. இங்ஙனம் சுருதியுங்கூறிற்று. அதுவருமாறு, கிருஷ்ணயஜுஸ— "హిరణ్యగర్భస్సమవర్తా గ్రేభూతస్యజాతఃపతిరేకఆసీత్." = முதற்கண், இரணி யகருப்பன் ஒருவனேபிறந்திருந்தான். அவன்எல்லாப்பூதங்களுக் கும் ஒரேதலைவன் ஆயினன். எ-று. எ-ம் "బ్రహ్మోదేవానాంప్రథమఃసంబ భూవ విశ్వస్యకర్తా భువనస్యగోప్తా" பிரமதேவன்தேவர்களுடையமுதல்வ னாயினன். உலகத்தினுடைய கருத்தன், உலகத்தைக் காப்பவ னும் எ-று. எ-ம், ஸ்மிருதி. "సవైశరీరీప్రథమస్సవైపురుషఉచ్యతే। ఆదికర్తాసభూ తానాంబ్రహ్మాగ్రేసమవర్తత." = அவனே முதலுடம்பினை யுடையவன். புருடன் என்று சொல்லப்படுகின்றான். பூதங்களுக்கு அவனே முதற்கருத்தன். அப்படிப்பட்ட பிரமன்முதலில் இருந்தான். எ-று. எனவும் வரும்.

இதனால், விஷ்ணு உருத்திரர்களுக்கும் ஆதியுண்டென்று உணர்த்தப்பட்டது. ஒருசேதநமே = அறிவே, மூக்குணங் களையும் வகுப்பதற்கு மூன்றுதேகங்களைக் கொண்டது. இங்ங னம் மைத்திரேயசாகை யென்னும் சுருதியிற்கூறப்பட்டது.

"తస్యప్రోక్తా అగ్ర్యాస్తనవో బ్రహ్మావిష్ణురుద్రఇత్యథహయోవైఖలువావాస్యరాజ స్తోంశోసాసయోయంబ్రహ్మాయథా హఖలువా వాస్యతామ స్తోంశోసాసయోయంరుద్రో యథాఖలువావాస్యసాత్వికోంశోసాసయోయంవిష్ణుస్సవాఏషఏక స్త్రిధాభూతః." = அவ னுடைய சிறந்தமுதற்றேகங்கள் பிரமன், விஷ்ணு, உருத்திரன், என்று சொல்லப்படுகின்றன. அவற்றுள், இராஜசகுணத்தின் கூறு எதுவோ? அதுவே இப்பிரமன், தாமசகுணத்தின் கூறு எதுவோ? அதுவே இவ்வுருத்திரன், சாத்துவித குணத்தின் கூறு எதுவோ? அதுவே இவ்விஷ்ணு, அவனே, இவன்; ஒருவ னே மூவராயினன். எ-று. உத்தரதாபி நீயோப நிடதத்திலும், மாயையை இங்குமுன்னிட்டுக்கொண்டு கூறப்படுகின்றது. "నైసా చిత్రాసుదృఢాబహ్వంకురాస్వయంగుణభిన్నాంకురేష్వపిగుణభిన్నా సర్వత్రబ్రహ్మ విష్ణుశివ రూపిణీచైతన్యదీప్తాతస్మాదాత్మనఏవత్రైవిధ్యంసర్వత్ర." = அப்படிப்பட்ட இம் மஹாமாயை, சித்திரிப்புடையது. மிகுந்த வலிவுள்ளது. பல மூலைகளை யுடையது தான் குணத்தொடுகூடி வேறுபட்டிருப்பது.

மூலகளிலும் எப்போதும் குணமேலுபாட்டோடுங்கூடியுள்ளது. பிரமன், விஷ்ணு, சிவன்என்னும்வடிவத்தைபுடையது. அறிவுவினக்கமானது. ஆகலால், எப்போதும் ஆன்மாவினது நிறம்மூலனைகப்பட்டிருக்கும். எறு, இனி, ஸ்கந்தபுராணத்துள்ளும், "ஏகஸ்வரூபஸ்ஸஷ்டஸ்ஸ்ருஷ்ட்யந்தஸித்தயே। ப்ரஹ்மாஸ்ருஷ்டாக்யாஜ்ஞாபிகலனாபிர்விஜ்ரும்பதே." = பிரத்தியபகமாக அச்சிவனெருவனேசிருட்டிதிதிசங்காரத்தெழில்களை யனைத்தும் பொருட்டுப் பிரமன் விஷ்ணு உருத்திரன் என்னும் பெயராலும் தொழிலாலும் சிறந்தோனின்றான். எ-று. எனவும் கூறுதல் காண்க.

இவ்வகையாகப்பிரமா, விஷ்ணு, உருத்திரர்கள் தங்கள்மஹாகற்பம் முடியும்போது ஒடுக்கத்தை அடைகின்றனர். மீட்டும் அக்கற்பத்தின் முதலில் தோற்றுகின்றனர் என்பதே தோற்றமானது. மூலத்திலுள்ள எழுத்துக்களின் பொருளோ எனில்? "க்ஷயோஷ்பத்ய." = ஒடுக்கத்தோடு கூடியது தோற்றம் அதனைத "உபலக்ஷிதா" ஆகின்றனர்என்றபடி. இவ்வாறு, அந்தந்த அவாந்தர கற்பங்களுடைய முடிவிலும் முதலிலும் சுருதி முதலியவற்றைத் தோற்றுவிப்பவர்கள், ஒடுக்கத் தோற்றங்களோடு உபலக்ஷிதர் ஆகின்றனர். உபலக்ஷிதர்-எது, ஒத்த இயல்பினர்.

வேதவிளக்கஞ்செய்பவர்கள்.

அவற்றுள், சுருதிகளைத் தோற்றுவிப்பவர்கள் யார் எனில்? வேதத்தைப்பிரித்தருளினவர் வியாசர். அவ்வேதங்களின்சாகைகளுடைய சம்பிரதாயங்களை விளக்கஞ் செய்யுமவர்கள் கடர், கௌதுமர், முதலியோர். அதன்பிரயோகங்களைத்தெரிவிக்கின்றகற்பசூத்திரக்காரர்கள், போதாயனர், ஆசுவலாயனர், ஆபஸ்தம்பர், காத்தியாயனர், முதலியோர்கள். தூருவபக்கம் சித்தாந்தம் என்னும் விசாரவடிவமாகிய வேத மீமாம்ஸா சாஸ்திரங்களுக்கு சூத்திரக்காரர்களாவார் ஜைமினிமுதலியோர்கள்.

ஸ்மிருதிகருத்தர்கள்.

அவற்றுள், ஸ்மிருதிகளை விதிசெய்தவர்களாவார், மநு முதலியோர் உலகறிந்தவர்களா யிருக்கின்றனர். அவருள், பைட்டீநஸ்மிருதி, "தேஷாம்மன்வங்கிரோவ்யாஸகாதயஸ்தூத்ர்யுசனோயமா। வஸிஷ்டதக்ஷஸம்வர்த

శాతాతపపరాశరాః। విష్ణ్వాపస్తంబహారితాఃశంఖ్ఞకాత్యాయనోభృగుః। ప్రచేతానారదో యోగీబోధాయనపితామహా। సుమంత్ఞకశ్యపోబభ్రుఃపైఠీనోవ్యాఘ్రపాదచ। సత్యవ్రతో భరద్వాజోగార్గ్యఞకార్ష్ణాజినస్తథా। జాబాలిర్జమదగ్నిశ్చ లోకాక్షి బ్రహ్మసంభవః ఇతిధర్మప్రణేతారఃషట్త్రింశద్ఋషయస్తథా.,'=

க. மநு.
உ. ஆங்கிரசு.
ங. வியாசர்.
ச. கௌதமர்.
ஞ. அத்திரி.
ரு. உசநஸ-ர.
எ. இயமர்.
அ. வசிட்டர்.
கூ. தக்ஷர்.
க0. சம்வர்த்தர்.
கக. சாதாதபர்.
கஉ. பராசரர்.
கங. விஷ்ணு.
கச. ஆபஸ்தம்பர்.
கஞ. ஹாரீதர்.
கசு. சங்கர்.
கள. காத்தியாயநர்.
கஅ. பிருகு.
க�கூ. வருணர்.
உ0. நாரதர்.
உக. யாஞ்ஞவற்கியர்.
உஉ. போதாயநர்.
உங. பிரமா.
உச. சுமந்து.
உஞ. கசியபர்.
உசு. பபுரு.
உள. பைட்டீநசி.
உஅ. வியாக்கிரர்.
உகூ. சத்தியவிரதர்.
ஙO. பரத்துவாசர்.
ஙக. கார்க்கயர்.
ஙஉ. கார்ஷ்ணாசிகர்.
ஙங. ஜாபாலி.
ஙச. ஜமதக்கினி.
ஙஞ. லோகாக்ஷி.
ஙசு. பிரமசம்பவர்.

ஆக முப்பத்தாறு வரும்தருமநூல் கூறினோர்.

இங்ஙனம் இலக்கமிடும்வகை என்னை? அங்ஙனம் கூறினால், வச்சர், மரீசி, தேவலன், பாரஸ்கரர், புலஸ்தியர், புலகர், இருசியசிருங்கர், இலிகிதர், சாகலேயர், ஆத்திரேயர்=தாருவாசர், முதலியவர்கள் தருமநூல்களை சொல்லினவர்கள் அல்லராவர். அன்றியும், மஹாபாரதம் அசுவமேத பர்வத்திலும், அவ்வம்முனிவராற் கூறப்பட்ட தருமங்களை எல்லாம் முறையாகக் கூறியிருக்கின்றனர். ஆதலின் மற்றுஞ் சில தருமசாத்திர நூலாசிரியர்கள் உள்ளவராக வெளிப்படுகின்றனர். அது வருமாறு.

"శ్రుతామేమానవాధర్మాః." ఎన్ను తொடங்கி இங்ஙனம் கூறப்படுகின்றது. என்னை? "ఔమామసోశ్వరాశ్చైవనందిధర్మాశ్చపావనాః। బ్రహ్మణాకథితాశ్చైవకామారాశ్చశ్రుతామయా। ధూమ్రాయణకృతాధర్మాఞకణ్వావైశ్వానరాఅపి। భార్గవాయాజ్ఞవల్క్యాశ్చమార్కండేయాశ్చకాశికాః। భరద్వాజకృతాయేచబృహస్పతికృతాశ్చయే। కుణిశ్చకుణిబాహుశ్చశాఖ్వామిత్రకృతాశ్చయే। సునుంతుజైమినికృతాః శాకునేయాస్తథైవచ।పులస్త్యపులహోద్గీతాఞపావనీయాస్తథైవచ।అగస్త్యగీతామౌద్గల్యాశాండిల్యాస్సాలభాయనాః।వాలఖిల్యకృతాయేచయేచసప్తఋషిభిఞకృతాః। వైయాఘ్రవ్యాస

గీతాశ్చవిభండకకృతాశ్చయే। తథావిదుర వాక్యానిభృగోరంగిరసస్తథా। వైశంపాయనగీతాశ్చయేచాన్యేచైనమూదయః." =என்பன.

மநு.	குணி.	சுக்கிரனி.
உமாமகேசர்.	குணிபாகு.	வியாக்கிரர்.
நந்தி.	விசுவாமித்திரர்.	வியாசர்.
பிரமா.	சுமந்து.	வியாண்டகர்.
குமரர்.	ஜைமினி.	விதுரர்.
தூமிராயநர்.	சகுனி.	பிருகு.
கண்ணுவர்.	புலத்தியர்.	அங்கிரசு.
வைசுவாநரர்.	புலகர்.	வைசம்பாயநர்.
பிருகு=பார்க்கவர்.	வாயு.	
யாஞ்ஞவற்கியர்.	அகத்தியர்.	
மார்க்கண்டேயர்.	மௌத்கல்லியர்.	
கௌசிகர் = இந்திரன்.	சாண்டிலியர்.	
பரத்துவாசர்.	சுலபாயநர்.	
பிரஹஸ்பதி.	வாலகில்லியர்.	

இவ்வாறே இன்னும் அநேகர்களால், கூறப்பட்ட தருமவிடயங்களைகேட்டேன் என்று கூறியவாறு.

நல்ல ஒழுக்கம் உலகத்தில் உற இடபம், எச்சம், முதலியவற்றைச்செய்தவர்கள் அவ்வக்குல முதல்வர்களாகிய பெரியரும் உளரோ எனில்? "ச" என்றது சொல்லப்பட்டிருப்பனவற்றையும் சொல்லப்படாதிருப்பனவற்றையுங்கூட்டியுரைக்கின்றது. காண்க. இனி, அவற்றுள் மநுவாதிகளும் பிரமாதிகளும், ஸ்மிருதிசாஸ்திரக் கருத்தர்கள் என்று சொல்லப்பட்டது.

தருமம்சொல்லப்படாதது. அத்தருமத்திற்கு, மூன்னையகற்பத்தினுடைய முடிவில் இறந்துபோய்விட்டதற்குவருங்கற்பத்தின் முதலில்சிருட்டியாகின்றது. அவ்வாறே, வாஜஸநேய பிராமணத்தில், சிருட்டிப்பிரகரணத்தில்பிரஜாபதி=பிரமா, மனிதர்முதல் எறும்பு கடையானபிராணிகளும், தான்குவருணங்களின் அபிமானிகளாகியதேவர்களும் ஆகியஇவர்களுடைய சிருட்டியைச்செய்தார்என்று சொல்லி, பின் அதிசுவுக்கிரமாகியசூத்திரியர் முதலியோனைவருக்கும் தேம்படுத்துவதற்கு வல்லமை யுடையதாகிய தருமத்தினுடைய சிருட்டி சொல்லப்படுகின்றது. வருமாறு. "सनावव्यभवत्तच्छ्रियमू रूपमत्य सृजतधर्म्मन देवत्त्रस्यैत्रंयद्धर्म स्तुष्टात्परंनास्ति." = அவன்

வைபவங்களைப் பொருந்தினவுகவில்லை யாதலால், செல்வரூப மான தருமத்தை எல்லா வற்றிற்கும் மேலாகச்சிருட்டித்தான். அங்ஙனம் இத்தருமம் கூடத்திரியத்துவத்திற்கு கூடத்திரியத்துவ மாயிற்று. எதுதருமமோ? அதற்காயினும்சிறந்தது இல்லை. என்று.

இச்சுருதிக்கு இனிவருவதும் பொருளாம். "ஸः"=பிரமன் மநுமுதலிய உருவத்தைத் தரித்த உலக கருத்தாவாகிய பரமேசுவரன், பிரசைகளைச் சிருட்டித்து, அவற்றை ஆள்வாரில்லாத படியால் "நைவ்யுபவத்"="நான்செய்த தொழில் பலித்தது!" என்று திருத்தி யடையவில்லை. "தத்."=அதனாலே விசாரித்து, "ஶ்ரேயோ ரூபம்." = ஆளப்படுதலால் சிறப்பினையடைந்த: "தர்ம்ம்" புண்ணியம்என்னும்பொருளை, அல்லது தருமதேவதையை. "அஸி."= பெருமுயற்சியால். "அஸ்ருஜத்." = சிருட்டித்தார். "தदேதத்க்ஷத்ரஸ்யக்ஷத்ரம்." = இது பெரிய வியப்பு தருமத்தின் வல்லமை மிகப் பெரியது. எங்ஙனமெனில்? உலகத்தில், கொடியகுகிய அரசன் கொல்வதில் வல்லவனே யாயினும் தருமத்தால் பயந்து கொண்டு, இறை வரி முதலியவற்றைக்கொடாமலிருக்கிற யாசகர்களையும் வேதியனையும் துன்பப்படுத்தாது விடுவதே யன்றி, மீட்டும் அவர்களுக்குத் திரவியத்தையும் கொடுக்கின்றன். காலாட்களும், அதிசூரரும், வில் வாள் முதலிய பிடித்த படைவீரரும், பல்லாயிரம்பேர் நிருக்கின்றனர். அவர்களெல்லாரும், நிராயுதனுகிய ஒரோஒரு இறைவனல் ஆளப்படுவோராயும் அடிக்கப்படுவோராயும் இருப்பினும், சுவாமித் துரோகத்தினின்றும் அச்சப்பட்டு, அடங்கி யிருக்கின்றனர். "யத்தர்ம்மாத்ஸ்ரேஶ்வரம்நாஸ்தி." = ஆதலால், தருமத்திற் காயினும் சிறந்த ஆளும்பொருள், ஒருசிறிது எதுவுமில்லை. என்று. காண்க.

இனி, பிரளய காலத்தில், தருமத்திற்கும் ஒடுக்கம் வருவ துண்டல்லவா? அதன்பின் ஆகத்தக்க சிருட்டியில், வித்தில் லாமற் போதலால், தருமகாரியத்திற்கு, அசம்பவ தோஷம் வருகின்றதே. எனில்? அசம்பவம் = தோற்றமின்மை.

அங்ஙனமன்று, முன்னையகற்பத்தில், அனுட்டித்த சுஞ்சித வினையினுடைய பயன் வித்தாகிய தரும அதிருஷ்ட சத்தியின் சங்காரத்தைப்பிரளயத்தில் உடன்படவில்லை. திரவியம், குணம் கிரியை, வடிவமாகிய தருமமேசங்காரப்படுகின்றது. மீட்டும்,

படைக்கப்படுகின்றது "सर्व्वदा"=எப்போதும் என்ற இச்சொற் பிரயோகத்தால் சிருட்டி பிரளயம் என்பனற்றின் வொன்னைப் பெருக்கு அதாதியாயுள்ளதென்று குறிப்பிக்கின்றார். (உ0ந)

வேதத்திற்குக் கருத்தா இல்லையென்பது.

मू॥ नकश्चिद्वेदकर्त्ताच वेदंस्मृत्वाचतुर्मुखः।
तथैवचकर्त्तास्मृति मन्वादेर्लोकवंतरे ॥உஅ॥

என்றது. எதன்பொருட்டு சிருட்டி சங்காரங்கள் கருதிக் கூறப்பட்டனவோ? அவ்வெள்ளப் பெருக்கின் அறிவிலனாமையை ஈண்டுக்கூறுகின்றது.

(இ-ள்.) வேதத்திற்குக்கருத்தாவொருவனுமில்லை சதுர்முகப் பிரமன் வேதத்தைக்கேட்டு கற்பத்தின் அத்தாரத்தம்=இயைபினடையே மறுவாய் அவ்வாறேதருமங்களை நிகழ்த்தின்றனர். எ-று.

விஸ்மிருதிகாலத்தோற்றுவித்தவர்களாகியமதுமுதலியோரே அதற்குகாலசரியாயிருக்கவேண்டுமென்பதுகாணப்படுதலின், அதுபோலவே, சருதிகளுக்கும் நிச்சயித்தவர்களே கருத்தர்களாயிருக்கின்றார்களென்னுஞ்சங்கையை ஒழிக்கின்றார். "வேதத்திற் கருத்தன் ஒருவனுமில்லை" யென்று. சங்கை=ஐயம். அது எங்ஙனமெனில் ?

வியாசர் வேதத்தின் கருத்தாவல்லவாம். அவர் அவ்வேதத்தைப் பிரித்தன்மாத்திரையே செய்தனரேயின். பிரமனும் வேதகருத்தாவன்று. பரமேச்சுரனால் அங்காங்குகளுக்கு வேதங்கள் கொடுக்கப்பட்டனவேயின். இனி அவ்வினாவையும் வேதத்திற்குக் கருத்தா அல்லனும், அவர் வேதத்தின் சோற்றத்திற்கு நிமித்தகாரணமென்பதும் மச்சபுராணத்துள்ளும் கூறப்பட்டது. வருமாறு, "अस्यधर्मस्यसर्व्वज्ञ कल्पादौपरमेश्वरः। व्यंजयंकेवलंविप्रा नैवकर्त्तानसंशयः। ब्रह्मणामनयंश्चपूर्व्वं सृष्ट्वात्तान्वै मनोश्वरः। दत्त्वानखिलान्वेदान्विप्रा आत्मनिसुस्थिताः। ब्रह्मणाचोदितोऽष्टाव्यासरूपीद्विजोत्तमाः। हितायसर्व्वभूतानांवेदभेदान्करोतिसः."=இக்கதக் கருமத்திற்குச் சருவஜ்ஞனாகிய பரமேச்சுரன் கற்பமுதலில்தோற்றும்படிவெளிப்படுத்துவோன் அவ்வளவேயல்லாமல்கருத்தாவல்லன். தேவதியர்களே! இதில், ஐயமில்லை. இ! முனிவர்களே! முன்னளில்மதேவசுரர், பிரமாவைச்சிருட்டித்து அவன் பொருட்டுத் தன்னிடத்துள்ள எல்லாவேதங்களை

யும் கொடுத்தருளினர். ஓ! வேதபாரகர்களே; கேட்பீர்களாக! ஓ! இருபிறப்பாளரே! பிரமனல் ஏவப்பட்ட விஷ்ணு வியாசர் உரு வத்தை அடைந்தவராய், அந்தவியாசர், எல்லாவுயிர்களுடைய இன்பத்தின்பொருட்டு வேதப்பிரிவுகளைச் செய்கின்றார். என-று. இனி, ஏனையர்க்கோ? வேதத்தின் கருத்தாவாந்தன்மை தூரத் தேதொலைக்கப்பட்டது. இவ்விடயத்தில் வேண்டிய நியாயஅள வைமுதலிய எடுத்துக்காட்டுகளை "వేదాపౌరుషేయత్వం" என்னும் அதிகரணத்திற்காண்க.

அற்றேல், (சாஸ்திரயோநித்துவாதி) "శాస్త్రయోనిత్వం" என் னும் அதிகரணத்தில், பிரமத்திற்குப்பேரறிவும், எல்லாம் வல் லமையும் உடைமை வற்புறுத்தும் பொருட்டு வேதத்திற்குக் கருத்தாவாந்தன்மைவியாசரால் "శాస్త్రయోనిత్వాత్" என்ற பிரம சூத்திரத்தினல் குறிப்பிக்கப்பட்டது. இன்னும் அப்பிரம சூத் திரத்திற்றானே அதற்கு விரோதமாய் தேவதாதிகரணத்தில் வேதத்தினது நித்தியத்துவத்தை "* అతఏవచనిత్యత్వం". என்றசூத்

---

* "నిత్యం" = நித்தியம் என்பது முதலற்றது என்பர்சிலர். முடிவற் றது நித்திய மென்பர் வேறுசிலர். அழிவில்லாதது எதுவோ? அதுநித் தியமென்பது பலர்கருத்து. முதலுமுடிவும், எனவேதோற்றமும் நாசமும் இரண்டுமில்லாதது நித்தியமெனில் வழக்கற்ற தாகவிருக்கின்றது. இவ்விடத்து நையாயிகர், = தருக்கர், ధ్వంసాప్రతియోగిత్వంనిత్యత్వం" என்று இலக்கணம் கூறுகின்றனர். காரியத்தோற்றத்திற்குமுன் "భవిష్యతి" ஆவது என்னும் "ప్రతీతేఃs"=வழக்கினுக்குச் சான்றுகவுண்டாகியஇல்லாப்பொருள் "ప్రాగభావః (பிராகபாவம்) என்னப்படும். முன்னில்லாமை என்றது. அதற்கு முதலில்லா விடினும் முடிவுண்டு. ஆதலின் அதுநித்தமல்ல. "ధ్వస్తఃs" = நாசமுற்றது என்னும் வழக்கினுக்கு இடமாகிய பொருள் "ప్రధ్వంసాభావఃs" (பிரத்துவம் சாபாவம்) என்னப்படும் = பின்னில்லாமை. அதற்கு முதலிருந்தாலும் முடி வில்லாமையால் அதுநித்தமானது. இதனல் நாசமற்றது நித்தமென்னும் வழக் குண்டாயிருக்கின்றது. இந்த நையாயிகர் மதத்தின்மேல், "ధ్వంసఃs అనిత్యఃs కార్యత్వాత్ఘటవత్." நாசம் அநித்தமானது; அதற்குத் தோற்ற முடைமையின். குடம்போலும், என்னும் அநுமானம் = கருதலளவையின் நிற்கதவருகின்றது. ஆதலால், "ప్రాగభావాప్రతియోగిధ్వంసతి." = தோற்றமில்லா திருந்தது. என்ற விசேடணத்தை இலக்கணத்தோடு சேர்க்கின், "ధ్వంస" = நாசத்தினிடத் தில் நித்தியத்துவ விலக்கணத்திற்கு அதிவியாத்தி தோஷம் வருவதில்லை. ஆக வின்முதலுமுடிவுமிரண்டும் இல்லாததுநித்தியமென்பதுவழக்கதென்பர்சிலர்.

நிரத்தால் குறிக்கப்பட்டது. இங்ஙனமாயுல் இம்மாறுபாடு எவ்வாறெழுதியும் எனில் ?

கூறுதும், எழுத்தும், சொல்லும் சிலபொருளும், அவ்விரண்டற்குரியசம்பந்தமுமாகிய இவற்றிற்கும் வாக்கியங்களுக்கும் அநித்தியத்தை, வைதிகர், காணுதற்கள், முதலியோர் கூறுகின்றனர். அவர்களைப்பற்றி, அவர்கள்வாதங்களுக்கு மாறுக மீமாம்ஸகர், ஜைமினிசூத்திரம் முதல் அத்தியாயம் முதற்பாதத்தில், காலத்திற்கும் ஆகாயத்திற்கும் எவ்வாறே ? அவ்வாறே, ஓனிஎழுத்துக்களுக்கும்நித்தியத்துவம் கூறியுள்ளனர். " வ்யவஹாரேப்ட்டனயः. "=நியாயவிவகாரத்தில் பாட்டர் கூறியதே எமக்குடன்பாடு. என்றவாறுப் தம்முடன் பாட்டினவிளக்குவதற்கு வேகாக்த சூத்திரத்தில் தேவதாதிகரணத்தில் அதேவியவகாரிகநித்தியத்துவம் = சாதாரண நித்தியத்துவம், குறிக்கப்பட்டது. அதனல், காளிதாசர்முதலிய வித்துவான்கள் கூறிய செய்யுட்களைப்போல, அருத்தனுநாதமே முதற்கணுடையதாய்ச் சிலசொற்களைக் கூட்டலும், கழித்தலும், பொருந்துவதாகத் தோற்றியவற்றை நிறுத்தலுமாகிய இச்செய்கைகளையுடைய தொடர்மொழிச்சுவை=வாக்கியரசனையில்லாமையால், வேதம் அபௌருஷேயம்=ஒப்புருடனற் செய்யப்பட்டதன்று ; என்பது நியாயத்திற்கு ஒத்தவாறும்.

இனி, பிரமவிவர்த்தத்துவம், (விவர்த்தம் = வேற்றுருக்காட்டுதல்.) = * பிரமமே விவர்த்தோபாதானமாகவுடைய

---

* பிரமவிவர்த்தத்துவம். எது, வேதத்திற்குப் பிரமம் எப்படிகாரணம்? என்றுல், விவர்த்தோபாதானகாரணம் என்னப்படும். பிரமம் என்றும் காரணத்திற்கு வேதம் எப்படிப்பட்ட காரியமெனில் விவர்த்தகாரியமாம். விவர்த்தம், என்பதற்கு, சாதாரணமாய் வேறுவடிவுளன்பது பொருள். உதாரணம், இந்திரசால விஞ்ஞையன், நிராதாரமாக வோர் புதிய வியப்புள்ள உலகைப்படைத்துக் காட்டுகின்றனன் அல்லவா ? அவ்வுலகு அச்சாலவித்தையுடையோனது வேறுவடிவு என்றுசொல்லப்படும். ஆதலால், அவ்வுலகுக்கு அவன் விவர்த்தோபாதான காரணம் என்று கூறப்படும். எனவும். இன்னும், கயிறு, பழுதை என்று உணர்ந்து கொள்ளமாட்டாத மயக்கத்தால் அதனிடத்துப்பாம்பு என்னும் தோற்றமுண்டாய்க் காணப்படுகின்றது. அவ்வாறு யார்குத் தோற்றியதோ ? அவனது விவர்த்தமென்று சிலர்கூறுவர். அம்மதத்தில் அதற்கு அவனே விவர்த்தோபாதானகாரணம். அங்ஙன

தென்பதாம். ஆகாயமுதலியவற்றிற்குள்ளது போலும், வேதங் களுக்கும் உண்டு; என்று கொண்டு, சாஸ்திரயோனித்துவாதி காரணத்தில், பிரமத்திற்கு வேதத்தின் கருத்தாவாதலுடைமை குறிக்கப்பட்டது. அதனனே, பட்டபாதாசாரியர், புருடசம்பந்தம் உடையதாயிருப்பினும். சுதந்தரத்தன்மையை முற்றுமொழித் தனர். அதுவருமாறு, "यत्नतः प्रतिषेध्यानः पुरुषाणांस्वतंत्रता, ."= புருடர்களுடைய சுதந்தரமுடைமை எமக்கு முயற்சியோடும் விலக்கத்தக்கதாயுள்ளது. என்று. ஆதலால், "स्वतंत्रः कर्त्ता" என் றது ஆசிரியர் பாணினியார்சூத்திரம், இதன்பொருள். சுதந்தர முடையவன் கருத்தா. என்னுமிலக்கணத்தால், அமைந் தகருத்தாவேதத்திற்கு ஒருவனும் இல்லை.

"ச", இந்த அவ்வியயம், "து" என்னும் அவ்வியத்தினு டைய பொருளில்வந்து, சுருதிக்குகும் ஸ்மிருதிக்கும்உள்ள இலக் கணவேறு பாடுகளை உணர்த்திற்று. சதுமுகன்மநுமுதலிய பல ஸ்மிருதி கருத்தர்கள். இருக்கின்றனரன்றே? அங்ஙனம் வேதத் திற்குத் தலைவன் ஒருவனுமில்லை. என்பதே இலக்கணவிசேடம்.

"वेदंश्रुत्वाचतुर्मुखः." என்னுந்தொடர் மொழிக்கண்ணேபுரா ணங்களுடைய அநுவங்க "நியாயத்தால் இரண்டாம் வேற்

மானுல் பலர்க்கு அவ்வாறு தோற்றியபோது, ஒருபிராதிபாதிக சருப்பத் திற்கு = தோற்றப்பாம்புக்கு பலவிவர்த்தோ பாதானகாரணங்களை உடன் படுவது, நூல் வழக்கில் மிகைபடக் கூறல் என்னும் குற்றந் தங்கு கின் றது. ஆதலால் அத்தோற்றப்பாம்புக்கு மூலமாகிய பழுதையே விவர்த் தோ பாதான மென்று வேறு சிலர் கூறுவர். அறியாமையாலுண்டாம் பிராந்தி = திரிபுணர்ச்சி பலவாதலால் அவனவனுக்குத் தோற்றிய பாம்பு அவனவனுக்கும் வேறுவேறுஎன்று, அம்மிகைபடக் கூறலென்னும் குற்றத் திற்கு இடனில்லாது சிலர்கூறுவர். எனவும், இன்னும், கனவிற்கண்டதா கிய உலகத்திற்கு அனுபவித்தவனே விவர்த்தோபாதானகாரணம், அவ் விடத்து அஞ்ஞானமே பரிணம உபாதானகாரணம், ஈசுவரன், அதிர்ஷடம்= சஞ்சிதவினை, முதலியவையே நிமித்தகாரணம். குடத்திற்கு மண்பரிணம உபாதானகாரணம்; குயவன், நிமித்தோபாதான காரணம்; அதற்கு அதிஷ் டானம் = மூலமாகிய அறிவு விவர்த்தோபாதான காரணம், என்று. அத் துவிதிகள் கூறுவர். ஆதலால், இங்குவேதத்திற்கு ஈசுவரன் விவர்த்தோ பாதான காரணம்.. ஈசுவரன் விவர்த்தமேவேதம். என்பது சாஸ்திர யோ நித்துவாதிகரணமொழிக்குத் தாற்பரியமென்று இவ்வுரையாசிரியர் கரு த்து. உபாதானம்- இருவகை- விவர்த்தம், பரிணமம், என, அறிக.

றுமைப் பொருளையடங்க மூன்றுசொற்களையும் தங்துமுடித்துக்கொள்ளல் வேண்டும் "அநுஜானீஹி" நியாயம், ஆசினியார் மைமினியார் சூத்திரம் இரண்டாம் அத்தியாயம் முதம்பாதத்தில் கூறப்பட்டது.

அங்ஙனமாயின், ஜோதிட்டோமமயாகத் தினையில், "உபசதஃ."=உபசத்துக்கள் என்னப்பட்ட உபதோறாமங்களில், மூன்று மந்திரங்கள் விதிக்கப்பட்டது. "யாதேஅக்னேயாசேயாச ஜாசேயா ஹராசேயாத நூர்வர்ஷிஷ்டாகஹ்வாரேஷ்டோக்ரவசோ அபாவதீம் த்வேஷம்வசோ அபாவதீக் ஸ்வாஹா." இவ்விடத்து, "அயாசேயாச்சரஜாசேயா, ஹராசேயா" என்ற பதபேதங்களால் மந்திரபேதமுண்டாகின்றன. அவற்றுள். முதன்மந்திரத்தின் "தனூஃ" என்பது முதலிய வசனவாக்கியங்களின் வேண்டுகையுள்ளது. ஈற்றுமந்திரம் "யாதேஅக்னே" என்னுமவாக்கியத்தின்முதலே அவாவிநிற்கின்றது, இடையின்கணுள்ளமந்திரம் முதலையும்முடிவையும் வேண்டிநிற்கின்றது. அவ்விடத்து. இப்படிப்பட்ட சங்கேதகமுள்ளது. *

இங்ஙனம் அம்மந்திரத்தால் விரும்பப்பட்டபொருளை நிரப்புவதற்காக லௌகிகம் ஆகிய சிலபதப் புணர்ச்சிகளை "அத்தியாஹாரம்" = வருவித்துக் கொள்ள வேண்டியதா ? (எனவே ஆராய்ந்து வருவித்துக் கொள்ள வேண்டுமா ? என்பது) அங்ஙனமின்றி, வேதத்துள் கூறப்பட்ட பதக்கூட்டங்களையே "அநுஷங்கம்" செய்துகொள்ள வேண்டுவதா ? (அநுஷங்கம்= கொண்டுகூட்டுவது). என்று வினவுதுமேல் குறிக்க சமூசயத்தின்வழுவம் (சமூசயம் = சங்கேதகம்)

வாக்கியத்தினுடையமுதற்பாகத்திற்கு முதல்மந்திரத்தோடு சம்பந்தத்தினையும், வாக்கியத்தின் முடிவுக்கு இறுதிமந்திரத்தோடே சம்பந்தத்தினையும், லௌகிக பதம் = உலகமொழிகளை வருவித்துக் கூறிக்கொள்ள வேண்டுவதென்று கூறியுள். வருங் குற்றம் யாதெனில் ?

---

* எனவே முதல்மந்திரத்திற்கு சம்பந்தமில்லாத இறுதிபாகமும், இறுதிமந்திரத்திற்குச் சம்பந்தமில்லாத மந்திர முதற்பாகமும் அநுஷங்கம்= கொண்டு கூட்டுவதிலும் அம்மந்திரத்துள்ள, வைதிகபதம் = வேதமொழிகளை விட்டு உலகமொழிகளை வருவித்துணைக்கலா மென்பது பூருவபக்கத்தார் கருத்து.

அற்றன்று.வைதிகமாகிய விஞக்கள் நேரிடுவதாயின், வைதிக மொழிகளானே முற்றுமுடித்துக் காட்டுவதற்குத் தக்கதாயிருத்தலின், வேறுமந்திரங்களின் சம்பந்த மூண்டாகிய சொற்களிலும் தன்னறிவுள்ளமைந்திருத்தலினல் வருவித்துக் கொள்ளத்தக்கசொற்களினும், மிகவும் அண்மைநிலையிலிருத்தலின் கொண்டு கூட்டலே செய்யவேண்டுவது. வருவித்துரைத்தல் அமையாது. அண்மைநிலை = அடுத்துநிற்பது.

இங்ஙனமாக, ஈண்டு, அக்கொண்டுகூட்டலாகிய வழக்கு அமைதியால் "కల్పాంతే," "భూత" "స్మరతి," என்னு மூன்று மொழிகளையும் மூலசுலோகத்தின் பூர்வார்த்தத்தில் கொண்டு கூட்டி முடித்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்தால் சதுமுகன் அந்தந்தமஹா கற்பத்தில் பரமேசுவரனல் கொடுத்தருளப் பெற்ற வேதத்தை ஞாபகஞ்செய்து, அவற்றுள், சிதறிக்கிடப்பனவும் தவறிவிட்டனவு மாகிய வருணச்சிரம தருமங்களைச் சேரத்திரட்டி ஸ்மிருதியாகிய தருமநூல்வடிவாய் வகுத்தியாத்தனர். (யாத்தல்=ஈண்டு செய்யுளாகக் கட்டுதல்) அவ்வாறு, "பிதாமகன்" மொழிகளும் அவ்வவ்விடங்களில் பலவுரையாசிரியர்களால் உதகரிக்கப் படுகின்றன. சதுமுகனது ஸ்மிருதிநூலாசிரியத்தன்மை, சுவாயம்புவ மநுவினலும் கூறப்பட்டது.

வருமாறு, "ఇదంశాస్త్రంతుకృత్వా సామామేవస్వయమాదితః। ఏధివద్ధ్రిహాయామాసమరీచ్యాదీనహంమునీన్" =இந்த சதுமுக்பிரமன் தானுகமுதற்கண் இந்நூலச்செய்து, விதிப்படி, என்னையே கொள்ளவைத்தார். நான், மரீசிமுதலியமுனிவர்களைப்பயிற்றினேன். என்று.

தருமம்வெள்ளம்போலுநித்தமென்பது.

எவ்வாறு, சதுமுகனே? அவ்வாறேசுவாயம்புவமநுவும்அந்தந்த அவாந்தரகற்பம் = இடையிட்ட சிறுகற்பங்களிலும் வேதத்தாற் கூறப்பட்ட தருமங்களை ஞாபகஞ்செய்து, நூல்யாத்து வகுக்கின்றனர். மநுவென்னும் மொழியைக் கொண்டு கூறியதால் ஈண்டு, யாஞ்ஞவற்கியர், விஷ்ணு, முதலியோர்கள், உபலக்ஷிக்கப் படுகின்றார்கள் (எனவே, உபலக்கணத்தாற் கொள்ளப்படுகின்றார்கள் என்பது). ஆதலால, இவ்வண்ணமாக ஒவ்வொரு மஹாகற்பத்திலும், அந்தந்த சதுமுகப் பிரமர்களாலும், ஒவ்வொரு

இடையிட்ட சிலகற்பந்திலும் அந்தந்த மநுமுதலியவர்களாலும் ஸ்மிருதிகள் கூறப்பட்டதனால், தருமமுதலியவற்றிற்கு வெள்ளப் பெருக்கே போலும் நித்தியத்தன்மை நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. இக்கருத்தை யுடன்பட்டு, மஹாபாரதம் ஆசுவமேதபர்வத்தில், கூறப்பட்டதாவது. "யுகஸ்யாவர்தமானேஷு தர்மோ ஹ்யாவர்ததே புனஃ। தர்மஸ்யாவர்தமானேஷுலோகோ ஹ்யாவர்ததேபுனஃ." யுகங்கள் சுற்றி வட்டமிட்டுக்கொண்டு வருகையில், மீட்டும் தருமமும் வட்டமிட்டு வருகின்றது. தருமங்கள் வட்டமிடுகையில், மறுபடியும் உலகமும் வட்டமிடுகின்றது. எது; காண்க. யுகபேதத்தால் தருமவிசேட விலக்கணத்தை யுடன்பட்டு "தர்ம" எனப் பன்மையாற் கூறினர்.

(உகஅ)

யுகபேதத்தாலுள்ள தருமவிசேடம்வருமாறு.

ஸ்மோ॥ அன்யேகृதயுகேதர்மா స్త్రేతాయాంద్వాపరేయుగే।
அన్యేకలాయుగేనృణాంయుగరూపానుసారతஃ ॥உஉபு॥

என்றது. அந்தவிசேட விலக்கணத்தை நான்முகமாக வுணர்த்துகின்றது.

(இ-ள்.) கிருதயுகத்தில் மனிதரின் தருமங்கள்வேறு. திரேதாயுகம், துவாபரயுகம் கலியுகத்துள்ளும் வேறுவேறு. அவை அந்தந்தயுகங்களை அநுசரித்து ஏற்றபடி இருக்கும். எ-று.

ஈண்டு, வேறு என்பது தருமவழுவத்தை வேறு என்றதன்று. பிறவெனின், தருமத்தின் செய்கைவேறு என்றவாறு. இங்ஙனமில்லையேல், அத்தருமங்களில், பிரமாணங்களாயிருக்கின்றவேதவிதியும், யுகபேதங்களால், வேறுவேறுபடவேண்டிய தாகமுடியும் ஆகலால். அங்ஙனமன்று. வேதத்துள்ள இவ்விதி, கிருதயுகத்தில் இவ்வாறு ஓதல்வேண்டும். இந்திரேதாயுகத்தில், என்பனமுதலிய வகைமைகளை வகுக்கும் வகைப்பாடுகளில்லை. ஆகலின் தருமவழுவத்திற்கு எப்பொழுதும் வேறுபாடில்லை.

யுகபேதத்தால், தருமத்தின் செய்கை வேறுபடுவதற்கு எடுத்துக்காட்டு உள்ளது. (எடுத்துக்காட்டு = திஷ்டாந்தம்.) ஓரோவேள்வித்தீக் காரியத்திற்குக் காலை மாலை என்னும் காலபேதத்தால் அநுட்டானஞ் செய்யுமுறை வேறுபடுவது வேதத்தாற்

கூறப்படுதலின், வருமாறு, " ஋தம்த்வாஸத்யேனபரிஷிஞ்சாமீதிஸாயம்பரிஷிஞ்சதி। ஸத்யம்த்வர்தேனபரிஷிஞ்சாமீதிப்ராதஃ. "="பரிஷிஞ்சதி." ="பரிஷேசனம். "=ஓமத்தீ, அவிசு, நிவேதநப்பொருள், உண்டியங்நம், இவற்றிற்கு நீர்வளை யக்கட்டுதலாம். உண்மையான உன்னை சத்தியத்தால் அவ்வள வில் நினைக்கின்றேன். என்ற பொருளினையுடைய மந்திரத்தைக் கூறி மாலையில் பரிஷேசநம் செய்கின்றனன். சத்தியமாகிய உன்னை யதார்த்தத்தினால் அவ்வளவில் நினைக்கின்றேன்.என்றபொருளினை யுடைய மந்திரத்தைக்கூறி காலையில் பரிஷேசனம் செய்கின்றனன்- எறு. இது கிருஷ்ண யஜுஸ- பராயாதம் வாக்கியக் கிரந்தத்துட் கூறியது. (அவற்றை முறையேகாலை; சூரியன் முன்னிலையிலும், மாலை, தீமுன்னிலையிலும்கூறுப.)

இனி அவ்விடத்தில் அருத்தவாதத்தால், மந்திரம் வேறு வகையாற் கூறப்பட்டுள்ளது. வருமாறு "அக்நிர்வா஋தம்। அஸாவாதித்ய ஸ்ஸத்யம்। அக்நிமேவததாதித்யேனஸாயம்பரிஷிஂசதி। அக்நாதித்யம்ப்ரீத ஸ்ஸஹ." = அக் கிநி யதார்த்தவடிவனென்பது உலகறிந்தது. இச்சூரியன் சத்தி யம். ஆதலால், அக்கிநியையே சூரியனல் சாயுங்காலத்தில் பரி ஷேசனம் செய்கின்றனன். சூரியனை அக்கிநியோடுகாலையில். எ-று.

ஆயின், ஈண்டும், இவ்வாறு "யுகதர்மாநுஸாரதஃ" என்பத னல் யுகதருமத்தை அநுசரித்து, தரும அநுட்டானத்தின் செய் கை வேறுபாடு மூற்றுகின்றது.

யுகங்களின் வடிவம், அநுட்டிப்பவர்களாகிய புருடரின் ஆற் றலின் ஏற்றத்தாழ்ச்சியின்படி, கூடிக்கொண் டிருக்கின்றது. அத னைப்பற்றி அநுட்டானத்துள் ஒவ்வாமைநேரிடுகின்றது. எவ் வளவு வல்லனவனே? அவ்வளவு செய்வன். என்று நித்தகருமங் களில் நிச்சயித்திருத்தலின்.

அற்றேலற்றுக. பூருவமீமாம்ஸம். ஜைமிநிசூத்திரம், ஆரு வது அத்தியாயம் மூன்றும்பாதத்துள் கூறப்பட்டதாவது. "யாவ ஜ்ஜீவமக்நிஹோத்ரஂஜஹுயாத்" = பிழைத்துள்ள வளவில் வேள்விக் காரியம் செய்யவேண்டும். எ-று. எனவேதத்தாற் கூறப்பட்டது. ஆயின் ஆண்டு ஐயமுள்ளது. என்னை? எல்லா அவயவங்களோடு மே செய்துமுடிப்பதில் அதிகாரமோ? அல்லது, எப்போது, எவ்வளவு அவயவங்களைக் கொள்வதில் சத்தனகின்றனனே? அப்

போது, அவ்வளவு அவயவங்களோடு கூடிக்கொண்டிருக்கின்ற மூக்கியகருமங்களைச்செய்பவனுகி அதிகரிக்கின்றுனே ? என்று.

ஆயின் எல்லா அங்கத்தோடும் கூடியமூக்கிய கருமங்களை பயனுக்குச் சாதனமாதலினாலும், அங்கங்களில், வைகல்லியம்= கவறுதல்உண்டானற் பயன் பிறவாமையினாலும், எல்லா அங்கங்களையும் ஏற்றுக்கொள்வது தக்கது எனில் ?

அங்ஙனமன்று, இவ்விடத்து, பிழைத்திருப்பது, வேள்வியின் பொருட்டே என்று விதிக்கப்பட்டது. அன்றி, அதனது அங்கங்களைப் பற்றியன்று. ஆகவின். நிமித்தம் ஒன்றுனல் நைமித்திகம் அவசியமாயினுமாக; அங்ஙனமில்லையேல், அதற்கு நிமித்தமாந் தன்மையே யுண்டாதலில்லையாம். ஆதலால், செய்து முடிக்கலாகாத அங்கங்களை ஒழித்தாலும் மூக்கியமானதை ஒருதலையாகச்செய்தல் வேண்டும். அவ்வளவினனே சாஸ்திரப்பிரமாணத்தால் பயனுண்டாகின்றது. என்பது நிச்சயப் படுகின்றது.

இன்னும் இக்கருத்தைப் போதாயநரும்குறித்திருக்கின்றனர். வருமாறு. "యథాశక్త్యవస్థానురూపతః। యేనకేనాపికార్యాణి నైవనిత్యానిలోపయేత్." = சக்தி=ஆற்றல், அவஸ்தை=பருவம் இவற்றிற்குத் தக்கவாறு, எவ்வளவு முயற்சியாவதுபட்டு எவ்வகையாலாயினும் நித்தகருமங்களைச் செய்யவேண்டும். உலோபம் செய்யலாகாது=விடலாகாது-என்று. புருடர்களுடைய ஆற்றலின் ஏற்றக்குறைவால் செய்யப்பட்டது, அநுட்டானத்தினுடைய வைஷம்மியமாம். (வைஷம்மியம் = வேற்றுமை.) என்று கூறவேண்டி "నూనం" = மனிதர்க்கு. என்று கூறப்பட்டது. (உஉ)

யுகதருமபேதங்கள்வருமாறு.

శ్లో॥ తప్పఃపరంకృతయుగే త్రేతాయాంజ్ఞానముచ్యతె।
ద్వాపరేయజ్ఞ మిత్యాహుర్దానమేవకలౌయుగె ॥౩౭॥

என்பது. பின்பு, பிரதிஞ்ஞை செய்யப்பட்ட = லைலக்ஷணியங்களை= விசேட விலக்கணங்களை ஆறுசுலோகத்தான் முறையே கூறுகின்றுர். அவற்றுள், நான்குயுகங்களினிடத்தும் மூக்கியத்தன்மையால் அநுட்டானம் செய்யும் பொருட்டு, இனிது

முடியத்தக்கவாயும், மேலான புருடார்த்தங்களுக்கு ஏதுவாயும் உள்ளதருமங்களைப் வகுத்துக் கூறுகின்றது.

(இ-ள்.) கிருதயுகத்தில், தவமே சிறந்தது. திரேதாயுகத்தில், ஞானமுயர்ந்தது. துவாபர யுகத்தில், வேள்வி உத்தம மானது. கலியுகத்தில், தானமே முக்கியமா யுள்ளது. என்று உணர்ந்த பெரியோர் கூறுகின்றனர். எ-று.

தவம், என்பது, * "கிருச்சிரவிரதம்." † சாந்திராயணவிரதம், முதலியவற்றுல் உண்டிவெறுத்தல். என்னை? "తప్నానశనాత్పరం" = உண்டியை வெறுத்தொழித்தலினும் சிறந்த தவம் இல்லை - எறு.. இது கிருஷ்ணய ஜஸு, அஉ - வது, பிரசிகம். அங்ஙனமாயினும், தானத்திற்கும் தவமாந்தன்மையும் விதிக்கப்பட்டது. என்னை? "ఏతత్ఖలువావతపఇత్యాహుర్యస్స్వందదాతి." = தன்னுடைய உடைமையாகிய தனத்தைக் கொடுக்கின்றுன் என்பது எதுவோ? அதனையன்ரே? தவமென்று கூறுகின்றனர். எ-று. இங்ஙனம் சுருதி, கூறினும், இங்கு அது சொல்லக் கருதியவாறல்லவாம். தானத்தை வேறு கூறியிருத்தலின்.

ஆயினும், வியாசரால், தவம் வேறுவிதமாகக் குறிக்கப்பட்டது. வருமாறு. "తపస్స్వధర్మవర్తిత్వం శౌచంసంకరవర్జనం." = தனக்குரியதருமத்தில் இருப்பதேதவம். வேற்றுக்கலப்பு இல்லாததேசுத்தி. எ-று. என்னெனில்? இது குற்றமன்று. கிருச்சிரமுதலியவையும் தனக்குரியதரும விசேடமாகவே யிருத்தலின். "తపసంతాపే." =

---

* கிருச்சிரம் - எது. இத்தனைகாலம்வரையில், இன்னஉணவை, இவ்வளவு, இந்தமுறையாலேகொண்டு, அவ்வளவிலே பிராணனைத் தரிக்கச்செய்து பசியைப்பொறுத்தல் என்பதுமுதலிய இலக்கணத்தோடு பிராயச்சித்தகாண்டத்திற் கூறப்படும் விரதவிசேடங்கள். அது, பிராஜாபத்தியம், பராகம், சாந்தபனம், தப்தம்முதலிய பெயர்களையுடையன.

† சாந்திராயணம்-எது. ஒருதிங்கள்வரையும் செய்யத்தக்க உண்டி இவ்வளவு என்னும் வரையறையுடைய விரதம். திங்கள் = மாசம். இது பூரணை முதல் மறுபூரணைவரையிலும் செய்யத்தக்கது எனவும், அமாவாசை முதல் மறுஅமாவாசை வரையிலும் செய்யத்தக்கது எனவும்இருவகைப்படும். கிருஷ்ணபக்ஷம்=தேய்பிறையில் உணவைக்குறைப்பது. சுக்கிலபக்ஷம்=வளர்பிறையில் உணவை விருத்தி செய்வதுமாம். இதுவும் பிராயச்சித்த காண்டத்தில் கூறப்படும்.

"தப" என்னுஞ்சாதுவிற்கு "ஸந்தாபே" என்பது பூலர்த்தல் = சுடுதல்=வற்றச்செய்தல் என்பது பொருள். இது "தாதுபாடம்" இந்தப் பகுதியிற் பிறந்த "தபஃ" என்னும் மொழிக்குத் தேகத்தை வற்றச் செய்வது என்னும்பொருளில் ஆற்றல் மிக்கது. அதனாலேயே ஸ்காந்தத்துள்ளுங்கூறப்பட்டது. வருமாறு. "வேதோக்தேனப்ரகாரேண கृச்ராசாந்த்ராயணாதிபிஃ। சரீர ஶோஷணம்யத்து தத்தப இத்யுச்யதேபுதைஃ." =வேதத்துட்கூறப்பட்டவகைகளையால், கிருச்சிரமம் சாந்திராயணம்முதலியவிரதங்களால்இவ்வுடம்பினைவற்றச் செய்வதே தவமென்று அறிவுடையோராற் கூறப்படுகின்றது.என-று.

"கோஸாமோக்ஷைகதம்கேன ஸம்ஸாரம்ப்ரதிபன்னவான்। இத்யாலோசனமத்ய-ஜ்ஞாஃதபஶ்சம்ஸந்தி பண்டிதாஃ." = இவன்யார்? மோக்ஷம்எப்படி? சமூசாரத்தை எவ்வாறு அடைந்தான்? என்று ஆராய்வதையே பொருளாயுணர்ந்த அறிஞர்கள், தவம் என்றுபுகழ்ந்து கூறுகின்றனர். என்றவாறு தவமாவது யாதுகூறப்பட்டதோ? அது வேறேயாம். ஆண்டு "தபஃலோசநே." "தப" என்னும் பகுதிக்கு ஆராய்ச்சி என்னும்பொருள். ஆதலால் அப்பகுதியா லீண்டுக் கூறியதவம் என்னுமொழியாக்கம் பிறந்துள்ளது. இது (பாணினியாகரணம் தாதுபாடத்திற் கண்டது). அங்குதவம் என்றது இங்கு ஞானமென்னு மொழியாற் றழுக்கப்பட்டிருக்கின்றது. (அங்குஎன்றது நிரோதாயுகம்என்றபடி) "பரம," என்னுமொழி முக்கியமாக அடைட்டிக்குந் தன்மை தென்னும் பொருளைத் தருகின்றது.

ஆனல், நிரோதாதியுகங்களில், தவம்என்பது ஆதரிக்கப்படாதொழியும்? கிருதயுகத்திலும், ஞாகம், வேள்வி, தானங்களை ஆதரணை செய்யாதுவிடுவார், எனில்? அங்ஙனமன்று.

வேறுசெய்யலாகா, இஃதென்றனையே செய்தல்வேண்டும் என்னும் வரம்பிட்ட நியமம் இவ்விடத்துச் சொல்வதற்கு எண்ணமல்லவாதலின். ஈண்டுஒரு அநுட்டானவிதியாவது? சொல்லத் தொடங்கியதில்லையன்றே. எந்தக் காரணம்பற்றி விதிவாக்கியத்திலை விதிக்கப்பட்டிருக்கின்றதோ? அதன்கணைழுந்த ஐயத்தையொழிக்கும்படி, அதன்பொருளைக்கூட்டி முடிப்பதற்குக் கூறவேண்டிய எண்ணிட்ட வரம்பு இவ்விடத்து எண்ணிடப்பட்டது எனில்? "ஷட்-ஶிரஃ", அறுவகைத்தொழிலினும் அசத்தனை

யிருத்தல் வேண்டும். என்பதுமுதலியவற்றால் அதனதுதோற்றம் முன்னர்க்கூறப்படும். இவ்விடத்திலோ? யுகவல்லமையை மாத்திரம் விளக்கப்படுகின்றது. என்னை? இளவெனில் = வசந்தகாலத்தில் பூக்களின் விசேடம், முதுவேனிலில், வெப்பமிகுதி, என்று இவ்வாறு பருவபேதங்களின் ஆற்றல் கூறுவது போலும், கிருதமுதலிய யுகங்களின் வல்லபத்தால் தவம் முதலியவற்றின் ஏற்றப்பாடு இவ்விடத்துச் சொல்லவேண்டியிருக்கின்றது. ஆதலாலே, யுக யுகத்திற்கு முரிய வல்லபமிது என்று கூறப்பட்டது. இந்த வல்லமையைத்தெரிந்து கொள்வதினால் வரும்பயனையும் மேற்கூறுவர். "తేషాంనిందానకర్తవ్యాయుగరూపాహితేద్విజాఃː" என்று. இவ்வாற்றலே பிரகற்பதியும் கூறித்திருக்கின்றனர். "తపోధర్మ్మకృతయుగే జ్ఞానంత్రేతాయుగెస్మృతం। ద్వాపరేచాధ్వర్మ్మప్రోక్తస్తిష్యేదానందయాదమఃː" = கிருதயுகத்தில்தவமேதருமம், தீரேதாயுகத்தில் ஞானமாகக்கூறப்பட்டது. துவாபரயுகத்தில் வேள்வியைக்கூறப்பட்டது கலியுகத்தில், தானம். தயை, தமம்=பொறிவழிசெல்லாது புலன்களை யடக்கல் தருமம். எ-று. காண்க. (உஉ)

யுகபேதத்தாற்பிரமாணபேதமாமாறு.

శ్లో॥ కృతేతుమానవాధర్మ్మాస్త్రెతాయాంగౌతమాస్స్మృతాఃː
ద్వాపరేశఙ్ఖలిఖితాఃకలౌపారాశరాస్స్మృతాఃː ॥౩౮॥

என்பது. தருமங்களைப் பிரித்து, பிரித்தமுறையே அவற்றிற் குரிய பிரமாணங்களையும் வகுக்கின்றது.

(இ-ள்.) கிருதயுகத்தில் மநுதருமநூலும், திரேதாயுகத்தில் கௌதமதருமநூலும், துவாபரயுகத்தில் சங்கலிகித தருமநூலும் கலியுகத்தில் பராசர தருமநூலும் பிரமாணங்களாக விருக்கின்றன. எ-று.

மநுமுதலிய நூல்களிற் கூறப்பட்ட தருமங்களினுடைய பெருவழக்கத்தினால் நூற்பிரமாணத்தினுடைய விளக்கமும் அதன் அருக்கத்தினாலே தேற்றப்படுகின்றது. (உசஉ)

காலம்பற்றியிடத்தால் விளையும்குற்றம்.

శ్లో॥ త్యజేద్దేశంకృతయుగెత్రేతాయాంగ్రామముత్సృజెత్
ద్వాపరేకులమెకంతుకార్త్తారంతుకలౌయుగె ॥౩౯॥

என்பது. தருமத்தைப் போலவே அதருமத்தையும் கூற வேண்டுதலால், அதனை அடைவிக்கும் இடவிசேடத்தை விலக்கு முகமாகப் பிரித்துக் கூறுகின்றது.

(இ-ள்.) கிருதயுகத்தில் பாவஞ்செய்தவனிருக்கும் தேயத்தையே விட்டொழிய வேண்டும். திரேதாயுகத்தில், அப்படிப்பட்ட கிராமத்தை விட்டொழிய வேண்டுவது. துவாபரயுகத்தில் அப்பாவியின் குடிவழி ஒன்றினைமாத்திரம் விட்டொழியவேண்டியது. கலியுகத்தில் அப்பாவியை மாத்திரம் விட்டொழிதல் போதுமானதாக விருக்கின்றது. எ-று.

பதிதனிய புருடன் எந்நாட்டில், இருக்கின்றானே? அப்படிப்பட்டவன் செய்தபாவத் தொழிலின் ஆற்றலால் அந்தந்தேயமே அதருமத்தை விளைக்கின்றது. இந்நியாயத்தைக்கிராமத்திற்கும் கூட்டியுரைத்துக்கொள்க. பதிதன் = தரும வொழுக்கங் கெட்டவன். இனி குலத்தை விட்டொழிவது என்றால், பதிதனுடைய கால்வழியில் மணவினை உணவுவினை முதலியவற்றிற்குத் தரும சீலர்கள் உடன்படலாகாது. பாவியைவிட்டொழிதலாவது, அவனோடு பேசுதல் பழகுதல் முதலியவற்றை யொழித்தல். (உருஉ)

ஒழிக்கத்தக்க பாவங்களினது நிமித்தவகை.

శ్లో॥ కృతేసంకభాషణాదేవత్రేతాయాంస్పర్శనేనచ
ద్వాపరేత్వన్నమాదాయకలౌపతతికర్మణా ॥ఒఒపు॥

என்பது, விடத்தக்க இடமுதலியன போல ஒழிக்கத்தக்க வதுக்கவையும் வருக்கின்றது.

(இ-ள்.) கிருதயுகத்தில் பதிதனோடு பேசுதலினாலும் திரேதாயுகத்தில் அவனைத் தொடுதலாலும், துவாபரயுகத்தில், அவனதுகை யுணவைப் புசித்தலாலும், கலியுகத்தில், தான்பாவ கருமங்களைச் செய்தலினாலும், மனிதன் பதிதனாகின். எ-று.

கிருதமுதலிய யுகங்களிலே ஆவதுபோலக்கலியுகத்தில்பதிதனோடு பேசுதல் முதலியவற்றால் தான்பதிதனாவதில்லை. பிறவெனில்? கொலைமுதலிய தீவினைகளைச் செய்தலால் பதிதனாகின்றான். எ-று. (உசூஉ)

சாபம்பலிக்குங்காலபேதம்வருமாறு.

ஸ்லோ॥ கృతెతత్ప్షణికశ్శాపస్త్రేతాయాందశభిర్దినైః
ద్వాపరెచైకమాసెనకలౌసంవత్సరెణతు ॥౨౭౫॥

என்பது, பெரியோர்களை அவமதித்தல் முதலியவற்றில் அவராற் சாபமுண்டானால் அதுபக்குவப்பட்டு அத்தீயவினை செய்தவனுக்குத் துன்பப்பயனைக்கொடுப்பதற்கு ஏற்றகாலத்தை வகுக்கின்றது.

(இ-ள்.) கிருதயுகத்தில் சாபமானது அதேகணத்திலும், திரேதாயுகத்தில் பத்துநாளிலும், துவாபரயுகத்தில் ஒரு திங்கள் அளவிலும், கலியுகத்தில் ஒருவருட அளவிலும் பலிக்கும். எ-று. உளஅ.

தருமத்தின்ஏற்றக்குறைவுக்குரியநிமித்தம்.

ஸ்லோ॥ అభిగమ్యకృతెదానంత్రెతాస్వాహూయదీయతే
ద్వాపరెయాచమానాయసెవయాదీయతేకలౌ ॥౨౭౬॥

என்பது, தருமத்தின் ஏற்றக்குறை வினைகு நிமித்தங்களை வகுக்கின்றது.

(இ-ள்.) கிருதயுகத்தில் கொடுப்பவன் எற்பவனிடஞ்சென்று கொடுத்துவருவன். திரேதாயுகத்தில் தனே அழைப்பித்துக் கொடுப்பன். துவாபரயுகத்தில் வந்து இரந்தவனுக்குக் கொடுக்கின்ருன். கலியுகத்தில் காத்தவனுக்குக்கொடுக்கின்ருன். எ-று.

கிருதயுகத்தில் எற்பவன் எங்குள்ளானே ? கொடையாளன் அங்குதானுக வலிதிற்சென்று, தனது ஆசிரியனைப்போல அவனை உபசரித்து வேண்டித் தானத்தைக் கொடுக்கின்ருன். திரேதாயுகத்தில் ஏற்பவனைத் தன்னிடத்திற்கு அழைப்பித்துத் தானத்தைக் கொடுத்தனுப்பு கின்ருன். "త్రేతాసు,,=இவ்விடத்துப் பன்மையீறு, கிருத துவாபர கலியுகத்துள்ள ஒருமை யீற்றுக்குச் சாதிஒருமையைக் குறிக்கின்றது, துவாபரயுகத்தில். எற்பவன் தானேவந்துஇரந்தபோது, கொடுக்கப்படுகின்றது. கலியுகத்தில், அங்ஙனம்வந்து கேட்டளவிலேயன்று. பிறவெனில் ? அடுத்துக் காத்தலால், என்றுணர்க. பிரகற்பதியும் இங்ஙனம் கூறினர்.

"కృతెప్రదీయతేగత్వా త్రేతాసాన్వీయతేగృహే। ద్వాపరేచప్రార్థయత్నే కలావనుగమాన్వితః.,,=கிருதயுகத்தில்சென்று கொடுக்கப் படுகின்றது. திரேதத்தில் அழைத்துவரப்படுகின்றான். துவாபரத்தில் வந்துவேண்டுவானுக்கு. கலியில்செவிப்பவன். எ-று. காண்க. (உஅஉ)

நிமித்தத்தாலுண்டாகியதானத்தின் அளவு.

శ్లో॥ ఆభిగమ్యోత్తమందానమాహూయైవతుమధ్యమం।
అథమంయాచమానాయ సేవాదానంతునిష్ఫలమ్ ॥౨౯౫॥

என்பது. காரணம் பற்றிச்செய்த கொடையின் ஏற்றக் குறைவாகிய அளவையுணர்த்துகின்றது.

(இ-ள்.) வலிது சென்று கொடுக்கும் கொடையேதலைப்பட்டது; அழைத்துக்கொடுப்பது இடைப்பட்டது; கேட்டபின் கொடுப்பது கடைப்பட்டது; காத்தபின்கொடுப்பது பயனற்றது. எ-று.

தலைப்பட்டது முதலிய உட்பிரிவுகள் புராணசார்மென்னும் நூலில், பயன் முன்னிலையாகக் கூறப்பட்டது. வருமாறு, "గత్వాయద్దీయతేదానం తదనంతఫలంస్మృతం। సహస్రగుణమాహూయ యాచితంతు రథ్యకం। అభిగమ్యతుయద్దానం యద్వద్దానెష్వయాచితం। విద్యతేసాగరస్యాంత స్తస్యాం తోనైవవిద్యతే.,, = சென்றுகொடுக்குந் தானத்திற்குப் பலம் அளவிறந்தது; அழைத்துக் கொடுக்குந் தானபலம் ஆயிரமடங்காம்; கேட்டுக்கொடுக்குந் தானபலன் அனைப்பங்காம், கடலுக்கு முடிவுண்டு, சென்று கொடுத்து வரும் தானத்திற்கும் கேளாமலே கொடுக்குந் தானத்திற்கும் முடிவில்லையாம். (உகஉ)

கலிவல்லமை.

శ్లో॥ జితోధర్మోహ్యధర్మేణసత్యంచైవానృతెనచ।
జితాశ్చైరైస్తు రాజాన స్త్రీభిశ్చపురుషాస్సకలా ॥౩౦౫॥

శ్లో॥ సీదంతిచాగ్నిహోత్రాణి గురుపూజాప్రణశ్యతి।
కుమార్యశ్చ ప్రసూయంతే తస్మిన్కలియుగెసదా ॥౩౧౫॥

என்பன இந்நூலுள் கலிதருமத்தையே சிறப்புவகையாகக் கூறுவராதலின் முன்னர் அக்கலியின் ஆற்றலே விசேடமாக விரித்துணர்த்துகின்றது.

(இ-ள்.) கலியுகத்தில் தருமம் அதருமத்தாலும், உண்மை பொய்யினாலும், அரசர்கள் கள்ளராலும், புருடர்கள் மாதர்களாலும், வெல்லப்படுகின்றார்கள். வேள்வித்தீக்காரியம், மிகுத்துள்ளது வாவரத்தேய்ந் தொழிந்து போகின்றது. குருபணிவிடை அழிந்து போகின்றது. கன்னிகைகள் பிள்ளைகளைப் பெறுகின்றார்கள். அக்கலியுகத்தில் எப்போதும் இவ்வாறும். எ-று.

அதருமம் வெல்லுகின்றது என்றால் முக்காற்பங்கு பாவமாகவே யிருக்கின்றது. தருமம்தோற்றுப் போகின்றது எனில்? காற்பங்கு புண்ணியமிருப்பது. அதனை பிரகற்பதியும் கூறினர். வருமாறு, "తిష్యధర్మస్త్రిభిఃపాదైర్ధర్మఃపాదేనసంస్థితః" கலியுகத்தில் பாவம், மூன்று காலினாலும், அறம் ஒருகாலினாலு நிற்கின்றது. எ-று. சத்தியம், பொய், என்பன தருமம், பாவம், என்பவற்றின் வடிவாகவே யிருப்பினும் வேறுபிரித்தது யாதுகுறித்தற் கெனில்? தருமம் அதருமம் என்பன இதுவென்று எடுத்துக் காட்டும் பொருட்டு. எவ்வளவு எவ்வளவு கலிவிருத்தி அடைகின்றதோ? அவ்வளவு அவ்வளவு பாவமும் விருத்தியடையும். என்று கூறவேண்டி கள்ளர்முதலிய உதாரணங்களை விரித்துக் கூறினர். அங்ஙனம், விஷ்ணு புராணத்துள்ளும் கூறப்பட்டது. வருமாறு, "యదాయదాసతాంహాని ర్వేదమార్గానుసారిణాం। తదాతదాకలెర్వృద్ధిరనుమెయావిచక్షణైఃI నప్రీతిర్వేదవాదేషు పాషండేషుదయారసఃI తదాతదాకలెర్వృద్ధి రనుమేయాద్విజోత్తమైఃI = வேதவழியைத் தொடர்ந்து நடக்கும் பெரியோர்களுக்கு எப்போதெப்போது கெடுதிவருகின்றதோ? அப்போது அப்போது கலி உயர்ந்தது என்று அறிவுடையோர் மதித்தறிய வேண்டுவது. மக்களுக்கு வேதவொழுக்கத்தில் இச்சையொழிந்துபோனாலும், பாசண்டர்மேல் தயவுடைமை பிறந்தாலும் கலிவிருத்தியாயிற்று என்று, அறவோராகிய அந்தணர் அறிவார். எ-று. காண்க. (கூகஅ)

யுகதருமபேதங்களுக்குக்காரணம்.

శ్లో॥ కృతేత్వస్థిగతాఃప్రాణాస్త్రేతాయాంమాంసమాశ్రితాఃI
ద్వాపరేరుధిరంచైవ కలౌత్వన్నాదిషుస్థితాఃII 3అపు॥

என்றது. கிருதயுகத்தில் தவஞ்சிறந்தது என்றது முதலியனவாக மேற்கூறப்பட்டுள்ளனவற்றிற்குக் காரணங் கூறுகின்றது.

(இ-ள்.) கிருதயுகத்தில் உயிர் உடம்பிலுள்ள எலும்பு அழியாமலிருக்கு மளவு மிருக்கின்றது; திரேதாயுகத்தில், அது அவ்வுடம்பின் தசையில் நிற்கின்றது; துவாபரத்தில், இரத்தத்திலே; கலியில் சோறு முதலியவற்றுள் இருக்கின்றது. எ-று.

பிராணசொரூபவிசாரம்.

"ப்ராணஃ"=பிராணன் எது. இதயமுதலிய தானங்களிலிருப்பதும், ஐவகைத் தொழிலையுடைய தாகியதேகார் காற்றின் விசேடம். இனி அந்தப்பிராணன துவடிவு "மைத்ரேயதாகை" யில்விளங்க விதிக்கப் பட்டது. வருமாறு, "ப்ரஜாபதிர்வா ஏகோ ஽க்ரேத்விதீய த் நாரமத்ரைகஸ்ஸஜத்தான மபிధ్యాయ బహ్వీర్మే ప్రజా అసృజతేతా అస్మైవా ప్రబుధ్దా అప్రాణాస్థాణురివసంతిష్ఠ మానాఅపశ్యత్ నారమత్ సోమన్యత ఏతాసాం ప్రతిబోధనాయాభ్యంతరం విశానీతిసవాయుమివాత్మానం కృత్వాభ్యంతరంప్రావిశత్ సఏకోనాశకత్ సపంచధాత్మానంప్రవిభజ్యేచ్యతే - యఃప్రాణోపాన స్సమాన ఉదానోవ్యానఇతి - అథయోయ మూర్ధ్వమున్నిమయతి ఏషవావసప్రాణః అథయోయమవాచం సంక్రామతిఏషవావసో పానోథ యోయంష్ఠ ష్ఠమన్న ధాతుమపానేధ్దాపయతి అణిష్ఠం చాంగేనమూన యత్యేష వావసమానోథ యోయంపీతా శితముద్గిరతినిగిరతి ఏషవావస ఉదానోథ యఏతాస్నిరా అనువ్యాప్త ఏషవావసవ్యానః. "=మూకలில் பிரசாபதி ஒருவனே, தன்னைத்தானே யெண்ணிக்கொண் டிருந்தான். அவன்களிக்க வில்லை. (அதனால்) அநேகமுயிர்களைப் படைத்தான். அவ்வுயிர்கள் சத்தியில்லாமலும் எழுந்திருக்காமலும் கல்லைப்போற்கிடக்கக் கண்டான். அவைகளுக்குக் களிப்புண்டாக வில்லை. இவற்றை உயிர்ப்பிக்கும்படி இவற்றுள் நானேபுகுவேன் என்று நினைத்தான். அவன் தன்னைக்காற்றாகச்செய்து உட்புகுந்தான். அவன் ஒருவனல் மூற்றும் வல்லவனாகாதவனன். (பின்) அவன் ஐவகையாகத்தன்னைப்பிரித்து, பிராணன், அபானன், சமானன், உதானன், வியானன், என்று கூறப்பட்டான். அவற்றுட்பிராணன், உள்வளிமேலெழுந்திருத்தல். (உள்வளி=மூச்சு) அபானன், அதனைக்கீழ்போகச்செய்தல். சமானன், உண்டவுணவினை நூலகத்திற் கழியத்தக்கதை அபானத்திற்றள்ளிச்சூக்குமபாகத்தை அவயவங்களில் விரவச்செய்வது. உதானன், குடித்ததும், உண்டதுமாகிய பண்டங்களைச் சலமலங்களாகக் கக்கவும் கீழ்போக்கவுஞ் செய்வது. வியானன், நாடிகளிற்கலந்துநின்றவற்றைத்தளரவும்பந்திக்கவும்செய்வது. எ-று. காண்க. "அஶ்வ" எது. கல்லைப்போல எறு.

இனி, வாய், கண், முதலியபொறிகளும் பிராணனுக்குள்ள டங்கியதாய்த்தொழிற்படுதலால், அப்பிராணன் என்னு மொழி யால் உபசரித்துக் கூறப்படுகின்றது. அதனாலே சந்தோகர்கள்= சாமவேதமுடையார்கூறுவது, "சாந்தோக்கியஉபநிடதம்" "నవవా చోనచక్షూంషినశ్రోత్రాణినమనాంసీత్యాచక్షతే ప్రాణఇత్యేవాచక్షతే." = வாய், கண், செவி, மனம், என்று கூறுர். பிராணன் என்றே கூறுகின்றனர். எறு - காண்க.

ஆதலால், பொறிகள் வாயுக்கள் இவற்றின் பொதுவடிவா கியும், அந்நிய வுலகங்களினும் சஞ்சரித்துவர வல்லதுமாகிய இலிங்கசரீரம்=சூக்குமஉடம்பு, பிராணன் என்னு மொழியால் சொல்லவேண்டிவந்தது.

அந்த இலிங்க சரீரமானது, எலும்பு, தசை, முதலியவற்று லாய தூலஉடம்பினிடத்துக் கருமமாகிய கயிற்றினல் கட்டப்படு கின்றது. அக்கட்டு, அந்தந்த யுகங்களினுடைய வல்லமையால், எலும்பு முதலியவற்றுள் சேர்ந்திருக்கின்றது. அங்ஙனமாதலின், "கிருச்சிரம், சாந்திராயணம்" முதலிய விரதங்களில், அந்நமுத லிய உணவுகளை வெறுத்துவிடுதலினுலே தசைமுதலியனவற்றின விடத்தும் எலும்புகள் வினைவில் அழியாதிருத்தலினல் பிராண னுக்கு ஊறுபாடு இல்லையென்றும், கிருதயுகத்தில் தவம் எளி தாகச் செய்து முடிக்கலாம் என்றும் கூறப்பட்டது. திரேதா யுகமுதலியவற்றில் தசைமுதலியன அழிதலினல் பிராணன் ஒழி ந்துபோதலை யுடையது. அதனல் தவம்செய்தல் வருந்தினும் முடியாது.

அங்ஙனமாயினும், பிராணன் தசை முதலியவற்றைப் பற்றி யிருத்தலினல் ஞானமுதலியவற்றுள் உபயோக விசேடம்சொல்வ தற்கு அமையாது. அவ்வாறுயினும் தவம் கூடுவதனைச்சொல்லும் பொருட்டு அதைச்சிறப்பிக்கப்பட்டது. அதனனே, கூர்மபுராணத் துள், அந்நிய யுகங்களை யுள்ளிட்ட கருத்தால், வேறுதவம், சிறப் பித்துக் கூறப்பட்டது. வருமாறு, "అహింసాసత్యవచన మానృశంస్యంత పోభూణా। ఏతత్తపోవిదుర్ధీరా నశరీరస్యశోషణం." = பிறிதோருயிர்க் கொலை யொன்றும் செய்யாதொழிதல், மெய்கூறல், கொடியவனுகாதிருத் தல் = இரக்கமுடையனுதல், அறத்தையும் கடவுளையும் பற்றி

விசாரித்தல், இவற்றை அறிந்தோர் கவலென்பர். உடலில் வற்ற வருந்துவதன்று. எ-று. காண்க.

(கஉஅ)

யுகவல்லமையுணர்ச்சியாலாம்பயன்.

ஸ்ரீ॥ யுகேயுகேచయేధర్మా స్తత్రతత్రచయేద్విజాఃl
తేషాంనిందానకర్తవ్యా యుగరూపాహితేద్విజాఃll 334ll

என்பது, இனி யுக்வல்லமையைக்கூறி அதற்குப்பயன்வருத்துக் கூறுகின்றது.

(இ-ள்.) ஒவ்வொரு யுகத்திலும் தருமங்கள் எவ்வெவையோ? அவற்றுள், இருபிறப்பாளர் யாரோ? அவர்களுடைய குற்றம் கூறலாகாது. எந்தக்காரணத்தால் அவ்விருபிறப்பாளர், யுகதருமத்தைப்பற்றி யிருப்பாரோ? எ-று.

"యుగరూపాఃl"=யுகத்திற்குத்தக்கவர்கள். எனவே, காலத்தின் வசப்பட்டுள்ளவர்கள். என்றபடி. ஆரணியபருவத்திலும். "భూమిర్నద్యోనగాశ్చైవ తేసిద్ధాదేవర్షయస్తథాl కాలంసమనువర్తంతేతథాభావాయుగేయుగేl కాలంకాలం సమాసాద్య నరాణాంనరపుంగవాఃl బలవర్ణప్రభావాహి ప్రభవంత్యుద్భవంతద." "=பூமி, ஆறு, மலை, மரம், சித்தர், தேவர், முனிவர், காலத்தைதன்குணார்ந்து அதற்கு ஏற்றபடி ஒழுகுகின்றனர். அவ்வாறே யுகங்கள்தோறும் பிறக்கும்பொருள்கள் யுகத்தைப்பற்றி நிற்கின்றன. அந்த ஒவ்வொரு காலத்தையும் கூடி, மனிதருள் வலி, நிறம், சாதி, ஆற்றல், உடையவர்களாய்ப் பிறக்கின்றார்கள். எ-று. காண்க.

அங்ஙனமாதல், கலியுகத்தில் பாவிகளைப்பழிகூறவேண்டுவது இல்லையாதலால், இது அறம், இது பாவம், என்று வகுக்கின்ற நூல்கள் அனைத்தும். ஒழுகிப்போகவேண்டுவதே யாம்.

எங்ஙனமெனில்? மேலே "அதருமத்தால் தருமஞ்செயிக்கப்படுகின்றது" என்று கூறியது, "ధర్మంచర" அறத்தைச்செய் என்ற சுருதி மொழியோடு மாறுபடுகின்றது. ஆதலால்.

பொய்யால் மெய்வெல்லப்படுகின்றது என்றது, "నాస్తిసత్యాత్పరోధర్మో నానృతాత్పాతకంపరంl స్థితిర్హిసత్యేధర్మస్య తస్మాత్సత్యంనలోపయేత్." = வாய்மையிலுஞ்சிறந்த தருமமில்லை. பொய்கூறுவதிலும் மிகுந்த

பாவமில்லை. தருமமென்பது சத்தியத்துள்ளே யிருக்கின்றது. ஆதலின் உண்மையைக்கெடுக்கலாகாது. என்று மஹாபாரதம் இராஜநீதியிற் கூறியவிதியோடு மூரணுகின்றது.

"கள்ளரால் அரசர் வெல்லப்படுகின்றார்கள் என்று சொல்லியது. "అదండ్యాన్ దండయన్ రాజా దండ్యాంశ్చైవాప్యదండయన్। అయశోమహదాప్నోతి నరకంచాధిగచ్ఛతి." என்ற மநுவிதியோடு மூரணுகின்றது. (இதற்குரை முன்னரே கூறப்பட்டது, அதனை உக-வது பக்கத்திற்காண்க.

"மாதராற் புருடர்கள் வெற்றிப்படுகின்றனர்" என்றமொழி. "స్త్రీభిర్భృత్యవచ్చ కార్యమేషధర్మ్యపరఃస్త్రియాః." =மனைவியால் கணவனுடைய சொல்லின்வழிசெய்யத்தக்கது. இது அந்த மாதர்க்குத் தலைமைப்பட்ட தருமமாம். என்ற யாஞ்ஞவற்கியதருமநூல் வாக்கியத்தினையும், "భర్తారంలంఘయేద్యాతు జాతిస్త్రీగుణదర్పితా। తాంశ్వభిర్ఖాదయేద్రాజాసంస్థానేబహుసంస్థితే." =எந்தக்குலமாதுகுணமுடைமையால் அகங்கரிக்கப்பட்டுக் கணவனைக்கடந்து நடக்கின்றாளோ? அந்த மாதினை அரசன் பலருநிறைந்துள்ள சபையிலே நாயால் தின்னப்படச் செய்ய வேண்டும். என்ற மநுமொழியும், "పరిత్యాజ్యాత్వయాభార్యా భర్తుర్వచనలంఘినీ। తత్రదోషోనచాస్తీతి త్వంహివేత్థయథాతథం। సర్వలక్షణయుక్తాపి యాతుభర్తుర్వ్యతిక్రమం। కరోతిసాపరిత్యాజ్యేత్యేష ధర్మస్సనాతనః." = கணவன் வார்த்தையைக்கடக்கும் மனைவியை விட்டுவிடவேண்டுவது. அப்படி விடுவதற்குற்றமில்லை என்பது உனக்கே தெரியும். எல்லா நல்ல இலக்கணங்களும் அமைந்திருந்தாலும் கொழுநன் சொல்லைக்கடக்கும் கெட்ட குணமொன்றிருக்குமேயானால் அப்படிப்பட்டமனைவியை ஒழிப்பதே அழியாததருமமாம். என்ற பிரம புராணத்துட்கூறிய மஹரிஷிவாக்கியமும் ஆகிய இம்மூன்றினையும் மூரணுகின்றது.

"வேள்வி குறைந்துபோகின்றது என்றது, வேதத்துள் அச்சித்திரகாண்டத்தில் கூறப்பட்டிருக்கும்வேள்வித்தீக்காரியப்பிராயச்சித்த விதிவாக்கியத்திற்கும், "హూతవ్యంవిధివద్రాజన్ ఊర్థ్వామిచ్ఛంతియేగతిం। ఆజన్మసత్రమేతత్స్యా దగ్నిహోత్రం యుధిష్ఠిర। నత్యాజ్యంక్షణమప్యేతద్గృహీతవ్యంద్విజాతిభిః। యచ్చైతన్యంపృథివ్యాంహి కించిదస్తిచరాచరం। తత్సర్వమగ్నిహోత్రస్యకృతేసృష్టంస్వయంభువా। నావబుధ్యంతి యేచైతన్నరాస్తుతమసావృతాః। తేయాంతినర

కంఘోరం రౌరవంనామవిశ్రుతం.” = ஓய்: தருமராஜரே! கேளும். யார் மேலுலகத்தை விரும்புகின்றார்களோ? அவர்கள் பிறந்தது முதல் செய்யவேண்டிய வேள்வியாகிய இந்தத்திக்காரியத்தை விதிப்படி வேட்டல் செய்யவேண்டுவது. இருபிறப்பாளர் கணமேனும் இதனை விட்டிருக்கலாகாது. பெற்றுக் கொள்ளவேண்டுவது. இந்நிலவுலகத்தில், இருக்கும் உயிர்களாகிய நடப்பனவு நிற்பனவும் எல்லாம் “அக்நி ஹோத்ரத்தின்” பொருட்டே பிரமன் படைத்தனர். எந்த மனிதன், தாமசகுணத்தால் சூழப்பட்டு, இந்தரகசியத்தையுணர்ந்துகொள்வதில்லையோ? அவன் இரௌரவம் என்னும் புகழ்பெற்ற கோரநரகத்தை யடைகின்றான். என்ற மஹாபாரத அசுவமேதபருவ மொழிக்கும் மூலங்கள் உண்டாகின்றது.

“குருசுஸ்ரூஷை நாசமடைகின்றது” என்றுகூறப்பட்டதால், “குரோரனிஷ்டாசரணம் குரோரனிஷ்டவிசர்ஜனம்। குரோஸ்சவாக்யகரணம் ஜ்ஞானோத்பத்திகாரணம்। அசார்யநிந்தாச்ரவணம் தத்பாதஸ்யசதர்சனம்। விவாதஶ்சததா తెనజ్ఞానోత్పత్తికారణం” குருவுக்கு விருப்பமில்லாத காரியத்தைச்செய்தல். அவர் விரும்பியதைச் செய்யாதொழிதல், குருபணிவிடை செய்யாதுவிடுதல், இவை ஞானம்பிறவாமற் போதற்குக் காரணம். கண்ணெரியினை, அந்தியர்கள் பழிக்கும்போது தான்கேட்டிருப்பது, அவளுக்குத் துன்பம் உண்டாகும்போது தான் பார்த்திருத்தல், அவளோடு வாதிடுவது, இவையும்ஞானம்பிறவாமைக்குக்காரணமாம். எனவே ஞானம்பிறப்பதற்குத் தடையாகின்றது என்பதுகருத்து. என்ற காந்தபுராணவுரையாடு மூலமுமின்றது.

“கந்தியர் பிள்ளை பெறுகின்றின்றார்கள்” என்ற சொல், “ప్రాప్తేతుద్వాదశేవర్షేకన్యాంనప్రయచ్ఛతి। మాసిమాసి రజస్తస్యాఃపితాపిబతిశోణితం.”=பன்னிரண்டாவது ஆண்டு பிறந்தும் தன் சுற்றினையைத் தானஞ்செய்யாமலிருக்கிற அந்தப் பிதா அந்தக்கன்னியின் ஒவ்வொரு திங்களிலும் உண்டாகும், மாதவிடாயுதிரத்தை குடித்தவனாகின்றான். (எனவே, அவ்வளவு பாவத்தையடைகின்றான். அல்லது, மறுமையில், அவ்வாறு யமதண்டனையை அடைகின்றான் என்பதுகருத்து. ஆண்டு=வருடம். திங்கள்=மாசம்.) என்ற யமஸ்மிருதிமொழியும், “పితుర్గృహేతుయాకన్యా రజఃపశ్యత్యసంస్కృ

தா। ஶூணஹத்யாபிதுஸ்தஸ்யா ஸ்நுஷாவ்ருஷலீஸ்ம்ருதா." = தந்தை வீட்டிலிருக்கும் கந்நிகை மணமில்லாமலே பூத்தலை யடைந்தால் அவளுடைய பிதாவுக்கு, இளங்குழவியைக் கொன்றபாதகம் வருகின்றது. அந்தக்கந்நிகை "விருஷலீ" என்று கூறப்படுகின்றாள். குழவி=சிசு = சிறுமகவு. விருஷலீ=காமுகி = அயோக்கியமானவள்.) என்ற ஸ்மிருதிவாக்கியமும் மூரணுகின்றது.

இனி, இம்மூலத்துள், "తేஸோநிந்தாநகர்தவ்யா" அவர்களைக்குற்றங் கூறத்தக்க தல்லவென்று கூறியிருப்பது, பாவியை, பொய்கூறுவோனை, திருடனை, பதிவாக்கியங்கடந்த மனவியை, வேள்வித்தீக்காரியத்தைவிட்ட இருபிறப்பாளனை, குருபணிவிடைசெய்யாதமாணாக்கனை, பூக்குமளவும்தன்மகளுக்கு மணம்புரிவிக்காததந்தையை, பழிக்கின்றதாகிய மேற்குறித்த சுருதி மிருதி புராணமொழிகளுக்குமாறுகொளல் ஆகின்றதே என்னை? என்றபடி. (கஉஉ)

శ్లో॥ యుగేయుగేతుసామర్థ్యం శేషంమునివిభాషితం।
పరాశరేణచాప్యుక్తం ప్రాయశ్చిత్తంవిధీయతే. ॥3ర4॥

என்பது மேல் வினவுக்கு விடைகூறுகின்றது.

(இ-ள்.) யுகா யுகங்கள்தோறும் இவராற் கூறுது ஒழிந்துள்ள யுகங்களின் வல்லபம் ஏனையமுனிவர்களாற் கூறப்பட்டுள்ளது. பராசரராலும் கூறப்பட்டிருக்கிற பிராயச்சித்தம் விதிக்கப்படுகின்றது. எ-று.

"శేషం"=மிகுந்திருந்த அந்தந்தயுகங்களின் ஆற்றல், ஏனையமுனிவர்களால் விசேடமாகக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு, ஆரணியபருவத்தில், "కృతంనామయుగంశ్రేష్ఠం యత్రధర్మస్సనాతనః। కృతమేవనకర్తవ్యం తస్మిన్కాలేయుగోత్తమె॥ నతత్రధర్మాస్సీదంతి నజీర్యంతేచవైప్రజాః। తత్కృతయుగంనామ కాలేనగుణతాంగతం। కృతేయుగేచతుష్పాదః చాతుర్వర్ణ్యాంచశాశ్వతం। పాదేనగ్రసతేధర్మో రక్తతాంయాతిచాచ్యుతః। జ్ఞానప్రవృత్తాశ్చనరాక్రియాధర్మపరాయణాః। తతోయజ్ఞాప్రవర్తంతే ధర్మాశ్చనిష్ఠాక్రియాః। స్వధర్మస్థాక్రియావంతో జనాస్త్రేతాయుగేభవన్। విష్ణుప్రీతేత్వమాయాతిచతుర్థావేదఏవచ। సత్యేనాస్త్యేవవిభంశో సత్యేకశ్చినవస్థితః। సత్యాత్ప్రచ్యవమానానాం వ్యాధయోబహవోభవన్। కామాశ్చోపద్రవాశ్చైవ తథాదైవతకారితాః। కామకామా స్యర్థకామాయజ్ఞాంస్తన్వంతిచాపరే। ఏవంద్వాపరమాసాద్య ప్రజాక్షీయంత్యధర్మతః। పాదైనైకేనకౌంతేయ ధర్మఃకలియుగే

భవిష్యతిః। వేదాచారాస్తథాప్రశామ్యంతి ధర్మయజ్ఞక్రియాస్తథా। ఆధయోవ్యాధయస్తంత్రీ దోషాస్తథా క్రోధాదయస్తథా." = கிருதம் என்பது யுகங்களுட் சிறந்தது. அதனுள் தருமம் அழிவற்றது. ஆகலால் அவ்வுத்தமமான காலத்தில் செய்யப்பட்டதேதையொழியச்செய்யத்தக்கதில்லை. (எனவேஒருகாற் செய்தளவே அச்செய்கை பயனைத்தந் துவிடுமன்றி மீட்டும்செய்யவேண்டா என்பது). அப்போது, தருமம் அழிவதில்லை. தருமஞ்செய்பவர்துன்பப்படுவதில்லை. மனிதர்க்குக்கிழத்தனம்இல்லை. காலம் அதிககுணமுடையது. தருமம் நான்குகால்களோடுநிறைந்திருக்கும். நான்கு வருணமும் சீர்பெற்றிருக்கும். அக்கால் நான்கனுள் ஒன்றனைப் பற்றுவதுபோல அதருமமானது காத்து நிற்கும். தருமவடிவுகிய விஷ்ணு சிவந்த நிறமுடையவராயிருக்கின்றார். திரேதாயுகத்தில் மனிதர்கள், தருமம், கிரியை, வேள்வி, ஞானம், உடையவர்களாயிருப்பர்கள். விஷ்ணு பீதவண்ணராயிருப்பர். (பீதம்=பொன்மை). துவாபரயுகத்தில், வேதம்பிரிக்கப்படும். எனவே அதற்குமூன்வேதம் ஒன்றேயென்பது தருக்கசத்தியத்தின் மகிமைகுன்றுது. யாராயினும் ஒருவன் சத்தியமுடையவனுகவே யிருப்பன். சத்தியம் தவறினவனுக்குக் காமமும்மோகமும் தெய்வச்செயலால் உண்டாய் உண்மை வெளிப்படும். பயனைக்குறித்துவேள்விசெய்வர். பாவத்தின் வளர்ச்சியால் பிரஜைகள் நாசத்தையும் அடைவர். கலியுகத்தில் தருமம், ஒற்றைக்காலுடனிருக்கும். வைதிக ஒழுக்கங்களும், தருமவேள்விக்கிரியைகளும் அடங்கிவிடும். மனநோய், உடம்புநோய், சோம்பல், உறக்கம், பலவகைப்பட்ட குற்றங்கள், கோபம் முதலிய துர்க்குணங்கள் மேற்சொல்லிய நல்லவை அடங்கின அளவும் விருத்தியாகும்.

இன்னுமவ்விடத்தில். "బ్రాహ్మణాఃక్షత్రియావైశ్యాః సంగిరంత్యపరస్పరం। శూద్రతుల్యా భవిష్యంతి తపస్సత్య వివర్జితాః। స్వభావాత్క్రూర కర్మాణశ్చాన్యోన్యమవిశంకితాః। భవితారోనరాస్సర్వే సంప్రాప్తేయుగసంక్షయే॥" அந்தணன், அரசன், வைசியன், ஒருவர்க்கொருவர் மனம் சென்றவழியே வார்த்தைசொல்லி, சூத்திரர்க்கு ஒப்பானவர்களாகின்றனர். தவத்தையும் சத்தியத்தையும் விடுவர். இயற்கையாகவே கொடுந்தொழிலைச் செய்வர். அந்தயுகமுடிவில், ஒருவர்பயம் ஒருவர்க்கில்லாமற்போம். எ-று. காண்க.

கலிவர்ஜ்யாநி.

கலியுகத்தில் ஒழிக்கத்தக்கன.

பிரம புராணத்திலும். "தீர்஘ காலப்ரஹ்மசர்யம் தாரணஞ்ச கமண்டலோ:। கோத்ராந்நாத்ருஸபிண்டாத்துயோவாஹோகோவதஸ்ததா। நராஶ்வமேதௌமத்யஞ்ச கலௌவர்ஜ்யாந்விஜாதிபி: ॥

க்ரதுரபி ॥ தெவராச்சஸுதோத்பத்தி ர்தத்தாகந்யாநதீயதே। நயஜ்ஞெகோவதஶ்சகார்ய்ய கலௌநசகமண்டலு:॥

புராணெபி॥ ஊடாயாஃபுநருத்வாஹம் ஜ்யெஷ்டாம்ஶம்கோவதம்ததா। கலௌபஞ்சநகு ர்வீதபார்த்ருஜாயாஞ்சகமண்டலும்॥

ததாந்யெபிதர்ஷஜ் ஸமயப்ரமாணாகாஸ்யந்தி॥ விதவாயாம்ப்ரஜோத்பத்தி தெவரஸ்ய நியோஜநம்। பாலிகாக்ருதயோந்யோந்யச்சவரெணாந்யெந ஸம்ஸ்க்ருதி:। கந்யாநாமஸவர்ணாநாம பி வாஹஶ்சத்விஜாதிபி:। ஆததாயித்விஜாக்ர்யாணாம் தர்ம்யுத்தெநஹிம்ஸநம்। * த்விஜஸ்யாஶ்தௌது நாயாது ஶ்ரோத்ரியஸ்யாபிஸம்க்ரஹ:॥ ஸத்ரதீக்ஷாச ஸர்வ்வேஷாம் கமண்டலுவிதாரணம்। மஹாப்ர ஸ்தாநகமநம் கோஸம்ஜ்ஞபித்ரிஶ்சகோஸவெ। ஸௌத்ராமண்யாமபிஸுரா க்ரஹணஸ்யசஸம்க்ரஹ:। அக்நி ஹோத்ரஹவண்யாஶ்ச லிஹ்டா லெஹ்யோபரிக்ரஹ:। † வானப்ரஸ்தாஶ்ரமஸ்யாபிப்ரவெஶோவிதிசோதித:। வ்ருத்தஸ்வாத்யாயஸாபெக்ஷமுகஸம்கோசநந்ததா। ப்ராயஶ்சித்தவிதாநஞ்ச விப்ராணாம்மரணாந் திகம்। ஸம்ஸர்கதோஷ:ஸ்தெநாத்யை ர்மஹாபாதகநிஷ்க்ருதி:। வராதிதி பித்ருப்யஶ்சபஶூபாகரண க்ரியா। தத்தொரஸெதரெஷாந்து புத்ரத்வெநபரிக்ரஹ:। ஸவர்ணாநாந்ததாதுஷ்டெ ஸ்ஸம்ஸர்கஶ்சா தித்தைகபி। அயொநௌஸம்க்ரஹொவித்தெ பரித்யாகோ குருஸ்த்ரியாஃ। அஸ்திஸம்சயநாதூர்த்வம் அம்கஸ்பர்ஶநமெவச। ஶாமித்ரம்சைவவிப்ராணாம் ஸோமவிக்ரயணந்ததா। ஷட்பக்தாநஶ்நெநா ந்ந ஹரணம்ஹீநகர்மணஃ। ஶூத்ரெஷுதாஸகோபால குலமித்ரார்தஸீரிணாம்। போஜ்யான்நதா க்ருஹ ஸ்தஸ்யதீர்த்தஸெவாதிதூரத:। ஶிஷ்யஸ்யகுருதாரெஷு குருவத்வ்ருத்திரீரிதா। ஆபத்வ்ருத்திர்த்விஜா க்ர்யாணா மஶ்வாஸ்தநிகதாதத்ததா। ப்ரஜார்தம்துத்விஜாக்ர்யாணாம் ப்ரஜாரணிபரிக்ரஹ:। பாரிஹ்ணாநாம்ப்ரவாஸித்வம் முகாக்நிதமநக்ரியா। பலாத்காராதிதுஷ்டஸ்த்ரீ ஸம்க்ரஹொ விதிசோதித:। யதெஸ்துஸர்வ்வவர்ணெப்யோ பிக்ஷாசர்யாவிதாநத:॥ நவோதகெதஶாஹம்ச தக்ஷிணா குருசோதிதா। பாரிஹ்ணாதிஷுஶூத்ரஸ்ய பசநாதி க்ரியாபிச। ப்ருகுவ்ஹ்நிபதநாத்ரெஶ்ச

---

* பாடாந்தரம்॥ த்விஜஸ்யாஶ்தௌதுநிர்யாணம்॥ எம்॥ ஶ்ரோத்ரியஸ்யாப்யஸம்க்ரஹ:॥ எம்॥ ஶ்ரோத்ரியஸ்யாபிஸம்க்ரஹ:। எம்॥ ப்ரமாணாந்தரம்॥ த்விஜஸ்யாஶ்தௌதுநாயாது ஶ்ரோத்ரியஸ்யாப்யஸம்க்ரஹ:॥ எனவும்வருகும்.

† பாடாந்தரம்॥ வானப்ரஸ்தாஶ்ரமஶ்சாபி. என்பதுபாடம்.

வృద్ధాదిమరణంతథా। గోతృ ప్రిశిష్టైపయసి శిష్టైరాచమనక్రియా। పిత్రాపుత్రపరోధేషు పాక్షికాందాండకల్పనం। యతెస్సాయంగ్వాహ్నత్వం సూరిభిస్తత్త్వనత్పరైః। ఏతానిలోకగుప్త్యర్థం కలెరాదౌమహాత్మభిః। నివర్తితానికర్మాణి వ్యవస్థాపూర్వకంబుధైః। సమయశ్చాపిసాధూనాం ప్రమాణంవేదవద్భవేత్." (இவற்றின் பொருள்.

க-வது. நெடுங்காலம் பிரமசரியத்தைத் தரிப்பதுவும், உ-வது. கமண்டலத்தைத் தரிப்பதுவும், ஙு-வது. தாய்பிறந்த கோத்திரத்தின் சபிண்டர்கள் கன்னிகையை மணம்புணர்வதுவும், சு-வது. கோவனையும், ஞ-வது. நரமேதயாகமும், ஊ-வது. அசுவமேதவேள்வியும், எ-வது. மதுபானமும், இவைகளை இக்கலியுகத்தில் பிரமசூத்திரிய வைசியர்கள் ஒழிக்கவேண்டுவது. எ-று, காண்க.

க-வது. நெடுங்காலம் என்பது, பன்னிரண்டுவருடத்திலும் அதிகமான காலம் பிரமசரியங்காத்தல் கூடாது. எனவே, இக்காலத்தில் அவ்விரதத்தைக் காத்துக்கொள்வது அருமைமென்றபடி, உ-வது. சங்கியாசம் எ-று. ஙு-வது. அம்மான்மகளை மணஞ்செய்வது போல்வன எ-று. சு-வது. மதுபர்க்கத்தின்பொருட்டுப் பசுஇறைச்சிதருவது. எ-று. மதுபர்க்கம்—விருந்தாகவந்தபெரியர் முதலியோரை அப்போது பழம்முதலியசிலதிரவியங்களைக்கொண்டு உபசரிக்கச்சொல்லியகருமம். ஞ-வது. சு-வது. வெளி. எ-வது. வேள்வியில், வைதிகவிதியால் சோமபானம்போலும் வந்த சுராபானமும். தாந்திரீகசாத்தேயமதத்துட் கூறும் மதுபானமுமாம்.

கிரது என்பவர் செய்த தருமநூலிலும், பிள்ளையில்லாவிட்டால் கணவனிறந்தபின்னும் அவனுக்கு இளையவனைச்சேர்ந்து பிள்ளையைப்பெறுதலும், பெண்மகனைத் தத்தாகக்கொடுத்தலும், வேள்வியின் பொருட்டுப்பசுக் கொலைசெய்தலும், சங்கியாசம் செய்தலும், கலியுகத்தில் ஆகாது. எ-று. காண்க.

புராணத்துள்ளும் * முன்னெருவனல் மணம்புணர்ந்தவளைப் பின்னெருவன் மணம்புணர்தலும், † மூத்தமகன் எடுகூறும், கோவனையும், தமையன் மனைவியோடு புணர்தலும், கமண்டலமும், இவ்வைவகுமம் கலியுகத்தில் செய்யலாகாது. எ-று. காண்க.

அவ்வாறே, தருமநூனர்ந்தபெரியர்கள்கூறிய சமயப்பிரமாணத்துள்ளும் வேறு சில கூறப்பட்டுள்ளன. அவையாவையெனின்?

* கைம்பெண்ணை மணத்தல் † தாயகபாகத்தில் மூத்தமகன்என்று ஒரு பங்கு விசேடமாக எடுத்துக்கொடுப்பது.

(க0) கைம்பெண்ணினிடத்துச் சந்ததியை யுண்டாக்கும் பொருட்டு அவளது கணவனுக்கிளையோனே யேவுதலும், (கக) பாவினையக்கும், யோனிகூடித மில்லாதவளுக்கும் வேறு ஒருவரை நேடி மணம்புணர்த்தலும், (கஉ) இரு பிறப்பாளராகிய மூவரும் தம் வருணமல்லாத வேறு வருணத்து மாதரை மணம் புணர்தலும், (கஙூ) ஆததாயியா யிருப்பவர்களையும், உயர்ந்த இரு பிறப்பாளனையும் தருமயுத்தத்திலல் கொலைசெய்தலும், (கச) இருபிறப்பாளன், சமூத்திரத்தின்மீது யாத்திரைசெய்தால் பிராயச்சித்தஞ்செய்து அவனை அங்கீகரித்தலும், அல்லது. இருபிறப்பன்கடலிலே கலத்தின் மேற்செல்லுதலும், (கரு) "శోధితస్యాప్యసం క్రహ:."=ஒருவன்தானே பிரமகத்திசெய்து பின்தக்கப் பிராயச்சித்தஞ் செய்துகொண்டால் அவனை கூட்டத்தார் ஒழியாதுவிடுதலும், (கசு) யாவரும்வேள்விக்குத்தீக்ஷைசெய்துகொள்ளுவதும், (கள) கமண்டலத்தைத்தரித்தலும், (கஅ) மஹாப்பிரஸ்தானத்திற்குச்செல்லுவதும் (கஙூ) கோமேதயாகத்தில் கோவதைசெய்வதும், (உ0) சௌத்திராமணியென்னும் வேள்வியில் சுராக்கிராஹம் என்பதைக்கொள்ளுதலும், (உக) அக்நிஹோத்திரஹவணீ என்னும் பாத்திரத்தில் எச்சில் குற்றமன்று என நக்குதல் செய்வதும் (உஉ) வானப்பிரஸ்தாச்சிரமமும், (உங) விதிக்கப்பட்டபடி புகுதலும் (உச) நியமமான ஓதலே வேண்டும், அல்லது, ஒத்த நடை, ஒத்த ஓதலுடையனாய் இருப்பவன் வேண்டும் என்னும் விருப்பமும், (உரு) பாவத்தைச் சுருக்குவதும், (உசு) வேதியனுக்கு மரணந்தப் பிராயச்சித்தத்தை விதிப்பதும், (உள) கள்ளர்முதலியவர்களோடு சேர்ந்தோஷ முண்டென்பதும் (உஅ) மஹா பாதகங்களுக்குத் தக்க பிராயச்சித்தமும், (உகூ) மணத்தில் மணமகன், அதிதி, பிதிரர், இவர்கள்பொருட்டுப் பசுவைப் பாகத்திற்காகத் தருதலும், (ஙூ0) தத்தபுத்திரன், ஔரச புத்திரன் ஒழிய ஏனைய புத்திர பேதங்களைப் புத்திரராகக் கொள்ளுதலும், (ஙூக) சுத்தஞ்செய்வித்துக் கொண்டுவந்தவர்களோடு அவர்களுடைய ஒத்த மரபினர்க்கு உடனுறைவு கூடும் என்பதும், (ஙூஉ) அயோநி = மரபில்லாதவனிடத்து ஒருபொருளைக் கொள்ளுதலும், (ஙூங) குருமனைவியைக் கைவிடுதலும், (ஙூச) அஸ்திகளுக்குச் சஞ்சயநம் = பாற்றெளிக் கருமமான பின்பு

தொடுதலும், (கூ) பிராமண சாமித்திரமும், = வேள்வியில் அந்தணன் பகுவதை செய்தலும், (கூசு) வேதியன்சோமக்கொடி விற்றலும் (கூள) ஆறுபொழுது உண்டி நிடையா விட்டால் இறுதிநாழில் செய்வோன் கையுணவையும் அருந்தலா மென் பதும், (கூஅ) சூத்திரருள் அடிமை, இடையன் சூலமித் திரன், பயறுண்டாக்குவோன், இவர்களுடைய உண்டியைப் பெற்றிருத்தலும் (கூசூ) கிரகத்தன் நெடுங்நாரம் தீர்த்தயாத் திரை செய்தலும், (சo) மாணாக்கன் குருபணியைப்போலும் குருபத்தினிக்கும் பணிவிடைசெய்தலும், (சக) உயர்ந்த இருபிறப் பாளருக்குரிய ஆபற்காலத்தொழிலும், (சஙூ) நாளையிருப்போ மோ இல்லையோ? என்னும் அழுந்திய வைராக்கிய சித்தமும், (சஙூ) இருபிறப்பாளருட் சிறந்தோர் சந்நியின்பொருட்டு "பிர ஜாஅரணி" என்பதை கொள்ளுதலும். (சஙூ) அந்தணர்கள் வேறுதேயம் செல்லுதலும், (சச) வாயால் நெருப்பையூதுத லும், (சரு) விதியாஜை இல்லாமலே வலிமையாலே இழிகுலத் தவளைத் தேடுதலும், (சசூ) எல்லாவருணங்களிலும் துறவிபிச் சையெடுத்தலும், தன்குலமில்லாதவர் பிச்சைகூடாது என்றபடி (சள) புதுநீரில் நசாஹம்=பத்துநாட்கோடலும், அதுகன்மாந் திரம் (சழ) குரவன்கூறிய அளவுதகூஜை கொடுத்தலும், (சஙூ) வேதியன்முதலிய மூவர்பால் சூத்திரன் சமயல் முதலிய பணி விடைசெய்தலும், (நo) வயது முதிர்ந்தோன் முதலியவர்கள் மலச்சாரல், நெருப்பு முதலியவற்றில் விழுந்து மரணமடை தலும், (நக) ஆன்குடிதத்துமிருந்த நீரில்உயர்ந்தவர் ஆசமித்தலும், (நஉ) தன்னைமகனுக்கு வழக்குசேர்ந்தவிடத்துச்சான்று கூறி னவஜனத் தண்டித்தலும், (நஙூ) துறவிமாஜைப் பொழுதினுக்கு மேல்நிரகத்தல் யிருத்தலுமாகிய இனைகளெல்லாவற்றையும், காலதத்துவ வுணர்ச்சிபெற்ற மஹான்களாகிய புலவர்கள் தவ வன்மையால் கட்டுப்பாடாகக் கலியுகத்தில் கூடாதென்று ஒதி த்துவிட்டார்கள். தருமமுணர்ந்தவர்களாகிய அந்தப்பெரியோர் களுடைய சமயக்கட்டு வேதம்போலும் பிரமாணமாயிருக்கும்.

(கக.) வது. பாலியை - எது, பூத்தலில்லாத சன்னிதை. யோகிகூடாதமில் லாதவன் - எது, பூத்த பின் புணர்ச்சியில்லாதவன். இவ்விருவர்க்கும் கைம் பெண்டன்மைவந்தால், வேறுமணம்செய்தல் கலியிற்கூடாது. எ-று.

கஉ. வது. அந்தணமாதுமுதலிய ஈல்வருணப்பெண்களையும் வேதியன் மணத்தலும், அரசன்மூன்றுவருணத்துள்ளும், வைசியன்இரண்டிலும், எனவே, தன் சாதியிலுந் தனக்குத் தாழ்ந்த சாதியிலும் மணம்புணர்தல் வழக்கமிக் கலியிலாகாது. எ-று.

(கஙு.) ஆததாயி எது "अग्निदोगरदश्चैव शस्त्रपाणिर्धनापहः। क्षेत्रदारापहर्ताचषडेतेत्वाततायिनः." = மனை முதலியவற்றிற்குத் தீயிட்டவனும், விடம்வைத்தவனும், படைக்கலந் தொட்டவேதியனும், பிறர்பொருள் வவ்வினானும், பிறர்நிலங்கவர்ந்தவனும், பிறர்மனையாளைப் புணர்ந்தவனும் ஆகிய அறுவரும் ஆததாயிஎனப்படுவார். எ-று. "आततायिनमेवैनं हन्याद्देवाविचारयेत्." இந்த ஆததாயிகளைக் கொலையே செய்யவேண்டுவது விசாரித்தல் வேண்டாம். எ-று. "धर्मेणयुध्यतंहन्यात्." = தருமமாகச் சண்டைசெய்து அவனைக் கொல்லவேண்டும் என்று முன்னையவிதி, இக்கலியில் அவன்வலிய வலியின் தருமச்சண்டையால் முடிவுபெறுன்; ஆதலால் போரில் வஞ்சித்தாயினும் தண்டிக்கலாம். எ-று.

வேதியன் போர்க்கேவரலாகாது, வந்தால், தருமமாக அவனோடு போர் செய்யவேண்டுவது என்பது முன்னைய ஏற்பாடு. இக்கலியில் அவ்வாறில்லை துவாபரத்தின் முடிவில் கலிவழக்கத்தைப்பற்றி, திருஷ்டத்துய்மன் வில்லா சிரியனாகிய துரோணரைக் கொன்றனன். எ-று. காண்க.

(கச.) பிரம க்ஷத்திரிய வைசியர்களாகிய இருபிறப்பாளர்கள், முன் மரக்கலம் ஏறிச்சமுத்திரத்தின்மேல் யாத்திரைசெய்துவந்தனர், இப்போது அது ஆகாது. ஏனெனில்? கருமம்நடவாது ஆசாரங்கெடும். அந்நியர்கலப் புண்டாகும். இவ்விடத்து, இருபிறப்பாளர் என்பது வேதியர்கள் மட்டில் இடுகுறியாலும் காரணத்தாலும் செல்லுகின்றது. அரசவைசியர்களிடத்தில் காரணமாத்திரையாற் செல்லுகின்றது. "योगयात्रिर्वहीयसी" = காரணத்திலும்இடுகுறிசிறந்தது. என்பதனால் ஈண்டுதுவிசர்என்பதற்குஅந்தணனென்பதே சிறந்த பொருளாகின்றது. கலியுகத்தில் சமுத்திரயானம் = கலத்திற்மேற் செல்லுதல் கூடாதென்னும் விலக்குவேதியனுக்கு மாத்திரமேயென்று சிலர் கூறுவர். அங்ஙனமானால், "कन्यानामसवर्णानां विवाहश्चैद्विजातिभिः" என்று இதேப்பிரகரணத்தில் மேற்கூறப்பட்ட இருபிறப்பாளர் என்பதற்குபொருள் மாறுபாடு வருகின்றது ஆகலின்கலியில் பரிசுத்தராகிய பிரம க்ஷத்திரிய வைசியர் மூவரும் "சமுத்திரயானம்" செய்யலாகாது என்று இக்கலிவிலக்கு வாக்கியத்திற்குக் கருத்தாகின்றது.

பாடபேதங்களின்படி இக்கலியுகத்தில் கடல்யாத்திரைசெய்த இருபிறப்பாளனுக்குப் பிராயச்சித்தஞ் செய்தாலும் அவனை அக்குலத்தவர்கள் உடனுண்ணுதல் முதலிய விவகாரத்துள் சேர்க்கலாகாது.

வேறு சிலர் மதப்படி, மற்றையயுகங்களில் சமுத்திரயானஞ் செய்த இருபிறப்பாளனுக்குப் பிராயச்சித்தஞ்செய்து குலத்துட்சேர்த்து வந்தனர் இப்போது பிராயச்சித்தஞ்செய்து கொள்ளினும் சேர்க்கலாகாது,

வேறு சிலர்மதத்தின் பாடபேதப்படி, கப்பலின்மேற் செல்வதேகூடாது என்பது ஒருகலியுகவிலக்கு. "ஶுத்ரஸ்யாபிஸம்க்ரஹः" =என்றவிலக்கு வேறு விடயம் பற்றிய கலிவிலக்கு. எனவே, சாதி, குலம், சமயம் = மதங்கெட்டவனுக்கு மறுபடியும் உபநயனமுதலிய பிராயச்சித்தங்களைச்செய்து அவனை யம்மரபிலுள்ளோர் சேர்த்து வந்திருந்தார்கள், இப்போது அது ஆகாதென்பது. அந்தப்பகுதியில், "ஸம்ஸர்கஶ்சாபி தைரஜி" = என்றபின் கூறிய வற்றிற்குக் கூறியது கூறலென்னும் குற்றம்வருகின்றது ஆதலின் அது பொருளன்று,

வேறுபிரமாணங்களின்படி, கலியுகத்தில் கடன்மேற்சென்ற இருபிறப்பாளரில். வேதியனுக்குப் பிராயசித்தம் செய்தாலும் குலத்தில் உடனுறைவுஇல்லை; அரசனைவரியர்களுக்குப் பிராயச்சித்தஞ் செய்தால் மரபிலுடனுறைதல் வழக்கங்கூடும், சூத்திராதியர்க்கு எனவே உபநயனச்சடங்கேயில்லாதவர்களுக்குக் கடல்யாத்திரை விலக்கே யில்லையாம்,

"ப்ராகுபனயனாத் காமசாரகாமவாதகாமபக்ஷாः" = உபநயன அதிகாரமுடைய பிரம க்ஷத்திரிய வைசியர்களில் அக்கருமகாலத்திற்கு முன் இஷ்டயோர் விரும்பியவாறு போகலாம்! விரும்பியவாறு பேசலாம்; விரும்பியவாறுபுசிக்கலாம். எ-று, என்றகௌதமர் மொழி, இவ்வுரையிற் சூடாகன்மவிதியில், மேல், உதசரிக்கப்படும். ஆதலின் கலியில் கடல்யாத்திரை செய்தஅவ்வகைச் சிறுவர்க்குக் குற்றமுமில்லை. கழுவாயு மில்லையென்று சிலர் கூறுவர்.

அங்ஙனமன்று. மனஞ்சென்ற வழிச்செல்லலாம் என்றது. சாதாரணமாகக் காலநியமக் கட்டில்லாமற் சஞ்சரிக்கலாம்என்றபடி. உபநயனகருமமுடிந்தவன் சந்திகாலங்களில் வேண்டியவாறு திரியலாகாமையின். உபநயனமில்லாதவனுக்கு அந்த நியமம்இல்லையெனக்கொள்க. வேண்டியதைப் புசிக்கலாம் என்றது, பழஞ்சோறுமுதலியன புசிக்கலாமென்ப தன்றி சூத்திரர் சமைத்தனவும் உண்ணப்படாதனவும் உண்ணலாகாது. வேண்டியவாறு பேசலாம் என்றது, தாசத்துக்குந் தக்கபடி பண்மை யீறுமுதலிய வற்றுல் வார்த்தை சொல்லவேண்டிய தடையில்லையே யன்றி, வைதல், கண்டவினைவாகிய பொய் கூறல் முதலியன கூடாதென்றபடி. அந்தக் கௌதமமொழிக்குப் பெரியோர் பொருள் கூறியிருக்கின்றனர். அதற்குப் பிரமாணமாக "வ்ருத்யாஶூத்ரஸமः" = அப்படிப்பட்ட சிறுவன் ஒழுக்கத்தால் சூத்திரனேயொப்பாவான். எனவே சூத்திரனல்லன் உபநயன அதிகாரம் உண்மையின். சூத்திரனிற் சிறந்தவன் என்றவசிட்டமொழியையும் "யதோபபாதிதமாத்ர புரீஷாபவதினஸ்ய சமனகல்பி

ஷ்டே."—உபநயநமில்லாத அச்சிறுவனுக்கு மலமூத்திர ஒழிவுகாலங்களில், அலம்பல் மண்ணிட்டுச் சுத்திசெய்தல் சுத்தஆசமனம் செய்தல் விதியில்லை என்ற கௌதமமொழியும் உதகரிக்கப்பட்ட நன்றி, சூத்திர விருத்தியிலும் இழிந்த தொழிலுக்குக் கட்டளை கொடுக்கப்பட்டதில்லை. அன்றியும், அவ்வகைப்பட்ட இலக்கணத்திற்குப் பத்துவருடத்திற்கு அதிகரிக்காத வயதின்காலஅளவையும் கூறப்பட்டுள்ளது. அதன்பிரமாணங்களை இவ்வுரையில் அவ்வவ்விடங்களிற் கூறப்படும். ஆதலின் அக்கௌதமமொழிப்படி உபநயநமில்லாதவனுக்குக் கடலிற் சஞ்சரித்தல் குற்றமில்லை என்பது கூடாது.

(ககூ) வது. சத்திரயாகம்-எது. "సర్వేయజమానా స్సర్వేఋత్విజఃః" = அந்த வேள்வியில் அனைவரும் யஜமானர்களும் அனைவரும் இருத்துவிக்குகளும், என்றலின், அனைவரும் யஜமான தீக்ஷைசெய்து கொள்ளலாகாது. ஏனெனில்? தலைவன் செய்யவேண்டிய தொழில் மிகுதியாயிருக்கின் அவற்றை இருத்துவிக்குகளும் செய்யக்கூடும், இருத்துவிக்குகள் செய்யவேண்டுந் தொழில் மிகுதியாயிருக்கின் அவற்றைத் தலைவனும் செய்யலாம். அல்லது, அந்தவேள்வியில் ஒருவர்க்கொருவர் உதவியாக எல்லாத்தொழிலையும் யாவரும் செய்யலாம் ஆதலின், இத்தொழிற்கு இவனே தீக்ஷிதன் = உரியவன் என்று வேறுவேறுக இக்கலியில் தீக்ஷைசெய்து கொள்ளலாகாது = உரிமைசெய்து கொள்ளலாகாது. என்று சிலர் கூறுகின்றனர் இக்கலியில் சத்திரயாகமே கூடாதென்பது சிலர்கருத்து.

"సత్రదీక్షాచసర్వేషాంకమండలువిధారణం."=சத்திரவேள்வியில் தீக்ஷை, அல்லது, சத்திரயாகம், தீக்ஷை, சந்நியாசம், இவைகள் மூன்று அனைவர்க்கு மிருந்தன இக்கலியில்கூடாது. எ-று.

(கஎ) வது. மஹாப்பிரஸ்தான கமநம், எது, அரித்துவாரம் கங்கோத்தரி, வதரிகாச்சிரம வழியாக இமயமலையை யேறிக்கடந்து சென்று சுவர்க்கமடைதற்குரிய இடத்தில் தேகத்தை ஒழிப்பது, இதனைத் துவாபரத்தின் முடிவில், பாண்டுமக்களைவரும் செய்தனர். அவ்வாறு இக்கலியில் யாருஞ் செய்யலாகாது. எ-று.

(உ0) வது. சௌத்திராமணி-எது, இந்திரனுக்குப் பிரீதியாகும்படிச்செய்யும் ஒருவகை வேள்வி. அதனுள், "గ్రహ"=ஹோமத்திரவியங்களைச் சேர்த்துவைத்தற்குரிய ஒருவகை மரப்பாத்திரம், "సోమగ్రహాగ్శ్చసురాగ్రహాగ్శ్చగృహ్యంతే" = சோமத்தைப்பெய்துவைத் தகிரகத்தையும் சுராவைப்பெய்துவைத்தகிரகத்தையும் கொள்ளுகின்றன, என்ற வேத வாக்கியப்படி, "సురా," "పరిసృత్," =மூலிகைகளைக்கிள்ளுவதிறல் வடிந்தகள்ளினை (எனவே வேள்வியின்பொருட்டுக் கூறப்பட்ட சிலமூலிகைகளைக் கொண்டுவந்து உரியவிதிப்படி அவ்விடத்திற்றானே ஆக்கப்பட்டு திருத்திவைத்திருக்கின்ற ஒருவிதமான

கள்ளின்வேறுபாடு அது, "గౌడీ, పైష్టీ, హాలా, మధిరా, మద్యం," என்பன முதலிய பெயரை உடைய பத்துவகைக் கள்ளினுள்ளுஞ் சேர்ந்ததன்று அப்படிப்பட்ட சுரௌதமாயுள்ள சுரூவினைக்கிரகம் என்னும் பாத்திரத்திருந்து திருத்தப்பட்டு ஓமம்செய்து, அந்த சேடத்தை விதிப்படி மூன் ஆசமனஞ்செய்திருந்தார்கள். இக்கலியில் "சௌத்திராமணி" யாகம்செய்தாலும் சாராக்கிரகத்தால் ஹோமஞ்செய்யலா மன்றி, சோமபானம் செய்வதுபோற் சுராபானம் செய்தல் கூடாது. "అపి," "చ," இந்த அவ்வியயத்தினால் வேறுஸ்மிருதிகளில் கூறப்பட்டுள்ள பிரமாணங்களை அனுட்டித்து, சாத்தேயதீக்ஷாவிதிப்படி செய்யப்பட்டிருந்த மதுபானமும் இக்கலியுகத்தில் கூடாதென்று விலக்கப்பட்டது.

(உக) வது. "అగ్నిహోత్రహవణి" எது, காடோறும் வேள்வி செய்பவன் காலை மாலை வேள்வித்தீக்காரியத்தில் ஹோமஞ்செய்கின்ற பால்முதலிய அவித்திரவியங்களைச்சேகரித்து வைத்துவைக்கும்படித்திருந்தப்பட்ட ஓர்வகை மரக்கலம்=மரப்பாத்திரம் அதனால்ஓமம்செய்தபின்பு அச்சேடத்தை அப்பாத்திரத் தோடுமக்குதல்செய்து, தருப்பைசலத்தினால்அலம்பிச் சுத்திசெய்துவைத்திருந்தனர். அவ்வழக்கம்இக்யுகத்திலாகாது. மக்குதல்செய்தால் எச்சிலாம். எ-று.

(உஉ) வது. வானப்பிரஸ்தம் மேற்கூறப்படும்.

(உங) வது. பாடபேதம். "ప్రవేశః" = கங்கையமுனை சரச்சுவதி என்னும் திரிவேணி சங்கமம் மூன்றியாறு கூடுமிடம் பிரயாகை (அது அலஹாபாத்) இதில் பாய்ந்திறந்தல், இதுவே கங்கைபாய்தல்என்பது. இதனை,இருக்குவேதம், "సితాసితేసరితో యత్రసంగతేత్రాప్లుతాసోదివముత్పతంతి। యేవైతన్వాంవిసృజంతిధీరాస్తేజనాసోఅమృతత్వంభజంతే." = கங்கையமுனையாறு எங்குகூடுகின்றனவோ அவ்விடத்து தீராதிதேஹர் சுவர்க்கத்தைத் பறந்தடைகின்றனர். யார்? அங்குதேகத்தை ஒழிக்கின்றார்களோ ? அவ்வகைப்பட்ட ஞானவான்கள் அமிர்தத்துவத்தை அடைகின்றனர். என்று விதித்தபடி மூன்றுளில் அத்திரிவேணியில் விழுந்து தேகத்தைவிட்டு வந்தனர். அதைக்குறித்து. மூன் செய்யத்தக்க "అగ్నిహోత్రసమారోపణం," =நித்தியவேள்வித் தீக்காரியத்தை முடித்தல். "ఆత్మశ్రాద్ధ," =தனக்குத்தானே சிராத்தகருமத்தை முடித்துக்கொள்ளல் முதலிய விதிகளும்கூறப்பட்டன.அவ்வாறுதேகத்தை யொழித்தால் அது "ఆత్మహత్య" = தற்கொலை என்று. என்று மூன்செய்து யழுங்கினர். இக்கலியிலது கூடாது. ஏனெனில் ?

"సితాసిత," என்ற சருதிமொழிக்கு கங்கையமுனை என்பது பொருளல்ல. வெள்ளைகறுப்பு என்றது பொருள். அதுபுராணைக் கூற்றின்படி கங்கையமுனையாறென்றே பொருள் கூறப்படினும் யோக நூலுடையார்கூறியபடி இடைபிங்கலை என்று நாடிகளாகின்றது. சுழுமுனையோடு கூடி திரிகூடம்

திரிவேணியென்னும் பெயரையுடைய புருவநடுவிடத்தில் தியானம் செய்பவனுக்குப் பயன் சுவர்க்கமுறுதல். என்னை? "भ्रूमध्यप्राणमावेश्य" என்னுங் கீதைமொழிப்படித் தாரகயோகத்தில் பிரமரந்திரத்தைப் பிறிக்கொண்டுயிர் துறக்கும் சித்தபுருடனுக்கு "तमोर्ध्वमायन्नमृतत्वमेति" = அந்நாடியோடு மேற்சென்றவன் அமிர்தத் துவத்தை அடைகின்றான் என்ற "கடவல்லியுபநிடத" மொழிப்படி வீட்டை அடைகின்றான் என்று மேற்கூறிய இருக்குமொழிக்குப் பொருளாகின்றது. ஆதலின் அவ்வாறு செய்யவேண்டுமேயன்றி நீரில் விழுந்து தேகத்தை யொழிக்கலாகாதென்று முன்னுளிலேயே சிலர்கொள்கையாக விருந்தது. ஆயினும், அதற்கு ஆற்றலில்லாத அநாதிகாரிகள், தலதீர்த்த விசேடங்களைத் தெரிவிக்கின்ற ஸ்மிருதிபுராணப்படி கங்கை யமுனையாற்றுக் கூட்டத்தில் விதிப்படி உயிர் விடுதலைச்செய்து வந்தனர். இவ்வாறே. குருக்கேத்திரத்திலும் அரசர்கள் போர்செய்து வெட்டுண்டு இறந்தனர். அதுவும் இப்போதாகாதென்று கலிவிலக்கில் ஒழிக்கப்பட்டது.

மற்றொருசாரார். அச்சுருதிமொழிக்கு நினைப்பு மறப்பெனப்படுவனவே கங்கையும் யமுனையுமாமாகலின் அவ்விரண்டுங் கூடுமிடமுவது ஆன்மநிலையாம் அவ்விடமதுத்தியானயோக நீராடிமுரும், தத்துவத்தேக நியதிசெய்தாரும் அமிர்தத்துவம் = சாகாநிலைபெறுவர் எனவும் பொருள்கூறுவர். இவ்வாறே ஏனையவிரதவேள்வி முதலிய நித்த நைமித்திய கருமங்களனைத்தினுக்கும், உள்ளுறைப்பொருள் உள்ளன என்பர். அவற்றை வல்லுநர்பாற் கேட்டுணர்க.

(உச) முறைப்படி ஓதினுல் ஓதவேண்டும் இல்லையேல் வேண்டுவதில்லை; என்றுவிட்டால் இக்கலியில் நியமம் முழுவதும் நடத்தலில்லை யாதலால் ஓதலே ஒழிந்துவிடும். ஆதலின் அவ்வளவு கட்டுப்பாடு வைத்துக்கொள்ளலாகாது. எனவே, எவ்வளவானுலும் ஓதல்வேண்டும் என்பது.

யாஜ்ஞவல்கியர், " ப்ராஹ்மம் ப்ராப்யேஷ்டநக்ஷத்ரயுக்தேஷ்வந்யதிஷ்வபிகுரு பந்துஷு। உபாகர்மணிசோத்ஸர்கே ஸ்வாத்யாஷாப்ரோஷ்டபதேமதே। ஸந்த்யாகர்ஜிதநிர்ஹ்ராத தூமகம்போல்காநிபாதனே। ஸமாப்யவேதமந்யனிச மாரண்யாகமதிஷ்யேச। பஞ்சதஷாத்யஞ்சதுர்தஷ்யா மஷ்டம்யாஞ்சாபராஹ்ணகே। ருதுஸந்திஷுபுக்த்வாச க்ராத்திகம்ப்ரதிக்ருஹ்யாச। பஷுமஞ்சாகநகுல க்வாஹ மார்ஜார மூஷகைஃ। க்ருதெந்தரேஷ்வஹோராத்ரம் ஷ்ராத்தக்ருத்பரிவர்ஜயேத்." = மாஜ்ஞக்கன், இருந்துவிக்ரு, குரு, பந்து, ஆசார்யாடைய சாகைகளை முறையே ஓதிய சுரோத்திரியர், இவர்கள் இருந்து முன்னுரைகள் வரையும், உபாகருமம், உத்ஸர்ஜனம், நடந்த முன்னுரைகள் வரையும், அத்தியயனம்கூடாது. சந்திகாலத்திலும், குமுறுதலும், இடிவிழுதலும், தூமிஅதிர்தலும், விண்வீழ்கொள்ளி விழுதலும், இப்படிப்பட்ட வுற்பாதகாலங்களிலும் அத்தியயனத்தை ஒருபகலும் இரவும் நிறுத்திப் பின்பு " ஆரண்யகவேதத்தை " ஓதியதன்மேல் அத்தியயனம் செய்யவேண்டும். சாந்திரமாசம் பிறந்த, அட்டமி, சதுர்த்தசி, பஞ்சதசி தினங்களில், சூரியசந்திர கிரகணகாலத்தில், சூதககாலத்தில், ஒருதிருதகுறிந்து வேறொருதிருதவருகின்ற சந்திகாலங்களில், சிராத்தவுணவுகளை யுண்டதினத்தில், தானம் வாங்கின தினத்தில், ஆசிரியனுக்கும் மாணாக்கனுக்கும் நடுவே பசு, தவளை, நரி, நாய், பாம்பு, நூனை, எலி, புகுந்து சென்றாலும், இந்திரத்துவஜம் எதத்தாலும் முறிந்து விழுந்தாலும். ஒருபகலிரவு அத்தியயனம் செய்யலாகாது. எ-று. காண்க. (இந்திரத்துவசம் என்பது, திருவிழாப்பொருட்டுக் கொடியேற்றுதல் போல்வன என்பர்).

மனு, " சோரைருபஷ்ருதேக்ராமே ஸம்ப்ரமோதாக்நிகாரிதே। அகாலிகமனத்யாயம் வித்யாத்ஸர்வாஸ்வவஸ்துஷ்வபி." = ஊரில் கள்ளருபாதி உண்டானாலும், தீப்பற்றினாலும், பயத்தால் வினாதலுண்டாயினும், இன்னும் வேறு

ஆச்சரியங்களிலும், அகாலமேயானலும் ஓதல் ஒழிய வேண்டுவது. எ-று.

கூர்மபுராணம், "శ్లైష్మాతకస్యభాయాయాం శాల్మలేర్మభుకస్యచ। కదాచిదపినాధ్యాయం కోవిదారకపిత్థయోఃం." = "శ్లైష్మాతకః" = கறுவிலிமரம். "శాల్మలి." = இலவமரம். "మధుకం." = இலுப்பை. "కోవిదారం"=மலையகத்தி, அல்லது, மந்தாரைமரம். "కపిత్థం"=விளாமரம். இம்மரநீழலில் அத்தியயனஞ்செய்யலாகாது. எ-று. காண்க.

இவ்வநத்தியாயத்திற்குஒழிபுகூறுகின்றது.

மனு, "వేదోపకరణైవ స్వాధ్యాయైవనిత్యకే। నానురోధోస్త్యనధ్యాయే హోమమంత్రేషుచైవహి" வேதத்தினுடைய உபகரணங்களிலும், நித்தியந்தான் சுவாத்தியாயஞ் செய்வதிலும், ஹோமத்திற்குக் கூறுமந்திரங்களிலும், அநத்தியாய தோஷமில்லை. எ-று. காண்க.

வேதஉபகரணம் என்பது, ஆறு அங்கநூல்கள், நித்திய சுவாத்தியாயம் என்பது, பிரமவேள்வி=வேதபாராயணம்.

சௌநகர், శౌనకః॥ "నిత్యేజపెచకామ్యేచ క్రతౌపారాయణేపిచ। నానధ్యాయోస్తివేదానాం గ్రహణేగ్రాహణేతథా," = நித்தமுஞ் செய்யும் மந்திரஜபம், காமியஜபம், வேள்வி, பாராயணம், உபாகருமம், உபதேசித்தல், உபதேசம் பெறுதல், இவற்றிற்கும் அநத்தியாய தோஷமில்லையாம். எ-று. காண்க.

கூர்மபுராணம். కూర్మ॥ "అనధ్యాయస్తునాంగేషు నేతిహాసపురాణయోఃం। నధర్మశాస్త్రేష్వన్యేషు పర్వణ్యేతానివర్జయేత్" = ஆறு அங்கங்கள், இதிகாசம், புராணம், தருமசாத்திரம், வானயகலைகள் இவைகட்கு அநத்தியாய தோஷமில்லையாம். ஆயின் அமாவாசையும் பூரணையுமாகிய பருவங்களிற் கூடாது. எ-று. காண்க.

அநத்தியாயப் பிரகாணமுற்றிற்று.

யஜ்ஞப்பிரகாணம்=வேள்விக்காரியம்.

முன்னர், ஓதுவித்தலும், ஓதுதலும். இவ்வாறு செய்ய வேண்டுவது என்று கூறப்பட்டன. இனிவேட்டலையும், வேட்பித்

கலியும் கூறுதும், அவற்றுள், வேட்டலினுடைய தோற்றத்தையும் பயனையும், ஸ்ரீகண்ணன் கூறினர். வருமாறு.

பகவற்கீதை, "சஹாயஜ்ஞாஃப்ரஜாஸ்ருஷ்ட்வா புரோவாசப்ரஜாபதிஃ। அனேனப்ரஸவிஷ்யத்வ மேஷவோஸ்த்விஷ்டகாமதுக்। தேவான்பாவயதானேன தேதேவாபாவயந்துவஃ। பரஸ்பரம்பாவயந்த ஸ்ரேஷ்யஃபரமவாப்ஸ்யத। இஷ்டான்போகான்ஹிவோதேவா தாஸ்யந்தேயஜ்ஞபாவிதாஃ। தைர்தத்தானப்ரதாயேப்யோ யோபுங்க்தேஸ்தேனஏவஸஃ" = பிரமன்முதலில் பிரஜைகளை வேள்வியோடு பிறப்பித்துக் கூறியதாவது, இந்தவேள்வியால் நீவிர்பிரசவிப்பீர்களாக=பிறப்பிப் பீர்களாக. இதுநுங்கட்கு இச்சித்தவைகளைக் கறப்பதாகுக=கொடுப்பதாக. இதனால் தேவர்களை நீவிர் நினைமின், அத்தேவர்கள் நும்மை நினைக்கக் கடவர், நீவிரிருவருரும் ஒருவனையொருவர் ஒருமையோடும் எண்ணி மேலான செல்வத்தைப் பெறுவீர்கள். நீவிர்செய்த வேள்வியால் உபசரிக்கப்பட்ட அவ்வானவர்கள் நும்மிச்சையான இன்பநுகர்ச்சியைத் தருவர். அவர்களாற் கொடுக்கப்பட்டவைகளை மீட்டும் அவர்கள் பொருட்டுக் கொடாமலே யாதொருவன்தானே துய்ப்பானே? அவனேகள்ளன். எ-று. காண்க.

வேள்விபேதங்கள்.

அக்கதவேள்வி, சாத்துவிகம், இராஜசம், தாமசம் என்னும் குணபேதத்தால்மூன்றுவகையென்று அவரேகூறினர். வருமாறு, "அபலாகாங்க்ஷிபிர்யஜ்ஞோ விதிதிருஷ்டோயஇஜ்யதே। யஷ்டவ்யமேவேதிமன ஸ்ஸமாதாய ஸஸாத்விகஃ। அபிஸந்தாயதுபலம் தம்பார்த்தமபிசைவயத்। இஜ்யதேபரதஸ்ரேஷ்டதம்யஜ்ஞம்வித்திராஜஸம்। விதிஹீனமஸ்ருஷ்டான்னம் மந்த்ரஹீனமதக்ஷிணம்। ஸ்ரத்தாவிரஹிதம்யஜ்ஞம்தாமஸம்பரிசக்ஷதே" = பயனவிரும்பாது செய்யவேண்டுவதே கடன் என்ற உறுதியையுடைய உள்ளத்தொருப் பாட்டோடு விதியாற் காணப்பட்ட வேள்வியைச் செய்வதே சாத்துவிக வேள்வியாம். பயனவேண்டியாயினும், பிறர்மதிக்கும் பொருட்டாயினும், செய்யப்பட்ட வேள்வியை, ஓ! அருச்சுன! இராஜசமென்று உணரக்கடவாய். விதியிலடம்பாடு, அந்தானம், மந்திரமுறை, தக்ஷிணைதானம், சிரத்தை = இதுவே சிறந்ததென்னும் பிறழாத நம்பிக்கையோடுங் கூடியகொள்கை, இவைகளின்றிச்செய்த வேள்வியைத்தாமசவேள்வி யென்னப் பெரியர் கூறுவர். எ-று. காண்க.

உலகப்படைப்புவேள்வியின்பொருட்டு.

மஹாபாரதம், அசுவமேதபருவத்திலும், பிராமணர்முதலி யோர் சிருட்டி வேள்வியின் பொருட்டுக் கடவுள் படைத் தார் என்று சிறப்பிக்கப்பட்டது. అశ్వమేధపర్వణి ॥ "యజనార్థంద్విజా సృష్టా స్తారకాదిషుదేవతాः। గావోయజ్ఞార్థముత్పన్నాదక్షిణార్థంతథైవచ। సువర్ణంరజతం చైవ పాత్రంకుంభార్థమేవచ। ఇధ్మార్థమథయూపార్థం బ్రహ్మోచక్రేవనస్పతిం। గ్రామ్యారణ్యాశ్చపశవో జాయంతేయజ్ఞ కారణాత్," = வேதியர், வேள்வி செய்யும் பொருட்டே படைக்கப்பட்டார்கள். (எனவே, எல்லாவேள்வி யிலும், தலைவன், புரோஹிதன், இருத்துவிக்கு, என்று நின்று வேதியனேவேட்டல்செய்கிறான். பிரமமேதவேள்வியில் பசுவுமா கின்றான். நரமேதத்தில் மனிதனே பசுவாகின்றான். என்பதுகருத் து). நக்ஷத்திரங்கள், ஆகாயத்தின்கணுள்ளதேவர்கள், இவையெல் லாம்வேள்வியின் பொருட்டேயாம். கோக்கள்=பசுக்கள், வேள் விக்குக் கருவியும் தக்ஷிணையும் ஆகின்றன. ஆதலின் வேள்வியின் பொருட்டே பிறந்தன. பொன், வெள்ளி, தக்ஷிணைக் குதவுகின் கின. பாத்திரங்கள் வேள்விக் கலயமாகின்றன. யூபத்தம்பங் களுக்கும், "இத்மம்" = ஹோமஞ் செய்யும்பொருட்டுச் சமித்துக் களைச் சேர்த்துக் கட்டிய கற்றையின் பொருட்டும் பிரமன் மரங் களைப் படைத்தார். ஊரிலும், காட்டிலும் உள்ள பசுக்கள் மிரு கங்கள் எல்லாம் வேள்வியின் பொருட்டே பிறக்கின்றன. எ-று. காண்க.

அன்வயவியதிரேகங்களால், வேள்வியின் பெருமை ஹாரீத னர் குறிப்பிக்கின்றனர். హారీతः॥ యజ్ఞేనలోకావిమలాఽభాంతి । యజ్ఞేనదేవాఅ మృత్వమాప్నువన్। యజ్ఞేనపాపైర్బహుభిర్విముక్తः। ప్రాప్నోతి లోకానమతస్యఃష్ణోः। నా స్త్యయజ్ఞస్యలోకోవై నాయజ్ఞోవిందతేశుభం। అనిష్టయజ్ఞోపూతాత్మా భ్రశ్యతి చ్ఛిన్నపర్ణవత్," = வேள்வியால் உலகங்கள் நிருமலமாய் ஒளிசெய்கின்றன. வேள்வியால் தேவர்கள் சாவில்லாமையை யடைந்தார்கள். வேள்வியால் பாவம் ஒழிந்தவனுய்ச் சாவில்லாத விஷ்ணு வுலகங் களை யடைகின்றான். வேள்வி யில்லாதவனுக்கு யாருமறிய உலக மில்லை = கதியில்லை. வேள்வியில்லாதவன் சுபத்தை யறியான். வேள்வி செய்யாதவன் சுத்தமில்லாத ஆன்மாவை யுடையவனுய் கிழிந்த இலைகளைப்போல விழுந்துவிடுவான். எ-று. காண்க.

வேள்விவிசேடம்.

வேள்விவிசேடமெனப்படுவது, அக்கிநிஹோத்திரமுதலிய வையாம். அங்ஙனம் வேதத்தாற் கூறப்படுகின்றது. வருமாறு, "ப்ரஜாபதிர்யஜ்ஞானஸృజతாக்ని హోత్రంచాగ్నిష్టోమంచపౌర్ణమాసీంచోక్థ్యం చామావాస్యంచాతిరాత్రంచ" = பிரஜாபதி வேள்விகளைப்படைத்தார் அக்கிநிஹோத்திரம், அக்கினிஷ்டோமம், பௌர்ணமாசியம், உக்தியம், அமாவாசை, அதிராத்திரம், இவைகளையும். எ-று. காண்க. இது சுருதி.

அக்கினிஹோத்திரமுதலிய கருமங்கள் திருத்தஞ்செய்யப்பட்டதியினாலேயேமுடிக்கத்தக்கவாயிருத்தலின் அப்படிப்பட்டதிருத்தத்தைஉண்டாக்கும் ஆதானகருமம், முதலிலேயெடுத்திக்கவேண்டுவது.

ஆதானகருமவிடயம்.

அவ்விடயத்திற்பிரஜாபதிகூறினர். வருமாறு, "సర్వ సంస్థాధికారస్య నాహితాగ్నేర్ధనేసతి। ఆదధ్యాన్నిష్ణోప్యగ్నిన్ నిత్యంపాపభయాద్విజः।" = ஆஹிதாக்கிநியானவனுக்கு=ஆதானகருமத்தால் தீயைப்பெற்றுக்கொண்டவனுக்குத் திரவிய முண்டாயிருந்தால்எல்லா "ஸமஸ்தை" களையும்=வேள்விக்கருமங்களையும் செய்வதற்கு அதிகாரமுண்டாம். தனஹீனனாலும் இருபிறப்பாளன் பாவபயத்தினால் நாடோறும் நடத்த ஆதானகருமத்தால் தீயைத்தேடி வைத்துவைக்கவெண்டுவது. எ-று. காண்க.

அதனைச்செய்யாவிட்டால், பாவம்வருமென்று கூர்மபுராணத்துட்குறிப்பிக்கப்பட்டது. "కార్యే॥ నాస్తిక్యాదథవాలస్యా దగ్నీన్నాధానమిచ్ఛతి। యజేతవానయజ్ఞేన సయాతినరకాన్బహూన్। తస్మాత్సర్వప్రయత్నేన బ్రాహ్మోవావిశేషతः। ఆధాయాగ్నింవిశుద్ధాత్మాయజేత పరమేశ్వరం" = நாத்திகத்தினாலாவது, அன்றறிவோமென்னும் ஆலசியத்தினாலாவது, யார் அக்கினிகளை ஆதானகருமத்தோடு திருத்தஞ்செய்து வைத்துக்கொள்வதற்கு விரும்புவதில்லையோ? யார்வேள்வியால் தேவர்களைப் பூசிப்பதில்லையோ? அவன் பலநரகங்களை யடைகின்றான். ஆதலால், வேதியனே யாயினும் வேறு அதிகாரியேயாயினும் எல்லாமுயற்சியாலும் அக்கினியை ஆதானகருமத்தால் திருத்தி

வைத்துக்கொண்டு பரிசுத்தமாகிய ஆன்மாவை புடையவனுய் வேள்வியால்பரமேச்சுரனைப்பூசிக்கவேண்டுவது. எ-து. காண்க.

ஆதானகாலம்.

வேதமும் காலமுதலியவற்றேடு கூடியிருக்கும் ஆதானகருமத்தை விதிக்கின்றது. ச்ருதிः॥ "வஸంతేబ్రాహ్మణోగ్నిమాదధీత। వసంతోవై బ్రాహ్మణస్యర్తుः। స్వఏవైనమృతావాధాయ। బ్రహ్మవర్చసీభవతి। గ్రీష్మేరాజన్యఆదధీత। గ్రీష్మోవై రాజన్యస్యర్తుः। స్వఏవైనమృతావాధాయ। ఇంద్రియావీభవతి। శరదివైశ్యఆదధీత। శరద్వైశ్యస్యర్తుः। స్వఏవైనమృతావాధాయ। పశుమాన్భవతి," = இளவேனிற் பருவத்தில் வேதியன் அக்கினியை ஆதானம்செய்யவேண்டுவது அவ்விளவேனிற் காலமே வேதியனுடைய பருவமென்பதுலகறிந்தது. தனது பருவத்திலேயே இந்தத் தீயை ஆதானஞ்செய்து, பிரமவர்ச்சசு=தேஜஸு=ஒளியையுடையவனுகின்றுன். கூதிரியன் முதுவேனிற்பருவத்தில் ஆதானம் செய்யவேண்டுவது. அம்முதுவேனில் அரசனுடைய பருவமாம். தனது பருவத்திலேயே இதனை ஆதானஞ்செய்து, இந்திரியங்களைக் காத்துக்கொள்பவன் ஆகின்றுன். சரற்காலத்தில்=கூதிர்ப்பருவத்தில் வைசியன் ஆதானஞ் செய்யவேண்டுவது. அக்கூதிர் வைசியன் பருவமாம். தனது பருவத்திலேயே ஆதானஞ்செய்து பசுநிலையையுடையவனுகின்றுன். எ-று. காண்க.

வியாசபாரதம் அசுவமேத பருவத்திலும், அశ్వమేధపర్వణి॥ "వసంతేబ్రాహ్మణస్యస్యాదాధేయోగ్నిర్నరాధిప। వసంతోబ్రాహ్మణఃప్రోక్తోవేదయోనిస్సఉచ్యతే। అగ్న్యాధేయమంతుయేనాథవసంతేక్రియతేనృప। తస్యశ్రీర్బ్రహ్మవృద్ధిశ్చ బ్రాహ్మణస్యవివర్ధతే। తృతీయస్యాగ్నిరాధేయోగ్రీష్మక్షేత్రస్యవైనృప। ఏనాధానంతువైగ్రీష్మే క్రియతేతస్యవర్ధతే। శ్రీఃప్రజాఃపశవశ్చైవవిత్తంచైవబలంయశः। శరత్కాలేతువైశ్యస్యాధ్యాధానీయోహుతాశనः। శరద్రాత్రిస్వయంవైశ్యో వైశ్యోనిస్సఉచ్యతే। శరదాధానమేవంవై క్రియతేయేనపాండవ। తస్యైవశ్రీఃప్రజాయుశ్చపశవోర్థశ్చవర్ధతే," = வேதியனுக்கு அக்கினிவசந்தகாலத்தில் ஆதானஞ் செய்யத்தக்கதாம். வசந்தம் வேதியனென்று கூறப்பட்டது. அது வேதத்திற்கு யோனி என்று கூறப்பட்டது. எந்தக்காரணத்தினல் அக்கினி ஆதானம்வசந்தகாலத்தில் செய்யப்படுமோ? அந்தவேதியனுக்கு ஒளி, பிரமவர்ச்சசு, வேதம், ஆன்மஞானம், சிவம், வைதிகச் செல்வம், விருத்தியாகின்றன. அரசனுக்கு கிரீஷ்மருதுவில்

அக்கினி ஆதானஞ்செய்யத்தக்கது. அதுவேசிறந்தது. கிரீஷ்மத் தில் ஆதானஞ்செய்தால் அவனுக்கு செல்வம், மக்கள், பசு நிகைகள், தனம், வல்லமை, புகழ், விருத்தியாகும். வைசி யனுக்கு சரற்காலத்தில் அக்கினி ஆதானம் செய்யவேண்டுவது. வைசியன்தானே சரற்காலத்தினுடைய இராத்திரியாக விருக் கின்றன். அந்த சரற்காலம் வைசியயோனி என்று கூறப்படு கின்றது. சரற்காலத்தில் ஆதானஞ் செய்வதால் அவனுக்குச் செல்வம், மக்கள், பசுநிலை, பொருள் விருத்தியாகின்றன. எ-று. *காண்க.

"వైశ్యయోని" =வேதத்திற்குக்காரணம். எம்,வேதத்தையேகாரணமா கவுடையதுஎனவுமாம். வேதம் எது - தீ = அக்கினி. என்னை ? "జాతవేదాः" என்றலின்.வேதம்சுருதியுமாம். வேதத்திற்கூறப்பட்டது. வேதயோனி, தியுண் டாவதற்குக் காரணமானது வேதயோனி எனப்படும். "బ్రహ్మ" வேதம், ஞானம், தீ, சிவம், என்னும்பொருள. "బ్రాహ్మణः" = பிரமசம்பந்தமானது எம், வேதியனுக்கு வேண்டுவது எனவுமாம். "శరద్రాత్రిः" = சரற்காலத்தி னிரவுகளிப்புக்கு ஏதுவாயவாறு, களிப்புடை யவன். அல்லது சரற்காலத் தில் தீக்கனி ஆதானஞ்செய்து கொண்டுவருபவன் "వైశ్యయోనిः"=வைசி யத்துவமென்னும் வருணச்சிரமத்திற்குக் கருவியான அக்கினி ஹோத்திரம் வைசியமென்னுமொழியால் கூறப்படுகின்றது. அதற்குயோனிபெனவே, கா ரணம்,நிமித்தம்என்னும்பொருட்டு.காலமாதலின்அந்தக்கருமத்திற்குஆதாரமா யுள்ளது சரற்காலமென்பது கருத்து.

அங்கனம் வசிட்டரும் கூறினர். வருமாறு, వశిష్ఠः ॥ "అవశ్యం బ్రాహ్మణోగ్నినాదధీతదర్శపూర్ణమాసాగ్రయణేష్టిచాతుర్మాస్యపశుసోమైశ్చయజేత" = வேதியன் ஒருதலையாக அக்கினிகளை ஆதானம் செய்ய வேண்டு வது. தரிசயாகம், பூரணமாசேஷ்டி, ஆக்கிரயணேஷ்டி, சாதுர்மா சேஷ்டி, பசுயாகம், சோமயாகங்கள், இவற்றுளும் வேட்டல்கரு மத்தைச்செய்யவேண்டுவது. எ-று. காண்க.

ஹாரீதரும், హారీతः ॥ "పాకయజ్ఞాన్యజేన్నిత్యం హవిర్యజ్ఞాంస్తునిత్య శः। సామ్యాంశ్చవిధిపూర్వేణయఇచ్ఛేద్ధర్మమవ్యయం" =நாள்தோறும் பாக எச் சத்தையும், ஹவிர் எச்சத்தையும், சௌமிய எச்சத்தையும், விதிப்படி அழியாத அறத்தை விரும்பினவன் செய்ய வேண்டு வது. எ-று. காண்க. எச்சம்=வேள்வி. அது இக்காலத்தில்யக் ஞியம் என்று வழங்குகின்றது.

அவை கௌதமரால் விளக்கப்பட்டன. "గౌతమః ॥ అష్టకా పార్వణశ్రాద్ధం శ్రావణ్యాగ్రహాయణీచైత్ర్యాశ్వయుజీతి సప్తపాకయజ్ఞసంస్థాః॥ అగ్న్యాధేయమగ్నిహోత్రం దర్శపూర్ణమాసావాగ్రయణం చాతుర్మాస్యం నిరూఢపశుబంధ సౌత్రామణీతిసప్తహవిర్యజ్ఞసంస్థాః ॥ అగ్నిష్టోమోత్యగ్నిష్టో మఉక్థ్యషోడశీవాజపేయోతి రాత్రోప్తోర్యామఇతిసప్తసోమసంస్థాః॥ " =

பாகளச்சசமஸ்தை எழுவகை.

அஷ்டகம், பார்வணம், சிராத்தம், சிராவணி, ஆக்கிரஹா யணி, சைத்திரி, ஆசுவயுஜி, இவ்வேழும் பாகளச்ச சமஸ்தை யென்னப்படும்.

ஹவிர்ளச்சசமஸ்தை எழுவகை.

அக்கினி ஆதானம், அக்கினிஹோத்திரம், தரிசபூரணமா சங்கள், ஆக்கிரயணம், சாதுர்மாசியம், நிரூடபசுபந்தம், சௌத் திராமணி, இவ்வேழும் ஹவிர்ளச்ச சமஸ்தைகள் என்னப்படும்.

சோமசமஸ்தை எழுவகை.

அக்கினிட்டோமம், அத்தியக்கினிட் டோமம், உக்தியம், ஷோடசீ, வாஜபேயம், அதிராத்திரம், அப்தோரியாமம், இவ் வேழும் சோமசமஸ்தை யென்னப்படும்.

மஹாளச்சமாகிய கிரதுக்கள்.

வேறுவித மஹா ளச்சமாகிய கிருதுக்களை, தேவலர்குறிப் பித்தனர். வருமாறு, దేవలః॥ " అశ్వమేధరాజసూయ పౌండరీకగోసవాదయో మహాయజ్ఞక్రతవఇతి " = அசுவமேதம், இராஜஸூயம், பௌண்டரீகம், கோசத்திரம், முதலியவை மஹாளச்ச வேள்விகள் எனப்படும். எ-று. காண்க.

வேள்விமூவகைஎன்பது

மதாலசர். ముదా లసः॥ " నిత్యంనైమిత్తికంకామ్యంత్రి విధంకర్మపౌరుషం" = புருடன் செய்யத்தக்க கருமம், (எனவே எல்லாவேள்வியும்) சில நித்தமெனவும், சிலநைமித்திகம் எனவும், சிலகாமியம் எனவும் மூவகைப்பட்டுள்ளன. எ-று. காண்க.

நித்தவேள்வி.

அவற்றுள். வேள்விகட்கு, நித்தத்தன்மை,. அதர்வசாகை யில் கூறப்படுகின்றது. வருமாறு, முண்டகோபநிஷத்து. மும்ஞ்ஞோ பநிஷத் ॥ "மంత్రేషుకర్మాణికవయో యాన్యపశ్యంస్తానిత్రేతాయాం బహుధాసంత తాని। తాన్యాచరథనియతం" = மந்திரங்களில் எந்தக்கருமங்களை அறி வுடையோர் (வெளிப்படக்) கண்டார்களோ? அவை, திரேதா யுகத்தில்பலமுகமாக நித்தியமாய்ச்செய்யப்பட்டிருந்தன. பின்பு, அவைகளை, நித்தியமென்று கூறினர். எ-று. காண்க.

வாயஜஸநேயசாகையில், ஈசாவாஸ்யோபநிஷத்து. ஈஸா வாஸ్యా ॥ "కుర్వన్నేవేహకర్మాణి జిజీవిషేచ్ఛత గ్ంసమాः ॥" = இவ்வுலகத் தில் கருமங்களைச்செய்துகொண்டேநூறுவருடம் பிழைத்திருப்ப தற்கு விரும்பவேண்டுவது. எ-று. காண்க.

சுருதிவிதிவாக்கியங்கள் "ఏతద్వైజరామర్యమగ్నిహోత్రం। జరస్వా ర్యేవాస్మాన్ముచ్యతే। మృత్యునాచ" = இந்த அக்கினிஹோத்திர மன்றே? மூப்புமரணமற்றது.(மூப்பிலுமரணம்வையிலும்செய்யத்தக்கது என்பாருமுளர்) இதனல் மூப்பு=கிழத்தனம்ஒழியும். மரணமும் ஒழிக்கப்படும். எ-று.காண்க. பிழைத்திருக்கும் வையில் என்று காலவரையறைசெய்தது, இக்கருமம் நித்தியமென்பதற்கு இலக் கணமாக விருக்கின்றது. என்க.

அவ்வாறே "యావజ్జీవమగ్నిహోత్రం జుహుయాత్। యావజ్జీవందర్శ పూర్ణమాసాభ్యాంయజేత్" = உடம்போடு கூடியுயிருள்ளவரையில் அக் கினிஹோத்திரத்தை ஹோமஞ்செய்ய வேண்டுவது. சீவனுள்ள வரையில்தரிசபூரணமாசயாகங்களால்வேள்விசெய்யவேண்டுவது என்றுவேதவாக்கியமே நித்தியத்துவத்தை விளக்குகின்றது.

செய்யாவழிபாவம்வருதலும் நித்தியத்துவத்திற்குஞாபகம். அங்ஙனம் அதர்வணவேதத்துட் கூறப்படுகின்றது. வருமாறு, முண்டகோபநிஷத்து. "యస్యాగ్నిహోత్రమదర్శమపౌర్ణమాసమచాతుర్మాస్య మనాగ్రయణమతిథివర్జితంచాహుతమవైశ్వ దేవమవిధినాహుత మాసప్తమాంస్తస్యలో కాన్హినస్తి" = யார்க்கு அக்கினி ஹோத்திரமே யில்லையோ? இருக்கினும் தரிசபூரணமாசயாகமில்லையோ? ஆக்கிரயணேஷ்டி யில்லையோ? அதிதிசற்கார மில்லையோ? ஹோமமில்லையோ?

வைசுவதேவமில்லையோ? அவிதியாக ஹோமஞ் செய்யப்படுகின்றதோ? அவை, எழுவனையில் அவனுடையபுண்ணிய லோகத்தைக் கெடுக்கின்றன. எ-று. காண்க. அவிதி=விதியற்றது.

அவ்வாறேமற்றொரு சுருதியிலும், "యస్యపితాపితా మహోవా సోమంనపిబెత్సవ్రాత్యః" = யார்க்குத் தந்தையாயினும் பாட்டனையினும் சோமபானஞ் செய்யவில்லையோ? அவன்விராத்தியன்=எனவே சமஸ்காரமில்லாதவன். எ-று. காண்க

நைமித்திகவேள்வி.

சீவனவிருப்பத்திற்கு வேறுபாடானது, மனைவேகுதல்முதலியநியதியில்லாத நிமித்தங்களை அனுசரித்து வந்தது, நைமித்திகமாம். அங்ஙனம் சுருதி கூறுகின்றது. வருமாறு, "యస్యగృహంప్రహృత్యగ్నయెశ్యామవతేపురోడాశమష్టాకపాలంనిర్వపేత్" =யார்க்குமனை தீப்பட்டதோ? அவன், சூஷாமவாக்-என்னும்-பெயருண்டாகிய அக்கினியின் பொருட்டு எட்டுக்கபாலத்தில் திருத்தஞ் செய்து வைக்கப்பட்ட புரோடாசத்தை வைத்து, ஹோமஞ்செய்கின்ற இஷ்டிகருமத்தைச் செய்யவேண்டுவது. எ-று. கபாலம் = மண்ஓடு. அதனை முன்கூறப்பட்டது.

காமியவேள்வி, பசு, இஷ்டி.

இச்சையால் நடத்தப்பட்ட கருமம், காமியமெனப்படும். எங்ஙனமெனில்? கிருஷ்ண யஜுர்வேதம். உ-வது காண்டம். "వాయవ్యగ్శ్వేతమాలభేత భూతి కామోవాయుర్వైక్షేపిష్ఠాదేవతా" =வாயுவையேதெய்வமாகவுடைய வெள்ளைப்பசுவைச்செல்வத்தை விரும்பினேன்வேள்வி செய்யவேண்டுவது. வாயு எடுத்துக் கொடுக்கத்தக்கபலமுள்ளதெய்வம். எ-று. காண்க. இவைமுதலியன வெல்லாம் காமியபசுக்களாம்.

சுருதி, "ఐంద్రాగ్నమేకాదశకపాలంనిర్వపేత్ప్రజా కామః" = மக்கட்பேறு விரும்பினேன்இந்திரன், அக்கினியையே, தெய்வங்களாகவுடையதைப் பதினொருகபாலத்தின்மேல் வைத்து சமஸ்கரித்து ஹோமஞ்செய்யவேண்டுவது. எ-று. காண்க. இதுமுதலியன காமியேஷ்டிகள்.

அவற்றுள், காமிய கருமங்களுக்கு இச்சித்த பொருள் கிடைப்பதேபயன். நித்திய நைமித்தியங்களுக்கோவெனில்? விதிப் படி அனுட்டிக்கப்பட்டால்இந்திரலோகத்தையடைதல் பயனும். அங்ஙனம் அதர்வணவேதத்துட் கூறப்படுகின்றது.

தீக்கடவுளின் எழுநாக்கள்.

முண்டகோபநிஷத்து, " కాళికరాళీచ మనోజవాచ సులోహితాయూ చసుధూమ్రవర్ణా । స్ఫులిఙ్గినీవిశ్వరుప్రీచ దేవీలేలాయమానాఇతిసప్తజిహ్వాః । ఏతేషుయు శ్చరతే భ్రాజమానేషు యథాకాలం చాహుత యోహ్యాదదాయన్ । తన్నయంత్యేతా సూర్యస్య రశ్మయోయత్రదేవానాం పతి రేకోధివాసః ॥ ఏహ్యేహీతితమాహు తయస్సువ ర్చసస్సూర్యస్యరశ్మిభిర్యజమానం వహంతి । ప్రియాంవాచమభివదంత్యోర్చయంత్య ఏష వఓపుణ్యస్సుకృతోబ్రహ్మలోకః " = காளி, கராளி, மனோஜவை, சுலோ கிதை, சுதூம்பரவருணை, ஸ்புலிங்கினி, விசுவரூபி, என்றுதீக் கடவுளின் எழுநாக்குகள் நக்குவனபோலும் உள்ளன. இவை ஒளிசெய்யும்போது, யார் காலந்தவறுது ஹோமாகுதிகளைக் கொ டுத்துக்கொண்டு கருமஞ் செய்கின்றரே? அவனைச்சூரியகிரண வடிவமாகிய அந்தநாக்கள் தேவர்க்களுக்கெல்லாம்ஒருவனதலை வனையுள்ளவ னிருக்கும் இடத்திற்குக் கொண்டு போகின்றன= பொருந்தச்செய்கின்றன. அவன்ஹோமஞ்செய்த ஆகுதிகள்நல்ல வொளியை யுடையனவாய் அக்கருமத்தலைவனை வா! வா! என்று பிரியமான சொற்களைக் கூறிக்கொண்டுஉபசரித்து, சூரியகிரணங்க ளால் சுமந்து கொள்ளுகின்றன, இது உனக்கு நல்லகருமத்தா லுண்டாகிய புண்ணிய கரமானபிரமலோகம். எ-று. காண்க.

அனுசாசநீகபருவத்தில்.

ఆనుశాసనికే॥"సుహుద్భిర్యజమానైశ్చబుత్విగ్భిశ్చతథాఽఽప్తైః।ఋద్ధైర్బ్రహ్మణ్యైర్వ్యవకరణైర్య క్తవ్యమితి నిశ్చయః।తథాకృతేషుయజ్ఞేషుదేవానాంతోషణంభవేత్ । తుష్టేషుదేవసంఘేషు యజ్ఞేయజ్ఞఫలంలభేత్ । దేవాస్సంతోషితాయజ్ఞై ర్లోకాంస్సంవర్ధయంత్యుత। ఉభయోర్లోక యోర్దేవిభూతి ర్యజ్ఞైఃప్రవృశ్యతే । తస్మాదబ్భాద్దివంయాతి సోమరైస్సహమోదతే। నాస్తి యజ్ఞసమందానం నాస్తియజ్ఞసమోవిధిః। సర్వకర్మసముద్దేశో దేవియజ్ఞేసమాహితః," = பரிசுத்தனாகிய யஜமானனும், அப்படிப்பட்ட இருத்விக்கு களாலும், சுத்தமாகிய ஏனைய வுபகரணங்களால், வேள்வி செய்யப்படுமாக. அவ்வாறு செய்யப்பட்ட வேள்விகளிடத்தில்,

தேவர்களுக்குக் களிப்புண்டாம். தேவர்கூட்டங்களிப் பினையடைந் தால், வேள்வி செய்தவன் அதன்பயனை யடைவன். வேள்விக ளால் களிக்கப்பெற்ற தேவர்கள், உலகங்களை விருத்திசெய்கின் றார்கள். ஓ! உமையே! இரண்டுலகங்களினுடைய செல்வமும் வேள்வியால் வெளிப்படுகின்றது. ஆதலால் வேள்வியால் சுவர்க் கத்தை யடைகின்றன். தேவர்களையும் களிப்பிக்கின்றன். வேள் வியோடு ஒத்ததானம் வேறில்லை. அவ்வேள்வியோடு ஒத்தவிதி யுமில்லை. எல்லாக்கருமங்களின் நோக்கமும் வேள்வியில் அடங்கி இருக்கின்றன. எ–று. காண்க.

நித்த கருமஞ்செய்யாத குற்றத்திற்குப் பிராயச்சித்தம்.

ஒருவேளை எவ்வாறுயினும் நித்தகருமம் நடவாது தப்பி விடுமாயின், அப்போது அதற்குப்பரிகாரம் பிரஜாபதிகூறினர். வருமாறு, ప్రజాపతిः॥ “దర్శంచపూర్ణ మాసంచ లుప్త్వోభయమెవవా। ఎక స్మిన్కృ ఛ్రపాదేన ద్వయోర్ద్వైనశోధనం। హవిర్యజ్ఞేష్వశక్తస్య లుప్తమప్యేకమాదితः। ప్రా జాపత్యేనశుధ్యేత పాకసంస్థాసుచైవహి। సంధ్యోపాసనహానౌతు నిత్యస్నానంవిలుప్యచ। హోమంనైమిత్తికంశుధ్యే ద్గాయత్ర్యష్టసహస్రకృత్। సమాంతెసోమయజ్ఞానాం హానౌచాం ద్రాయణంచరెత్। అకృత్వాన్యతమంయజ్ఞం యజ్ఞానామధికారతः। ఉపవాసెనశుధ్యేత పాకసంస్థా సుచైవహి,” = தரிசேஷ்டியெனும், பூரணமாசேஷ்டி யெனும், அவ்விரண்டு மேனும் நடவாது விடுபட்டால், ஒன் று தவறினால், “பாதகிருச்சிரம்” = கால்கிருச்சிரம் பிராயச் சித்தமாம். இரண்டு தவறினால், அரைகிருச்சிரம் பிராயச்சித்தம். ஹவிர் எச்சம் செய்வதற்கு அசக்தனெனவனுக்கு முதலிலிருந்து ஒன்றுசெய்யாது விட்டாலும் “பிராஜாபத்திய கிருச்சிரத்தால் சுத்தியுண்டாம். பாகவேள்வியிலும் இவ்வாறே. சந்தியாவந்தனம் ஔபாசனம், நித்தியஸ்நானம்லோபித்துப்போனால், எண்ணாயிரம் உருகாயத்திரி ஜபஞ்செய்தலினாலும், நைமித்திக ஹோமத்தி னாலும் சுத்தியாம். வருடமுடிவில் சோமயாகம் செய்யாவிட்டால், சாந்திராயண விரதஞ் செய்யவேண்டுவது. வேள்விகட்கு அதி காரியா யிருந்துகொண்டு, அவ்வேள்வியுள் எதுவாயினும் ஒரு வேள்வியைச் செய்யாவிட்டால் அவன் உபவாச விரதத்தால்= பட்டினி கிடத்தலால் சுத்தனாவான். பாகவேள்வியிலும் அவ் வாறே. எ–று. காண்க.

காத்தியாயனரும், காத்யாயனஃ ॥ பித்ருயஜ்ஞாத்யயேசைவ வைச்வதேவாத்ய யேபிவ। அனிஷ்ட்வானவயஜ்ஞேனசவான்னப்ராசனேததா । போஜனேபதிதான்னஸ்ய சருர்வைச்வானரோபவேத் ” = பிதுர்வேள்வி தவறினாலும், வைசுவதேவம் தவறினாலும், புதிய அன்னத்தை உண்ணும் பொழுது செய்யத்தகும் புதுவேள்வி செய்யாவிட்டாலும் (எனவே ஆக்கிரயணேஷ்டி செய்யாவிட்டாலும், பதிதனுடை அன்னத்தைப் புசித்தாலும், வைசுவாநரனையே தெய்வமாகவுடைய சருஹோமஞ் செய்யவேண்டுவது. எ-று. காண்க.

நித்தகருமத்தை விடலாகாது.

சொல்லப்பட்டதகூனை யவ்வளவுகொடுக்கத்தக்க தனமில்லாவிட்டாலும் நித்தகருமத்தைச் செய்யாது விடலாகாது. அதனைப்போதாயனர் கூறினர். வருமாறு, “போதாயனஃ ॥ யஸ்யநித்யானி லுப்தானிதஸ்யைவாகந்துகானிச॥ சுபதஸ்தோபினஸ்வர்கஂக ச்சேத்துபதிதோஹிஸஃ॥ தஸ்மாத்கஂர்வைஷ்ணை ர்மூலைர்முனாதரசனேவா। நித்யஂநித்யானிகுர்வீதனசநித்யா நிலோபயேத்,”=யார்க்குநித்திய கருமமும், அவ்வாறே நைமித்தகங்களும் உலோபித்துவிடுமோ? அவன் நல்லமார்க்கத்திலிருப்பவனாயிருந்தபோதினும், சுவர்க்கத்தை யடையமாட்டான். அவன் பதிதனாகிப் போகின்றனல்லவா? ஆதலால், கிழங்கு, வேர், பழங்கள், தேன், இரதம், இவைகளாலாயினும் நாடோறும் நித்தகருமங்களைச் செய்யவேண்டுவது; நித்தகருமங்களைவிடலாகாது. எ-று. காண்க.

மேல்விளை.

அற்றேல், திரவியம்போதாவிடின்சோமயாகம்செய்யவேண்டுவதில்லைஅதனைமனுகூறினர். மனுஃ ॥ யஸ்யத்ரைவார்ஷிகஂத்தம் பர்யாப்தம்பிருத்யர்த்தயே। அதிகஂவாபிவித்யேத ஸஸோமஂபாதுமர்ஹதி” = யாருக்குப் பரிசனங்களோடுதிருத்தியடையும் பொருட்டு மூன்றுவருடத்திற்குப்போதுமானதிரவிய முள்ளதோ? அதற்கும் அதிகமாக விருக்கின்றதோ? அவன், சோமபானஞ் செய்வதற்குத் தக்கவனாக விருக்கின்றனன். எ-று. காண்க.

யாஞ்ஞவற்கியரும், யாஜ்ஞவல்க்யஃ ॥ “த்ரைவார்ஷிகாதிகான்னோயஸ்யஸோமபிதேத்விஜஃ ” = மூன்றுவருடத்திற்குப்போதுமானதற்காயினும் அதிகமாகிய ஆகாரம் உண்டாயுள்ள வேதியன்யாரோ? அவன்

சோமத்தைப்பானஞ் செய்வதற்குத் தக்கவனுக விருக்கின்றன். எ-று. காண்க.

மூன்றுவருடத்திற்குப் போதுமான வுணவுகிடையாவிட்டால், சோமயாகத்திற்கு முன்செய்யத்தக்க சிறுகருமங்களாகிய தரிசயாக முதலியனவற்றைச் செய்யவேண்டுவது. இதனையும், அவரோகூறினர். வருமாறு, యాజ్ఞవల్క్యుఃll ప్రాక్సామికీఁక్రియాఁకుర్యా ద్యస్యాన్నంవార్షికంభవేత్" = யாருக்கு வருடத்திற்குப்போதுமான உணவுள்ளதோ? அவன், சோமயாகத்தினும்முன்செய்யத்தக்க கருமங்களைச்செய்யவேண்டுவது. எ-று. காண்க.

அற்பமாகிய பொருளுடையவனுக்கு வேள்வி தகாதென்றுமனுவால் விலக்கப்படுகின்றது. வருமாறு, పుణ్యాన్యన్యానికుర్వీత శ్రద్ధధానోజితేంద్రియుఃllనత్వల్పదక్షిణైర్యజ్ఞై ర్యజేతాథకథంచనll ఇంద్రియాణియశఃస్వర్గ మాయుఃకీర్తింప్రజాఁపశూన్।హంత్యల్పదక్షిణోయజ్ఞస్తస్మాన్నాల్పధనోయజేత్"= வேறுகிய புண்ணிய காரியங்களைச் செய்துகொண்டு ஜிதேந்திரியன் = பொறிபுலனடக்கினவனு யிருக்கவேண்டுமே யல்லது. எவ்வளவு அசந்தர்ப்ப மாயினும் குறைந்த தக்ஷிணையோடுங்கூடிய வேள்வியை வேட்டலாகாது. குறைந்த தக்ஷிணைகளையுடைய வேள்வியையும், பொறிகளையும், யசஸையும், சுவர்க்கத்தையும், ஆயுளையும், கீர்த்தியையும், மக்களையும், பசுக்களையும், கெடுக்கின்றது; ஆதலின், அற்பதனமுடையவன் வேள்விசெய்யலாகாது. எ-று. காண்க.

மச்சபுராணத்திலும், మత్స్యపురాణేపిll "అన్నహీనోదహేద్రాష్ట్రంమంత్రహీనస్త్వథర్త్విజఃl క్షత్రానంచక్షీణహీనో నాస్తియజ్ఞస్యసోరిపుఃl" = அங்கசாந்தியில்லாத வேள்வி, இராச்சியத்தைச் சுட்டுவிடும். மந்திரமில்லாத வேள்வி, அவ்வாறே யிருத்துவிக்குகளைச்சுடும். தக்ஷிணைகுறைந்த வேள்வி, தலைவனைச்சுடும். ஆதலால், வேள்வியோடு ஒத்தபகையில்லை. எ-று. காண்க.

இங்ஙனம் கூறுதலின், இப்பிரமாண வுரைகளெல்லாம், "కందైర్మూలైఃll" என்றபோதாயன வுரையோடு மூரணுகின்றதே எனில்?

மேல்விடை.

அங்ஙனமன்று. இவ்வுரைகளெல்லாம், காமியவேள்வியைக் குறித்ததாகலின், முற்றும் அனுட்டிக்கத்தக்க ஆற்ற லிருந்த விடத்தே காமியகருமஞ் செய்யவேண்டுவது; என்று, பூருவமீ மாம்ஸம். சூ—வது அத்: கூறுதலால். அவ்வாறே சுருதி "ஐந்த்ராக்ன மேகாதசகபாலம்நிர்வபேத்புத்ரகாமஃ"=மக்களிச்சையுள்ளோன் இந்திரன் அக்கினியென்னு மிரண்டு தெய்வங்களையுடையதற்குப் பதினொரு கபாலத்தில் வைத்துசமஸ்கரிக்கப்பட்ட அவிசை அர்ப்பிக்கவேண் டும். எ—று. காண்க இது அதிகரண விடயவாக்கியம்.

இங்கே சத்தியுள்ளமட்டில் செலுத்துவதற்காயினும் அதி காரமுண்டோ? அங்ஙனமன்றி எல்லா அங்கத்தோடும் நிறை வேற்ற வேண்டுவதோ? என்பது ஐயவிடை. இதுசமுசயம்; அல் லது விசயவாக்கியம்.

நித்திய கருமங்களின் விடயமாக இயன்றமட்டில் கடத் தலாமென்று மேலே அதிகரணத்தில் நிச்சயிக்கப்பட்டிருத்தலின், அவ்வாறே யிதனையும் செய்யக்கூடுமேயெனில்? கூறுதும் இது சங்கதி=மேற்கூறப்பட்டதேழுடியையும் பூருவபக்கமும் கூறிய வாக்கியமாம்.

அசத்தனே யாலும் நித்த கருமங்களை விடக்கூடாதா மாகலின் இயன்றளவேனும் செய்யவேண்டுவது. நித்தகருமங் களை விடக்கூடாது. ஏனெனில்? பிழைத்திருத்தல் முதலிய நிமித்தங்களினால் அந்தநித்தகருமங்களின்வெளிப்பாடு, அல்லது, செய்யத்தக்க கடமையுண்டாயிற்று. நைமித்திகத்தைப்பற்றி அப் படிப்பட்ட வெளிப்பாட்டுக் கடமை யில்லா விட்டால் நிமித் தத்தன்மைக்கே கெடுதி வருகின்றது. காமியமோ? நிமித்த மாகாது. இதனால் ஓருதலையாக வேள்வியை வெளிப்படச்செய் தலின். அதனால், காமிய கருமத்தைவிடக் கூடாததல்ல. அங் ஙனமானால், பயன்சித்திக்கும்பொருட்டே காமியகருமம் அனுட் டிக்கத்தக்கதா யிருத்தலினாலும், எல்லா அங்கத்தோடுங்கூடிய மூலற்கருமத்தை யொழித்துப் பயனுண்டாகாதாம் ஆதலினாலும் எப்போதுஎல்லாஅங்கத்தையும் அனுட்டிப்பதில் ஆற்றலுண்டா யிருக்கின்றதோ? அப்போதே, காமியகருமத்தை அனுட்டிக்க

வேண்டுவது, என்பது சித்தாந்தமாம். இங்ஙனம் வேட்டல் விடயமுற்றிற்று.

வேட்பித்தல்.

இங்ஙனம்.வேட்டல்விளக்கப்பட்டது. இனிவேட்பித்தலின் விடயமோ வெனில்? அவ்விதி வேதத்துட் கூறப்படுகின்றது.வருமாறு, "द्रव्यमार्ज्जयन्ब्राह्मणंप्रतिगृह्णीयाद्याजयेदध्यापयेद्वा"=திரவியத்தைத் தேட விரும்பிய வேதியன் தானம்வாங்க வேண்டுவது. வேட்பித்தலைச் செய்யவேண்டுவது. ஓதுவித் தலையேனும் செய்யவேண்டுவது. எ-று. காண்க.

இது நித்தியமான விதியல்ல.செய்யாவிட்டால்பாவம்வரும் என்பது முதலிய நித்தவிலக்கண மின்மையின். பிறவெனின். காமிய விதியாக விருக்கின்றது. பொருளைத் தேடுவதில் இச்சையையுடையவன் அவ்விடயத்தில் அதிகாரியாயிருத்தலின். அதனுள்ளும் இது அரியவிதியன்று. (அரியவிதி=அபூர்வவிதி, அபூர்வம் = புண்ணியமுமாம்). யாஜனம் = வேட்பித்தல் என்பது சீவனஉபாயமாக வந்ததாமாகலின். வேட்பித்தல் சீவனத்திற்கு ஹேதுவென்பது மார்க்கண்டேய புராணத்துட் கூறப்பட்டது. வருமாறு, "याजनाध्यापनेशुद्धे तथाशुद्धप्रतिग्रहः। एषासम्यक्समाख्याता त्रितयंतस्यजीविका"=வழுவற்றவேள்விசெய்வித்தல்,குற்றமற்ற வேதமுதலைச் செய்வித்தல், அவ்வாறேஇழுக்கற்றதானம் வாங்குதலாகியஇம்மூன்றும்அவனுக்குச் சீவனஉபாயமென்று நன்முகக்கூறப்பட்டது. எ-று. காண்க.

இது பரிசங்கியா விதியுமன்று; நித்தியப்பேறு இல்லாமையின். அதனால், சார்பில் நேர்ந்ததாமாகலின் இது நியமவிதியாக விருக்கின்றது.

அந்த நியமம் புருடார்த்த மாவதன்றி கிரதுவர்த்த மல்லவாம். (வேள்வியின் பொருட்டல்ல என்பதுகருத்து. அருத்தம்=பயன்). என்னை? பொருளைத்தேடும் வழக்குடைமை புருடார்த்தமென்று பூருவமீமாம்ஸம்."லிப்ஸா" சூத்திரத்தில் விசாரிக்கப்பட்டிருத்தலின்.

அதுவருமாறு. பொருட்பேறு வேள்வியின் பொருட்டோ? புருடன்பொருட்டோ? என்பது சமூசயம்=ஐயம்.

வேள்வியின் பொருட்டே என்பது. அவ்விடத்துப் பூருவ பக்கமாம். அங்ஙனங்கொள்ளில், நியமத்திற்குப்பயனுண்டாதலின். வேதியனுக்கு வேட்பித்தலாதியானும் வைசியனுக்கு உழவுமுத லியவற்றானும் பொருட்பேறு உண்டாக வேண்டு மென்பதன் றே ? நியமம். அது புருடார்த்த மென்னும் பகுதித்தில் அகர்த்த மாகின்றது. என்னை ? வேறு உபாயத்தால் சம்பாதிக்கப் பட்ட பொருளும் பசியையொழித்தன் முதலிய புருடப் பிரயோசனத் தைத் தருதலால். வேள்விக்காரியமோ ? வேறுவகைப்பொருளா லுண்டாவதல்ல. ஆதலால், அங்கு = அவ்வேள்விக் காரியத்தில் நியமம் பயனுள்ளதே யாம். எனில்?

அங்ஙனமன்று. திரவியமல்லவோ ? தேடப்பட்டதாய் புரு டனைத் திருத்திசெய்விக்கின்றது. அதனல் அதற்குப் புருடார்த்த மென்பதே காட்சியளவை யாற் காணப்படுகின்றது. வேள்விக்கா ரியத்தின் பொருட்டாயின், நியமத்திற்கு வேறுபட்ட வகையால் முடிவதன்று மாதலின், அது கற்பிக்கப்படுகின்றது. " ஸ்ருஷ்டம்கர்ம்மஸ் த்ருஷ்டவ்யம் " = உரியவாக வகுக்கப்பட்டது, கற்பிக்கப்பட்டதற் காயி னும் ஆற்றலுடையது. எ - று. ஆயின், புருடார்த்தத்தின் பொருட்டே பொருள்தேடுவதாமாயின், உண்டிமுதலியனபோல் வேள்விக்காரியமும்புருடனுடையபயனுகவேயிருத்தலின், அதன் பொருட்டு என்றும் பொருட்டிறத்தால் கொள்ளப்படுகின்றது. இனி, நியமமோ? புருடனுடைய பயன்பொருட்டேயாயினும், தேடும்வகையில் சிறிது அதிஷ்டத்தை=புண்ணியத்தை யுண்டு பண்ணுகின்றது. (எனவே, புருடார்த்தமேயாயினும் புண்ணிய மாகின்றது என்பதுகருத்து). ஆகவே, கிரதுவின்பொருட்டு என்றே வாதிப்பதில், சீவனலோபத்தினல் வேள்வியும் பழி யாதுவிடும். ஆதலால், வேட்பித்தல் முதலிய கருமங்கள் புரு டார்த்தத்தின் பொருட்டே என்று தேற்றப்படுகின்றது. இது சித்தாந்தம்.

இருத்துவிக்குகள் ஒழிய வேட்பிக்கும் புரோகிதன் வேறு ஒருவனும் இல்லையே எனில் ?

அங்ஙனமன்று. ஆபத்தம்ப சூத்திரத்தில். பதினறுஇருத் துவிக்குகளையும் கொள்ளவேண்டியவகைமைசொல்லி, யாஜனம்

செய்விக்கும் பதினேழாவதாவானைக் கொள்ளுவதை வேறுகக் கூறுதலின். வருமாறு.

ஆபஸ்தம்பசூத்ரம்॥ "ஸதஸ்யம்ஸப்ததசம்காஷிதகினஸ்ஸமாமனந்திஸகர்மணாமுபத்ரஷ்டா பவதி" = கௌஷீதகீ சாகையை யுடையவர்கள். "சதசியன்"= சபைக்குரியன் என்பவனை பதினேழாவதாகக் கூறுகின்றனர். அவன் கருமங்களுக்கு அருகிருந்து பார்ப்பவனாகவிருக்கின்றான். எ-று. காண்க.

அதனால், வசிட்டவமிசத்தில் பிறந்த சாத்திய ஹவ்விய னென்னும் மஹரிஷியினுடைய தேவபாகத்தின் பிரசினவாக்கி யத்தில் = கேள்வியில், சிருஞ்சயர் என்னும் அந்தணர்களைக் குறித்து தைத்திரீயசாகையின் பிராமணத்தில் வேதங் கூறு கின்றது. வருமாறு, "வாசிஷ்டோ ஹஸாத்யஹவ்யோ தேவபாகம் பப்ரச்சயத்ஸ்ருஞ்ஜ யான்பஹுயாஜினோ யம்யஜஇதி" = வசிட்டர் மரபிலுதித்த சாத்திய ஹவ்வியனென்பவர் தேவபாகனையடைந்துபலவேள்விகள்செய்த சிருஞ்சயரால் வேள்வி செய்வித்தீரன்றே ? என்று வினவினர். எ-று. காண்க.

அவ்வாறே, கௌஷீதகீப்பிராமணத்தில், சித்திரன் என்ப வனை நோக்கிச் சுவேதகேது என்பவனுக்கு வேள்விசெய்வித்தற் றலைமை கூறப்பட்டது. வருமாறு, "சித்ரோஹவைகார்ஹ்யஷணிர்யக்ஷ்யமாண ஆருணிம் வவ்ரேஸஹபுத்ரம்ச்வேதகேதும்ப்ரதிஹாயயாஜயேதி" = சித்திரன்என்று புகழ்பெற்ற கர்க்கர் கோத்திரத்திற் பிறந்தவன் வேள்வி செய்யக் கருதினவனுய், அருணன் புத்திரனையும் தன்மகனோடு கூடியிருப் பவனையு முள்ள சுவேதகேது என்பவனை அழைத்து. என்னல் வேள்விசெய்வியும் என்று கோடித்தார். எ-று. காண்க. கோடித் தல் = ஏற்றுக்கொள்ளுதல்.

ஆதலால் இருத்துவிக்குகளே யன்றி வேறுஒருவன் சதசி யன் என்பவன் வேள்வி செய்விப்பவனும்.

இருத்துவிக்குகள் வேட்பிப்பவராக விருக்கினுமிருக்க.எவ் வகையாலும் வேட்பித்தல்என்பது,வேதியர்க்குச்சீவனப்பொருட் டாக விருக்கின்றது.

வேட்பித்தலில் உபவீதவிடயம்.

அவ்விடத்து வேட்பித்த லிவ்வாறு செய்ய வேண்டுவ தென்னும் வடிவத்தால்: மான்றோல், நூலாடை என்னும், இரண்டி லொன்றினல் உபவீதமுண்டா யிருத்தல் தைத்திரீய சாகையில் விதிக்கப்படுகின்றது. வருமாறு, శ్రుతి ॥ "తస్మాద్యజ్ఞోపవీత్యేవాధీయాతయాజమెవ్యజేత్వాయజ్ఞస్యప్రసృత్యాఅజినంవాసోవాదక్షిణతఉపవీయ" = அதனல் வுபவீதமுடையவனுகியே ஓதல் வேண்டும், வேட்பித்தல் செய்யவேண்டும். வேள்வியும் செய்தல்வேண்டும். வேள்வி நடக்கும்பொருட்டு மான்றோலாயினும் நூலாடையாயினும் வலமாக வுபவீதமாகும்படி தரித்து. எ-று. காண்க.

வேட்பித்தலாதியில், இருடி, தேவதை, சந்தசுவிடயம்.

மந்திரங்களில், இருடி, தேவதை, சந்தசு, முதலியவற்றை யுணர்ந்திருப்பது வேட்பித்தலுக்கு அங்கமென்று, சந்தோகப் பிராமணத்தில் நன்றாக் கூறப்பட்டுள்ளது. வருமாறு, "యోహవావిదితాషేత యచ్ఛందోదైవత బ్రాహ్మణేనమంత్రేణ యాజయతివాఅధ్యాపయతివాస్థాణుంవర్ఛతిగర్తం వాపద్యతేప్రనామీయతే పాపీయాన్భవతియాత యామాన్యస్యఛందాగ్ం సిభవంత్య థయోమంత్రే మంత్రేసర్వానూయురేతిశ్రేయాన్భవత్య యాత యామాన్యస్యఛందాగ్ం సిభవంతితస్మా దెతానిమంత్రే మంత్రెవిందాత్" = யார் இருடி, சந்தசு, தேவதை, பிராமணம் இவற்றைத்தெரிந்துகொள்ளாம லிருக்கிற மந்திரங்களால் வேள்வி செய்விக்கின்றுனே? ஓதுவிக்கின்றுனே? அவன்கல்லி யாவது அடைகின்றுன் குழியிலாவது விழுகின்றுன். செத்தாவது ஒழிகின்றுன். பாவியாகின்றுன் அவன் கற்றவேதம் பழமைப்பட்டு = பாசியால் மூடப்பட்டுப் போகின்றது. மேலும், யார்? ஒவ்வொரு மந்திரத்திலும் அவற்றையெல்லா முணர்ந்து மேற்கொண்டு செல்லுகின்றுனே? அவன் தீர்க்காயுளை யடைகின்றுன். புகழுடையவனுகின்றுன். சிறந்தோனுகின்றுன்: அவன்கற்றவேதம் பாசியால் மூடப்படாதது ஆகின்றது. அதனல் இவற்றை ஒவ்வொரு மந்திரத்திலும் அறிந்துகொள்ளவேண்டுவது. எ-று. காண்க.

வேட்பித்தலேபாவமென்றுபூர்வபக்ஷம்.

அற்றேல், ஒவ்வோரிடங்களில்வேட்பித்தலும், தானம்வாங்குதலும், பழிக்கப்பட்டிருத்தலின்; அவற்றைச்செய்தவனுக்குவேத

பாராயணம். காயத்திரிஜபம், செய்வது பிராயச்சித்தமென்றுவே தத்தாற்கூறப்பட்டது. வருமாறு, " రిచ్యతఇవవాఏష ప్రైవరిచ్యతెయోయా జయతి ప్రతివాగృహ్ణోతియాజయిత్వా ప్రతిగృహ్యావానశ్నక త్రిస్స్వాధ్యాయంవెదమధీయా తత్రిరాత్రం వాసావిత్రీంగాయత్రీమన్వాతిరెచయతి " = கீழ்வீழ்பவனைப்போல, அல்லது, புறம்பாக்கப்பட்டவனைப்போல; யார்? வேள்விசெய்விக் கின்றானே? யார்தானம் வாங்குகின்றானே? அவன் நன்றாகக் கீழ் விழுகின்றான்; அல்லது, புறம்பாக்கப்படுகின்றான். வேள்விசெய்வி த்தாலும், தானம்வாங்கினாலும், உண்டியைபொழித்து, மூக்காலும் வேதமுழுவதும் பாராயணஞ் செய்யவேண்டுவது. மூன்றுபகலி லும் மூன்று இரவிலும் * சாவித்திரிமந்திரத்தையாவது, சவித்து ருவைத்தெய்வமாகவுடைய காயத்திரிமந்திரத்தையாவது, செபம் செய்யவேண்டுவது. உடனே மேலெழுகின்றான் எறு. காண்க.

அவ்வாறே வேறுமற்றோரிடத்தும், சுருதி " దుహావాఏషఛం దాగ్ంసిమోయా జయతిసయెనయజ్ఞక్రతునాయాజయెత్సోరణ్యం పరెత్యఅచాదశెస్వా ధ్యాయమెవైన మధీయన్నా సీతతస్యానశనందీక్షా స్థానముపసదఆసనగ్ం సుత్యావాగ్జు హూమన ఉపభృద్ధ్రుతిర్ధ్రువా ప్రాణోహవిస్సామాధ్వర్యుస్సువా ఏషయజ్ఞః ప్రాణ దక్షిణోనంత దక్షిణస్సమృద్ధతరః " = யார்! வேள்வி செய்விக்கின்றானே? அவன்வேதங்களைப் பிழிகின்றவனாகின்றான், எந்த வேள்விக் காரியத்தினால் வேட்பித்தலைச் செய்கின்றானே? அவன் காட் டிற்குச்சென்று பரிசுத்தமான இடத்தில் அந்த வேதத்தையே ஓதிக்கொண்டு உட்காந்திருக்கவேண்டுவது. அவனுக்கு உணவை யொழித்தலே தீக்ஷையாம். அசைவற்றிருத்தலே "உபசதம்" என்னும் வேள்வியங்கமாம். ஆதனமிட்டிருத்தலே "சுத்தியா" என்னும்வேள்வியங்கமாம். அவனதுவாக்கே=சொல்லே, ஜுஃஎன் னும் ஹோமபாத்திரமாம். அவன்மனமே "உபபிருது" என்னும்

---

* "సావిత్రీ" என்பது "ప్రాజ్" தாது. இதற்கு பெறுதல் பொருள். "సవితా" = பெறுகின்றவன். இதற்குப் பிராதிபதிகம் "సవితృ" சவித்துரு சம்பந்தம் சாவித்திரி என்றபடி. எனவேஇவ்வுலகருத்தாவின் மந்திரம் .எறு. "గాయత్రీ" என்பதற்கு. "గాతారంత్రాయతెయస్తాద్గాయత్రీత్యభిధీయతే" என்பத னால், செபிக்கின்றவனை எதுகாக்கின்றதோ? அது அந்தகாரணத்தால்காயத்திரி என்று சொல்லப் படுகின்றது. அந்தக்காயத்திரி மந்திரம் இயற்கையாகவே மூன்று பாதங்களோடும் கூடியது. அதற்குப்பாதப்பிரிவின் முறைப்படி வியா ஹ்ருதிகளைச் சேர்த்துக் கூறினால் அதுவே சாவித்திரி மந்திரம் என்னப்படும்.

வேள்விக்கருவியாகியஓர்வகைப்பாத்திரமாம். அவனது மன ஊக்கமே "துருவ" என்னும் வேள்வியில் நெய்வார்க்குமோர்வகைத் துடுவை = அகப்பை போல்வது. பிராணனே அவிசாம். சாம வேதமே "அத்வரியு" என்னும் இருத்துவிக்கு இங்ஙனங் கூறப் பட்ட பிரசித்தியையுடைய வேள்வி பிராணனே தக்ஷிணையாக வுடையது அப்படியாயின் அது அநந்தமாகிய தக்ஷிணையை யுடையதாம். மிகவும் திருத்தியையுடையதும் ஆகின்றது. எ-று. காண்க. எனில்?

அநாதிகாரிக்காகாதென்று மேல்மறுப்பு.

அங்ஙன மது குற்றமன்று. என்னை? அச்சுருதி வேள்வி செய்யுந் தகமல்லாதவனைக்கொண்டு வேட்பித்தலைச்செய்த வழி வருங்குற்றத்தின்பொருட்டுச் செய்வதாமாதலின்.

ஆபற்காலவிடயம்.

உயிர்துறக்கத்தக்க ஆபத்தையடைந்தவன் தன்னுயிரைக் காக்கும்பொருட்டு வேள்விசெய்யலாகாத ஒருவனல் வேள்வி செய்விக்கலும் ஒத்தபடியாகவே யிருக்கின்றது. அங்ஙனம், வாஜஸநேயப்பிராமணம்=சுக்கிலயஜுர்வேதம் கூறுகின்றது. வருமாறு, "ப்ராணஸ்யைஸக்ரூப்ட்யா மாயாயாஜ்யம் யாஜயத்யப்ரதிக்ராஹ்ய ஸ்யாப்ரதி க்ருஹ்ணா" = பிராணத்தி னுடைய தலைமைபெற்ற வேட்கைக்கு வேள்வி செய்விக்காதவனலும் வேள்வி செய்விக்கின்றான் வாங்கத்தகாதவனிடத்தும் தானம் வாங்குகின்றான். எ-று. காண்க.

அவ்விடத்துக் கழுவாயும் சந்தோகர்கள் = சாமவேதிகள் கூறுகின்றனர். வருமாறு சாமவேதம் "அயாஜ்யயாஜனேதக்ஷிணாஸ்த்ரீ மாம்ஸ சதுர்த்தகாலேப்யுஜ்ஞான ஸ்தன்மாத்ராந்நாயேத்" = வேள்வி செய்விக்கத் தகாதவனல் வேள்வி செய்வித்தால் அதனற்றான் தேடிய தக்ஷிணைப் பொருண் முழுவதையும் ஒழித்துவிட்டு ஒருதிங்கள் வாயில் பகல் மூன்றுபாகத்தை யொழித்து காலாம்பாகத்தில் புகிப்பவனல், அந்த மந்திரத்தையே பாடிக்கொண் டிருக்கவேண்டுவது. எ-று. காண்க.

அங்ஙனம் சுமந்துவும் கூறினர். வருமாறு. ஸுமந்துः॥ "சூத்ர யாஜகஸ்ஸர்வஸ்வேந பரிதாயாக்னீம்ஸ்தோ பவதி. அக்னிசப்த, பதித, பௌனர்பவ, பூர்ணஹ,

புஂஶ்சலீ, ல்யஶுசி, ஶஸ்த்ரீகார, தைலிக, சாக்ரிக, த்வஜீ, ஸுவர்ணகார, லேக்யக, ஷண்டக, வர்ஷகீ, கணக, கணிகா, ஸோனிக, வ்யாத, நிஷாத, ரஜக, புரோட, சர்மகார, அபோஜ்யான்னா, அப்ரதிக்ராஹ்ய, அயாஜ்யாஶ்ச" = சூத்திரனல் வேள்வி செய்வித்தவன் பொருளை யெல்லாம் விட்டொழிதலினாற் பரிசுத்த னாகின்றான். அபவாதமடைந்தவன்; கருமவொழுக்கங் கெட்டவன், புனர் விவாக மானவளுடைய மகன், கருவழித்தவன் அல்லது சிசுக் கொலைசெய்தவன், ஆணவாயபெண், சுத்தமில்லாதவன், ஆயுதங்கள் செய்பவன், எண்ணெய் வாணிபஞ்செய்பவன், குயவன், கொடி பிடிப்பவன், அல்லது, குறியிடப் பட்டவன், (ஸ்வர்ணகார) தட்டான், (அரிப்பாளன், அல்லது ஆகரத்துநின்றும் பொன் னெடுப்பவன் எனவுங்கூறுவர்). சித்திரக்காரன், பேடி, தச்சன், ஓட்டன், மண்வேலைசெய்பவன், கொல்லத்துக்காரன், கணக்கன், கணிகை = வேசி, சூனன் = ஊன்விற்குமவன் அல்லது பாதவன்=செம்படவன், வேடன், நிஷாதன்=காட்டில் வசிப்பவன், வண்ணான், குடுகுடுப்பைக்காரன், (சாகுனிக). சகுனஞ் சொல்பவன், தோல்வேலைசெய்பவன்=மதங்கன், எம், வெட்டியான், என்னும் கூறுவர், இவர்கள் கைப்பொருளைப் புசிக்கலாகாது; தானம் வாங்கலாகாது; இவர்களால் வேள்வி செய்விக்கலாகாது. எ-று. காண்க.

இன்னும் வசிட்டரும் கூறினர். வருமாறு, வசிஷ்டः "யக்ஞாத்யாகாச்ச பூதோ்பவதீதி விஜ்ஞாயதே" = தகுதினிலையை விட்டுவிட்டால்பரி சுத்தனாகின்றான் என்று தெரியவருகின்றது. எ-று. காண்க.

போதாயனரும் அக்கருத்தே கூறினர். வருமாறு, போதாயனः॥ "பஹ்வபிரதிக்ராஹ்ய ஸ்யவாபதிக்ருஹ்ய யாஜ்யம்யாஜ யித்வானாஶ்யான்ன ஸ்யவான்ன மஶித்வாபதேத்" = வாங்குதற்குத் தகாதவன்கைப்பொருளை விசேடம் வாங்கினாலும், வேள்வி செய்விக்கப்படாதவனல் வேட்பித்தாலும், உண்ணத்தகாதவன்கையுணவை யுண்டாலும் பதிதனாகின்றான். எ-று. காண்க.

வேள்விசெய்யத் தகாதவனல் வேட்பிப்பவனிலக்கணம், தேவலரால் கூறப்பட்டது. வருமாறு, தேவலः॥ "யஶ்னாதீன் பதிதாம் ஶ்சாபி யாஜயேதர்த்தகாரணாத்। யாஜிதோவாபுனஸ்தா ப்யாம்பாரிஹ்ணோ யாஜ்யயாஜகः" = யார்? பொன்னாசையால் சூத்திரராலும் பதிதராலும்

வேள்வி செய்விக்கின்றனே? அவனும், சூத்திரனேலனும் பதிதனேலனும் தான் வேள்வியைச் செய்வித்துக் கொள் பவனும் ஆகிய அந்த வேதியன் அயாஜ்யயாஜகன் என்று கெட்டபெயராற் கூறப்படுவன். எ-று. காண்க.

"யஜனம்" என்பதுள், யஜ - எது, தாது. தேவர் பூசனென்பது அதன் பொருள். செய்பவன் யாஜி. செய்விப்பவன்யாஜகன். செய்வதுயஜனம். அதுவே வேள்வி.

வேட்பித்தல் முற்றிற்று.

இங்ஙனம் வேட்பித்தல் கூறப்பட்டது. மேல்கொடுத்தலாகிய தானமும், வாங்குதலாகிய பிரதிக்கிரஹமும் வருமாறு.

கொடைவிடயம் தானச்சிறப்பு.

அவ்விடத்து, தானவிடயமாக வேதப்பிரமாணம்வருமாறு, கிருஷ்ணயஜஸ-. அ2-பிரசினம்=உபநிடதம். "தானமிதிசர்வாணி பூதானிப்ரசம்ஸந்திதானான்நாதி துஷ்கரம் தஸ்மாத்தா நேரமம்தே" = தானம் என்று எல்லாப் பூதங்களாலும் சிறப்பித்துக் கூறப்படுகின்றன. (பூதம்=சீவகோடிகள்.) தானமென்பதினும்செய்தற்கு அருமையான தொழில்பிறிதொன் றில்லை. ஆதலால் தானத்தில் பெரியோர் களித்தலைச்செய்கின்றனர். எ-று. காண்க.

இன்னும் அவ்வுபநிடதத்தில் "தானம்யஜ்ஞானாம் வரூதம் தக்ஷிணாலோகே தாதாரஞ்ஞ் சர்வபூதான்யுப ஜீவந்திதா நேனாராதீரபானுபந்தா நேனத்வி ஷம்தோமித்ரீ பவந்திதா நே சர்வம்பரிக்ஷிதம் தஸ்மாத்தானம் பரமம்வதந்தி." = தானம் என்பது எல்லாவேள்விகட்கும் ஊர்தியாகவும்=எறிச்செல்லுவதாகவும், சிறந்த தக்ஷிணையாகவுமிருக்கின்றது. உலகத்தில் எல்லாவுயிர்களும் கொடுப்பவனை யடுத்துப்பிழைக்கின்றன. தானத்தினால் பகைவனை ஒழித்து விடுகின்றார்கள். தானத்தினால், பகைத்தவர் நட்பினராகின்றனர். எல்லாப்பயனும் தானத்திலே ஸ்தாபிக்கப்பட்டன. அதனால் முற்றுமுணர்ந்தவர்கள் தானத்தை எவற்றினுஞ் சிறந்ததாகக் கூறுகின்றனர். எ-று. காண்க.

"பகவான்" =, அறுகுணச் செல்வர். அவர் கடவுள். அவரருளால் அவதரித்தவரும் பகவான் எனப்படுவர். ஆறுவிடயங்களையு முணர்ந்தவர்களும் பகவர் எனப்படுவர். அவ்வாறு விடயம் வருமாறு, "உத்பத்திஞ்சவிநாசஞ்ச

భూతానామాగతింగతిం|వెత్తివిద్యామవిద్యాంచసవాచ్యోభగవానితి.”= உயிர்கள்தோற்றமும், ஒடுக்கமும், வருதலும், செல்லுதலும், அறிவும், அறியாமையும், யாருணர்ந்துள்ளாரோ? அவர் பகவன் என்று கூறப்படுவர். இது இராமாயணவுரையிலெடுத்துக் காட்டிய வுதாரணம்.

ஆதித்திய புராணத்துள்ளும், ఆదిత్యపురాణే॥ “నదానాపధికం కించద్దృశ్యతె భువనత్రయె|దానెనప్రాప్యతేస్వర్గఃశ్రీర్దానెనైవలభ్యతే|దానెనశత్రూ౯జయతివ్యాధిర్దానెననశ్యతి| దానెనలభ్యతే విద్యాదానెన యువతిజనః| ధర్మార్థకామమోక్షాణాం సాధనంపరమం స్మృతం.” = தானத்திலும் உயர்ந்தது மூன்றுலகத்துள்ளுஞ் சிறிதுங்காணப்படுவதில்லை. தானத்தால் சுவர்க்கப்பேறுண்டாகின்றது. செல்வம்தானத்தாலே யடையத்தக்கதாக விருக்கின்றது. தானத்தால் சத்துருக்களை வெல்லுகின்றன். தானத்தால் நோய் நீங்குகின்றது, தானத்தால் கல்விசித்திக்கின்றது, தானத்தால் இளம்பெண்களுங் கிடைக்கின்றனர். அறம், பொருள், இன்பம், வீடு, என்பனவற்றிற்கும் தானமேதுணைக்கருவியென்று கூறப்படுகின்றது. எ-று. காண்க.

இவ்வாறு. சுருதிமிருதிகளால் புகழ்ச்சி முன்னிலையாகத்தானஞ் செய்யவேண்டுமென்னும் விதியுண்மை கொள்ள்க்கிடந்தவாறுகாண்க.

தானவிதி.

யாஞ்ஞவற்கியர். நேரோதானத்தை யுடன்பட்டு விதித்தனர். வருமாறு, యాజ్ఞవల్క్యః॥ “దాతవ్యంప్రత్యహంపాత్రె నిమిత్తెతువిశెషతః| యాచితెనాపిదాతవ్యం శ్రద్ధాపూర్వంయథాశక్తితః| గొభూతిలహిరణ్యాది పాత్రెదాతవ్యమర్చితె| నాపాత్రెవిదుషాకించి దాత్మనఃశ్రెయఇచ్ఛతా” = நாடோறும் தானஞ்செய்யவேண்டுவது அது தக்க பாத்திரத்திலேதானே செய்யவேண்டும். நிமித்த முண்டான போது, விசேடமாகச் செய்யவேண்டுவது. இரக்கப் பட்டவனுலும் தானஞ் செய்யப்படும். தனதுசத்திக்குத் தக்கபடி சிரத்தையோடும் கொடுக்கவேண்டும் சற்பாத்திரமானவர்களைப் பூசித்து, கோதானம், பூதானம், திலதானம் (திலம் = எள்.) ஹிரணியதானம் (ஹிரணியம் = பொன்) (முதலிய வென்றதனால் “గొభూతిలహిరణ్యాజ్య వాసొధాన్యగుడానిచ | రాప్యంలవణమిత్యాహు ర్దశదానానిసూరిణః” = பசு, பூமி, எள், பொன், நெய், ஆடை, தானியம், வெல்லம், வெள்ளி, உப்பு. இவைபத்துந்தசதா

னத்திற்குரிய என்று உணர்ந்தோர் கூறினர். என்பதனைற் பிறவுங் கொள்க.) முதலியவற்றைக் கொடுக்கவேண்டும். தனக்கு நன்மைவேண்டுமென்று விரும்பின அறிவுடையோன், தகாகதவனுக்குச் சிறிதும் கொடுக்கலாகாது. எ-று. காண்க.

* அவ்விரண்டனுள், யாதேனும் ஒன்று சொரூபவிதியாகவிருக்கின்றது. வேறுனது குணவிதியாக விருக்கின்றது.

மனுவுங் கூறினர். வருமாறு, மநுः "दानंधर्म्मनिषेवेत नित्यंनैमित्तसंज्ञकं। परितुष्टेनभावेनपात्रमासाद्यशक्तितः." = சற்பாத்திர மானவர்களைப்பெற்றுத் திருத்தியடைந்த மனத்தோடு சத்திபுள்ளவரையில்நித்தியதானமும், நித்தியதருமமும், நைமித்திகதானமும், நைமித்திக தருமமும், செய்து பணிசெய்து கொண்டிருக்கவேண்டும். எ-று. காண்க.

தானஞ் செய்யாவழி வருங்குற்றம்.

அக்கினி புராணத்துள்ளும், தானத்தைச் செய்யாவிட்டால் பொருள் வீணுகின்றது என்பது முன்னிலையாகத் தானத்தை விதிக்கப்பட்டது. அக்நிபுராணே॥ "यस्यैतत्त्रिनदानाय नोपभोगायदेहिनां। नाशिकैर्व्यनधर्म्मा यतस्यैतत्त्रिनिरर्थकं। तस्मात्त्रिविधंसमासाद्य दैवाद्या पौरुषादथ। ददात्सम्यद्द्विजातिभ्यः कीर्त्तानानिकारयेत्." = யாருடையபொருள் தானத்திற் கில்லையோ? புகழ்க்கு உதவுவதில்லையோ? புண்ணியத்திற்குதவுவதில்லையோ? அப்பொருளுக்குப் பயனில்லையதுவீணும். ஆகலால், அதிருஷ்டத்தாலாயினும், முயற்சியாலாயினும், பொன்னை யடைந்தபின் வேதியர்களுக்கு நன்முகக் கொடுக்க வேண்டுவது. தான்செய்த தானத்தைத் தானே பிறரறியக் கூறலாகாது. எ-று. காண்க.

தானம்செய்யாவழி நரகம் என்பது.

இனி, விஷ்ணு தருமோத்திரத்தில். தானங்கொடாவிடத்து வருங்கெடுதி கூறினர். வருமாறு, விஷ்ணுधर्म्मोत्तरे॥ "सीदत्तेद्विजनुख्यायं

* "तव्य" என்ற பிரத்தியயம்விதிப்பொருளைத்தரும் விகுதியாம். மேலைய யாஞ்ஞாவற்கிய மிருதிவாக்கியத்துள் அவ்விகுதி விணைமுக்கா லுபயோகிக்கப் பட்டதா மாகலின். அவற்றுள் முன்னையவிரண்டும் தானம் செய்யத்தக்கது என்று அதன்சொரூப மாத்திரையில் விதிப்பதால் சொரூபவிதியாம். சற்றதொன்றும் சற்பாத்திரத்தில் தானஞ்செய்தால் நன்மையைத்தருகின்றது என்னும் குணத்தை விதித்தலால் குணவிதியாம்.

యోర్థి నెనప్రయచ్ఛతి। సామర్థ్యసతిదురుబ్ధి ర్నరకాయోపపద్యతే''=வருந்தி யிரத் தலைச்செய்கின்ற உயர்ந்த வேதியனுக்கு, யாவன் கொடுக்கத்தக் கசத்தியுள்ள விடத்தும் கெட்ட எண்ணத்தால் கொடுப்பதில்லை போ? அவன் நரகத்திற்கு ஆஸ்தியுடையவனாக விருக்கின்றான். எ-று. காண்க.

கொடாதவன் நிலைமை.

பிரமபுராணத்தில், బ్రహ్మపురాణె॥ ''సదాచారాఃకులీనాశ్చ రూపవంతఃప్రియంవదాఃబహుశ్రుతాశ్చధర్మజ్ఞా యాచమానావరాన్గృహాత్ । దృశ్యంతేదుఃఖిన స్సర్వే ప్రాణినస్సర్వదామునె। అదత్తదానాజాయంతే పరభాగ్యోపజీవినః'' = நல்ல ஒழுக்கமுடையவர்கள், உயர்குலத்திற் பிறந்தவர்கள், தக்க உரு வமுடையவர்கள் (எனவே அழகுடையவர், நல்ல இயற்கைக்குண முடையவர், நல்ல புகழுடையவர், எனவுமாம்) கேட்பவர்க்கினி மையுண்டாகும்படிப் பேசவல்லவர், பலவித்தைகளை நன்குணர்ந் தவர்கள், தருமங்களையுணர்ந்தவர்கள், இவர்களெல்லாம் பெரு ஞ்செல்வரிடஞ் சென்று இரத்தலைச்செய்கின்றனர். இரக்கும் சீவர்களனைவரும் எப்பொழுதும் துக்கப் படுபவராகவே யிருக் கின்றனர். முன்தானத்தைச் செய்யாதவர்கள் அந்நியர் செல்வத் தால் சீவிப்பவர்களாகப் பிறக்கின்றனர் எ-று. காண்க.

வியாசரும், ''అక్షరద్వయమభ్యస్తంనాస్తినాస్తీతియత్పురా । తదిదందేహిదేహీతివిపరీతముపస్థితం'' = முன்னைய பிறப்பில் இல்லை என்று ஒருவன் பழ கிய சொல்லானது மறுபிறப்பிலவனைக் கொடுவென்னுஞ் சொல் லாக வேறுவிதத்தா லுருவப்பட்டுப் பற்றிக் கொள்ளுகின்றது. எ - று. கூறுதல்காண்க.

ஈவோன் ஏற்போன் தரத்தைக் கூறுகின்றது.

காந்தத்துள், స్కాందే॥ ''దేహీత్యేవంబ్రువన్నర్థీజనంబోధయతీవసుః । త దిదంకష్టమృషిత్వం ప్రాగదానఫలంహితత్ । ఏకేనతిష్ఠతాధస్తా దన్యేనోపరితిష్ఠతా। దా తృయాచకయోర్భేదఃకరాభ్యామేవసూచితః। దీయమానంతుయోమోహా ద్గోపిప్రాహ్ణి సురేచుచ। నివారయతిపాపాత్మా తిర్యగ్యోనింవ్రజేత్తుసః'' = தேஹி = கொடு என்று இரக்கும் இரப்போன் உனானென்னும் இவ்வருத்தமானது இவ்விரப்பு முற்பிறப்பில் இரப்பவர்க்குக்கொடாத குற்றத்தின் பயனிதுவென்று மக்களுக்குப்போதிக்குஞ் சொல்லாக விருக்கின் றது. கீழிருப்பது கேட்பதாகிய ஒருகை, மேலிருப்பது கொடுப்

பதாயதொருகை. யிவ்விரண்டு கைகளுமே ஈவோன் இரப்போ னுடைய உயர்வு தாழ்வுகளைக் குறிக்கின்றன. பசுக்களுக்கு, வேதி யர்க்கு, அக்கினிஹோத்திரத்திற்கு, தேவர்களுக்குக்கொடுப்பத னையாவன் அறியாமையால் கொடுக்கவேண்டாமென்று விலக்கு கின்றானே? அவன் பாவியாய் விலங்கின் பிறப்பை யடைவன் என்று. கூறுதல்காண்க.

கொடையை விலக்கினோன்விடயம்.

சாதாதபர் கூறினர். வருமாறு; శాతాతపः "మాదదస్వేతియోబ్రూ యా ద్దవ్యగ్నాబ్రాహ్మణేషుచ। తిర్యగ్యోనిశతంగత్వా చండాలేష్వపిజాయతే" = பசு வுக்கும், நெருப்பிற்கும், வேதியர்க்கும், தேவர்கட்கும், கொடுக் கும்பொழுது கொடுக்கவேண்டா மென்று யார்விலக்குகின்றா னே? அவன் நூறுதரம் பசுமுதலிய விழிந்தயோனிகளிற் பிறந்து பின்பு நீசனைகப்பிறக்கின்றான். என்று. கான்க.

தானத்தின் சொரூபத்தையும், செய்யும் வகையையும், பிற வற்றையும் தேவலர் கூறினர். வருமாறு.

தானத்தின்சொரூபம்.

దెవలः "అర్థానాముచితేపాత్రే శ్రద్ధయాప్రతిపాదనం। దానమిత్యభినిర్దిష్టం వ్యా ఖ్యానంతస్యవక్ష్యతే। ద్వౌహేతుఃషడధిష్ఠానం షడంగంషడ్విపాకయుక్ ॥ చతుష్ప్రికారం త్రివిధం త్రినాదందానముచ్యతే॥." = அருத்தங்களைச் சிறந்தவிடனறிந்து சிரத்தையோடு கொடுத்தலே தானமென்று யாண்டுந் துணிந்து கூறப்பட்டது. அதனுளையீண்டு கூறப்படும். இரண்டு ஹேதுக் களையுடையது. ஆறு ஆதாரங்களை யுடையது, ஆறு உறுப்புக்களை யுடையது. ஆறுவிபாகங்களை யுடையது. நான்கு பிரகாரங்களை யுடையது. மூன்றுவகைகளை யுடையது. மூன்று நாதங்களையுடை யது. தானமென்று கூறப்படுகின்றது. என்று. காண்க.

ஏதுக்களிரண்டாமாறு.

దేవలः "నాల్పత్వంవాబహుత్వం వాదానస్యాభ్యుదయావహం। శ్రద్ధాభక్తీచదా నాం వృద్ధిశ్రేయస్కరేహితే" = சிறிதாகவே யாயினும், பெரிதாகவே யாயினும் இருப்பது தானத்திற்கு நன்மைசெய்வதல்ல. சிரத்தை பத்தி யிவ்விரண்டும் தானங்களுடைய விருத்தியையும் சிறப்பையும் செய்யுத்தக்க இதங்களாம். என்று. என்க.

ஆறு அதிஷ்டானமாமாறு.

దేవలః " ధర్మమర్థంచకామంచవ్రీడాహర్షభయానిచ। అధిష్టానానిదానానాంష ఢతానిప్రచక్షతే. " = அறம், பொருள், இன்பம், நாணம், உவப்பு, அச்சம், இவ்வாறையும் ஈகைக்கு ஆதாரமென்று கூறுகின்றனர். என்-று. என்க.

அவற்றுள், முதல்-அறநிலைத்தானமாமாறு.

దేవలః" పాత్రెభ్యోదీయతెనిత్యమనపెక్ష్యప్రయోజనం। కెవలంధర్మబుధ్యాయద్ధర్మ దానం తదుచ్యతే. " = கைம்மாறு வேண்டாமலே தருமம் ஒன்றே பயன் என்னுங் கருத்தால் தக்கோர்க்கு நித்தமும் கொடுக்கப் படுவது எதுவோ? அது அறநிலைக் கொடையென்று கூறப்படும். என்-று. என்க.

உ. வது - பொருணிலைத்தானம்.

దేవలః " ప్రయోజనమపేక్ష్యైవ ప్రసంగాద్యత్ప్రదీయతే। తదర్థదానమిత్యా హురైహికంఫలహేతుకం. "=பயனையேவேண்டிச் சம்பந்தத்தினால் எது கொடுக்கப் படுகின்றதோ? அது இவ்வுலகசம்பந்த முடைய பய னுக்குக் காரணமாகிய பொருணிலைக் கொடையென்று கூறுவர். என்-று. என்க.

ஊ. வது - இன்பநிலைத்தானம்.

దేవలః " స్త్రీపానమృగయాక్షాణాం ప్రసంగాద్యత్ప్రదీయతే। అనర్హేషుచరాగె ణ కామదానంతదుచ్యతే॥ " = பரத்தை மாதர்கள், கள், வேட்டை, சூது இவைகளின் வலியசம்பந்தத்தால் தகாதவர்களுக்கே யாயி னும் விருப்பத்தா லெது கொடுக்கப் படுகின்றதோ? அது காம நிலைக் கொடையென்று கூறுவர். என்-று. என்க.

எ. வது - நாணநிலைத்தானம்.

దేవలః " సంసదివ్రీడయాస్తుత్యా చార్థిభ్యోయత్ప్రయాచితం। ప్రదీయతేచయ ద్దానం వ్రీడాదానమితిస్మృతం. " = சபையில் புகழப்படுதலினால் நாண முற்று இரந்த பொருளை ஏற்போர்க்குக் கொடுப்பது எது வோ? அது நாணநிலைக் கொடையென்று கூறப்படும். என்-று. என்க. நாணம் = வெட்கம்.

ரு. வது - உவப்புநிலைத்தானம்.

தேவலः "दृष्ट्वाप्रियाणिश्रुत्वावा हर्षाद्यस्य त्प्रीयच्छति। हर्षदानमिति प्राहु र्दानंधर्म विचिंतकाः" = விரும்பியவைகளைக் கண்டாயினும் கேட்டாயினும் களிப்பினல் எதனை யெதனைக் கொடுத்துவிடுகின்றனரோ? அதனைத் தருமசிந்தை யுடையவர்கள் உவப்புநிலைக் கொடையென்று கூறுவர். எ-று. என்க-உவப்பு = களிப்பு.

சு. வது - அச்சநிலைத்தானம்.

தேவலः "क्रोशनार्थं हिंसानां प्रतिकारायवद्भवेत्। दीयतेवापकर्त्रे भ्यो भयदानं तदुच्यते." = கோபத்திற்கஞ்சியாயினும், இம்சைசெய்வதற்காயினும், தீங்கு செய்வார்களுக்கு எது கொடுக்கப்படுகின்றதோ? அது அச்சநிலைக் கொடையென்று கூறப்படுகின்றது. எ-று. என்க.

இனி - ஆறுஉறுப்பாவன.

தேவலः "दाताप्रतिग्रहीताच श्रद्धादेयंचधर्म्यम्। देशकालौचदानानामंगान्येतानिषड्विदुः." = கொடுப்பவன், ஏற்பவன், சிரத்தை, தருமத்தோடு கூடியதாகிய கொடைப் பொருள், தக்கவிடம், தக்ககாலம், என்றவாறும் தானத்திற்கு உறுப்பு என்று உணர்வர். எ-று. என்க-உறுப்பு=அங்கம்.

கொடுப்போனிலக்கணம்.

தேவலः "अपापरोगीधर्मात्मा दिक्शुरव्याजतश्शुचिः। अनिंद्यजीवकर्त्ताच षड्भिर्दाताप्रशस्यते" = பாவமற்றிருத்தல், நோயற்றிருத்தல், தருமசிந்தையுண்டாயிருத்தல், காரணமில்லாமலே கொடுக்கும் இச்சையுண்டாயிருத்தல், சுத்தமுடைமை, பழிக்கப்படாத சீவனத்தொழிலுடைமை, என்னுமிவ்வாறினல், கொடுப்பவன் சிறந்தவனாகின்றனன். எ-று. என்க.

ஏற்பவனிலக்கணம் = சற்பாத்திரம்.

தேவலः "त्रिशुक्लश्शुक्लवृत्तिश्च क्षुणाक्षुस्सं यतेंद्रियः। विमुक्तो योनिवोपेत्र ब्राह्मणस्सपात्रमुच्यते. = மூன்றினல் சுத்தனெனவனும், குற்றமற்ற கண்டையையுடையவனும், தயவோடுங் கூடிய வியற்கைக் குணமுடையவனும், பொறிகளை யடக்கினவனும், யோனிதோ

ஷத்திரல் விடப்பட்டவனுமாயுள்ளவேதியனே பாத்திரமென்று கூறப்படுவன். எ-று. என்க. பாத்திரம் = கொடைப் பொருளை ஏற்கத்தக்க விடம். மூன்றுற்சுத்தன்-என்பது-தாய், தந்தை, ஆரியனிவர்களாற்றிருத்தப்படுதலினுற் பரிசுத்தன் என்றவாறு. (குற்றமற்ற நடையையுடையனெனவே, அறநூல்களான் மறுத்த கருமஞ் செய்யாதவன். எ-று. எனவே பழிக்கப்படாதவன் என்பது கருத்து. யோனி தோஷத்தால் விடப்பட்டவன்-எது, அவன்பிறப்பின் காரணங்கள் குற்றமற்றதா யிருத்தல் வேண்டும் என்றபடி).

சிரத்தையினிலக்கணம்.

దేవలః "శౌచంశుద్ధిర్మనఃప్రీతి ర్భక్తి నాందర్శనేతథా। సత్కృతిస్సాననసూయాచ దానేశ్రద్ధేత్యుదాహృతా." = (உடலைச்) சுத்தஞ்செய்து கொள்ளுதலும், (மனத்தைச்) சுத்தஞ்செய்து கொள்ளுதலும் இச்சையாவிரப்பவனைக் கண்டவிடத்துமிக்க அன்புடனிருத்தலும், இரப்பவனை நன்குமதித்து (இனியகூறி) உபசரித்தலும், அழுக்காறு அற்றிருத்தலும், இவையெல்லாம் கொடை விடயத்தில் சிரத்தையென்று உதகரிக்கப்பட்டன. எ-று. என்க.

கொடைப்பொருளிலக்கணம்.

దేవలః "ఆచారాబాధమక్లేశ స్స్వయత్నేనార్జితంధనం। స్వాంవాపిపులంవాపి దేయమిత్యభిధీయతే." = ஒழுக்கத்திற்கு விரோதமில்லாததும், வருத்தப்படாது தனதுமுயற்சியாற் றேடியதும், சிறிதேயாயினும், பெரிதேயாயினும் கொடைக்குத் தக்கது என்று சொல்லப் படுகின்றது. எ-று. என்க. வருத்தப்படாதது=பாவமற்றது. என்றபடி.

கொடைக்குரிய இடமும்காலமும்.

దేవలః "యద్యత్రదుర్లభంద్రవ్యం యస్మినాకాలేపివాపునః। దానార్హాదేశకాలా స్స్యాంద్రైష్టానచాన్యథా." = எந்த விடத்தில் வேண்டிய எந்தப் பொருள் கிடைப்பது அருமையோ? அந்த இடமும்; எந்தக் காலத்தில் எந்தப் பொருள்கிடைப்பது அருமையோ? அந்தக் காலமும், அந்தப்பொருளைத் தானஞ்செய்வதற்குச் சிறந்ததாக விருக்கின்றன: அன்றி வேறுவகையில்லை. எ-று. என்க.

இனி ஆறுவிபாகங்கள்வருமாறு.

தேவலः "அவஸ்தாதேசகாலானாம்பாத்ரதாத்ரோశ்చసంపదా। హీనంచాపిభవేచ్చ్రే
ష్ఠంశ్రేష్ఠంవాప్యన్యథాభవేత్ ॥ దుష్ఫలంనిష్ఫలంహీనం తుల్యంవిపులమక్షయం। షడ్విపాక
యుగుద్దిష్టంషడేతానివిపాకతః." = அனுபவம், தேசம், காலம், ஏற்போன், கொடுப்போன் இவ்வைவந்தின் செல்வமுடைமை திருத்த முற்றிருந்தால் சிறுபொருட் கொடையேயாயினும் சிறந்தனவே யாகின்றது. அச்செல்வம் திருந்தாதவிடத்துச் சிறந்தபொருட் கொடையேயாயினும் வேறுகிவிடுகின்றது. இதுவே விபாகமாம். [விபாகம்=வேறுகத் திரிதல்]. அவை, துஷ்பலம், நிஷ்பலம், ஈனம், துல்லியம், விபுலம், அக்ஷயம், என்ற ஆறுவிபாகத்தால் தானம் கூடியிருப்பதாக எண்ணப்பட்டது. இவ்வாறும்விபாகத் தானே உண்டாகின்றன. எ-று. என்க.

தானத்தின் துஷ்பலவிபாகம்.

தேவலः॥ "நாస్తికస్తేనహింస్రేభ్యో జారాయపతితాయచ। పిశునభ్రూణహంతృ
భ్యాంప్రదత్తందుష్ఫలంభవేత్." = நாத்திகனுக்கும், கள்ளனுக்கும், கொலை செய்பவனுக்கும், பிறன்மனையவளைப்புணர்வோனுக்கும், பதிதனுக்கும், கோள்சொல்பவனுக்கும், சிசுக்கொலைசெய்பவனுக்கும், விசேடமாகவே கொடுக்கப்பட்டிருந்தாலும் அதுகெட்டபயனைத் தரத்தக்கதாம். எ-று. காண்க.

தானநிஷ்பல விபாகம்.

தேవలः॥ "మహదప్యఫలందానం శ్రద్ధయాపరివర్జితం" = பெரியதானமே யானாலும் சிரத்தையில்லாமலே கொடுத்தால் அதற்குப் பயனில்லாமலொழியும். எ-று. காண்க.

தானஹீனவிபாகம்.

தేవలः॥ "పరబాధాకరందానం స్పృహమప్యానతాంవ్రజేత్."=மிகுதியுடைய தானமேயானாலும் அந்நியர்களை வருத்தப் படுத்துவதற்குக் காரணமாகுமேயானால் அது தாழ்வையடையும் எ-று. காண்க.

தானதுல்லியவிபாகம்.

தేవలः॥ "యథోక్తమపియద్దానం చిత్తేనకలుషేణతు। తత్తుసంకల్పదోషేణ దానం
తుల్యఫలంలభేత్" = நூல்களில் விதித்தவாறே செய்யப்பட்டதாமா

யினும் கலக்கப்பட்டுச் சுத்தியில்லாத மனத்தோடு கொடுக்கப் பட்டதாமாயின், அது எண்ணத்தின் குற்றத்திலல் கொடைக் குத்தக்க அளவே பயனைத்தரும். எ-று. காண்க.

தானவிபுலவிபாகம்.

దివలఃll "యుక్తాంగైస్సకలైష్షడ్భి ర్దానంస్యాద్విపులోదయం" = பூரணமா கிய ஆறு அங்கங்களோடுகூடிய தானம் விரிவாகக்காணத் தக்க தாக விளையும். எ-று. காண்க.

தான அக்ஷயவிபாகம்.

దివలఃll "అనుకోశవశాద్యత్నం దానమక్షయతాంవ్రజేత్" = கயவோடும் கொடுக்கப்பட்ட தானம் என்றுங் கெடாததாக முடியும். எ-று. காண்க.

மேற்கூறிய ஆறனுள், க, உ, ஈ, ச, விலக்கப்பட்டன. ஞ, சு, விதிக்கப்பட்டனவாம்.

தானத்தின் நால்வகைமார்க்கம்.

దివలఃll "ఏవమాజస్రికంకామ్యంనైమిత్తికమితిక్రమాత్। దివ్యంచదానమార్యోయం చతుర్ధావర్ణ్యతేబుధైఃll"=ஆஜஸ்ரிகம், காமியம், நைமித்திகம், திவ்வி யம், என்று தானமார்க்கம் நான்குவகைப்பட்டுள்ளனவென்று அறிவுடையோர் கூறுவர். எ-று. காண்க.

ஆஜசிரிகமார்க்கதானம்.

దివలఃll ప్రపారామతటాకాదిసర్వకామఫలప్రదం। తదాజస్రికమిత్యాహుర్దీయతే యద్ధనేదినేll" = தண்ணீர்ப்பந்தர் வைத்தலும், தோப்பு சோலைமுத லிய சமைப்பித்து நிழலுண்டாக்குவதும், ஏரி குளங்கள் செய்து நீர்நிலையுண்டுபண்ணலும், பிறவுமாகச் செய்ததானம் எப்போ தைக்கும் சீவர்களுக்குப் பயன் றருதலாலது, ஆஜசிரிக தானம் என்று கூறப்படும். எ-று. காண்க. ஆஜசிரிகம் = எப்பொழுதும் நிலைபெற்றுள்ளது.

காமியமார்க்கதானம்.

దివలఃll "అపత్యవిజయైశ్వర్య స్త్రీబాలార్థంయదిష్యతే। ఇచ్ఛాసంజ్ఞంతుయద్దానం కామ్యమిత్యభిధీయతేll" = தன் பிள்ளைபெண்கள் நிமித்தமும், பகையை

வெற்றி கொள்ளுந் நிமித்தமும், ஐசுவரிய மடையும் பொருட்டும், மாதர்கள் விடயமாகவும், குழந்தைகட் காகவும், எதனைக் கொடுக்க மனம் சம்மதிக்கின்றதோ? அப்படிப்பட்ட ஆசையைக்குறியாகவுடைய தானம் காமியம் என்னப்படும். எ-று. காண்க.

நைமித்திகமார்க்கதானம்.

దేవలః॥ "కాలాపేక్షుంక్రియాపేక్ష మర్థాపేక్షమితిస్మృతం। త్రిధానైమిత్తికం ప్రోక్తం." = இன்னகாலத்தில் கொடுக்கத்தக்கது, இன்ன கருமத்தில் கொடுக்கத் தக்கது, இன்னதன் பொருட்டுக் கொடுக்கவேண்டுவது என்று, காலம், தொழில், பயன் என்ற மூன்று நிமித்தங்களோடு கூடியதானம்நைமித்திகதானமெனப்படும். எ-று. காண்க.

திவ்வியமார்க்கதானம்.

దేవలః॥ "సహోమందివ్యముచ్యతే." = வேள்விசெய்து கொடுத்ததே திவ்வியதானமாம். எ-று. காண்க.

மூவகைத்தானம்.

దేవలః॥ "నవోత్తమానిచత్వారి మధ్యమానివిధానతః। అధమానితుశేషాణి త్రివిధత్వమిదంవిదుః." = ஒன்பது உத்தமதானம், நான்குமத்திம தானம், மற்றைய வெல்லாம் அதமதானமாம். இவையே மூவகைத்தான மென்றுணர்வுடையோர் கொள்வர். எ-று. காண்க.

உத்தமதானம்.

దేవలః॥ "అన్నవిద్యావధూవస్త్రీ గోభూరుక్మాశ్వహస్తినాం। దానాన్యుత్తమదానాని ఉత్తమద్రవ్యదానతః." = அன்னதானம், வித்தியாதானம், கன்னியாதானம், வஸ்திரதானம், கோதானம், பூதானம், சுவர்ணதானம், அசுவதானம், கசதானம், இவற்றை யுத்தமத்திரவியத் தோடுங் கொடுத்தால் இவ்வொன்பதும் உத்தமதானமாம். எ-று. காண்க.

மத்திமதானம்.

దేవలః॥ "విద్యాదాచ్ఛాదనావాస పరిభోగౌషధానిచ। దానానిమధ్యమానీతిమధ్యమద్రవ్యదానతః." = போர்வைக்குரிய ஆடை, மனை அல்லது இருப்பிடம், அனுபவிப்பதற்குரிய ஏனையபண்டங்கள், அவிழ்தம், மத்திமத் திரவியத்தோடும் கொடுத்தால் மத்திமதான மென்பர். எ-று. காண்க.

அதமதானம்.

தெலுஃ॥ உபானத்ப்ரிஷ்யயானானிச த்ரபாத்ராசனானிச। தீபகாஷ்ட்ஹபலாதீனிச ரமம்பஹுஸாத்விகம்। பஹுத்வாவத்ர்ஜாதானாம்ஸம்க்யாசேஷேஷுனேஷ்யதே। அதமான்யவஷிஷ்டானிஸர்வதானான்யதோவிதுஃ.''=பாதரக்ஷை, பணிசெய்வோர், ஊர்தி=வாகனம், குடை, பாத்திரங்கள், ஆசனம்=படுத்தல் முதலிய வற்றிற்குரியன, விளக்குகள், விறகு. பழவகை, முதலியன பலர் பார்க்கத்தக்க பொருள்களாமாதலின் கடைப்படுவகையன. பயனுக்கு வரத்தக்கபொருளின் கூட்டமிகுதியாதலின்ஏனையவற்றைக்கணக்கிடுவதற்கு அமையாமையிலெழுதிக்கப்பட்டன. அதனால், கூறுதொழிந்த எல்லாத்தானங்களும் அதமமென்று உணரத்தக்கன. எ-று. காண்க.

நாதமூன்றுவன.

"தெவலஃ॥ இஷ்டம்தத்ஸுதீதம்வாப்ரணஶ்ய த்யனுகீர்தனாத்। ஶ்லாகானுஶோசனாப்யாம்வாபக்ன்னதேஜாவிபத்யதே। தஸ்மாதாத்மகுதம்புண்யம் நவ்ருதாபகீர்தயேத்.''= ஒருவன்தான்செய்யப்பட்ட நல்லகருமம், கொடை, கற்றகல்வி, இம்மூன்றையும் தானே கூறுவானாயின் அழிந்து விடுகின்றது. தன்னைத்தானேபுகழ்ந்துகொண்டால் ஒளிமழுங்கி விடுகின்றது. செய்தபின்வியசனப்பட்டாலும் விபத்தை யடைகின்றன். ஆதலால் தன்னற்செய்யப்பட்ட நல்லகாரியங்களை வீணைகத் தான்கூறலாகாது. எ-று. காண்க.

புராணசாத்துள், தானங்கள், நித்தியம், நைமித்தியம், காமியம், விமலம், என நான்குவகையாகக்கூறப்பட்டன.

சாத்துவிகம், இராஜசம், தாமசம் என்னுமூன்றுபேதங்களைப்பகவற்கீதையுள் கண்ணன் கூறினர்.

சாத்துவிகதானம்.

பகவற்கீதை. "தாதவ்யமிதியத்தானம் தீயதேனுபகாரிணே। தேசேகாலேசபாத்ரேசதத்தானம் ஸாத்விகம்ஸ்ம்ருதம்.'' = கொடுக்கத்தக்கது என்னுந் துணிவுடைய வுணர்ச்சியால் கைம்மாறு வேண்டாமலே நல்ல இடத்தில் நல்லகாலத்தில் நல்லபாத்திரமாகிய தக்கோர்க்குக்கொடுத்ததானம் சாத்துவிகதானமென்று கூறப்படுகின்றது. எ-று. காண்க.
கைம்மாறு=பிரதியுபகாரம்.

இராஜசதானம்.

அதேகதை, "யத்துப்ரத்யுபகாரார்த்தம் ஫லமுத்திஶ்ய வாபுனः। தீயதெ சபரிக்ளிஷ்டம் தத்ராஜஸமுதாஹ்ருதம்." = கைம்மாறுவேண்டிக்கொடுக்கப்பட்டதும், தானப்பயனை நாடிக்கொடுக்கப்பட்டதுமாகிய, கிலேசம்=கவலையோடுங்கூடிய அந்தத்தானம் இராஜசதானமென்று கூறப்படும். எ-று. காண்க:

தாமசதானம்.

அதேகதை, "அதேశகாலெயத்தானம பாத்ரெப்ய்ஶ்சதீயதெ। அஸம்ஸ்க்ருதமவிஜ்ஞாதம்தத்தாமஸமுசாஹ்ருதம்." = தகாதவிடத்திற் கொடுக்கப்பட்டதும், தகாதகாலத்திற் கொடுக்கப்பட்டதும், தகாதவர்களுக்குக்கொடுக்கப்பட்டதும், சமஸ்காரமில்லாதபண்டம் = சுத்திசெய்யாததும், அறிவின்றிக் கொடுப்பதும் தாமசதானமென்று கூறப்பட்டன. எ-று. காண்க.

இவற்றின் பயன் விசேடம் விஷ்ணு தருமோத்தரத்தில் குறிப்பிக்கப்பட்டன.

தாமசதானப்பயன்.

விஷ்ணு தருமோத்திரம், "தாமஸானாம்஫லம்ப்ருஜ்தெ திர்யக்ஷ்வேஷூனவஸ்ஸதா। வர்ணஸங்கரபாவெனவார்த்தகெயதிவாபுனः। பால்யேவாதாஸபாவென நாத்ரகார்யவிசாரண;" = மனிதன் தாமசதானஞ்செய்தால் திரியக்கு ஜந்துக்களாகப்பிறந்து அப்பயனை அனுபவிக்கின்றான். அத்தாமசதானமே சிறிது உத்தமமாயின் மானுடசரீரமெடுத்தாலும் வருணசங்கரமாய் அப்பயன் வடிவாகிய போகத்தை அனுபவிக்கின்றான். அதனிலும் உத்தமமாயின். கிழத்தனத்தில் அப்பயனையனுபவிக்கின்றான். அதனிலும் சிறந்ததேயாயின்மிக்க இளமையில் வேறொருவர் சார்பிலிருந்து அப்பயனை அனுபவிக்கின்றான். இவ்விடயத்தில் விசாரிக்கத்தக்கது வேறில்லை. எ-று. காண்க.

இராஜசதானப்பயன்.

இதுவுமது. "அதோன்யதாதுமானுஷ்ய ராஜஸானாம்஫லம்பவெத்।" = இராஜசதானத்திற்குப்பயனைமானுடதேகத்திலேயே அந்தத் தாமசம்போலாகாது யோக்கியமாக அனுபவிக்கின்றான். எ-று. காண்க.

சாத்துவிகதானப்பயன்.

இதுவுமது, "సాత్వికానాంఫలంభుఙ్క్తే దేవత్వేనాత్రసంశయః."=தெய்வ வுடம்பினையடைந்து சாத்துவிகதானப்பயனையடைகின்றான். இக் கருத்தில் ஐயமில்லை. எ-று. காண்க.

இனி தானபாத்திரம் வருமாறு.

யாஞ்ஞவற்கியர்கூறினர். "నవిద్యయాకేవలయాతపసావాపిపాత్రతా। యత్రవృత్తమితోభే తద్ధిపాత్రంప్రచక్షతే."=தானத்தைப் பெற்றுக்கொள் ளத் தக்கதாம் கல்வியொன்றிலுலே அமைவதல்ல. தவத்தாலு மன்று (பிறவெனின்) யாரிடத்து நல்லொழுக்கமும் அக்கல்வி யுந்தவமும் கூடியிருக்குமோ? அவனே தானம்பெறத்தக்க இட மாவன் என்று கூறுகின்றனர். எ-று. காண்க.

இயமனும் கூறினர். "విద్యాయుక్తోధర్మశీలః ప్రశాంతః। క్షాంతోదాంత స్సత్యవాదీకృతజ్ఞః। స్వాధ్యాయవాన్స్మృతిమాన్గోశరణ్యో। దాతాయద్వైబ్రాహ్మణం పాత్రమాహుః." = கல்வியுடையவன், புண்ணிய சீலமுடையவன், மனச்சாந்தமுடையவன், பொறுமையுடையோன், ஐம்பொறி களையும்வென்றவன், மெய்கூறுவோன், பிறர்செய்த நன்றிமற வாதவன், வேதமுணர்ந்தவன், தருமநூலுணர்ந்தவன், பசுக் களைக்காப்பவன், கொடுப்பவனுக விருக்கவேண்டுவது. அல்லது இவ்வளவு குணமுமுண்டாயிருந்து தானே கொடுப்பவன் யாவ னே? அப்படிப்பட்டவேதியன் தானத்தை வாங்குவதற்குத்தக்க வன் என்று பெரியர் கூறுவர். எ-று. காண்க.

வசிட்டர். "వశిష్ఠః॥ కించిద్వేదమయంపాత్రం కించిత్పాత్రంతపోమయం। పా త్రాణామపితత్పాత్రం శూద్రాన్నంయస్యనోదరే." = வேதமுணர்ந்தவனைச்சிறி துதக்கோனெனக் கூறப்படும்; தவமுடையோனும் சிறிதே தக் கோனவன்; யார்வாயில் சூத்திர சம்பந்தமான அன்னம் விழு கின்ற தில்லையோ? அவன் பாத்திரமென்னும் தக்கோருளெல் லாஞ் சிறந்த தக்கோனும். எ-று. காண்க.

பிரகற்பதி. బృహస్పతిః॥ "ఆగమిష్యతియత్పాత్రం తత్పాత్రంతారయిష్యతి"= தானம் பெறத்தக்க பாத்திரனுள்ளவன் தானத்தை விரும்பி வந்தால் அவனே கொடுப்போனைத் தீவினையினின்றுங் கடப் பிப்பவனவன். எ-று. காண்க.

பாத்திரமென்றசொல்லின்பொருள்.

விஷ்ணுதருமோத்தரம். "ஷட்ஷுதர்மோத்தரே॥ பதனாத்த்ராயதேயஸ்மாத்த ஸ்மாத்பாத்ரம் ப்ரகீர்த்யதே." = கீழ்விழுதலினின்றும் தப்புவிப்போன் யாரோ? அவன் பாத்திரமென்னப்படுவான். எ-று. காண்க.

பாத்திரவிசேடம்.

ஸ்கந்தம். స్కందపுராణే॥ ప్రథమంతుగురోర్దానం దద్యాచ్ఛ్రోత్రియమనుక్రమాత్। తతోన్యేషాంచవిప్రాణాం దద్యాత్పాత్రానుసారతః। గురోరభావేతత్పుత్రంతదాభార్యాంతత్సుతాంతథా। పౌత్రంప్రపౌత్రం దౌహిత్రమనుక్రమం వాతత్కులోద్భవం। తద్దానాతిక్రమేదానం ప్రత్యుతాధోగతిప్రదం." = மிகச்சிறந்த தானத்தை முதலில் குருவுக்குக் கொடுத்துப்பின்பு மற்றைய தானங்களை முறையே அந்தந்த அந்தணர்களுடைய யோக்கியதையின் ஏற்றக் குறைவின்படிக் கொடுக்கவேண்டுவது. ஆசிரியனில்லாவிட்டால், குருபுத்திரனுக்குக் கொடுக்கவேண்டும். அவனில்லையேல் குருபத்தினிக்கும், அவளில்லையாயின் குருமகளுக்கும், அவளில்லாவிடின் குருமகனுடையமகனுக்காவது, இல்லையேல்அவன்மகனுக்காவது, குருவின்மகளுடைய மகனுக்காவது, யாருமில்லாவழி அக்குருவின் குலத்திற் பிறந்தவனுக்காவது தானம் கொடுக்கவேண்டும். ஆசிரியனுக்குக் கொடுக்கவேண்டிய தானத்தைச் செய்யக்கடந்தானையின், கொடுப்போன், புண்ணியத்தைக் கெடுப்பது மல்லாமல் நரகத்தையும் அடைகின்றான். எ - று. காண்க.

பாத்திரவிசேடத்தாலுறும் பயன்விசேடம்.

இயமன். "యమః॥ సమమబ్రాహ్మణేదానం ద్విగుణంబ్రాహ్మణబ్రువే। ప్రాధీతసాహస్రమనంతం వేదపారగే." =வேதியனல்லாதவனுக்குக் கொடுத்தால், கொடுத்தளவிற்குச் சமனான பயனுண்டாம். வேதியன் என்ற மாத்திரையிலுள்ளவனுக்குக் கொடுத்தால் இரட்டிப்புப் பயன். வேதமோதத் தொடங்கினவனுக்குக் கொடுத்தால் நூறு மடங்கு அதிகபயனும்: முற்றும் ஓதினவனுக்குக் கொடுத்தால் வரும்பயனுக்கு முடிவில்லையாம் எ - று. காண்க.

வேதபாரகனிலக்கணம்.

இயமன். "యమః॥ ఉత్పత్తిప్రళయాచైవభూతానామాగతింగతిం। వేత్తివిద్యామవిద్యాంచ సవాచ్యోద్వాదపారగః." = ஆன்மாக்களின் உற்பத்தி நாசமும்,

போக்குவரவும், அறிவும், அறிவுடைமையும், யார் அறிந்திருக்கின்றனே ? அவன்வேதத்தை முற்றும் உணர்ந்தவனுவான். எ-று. காண்க. பாரகன்=முற்றுமுணர்ந்தோன்.

சூத்திரர் முதலியோர்க்குக் கொடுத்தலின்விடயம்.

இயமன். "యమః॥ శూద్రేసమగుణా దానంవై శ్వేతద్విగుణంస్మృతం। క్షత్రియేత్రిగుణంప్రాహుఃషడ్గుణంబ్రాహ్మణేస్మృతం."=சூத்திரனுக்குக் கொடுத்தால்கொடுத்தளவிற்குச் சமனனபயன்.வைசியனுக்குக்கொடுத்தால் இரண்டத்தனைப்பயன். கூத்திரியனுக்குக்கொடுத்தால் மூன்றத்தனைப்பயன். வேதியனுக்குக் கொடுத்தால் ஆறத்தனைப் பயன் வரும். எ-று. காண்க.

இம்மிருதி வசனங்களால் கூத்திரிய வைசிய சூத்திரரும் தானத்தை வாங்குவதற்கு அதிகாரியா யிருக்கலாமென்று தோற்றும். ஆயின் அங்ஙனமன்று, என்னை ? பிரதிக்கிரகம் என்னும் கருமத்தின் அதிகாரம் வேதியனுக்கொழிய ஏனையர்க் கில்லையென்று எல்லா மிருதிகளிலும் நிச்சயிக்கப்பட் டிருக்கின்றது. அங்ஙனமாயின் மேலையவசனத்தில், சூத்திரவைசிய கூத்திரியர்கட்குக்கொடுத்தால் இவ்வளவு பயனென்று கூறப்பட்டுள்ளதெயிதன்கருத் தென்னை யெனில் ? இவ்வசனம் அன்னதானத்தைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரம் சூத்திராதியர்க்கும் உண்டென்ற கருத்தாகின்றது. அவ்வாறே தாற்பரியங் கூறவேண்டுமென்னும் நியமம் என்னை யெனின் ? அதற்கு உடன்பட்டு வேறுமிருதிகளும் கூறுகின்றன. வருமாறு (కృతాన్నమితరేభ్యః)=வேதியலெழிய ஏனையர்க்குக் கொடுப்பதாயின் சமைத்தசோறே யிடுக. என்று கௌதமர் கூறினர்.

சுற்றத்தினர்க்களிக்குங்கொடை.

வியாசர். "వ్యాసః॥ మాతాపిత్రోశ్చయద్దత్తంభ్రాతృస్వసృసుతాసుచ। జాయాత్మజేషుయద్దత్తంసోనింద్యఃస్వర్గసంక్రమః। పితుశ్శతగుణందానం సహస్రంమాతురుచ్యతే। ఆనంతంచుహితుర్దానం సోదర్యేదత్తమక్షయం."=தாய்தந்தையர்க்கும், தமையன் தம்பியர்க்கும், தமக்கை தங்கைகட்கும், தன் பெண்களுக்கும், மனைவிக்கும், புத்திரர்க்கும் கொடுத்தவன் நிந்தை யில்லாமலே சுவர்க்கத்தை யடைவான். தன்பொருளைத் தந்தைக்குக்

கொடுத்தால் நூறுபங்கு விசேடம்; தாய்க்கானல் ஆயிரம்பங்கு; மகளுக்கானல் முடிவேயில்லை; உடன்பிறந்தார்க்குக் கொடுத்தால் என்றுங் கெட்டதுவளரும். எ-று. காண்க.

பவிஷியோத்தரம். " భవిష్యోత్తరే॥ నకేవలంబ్రాహ్మణానాందా నంసర్వత్ర శస్యతే। భగినీభాగినేయానాం మాతులానాంపితృష్వసుః। దరిద్రాణాంచబంధూనాందా నం కోటిగుణంభవేత్." = வேதியர்க்குமாத்திரமே தானம் கொடுக்க வேண்டுமென்பது விரதமாகக்கொண்டால் எல்லாவிடயத்திலும் அது சிறந்ததல்ல, தன்னுடன் பிறந்தபெண்கள், அவர்கள் பிள்ளைகளாகிய கன்மருமக்கண்மார், அம்மான்மார், தந்தையுடன் பிறந்த அத்தைமார், மற்றும் வறியவர்களா யிருக்கிற தனதுசுற்றத்தார்க்கும் கொடுத்தால் அதனற் கோடிபங்கு அதிகமானபயனுண்டாம். எ - று. காண்க.

தக்கவேதியற்குக்கொடாமையின் விடயம்.

சாதாதபர். " శాతాతపః॥ సన్నికృష్టమతిక్లిష్ట మతిక్రామతియోద్విజం। భోజనైశ్చైవదానైచసహంత్యా సప్తమాత్కులం." = மிகவருத்தப்படுகின்ற வேதியன் சமீபத்திலிருக்கும் போது உண்டிவிடயத்திலாவது தானவிடயத்திலாவது அவனைக் கடந்தொழித்து எவன்அப்பாற்செல்லுகின்றானே? அவன் ஏழுதலைமுறைவரையில்தன்குலத்தை நாசஞ் செய்துவிடுகின்றான். எ-று. காண்க.

தான விசேடபயன்.

மகாபாரதம். " మహాభారతే॥ హృతస్వాహృతదారాశ్చ యేవప్రాదేశ ప్లవే। అర్థార్థమభిగచ్ఛంతితేభ్యోదత్తంమహాఫలం."=தன்னாட்டுக்கு உபாதியுண்டான காலத்தில் தன்பொருளை யிழந்தும், மனைவியையிழந்தும், பொருள் நிமித்தமாகவந்தவேதியற்குக் கொடுக்கப்பட்டதானம் சிறந்த பயனைத்தரும். எ-று. காண்க.

தானம் பெறத்தகாதவர்கள்.

மனு. మనుః॥ నచాస్వోపిప్రయచ్ఛేత్తు బైడాలవ్రతినిద్విజే। నబకవ్రతికేపాపేనా వేదవిదిధర్మవిత్। త్రిష్వప్యేతేషుదత్తం హివిధినాప్యార్జితంధనమ్। దాతుర్భవత్యనర్థాయ పరత్రాతత్రేవచ."=வறியவனே யாயினும் " பைடாலவிரதம் " உடையவனெனப்படும், பகவிருத்தியுடையபாவிக்கும்வேதத்தை அறி

யாதவனுக்கும், தருமத்தையுணர்ந்தவன் தானத்தைக் கொடுக்க லாகாது. விதிப்படி தான்றேடியபொன்னை இம் மூவர்க்குங் கொடுத்தால், கொடுத்தவனுக்குக்கேடுண்டாகும். மறுமையிலும் ஒன்றும் கொடாதவனே யாவன்.எ-று. காண்க.

பைடாலவிரதவிலக்கணம்.

மனு. "మనుః॥ యద్గ్రహణంపురస్కృత్యవ్రతచర్యాంనిషేవతే। పాపంవ్రతేన సంఛాద్యపైడాలంనామతద్వ్రతం." = எவன்? யாதேனும்ஒருநிமித்தத்தை முன்னிட்டுக்கொண்டு ஒருவிரதத்தை அனுட்டிக்கின்றான் அவ்விரதத்தால் தன்பாவத்தை யொளித்துவைத்திருக்கின்றான் அப்படிப்பட்டவிரதத்திற்குப்பைடாலவிரதமென்றுபெயராம். எ-று. காண்க. இது கூடாவொழுக்க மெனினும் அமையும்.

பகவிருத்தியிலக்கணம்.

மனு. "మనుః॥ అధోదృష్టిర్నైకృతికస్స్వార్థసంధానతత్పరః। శఠోమిథ్యావినీత శ్చబకవృత్తికరోద్విజః."=கீழ்ப்பார்வையையுடையவன், வஞ்சகன், தன் பயனைத்தேடிக் கொள்வதிலேயே கருத்துடையவன், உலோபகுணமுடையவன், அடக்கமுடையவனைப்போலப்பொய்யாகநடிப்பவன், என்ற இந்தப்பார்ப்பான் பகவிருத்தியுடையவனும். எ-று. காண்க. பகம்=கொக்கு. விருத்தி=சீவனத்தொழில்.

சாதாதபர். "ఆతాతపః॥ నష్టందేవలకేదత్తమప్రతిష్ఠంచవార్ధుషా। యచ్చ వాణిజ్యకేదత్తం నతత్ఫల్యాయచనోఇహ." = தேவலகனுக்குக் கொடுத்த தானம் நட்டத்தையடையும். வட்டியால் சீவிக்கின்றவனுக்குச்செய்ததானத்தால் உயர்ந்தநிலைமை கெட்டுவிடும். வியாபாரம்செய்பவனுக்குக் கொடுத்தால் அது இம்மை மறுமை யிரண்டிற்கும் பயனைத்தராது வீணும். எ-று. காண்க.

தேவலகனிகலக்கணம்.

வ்யகாங்தம். స్కాందే॥ "దేవార్చనరతోవిప్రో విత్తార్థీవత్సరత్రయం। సవై దేవలకోనామ హవ్యకవ్యవిగర్హితః." = எந்த அந்தணன் பொருளை இச்சித்து மூன்றுவருடம் வரையில் அந்நியனுக்காக தேவர்களைப் பூசிக்கின்றானே? அவனுக்குத் தேவலகன் என்று பெயராம். அவன், தேவகருமங்களிலும் பிதிர்கருமங்களிலும் தகாதவன் என்று இகழப்பட்டான். எ-று. காண்க.

வீண்செலவுசெய்பவனுக்குத்தானமாகாது.

விருத்தமனு. వృద్ధమనుः॥ "పాత్రీభూతోపియోవిప్ర ప్రతిగృహ్యప్రతిగ్రహం। అసత్సువినియుంజీత తస్మైదేయంనకించన." =எந்தவேதியன் [தானம்பெறத்தக்கதாத்தை யுடையவனே யாயினும்] தானத்தைப் பெற்றுக்கொண்டு கெட்டவழியில் செலவழித்து விடுவானே? அவனுக்கு எதுவும் ஒருசிறிதும் கொடுக்கலாகாது. எ-று. காண்க.

தருமஞ்செய்யாது பொருள் வைத்திருப்பவன் விடயம்.

விருத்தமனு. "వృద్ధమనుः॥ సంచయంకురుతేయశ్చ ప్రతిగృహ్యసమంతతः। ధర్మార్థంనోపయుంజీతనతం తస్కరమర్చయేత్." = யார்? எல்லாவிடங்களிலும் தானம் வாங்கிப்பொருளிருப்புச்செய்துவைத்துக்கொண்டு, தருமத்தின் வழியி லுபயோகிக்காம லிருக்கின்றானே? அந்தக்கள்ளனைப் பூசிக்கலாகாது. எ-று. காண்க.

வீணாய்விடும்கொடைபதினாறுவன.

விஷ்ணு தருமோத்தரம். "విష్ణుధర్మోత్తరే॥పరస్థానేవృథాదానమశేషంపరికీర్తితం। ఆరూఢపతితేచైవ అన్యథాచైర్థనైశ్చయత్। వ్యర్థమబ్రాహ్మణేదానంపతితేతస్కరేతథా। గురోశ్చాప్రీతిజనకే కృతఘ్నేగ్రామయాజకే। వెగవిక్రయికేచైవయస్యచోపపతిర్గృహే। స్త్రీభిర్జితేషుయద్దత్తంవ్యాళగ్రాహితథైవచ।బ్రహ్మబంధాచయద్దత్తం యద్దత్తం వృషలీపతౌ। పరిచారేషుయద్దత్తం వృథాదానానిషోడశ." = முதல் அந்நியர் வாசஞ்செய்யு மிடத்தில் கொடுத்த எல்லாத் தானமும், உ-வது, ஆரூடபதிதன் = ஏறிவிழுந்தவன். எனவே, மேல்நிலைக்குச் சென்றும் நிலைதவறிக் கீழ் ஒழுக்கத்திற்கு வந்தவனுக்குக் கொடுத்த தானமும், ங-வது, வேறுவகையாற் றேடிய பொருளாற் செய்யும்தானமும், [வேறுவகையாவது - பாவவழியாற் சம்பாதித்தது] ச-வது – வேதியனல்லாதவனுக்குக் கொடுத்ததானமும், ஞ - வது, பதிதன் = பிரஷ்டனெனவனுக்குக் கொடுத்ததானமும், ட-வது, திருடனுக்குக் கொடுத்ததானமும், [கள்ளனுவான் மேலே குறிக்கப்பட்டான்]. எ-வது, குருவுக்கு விருப்பஞ் செய்யாதவனுக்குக் கொடுத்ததானமும், அ - வது, செய்நன்றி மறந்தவனுக்குக் கொடுத்ததானமும், கூ - வது, கிராமபுரோகிதனுக்குக் கொடுத்த தானமும், க0 - வது, வேதத்தை விற்பவனுக்கு [கூலிக்கு வேதஞ்சொல்வது சொல்விப்பது] கொடுத்த தான

மும், கக - வது, உபபதியைத் தன்னில்லத்தில் வைத்திருப்பவனுக்கு (எனவே, வியபசாரியினுடைய கணவன் என்பது) கொடுத்த தானமும், கஉ - வது, பெண்வழி நிற்பவனுக்குக் கொடுத்த தானமும், கங - வது, பாம்பு பிடிப்பவனுக்குக் கொடுத்த தானமும், கச - வது, வேதியன் பந்துவுக்குக் கொடுத்த தானமும், கரு - வது, விருஷலீபதிக்குக் கொடுத்த தானமும், [விருஷலீபதி = பூத்தபின்மணந்தவள் கணவன்]. கசு - வது, பரிசாரகனுக்குக் கொடுத்த தானமும், ஆகிய இப்பதினைறும் பயனற்றவீனதானமாம். எ-று. காண்க.

தானமின்றியுபசரிக்கத்தக்கவர்கள்.

மஹாபாரதம். மஹாபாரதே॥ "பங்஗்வந்஧பதிராமூகா வ்யாதிநோபஹதாஶ்சயே। ப⁴ர்த்ருவ்யஸ்தஸுஹ்ருʼ நதுதெ³யஃப்ரதிக்³ரஹஃ." =காலில்லாதவன்=மூடவன், குருடன், செவிடன், ஊமை, நோயால்பீடிக்கப்பட்டவன்=ரோகி, இவர்களனைவரும் அன்னபானதிகளாலுபசரிக்கத்தக்கவர்களாவார்களன்றித்தானத்திற்குத்தக்கவர்களல்லர். எ-று.காண்க.

தக்கவர்களைவிடுத்துத்தகாதவர்க்குக்கொடுத்தல்.

இதனை மனுவிலக்கினர். மநுஃ॥ "அனர்ஹே தே³யமித்³தா⁴தி நதா³தியதர்ஹதே। அர்ஹானர்ஹபரிஜ்ஞானாத்³தா³நாத்³த⁴ர்மாச்சஹீயதே." =தக்கவனுக்குக் கொடாதுவிடுதலும், தகாதவனுக்குக் கொடுத்தலு மாகிய காரியத்தைச் செய்தலில் இவன்தக்கவன்இவன்தகாதவன் என்றுஉணராத குற்றத்தால் தான்செய்த தானதருமங்களைக் கெடுத்து விடுகின்றான். எ-று. காண்க.

தானஞ்செய்யத்தக்கபொருளிலக்கணம்.

பவிஷியோத்தரம் விதித்தது. ப⁴விஷ்யோத்தரே॥ "யத்³யதி³ஷ்டம்விஶிஷ்டஞ்சந்யாயப்ராப்தஞ்சயத்³ப⁴வேத்। தத்தத்³கு³ணவதே³தே³ய மித்யேதத்³தா³நலக்ஷணம்." = எது எதுதனக்கு இச்சையான பொருளோ ? எது விசேடமுள்ள பொருளோ? எதுதருமத்தோடு சம்பாதிக்கப்பட்டதோ? அப்பொருளையெல்லாம் பாத்திரமான குணமுடையவனுக்குக் கொடுக்கவேண்டுவது. இதுவே தானத்திரவியலக்கணமாம். எ-று. காண்க.

அவற்றுள்விசேடம்வருமாறு.

எல்லாவற்றையும் கொடுக்கவேண்டுமென்பதனுள்ளும் சில விசேடம் யாஞ்ஞவல்கியரால் கூறப்பட்டது. யாஜ்ஞவல்க்யஃ॥ "ஸ்வ

குடும்பாவிரோதன மேயம்தாரசுதாதௌ। நான்யேஸதிஸர்வஸ்வம் யச்சான்ய ஸ்மை ப்ரதிஶ்ரு தம்." = தன்குடும்பப் பாதுகாப்பினுக்குத் தடையில்லாத பொருளையும், மனைவியையும், தலைமகனையும் = மூத்தமகனையும் தவிரமற்றயெவல்லாப்பொருளையும் கொடுத்துவிடப்படும். வமிசமில்லாவழி, விசாரிப்பின்றியுள்ளனவெல்லாம் கொடுத்து விடலாம். ஒருவனுக்குக்கொடுக்கிறேன் என்று கூறியிருந்த பொருளாயின் எப்படிப்பட்டதாயினும் கொடுத்துவிட வேண்டுவது. எ-று. காண்க.

பிரகற்பதி. బృహస్పతిः॥ "కుటుంబభక్తవసనా ద్దేయంయదతిరిచ్యతె." = தன்குடும்பத்திற்கு வேண்டிய உணவு ஆடைகளைவிட மேற்பட்ட பொருளெல்லாம் கொடுக்கத்தக்கனவாம். எ-று. காண்க.

தானஞ்செய்யவேண்டிய பொருட்பிரிவு.

சிவதருமம். శివధర్మె॥ "తస్యాత్తుభాగంవిత్తస్య జీవనాయప్రకల్పయెత్। భాగద్వయంతుధర్మార్థ మనిత్యంజీవనంయతः." = வாழ்நாள் அறிவுசிறிதேயாமாதலின், தான் தேடும்பொருளை மூன்று கூறுசெய்து, அவற்றுள் ஒருபங்கு தன்சீவனத்தின் பொருட்டு வைத்துக்கொண்டு மற்றைய விரண்டுபாகத்தையும் தருமத்தின் பொருட்டுக்கொடுக்க வேண்டும். எ-று. காண்க.

மேலியதனைழிபுவருமாறு.

வியாசர். వ్యాసः॥ కుటుంబంపీడయిత్వాపి బ్రాహ్మణాయమహాత్మనె। దాతవ్యం భిక్షువెచాన్న మాత్మనోభూతిమిచ్ఛతా." = மஹான்மாவாகிய பிராமணசந்நியாசி அன்னபிக்ஷைக்கு வந்தபோது, தனதுமேன்மையை விரும்பின இல்லறத்தான் தன்குடும்பத்தையேனும் வருத்தி அவனுக்கு அந்நதானம் செய்யவேண்டுவது. எ-று. காண்க.

தானங்களுக்குரியபயன்.

மனு. మనుः॥ "వారిదస్తృప్తిమాప్నోతిసుఖమక్షయమన్నదः। తిలప్రదः ప్రజామిష్టాం దీపదశ్చక్షురుత్తమం। భూమిదోభూమిమాప్నోతి దీర్ఘమాయుర్హిరణ్యదः। గృహదోగృహాణివెశ్మాని రూప్యదోరూప్యముత్తమం। వాసోదశ్చంద్రసాలోక్యమశ్విసాలోక్యమశ్వదः। అనడుద్దःశ్రియంజుష్టాం గోదోబ్రహ్మస్యమక్షయం। యానశయ్యాప్రదోభార్యామైశ్వర్యమభయప్రదः। ధాన్యదశ్శాశ్వతంసౌఖ్యం బ్రహ్మదోబ్రహ్మశాశ్వతం। సర్వేషామెవదానానాం బ్రహ్మదానంపరంస్మృతం." = தண்ணீர் கொடுத்தவன், திருப்தி

யையடைவன். அந்தானஞ் செய்தவன் அழியாத சுகத்தைப்பெ றுவன். எள்ளைத் தானஞ்செய்தவனுக்கு, இச்சைக்குரிய நன்மக் களைப் பெறுதலுண்டாம். விளக்குத்தானஞ் செய்தால் நல்லபார் வைபுண்டாம். பூதானஞ் செய்தவன்பூமிகளுக்குத்தலைவனுவான். பொன்னைத் தானஞ்செய்தவனுக்குத்தீர்க்காயுளுண்டாம். மனை= ஊடு (இதனை வீடுஎன்று சிலர் வழங்குவர்) தானஞ் செய்த வன் சிறந்த மாளிகைகளைப் பெறுவன். வெள்ளியைத் தானஞ் செய்தவன் விசேடம் வெள்ளியை யடைவன். ஆடையைத் தா னஞ்தெய்தவன் சந்திரனுலகத்தைப் பெறுவன். குதிரையைத் தானஞ்செய்தவன் அசுவனி தேவருலகத்தை யடைவன். இட பத்தைத் தானஞ் செய்தவனுக்குச் செல்வம் வலிதில் வந்துசே ரும். (இடபம்=எருது). கோதானஞ் செய்தவன் பிரமலோகத் தையடையவன். வாஹனம், படுக்கைதானஞ் செய்தவனுக்கு மனத்திற்கினிய மனையாள் வருவாள். அபயதானஞ் செய்தவ னுக்கு எல்லா அதிகாரச்செல்வமுமுண்டாம். (அபயம் = பிறர் அச்சம் ஒழித்தல்) தானிய தானஞ்செய்தவனுக்கு நித்தசுகமுண் டாம். பிரமம் என்பது வேதம். அதைத்தானஞ் செய்தவனுக்கு, பிரமம் எ-து. அழியாமுத்திகிடைக்கும். இவ்வெல்லாத் தானங் களிலும் பிரமதானமே சிறந்ததென்று, ஸ்மிருதிகளிற் கூறப்பட் டது. எ - று. காண்க.

இத்தானங்களைப்பெறுதற்குரியார்.

பஷிஷ்டியோத்தரம். భవిష్యోత్తరే "తథా ద్రవ్యవిశేషాంశ్చ దద్యాత్పాత్రే విశేషతః। ఆర్తానామన్నదానంచ గోదానంయజ్వనేతథా। తథా ప్రతిష్ఠాహీనానాం క్షేత్ర దానంవిశిష్యతే।సువర్ణంయాచకానాంచ విద్యాంచైవోర్థ్వరేతసాం।కన్యాంచైవానపత్యా నాం దదతాంగతిరుత్తమా." = விசேடமான பொருள்களை மிகத்தக் கோர்க்கே கொடுக்க வேண்டுவது. பசியால் பீடிக்கப் படுகிறவ னுக்கு அங்கமிடவேண்டுவது. விதிப்படி வேள்விசெய்து அவ் வேள்வித்தீயை வைத்துப் பாதுகாப்பவனுக்குக் கோதானஞ் செய்யவேண்டுவது. இருக்க இடமில்லாமல் அலைபவனுக்கு மனை நிலத்தைத் தானஞ்செய்யவேண்டுவது. வந்து இரப்பவனுக் குப் பொன்னைக் கொடுக்கவேண்டுவது. சுக்கிலத்தைக்கீழ்விடா தவன்=பிரமசாரிக்கு வேதம்சொல்லவேண்டுவது, மக்களில்லாத

வனுக்குக் கந்நிகாதானஞ் செய்யவேண்டுவது. இவ்வாறுதானஞ் செய்தவர்க்கு மேலான கதிகிடைக்கும். எ-று. காண்க.

வ்யகாந்தம். స్కాందె "శ్రాంతస్యయానంతృషితస్యపాన మన్నంక్షుధార్తస్య నరోనరేంద్ర! దద్యాద్విమానేనసురాంగనా భి స్సంస్తూయమానస్త్రిదివంసయాతి." = நடக்கமாட்டாது இளைத்தவனுக்கு வாஹனமும், தாகமெடுத்த வனுக்குத் தண்ணீரும், பசித்தவனுக்குச்சோறும், கொடுக்க வேண்டும். அங்ஙனம் கொடுத்தவன் தெய்வப்பெண்களால் துதிக் கப்பட்டு விமானமேறிச் சுவர்க்கம்புகுவன். எ-று. காண்க.

புண்ணியத்தைக்கொடுப்பது.

அங்கிரா. అంగిరాః॥ దేవతానాంగురూణాంచమాతా పితోస్తథైవచ! పుణ్యం దేయంప్రయత్నేన నాపుణ్యేచార్జితంక్వచిత్." = தேவர்களுக்கும், குருவுக் கும், தாய்க்கும், தந்தைக்கும், தான்செய்த புண்ணியத்தை முயன்றும் கொடுக்கவேண்டுவது. தான்தேடிய பாவத்தை யார்க் குங் கொடுக்கலாகாது எ-று. காண்க.

விஷ்ணு தருமோத்தரம். విష్ణుధర్మోత్తరే "యస్యోపయోగియద్ద్రవ్యం దేయంతస్యై వతద్భవేత్." =யாருக்கு எந்தப்பொருளுபயோகிக்கத்தக்க தாக விருக்குமோ? அவனுக்கு அந்தப்பொருள் கொடுக்கத் தக் கதாக விருக்கும். எ-று. காண்க.

தானத்திற்குத்தக்ககாலம்.

சாதாதபர். తాతాతపః॥ "అయనాదౌసదాదేయం ద్రవ్యమిష్టంగృహాదియత్! షడశీతిముఖేచైవ విమోక్షేచంద్రసూర్యయోః! సంక్రాంతౌయానిదత్తాని హవ్యకవ్యాని దాతృభిః! తానినిత్యందదాత్యర్కః పునర్జన్మనిజన్మని." = விருப்பமாகிய மனை முதலிய பொருள்களை அயனகாலமுதலிய வற்றில் எப்பொழுதுந் தானங் கொடுக்கவேண்டியது. ஷடசீதிமுககாலத்திலும் சந்திர சூரிய கிரஹண மோக்ஷகாலத்திலும் தானஞ் செய்யவேண்டும். சங்கிரமண காலத்தில் தேவகருமத்திலும் பிதிர்கருமத்திலும் எந் தப்பொருள் தானஞ் செய்யப்படுகின்றதுவோ? அந்தப்பொருள் ஒவ்வொருபிறப்பிலும்அவனுக்குநித்தமாய்க்கிடைக்கும்படிச் சூரி யன் கொடுக்கின்றனன். எ-று. காண்க.

அயனதிகள் வருமாறு.

விருத்தவசிட்டர். வృద్ధవశిష్ఠः॥ "మృగకర్కటసంక్రాంతీ ద్వౌతూదగ్దక్షిణాయనే।మిథునవేచతులామేషౌ తయోర్మధ్యాతతోపరాः। వృషవృశ్చికకుంభేషుసింహౌచైవయదారభः ॥ ఎతద్విష్ణుపదంనామ విష్ణుపాదాధికంఫలం। కన్యాయాం మిథునేమీనే ధనుష్యపిరవేర్గతిः। షడశీతిముఖాఃపోక్తా ష్షడశీతిగుణాఫలైः." = மேட சங்கிரமணம்=சித்திரை மாசப்பிறப்பு விஷுவத்து புண்ணியகாலம். விருஷபசங்கிரமணம் = வைகாசி மாசப்பிறப்பு விஷ்ணு பதபுண்ணியகாலம். மிதுநசங்கிரமணம் = ஆனிமாசப்பிறப்பு ஷடசீதி புண்ணிய காலம். கர்க்கடக சங்கிரமணம் = ஆடிமாசப்பிறப்பு தக்ஷிணாயன புண்ணியகாலம். சிங்கசங்கிரமணம்=ஆவணி மாசப்பிறப்பு விஷ்ணுபத புண்ணியகாலம். கந்தியாசங்கிரமணம்=புரட்டாசிமாசப்பிறப்புஷடசீதிபுண்ணியகாலம். துலாசங்கிரமணம்=ஐப்பசிமாசப்பிறப்பு விஷுவத்து புண்ணியகாலம். விருச்சிகசங்கிரமணம் கார்த்திகைமாசப்பிறப்பு விஷ்ணுபத புண்ணியகாலம். தனுஸ்ஸங்கிரமணம் = மார்கழிமாசப்பிறப்பு, ஷடசீதி புண்ணியகாலம். மகரசங்கிரமணம்=தைமாசப்பிறப்பு, உத்தராயண புண்ணியகாலம். கும்பசங்கிரமணம் = மாசிமாசப்பிறப்பு, விஷ்ணுபதபுண்ணியகாலம். மீனசங்கிரமணம்=பங்குனி மாசப்பிறப்பு ஷடசீதி புண்ணியகாலம். எ - று. காண்க.

விஷுவத்து - என்பது, ஆகாயத்திலிருக்கும் பசக்கிரத்தில் தலாமேஷராசிகள் நடுப்பாகத்தில் சமசூத்திர மாகவிருத்தலின் அவற்றிற்கு விஷு என்னும் அப்பெயர் உண்டாயிற்று.

விஷ்ணுபதம்-என்பது, இடபம், சிங்கம், விருச்சிகம், கும்பம், இந்நத் திரராசிகளுக்குச் சூரியன் புகும் காலத்தில் செய்த தானதி நல்ல கருமங்கள் விஷ்ணுபாத சந்நிதியிற் செய்ததிலும் அதிகபுண்ணிய பலத்தைத் தருதலினல் அந்த சங்கிரமணத்திற்கு விஷ்ணுபதம் என்னும் பெயர் வந்ததென்றுகூறுவர்.

ஷடசீதிமுகம்-என்பதனுள்."ஷட்டு.=ஆறு.அசீதி=என்பது. கணக்கிற்கு இடப்புறமிருந்து வலப்புறம் போதல் வழக்காதலின் எண்பத்தாறு என்றபடி. அவ்வளவுபாகம் அதிகமான புண்ணியத்தைத் தரும் காலமாதலின், மிதுனம், கன்னி, தனசு, மீனம், என்னும் உபயராசிகளுக்குச்சூரியன் புகும்காலம், ஷடசீதிமுகம் என்று கூறுவர்.

தக்ஷணயநம் - என்பது சூரியன் வடக்கிலிருந்து தென்றிசைக்கு நடக்கத் தொடங்குங்காலம். அதுகர்க்கடக சங்கிரமணம் ஆதலால் அப்பெயராயிற்று.

உத்தராயணம் - என்பது, சூரியன் தெற்கிருந்து வடக்கே செல்லத் தொடங்கும் மகரசங்கிரமணகாலத்திற்கு உத்தராயணம் என்றுபெயராம்.

இப்பன்னிரண்டு சங்கிரமணமும் ஸ்நாந்தானமுதலிய நல்ல கருமங்களைச் செய்பவர்க்கு அக்கருமபலத்தைக் காலவிசேடத்தால் அதிகரிக்கச்செய்தலினால் அவற்றிற்குப் புண்ணியகாலமென்று பெயராயிற்று.

பூரணையிற்செய்யுந்தானம்.

விஷ்ணுதருமோத்தரம். విష్ణుధర్మోత్తరె "వైశాఖీకార్తికీమాఘీ పూర్ణిమాతుమహాఫలా। పౌర్ణమాసీషుసర్వాసు మాసర్క్షసహితాసుచ। దత్తానామిహదానానాం ఫలంఅక్షయగుణంభవేత్." =வைகாசி, கார்த்திகை, மாசி, இந்த மூன்று திங்களின் பூரணைகள் விசேடபயனை யுடையனவாம். அன்றியும், ஏனை யொவ்வொருமாதங்களின் நக்ஷத்திரங்களோடு கூடிய எல்லாப் பூரணையிலும் கொடுக்கப்பட்ட தானத்திற்கும் பதின்மடங்குபயன் அதிகமாம். எ - று. காண்க.

மாதங்களின் நக்ஷத்திரமாவன. சித்திரைமீ க்கு சித்திரைநக்ஷத்திரம். வைகாசிமீக்கு விசாகநக்ஷத்திரம். ஆனிமீ க்கு கேட்டைநக்ஷத்திரம். ஆடிமீ க்கு பூராடநக்ஷத்திரம். ஆவணிமீ க்கு திருவோண நக்ஷத்திரம். புரட்டாசிமீ க்கு பூரட்டாதி நக்ஷத்திரம். ஐப்பசிமீ க்கு அசுவனிநக்ஷத்திரம். கார்த்திகைமீ க்கு கிருத்திகை நக்ஷத்திரம். மார்கழிமீ க்கு மிருகசிரநக்ஷத்திரம். தைமீ க்கு பூசநக்ஷத்திரம். மாசிமீ க்கு மகநக்ஷத்திரம். பங்குனிமீ க்கு உத்திரநக்ஷத்திரம். இம்மாதங்களின் பூரணை திதியில் இந்தநக்ஷத்திரங்களுக்குச் சரியாகச்சந்திர னிருக்கவேண்டுவது. இது சாந்திரமானத்தின்படி சொல்லப்பட்டது. ஆனால் சாந்திரமானத்தில் சிலகாலத்தில மேற்கூறிய நக்ஷத்திரங்களுக்குப் பின்னகூத்திரமாவது முன்னகூத்திரமாவதுசேர்ந்து வருவது முண்டு. ஆதலின், சௌரமான வகையாலாயினும் ஆகலாம். கூறிய நக்ஷத்திரங்களோடு கூடிய பூரணை திதியெல்லாம் பதின்மடங்கு புண்ணியந்தரத்தக்க புண்ணியகாலமாம். கஉ - மாதங்களின்பெயரும் அக்காரணத்தினாலேயே வழங்குகின்றது.

காலவிசேடத்தினால் தானத்தின்பலவிசேடம்.

மனு மனుస్మృతి "సహస్రగుణితందానం భవేద్వత్సంయుగాదిషు। కర్కటాద్యాదికంచైవ తథామన్వంతరాదిషు." = நான்கு யுகாதிகாலங்கள், பதினான்கு மன்வந்தராதி காலங்கள் இவைகளில் கொடுக்கப்பட்ட தானமும் செய்யப்பட்ட சிராத்தமுதலிய கருமங்களும் தான்கொடுக்கத்தக்கதின் பலனுக்காயினும் ஆயிரம்பங்கு அதிகமான பலனைக்கால பலத்தினால் கொடுக்கின்றன. எ-று. காண்க.

யாஞ்ஞவற்கியர். யாஜ்ஞவல்க்யஃ॥ "శతమిందుక్షయెదానం సహస్రంతుదినక్షయె। ఏషువెశతసాహస్రం వ్యతీపాతెషువినంతకం." = "சந்திரனுடைய க்ஷய" காலத்தில் தானஞ்செய்யின் நூறுமடங்கு பயனதிகமாம் "தினக்ஷய" காலத்தில் செய்யப்பட்டதானம் ஆயிரம்பங்கு அதிகபயனைத் தருகின்றது. விஷுவத்துப் புண்ணியகாலத்தில் செய்ததானம் இலக்ஷம்பங்கு அதிகமானபயனைத் தருகின்றது. வியதிபாதத்திற் செய்யப்பட்ட தானம் முடிவற்றபயனைத் தருகின்றது. எ-று. காண்க.

"ఇందుక్షయే" என்பதனுள், இந்த=சந்திரன். க்ஷயம்=குறைந்துபோதல். ஆகவே சந்திரனுடையகுறைவாங்காலமென்று, ஷஷ்டி தற்புருடசமாசார்த்தம்=ஆறும்வேற்றுமைத் தொகைப்பொருளாகின்றது. இது வாச்சியார்த்தம். இனிசந்திரன் ஏறுவதும் குறைவதுமில்லையாமாதலின் இச்சொற்பொருளீண்டுஓவ்வாது; இப்படிப்பட்டவிடங்களில், வாக்கியங்களுக்குக்கருத்துப்பொருத்தமாம்படி, அதற்கிலக் கியார்த்தத்தைக் கற்பிக்கவேண்டுகின்றது. இலக்கியார்த்தம்-எது, சொல்லுக்குரிய பொருளோடு சம்பந்தமுடைய வேறேர்பொருள். அல்லது. ஆகுபெயர்ப்பொருள். ஈண்டு இந்து என்னும் மொழிக்குச் சந்திரன் சொல்லுக்குரியபொருள். அவனெடு சம்பந்தமுடைய கலைகளேலக்ஷியார்த்தமாம். அதனுடைய க்ஷயம் என்னவே. அமாவாசையென்று பொருளாகின்றது. அல்லது, சந்திரனுக்குச் சம்பந்தமானது தின நக்ஷத்திரங்களாம். அதனுடைய குறைவு என்னவே. ஒரு இராப்பகலில், = சூரியோதயமுதல் மறுபடியும் சூரியோதயத்துக்குள் மூன்று நக்ஷத்திரங்களின் சமக்ஷத்திரத்திற்குச் சந்திர சஞ்சாரம் உண்டாம்காலம். (உதாரணம். காலை-உ - ராழிகை,அசுவனி. பின்பு, ரு - ராழிகை, பரணி. மேல் - மூன்று ராழிகை, கிருத்திகை. ஆக ராழிகை. சூ0. இப்படிப்பட்ட நாளாம்). அதுவுமன்றி, சந்திரனுக்குச் சம்பந்தமானது, அச்சந்திரனது நித்தியகதி, அது நாளொன்றுக்கு சராசரி அ00 - கலைகளிருக்கவேண்டுவது. அக்கலைகள் க00 - வரையில் ஏறுவது முண்டு, எ00 - வரையில் குறைவதுமுண்டு, அங்ஙனம்குறைந்தகாலம் "இந்துக்ஷய" மென்று கூறப்படும். அப்போது, நித்த நக்ஷத்திரங்களினுடைய பரமராழிகை = ஆதியந்த மொத்த ராழிகை - சூ0 - க்கு ஆயினும் அதிகமாகின்றது. (உதாரணம். ஞாயிற்றுக்கிழமை அசுவனி, ருஅ - திங்கட்கிழமை பரணி, சூ0 - செவ்வாய்க்கிழமை பரணி, க - ஆதியந்த ராழிகை-சூரு - ஆக; ஞாயிறு, திங்கள், செவ்வாய் என்னும் மூன்று வாரத்திற்கும் பரணி, சம்பந்தப்பட்டது. அவற்றுள் திங்கட்கிழமையை இந்துக்ஷய புண்ணிய காலமென்றும் கூறப்படும். மேற்கூறியபடி நக்ஷத்திர ஏற்றக்குறைவு காலங்களை அப்போதைக்கப்போது பஞ்சாங்கத்துள் பார்த்துக்கொள்ள வேண்டும். இம்மூவகையான லக்ஷியார்த்தத்தில் யாஞ்ஞவற்கியர்கருதியது யா

து? என்றுவிசாரிக்கு மிடத்தில் மூன்றுமெனச்சிலர், இரண்டேயெனச்சிலர், ஒன்றெனச்சிலர், நிச்சயவகையின்றிக்கூறுகின்றனர். யாஞ்ஞவற்கியமிருதிக்கு வியாக்கியானஞ் செய்த, விஞ்ஞானேயர்கி மூதலியோர் இவ்விடயங்களைத் தேற விசாரித்தாரில்லை ஆதலின், இந்துகூயமென்பதோடு மூலத்தில் தினகூயம் என்று கூறப்பட்டுள்ள அத்தினகூயமென்பதற்கு எல்லாமிருதியிலுங் கூறப்பட்டுள்ள விலக்கணத்தை இவ்வுரையாசிரியரே உதகரித்துளழுதுகின்றனர். அதன்றேக்கத்தால், இப்போது, மேற்கூறிய மூன்றுவகை உரையில் இரண்டாவது உரையையே சிறந்ததாகக் கொள்வது யுத்திசம்மதமாகவிருக்கின்றது.

வியதிபாதத்தில்தானம்.

பராத்துவாசர். भरद्वाजः॥ "व्यतीपातेवैधृतौच दत्तमक्षयकृद्भवेत्." = வியதீபாதத்திலும் வைதிருதியினும், (எனவே அந்தயோகத்தில்) அல்லது (மஹாபாதகாலத்தில்) கொடுக்கப்பட்டது கெடாதபயனைக் கொடுப்பதாம். எ-று. காண்க.

விஷ்ணு. विष्णुः॥ "दिनक्षयेदिनच्छिद्रेपुत्रजन्मादिकेपिच।आदित्यादिग्रहाणांच नक्षत्रैश्चसहासंगमे। पञ्चैतेपुण्यकालोयं ज्योतिर्विद्भिर्विचार्यच। तत्रदानादिकंकुर्या दात्मनःपुण्यवृद्धये."=தினகூயகாலமும், தினசித்திரகாலமும், மக்கள்பிறத்தல் முதலியகாலமும், சூரியன் முதலியகிரகங்கள் அந்தந்த நகூத்திரங்களோடு கூடுங்காலமும், புண்ணியகாலமென்று உணர்ந்து கொள்ளத்தக்கது. சோதிட முணர்ந்தவர்களால் அந்தந்தகாலங்களைத் தெரிந்துகொண்டு, அப்பொழுது தானமுதலிய நல்லகருமங்களைத் தனக்குப் புண்ணியத்தை விருத்திசெய்து கொள்ளும்படிக்குச் செய்யவேண்டுவது. எ-று. காண்க.

தினகூயவிலக்கணம்.

வசிட்டர்கூறினர். वशिष्ठः॥ "एकस्मिन्सावनेत्वह्नि तिथीनांत्रितयंयदा। तदादिनक्षयंप्रोक्तं श्रुतसाहस्रकंफलं."=ஒருசாவனதினத்தில்மூன்றுதிதிகள் எப்பொழுதுசேருகின்றனவோ? அப்பொழுது தினகூயமென்று கூறப்பட்டது. அந்தகாலத்தில்செய்தஸ்நானதானமுதலிய நல்லகருமங்களிற்கல். இலகூம் பங்கு அதிகபயன் உண்டாம். எ-று. காண்க.

சாவனதினம். என்பது, சூரியோதயமுதல் மறுபடியும் சூரியோதயம் நிகழுவரையிலாகிய ஒரு அஹோராத்திரத்திற்கு மொத்தநாழிகை அறுபது கொண்டது ஒருசாவனதினமாம்.

தினச்சித்திரவிலக்கணம்.

சோதிடநூலுள். జ్యోతిశ్శాస్త్రే॥ "తిథ్యృక్షయోగకర్ణా ఖాదిశశిపర్వ ణిఃl సదృశోదివసచ్ఛిద్ర సమాఖ్యాపాఠభార్గవః." = திதியும் நக்ஷத்திர மும் ஒரோகாலத்தில் முடிவதும், திதியும் யோகமும் ஒரோகாலத் தில் முடிவதும், யோகமும் நக்ஷத்திரமும் முடிவதும், திதியோ கம்நக்ஷத்திரமும் ஒன்முகமுடிவதும், ஆகியயிப்படிப்பட்டகாலம், சந்திரன்பருவகாலத்தோடு ஒத்தனவாம், இவற்றைச் சித்திரகால மென்றும் சமகாலமென்றும் சுக்கிரன் கூறினர். எ-று. காண்க.

சேதாதிகாலம்.

சோதிடநூல். జ్యోతిశ్శాస్త్రే॥ "ఋక్షాదిసంగమోపేతంతచ్ఛేదత్వష్టలైర్యు తం। పలైష్షోడశభిర్యుక్తం నాడికాద్వితయంయుగే। ఛేదాదిసమయేదప్రోక్తో దానేనంత ఫలప్రదః." = நக்ஷத்திரத்தினுடைய கலப்போடு கூடியிருப்பது, அதனுடைய சேதங்களின் பலத்தோடு கூடியிருப்பது, ஆகியஇவ் விரண்டிலும் இரண்டுநாழிகை பதிறுவிநாடிகள் புண்ணியகால மென்று கூறப்பட்டது. அக்காலத்தில் தானஞ்செய்தால் முடி வில்லாத பயனுண்டாம். எ-று. காண்க.

திதி, நக்ஷத்திரம், யோக முதலியவற்றிற்குக் கூடுங்காலம் தொடக்கத் தில் நாழிகையிரண்டும் விநாடிபதிறு. சேதகாலம் என்பது, விட்டுப்போ ம்பொழுதாகிய மோக்ஷகாலம்முடிவில் இரண்டுநாழிகை பதிறுவிநாடியாம். (உதாரணம்) ஞாயிற்றுக்கிழமை, சஷ்டி ஒன்பதுநாழிகை. சனிக்கிழமை பஞ் சமி ஐந்துநாழிகை. அச்சனிக்கிழமை ஐந்துநாழிகை முதல் ஏழுநாழிகை-பதிறுவிநாடி வரையில் ஷஷ்டி சங்கமகாலம், ஞாயிற்றுக்கிழமை, ஏழுநா ழிகை நாற்பத்துநான்கு விநாடிமுதல் பத்தாவது நாழிகை தொடக்கவரையி லும் ஷஷ்டிசேதகாலமாம். இவ்வாறு மற்றைய வெல்லாவற்றிற்கு முணர்ந்து கொள்ளவேண்டும்.

தானத்திற்கு நிஷேதகாலம். நிஷேதம்=விலக்கு.

சங்கலிகிதர். శంఖలిఖితౌ॥ "ఆహారంమైథునంనిద్రాం సంధ్యాకాలేషువ ర్జయేత్। కర్మాధ్యయనంచైవ తథాదానప్రతిగ్రహౌ." = சந்தியாகாலத்தில் உண்டி, உறக்கம், புணர்ச்சியும், சந்தியாவந்தனமொழிய வேறு கருமங்களும், வேதமோதலும், தானம் கொடுத்தலும், வாங்குத லும் ஆகிய இவற்றை விட்டுவிடவேண்டுவது. எ-று. காண்க.

இராத்திரி தானங்கூடாது.

ஸ்கந்தபுராணம், స్కాందపురాణే॥ "రాత్రౌదానంనకర్తవ్యంకదాచిదపి కేనచిత్। హరంతిరాక్షసాయస్మా త్తస్మాద్దాతుర్భయావహం। విశేషతోనిశీథతు నశుభంకర్తృశర్మణె। అతోవివర్జయేత్ప్రాజ్ఞో దానాదిషుమహానిశాం." = இரக்காலங்களில் எப்போதும் எவ்விதத்தும் தானம் செய்யலாகாது. ஏன் எனில்? அந்தத்தானபலனை இராக்கதர்கள்கொள்ளுவார்கள். ஆகலால் கொடுப்பவனுக்குப் பயமுண்டுபண்ணும். அவற்றுள்ளும், அரையிருளில் எந்தச்சுபகருமங்களும் சுகங்கொடுக்க மாட்டாது. ஆகலால், அறிவுடையோன்தானமுதலியகருமங்களில் நடுஇரவை விட்டுவிடவேண்டியது. எ - று. காண்க.

அதன் ஓழிபு.

அங்கு மேற்கூறியதிற் சிறப்பாகத் தேவலர்கூறினர். దేవలः॥ "రాహుదర్శనసంక్రాంతి యాత్రాదౌప్రసవేపిచ। దానంనైమిత్తికంజ్ఞేయంరాత్రావపి తదిష్యతే." = இராகுதரிசனம் = கிரஹணகாலம், சங்கிராந்தி= சூரியன் ஒவ்வொரு இராசியிலும் பிரவேசிக்குங்காலம், பிரயாணமுதலிய செய்யும்காலம், பிள்ளைபெறுதல், இப்படிப்பட்ட நிமித்தங்களுண்டானால் இரவிலும் நைமித்திக தானங்கள் உடன்பட்டன வென்று உணரத்தகுன. எ-று. காண்க. இவ்விடத்து, "சங்கிராந்தி" என்றதனால்மகரசங்கிரமணம்=தைமாசப்பிறப்பு, கர்க்கடக சங்கிரமணம் = ஆடிமாசப்பிறப்பு மாத்திரமென்றுணரத்தக்கது. ஏன் எனில்? வேறுமிருதிகளில் "ముక్త్వామకరకర్కటా." கர்க்கட சங்கிரமணம், மகரசங்கிரமணம். இவ்விரண்டினையுமொழித்து, ஏனைய வெல்லாச் சங்கிர மணத்திலும் இராக்காலத்தில் ஸ்நானதானங்கள் செய்யலாகாது என்று விலக்கப்பட்டிருக்கின்றன.

தானத்திற்குரிய இடம்.

மச்சபுராணம். మత్స్యపురాణే॥ "ప్రయాగాదిషు తీర్థేషు పుణ్యేష్వాయతనేషుచ। దత్వాచాక్షయమాప్నోతి నదీపుణ్యవనేషుచ." = பிரயாகைமுதலிய புண்ணியதீர்த்தங்கள், புண்ணியகரமான தெய்வ கேஷத்திரங்கள் புண்ணியநதிகள், புண்ணியவனங்கள், இவற்றில் தானங்களைச் செய்து கெடாத பயனை அடைகின்றன். எ - று. காண்க.

வியாசர். வ்யாஸः॥ "கங்காத்வாரேப்ரயாகேச புஷ்கரே। மகரேசாட்டஹாசேச கங்காஸாகரஸங்கமே। குருக்ஷேத்ரேகயாதீர்த்தேததாசாமரகண்டகே। ஏவமாதிஷுதீர்த்தேஷு தத்தமக்ஷயதாமியாத்." = கங்காத்துவாரம்=இமயமலையில் கங்கைபிறக்குமிடம், பிரயாகை = கங்கையமுனைகூடும் இடம், அவிமுக்தம்=எந்தஇடத்தில் இறந்தவருள் முத்தியடையாதவனில்லையோ? அது. சிவனாலும் ஞானிகளாலும் விடப்படாதது எனவுமாம். விசேடமாக முத்தியையடைந்தது எனினுமமையும். அதுகாசியாம். புஷ்கரம் = பிரபாசகூஷத்திரம். அல்லது, சரச்சுதியாற்றங்கரையி லுள்ளதுமாம். இல்லையேல் பிரகற்பதி யொவ்வோராசியில் இருக்குங்கால் ஒவ்வொருயாறு புஷ்கரம் என்னப்படும். அதுவருமாறு,குருதுலாத்திலிருக்கும்போது காவேரி புஷ்கரம் - என்றாற்போலவன. மகரகூஷத்திரம் = கஜேந்திரன் முத்தியடைந்த இடம். அட்டகாசம் = சிவன் நகைத்த இடம். இது சிவஹாஸகூஷத்திர மென்னவும் படும். அது புராணபேதப்படி, இமயமலைக்கீழ்ச் சிகரம், திருத்தணிகை, மதுரை யாதி இடம். இதைத்திரிபுரதகனகூஷத்திர மெனவுங் கூறுவர். கங்காசாகரசங்கமகூஷத்திரம் = வங்காளம் காளிகட்டம். குருகூஷத்திரம், குச்சிலிகாட்டுக்கும் டில்லிக்கும் நடுவே பாரதயுத்தம்நடந்தபெருவெளி. கயாதீர்த்த மென்பது. பல்குனி நதி விஷ்ணுபாதகூஷத்திரமாம். அமரகண்டகம் = தேவர்கட்கு அரக்கர் துன்பமொழித்த உஞ்சேனமாகாள கூஷத்திரம். அது உச்சயினிமஹாகாளி என்று வழங்குகின்றது. இவைமுதலிய கூஷத்திரங்கள் எனவே யமுனை, கோகுலம், பிருந்தாவனம், அயோத்தி, பிரமகபாலம், கேதாரம், அரித்துவாரம், இரேவணம், நாராயணம், சுவாலாமுகி, கண்டகி, நருமதை, ஓங்காரம், சந்திரபாகை, விரூபாக்கம், துவாரகை, சோமநாதம், அவந்தி, பூநாபி, சகந்நாதம், விந்தவாசினி, ஸ்ரீ சைலம், கோதாவிரி, கிருஷ்ணை, கோகரணம், திருவேங்கடம், கசாரணியம்,சாரச்சுதம், ரிஷியசிருங்கம், காளபுரம், திருக்காளத்தி, திருக்காஞ்சி, ஆலவனம், சிதம்பரம், அண்ணாமலை, காவேரி, கமலாலயம், திருவானைக்கா, ஸ்ரீ ரங்கம், திருவிடைமருது, அனந்தசயனம்,தாம்பரவருணி,இராமேச்சுரம், முதலியதிருப்பதிகளுமாம். இவற்றுள்ளும் செய்யப்பட்ட தானகருமங்கள் கேடாதபயனைத்தரும். எ - று.

தானவிதி முற்றிற்று.

இனி ஏற்றல் வருமாறு.

அவ்வேற்றல் விடயத்தில் வேதத்தாற் கூறப்பட்ட விதி முன்னர்க் கூறப்பட்டது. என்னை? "द्रव्यमार्ज्यत्र ब्राह्मणंप्रति गृह्णीयात्." = பொருளைத் தேடவேண்டின வேதியன் தான மேற்றலைச் செய்யவேண்டுவது. எ-று. காண்க. அவ்விடத்து வேள்வி செய்வித்தலில் முன்சம்பந்தப் பட்டிருந்த இந்தவிடயம் ஏற்றலிலும் நேரிடுமெவ்வளவும் கூட்டத்தக்கது. என்றுணர்க.

அற்றேல், ஏற்றல் என்பது மனுவால் இழித்துக் கூறப்பட்டது. என்னை? மனு, मनुः॥ "प्रतिग्रहंतु प्रत्यवरस्तुपूःप्रस्त्यगर्ह्यतः." = ஏற்றலென்பது, எவற்றினு மிழிந்தது வேதியனுக்கோ வெனில்? அது நிந்திக்கப்பட்டது. எ-று. எனில்?

ஈனக்கொடை யாகாதென்பது.

அங்ஙனமன்று. தாழ்ந்ததாகிய ஏற்றல்வேதியனுக்குக்கூடா தென்ற அவ்வசனத்தா லுண்டாகிய பழிப்பு நீசரால் ஒன்றும் பெறலாகாதென்று கூறியவாறுகக்கொள்ளத் தக்கது. அதுமேற் கூறும் மனுவசனத்தாலேயே விளக்கப்பட்டது. என்னை? மனு. மனுः "प्रतिग्रहीतास्यं चूद्रादाददन्त्यजन्मनः." சூத்திரனும் கடையனும் தானமேற்றல் பழிக்கப்பட்டதாம். எனவே நீச னிடத்தில் வாங்கப்படாது என்பது. தக்கவராற் பெறுகையோ வெனில்? அது அவரானேயுடன்பட்டுவிதிக்கப்பட்டது. என்னை? மனு.மனுः "अशुद्धाच्चप्रतिग्रहः." = பரிசுத்தன் கையினின்றும் பெறுதல்கூடும். எ-று. காண்க. ஏற்றல்=வாங்குதல்.

ஏலாமையின் சிறப்பு.

பழிக்கப்படாத ஏற்றலே யாயினும். அவ்வேற்றலைச் செய் தனினும், செய்யாதிருத்தலே சிறந்தது. அங்ஙனம், யாஞ்ஞவற் கியர் கூறினர். வருமாறு. याज्ञवल्क्यः "प्रतिग्रहसमर्थोपि नाप्तैश्वर्यः प्रतिग्रहं। यैलोकादानशीलानां सतानाप्नोतिपुष्कलां." = தானத்தைப் பெற்று அதனல் வருங்குற்றத்தை நீக்கிக்கொள்ள வல்லவனே யாயினும், யார்? தானம் வாங்குதலேயெழித்திருக்கின்றானே? அவன் எப்பொழுதும் பலபெரிய தானங்களைச் செய்துகொண்

டே யிருக்குங் கொடையாளருக்குளந்தபுண்ணியலோகம் கிடைக்குமோ? அந்தச்சிறந்த புண்ணியலோகத்தைப் பெறுவன். எ-று. காண்க.

ஏற்றல் சிறப்பு.

அற்றேறல், யமன் ஏற்றலைச் சிறப்பிக்கின்றனர். வருமாறு. యమః "ప్రతిగ్రహోధ్యాపనయా జనానాంప్రతిగ్రహంశ్రేష్ఠతమంవదంతి। ప్రతిగ్రహాచ్ఛ్రుత్యతిజప్యహోమైర్వ్యాత్తుపాపాన్నపునంతివేదాః." = ஏற்றல், ஓதுவித்தல், வேட்பித்தல், என்னு மிம்மூன்றனுள், ஏற்றல் மிகச்சிறந்தது எனப்பெரியர்கூறுவர். ஏனெனில்? செபம், ஹோமம், இவற்றைச்செய்தால் இந்த ஏற்றலால் வரும் பாபத்தை விலக்கிக்கொண்டு சுத்தனுவன், வேட்பித்தலா லுண்டாகிய பாவத்தை வேதமும் ஒழிக்கலாற்றுது. எ-று.

மனு இம்முறைக்கு வேறுபடாதுகூறினர். வருவாறு. మనుః। "జపహోమైరపైత్యేనో యాజనాధ్యాపనైఃకృతం। ప్రతిగ్రహనిమిత్తంతు త్యాగెనతపసైవచ." = செபத்தினலும் ஹோமத்தினலும் வேட்பித்தலின் பாபமும் ஓதுவித்தலின் பாவமும் ஒழிகின்றது. ஏற்றலால் வரும் பாபமோ? கொடுத்தலாலும் தவஞ்செய்தலாலும் ஒழிகின்றது. எ-று. என்னையெனில்?

இங்ஙன கூறியவாறு குற்றமன்று. இருபிறப்பாளரினின்றும் ஏற்றுக்கொள்வது சிறந்தது. சூத்திரனினின்றும் ஏற்றுக்கொள்வது பழிக்கப்பட்டது என்ற தேற்றவுனையெளிது கூறலாமாயிருத்தலின்.

அற்றேறல், தக்கோரினின்றும் பெறுவதிலும் யாதோ? ஒருபாவமிருப்பதாகத் தோற்றுகின்றது. என்னை? ஏற்றலைச் சிறப்பித்துக் கூறிய இயமன் வசனத்திலும். "ప్రతిగ్రహోచ్ఛ్రుత్యతిజప్యహోమైః" = செபத்தாலும் ஹோமத்தாலும், ஏற்றலாலாகிய குற்றத்தினின்றும் சுத்தனாகின்றான் என்றலின்; எனின்?

ஆம், வேதத்தை முற்றுமுணர்தல் முதலிய ஆற்றலில்லாதவனுக்கு ஏற்றலாலே குற்றம் ஒருதலையாகவே யிருக்கின்றது. ஒருதலை=நிச்சயம். இக்கருத்தை யுள்ளிட்டு வேதமுற்றுமுணர்ந்தவனுக்கு ஏற்றலால் குற்றமில்லையென்று ஸ்காந்த புராணத்துட்

கூறப்பட்டது. வருமாறு. స్కాందే॥ "షడంగవేదవిద్విప్రో యదికుర్యాత్పరిగ్రహం। నసపాపేనలిప్యేత పద్మపత్రివవాంభసా." = ஆறு அங்கநூலோடுங் கூடிய வேதமுணர்ந்த வேதியன் தானமேற்றால் தாமரையிலை நீரோடு கலவாதவாறுபோல பாவத்தோடு கலப்பதில்லை. எ-று. காண்க.

இந்தநியாயமே வேட்பித்தலுக்கும் ஓதுவித்தலுக்கும் கொள்ளத்தக்கது. எவனல் வேள்வி செய்விக்கப்படாதோ? அவனல் வேள்வி செய்வித்தல், கூலிக்கு வேதமோதுவித்தல், தகாதவனல் தானமேற்றல், இவற்றில் பாபம் மிகுதியாகவரும். தன்னிடத்தில் சிறிது அதிகாரம் சிதறிக்கிடந்தால் நடத்தத்தொடங்கினவனுக்குச் சிறிதுபாவம் உண்டாம். சிறந்தஅதிகாரமுடையோன் விதிக்கப்பட்டதாகிய வேட்பித்தல், உத்தமமான வோதுவித்தல், சுத்தமாகிய ஏற்றல் இவற்றிற் பிரவேசித்தலால் யாதொரு பாவமும் இல்லை. இதுவே புணர்வுடைமையாம்.

ஏற்றலினுயர்வுதாழ்வு வருமாறு.

வியாசர். వ్యాసः॥ "ద్విజాతిభ్యోధనంలిప్సేత్ప్రశస్తేభ్యోద్విజోత్తమः। అపివా జాతిమాత్రేభ్యో నతుకూదార్థికంచన." = இருபிறப்பாளர் மூவருள்ளுஞ் சிறந்த அந்தணன் ஒருவன் தனத்தைத் தானமாக வேற்றலுக்கு அதிகாரியாவான். அவ்வந்தணன் அச்சிறந்த விருபிறப்பாளராலேயே அப்பொருளைப் பெற விரும்பவேண்டும். இல்லையேல் சாதிமாத்திரையால் இருபிறப்பாளரா யிருப்பினும் அவரிடத்திலாவது அவ்விருப்பஞ் செலுத்தலாம். எவ்வளவு துன்பம் வந்தபோதிலுஞ் சூத்திரனல் பொன்னைப்பெற விரும்பலாகாது. எ-று. காண்க.

ஓழிபு. "சதுர்விம்சதிமதம்."

தக்ககொடையாளர் கிடையாவழி தகாதாரிடத்திற் பெறுதலும் கூடுமென்று. "சதுர்விம்சதிமதம்" என்னு நூலுள் விதிக்கப்பட்டது. చతుర్వింశతిమతే॥ సదాచప్రతిగృహ్ణీ యాద్బ్రాహ్మణేభ్యస్తతోనృపాత్। తస్యస్తువైశ్యాచ్ఛూద్రాద్వాశంఖస్యవచనంయథా." = எப்பொழுதும்வேதியன் வேதியனிடத்திலேயே ஏற்றல் செய்யவேண்டுவது. கிடைப்பதரிதாயின் பின் அரசனற்பெறுக. அஃது மருமையேல் மேல்

வைசியனுற்பெறுக. அதுவுங் கிட்டாவிட்டால் மூடிவில் சூத்திரனுலேனும் பெறுக; என்று சங்கர் கூறினர். எ-று. காண்க.

சூத்திரனுற் பெறுவதினும் ஏற்றக்குறைவு.

அங்கிரா. అంగిరాः॥ "యత్తురాశీకృతంధాన్య మితిక్షేత్రేధవాభవేత్। శూద్రాదపిగృహీతవ్య మత్యుద్ధికసఘాపణం." = நெற்களத்திலேனும் மனையிலேனும் தானியம் குவியல் செய்திருக்கின் அதனிடத்திருந்து சூத்திரன் கொடுத்ததாமாயினும் பெறலாம் என்று ஆங்கிரசம் கூறிற்று. எ-று. காண்க,

அதன் விசேடம்.

வியாசர். వ్యాసః॥ "కుటుంబార్థేతుసచ్ఛూద్రాత్ప్రతిగ్రాహ్యమయాచితం। క్రత్వర్థమాత్మనైవైవ నహియాచేతకర్హిచిత్." = சூத்திரருள்ளுஞ் சிறந்த உத்தமனேல் அவன் இரவாமலே வலிது கொடுப்பானுயின் அந்த பொன்னைக் குடும்பப் பாதுகாப்பின் பொருட்டு ஏற்றுக் கொள்ளலாம். வேள்வியின் பொருட்டாயினும் தன்சீவனப் பொருட்டாயினும் எத்துணையுங் கொள்ளலாகாது. எ-று. காண்க.

மனுவும். మనురపి॥ "నయోగార్థంధనంశూద్రాత్ ద్విజోభిక్షేతధర్మవిత్। యజమానోపిభిక్షిత్వా చండాలసమోభవేత్." = தருமத்தை அறிந்த விருபிறப்பாளன் சூத்திரனுலும் பொன்னை வேள்வியின் பொருட்டு இரக்கலாகாது. வேள்வித் தலைவனுயினும் அங்ஙனம் இரத்தலைச் செய்தால் இறந்தபின்பு சண்டாளனுகப்பிறப்பன். எ-று. காண்க.

மேற்பெறுகையின்காலம்.

அங்ஙனம் சூத்திரன் கைப்பொருட்டானம் பெறுங்காலம் காந்தத்துட் கூறப்பட்டது. స్కందపురాణే॥ "దుర్భిక్షేదారుణేప్రాప్తేకుటుంబసీదతిక్షుధా। అసతఃప్రతిగృహ్ణీయా త్పతితాద్గ్రహమతంద్రితః." = கொடியபஞ்சகாலம்வந்தபோதும், குடும்பம்பசியால்நொந்து இளைத்தகாலத்திலும், சாக்கிரதையுடையனுய்த் தகாதானிடத்திலேனும் தானமேற்றலாம். எ-று. காண்க.

யாஞ்ஞவற்கியரும். యాజ్ఞవల్క్యోపి "ఆపద్గతస్సంప్రగృహ్ణన్బుంజానోవాయతస్తతః। నలిప్యతేనసాఃపోజ్వలనార్కసమప్రభః." = ஆபத்தையடைந்தவன்தகாதவனிடத்து ஏற்றலும், கிடைத்தவிடத்தில்புசித்தாலும்

விப்பிரனுதலின் தீயோடும் சூரியனோடும் ஒப்பாவன் அவனுக் குப்பாவம் வருவதில்லை. எ-று. காண்க.

மனு. மனுः "వృద్ధౌచమాతాపితరౌ సాధ్వీభార్యాసుతశ్శిశుः। అప్యకార్యశ తంకృత్వా భర్తవ్యామనురబ్రవీత్। జీవితాత్యయమాపన్నో యోన్నమత్తియతస్తతः। ఆకా శమివపంకేనన సపాపెనలిప్యతే." = முதியதாய் தந்தையர், பதிவிரதை யாகிய மனையாள், சிறுகுழவியாகிய மகன். இப்படி சேரிடப்பெற் றுடையவன் செய்யத்தகாதன நூறுகருமம் மாயினுஞ் செய்து அவர்களைக் காக்கவேண்டுவது; என்று மனுகூறினர். உயிர்துறக் கத்தக்க ஆபத்தை யடைந்தவன் கிடைத்தவிடத்தில் அன்னம்புசி த்தால் ஆகாயம் சேற்றூற் பூசப்படாதவாறுபோல அவன் பாவத் தாற் பூசப்படுகிறதில்லை. எ-று. காண்க.

ஏற்றலி னளவை.

கருடபுராணத்தில் ஏற்கத்தக்க பொருள் இவ்வளவு இருக்க வேண்டு மென்னும் அளவை குறிக்கப்பட்டது. గరుడపురాణే: "యా వతాపంచయజ్ఞానాం కరణంనియతంభవెత్। తావద్గ్రాహ్యంసదైవస్యాత్కుటుంబస్యాత్మ నస్తథా." = எவ்வளவு திரவியத்தால் ஐம்பெரும் வேள்விகளைச் செய்வது தவறுமல் நடக்குமோ? அவ்வளவுதிரவியத்தை யெப் போதும் கொள்ளத்தக்கது. அவ்வாறே குடும்பத்திற்கும் தனக் கும் இன்றியமையாவளவு பெற்றுக்கொள்ள வேண்டுவது. எ-று. காண்க.

வியாசர். వ్యాసः "ప్రతిగ్రహాధికరుచి ర్యాత్రార్థంతుసమాహరెత్। స్థిత్యర్థ మధికంగృహ్ణ న్బ్రాహ్మణోయాత్యధోగతిం। వృత్తిసంకోచమన్విచ్ఛె న్నెహేతధనవిస్తరం। ధనలాభెప్రవృత్తస్తు బ్రాహ్మణ్యాదెవహీయతే."=தானமேற் பதில் விசேடம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்னும் இச்சையிருந்தால் புண் ணியகேஷத்திர தீர்த்தயாத்திரையின்பொருட்டுப் பெற்றுக்கொள் ளலாம். தான் ஓரிடத்தில் சுகமாயிருக்கும் பொருட்டு விசேட மாகப் பெற்றுக்கொண்டால் அந்த வேதியன் அதோகதி=நர கத்தையடைவன். சீவன உபாயத்தைச் சுருக்கமாகவே வைத் துக்கொள்ள விரும்பவேண்டுவது. பெரும்பொருளை விரும்ப லாகாது. தனலாபத்திற் பிரவேசித்தவனைலோ? பிராமணீகத் தில் நின்றும் பிரஷ்டனாகின்றனன். எ-று. காண்க.

பாடவேறுபாடு. பாடாந்தரே "ப்ரதிக்ரஹாயாருசிஸ்யாத்" ஸ்திர்யர்தாததிகம்ருஹ்ணீ" என்பனபாடமாயின், தானமேற்பதிலே விருப்பமின்றியிருக்கவேண்டுவது. ஆலஸ்யாத்தினையின்பொருட்டுப்பெற்றுக்கொள்ளலாம். தன்னிடத்திலே தானேஇருக்கும்பக்ஷத்தில் அதற்குவேண்டுவதற்காயினும் அதிகமாகப்பெற்றுக்கொண்டால் அவன் அதோகதியடைவன். என்று பொருளுரைத்துக்கொள்க.

தானமேலாத காலமும் இடமும்.

ஆபத்து இல்லாதகாலத்தில் அரசனிடத்தில் தானம் ஏற்கலாகாது என்று யாஞ்ஞவற்கியர் கூறினர். யாஜ்ஞலக்யஃ॥ "நராஜ்ஞஃ ப்ரதிக்ருஹ்ணீயா ல்லுப்தஸ்யோச்சாஸ்த்ரிவர்தினஃ। ப்ரதிக்ரஹோஸூனிசக்ரி த்வஜிவேச்யானராதிபாஃ। துஷ்டாதஶகுணம்பூர்வா தூர்வாதேயத்தோத்தரம்."=உலுத்தன், சாத்திர எல்லையைக்கடந்து நடப்பவன், இப்படிப்பட்ட அரசனிடத்திலிருந்து தானம்பெறலாகாது. ஏற்றல் விடயத்தில் * சூனி, சக்கிரி, துவஜி, வேசி, அரசன், [என்பவருள்] பின்னவனுக்காயினும் முன்னவன் பதின்மடங்கு அதிகபாவமுடையோன் எ-று. காண்க.

அரசனற்பெறுதலே யாகாதென்பது.

சம்வர்த்தர். ஸம்வர்தஃ "ராஜப்ரதிக்ரஹோகோரோமத்ஸ்யாஸ்வாதோவிஷோபமஃ। புத்ரமாம்ஸம்வரம்போக்தும் நதுராஜப்ரதிக்ரஹஃ"=அரசனற் பெறுகிறதானம் மிகவும் அச்சத்தை விளைப்பதாம். தேன்போலும் மிகவினிமையுள்ளதாயிருக்கும் ஆயின் விடத்தைப்போலும் நாசத்தைச் செய்யும். உண்டிக்கும் வழியில்லாவழித்தான் பெற்ற பிள்ளையின் உடம்பிலுள்ள தசையாவது சிறந்ததாம். அரசனற் பெறுவது சிறந்ததல்லவாம் எ-று. காண்க.

ஸ்காந்தம். ஸ்காந்தே "மருதேசேநிருஷகே ப்ரஹ்மர்ஷிஸ்த்வமாகதஃ। ராஜப்ரதிக்ரஹாத்புத்தி புனர்ஜன்மனவிந்ததி। ப்ராஹ்மண்யம்யதிபரித்யஜ்ய த்ரவ்யலோபேனமோஹிதஃ। விஷயாமிஷலுப்தஸ்து குர்யாதாராஜப்ரதிக்ரஹம்। நரகேகோரவேகோரே தஸ்யைவபதனம்த்ருவம்। வ்ருக்ஷோதவாக்னினாதக்தஃ ப்ரரோஹந்திஷுனாகமே। ராஜப்ரதிக்ரஹாத்தக்தா நப்ரரோஹந்திகர்ஹிசித்." = நீர்நிழல் பச்சையற்ற வறும்பாலைநிலத்திற் பிரமராக்ஷச

---

* சூனி. என்பதனுள் - சூநா=சீவஹிம்சை அதைச்செய்பவன் சூனி. சக்கிரி=சக்கான்=எண்ணெய் சமைப்போன். துவஜி=கள்முதலியன விற்பவன். அவன்மரக்கொடியிட்டுத் தன்பெயர்முதலிய வெளிப்படுத்தலின் அப்பெயராயிற்று. வேசி=விலைமாது. அரசன்=மன்பதைத்தலைவன். மன்பதை=மனிதர்கூட்டம். விஞ்ஞானேஸ்வரீயம். ஆசாரகாண்டம். கசo-வதுசுலோகம்.

ஜன்மத்தை யடைந்தவன் யாரொனில்? அரசனிடத்தில் தானமேற் றுச் செல்வனனவனேயாம். மீட்டும் அவனுக்கு வேறுபிறப்பு வருதலில்லை. யார்? அந்தணரொழுக்கத்தை விடுத்துப் பொரு ளாசையால் மோஹப்பட்டு விடயபோகங்களை விரும்பி அதன் பொருட்டு அரசனிடத்தில் கொடைபெற்றுக் கொள்வானே? அவன் பெரும்பயத்தைச் செய்கின்ற நரகத்தில் விழுகின்றனன் இஃதுண்மை. காட்டுத்தீயால் கொளுத்தப்பட்ட வனவிருக்ஷங் கள் மழைகாலத்தில் தளிர்க்கும்; அரசன் கொடைபெறுதலென் னும் பாவத்தால் சுடப்பட்டவர்கள் எப்போதுந் தளிர்ப்பதில்லை. எ-று. காண்க.

விஷ்ணு தருமோத்தரம். விஷ்ணுதர்மோத்தரே "దశసూనిసమశ్చక్రీ దశ చక్రిసమోధ్వజీ। దశధ్వజిసమావేశ్యా దశవేశ్యాసమోనృపః। దశసూనాసహస్రాణియో వాహయతిసానికః। తేనతుల్యస్తతోరాజా ఘోరస్తస్తాత్పరిత్యజేత్।" = ஓவக் கொலைசெய்பவன் அல்லது, ஊன்விற்பவன் சூனன். செக்கான் அச் சூனர் பதின்மரோடு ஒப்பாவன். கள்முதலிய விற்பவன் அச்செக் கான் பதின்மரோடு ஒப்பாவன். விலமாது அக்கள் முதலிய விற் பவர்கள் பதின்மரோடு ஒப்பாவள். அரசன் அவ்வேசியர் பதின்ம ரோடு ஒப்பாவன். பதினாயிரம் சூனபாவத்தை யார் சுமத்துகின் றனனே? அவன்சேனிகன், அரசன் அவனுக்கு ஒப்பானவன். ஆதலின், அரசனிடத்திருந்து பெறுங்கொடை பெரும் பயத்தை விளைவிப்பது. எ-று. காண்க.

இப்பழிப்பு தருமியல்லாத அரசன் விடயம். அவ்வாறு. அதே நூலுட் கூறப்பட்டது. விஷ்ணுதர்மோத்தரே॥ "యేషాంనపయేవిప్రాయజ్ఞే ర్యజ్ఞపతింహరిం। యజంతేభూభృతాంతేషా మేతత్సూనోదితంఫలం। యేసాంపాషండసం కీర్ణం రాష్ట్రంనబ్రాహ్మణాస్పదం। ఏతేసూనా సహస్రాణాం దశానాంభాగినోనృపాః। యేషాంనయజ్ఞపురుషని కారణాపురుషోత్తమః। తేతుపాపస్యమూచా రా సూనాపాపాహి తేస్మృతాః." = யாருடையதேசத்தில் வேதியர் எச்சத்தலிவன்= வேள்வித் தலிவனுகிய விஷ்ணுவை வேள்வியால் பூசிப்ப தில்லையோ? அந்தஅரசர்களுக்கு இந்தச் "சூனாதோஷ" பலம் வந்தம். எந்தஅரசனுடைய அரசாட்சி பாஷண்டர்களால் விரவப் பட்டு வேதியர்க்கு இடனில்லாது விடுமோ? அந்தஅரசன் பதி னாயிரம் "சூனாதோஷத்தைத்" தங்கள் பங்காகும்படி அனுபவிக்

கின்றார்கள். எந்த அரசர்களுக்குப் புருடோத்தமனை வேள்வித் தலைவன் நியமித்தகாரண மதில்லையோ? பாவமொழுக்க முண்டாகிய அந்த அரசர்கள் "சூதாபாவம்" உடையவர்கள் என்று சொல்லப்படுகின்றனர். எ-று. காண்க.

ஏற்கத்தக்க அரசன் விடயம்.

அதருமியல்லாத அரசனிடத்தில் தானமேற்றல் குற்றமில்லையாதலால் சாமசாகையில் பிராசீநசாலர் முதலிய மஹாமுனிவர்களை அரசன் கொடையேற்றலில், முன்னிற்கச்செய்யவேண்டி அசுவபதி என்னும் பெயரையுடைய அரசனல் தோஷமில்லை என்பது குறித்துரைக்கப்பட்டது. அதுவருமாறு. శ్రుతిః "నమేస్తేనో జనపదే నకదర్యో నమద్యపః! నానాహితాగ్నిర్న విద్వాన్నస్వైరీ స్వైరిణీతథా." = என்தேசத்தில் கள்ளரில்லை, உலோபகுண முடையவனில்லை, கள்குடிப்போ னில்லை, வேள்விக்குரிய அக்கினி ஹோத்திரத்தைத் தேடிவைத்திராதவ னில்லை, வித்துவான் அல்லாதவ னில்லை, தன்மனஞ்சென்றவழி செல்லுவோனில்லை, வியபசாரஸ்திரீயில்லை, எ-று. காண்க.

யாஞ்ஞவற்கியருடையிலும், அரசன்கொடையை யேற்றுக்கொள்வதைப்பற்றிப் பழிக்கும்விடயத்தில் ("లబ్ధస్యోచ్చాస్త్రివర్తినః") என்று சிறிதுவிசேடம் கூறப்பட்டிருத்தலின் துட்டனாகிய அரசன் யாரோ? அவ்வரசன் கொடுக்கும் கொடையைப்பெறுவதே பழிக்கப்படுவது என்று தெரியப்படுகின்றது.

நாரதரும் அங்ஙனம் கூறினர். నారదః। "శ్రియాస్పృశిగ్రహారాజ్ఞాం నాన్యేషాంబ్రాహ్మణాదృతే। బ్రాహ్మణశ్చేవరాజాచద్వావప్యేతౌధృతవ్రతా। నైతయోరంతరంకించి త్పృజాధర్మాభిరక్షణా। శుచీనామశుచీనాంచ సన్నిపాతోయథాంభసాం। సముద్రైసమతాంయాతి తద్వదాజ్ఞాం ధనాగమః। యథాగ్నాసంస్థితం సైనశుద్ధిమాయాతికాంచనం। ఏవంధనాగమాస్సర్వే శుద్ధిమాయాంతిరాజని." = அரசனிடத்திருந்தும் கொடையேற்றல் சிறந்தது. அந்தணரு லொழிய வேனையால் பெறுவதும் சிறந்ததல்ல. அந்தணன் அரசன் என்னு மிவ்விருவரும் விரதங்களைத் தரித்தவர். சீவர்களையும் தருமங்களையும் காப்பவர்களா மாதலின் இவ்விருதிறத்தருக்கும் ஏற்றத்தாழ்ச்சியில்லை. நன்னீரும் கெட்டநீரும் கடலிற்கலந்தவழி யொத்தவாறுபோல அரசனிடத்துச்சேரும் எவ்வகைப்பட்டதனமும்

ஒருகன்மைய வாகின்றனை. தீயினிடத்துக்கூடி எவ்வளைப்பட்ட பொன்னும் மாற்றுயர்ந்த வாறுபோல எவ்வளைப்பட்ட பொருளும் அரசனிடத்துச் சுத்தமாகின்றது. எ-று. காண்க.

அற்றேல், தானம் வாங்குதலே யாகாதென்று கூறியபிர மாணமொழிக்கு, துட்டாது கொடையை ஏற்கலாகாது எனற்கருத்து வேறு பிரமாணங்களால் ஏற்பட்டவிடத்தும், ஆபற்காலத்தில் இறந்தோர் கைப்பொருளும் கூடுமென்று ஸ்காந்த புராணத்துட் கூறப்பட்டதன்றே? அவ்வாறே நல்ல தானங்களை யேற்றுக்கொள்ளுதலும் ஆபற்காலத்திலுக்கே யொத்தவாறுகுக. ஆபத்து இல்லாதகாலத்தில் நல்ல தானமும் இல்லையென்று என் கூறலாகாது - எனின்?

அங்ஙனமன்று. என்னை? பிரமபுராணத்து, ஆபத்து இல்லாவிடத்தும் நல்லதானம் விதிக்கப்பட்டதென்று கூறியிருக்கையின். வருமாறு, ब्रह्मपुराणे॥ "अनापद्यविधरेण याज्यतस्त्वन्यतस्तथा। गृह्णन्प्रतिग्रहान्विप्रोनधर्मात्परिहीयते। ग्रहीष्यामीत्यहोदेव नित्यमाहा रवर्तिनः। श्रद्धयाऽखिलंदत्तंतथाधर्मोऽसहीयते." = ஆபத்து இல்லாதகாலத்திலும் கருமமாக வேள்வி செய்விக்கப்படுகின்ற தீடனிடத்திருந்து இரப்பவனுகிய வேதியன் தானத்தைப் பெற்றுக்கொண்டால் தருமத்தினின்றுந் தாழ்வடைவதில்லை. எப்பொழுதும் நல்லொழுக்கத்தில் நடந்துகொண்டிருக்கின்ற வேதியனிடத்திருந்தே சிரத்தையோடும் கொடுக்கப்பட்ட சுத்தமான திரவியத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டுவது. அவ்வாறுசெய்தால் தருமம்குறை வதில்லை. எ-று. காண்க.

சில பண்டங்கள் தான் இரவாமலே வலிதிற் கிடைக்கும் வழிப்பெற்றால் குற்றமில்லையென்று பாரத்துவாசர் கூறினர். வருமாறு, भारद्वाजः॥ "अयाचितोपपन्नेषु नास्तिदोषःप्रतिग्रहे। अमृतंतदि ति प्रोक्तं तस्मात्तेनविनिर्दहेत्." = இரவாமலே வலிதுவந்த பொருளின் விடயத்தில் வாங்குதற்குற்றமில்லை. தேவர்களதோ அமுதமென்றுணர்வர்; ஆதலின் அதனைத் தள்ளலேயாகாது.

அவ்விடத்துப்பரத்துவாசர் கருதிய அப்பொருள்விதிகளை யாஞ்ஞவற்கியர் கூறினர். याज्ञवल्क्यः॥ कुशाग्नौकंवयोमत्स्य गंधाक्षीरघृतंमधुः। मांसंशय्यासनंधान्यंप्रत्याख्येयंनवारिच। अयाचि

தாஹ்ருதம்க்ராஹ்யமபீதுயக்ருதகாரிணஃ। அன்யக்ராகுலடாமண்டபதிதெப்யஸ்துதாத்வயஃ.” = கருப்பை, காய்வகை, பால், மீன், சந்தனம், நூ, தயிர், மண், ஊன், படிக்கை, ஆசனம், தானியம், நீர், இவைகள் கேளாமல் வந்தால் பாபஞ்செய்தவனல் கொடுக்கப்படினும் வாங்கலாம். ஆயின், பாபருடனேனுறவுசேர்பவள், தபுந்சகன், பதிதன், பகைவன், இவர்களிடத்திருந்து வாங்கலாகாது. என-று. காண்க.

“தானாஃ” = வறுத்தயவம் அல்லது பொரி “க்ஷீதிஃ”=சௌசத்துக்கு மண் = மிருத்திகை. யாஜ்ஞவல்க்யம்-முதல் - அத்: ௨௬௮. சு.

மனு, மனுஃ॥ “சயம்யாம்கும்பாந்நலஹான்நந்தலவாஸதிபுஷ்பம்மணிம்பதி। மத்ஸ்யாதீனாஃ பயோமாம்சம் சாகம்சைவன நிர்ணுதெத்। ஏதோதகம்மூலபலமன்னமபுய்த்யதம்சயத்। அபததிப்ரதிக்ருஷ்டோ யான்னதுதாபயஸக்ஷீணாம்.”=படிக்கை, கருப்பை, மதீன, சந்தன முதலிய வாசனைப்பண்டம், ஆடை, நூ, இரத்தினம், தயிர், மத்சங்கள், விதைகள், பால், இறைச்சி, காய்வகை, இவற்றைத் தள்ளலாகாது; எரிகரும்பு = விறகு, நீர், கிழங்கு, பழுவகைகள், சுனைநீர்தேசாறு, மது, ஆபயம், இவைகளைத் தும்மாற்கலாம், பெற்றுக்கொள்ளலாம். என-று. காண்க.

பாதாந்தரம்॥ సర్వతఃప్రతిగృహ్ణీయాత్ మధ్వథాభయదక్షీణాం॥ எனவும்பாடம் மனு. சு - அத். ௨௬௮ எ - சு. விஜ்ஞானேச்வரோதாஹ்ருதபாதஃ॥ గంధోదకంమూలఫలం॥ எம்। మధ్వాజ్యాభయదక్షీణాం॥ எனவும்பாடம்.

தானம் வாங்கத் தகாதவன்.

தானமேற்றலுக்குத் தகாதவனை மனுகூறினர். மனுஃ॥ “హిరణ్యంభూమిమశ్వంగామన్నంవాసస్తిలాన్ఘృతం। అవిద్వాన్ప్రతిగృహ్ణన్నో భస్మీభవతికాష్ఠవత్.”=பொன், நிலம், குதிரை, பசு, எருது, சோறு, ஆடை, எண்ணெய், இவைகளைக் கல்வியில்லாதவன் தானம்வாங்கின் விறகு,தீயால் சுடப்பட்டுச் சாம்பலாயவாறுபோலாகின்றான். என-று. காண்க.

யாஜ்ஞவல்க்கியர். యాజ్ఞవల్క్యఃl “విద్యాతపోభ్యాంహీనెన ననుగ్రాహ్యఃప్రతిగ్రహఃl గృహ్ణన్ స్వర్గాచారమధోనయత్యాత్మానమేవచ.” = விக்கை, தவம், இல்லாதவன் தானம் வாங்கலாகாது. வாங்கிலுல், கொடுத்தவனையும், கீழ்முகஞ்சென்றுத் தானும் விழுகின்றான். என-று. காண்க.

கற்றவன் விடயம்.

வித்துவானுக்கு ஆனலோ? எப்படிப்பட்ட தானமேற்றலாலும் எந்தக் குற்றமு முண்டாகுவ தல்லவென்று, சுக்கில யஜுர்வேத பிராமணத்தில், காயத்திரி வித்தையில் கூறப்படுகின்றது. வாஜஸனேயப்ராஹ்மணே காயத்ரீவித்யாயாம் ச்ரூயதே॥ "யதிஹவாஅப்யேவம் விதாஸ்மிந்ப்ரதிக்ரஹ்ணதி ஸஹ்யாதேத்தாயத்யா ஏகம்பதம்ப்ரதி ஸந்தாயஇமாம்ஸ்ரீம்ஸ்ரோகாம்ஸ்தாஸ்ப்ரதிக்ருஹ்ணீயாம்யோஸ்யா ஏதத் ப்ரதமம்பாதமாப்நுயாதத்தயா பதீயம் த்ரயீவித்யாத்தகாவத்ப்ரதிக்ருஹ்ணீயாம்யோஸ்யா ஏதத்த்விதீயம் பாதமாப்நுயாதத்தயாவதீவம் ப்ராணியுஸ்தா வத்ப்ரதிக்ருஹ்ணீயாம்யோஸ்யா ஏதத்த்ருதீயம் பாதமாப்நுயாதத்தயாவதீவம் ப்ராணியுஸ்தா வத்ப்ரதிக்ருஹ்ணீயாம்யோஸ்யா ஏதச்சதுர்தம் பாதமாப்நுயாதத்தயாவதீவம் ப்ராணியுஸ்தா வத்ப்ரதிக்ருஹ்ணீயாத்." = இங்ஙனம் வேதவித்தையை யறிந்த இருபிறப்பாளன் ஒருவனே எந்தத் தானம்வாங்கினாலும் உடனே இந்தக் காயத்திரியின் ஓர்பதத்தைச்சரியான குறிப்பின் கண்ணேவைத்தால் இம்மூன்றுலகத்தையும் முழுவதும் வாங்கவல்லவனவன். யார்? இந்தக் காயத்திரியின் ஒரு பாதமுழுவதும் தேடியடைவானே அவன் இம்மூன்று வேதத்தின்வித்தை எவ்வளவுண்டோ? அவ்வளவையும் சம்பாதிக்கமாட்டுவன். யார்? இந்தகாயத்திரியினுடைய இரண்டாவது பாதத்தைப் பெறுவானே? அவன் அதன்பின் இந்த பிரபஞ்சம் எவ்வளவு அசைவுள்ளதோ? அவ்வளவையும் தன்வசமாக்கிக்கொள்ள வல்லவனும். யார்? இந்த காயத்திரியின் மூன்றுவது பாதத்தைப்பெற்றுக்கொள்வானே? அவன் இந்த காயத்திரியின் நாலாவது பாதத்தைக்காண்பிப்பவனவன்: அந்தநான்காவது பாதமே இரஜஸு= குந்ற, மற்றபரமபதமாம். அதுவேஇந்தச்சூரியனைவிளங்குகின்றது. அதனையாரும் ஜபிக்கலாகாது. இவ்வளவு தேடுவதென் செய்யஎன்று. காண்க.

ஏற்றல் விடய முற்றிற்று.

சத்தாந்தராதிகரணநியாயம்.

இங்ஙனமாக விதிக்கப்பட்ட ஓதுவித்தல் முதல் ஏற்றலீறுக வுடைய வக்கருமங்களுக்குச் சத்தாந்தராதிகரண நியாயத்தால் கருமபேதங்களைக் கருதிமூலத்துள் "ஷட்கூதிரஞ்" என்று கூறப் பட்டது. இனி அந்தநியாயம்வருமாறு, "யஜதி," "ததாதி," "ஜுஹோதி" என்பது உதாரணமாம். முறையே யவற்றின்பொருள், வேள்வி செய்கின்றான், கொடுக்கின்றான், ஹோமஞ்செய்கின்றான், எனக் கொள்க.

(சமுசயம்) அங்குளெல்லாத்தாதுக்களுடையபொருள்களிலும் (அநுரக்தமாகியபாவனை)=நோக்கமாகியகருத்து, ஒன்றேயோ? ஒவ்வொரு தாதுவினிடத்தும் வேறுவேறுக விருக்கின்றதோ? என்பது.

(பூர்வபக்ஷம்) அவ்விடத்துக்கருதியபாவனைக்கு வாசகமாகிய "ஆக்கியாதம்"=சொல்லாக்கக் காலஇடைநிலவிகுதி, வேறுபாடு ஒன்றேயாதலின், பகுதிப்பொருள் வேறு வேறுகவிருப்பினும் அப்பகுதி உபசர்ஜனம்=உறுப்பு, மாத்திரையே ஆதலாலும், பிர தானம்=தலைமையதை, (விகுதிகளை) வேறுபடுத்தமாட்டாது செல்லுதலினாலும் ஒரேபாவனை=கருத்து, என்னுமோ வெனின்?

(சித்தாந்தம்) பகுதியினுடைய பொருளைச் சுவைப்படுத்துவ தொழியவீணை காலவிடைநிலை விகுதியால்மாத்திரம் கருத்துப் புலப்படுவதில்லையாமாதலாலும், தோற்றத்தோடு கூடியிருக்கும் பகுதிப்பொரு ளொன்றினேமாத்திரம் செயற்கை நோக்கமு டைய அச்சொல்லாக்க இடைநிலை விகுதிப்பொருளில் வேறு பகுதிகளின்பொருள் புகுதலில்லையா மாதலாலும், ஒவ்வொரு பகுதியின்பொருளிலும் கருத்து வேறு வேறுக விருக்கின்றது. என்பது. இதுவே சத்தாந்தராதிகரணநியாயம்.

இங்ஙனமாதலின் ஓதுவித்தன் முதலிய ஆறுபகுதிகளின் பொருளால் கருத்து ஆறுவகையாக வேறுபடுதலின் ஆறுதொழி லாகின்றன; என்பது கருத்து.

இனி "அபிரதஃ" என்றது அபிரதியையடைந்தவன். எ-று. "அபிரதஃ" என்பது, சிரத்தையோடுங்கூடிய அநுட்டானம்-எ-று.

சிரத்தையில்லாக்கருமவிடயம்.

சிரத்தையின்றி அநுட்டிக்கப்பட்டது பயனற்றதாம். அங்ஙனம், கண்ணன்கூறினர். வருமாறு, பகவற்கீதை. భగవద్గీతాయాం॥ "అశ్రద్ధయాహుతంచత్తం తపస్తప్తం కృతంచయత్। అసదిత్యుచ్యతెపార్థ నచతత్ప్రేత్యనోఇహ." = சிரத்தையின்றி வேமாமஞ் செய்யப்பட்டதும், கொக்கப்பட்டதும், தவஞ்செய்யப்பட்டதும், அனுட்டிக்கப் பட்டதும்ஆகியகருமம் "அஸத்" சத்தில்லாது = பயனற்றது, என்று கூறப்படுகின்றது. ஓ! அருச்சுன! அந்தகருமம்மறுமையினும் பயன்றருவதல்ல;இம்மையினும் பயன்றருவதல்லவாம்.எ-று.காண்க.

இனி மூலத்துள். "நித்யம்" என்றது. எப்பொழுதும் என்றவாறு. எனவே ஒருதலையாக - என்பது கருத்து. இம்மொழியை மூலத்துள் "ஷட்கருமாபிரத" என்றபின்னெழுதித்து. முன்வரும் "தேவதாதிதிபூஜகஃ" என்பதனோடுகூட்டுக. என்னை? மேல் அறுவகைத்தொழிலினுள்ஓதுவித்தல், வேட்பித்தல், ஏற்றல், என்னு மூன்றுகருமமுள்ளன. அவைஅனித்தமாமாதலின் அவற்றை எப்பொழுதுஞ் செய்களனப்போதரும்; போதரவே அதுமுறையன்மாகலின்.

இனிமூலத்துள் "தேவதாதிதிபூஜகஃ" என்றது. தேவதையும் அதிதியும் என துவந்தசமாசம் = உம்மைத்தொகை, யாக்கி அவ்விருவரையும் நித்தமும் பூசிப்பவன் என்று பொருளுரைத்துக்கொள்க.

இங்ஙனம் "துவந்தசமாசம்" = உம்மைத்தொகை, யாக்காவழித்தேவதையாகிய அதிதிஎன்னக் "கருமதாரையசமாசம்" = இருபெயரொட்டாக்கித் தேவர்கடானைச் செய்யாதொழிவர். அதுமரபன்றென்பது.

அத்தேவதாசொரூபநிச்சயம்.

அத்தேவதைபின் சொரூபமாதலோ? வாஜஸநேயப் பிராமணத்தில், "சாகலியர் யாஞ்ஞவற்கியர்களின் சம்வாதத்தில் விசாரித்துத் நிர்மாணிக்கப்பட்டது. அங்கு "சாகலியர்" வினவுவோர். "யாஞ்ஞவற்கியர்" விடைகூறுவோர். தேவதைகளின் விசாரம் = பன்மை. சம்கூபம் = சுருக்கம், அல்லது ஒரு

மை கேட்கத்தக்க விடயம். (எனவே பலதேவரோ? ஒரு தெ
ய்வமோ? என்பது). இது அச்சுருதியின்கருத்து. பிருஹதாரணி
யகோபநிஷத்து. బృహదారణ్యకోపనిషది॥ పంచమాధ్యాయె॥ నవమబ్రాహ్మణె॥
"ఆథహైనంఖిపగ్ధ శ్నాకల్యోంపప్రచ్ఛ కతిదెవా యాజ్ఞవల్క్య తిసహైతయైవనిఖిదాప్రతి
పెదెయావన్తో వైశ్వదెవస్య నివిద్యుచ్యన్తె త్రయశ్చత్రీన శతాత్రయశ్చత్రీచ సహస్రెత్యో
మితిహొవాచకత్యెవ దెవాయాజ్ఞవల్క్యతిత్రయస్త్రిగ్ం శదిత్యొమితిహొవాచకత్యెవ
దెవాయాజ్ఞవల్క్యతి షడిత్యొమితిహొ వాచకత్యెవ దెవాయాజ్ఞవల్క్యతి త్రయఇత్యో
మితిహొవాచకత్యెవ దెవాయాజ్ఞవల్క్య తిద్వావిత్యొ మితిహొవాచకత్యెవ దెవా
యాజ్ఞవల్క్య త్యధ్యర్ధ ఇత్యొమితిహొ వాచకత్యెవ దెవాయాజ్ఞవల్క్యత్యెక ఇత్యో
మితిహొవాచ కతమెతె త్రయశ్చత్రీచ శతాత్రయశ్చత్రీచ సహస్రెతి ॥ ౧ ॥ సహొ
వాచమహిమాన ఏవైషామెతెత్రయస్త్రిగ్ం శత్యెవ దెవాఇతిక తమెతెత్ర యస్త్రిగ్ంశది
త్యాష్టావసవ ఏకాదశ రుద్రాద్వా దశాదిత్యాస్త ఏకత్రిగ్ంశదిన్ద్రశ్చైవ ప్రజాపతిశ్చత్రి
యస్త్రిగ్ంశాఇతి ॥ ౨ ॥ కతమెవసవఇత్యగ్నిశ్చపృథివీచవాయుశ్చాన్త రిక్షంచాదిత్యశ్చ
ద్యౌశ్చచన్ద్రమాశ్చ నక్షత్రాణిచైతెవసవఏతెషుహీదంవసు సర్వ్గ్ంనిహితమితితస్మాద్వస
వఇతి ॥ 3 ॥ కతమెరుద్రా ఇతిదశేమె పురుషెప్రాణా ఆత్మైకాదశస్తెయ దాస్మాచ్ఛరీరా
న్మర్త్యాదుత్క్రామన్త్యథరో దయన్తి తద్యదొరోదయన్తి తస్మాద్రుద్రాఇతి ॥ ౪ ॥ కతమ
ఆదిత్యా ఇతిద్వాదశవై మాసాస్సంవత్సరస్యైత ఆదిత్యాఎతే హీదగ్ం సర్వమాదదానా
యన్తి తెయదిదగ్ంసర్వమాదదానా యన్తితస్మా దాదిత్యాఇతి ॥ ౫ ॥ కతమఇన్ద్రశ్చకతమఃప
ప్రజాపతిరితిస్తన యిత్నురితెందొ్ర యజ్ఞఃప్రజాపతి రితికతమస్తనన యిత్నురిత్య శనిరితిక
త మొ యజ్ఞఇతిపశవఇతి ॥ ౬ ॥ కత మెషడిత్యగ్నిశ్చ పృథివీచవాయుశ్చాన్త రిక్షంచాది
త్యశ్చ ద్యౌశ్చైతె హీదగ్ంసర్వగ్ంషడితి ॥ ౭ ॥ కతమెతెత్రయొదెవా ఇతీమ ఎవత్రి
యొలొకా ఎషుహీమెసర్వె దెవాఇతికత మెకాదశ్వా దెవాఇత్యన్నంచైవ ప్రాణశ్చైక
త మొధ్యర్ధ ఇతియొయం పవత ఇతి ॥ ౮ ॥ త దాహుర్య దయమెక ఇవైవపవతె థకథ
మధ్యర్ధఇతియదస్మిన్ని దగ్ంసర్వమధ్యర్ధ్నొ తైనాధ్యర్ధ ఇతికత మెకొదెవ ఇతిసబ్రహ్మత్య
దిత్యాచక్షతె ॥ ౯ ॥ = பின்னர் புகழ்பெற்ற (அந்தயாஞ்ஞவற்கியரை)
நோக்கி விஞ்ஞவுணர்ச்சிவல்லராகிய (சாகல்லியர்) தேவர்கள்எத்து
ணையொன விஞ்ஞினர் (அந்தயாஞ்ஞவற்கியர்) "நிஷு" = நிஷித
என்னும் "சந்தஸ்ஸிஞ்ஞல்" விடைகூறத் தொடங்கினராய், வை
சுவதேவமென்னும் "சஸ்திரமந்திரங்களில்" "நிஷித" என்
ஞ்ஞல் வைதிகபதங்களின்கூட்டத்தில் எத்துணைத்தேவர்கள் கூறப்
பட்டனரோ? அத்துணைத்தேவர்கள்மூன்று, மூன்று, நாறு; மூன்று,
மூன்று, ஆயிரம், ஆம் என்றுகூறினர்.

(சாகலியர்) அவையெல்லாங்கூடி யெத்தனையாமென்று மீட்டும் வினவினர்.

(யாஞ்ஞவற்கியர்) மூப்பத்துமூன்றுமென்றனர்.

(சாகலியர்) மீட்டும் அவைளத்தனை யுளமையுமென்று வினவினர்.

(யாஞ்ஞாவற்கியர்) ஆறு என்று கூறினர்.

(சாகலியர்) மீட்டுமவை எத்தனையுளடங்குமெனவினவினர்.

(யாஞ்ஞவற்கியர்) மூன்று என்று கூறினர்.

(சாகலியர்) மீட்டும் எத்தனை என்று வினவினர்.

(யாஞ்ஞவற்கியர்) இரண்டு என்றனர்.

(சாகலியர்) மீட்டும் எத்தனை என்று வினவினர்.

(யாஞ்ஞவற்கியர்) ஒன்றரை என்றனர்.

(சாகலியர்) மீட்டும் வினவினர்.

(யாஞ்ஞவற்கியர்) ஒன்று என்றார்.

பின்பு (சாகலியர்) மூன்று, மூன்று, நூறு, எனவே மூந்நூற்று மூன்று, எனவும், மூன்று, மூன்று, ஆயிரம், எனவே, மூவாயிரத் தொருமூன்று, எனவும், கூறியவாறு என்னை? என்று வினவினர்.

(யாஞ்ஞவற்கியர்) மூப்பத்துமூன்று தேவர்களுடைய மகிமையே மூவாயிரத்து மூந்நூற்றாறு பேதமாயின என்று கூறினர்.

(சாகலியர்) அம்மூப்பத்து மூவராவார் யார்? என்று வினவினர்.

(யாஞ்ஞவற்கியர்) வசுக்கள் எண்மர், உருத்திரர் பதினொருவர், ஆதித்தியர் பன்னிருவர். ஆகமுப்பத்து ஒருவராம். இந்திரன் – பிரஜாபதியுங்கூடி மூப்பத்து மூவராயினர். என்றுகூறினர்.

(சாகலியர்) அவ்வசுக்களாவார்யார்? என்றுவினவினர்.

(யாஞ்ஞவற்கியர்) அக்கினி, பிருதிவி, வாயு, அந்தரிக்ஷம்=ஆகாயம், ஆதித்தியன், "द्यौः" தியௌ=சுவர்க்கம், சந்திரன் நக்ஷத்திரம், ஆகளட்டும் வசுக்கள் என்னப்படும். இவற்றினிடத்

தன்மேரு? இவ்வசுக்கள் எல்லாம், (எனவே, வசு=தனம். அல்லது, கருமத்திற்குப் பலனைத் தருகின்ற சத்திகாரியம். அது, கருவிக் கூட்டவடிவமாகிய பிரவஞ்சம்) பற்றி நிற்கின்றனவாதலின்.

(சாகலியர்) உருத்திரராவார் யாரென்று வினவினர்.

(யாஞ்) புருடனிடத்தில், உள்ள இப்பத்துப் பிராணனும் ஆன்மா பதினென்றுவதாவானுமாம். இவர்களே ஏகாதச உருத்திராம். அவர்கள் எப்பொழுது மரண வியற்கையை யுடைய இந்த தேகத்தினின்றும் புறப்பட்டுப் போவாரோ? அப்பொழுது, அழுகையைச் செய்விக்கின்றனர். அங்ஙனம் அழுதலைச் செய்வித்தலால் உருத்திரர் எனப்படுவர். என்று கூறினர்.

(பிராணன் - என்பது ஈண்டுபுறத்துள்ள பத்து இந்திரியங்களாம்.) ஆன்மா-என்பது ஈண்டு அந்தக்கரணமாம்.

(சாக) ஆதித்தியராவார் யார்? என்றூர்.

(யாஞ்) வருடத்திற்குப் பன்னிரண்டுமாசங்கள் உலகறிந்த வாறுயுள்ளன. அவையன்றே? இவ்வெல்லாவற்றையும் வாங்கிக் கொண்டுசெல்கின்றன. அவை இவ்வெல்லாவற்றையும் வாங்கிக் கொண்டு போதலினால் "ஆதித்தியர்" எனக் கூறப்படுகின்றன. என்று கூறினர்.

(சாக) இந்திரன் யார்? பிரஜாபதியார்? என்றனர்.

(யாஞ்) ஸ்தநயித்துநுவே (ஸ்நயித்னு) இந்திரன். (யஜ்ஞம்) எச்சமே பிரஜாபதி. என்று கூறினர்.

(சாகலி) ஸ்தநயித்துநுயார்? என்றூர்.

(யாஞ்) இடி என்று கூறினர்.

(சாகலி) (யஜ்ஞம்) எச்சம்யார்? என்றூர்.

(யாஞ்) பசுக்கள் என்று கூறினர்.

(சாகலி) ஆறுஎன்பன யாவை? என்றூர்.

(யாஞ்) அக்கினி, பிருதிவி, வாயு, அந்தரிக்ஷம், ஆதித்தியன், தியௌ. இவை ஆறு அன்றே? என்றனர்.

(சாகலி) அம்மூன்று தேவராவார் யார்? என்றூர்.

(யாஞ்) இம்மூன்று உலகமே, இவற்றினிடத்தன்றே இத் தேவரனைவரும் உள்ளனர்; என்றார்.

(சாகலி) அவ்விரண்டு தேவர்யார்? என்றார்.

(யாஞ்) அந்நம், பிராணம், என்று கூறினர்.

(சாகலி) அவ்வொன்றனை என்பதென்னை? என்றார்.

(பாஞ்) யார் வீசுகின்றாரே? அவனேயாம். எனவே, வாயு என்று கூறினர்.

(சாகலி) யார் வீசுகின்றாரே? அவனை ஒருவனென்றேகூறு வாராக, ஒருவனைப்போன்றே வீசுகின்றான். இங்கு அவனை ஒன்றனையென்று எவ்வாறு கூறுதல் கூடும்? என்றனர்.

(யாஞ்) எதனல் இவ்வுலகமெல்லாம் யாரிடத்தில் அதிகமானவிருத்தியை யடைந்தனவோ? அதனல் ஒன்றற்கு அதிக்மென்று கூறப்படுகின்றான் என்றனர்.

(சாகலி) தேவர் ஒருவராவார்யார்! என்றனர்.

(யாஞ்) பிராணன். அதுவே,* பிரமம் * "த்யத்" = எட்டாது போல, எனக் கூறுகின்றனர்; என்றுகூறினர்.

---

* "த்யத்" என்பதற்கு பரோக்ஷம்=எட்டாதுபோலஎன அத்துவிதிகள் கூறுவர். எல்லாவிலக் கணங்களோடுங்கூடி வேறிருப்பது; என்று விசிட்டாத்துவிதிகள் கூறுவர். எட்டாதது=அதுவெனச்சுட்டியறியப்படுவது.

நூறு, ஆயிரம், என்ற எண்ணுப்பெயர்களுக்கு அவ்வளவேபொருளன்று; அநந்தம் என்பது கருத்து என்று சங்கரபாஷியத்தின் கருத்தாக ஆனந்தகிரியர் கூறினர்.

ஆன்மவுணர்ச்சியே முதற்றெய்வம் அதன்மகிமையே எல்லாத் தேவரும் என்பது அத்துவிதிகள் கருத்து. பரமசிவனேயாக, பரவாசுதேவனேயாக முதற்கடவுள்என்பது விசிட்டாத்துவிதிகள் கருத்து.

இச்சுருதித் தொடர்ச்சியில் சிவன் விஷ்ணுஎன்ற விசாரம் வந்ததில்லை; பிராணன் வாயில் அந்தியாண்மதத்துவங்களைக் கூறி முடிவில் பரமான்ம அறிவைக்கூறியிருத்தலின் பிரமசைதன்யமே பரதேவதையென்று சுருதியுரை கூறும் என்பர் அத்துவிதிகள். பிரமசூத்திரங்களில் பிராணசத்தத்திற்கு வாயுவென்பது முக்கியமானபொருளல்ல. பிரமவுணர்ச்சியே முக்கியப் பொருளென்று பிராணாதி கரணத்தில் கூறப்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட பிரமம் பிராணன்முதலிய மொழிகளுக்குச் சிவனேஎன்று சைவரும், நாராயணனே என்று வைஷ்ணவரும், பராசத்தி என்றுசாத்தேயருமாக அந்தந்த மதவாதியரும் கூறுகின்றனர்.

இனி, அச்சுருதிக்கு மாதவாரியர் கூறியவுரை.

உபாசனை செய்வித்துக் கொள்வதற்குத் தக்கவர்களாகிய தேவர்களுடைய எண்ணின்வகை விடயமாகச் சாகலியரால் வினவப்பட்ட யாஞ்ஞவற்கியர் வெற்றி யடையவேண்டிய வாதத்தில் தொடங்கியிருந்ததால் அந்நியர் புத்தியைப் பிரமிக்கச் செய்யும் பொருட்டாக "நிவித்து" வினல் (எனவே, சங்கேதக் குறிப்பினல்) விடைகூறினர். "நிவித்து" என்னுஞ்சந்தஸையுடைய வைசுவதேவமென்னும் பெயரையுடைய தேவஸ்துதி சஸ்திரமந்திரங்களில் இருக்கும் எண்ணுப் பெயர்களாகிய மொழிகளுடைய கூட்டத்தை "நிவித்து" என்னுமொழிகள் கூறுகின்றன என்று வைதிகமாகிய பிரசித்தி யடைந்திருக்கின்றது. அதனல் எத்துணைத் தேவர்கள் வைசுவதேவத்தின் "நிவித்துவில்" கூறப்படுகின்றனரோ? அத்துணைத்தேவர்கள் நம்மால் உபாசிக்கத்தக்கவர்களா மென்று கூறியவாருயிற்று.

அந்த "நிவித்து" என்னும்பதங்கள் "த்ரயஶ்ச த்ரீச ஶதா-த்ரய ஶ்ச த்ரீச ஸஹஸ்ரேதி" என்பது முதலியன. மூந்நூறு, மூவாயிரம், ஆறு, தேவர்விரிவகையென வாகின்றன.

"க்ஸ்வ" எத்துணையவரோ? என்றஅங்குள்ளதேற்றேகாரத்தால் இன்னும் தேவர் இருக்கினு மிருக்கலாமென்னும் ஐயத்தை யொழிக்கப்படுகின்றது. எந்தத்தேவர்கள்? முன்விரித்துக் கூறப்பட்டனரோ? அந்தத்தேவர்களே தொகுத்தலினல் எத்துணையர் என்று அங்குள்ள வினவுக்குப்பொருள். அவற்றுள், "கதி"=எத்துணையர் என்பது எண்வினு.

"கதமேதி"=அவர்யாவர்? என்றதுஉருவவிசேடம்பற்றியவினு.

அங்கு, நூறு, ஆயிரம், என்னும் கணக்கினை யுடையராய் எந்தத்தேவர்கள் கூறப்பட்டனரோ? அவரனைவரும் முதற்கடவுளர் அல்லராம். மறறென்னை எனில்? தலைமையால் அவிர்ப்பாகத்தைப் புசிக்கின்ற மூப்பத்துமூன்று தேவர்களுடைய யோகமகிமையால் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட சுவேச்சையாதீனமாகிய வுருவத்தை யுடையவராம் என்பது. ஆகலின், அவர்களுடைய சொரூபவிசேடங்கள் வேறுவேறுக வகுத்துக் கூறவேண்டுவதில்லை.

மூப்பத்து மூன்று தேவர்களில், வேதத்தாற் கூறப்படுகின்ற வசுமுதலிய தேவர்கள்புராணத்துள்ளே விளங்கக்கூறப்பட்டவசு முதலிய தேவரினும் வேறேயானவராம். அவர்களிடத்தில் வசு வாதி மொழிகள் செல்லுவது காரணக்குறியாலென்றுணர்.

" பிராணன் " என்பது. புறத்துள்ள இந்திரியங்களாம். ஆன் மாவென்பது அந்தக்கரணமாம்.—

" இந்திரன், பிரஜாபதி, "என்னு மிவ்விரண்டு மொழிசளும், " இலக்கணையால் " மேகம், வேள்வி, என்னு மிரண்டிற் செல்லு கின்றன. (இலக்ஷிதலக்ஷணை) இருமடியாகு பெயரால்- முறையே இடி, பசுவென்னும் பொருண்மேற் செல்லுகின்றன (எனவே, இந் திரன், என்னுமொழிக்கு தேவர்களினிறைவன் என்பது வாச்சி யார்த்தம் = சொல்லுக்குரியபொருள். மேகம்என்பது லக்ஷியார் த்தம் = குறித்த ஆக்கப்பொருள்=ஆகுபெயர்ப் பொருள். இடி (லக்ஷிதலக்ஷியார்த்தம்) இருமடியாகு பெயர்ப்பொருள் எனவும், பிரஜாபதி என்னுமொழிக்குப் பிரமன்என்பது சொல்லுக்குரிய பொருள், வேள்வி, ஆகுபெயர்ப்பொருள், பசு இருமடிஆகு பெ யர்ப்பொருள் எனவும் கொள்க.

" அந்நம், பிராணன், " என்னு மிவ்விருமொழியும், போக் கியம் = உண்ணப்படும் பொருளையும், போத்தா = உண்பவனை யும் உணர்த்துகின்றது. (எனவே, அந்நம், என்பதனல் அனுப விக்கத்தக்க விடயங்களுக்கு அபிமானி தேவதையையும், பிரா ணன்என்பதனல் அனுபவிக்கின்ற அந்தக்கரண விசிட்டாபிமானி தேவதையையும், குறிக்கின்றது.

"அத்யஷ்டம்" என்பது இடுகுறிவழக்கால் ஒன்றை என்னும் எண்ணினையும். காரணக்குறியால் நன்முக விருத்தியை அடைவிக் கின்ற வாயுவையும் உணர்த்துகின்றது. வாயுவென்பது, சூத்திரமா யுள்ள ஆன்மாவாம். "வாயுர்வை கௌதமஸூத்ரம்." = ஓ! கௌதமரே! வாயுவென்பது பிரசித்தியாகிய சூத்திரமாயுள்ள ஆன்மா. எ-று. இது சுருதிப்பிரமாணம்.

இறுதியிலிருக்கும் " பிராணன் " என்னு மொழிபரமான் மாவை யுணர்த்துகின்றது. அதனை விளங்கச்செய்யும் பொருட்டு " பிரமம் " என்றமொழி கூறப்பட்டது. "தத், பராபரம்॥ தத் "

என்றமொழி எட்டாப்பொருளை யுணர்த்து மொழியாம். பிரம விசாரத்தைச் செய்யாத ஆண்மகனைப்பற்றி நூல் ஒன்றிலே யுணரத்தக்கபிரமத்தைச்=சுட்டுப்பொருட்டாகத்தெரிவித்தது.

ஆண்டு, "பிராணன்" என்னுமொழிக்குப் பொருள் பரமான்மா ஒன்றே முதற்கடவுளாக விருக்கின்றன். அவன்சொரூபத்தை "சுவேதாசுவதரோபநிஷத்திலுள்ள மந்திரங்கள் விசேடமாக விளங்கக் கூறுகின்றது. வருமாறு.

முதற்கடவுளிலக்கணம்.

శ్వేతాశ్వతరోపనిషది॥ "ఏకోదేవస్సర్వభూతే షుగూఢస్సర్వవ్యాపీ సర్వభూతాంతరాత్మా। కర్మాధ్యక్షస్సర్వభూతా ధివాసస్సాక్షీచేతా కేవలోనిర్గుణశ్చ."

ஏகः=ஒருவன், உம் ("ఏకమేవాద్వితీయంబ్రహ్మ" = ஒன்றேயாம் இரண்டாவதில்லாதது பிரமம். ("ఏకఏవరుద్రోన ద్వితీయాయతస్థే"= உருத்திரன் ஒருவனே யிரண்டாவதானில்லை) (என்று சுருதி கூறுகின்றன).

இனி "దేవః" = தேவன், (దివ్) என்பது தாது "క్రీడాపజిగీషా వ్యవహారమోదమదస్వప్న కాంతిగతిషు" என்பதனால். தேவன் - எது-கிரீடிப்பவன், எனவே ஆடுவோன்(அரசன் சண்டுமுதலியவிளையாடுற்போலும் இவ்வுலகைப் படைத்தாடுகின்றன் என்பது-உம் ["లోకవత్తులీలాకైవల్యం"=என்றதுபிரமசூத்திரம்.] ["భోగార్థంసృష్టిరిత్యన్యే క్రీడార్థమితిచాపరే। దేవస్యైషస్వభావోయం" என்றதுமாண்டூக்கியோபநிஷத்து.] ["తగ్ంహాదేవమాత్మ బుద్ధిప్రకాశం" = ஆன்மபுத்தியிலொளிவிட்டுக் கொண்டிருப்பவன், ஆன்மாவாகப் புத்தியில் ஒளிவிடுபவன், ஆன்மாக்களின் அறிவை விளக்குவோன், அத்தேவன். என்பது சுவேதாசுவதரோபநிஷத்து.] ["విశ్వాధికోరుద్రోమహర్షిः। హిరణ్యగర్భంపశ్యత జాయమానంస్నోదేవः" = மஹரிஷி யாகிய உருத்திரன் யாவரினு முயர்ந்தோன்; அவன் பிறக்கின்ற பிரமனைப் பார்த்துக்கொண்டே யிருந்தான் அவன் எமக்குத் தேவன்; என்றது தைத்திரீய மஹாநாராயணோபநிஷத்து.] ["భర్గోదేవస్యధీమహి"] என்பதுகாயத்திரி. ["భవాయదేవాయనమः। రుద్రాయదేవాయనమः। పశుపతయేదేవాయనమः। ఉగ్రాయదేవాయనమः। భీమాయదేవాయనమः। మహాతేదేవాయనమः। భవస్యదేవస్యపత్న్యైనమः."] முதலியன கிருஷ்ணயஜுர்

வேதம். அஉ-வது. பிரசினம். ["తత్పురుషాయవిద్మహే। మహాదేవాయధీమహి। తన్నోరుద్రఃప్రచోదయాత్"] இதுஉருத்திரகாயத்திரி; தைத்திரீய மஹாநாராயணோப நிஷத்து. இவ்வாறு வேதமொழி யாண்டும் மஹாதேவர் பரமாகக் கூறப்பட்டுள்ளவாறு காண்க.

"సర్వభూతేషుగూఢః" = எல்லாப்பூதங்களிலும் இரகசியமாக ஒளித்திருப்பவன் - உம். ["సర్వభూతెషుచాత్మానం" என்றதுசுருதி. "ఈశ్వరస్సర్వభూతానాం హృదెశెర్జునతిష్ఠతి। భ్రామయంత్సర్వభూతాని యంత్రారూఢానిమాయయా। తమెవశరణంగచ్ఛ సర్వభావెనభారత." = எல்லாவுயிர்களின் இதயத்துள்ளும் ஈசுவரன் இருக்கின்றான் தன்னுடைய எந்திரத்தை யடைந்திருக்கு மெல்லாவுயிர்களையும் மாயையால் மயக்குவித்துச் சமூசாரத்தில் சுழலப்பண்ணுகின்றான். ஓ! அருச்சுநா! எல்லாக்கருத்தாலும் அவனையேகாப்போகை நம்பி வழிபடுதலைச்செய்து] என்று கண்ணன் உபதேசித்தனர். இது பகவற்கீதை.

"సర్వవ్యాపీ" = எல்லாவற்றுள்ளுங் கலந்து நிற்பவன். உம். ["విశ్వంభూతంభువనం చిత్రంబహు ధాజాతంజాయమానంచయత్। సర్వొహ్యేషరుద్రస్తస్మైరుద్రాయనమోఅస్తు" = விசித்திரமாகியும், விஸ்தார மாகியும், இடமாயும், பலவகையாயும், பிறந்திருக்கும், பிறக்கும், உலகமெதுவோ? அவ்வுலகமுற்றும் உருத்திரனேயாம் அவ்வுருத்திரனுக்கு நமஸ்காரம்]. இதுதைத்திரீய மஹாநாராயணோபநிஷத்து. ஆறுவது பிரபாடகம். [" అష్టమూర్తిర్మహాదెవ స్సర్వవ్యాపీనిరంజనః." என்றது ஸ்காந்தம்.

"సర్వభూతాంతరాత్మా" = எல்லாப்பூதங்களிலும் அந்தரியாமியாயுள்ளவன். உம். [ఏషసర్వెశ్వరఏష సర్వజ్ఞఏషొన్తర్యామ్యెషయొనిః। శివమద్వైతంచతుర్థంమన్యన్తెస ఆత్మాసవిజ్ఞెయుః] இது மாண்டூக்கியோபநிஷத்து. அந்தரியாமி=உயிர்க்குயிர்.

"కర్మాధ్యక్షుః." = கருமங்களுக்குத் தலைமையாக உபாசிக்கப்படுவோன் என்று. உம். [కూర్మపురాణె॥ వ్యాసగీతాయాంబ్రహ్మయజ్ఞె సానాదెయజుర్వెదస్సాఙ్గొవాపమాహా॥ యజుర్వెదః॥ యొయజ్ఞైరఖిలైరీశొ యొగెనచసమర్చ్యతె। యమాహుఃరీశ్వరందెవం సదెవస్సన్యత్వినాకధృత్." = எந்தக்கடவுள் எல்லாவேள்விகளாலும் யோகங்களாலும் அருச்சிக்கப் படுகின்றானே?

யானை உலகநாதனுகக் கூறுவரோ? அவன்யாரொனின்? பிரா கமென்னும் வில்லையுடையசிவனேயாம். எறு.] இதுகூர்மபுராணம், வியாசகீதையில், பிரமவேள்வி விரவுத்தரத்தில் எஜுர்வேதஞ் சான்று கூறியவாறு என்று கூறியது. [స్కాందే॥ "సనత్కుమార సంహితాయాం" "అంబికాపతిమీశాన మధ్యక్షుంసర్వకర్మణాం। ఉపాస్యంఫలదాతారం ప్రపద్యేపరమేశ్వర మితివిష్ణువచనం."] என்று ஸ்காந்தம் கூறியவாறு காண்க.

"సర్వభూతాధివాసః." = எல்லாப்பூதங்களுமிருப்பதற்கு ஆதாரமாகிய இடமானவன். எறு. உம். [కూర్మపురాణేత త్రైవ ॥ ఋగ్వేదః॥ "యస్యాంతస్థానిభూతాని యస్మాచ్చసర్వంప్రవర్తతే। యమాహుస్తత్పరంతత్త్వం సదేవ స్యాన్మహేశ్వరః." = பூதங்கள் எவனுள்ளடங்கி யுள்ளனவோ? எல்லாமும் எவனுல் நடக்கின்றனவோ? எவனேப்பரதத்துவம்=முடிவான சத்தியப்பொருளென்று கூறப்படுகின்றதோ? அந்தத்தேவனே மகேச்சுரனும் எறு]. இதுவும் கூர்மபுராணத்தது; இருக்குவேதம்சாகூஷி கூறியவாறென்பது காண்க.

"సాక్షీ." = ஒன்றேறுடுங்கலவாது எவற்றிற்குங் சாகூஷியாயுள்ளவன். எறு. உம். [కూర్మపురాణే॥ ఈశ్వరగీతాసూపనిషత్సు ద్వితీయాధ్యాయే॥ "వదంతివేదవిద్వాంస స్సాక్షిణంప్రకృతేఃపరం." = வேதத்தை யுணர்ந்தவர்கள் பரமேச்சுரனேச் சர்வசாகூஷியாகவும் மகாமாயையைக் கடந்து மேல்நிற்பவனுகவுங் கூறுகின்றனர். எறு.] இதுகூர்மபுராணம் ஈசுவரகீதை இரண்டாமத்தியாயம் கூறியது.

"చేతాः." என்பதனுள் "చిత్" என்றதாதுவுக்கு సంజ్ఞా= நல்லறிவு என்பது பொருள். చేతనः = அறிவுடையவன் చైతన్యం= ஞானம். "చేతాः." அறிவிப்பவன். ஆன்மலிங்கம், ஞானலிங்கம், சிதம்பரம், ஞானசொரூபன், ஞானத்தை யளிப்போன், உலககுரு, பரமசிவன், என்பதொருபொருட்கிளவி. உம். [కూర్మపురాణే ఈశ్వరగీతాయాంత్రైవ॥ "అస్తిసర్వాంతరస్సాక్షా చ్చిన్మాత్రంతమసఃపరః। స్వాంతర్యామిసపుమ షస్సపాత్రిణోవైమహేశ్వరః." = எல்லாருள்ளும் பிரத்தியகூஷமாக விருக்கும் அறிவுமாத்திரையே வடிவமாயுடையவன் இருளுக்கு அப்புறப்பட்டுள்ள அந்தமகேச்சுரனே அந்தரியாமியாயும்புருடனையும்=உயிராயும் பிராணனையுமிருக்கின்றன். எறு.] இதுவுமது.

"கேவலः"=தனியன். எறு. உம் [கூர்மபுராணே ஈச்வரகீதாயாம்॥ "யதாபச்யதிசாத்மானம் கேவலம்பரமார்த்தतः। மாயாமாத்ரம்ஜகத்ஸர்வம் తదాభవతி ர்வ்ருతः. = எப்பொழுது கேவலம் = தனியாகிய ஆன்மாவை புண் மையாக மேலான பொருளென்று உணர்ந்துகொள்வாரே? அப் போது இவ்வுலகமெல்லாம் பொய்வடிவமாய் மாயையாக வொ ழியும் பின்பு அவன் துன்பமற்றவனுவன். எறு]. இதுவுமது. ["ஏ కీభూతస్యపరణாஸா తదాభవతికேவலः." = இந்தச்சீவன் பாத்தோடு கூட ஒன்று பட்ட போது "கேவலன்" தான்தனியனே யாகின் றான். எறு.] இதுவுமது [యదాజన్మజராదుఃఖ వ్యాధీనామెకభేషజం। కేవలం బ్రహ్మ విజ్ఞానం జాయతేకేవలశ్శివः. = எப்பொழுது பிறப்பு, மூப்பு, துக் கம், நோய், இவற்றைஎல்லா மொழிக்கவல்ல ஓரேமருந்தாகிய பிரமஞானத்தை யடைகின்றானே? அப்போது சிவனே யாகின் றான். எறு] இதுவுமது.

"நிர்குணः." = தன்னில்வேறுகிய குணமில்லாதவன். எனவே நிர்விசேட சின்மாத்திர சத்தாரோப மென்பர் அத்துவிதிகள். ஹேயகுணம் = பழிக்குணமில்லாதவ னென்பர் ஒருசார் விசிட் டாத்துவிதியர். மூலப்பகுதியி னின்றும் பிறந்த மூக்குணங்க ளோடுங்கலவாதவன். எறு.உம். [நிர்குணం நிஷ்க்ரியம்சாந்தம் நிரவద్యంనిరం జనం] என்றதுசுருதி.

"చ" = மற்றும். எறு. எனவே. [ఉమాసహాయంపరమేశ్వరం విభుం త్రిలోచనంనీలకంఠం ప్రశాంతం। ధ్యాత్వామునిర్గచ్ఛతిభూత యోనింసమస్తసాక్షింతమ సదిపరస్తాత్] இதனைகவவிடியோப நிஷத்து.

இவைமுதலிய விலக்கணங்களை யுடைய பரமேஸ்வரனே யாவர்க்கும் ஒருதலையாக உபாசிக்குங் கடவுள்என்று மேற்கூறப் பட்ட பிரமாணங்களின் முடிவுப்பொருள் என்றது அந்த சுவே தாசுவதரோபநிஷத்தின் உரையெனக்கொள்க.

இனி இக்கடவுளையே சாத்திரக்காரர்கள் அவ்வவ்விசேடச் சொற்களால் பலவகையாக விவகரிக்கின்றனர். அங்ஙனம் வேத மந்திரமே கூறுகின்றது. வருமாறு. మంత్రः॥ "సుపర్ణంపాగిరయోవ చోభిరకంస్తం బహుధాకల్పయంతి." = சிறந்த இருசிறைப்பக்கங்களை புடைய ஓரான்மாவை யுடையவன். புனைவுசெய்து பாடவல்ல

வேதியர் அவ்வொருவனையே சொற்களால் பலவாறுகப் புனைந் துரைக்கின்றார்கள். எ-று. காண்க. புனைதல் = அலங்கரித்தல் துதித்தலுமாம்.

அவ்விசேடமான சொற்கள் மற்றொரு வேதமந்திரத்துள் கூறப்படுகின்றது. வருமாறு, இருக்குவேதம். ఋగ్వేదే॥ "ఇన్ద్రంమిత్రం వరుణమగ్ని మాహురథోదివ్యస్సుపర్ణోగరుత్మాన్। ఏకంసద్విప్రాబహుధావదంత్యగ్నిం యమం మాతరిశ్వానమాహుः." = இந்திரன், சூரியன், வருணன், அக்கினி, திவ்வியமூர்த்தி, சுபர்ணன், கருடன், என்றிவ்வாறு பலவகையாக உடைய உண்மை வடிவசத்தாகிய அவ்வொரு பிரமத்தையே வேதமுணர்ந்தவர்கள் அக்கினியெனவும், இயமன் எனவும், வாயுவெனவும் கூறுகின்றனர். எ-று. காண்க.

மேல் வினா.

அற்றேல், மேற்கூறிய இந்திரமித்திர வருணன் முதலிய அவ்வச்சொற்கள் வேறுவேறு தேவர்கட்குப் பெயராக விருக்கின்றதே யல்லது அம்மொழிக ளெல்லாம் ஒருகடவுளைக் குறித்ததில்லை என்று நிச்சயிக்கவேண்டுவது. அங்ஙனமில்லையேல் வருணவேள்விக்கு இந்திரமந்திரத்தைக் கூறப்படுமாக எனில்?

விடை.

அதுகுற்றமன்று ஒரேகடவுட்கே மூர்த்தி வேறுபாடு பல வாயிருத்தலின் அந்தந்தமூர்த்திக்கு அந்தந்த மந்திரங்களைக்கூறுவது ஓர்நியமமாக விருக்கின்றது. என்பது. மாறுபாடற்ற தகுதியாக விருக்கின்றது. எங்ஙனமெனில்? சைவாகமத்துள் விளங்கக் கூறப்பட்ட பிராசாத தக்ஷிணமூர்த்தி, சோமாஸ்கந்த மூர்த்தி, சிந்தாமணி மூர்த்தி, மிருத்திஞ்சய மூர்த்தி முதலியமூர்த்தி விசேடம் ஒரேசிவனுக்குக்கூறப்பட்டுள்ளது. வேறுவேறுகஅந்தந்தமந்திரங்களையே அந்தந்த மூர்த்திக்கு விநியோகிக்க வேண்டுவதாகக் கட்டளையிடப்பட் டிருக்கின்றது. அதுபோலும், வைணவாகமத்திலும், கோபாலர், வாமநர், நரசிங்கர், இராமர், முதலியமூர்த்திகளின் மந்திரங்கள் வேறுவேறு கூறப்பட் டிருக்கின்றன. அவ்வாறே வேதத்துள்ளும் ஏன் இருக்க லாகாது? (இது வினாவிறுப்பு-எது, விடைவினாவுதலைப் போற்கூறுவது.

மேல் வினை.

அற்றன்று, தேவதா சொரூபங்களேயே வேறுவேறுளன்று கூறவேண்டும், என்னை? திரவியமும், தெய்வமும், ஆகிய விரண்டும் வேள்விக் கருமத்திற்கு உறுப்பாமன்றே? அங்ஙனம் சொரூபம் வேறுபடுதலால் கருமவேறுபாடும் கூறப்பட்டுள்ளது. வருமாறு, சுருதியுள், శ్రుతిః॥ "తస్తేపయసీదధ్యానయతిసావైశ్వదేవ్యామిక్షా వాజిభ్యోవాజినం." = காய்ச்சினபாலில் தயிரைவிடுகின்றான். அதிற் பிரிந்த தயிர்க்கட்டிவிசுவேதேவர்களுக்குச் சம்பந்தமான "ஆமிக்ஷா" என்னும் பெயரையுடைய ஹோமத்திரவியமாம். அதில் வேறுபிரிந்த நீர் "வாஜி" என்னும் தேவர்களுக்குச் சம்பந்தப்பட்ட "வாஜனம்" என்ற ஹோமத் திரவியமாம். எறு. இவ்விடத்துஎவ்வாறு "ஆமிக்ஷா" என்னும் திரவியத்திற்கும், "வாஜனம்" என்னும் திரவியத்திற்கும் பேதமுள்ளதோ? அவ்வாறே விசுவேதேவர்கட்கு வாஜியென்னும் தேவரினும் சொரூப வேறுபாடு உள்ளவாறுடன்பட வேண்டுமே எனில்?

மறுத்தல் விடை.

நல்லது உடன்படுகின்றும் ஆயின். உண்மையாக வுள்ளவன் ஒருவனே கடவுள் அவனுக்கு உபாசிப்பவர்கள் செய்கின்ற கருமஅனுட்டான காலத்தில் உபாதிபேதத்தால் = செய்கை வேறுபாட்டால், வேறுபாடு உண்டாகின்றது. அதனானேவாஜசனேயப் பிராமணத்தில் இஷ்டிப் பிரகரணத்தில் கருமஅனுட்டானத்தின் பொருட்டு விளக்கப்பட்ட தேவதைகளின் வேறுபாடுகளை அநுவாதமாகக்கூறி அவையெல்லாம்உண்மையல்ல வென்று மறுத்து ஓரேகடவுளென்பதே சத்தியமென்று துணிவுசெய்து நிச்சயிக்கப்பட்டது. வருமாறு. వాజసనేయబ్రాహ్మణ॥ "తద్యదీదమాహురముం యజేతాముంయజేతేత్యేకం దెవంతస్మైవసా విసృష్టి రెషవ స్సర్వ్వదెవాః." = வேள்விக் கருமத்தால் இந்தக்கடவுளைத் தொழுவாய் இந்தக்கடவுளைத் தொழுவாய்என்று வேறுவேறுகக்கூறுகின்றனர். அது ஓரேகடவுளைக் குறித்ததாம். இவ்வொரு கடவுளுடைய மாயாவிகார சிருட்டியேயல்லவா எல்லாக்கடவுளரும். எ-று. காண்க.

உபாசனை அனுட்டானபேதத்தால் பயன்வேறுபாடு.

ஓரே கடவுளானே வேறு வேறுகிய பயனை அடைவது அருமையென்று சங்கிக்கலாகாது. அங்ஙனம் உபாசிக்கும் தொ

ழில் வகை வேறுபாட்டானே பயன் வேறுவேறுக வுண்டாகின் றன என்ப துடன்படத் தக்கதாகின்றது. என்னை? சுருதியுள், ச்ருதிः॥ "தம்யதாயதோபா ஸதெத்தெதபவதி." = அவனை? யெவ்வாறு எவ் வாறு உபாசிக்கின்றானே? அவ்வாறே யாகின்றான். எ-று. காண்க. எவ்வாறு அரசன்ஒருவனேயாயினும் குடை கவரி முதலியனவுப சரிக்கும் பரிவாரங்கட்கு அவரவர் தொழிற்குத் தக்கவாறுபயன் வேறுபாட்டைத் தருவதற்குக் காரணனாக விருக்கின்றானே? அவ் வாறுளன உணர்க.

கடவுள் பயனைத் தருகின்றாரோ? அவனவன் செய்யும் பாவ புண்ணியகருமம் பயனைத் தருகின்றதோ? வென்பது விசாரம்.

கடவுள் பயனைத் தருகின்றானென்பதை பூருவமீமாம்ஸகர் உடன்படுகிறதில்லை. அங்ஙனம்பூருவமீமாம்ஸத்தின் "ஜைமினிசூத் திரத்தில்" ஒன்பதாவது அத்தியாயத்தில் விவகரிக்கப் பட்டது. "மீமாம்ஸாயாம் நவமாத்யாயெ அதிகரணம்" = (சமுசயம்) வேள்வியால் பூசிக்கப்பட்ட தேவதைகளாற் பயனுண்டாகின்றனவா? அல்லது அவ்வேள்விக் கருமம் (அபூர்வம்) அதிருஷ்ட முன்னிலையாகப் பயனைத் தருவதற்குக் காரணமாகின்றதா? என்பது.

(பூர்வபக்ஷம்) அவ்விடத்து. வேள்விசெய்து முடித்துவிட்ட வுடனே தோற்றமின்றி யழிந்து விடுகின்றது ஆதலால் அக் கருமம் அனித்தியமாக விருக்கின்றது. அப்படிப்பட்ட நிலையற் றகருமம் எப்போதோ உண்டாகும் பரிபாககாலத்தில் கிடைக் கும் புயனுக்குக் கருவியாவதில்லை. எனவே கூடுவதற்கு நியாய மில்லை என்றவாறு. ஆதலால் அக்கருமம் பயன்றருவதற்கு வே றொன்றைத் தோற்றுவித்து அதன் முன்னிலையாகப் பயனைத் தரு கின்றது என்று பயனைத்தருகின்ற முன்னிலையை ஒருதலையாக= அவசியமாக ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் அல்லவா? அந்த முன்னிலையாவது? சுருதிப் பிரமாணங்களும், கடவுள் அனுக் கிரஹமுமே யாக விருக்கின்றது. என்னை? சுருதி. ச்ருதिः॥தृप्तப் வைனமित्विः ப்ரஜயாபஷுபிस्तर्पयति." = வேள்விக் கருமத்தினல் திரு த்தியடைந்தவனாகிய இந்திரனே வேள்விசெய்த தலைவனை மக்க ளாலும் பசுநிரைகளாலும் திருத்தி யடைவிக்கின்றான். எ-று.

காண்க. இனி யுத்திப்பிரமாணம்வருமாறு. * கருத்தாதொழிலால் அடைவதற்கு மிகவிருப்பப் படுகின்றது ஆதலின்கருமம் = தொழில், காரகம் என்று சொல்லப்படுகின்றது. அதுவே பிரதானகருமம் = அதனல் வியாபிக்கப்பட்டது = கவரப்பட்டதாதலின் சம்பிரதான கருமம் அதனினுஞ் சிறந்ததாகின்றது. ஈண்டுதலைவனே கருத்தா, வேள்வியேகருமம், இந்திராதி தேவர்கள் சம்பிரதானகருமம், ஆகவே அவர் முக்கியராதலின் இந்திராதி தேவர்கள் பூசையைப் பெறுதற்குத் தக்கவராகின்றனர். வேள்வியென்பது ஓர்வகைப் பூசைவடிவமே யாதலின், அதிதிகளுக்கு=விருந்தினர்க்கு உண்டி எவ்வாறோ? அவ்வாறே தேவர்களுக்கு வேள்வி அங்கமாகின்றது. அதனல், பணிவிடையால் திருத்தியடைந்தஅரசன் அப்பணிசெய்யும் பரிவாரம்=சேவகர்க்குப் பயன் கொடுப்பதுபோல வேள்வியால் திருத்தியடைந்த தேவதை அவ்வேள்வி செய்த தலைவனுக்குப் பயனைத்தரும் - என்பது.

---

* கருத்தா, "కర్తృ" என்பது செய்பவன் "స్వకంత్రకర్తృ" என்றது பாணினீசூத்திரம். அதன்பொருள். வினையிற் சுதந்தாமுடையோன் கருத்தன். எ-று.

கருமம். "కర్మ" எதனைச் செய்கின்றதே? அது. எம், எது செய்யப்படுகின்றதோ? அது. எனவுமாம். "కర్తురీప్సితతమంకర్మ" = கருத்தாவுக்குக் கிரியை=தொழிலால் பொருந்தும்படிசிறந்து வேண்டிநிற்குங் காரகம்கருமம் என்னும் பெயரை அடைகின்றது. எ-று. இதுவும்பாணினீசூத்திரம். (காரகம்=வினைகொண்டுமுடியும் இரண்டனுருபுமுதல் எழனுருபுவரையுமானஆறுவேற்றுமையுருபுகளும் அதன்பொருளும். கருமம். எது. செயப்படுபொருளெனவும்படும். கிரியை, "క్రియా" =தாதுவின்பொருள் அல்லது தொழில். எனவே பயனிலை, அதனையுணர்த்திக் கருத்தொன்றச்சொற்றொடரை முடிக்கவல்ல திங்ஙந்தபதம்=வினைப்பகுபதமாம்.

சம்பிரதானம், "సంప్రదానం" = கருத்தாவின் றொழிலுக்கு உத்தேசம் = முன்னிலையாயுள்ளது. "కర్మణాయమభిప్రైతి ससంప్రదానం" கொடைத்தொழிலால் யாரைக்குறித்துக் கருத்தற்றுப் பொருந்துவாரே? அப்பொருந்தலையேற்றவன்சம்பிரதானமாம்-எ-று. இதனை நான்காம் வேற்றுமைக்குரிய கோளிப்பொருளாகக்கொள்க. இதுவும்பாணினீசூத்திரம். முதல். அத்: ச-ம்-பாதம்: உ-ம்-சூ. இனி அச்சூத்திரத்திற்கு ஆசிரியர்-வரருசியார். வார்த்திகம் வருமாறு. "క్రియయాయమభిప్రైతిససంప్రదానం" = கருத்தாதொழிலால்

(இனிச்சித்தாந்தம்) ஈண்டுகூறப் படுகின்றதாவது. வேள்விக்கும் தெய்வத்திற்கும் முறையே அங்கம் அங்கியென்னும் கருத்து என்று எதுகுறித்து எடுத்துக் கூறப்பட்டதோ? அதுசொல்லின் வேண்டுதலை அனுசரித்தலினல் வேறுபாட்டை யடைகின்றது. (எனவே அங்கம் அங்கியாயும் அங்கி அங்கமாயும் திரிகின்றது).

யாரைப் பொருந்துகிறுரை? அப்பொருத்த முடையோன் சம்பிரதானமாம். உ-ம். "పత్యేశే" கணவன் பொருட்டுச் சயனிக்கின்றுள் - எனவரும். அல்லதூஉம். அதற்கே அவ்வாருசியார் செய்த மற்றொரு வார்த்திகம் வருமாறு. "కర్మణికరణసంజ్ఞాసంప్రదానస్యచకర్మసంజ్ఞావక్తవ్యా." = கருமமாகிய செயப்படு பொருட்குக் கரணம் = கருவியாக மூன்றும்வேற்றுமையாற் கூறவேண்டுவது. சம்பிரதானமாகிய நான்காவதற்கு இரண்டாவதாய செயப்படு பொருளாற் கூறவேண்டுவது. எனவே வேற்றுமை மயக்கங் கூறியவாறு. உ-ம். "పశునారుద్రం యజతె" "పశునా" = பசுக்களால் என்ற கருவிப்பொருளுக்குச்செயப்படு பொருட்குறியாயும் "రుద్రం" = உருத்திரனை யென்னும் செயப்படுபொருட்குக் கோளியாகிய சம்பிரதான மென்னும் நான்காவதனுருபிணலும்அமைத்துக்கொண்டு. "పశుంరుద్రాయదదాతి" = பசுக்களை யுருத்திரனுக்குக் கொடுக்கின்றுன் என்று பொருள் கூறவேண்டுவது.

சாதாரணமாகச் செயப்படுபொருட்கு இரண்ட னுருபுவரும். "కర్మణిద్వితీయా" = என்றதுபாணினீசூத்திரம்.

கருத்தா = எழுவாயினும், காரணம் = கருவியிலும், மூன்றனுருபுவரும். "కర్తృకరణయో స్తృతీయా" என்றது பாணினீசூத்திரம்.

சம்பிரதானம்=கோளிப்பொருளில் நான்கனுருபு வரும். "చతుర్థీసంప్రదానే" என்றது பாணினீசூத்திரம். கோளி = கொள்வோன்.

அங்கம், "అంగం" = உறுப்பு = அவயவம். அப்பிரதானம் = முக்கியமில்லாமை = தலைமையற்றது.

அங்கி, "అంగి" = அங்கத்தையுடையது. பிரதானம் = முக்கியம்= தலைமையது.

மேற்கூறிய பூர்வபக்கூத்தில் தேவதை அங்கி, வேள்வி அங்கம். இனிவரும் சைமினிசித்தாந்தத்தில் வேள்வி அங்கியும் தேவதை அங்கமுமாம். இனி இந்தச்சைமினியார் கூறிய பூர்வமிமாம்ஸக சித்தாந்தமே வேதாந்திகளாகிய விசிட்டாத்துவித அத்துவித முதலியோர் சித்தாந்தமாக விருக்கின்றது.

அங்ஙனமாதலினன்றே ? "யஜேத"=வேள்விசெய்யவேண்டுவது என்றது விதிப்பொருட்டாகிய வினைச்சொல். அதனுள் "யஜ" "யஜ" என்பதுதாது அதின்மேல் "ஏத" "வத" என்றுவதற்குவந்த "தில்" திப்புமுதலிய விகுதியுறுப்பு "ஆக்கியாதம்" என்னப்படும் அந்தப்பகுதிக்கு வேள்விபொருள் அந்த உறுப்புக்குச் செய்வோன் என்பது கருத்துப்பொருள் என்று கூறப்படுகின்றது. அந்தக்கருத்து "கிம்" எதனை, கேன=எதனால், கதம்=எவ்வாறு என்று, கருதத்தக்கது, கருவி, இவ்வாறு செய்யத்தக்கது, என்னு மிலக்கணத்தோடுங் கூடிய மூன்றினையும் முறையேவேண்டுகின்றது.

ஆண்டு, வேள்வியது ஒத்தபதத்தால் அண்மைநிலைசெய்யப்பட்டதாமாயினும் தகுதியன்மையின் அதற்குக் கருதப்படுந்தன்மையில்லை.

எனவே. "யஜாம்யஜேத"=வேள்வி வேட்டான் - என்புழி "யஜ" என்றபகுதி யொன்றினானே "திப்" என்னும் வினைப்பகுபதவுறுப்பாகிய விகுதிகூடி வேட்டான் என்னும் பாவனைப்பொருளும், "ஸுப்" சுப், என்னும் பெயர்ப்பகுபதவுருபுகூடி, யாகப்பொருளாகிய வெள்விஎன்பதுவும் ஆதலின் யாகமென்னும் பொருட்டாகிய பெயர்ச்சொல்லுக்கும் பாவனைப்பொருட்டாகிய வினைச்சொல்லுக்கும். "ஸமானபதோபநீதத்வம்." ஒரே பதத்தாலண்மையிற் கொள்ளப்படுகை என்னும் சமீபம் சம்பந்த முண்டாயிருக்கின்றது. இதுவே "சந்நிதி" என்னப்படும். "ஆகாம்க்ஷை"=அவாயநிலை, "யோக்கியதை"=தகுதிநிலை, "சந்நிதி"=அண்மைநிலை, என்னும் மூன்றுநிலைமையும்தொடர்மொழிப் பொருளுணர்ச்சிக் காரணமாகவிருக்கின்றன. உலகத்தில், சாதாரணமாக, வள்ளலானவன் ஒன்றனைக் கொடுக்கும்பொழுது தான்விரும்பினவனுக்கும், ஏற்றலுக்குத் தகுதியானவனுக்கும் அடுத்திருக்கும் சம்பந்தமுடையவனுக்கும் அன்றே ? கொடுக்கின்றான் : அவ்வாறே பாவனை என்னும் வள்ளலுக்கு யாகம் என்பது அண்மை நிலை என்னும் அடுத்திருக்கும் சம்பந்த மூண்டாயிருத்தலின் பாவனையாகத்தையே பற்றவேண்டுவதாயினும் அந்தபாவனையின் இலக்கியம்=குறிப்புக்கு வேள்விதக்கதகுதி நிலையுடைய தல்லாமையின் அதுபாவிக்கப்படுகின்றதில்லை. அதனனே அந்தயாகத்திற்குக் கருதப்படுந்தன்மையில்லை - என்றவாறு. பாவனை=கருத்து.

சுவர்க்கமென்பதுவோ ? தொடர்மொழித்தொடக்கத்தானே கொள்ளப்பட்டதாமாயினும் புருடார்த்த மாதலின். தகுதியுடைமையின் கருதத்தக்கதாகின்றது.

జ్యోతిష్టోమెనస్వర్గ కామోయజెత என்றது சுருதிவிதிவாக்கியம். இதனுள் அதிகாரியையுணர்த்துமொழியாகிய "స్వర్గకామః" என்னும் விசேடணத்தொடர் மொழியில் சுவர்க்கம்என்பதுகொண்டுவரப்பட்டது. அவ்வளவன்றி "యజెత" என்றமொழியிலுள்ள விருதியால் உணர்த்தப்பட்ட பாவனைக்கும், சுவர்க்கம் என்னு மொழியா லுணர்த்தப்பட்ட சுவர்க்கத்திற்கும் "சமானபதோபந்தத்துவ" மென்னும் அண்மைநிலைமை யில்லை ஆயினும், சுவர்க்கம் புருடார்த்தமாக விருக்கின்றது: செய்பவனுக்குப் பயனுக விருக்கின்றது. அருத்தமென்பது பயனுக விருத்தலின், கருத்தாவின்கருத்துக் குறித்தது முக்கியமாய்ப் பயனுகுமே யன்றி அதன்கருவிகள் அவ்வளவு குறிப்பையுடைய வல்லவன்ரே? சுவர்க்கத்தை விரும்புவோன் ஜோதிட்டோமம் என்னும் வேள்வியால் "யஜனம்" = என்னும் தேவதா ஆராதனை = பூசை செய்யவேண்டுவது. என்று மேற் சுருதிவாக்கியத்திற்குப் பொருளாதலின் சுவர்க்கமே கருதத்தக்கபொருளாகின்றது என்பது.

அந்தச்சுவர்க்கத்துக்கு எதுகருவி? எனவே, எதனுலந்தச் சுவர்க்கத்தை யடையலா மென்னும் கருத்தில்=அவாயநிலையில்-வேள்வியென்பது கருவியாகச் சம்பந்தப்பட்டு வருகின்றது. எனவே, வேள்வியால் சுவர்க்கத்தைப் பெறலாமெனவும், சுவர்க்கத்திற்கு வேள்வி கருவியெனவும் பொருள் படுகின்றது. பெறத்தக்க சுவர்க்கத்தைப் பெறுதற்கு முதற்கண் கருவியாகிய வேள்வியைச் செய்து முடிக்கவேண்டுதலின் சுவர்க்கக் கருவியாகிய அவ்வேள்வியே செய்து முடிக்கவேண்டிய பொருளாகின்றது. அது, தனக்கு "నిష్పాదకం" நிஷ்பாதகம் = நிறைவேற்றுவது= பிறப்பிப்பது. எனவே கருவியாகிய பொருளையும் தேவதையையும், இவ்வாறு பெறவேண்டுவதுஎன்னும் வகைமையோடுவேண்டுகின்றது. (எனவே யாகமானது தான்முடிவதற்குப் பசுவாகிய அவிசிலுல் தேவதையை இவ்வாறு என்னும் வகைமை வேண்டுகின்றது. என்பதுகருத்து.) அதனல் யாகம் அங்கி, அதற்குத் தேவதை அங்கம், எனமுடிதலின், உண்டியால் விருந்தினர் உபசரிக்கப் பட்டாற்போல் வேள்வியால் தேவதை பூசிக்கப் படுகின்றதில்லை.

வேள்வியென்னும் கருமத்தால் இந்திராதி தேவதைகளைப் பூசிக்கின்ருன் என்று உரைசெய்து யாகமென்னும் கருமத்திற்காயினும் கோளிப் பொருட்டாகிய குறியையடைந்த இந்திராதி தேவர்கள் முக்கியராதலின் பயனைத் தருகின்ருரென்று பூர்வபக்ஷத்தான்யுத்திகூறினன்.

சுவர்க்கமடைய விரும்பியகருத்தா வொருவன் அச்சுவர்க்கத்தை யடையும்பொருட்டு வேள்வியைச் செய்கின்றான் அந்தவேள்வியே சுவர்க்கப்பயனைத் தருகின்றது. ஓவிர்த்திரவியம், தேவதை, தொழில்வகையுமாகிய இவைகள் அந்தவேள்விக்கு அங்கமாகின்றது. ஆதலின் அதுமுக்கியமல்ல. வேள்வியே அங்கியாதலின் முக்கியமாக நின்று பயனைத்தருகின்றது என்பது சைமினிசித்தாந்த முடிபு. இதுவே அப்பூர்வமீமாம்ஸையின் இந்த அதிகரணத்தின் யுத்திநியாயக்கருத்தின் பொருள்.

இனி இச்சித்தாந்தி பூர்வபக்ஷத்தோன் கூறிய சுருதிவிரோதத்தை விலக்குவான் றொடங்கினர். வருமாறு. "తృప్తఏవైనమిష్ట్యా పశుభిస్తర్పయతి." என்று எந்தச்சுருதி தேவதை பயனைத் தருகின்றது என்று எடுத்துக் காட்டப்பட்டதோ? அது, தன்னுரைப் பொருளில் கருத்துடையதல்ல, காட்சிமுதலிய பிரமாணங்களுக்கு விரோதமாதலின். என்னை? யாதொரு தேவதையானும் சரீரியாக வந்து அவிசைப்புசித்துத் திருத்தியடைந்து பயனைக் கொடுப்பதாக யாருக்கும் கண்காண வெளிப்படுதல்லாமையின். அன்றியும், அவ்வாறில்லாமலே போதலென்னும் "அபாவம்"= இல்லாமை. காட்சிப் பிரமாணத்தாலும், "யோக்கியானுபலத்தி" என்ற பிரமாணத்தினாலேயும் தெரிவிக்கப் படுகின்றது. "யோக்கியானுபலத்தி" என்பது. தெரியத்தக்கது தெரியாமற்போதல்.

அல்லதூஉம், அசுவமேதப் பிரயோகத்தில் சுருதி, శ్రుతిః॥ "స్తైగాందగ్నుష్ట్యోః ష్యేనముండూకాంజంభ్యభి" இதுமுதலியவற்றுள் தேகவுறுப்புக்களாகிய கோளைப்பற்கள் முதலிய திரவியங்கள் அவிசைத்தின்னுவதனால் "స్తైగా" ஸ்தைகா, தவளை, முதலியதிரியக்கு உயிர்களும் ஒருவிசேடமான தேவதைகள் என்று வேதத்துட் கூறப்படுகின்றது அப்படிப்பட்டதெய்வங்களெல்லாம்பயனைத்தருகின்றது என்று நம்பத்தக்கதா? தக்கதல்ல. வன்றே? ஸ்தைகா= ஒருவகை ஜந்து.

சுருதி. శ్రుతిః॥ "ఓషధీభ్యస్స్వాహావనస్పతిభ్యస్స్వాహామూలేభ్యస్స్వాహా." என்றது முதலியவற்றுள் அறிவற்ற ஓஷதிகள்=பயிர்வகை மூலிகை முதலிய வனஸ்பதி=மரவகைகள் அவற்றின் உறுப்புகளாகிய வேர்முதலியனவும் தேவதைகள் என்று கூறப்படுகின்றன.

ஆண்டு, அப்படிப்பட்ட தேவர்கள் எந்தவேறுதுவிஞல் அவிசைப் புசிப்பார்கள்; புசிப்பேயில்லாதவழித் திருத்தி எங்ஙன

முண்டாம்; திருத்தி என்பதில்லாவிடின்பயனெவ்வாறுதருவர். ஆதலின் சரீரமுதலிய வுடையதேவர்கள் என்பார் ஒருவருமில்லை யாதலால் தேவதாப்பிரசாதம் யாகபயனைத் தருவதற்கு முன்னிலையல்லவாம்.

பிறவெனில்? அவ்வேள்விப்பயனுக்கு முன்னிலை = வரும் வழியாதெனில்? சுருதியால் உணரப்படுகின்றபடிக் கருமம் கருவியாக வேண்டுவதன்றே? அது வேறுவகையாற் பொருந்துவதில்லையா மாதலின் கற்பிக்கத்தக்க ஊழே அதற்குவரும் வழியென்றுடன்பட்டு அந்தத்தேவர்களிலும் அந்த அபூர்வமே பயன் வருவழியென்று ஒருதலையாக கூறவேண்டுவது. (எனவே.வேதத்துட் கூறப்பட்ட கருமங்கள் அதிருஷ்டத்தை யுண்டுபண்ணுகின்றது, அந்த அதிருஷ்டம் பயனைத்தருகின்றது. என்பது கருத்து.)

மந்திரங்கள், அருத்தவாதம், இதிஹாசங்கள், புராணங்கள், முதலியவற்றுள் தேவதைகளும் தவங்களைச்செய்தனர்; வேள்விகளை யனுட்டித்தார்கள்; பிரமாஸ்திரமுதலிய மந்திரங்களைப் பிரயோகித்தனர்; எந்தெந்தக்கருமங்களைச்செய்து எவ்வெவ்வளவு அதிருஷ்டத்தை யடைந்தனரோ? அவ்வளவுபயன் சித்திபெற்றார்கள் என்று கூறப்பட்டிருக்கின்றன.

ஆதலின், அவனவன்செய்த கருமம் அதிருஷ்டத்தை யுண்டுபண்ணி அந்தவழியால் அவ்வவனுக்கும் பயனைத் தருகின்றது. அக்கருமத்துள் தேவதை ஓர்அங்கமாகவே யிருக்கின்றது. அவ்வளவேயன்றித் தேவதை பயனைத்தருவதில்லை என்று சித்தாந்தமாகின்றது. (அதிருஷ்டம்=அபூர்வம்=ஊழ்=புண்ணியபாவம்.) இத்துணையும் பூருவமீமாம்ஸாதி கரணவிசாரம்.

இனி உபநிடதங்களின் கருத்தின்படி உத்தரமீமாஞ்சகர்களாகிய வேதாந்திகள்கூறும் முடிபு அவர்கள்நூலில், இரண்டாவது. அத்தியாயத்தில் அதிகரணவிசாரம் செய்யப்பட்டிருக்கின்றதாவது.

கடவுளே பயன்றருவோர் என்பது.

(சமுசயம்) தருமமா? அல்லது ஈசுவரனா? பயனைக்கொடுப்பது என்பது.

(பூர்வபக்ஷம்) மேல் மீமாம்ஸகர் கூறிய நியாயத்தினல் அதிருஷ்டமே பயனைத்தருகின்றது. என்பது.

(சித்தாந்தம்) அதிருஷ்டமெனவே புண்ணியம்; அதுதருமம்அன்ரே? அத்தருமம்எப்பொழுதும்தருமியைப்பற்றியேநிற்கவேண்டுவது. தருமியென்பவன் தருமத்தைச்செய்தவன்அன்ரே? ஓ!மீமாம்ஸகரே! தருமம்அசேதனம்=அறிவற்றதைப், பற்றியா? சேதனம் = அறிவுள்ளதைப், பற்றியா நின்று பயனைத் தருகின்றது? முதற்பக்ஷமாகிய அசேதனத்தைப்பற்றி நிற்பது என்றுடன்படுகின்ரூயோ? ஆண்டு ஏற்றத் தாழ்வுகளை யறியமாட்டாத அசேதனம் தக்கவாறு பயனைக் கொடுப்பதற்குத் தகுதியுடைய தல்லவாம் ஆதலின் அது ஒத்ததல்லவாம். இரண்டாம் பக்ஷமாகிய சேதனத்தைப்பற்றி நிற்பதை யுடன்படுவதில் ஆனலோ? தருமம் எந்த அறிவைப்பற்றி நின்று பயனைத் தருகின்றது என்பாயோ? அந்தச்சேதனனே பயன் கொடுப்பவன் என்ரூற் சாலுமே அதுமற்றும் எளிதன்ரே?

அங்ஙனமாயின், தருமம் என்னும் பொருளுக்குப் பயனேயில்லாது போதலின் அது வீணே? என்று விளவுதல் வேண்டா. எல்லாப் பயனையுந் தரவல்ல முற்றுணர்வுகிய ஈசுவரனுக்கு "வைஷம்மியம்"=நடுநிலை, யின்றிச்சிலர்க்குமிகுதியாகவும் சிலர்க்குக் குறைவாகவும் கொடுப்பது, "நைர்க்ருண்யம்" = தயவில்லாமை, என்ற குற்றம் தங்காமையின் பொருட்டுத் தருமம் என்பது வேண்டியிருத்தலின்.

தருமமே யில்லாவழி சிலர்க்கு மிகச்சிறந்த தலைமைச் சுகத்தையும், சிலர்க்கு இடையிட்ட சுகத்தையும், சிலர்க்குக் கடைப்பட்ட சுகத்தையும் ஊட்டுவித்த இறைவன்=கடவுள், செய்கை எவ்வாறு விஷமமல்லாததாகும். பலவகைப்பட்ட துன்பங்களையுண்டுபண்ணு மவரைய் எவ்வாறு தயவில்லாதவ ரகாமற்போவான் அங்ஙனமாகக் கூடாமையின் அவனவன்செய்த புண்ணியத்திற்கிடாக அவனவனுக்குச் சுகமும், பாவத்திற்கிடாகத் துன்பமும், ஆசிரியன், பிதா, அரசனைப்போல ஊட்டுவிக்கின்ற இறைவனுக்கு நடுநிலையில்லாமை, தயவில்லாமை என்னும் குற்றம் சாருதலில்லை. ஆதலால், துட்டருக்குத் தண்டனையும், சிட்ட

ருச்குக் காத்தலாகிய அருளும்செய்கின்ற ஆசிரியன், பிதா, அரசனுக்கும் நடுநிலையில்லாமை யேனும், தயவில்லாமையேனும் இல்லையல்லவா? அவ்வாறே இறைவனுக்கு மென்றுணர்க.

"ஸ்தை," ஸ்தைதகம், தவளை, முதலியதிரியக்குயிர்களும், (வனஸ்பதி) பயிர்வகைசெடிபுதல்வகைமரவகைவேர் முதலிய நிலைத்திணைப்பொருள் = அசைவற்றனவும், பயனைத் தருகின்றதரத்தையுடையனவல்லவாதலின்பயனைக்கொடுக்கமாட்டாது என்பதல்லவோ? நின்கருத்து; அஃதங்ஙனமாக. எல்லாவல்லமையும் எல்லாத்தகுதியு முடைய பரமன் எல்லாவற்றுள்ளும் நிறைந்தவனு யிருத்தலின் அவ்வெல்லா வடிவுயுமிருந்து பயன்றருகின்றான் என்பதற்குத் தடையென்னுளது?

శ్రుతిః॥ "తృప్తఏవైనమిన్ద్రియైః ప్రజయాపశుభిస్తర్పయతి" என்றசுருதிக்குத்தன்னுரைப் பொருளிற் கருத்தில்லை என்றல்லவோ? கூறியது. பின்னெங்குள தென்னில்? இலக்கணைப் பொருளில் என்றுணர்க. இந்திரன் என்னுமொழிக்கு இந்திரன் என்கின்ற தேவதைக்குள்ளிருக்கும் அந்தரியாமியாகிய பரமேச்சுரனே பயனைத்தருகின்றவன் என்று அந்தசுருதிக்குக் கருத்து. என்னை? அந்தக்கருத்தையே மற்றோரிடத்து அவ்வேதமே கூறுகின்றது. வருமாறு. "అం తదనుప్రవిశ్యాన్నాజనానాం" = உடம்பினையடைந்த பிராணிகளின் உள்ளத்துள்ளே புகுந்து பரமேச்சுரன் நடத்துவோனை விருக்கின்றான். எ-று. காண்க. கடவுளென்பதும் இப்பொருட்டு எனக்கொள்க.

ஆதலால் கடவுளருளே பயனுக்கு வழியென்றுணர்க.

இனி, சைமினி மதமாகிய பூருவமீமாம்ஸத்திற்கும், வியாசமதமாகிய வுத்தரமீமாம்ஸத்திற்கும், தம்முள் ஒன்றற்கொன்று மூரணுதலுண்டாயிற்றே யெனின்? அஃதின்று அவ்வவரும் சொல்லப்புகுந்த விசேடங்களை நன்கு உள்ளுறுத்திவிசாரிப்பின் சமாதானமுண்டாகின்றது.

எங்ஙனமெனில்? தேவதத்தன் என்பவனே பாகஞ்செய்தவன்=சமையல் செய்தவனுயினும், நன்றாக எரிந்ததைச் சொல்லத்தொடங்கி இன்று விறகுசமைத்தது என்று கூறும் உலக

வழக்குப்போலப் பரமேசுவரனேபயனைத் தருபவனுயிருப்பினும், யார்க்கும் ஒருபடித்தாகாது ஏற்றக்குறைவாகப் பயனை ஊட்டுவித்தற்கு நிமித்தமாதலின் அதிருஷ்டமே சிறந்ததெனச் சொல்லக்கருதித் தருமமே பயனைத் தருகின்றது என்று ஜைமினியார் கூறிய விவகாரம் ஏன் உலகசம்மதமாகா தொழியும் என்பது சித்தாந்தமுடிபு.

அதனல், அவ்விரண்டு மதங்களும் விரோத மில்லாமையால் பயனைத்தரத்தக்க இறைவன் ஒருவனே. எல்லா விடங்களினும் யாவராலும் எல்லாவகையாலும் விதிப்படி பூசிக்கப்படும் முதற்கடவுள்ஒருவனுகவிருக்கின்றுன்என்பதுதுணிபு. இஃதுஇத்துணையினமைக.

முதற்கடவுளிலக்கண முற்றிற்று.

அதிதிபூசை=விருந்தோம்பல்.

அதிதி=விருந்தினர்க்கு,இலக்கணத்தைநூலாசிரியரோமேற் கூறுவர். இனி மூலத்துள் "देवतातिथिपूजकः" = தேவர்களையும் அதிதிகளையும் பூசிப்பவன். என்றது. பூசிக்கும்வகையை வருஞ் சுலோகத்திற் கூறுதும்.

மூலத்துள். "नावसीदति." = துக்கப்படுவதில்லை - எ-று. தேவர்களையும் அதிதிகளையும் பூசிப்பவன் துயரமடைவதில்லை. எனவே பூசிக்காதவன் "अवसीदति" = துயரப்படுகின்றுன் என்பது தானே போதருகின்றது.

பூசியாதவன்றுன்பமுறுவன்.

அங்ஙனம் கூர்மபுராணத்துட் கூறப்பட்டது. வருமாறு, कूर्मपुराणे॥ "योमोहादथवालस्या दकृत्वादेवतार्चनं। भुङ्क्तेसयातिनरकं सूकरेष्वि हजायते। अकृत्वादेवपूजांच महायज्ञांस्त्विजोत्तमः। भुंजीतचे न्नमूढात्मातिर्य्यग्योनिंनिगच्छति" = யார்? அறிவில்லாமையாலாயினும் சோம்பலினமை = ஆலசியத்தாலாயினும், தேவ பூசையில்லாமல் புசிக்கின்றுனே? அவன்அச்சத்தைத் தருகின்ற நரகத்தை யடை

ந்து பின்பன்றியாகப் பிறப்பன். வேதியரிற் சிறந்தோனையும் யார்? தேவர்பூசையையும் ஐம்பெரும் வேள்விகளையும் செய்யாமற் புசிப்பானே? அந்தமூடபுத்தி யுடையவன் திரியக்குயிர்கள்= மிருகங்களாகப், பிறக்கின்றான். எ-று. காண்க.

விருந்தினர்புலந்துபோதலால் வரும்பயன்.

மார்க்கண்டேயர், మార్కండేయుఃll "అతిథిర్యస్యభగ్నాశో గృహాత్ప్రతి నివర్తతే। సతస్యదుష్కృతందత్వా పుణ్యమాదాయగచ్ఛతి." = உண்டிவேட்டு= உணவைவிரும்பிவந்த, விருந்து தன்விருப்பம் பங்கப்பட்டு, யார் வீட்டினின்றும் பின்செல்வாரே? அவ்விருந்து தன்பாவத்தை யவ்வீட்டிலிருக்கும் தலைவனுக்குக்கொடுத்து, அவ்வில்லத் தலைவ னுடைய புண்ணியங்களைக்கைக்கொண்டுசெல்லுகின்றான். எ-று. காண்க.

தேவலர். దెవలఃll "అతిథిర్గృహమభ్యేత్య యస్యప్రతినివర్తతే। అసత్కృ తోనిరాశశ్చ ససద్యోహంతితత్కులం." = விருந்து எந்த இல்வாழ்வான் மனைக்குட் சென்று உபசரிக்கப்படாமலே ஆசைகெடுக்கப் பட் டவனைப்பின் திரும்பி வீணாகச் செல்லுகின்றானே? அவன் அப் பொழுதே அவ்வில்வாழ்வான்குலத்தை நாசஞ் செய்கின்றான். எ-று. காண்க.

பூசித்தவன் பெறும்பயன்.

பூசித்தால் துயரமில்லையென்ப தொன்றுமாத்திரமே யன் று சுபம்=நன்மையு, முண்டு. அங்ஙனம் விஷ்ணுதருமோத்திரத் தில் கூறப்பட்டது. విష్ణుధర్మోత్తరేll "యేర్చయంతి సదావిష్ణుం శంఖచక్రగదా ధరం। సర్వపాపవినిర్ముక్తా బ్రాహ్మణ్యం ప్రవిశంతితే," = யார் சங்குச்சக்கரகதை களைத் தரித்த விஷ்ணுவை யெப்பொழுதும் பூசிக்கின்ற ரோ? அவர்கள் எல்லாப்பாவத்தினின்றும் விடப்பட்டவர்க ளாய் வேதியர்களாகப் பிறக்கின்றார்கள். எ-று. காண்க. (బ్రాహ్మణం ప్రవిశంతితే) என்பது பாடமாயின் சதுமுகப் பிரமனுலகத்தையடை கின்றான், என்று பொருளுரைத்துக் கொள்க. (బ్రహ్మణంప్రవిశంతితే) என்ற பாடமாயின் பிரமத்தோடு கலப்பை யடைகின்றார்கள். என்றுணைக்க.

கூர்மபுராணம், కూర్మపురాణే॥ "వేదాభ్యాసోన్వహంశక్త్యా మహాయజ్ఞక్రియాతథా। నాశయత్యాశుపాపాని దేనానామర్చనంతథా." = நாடோறும் சத்தியுள்ள வளையிற்செய்த வேதமோதலும், அவ்வாறே செய்த ஐம்பெரும் வேள்வித்தொழிலும், அவ்வாறே தேவர்களைப் பூசித்தலும் பாவங்களை யொழிக்கின்றன. எ-று. காண்க.

மனு. మనుः॥ "అతిథింపూజయేద్యస్తు శ్రాన్తంచాదుష్టమాగతం। సవృషం గోశతంతేన దత్తంస్యాదితిమేమతిः." = யார்! தன்மனைக்கு இளைப்படைந்துவந்தகுற்றமற்ற விருந்தினனைப்பூசிக்கின்றானே? அவனால் நூறு கோதானம் ஒரு இடபதானம் அல்லது, இடபத்தோடு நூறுகோதானம் செய்யப்பட்டதாக கொள்வதுளன்கருத்து. எ-று.காண்க.

விஷ்ணு. విష్ణుः॥ స్వాధ్యాయేనాగ్ని హోత్రేణ యజ్ఞైనతపసాతథా। నావాప్నోతి గృహీలోకాన్ యథాత్వతిథిపూజనాత్." = இல்லறத்தானனவன் அதிதியைப் பூசிப்பதால் எவ்வாறுகப் புண்ணியலோகத்தை யடைகின்றானே! அவ்வாறுக வேதமோதலினாலும், அக்கினி ஹோத்திரத்தைஹோமஞ்செய்தலாலும், வேள்வியாலும், தவத்தாலும், பொருந்துவதில்லையாம். எ-று. காண்க.

தனக்கென்றுலையேற்றலாகாது.

வைசுவதேவம், முதலியவேள்வியின்பொருட்டுச்சமைத்து, அவிசினைத் தேவர் முதலியோர்க்கு ஹோமமுதலிய வடிவாகவூட்டுவித்து. "హుతశేషంభుంజీత." ஹுதசெடம் என்னும்பெயரையுடைய = வேள்விசெய்து மிகுந்தமிச்சிலாகிய அந்தப் பரிசுத்தமான அந்தத்தைப் புசிக்கவேண்டுமேயல்லாது, தானே யுண்ணும் பொருட்டாக அடுப்பில் உலையேற்றிச் சமைப்பிக்கலாகாது.

அங்ஙனம் கண்ணன் கூறினர். வருமாறு, பகவற்கீதை. భగవద్గీతాయాం॥ "యజ్ఞశిష్టాశినస్సంతో ముచ్యంతె సర్వకిల్బిషైः। భుంజతేతేత్వఘం పాపా యెపచంత్యాత్మకారణాత్." = வேள்வியின் பொருட்டு உதவிக்க அந்தத்தைப் புசிப்பவர்களானால் எல்லாப் பாவங்களாலும் விடப்படுகின்றார்கள் எந்தப்பாவிகள் தம்பொருட்டே சமையல் செய்வித்துக் கொள்கின்றார்களோ? அவர்கள் பாவங்களை யனுபவிக்கின்றார்கள். எறு. காண்க.

ஹ-தம் என்னுஞ் சொல்லின் பொருள்.

இனி மூலத்துள். "హుతఞ్చ," = என்றது. ஆண்டு ஹ-தம் என்னும் மொழி மஹாபாரதத்தில் பொருளுரைக்கப்பட்டது. మహాభారతే॥ వైశ్వదేవాదయోహోమా హుతమిత్యుచ్యతేబుధైః"=வைசுவதேவ முதலிய ஹோமங்கள் அறிவுடையோரால் ஹ-தம்என்று கூறப்படுகின்றன- என்று. காண்க.

ஹ-தத்தினுடையமீதி "ஹ-தசேஷம்" என்னப்படும். அந்த ஹ-தசேடமொழி தேவர்கள், முனிவர்கள், மனிதர், இவர்கள் பூசைக்குதவிமிகுந்துள்ளதை இலக்கணையால் உணர்த்துகின்றது.

அங்ஙனம் மனுவுங்கூறினர். வருமாறு, మనుః॥ " దేవాన్ఋషీన్మనుష్యాంశ్చపితౄన్గృహ్యాశ్చదేవతాః। పూజయిత్వాతతఃపశ్చాద్గృహస్థశ్శేషభుగ్భవేత్। అఘంసకేవలంభుఙ్తే యఃపచత్యాత్మకారణాత్। యజ్ఞశిష్టాశనంహ్యేత త్సతామన్నంవిధీయతే."=தேவர்களையும், இருடிகளையும், மனிதர்களையும், பிதிரர்களையும், மனைத்தேவதைகளையும் பூசித்துப் பின்பு இல்வாழ்வான்மிகுந்த மிச்சிலுணவைப் புசிப்பவனேவேண்டுவது. யார்? தன்பொருட்டாகவே பாகஞ்செய்து கொள்ளுகின்றானே? அவன் பாவத்தையனுபவிக்கின்றான். வேள்விக்கு உதவி மிகுந்த இந்த உண்டிப்பொருளன்றே? நல்லறிவுடையோர்க்கு அங்ஙமாக விதிக்கப்பட்டது. என-று. காண்க.

இனி வேதியனிலக்கணம்.

மூலத்துள். "బ్రాహ్మణోనావసీదతి" = என்றது. அவ்விடத்து, எந்தவிலக்கணமுடைய வேதியனை ஆசிரியர்-பராசரனர் கூறவெடுத்துக் கொண்டானென்ன? அதுமஹாபாரதத்துட் கூறப்பட்டது. మహాభారతే॥ "సత్యందానం తపశ్చైవ మానృశంస్యంక్షమాఘృణా। దృశ్యంతే సత్కులంయత్రసవైబ్రాహ్మణస్మృతః."=சத்தியம், தானம், தவம், சுத்தமுடைமை, வன்செய்கையில்லாமை=பிறிதோருயிர்க்குத் துன்பம் விளைத்த வில்லாதிருத்தல், பொறுமை, தயவு, நல்ல வேதியர் குலத்துட்பிறந்திருந்தல், இந்த இலக்கணமுடையவன் வேதியன் என்று கூறப்பட்டான். என-று. எம்.

இதுவுமது. "జితేన్ద్రియోధర్మపర స్స్వాధ్యాయనిరతశ్శుచిః। కామక్రోధౌవశేయస్య తందేవాబ్రాహ్మణంవిదుః."=ஐம்பொறிகளையும் அடக்கினவன்,

தருமமே சிறந்ததென விரும்பிக்கொள்பவன், ஓழியாது வேத மோதுபவன், பரிசுத்தனவன், காமத்தையும் குரோதத்தை யும் தன்வசமாக்கி வைத்திருப்பவன் யாரோ? அவனைத் தேவர் கள் வேதியனாக மதிப்பார்கள். எறு. எம்.

இதுவுமது. "యస్యచాత్మసమోలోకో ధర్మజ్ఞస్యమనస్వినః। స్వయంధర్మ ణచరతి తందేవాబ్రాహ్మణంవిదుః." = தருமங்களையுணர்ந்து நல்ல மனத் தையுடையவனைத் தான் தருமவழியில் நடந்துகொண்டு தன் னைப்போல உலகுயிர்களையும் சமமாக நினைப்பவன் யாரோ? அவ னை வேதியனாகத் தேவர்களறிவர். எறு. எம்.

இதுவுமது. "యోధ్యాపయెదధీతేవా యాజయెద్వా యజెతవా। దద్యా ద్వాపి యథాశక్తి తందేవాబ్రాహ్మణంవిదుః=யார்? தனக்கு இயன்றமட்டில் வேதத்தை யோதுவனே? ஓதுவிப்பானே? வேள்விசெய்வனே? செய்விப்பனே? தானத்தைக்கொடுப்பனே? அவனையே வேதிய னென்று தேவர்களறிவர். எறு. எம்.

இதுவுமது. "అహోరివబుణాద్భీతస్సన్తానాన్న రణాదివ।కుణపాదివయస్త్రీణ భ్యస్తందేవాబ్రాహ్మణంవిదుః" = "பாம்புக்கு அஞ்சுவதுபோலக் கடன் கோடலுக்குபயந்தவன், சாதலுக்குப் பயந்தவனைப்போலப் பிற ன்தன்னை உயர்ந்தோனென நன்குமதிப்பதில் பயந்தவன், பிணத் தைக்கண்டு அருவருப்பதுபோல அன்னியன் மனவியைப்புணர் வதற்குப் பயந்தவன் யாரோ? அவனே வேதியனென்று தேவர்க ளறிவர். எறு. எம்.

இதுவுமது. "ఋమాదయాచఽజ్ఞానం సత్యంచైవదమశ్శనుః। అధ్యాత్మనిర తిర్జ్ఞాన మెతద్బ్రాహ్మణలక్షణం"=பொறுமை, சிவகாருணியம், விஞ்ஞா னம், உண்மைகூறுதல், புறக்காரணங்களை யடக்குதல், அந்தக் காரணங்களை யடக்குதல், வேதாந்தங்களை அறிதலிலும் யோகப் பழக்கத்திலும் ஓழியாமற் றன்வாழ்நாளைச் செலுத்துதல், பிரம ஞானம், இவைகளே வேதியனுக்குரிய இலக்கணமாம் – எறு. விஞ்ஞானம். விசேடமாகிய உலகுணர்ச்சி,சாத்திரவுணர்ச்சி, சிற் பவுணர்ச்சி, என்னப்படும். சிற்பம் என்பது சுருளத சூத்திரங்க ளிற் கூறப்பட்டுள்ள "కల్పం" சுற்பம் என்னும் வித்தையாம். புறக்காரணமடக்கல் = ஐம்பொறிமுதலிய வடக்கல். அந்தக்கரண மடக்கல் = மனமடக்கல். என்னும் கூறுமாறுகாண்க.

இங்ஙனம் கூறியதால் முடிந்த தென்னையெனின்? வேதியன் ஆஹிதாக்கினி=அந்தந்த நிலைமைக்குத்தக்க வேள்வித்தீயுடையனுயிருத்தல், ஒருக்கால் அவ்வாறில்லாவிடினும் மேற்கூறிய விலக்கணங்களுட் சிலவேனுமுடையனுய் வேதியர் குலத்துட் பிறந்தவன் யாரோ? அவனும் ஈண்டு வேதியன் என்றுநினைக்கப்படுகின்றுன். என்ற முடிபுடைய தாகின்றது.

இனி மூலத்துள். (கஅ) வது சுலோகத்தில் "చతుర్ణామపి వర్ణానాం" என்று விளுவப்பட்டது. (ஙசு) வது சுலோகத்தில் "చాతుర్వర్ణ్యసమాచారం" என்று கூறப்பது. இவை சாதாரண தருமத்தைக்குறித்தன. (ஙகூ) வது சுலோகத்தில் "షట్కర్మాభిరతః" என்று கூறப்பட்டது. இது அந்தணனுடைய சிறப்புத்தருமம்.

ஈண்டு, ஓதுவித்தல், வேட்பித்தல், தானமேற்றல், இம்மூன்றுமே வேதியனுக்குச் சிறப்புத்தருமமென்று கூறவேண்டிய தென்பது ஒத்தவாறே. ஓதல், வேட்டல், கொடுத்தல், இம்மூன்றுகருமமும் மூன்று வருணத்திற்கும் பொதுத்தருமமாகவே யிருக்கின்றன. ஆயினும், அறுவகைக் கருமங்களையும் செய்தற்குரிய அதிகாரமுடைமை ஏனையர்க்கு இல்லையாமாதலின் அக்கருத்தினுல் அறுவகைத்தொழிலும் வேதியனுக்குச் சிறப்புத்தருமமென்று கூறப்பட்டன. இங்ஙனங்கூறின் எவ்வகைமுரணுமின்றும். (ஙகஉ)

பொதுநித்தவநுட்டானம்.

శ్లో॥ సంధ్యాస్నానం జపో హోమో
దేవతానాంచపూజనం।
ఆతిథ్యంవైశ్వదేవంచ షట్కర్మాణి
దినేదినే॥ ॥౪౦౫॥

என்னுதலிற்றேலெனின்? சிறப்பாகிய ஓதல் முதலியவற்றைக்கூறு முகத்து மூன்று வருணத்திற்கும் பொதுவாகிய நித்தகருமத்தைச் சுருக்கிக் கூறுகின்றது.

(இ-ள்.) நீராடலோடு சந்தியாவந்தனம், செபித்தல், தீவேட்டல், தேவர்களைப்பூசித்தல், விருந்துபசரித்தல், வைசுவதேவம், என்னும் ஆறுகருமங்களும் நாள்தோறுஞ்செய்யத்தக்கனவாம். எ-று.

"సంధ్యాస్నానం" என்புழி "యవాగూపాకన్యాయః" = யவாகூபாகநியாயத்தால், சந்தியாஸ்நாநம் என்பதனை. ஸ்நாநம் சந்தியாவென மாறிப்பொருள்கொள்க.

அந்தநியாயமோ? பூருவமீமாம்ஸம் ஜைமினி சூத்திரம். நு-வது அத்தியாயம். ஹ்ரு - பாதத்திற் கூறப்பட்டது.

யவாகூபாகநியாயமாமாறு.

జైమినిసూత్రె॥ పంచమాధ్యాయ ప్రథమపాదెయ వాగూపాకన్యాయాధి కరణా ర్థసంగ్రహః ॥ యథా॥ விடயவாக்கியம், சுருதி. விஷயவாக்யం "అగ్నిహూత్రం జుహూతియవాగూంపచతి" = அக்கினிஹோத்திரத்தை ஹோமஞ் செய்கின்றான். (యవాగూ) யவாகூ என்னும் பெயரையுடைய ஓர்வகைக்கஞ்சியைச் சமைக்கின்றான். எறு.

(சமுசயம்) அக்கினிஹோத்திரத்தைஹோமஞ்செய்வதூஉம், யவாகூவைச் சமைப்பதூஉம், என்னு மிரண்டனுள் வைப்புமுறை, முறையானதோ? தவறியதோ? எப்பொழுது முறையானதோ? அப்பொழுது அவ்வைப்பு முறையில் பாடத்தால் சொன்மாத்திரையில் முறையானதோ? அல்லது பொருளாலும் முறையானதோ? என்பது.

பூர்வபக்ஷம். ஹ்ரு - வது. ஆண்டுவிதிகள் அனுஷ்ட்டானமாத்திரையில் முடிவதாதலாலேயும், ஈண்டுக்கூறியதேமுறையென்பதற்கு வேறுநியமம் = விதியில்லாமையாலும், முறை யென்பது விதிக்கப்பட்டவாறல்ல என்பது.

ஆயின், சிறந்திருத்தலின் வெளிச்சென்றே மூன்று சந்தி யாவந்தனமும் செய்யவேண்டுமென்று நேர்ந்ததாயினும், சிளை தமாகிய "விஹரணம்" என்னும் கருமம் புகழ்பெற்றதாமாத லின் அதனைப்பற்றிக் காலைமாலைச் சந்திகளைமனைக்கண்ணும் செய் யலாமென்று விதிக்கப்பட்டது. விஹரணம். எது. வேள்விச்சா லையில், சுளைதாக்கினியைத் தக்ககாலத்தில் விதிப்படிப் பிரண யித்திடல். பிரணயநம் = தீவளர்த்தல்.

மாலைச்சந்தியா வந்தனத்தில் உபஸ்தானம் செய்வதற்குமந் திரவிசேடங்களை நாராயணர் கூறினர். నారాయణ:॥ "వారుణీభిరథాది త్య ముపస్థాయప్రదక్షిణం। కుర్వన్దిశోనమస్కుర్వ్యా ద్విగీశాంశ్చపృథక్పృథక్" = வரு ணனைத் தெய்வமாக வுடைய மந்திரங்களால், சூரியனைப் பிரார்த் தித்து வலம்வருங்கால் திசைகளையும் திக்குப்பாலனையும் வேறு வேறுக வழிபட வேண்டுவது. எறு. காண்க.

"ఇమంమెవరుణ" என்றது முதலிய வருணதேவதாகமான மந் திரங்கள் இவற்றில் வருணனுக்குப் பெயராகிய சொற்களின் குறிப்பினல் இந்தமந்திரங்கள் வருணனைப் பிரார்த்திப்பதற்குத் தக்கதாக விருக்கின்றதே? என்பதுவிளை, அங்ஙனமாயினும் சுருதி விசேடமானதா மூதலின் அச்சிறந்த சுருதியால் இந்தமந்திரக் குறி-வாதிக்கப்பட்டு இம்மந்திரங்கள் சூரியோபஸ்தனத்திலேயே உபயோகிக்கப் படுகின்றது.

இவ்விடயம் மீமாஞ்சத்தில், மூன்றுவது அத்தியாயத்துள் ளும் விசாரிக்கப்பட்டுள்ளது. வருமாறு. விஷயவாக்கியம். சுருதி. ஶ்ருதிः "ஐந்த்ர்யாகார்ஹபத்யமுபதிஷ்டதே" = இந்திர தேவதாகமாகிய மந்திரங்களால், காருகபத்தியமென்னும் வேதவேள்வியை உபஸ்தானம் செய்கிறுன். எறு. காண்க.

எந்தஇருக்கு மந்திரத்துள் மந்திரக்குறியினல் இந்திரன் தேவதையாக விளக்கப்பட்டுள்ளாரே? அது "ఇన్ద్ర" = என்னும் பெயரையுடையது. "కాచనస్తురీः" என்பதுமுதலியன. அவ்விடத்து, இந்திரனென்னு மொழியினது ஆற்றலால் இம்மந்திரத்தைஇந்திரோபஸ்தானத்தில் உபயோகப்படுத்தவேண்டு மென்று தொன்றுகின்றது. "గార్హపత్యం" என்ற இரண்டாஞ்சுருதியி னற்றலால் காருகபத்திய மென்னும் வேள்வித்தீயை உபஸ்தாநஞ் செய்வதில் உபயோகிக்க வேண்டுமென்று தோன்றுகின்றது.

இவ்விடத்துச் சமுசயம் யாது? எனில், இரண்டினையும் சேர்த்து உபஸ்தானம் செய்யவேண்டுவதோ? அல்லது, ஒன்றினையோ? அதனுள்ளும் யாதேனும் தான் வேண்டிய தொன்றினையோ? அல்லது இந்திரனையோ? அங்ஙனமல்லாக்கால் காருகபத்தியத்தையோ? என்பது.

ஆண்டு, சுருதிக்கும், சத்தவிலிங்கத்திற்கும், ஒப்புமையாற்றல், சிறந்திருத்தலினலும் முரணுதலின்றி யிருத்தலானும்இரண்டினையுஞ் சேர்த்தே யுபஸ்தானம் செய்யவேண்டு மென்பது ஒரு பக்கம்.

ஒன்றினை யுபஸ்தானம் செய்வதனல் மந்திரத்திற்கு "ஆகாம்க்ஷை" = அவாய நிலையில்லாமையால், அங்ஙனமில்லாமையே மாறுகொளலா யிருத்தலானும் இரண்டனுள் யாதானு மொன்றனையே யுபஸ்தானஞ் செய்யவேண்டு மென்னும் நியதியாண்டுந் தோற்றுமலே யிருத்தலானும் கொள்வோ னிச்சைவழிச் செய்யலாமென்பது இரண்டாம்பக்கம். கொள்வோன் = உபஸ்தானஞ் செய்வோனகிய கருத்தா.

சுருதிசத்த வடிவமானதா மாதலினது பொருளாற்றலைப் பற்றி நிற்றலானும், ஆற்றல் உபஜீவியமா யிருத்தலின் அதற்குச்

சிறப்பு மேலாதலாலும் இந்திரனே உபஸ்தானஞ் செய்வித்துக் கொளத்தக்க பொருள் என்பது மூன்றும்பக்கம். இத்துணையும் பூருவபக்கம். மந்திரத்துள்ள இந்திரனென்னு மொழி ரூடத்தி னல்=வழக்கினல், சக்கிரனைத் தெரிவிக்கின்றது. சக்கிரன்=தே வர்கோமான். "इदिपरमैश्वर्य्य" = மேலாகிய ஐசுவரியம் என் னும் பொருளினையுடைய 'इदि" என்னும் பகுதியிறற் பிறந்ததா மாதலின் இந்திரனென்னு மொழி தன்றொழிலுக்கு வேண்டுவன வாகிய சிறந்தசெல்வத்தோடு கூடிய காருகபத்திய மென்னும் வேள்வித்தீயைக் கூறுகின்றது. " गुणद्व्युप्य भिधानंस्यात् " = குணத்திலும் பெயர் வியாபகமானது; என்னும் நியாயத்தால், ஆற்றலிரண்டற்கு மொத்திருத்தலின் சத்தலிங்கம் = மொழிக் குறிப்பு ஐயத்திற்கிடனகின்றது. ஆயின் அதன்மேல் கூறப்படு கின்றது என்னை ? " रूढिर्व्यगमपहरति " = மொழிக்குரிய " ரூட சத்தி " = வழக்காற்றலால் " யோகசத்தி "=காரணமரபை யொ ழிக்கின்றது என்னு நியாபத்தால் காரணமரபினும் விளைந்து ணர்த்தவல்ல வழக்கு மரபுவலியதா மாதலின் தேவர் தலைமகனே செய்வித்துக் கொளத்தக்கவன்என்றுகூறதுமெனின், அற்றன்று, குறியிலுலும் விளைவிலுணர்த்துதலின் இரண்டற்கும் ஒத்தவலி மையே யாகின்றது. ஆகவே இவ்விடத்து, மறுக்கப்படாத சிறப் புள்ள சுருதியே உய்த்தலை = வினியோகித்தலை விதிக்கவேண்டு வது. அங்ஙனம், ஆசிரியரால் கூறப்படுகின்றது. " मंत्रार्थंमंत्र तोबुध्वा तच्छक्तिंचनिरूप्यच। मंत्राकांक्षावशेनेंद्र शेषत्वश्रुतिकल्पनं "= மந்திரத்தின்பொருளைச்சாதாரணமாகமந்திரத்திலேயே யுணர் ந்துகொண்டு அதனுள், எந்தெந்தமொழிக்கு எந்தெந்தப் பொரு ளில் ஆற்றலுள்ளதோ ? அதனையாராய்ந் துணர்ந்து மந்திரமொ ழிகளுடைய பொருளுணர்ச்சிக்கு வேண்டுவனவாகிய மொழி யின் அவாயநிலைகளைப் பற்றி " இந்திரசேடத் துவச்சுருதியை " கற்பிக்கின்றும். (எனவே இந்திரோபஸ்தானத்தைக் கூறுஞ் சுரு திவாக்கியத்திற்கு இது சேடவாக்கியமென்று கொள்வாம். என் பது பூருவபக்ஷ காற்பாியம். " श्रुत्याप्रत्यक्षयापूर्वं गार्हपत्यंग तांगत। निराकांक्षीकृतेमंत्रे निर्मूलाश्रुतिकल्पना "= மேற்கூறிய " கா ருகபத்தியம் " என்னும் வெளிப்பட்டுள்ள சுருதியினல் இந்தமந் திரம், காருகபத்திய வேள்வித்தீயி னுபாசனைக்கு அங்கமாயிருத்

தலால் வேறொன்றினை அவாவாதபடி செய்யப்பட் டிருத்தலின், இந்திரசேடத்துவச் சுருதியைக் கற்பிப்பதற்கு = ஊகிப்பதற்கு மூலமில்லை = இடனில்லை என்பது பூருவபக்ஷத்தார் யுக்தியின் கண்டனமாம். "తెనశీఘ్రప్రవృత్తిత్వాత్ శ్రుత్యాలింగస్యబాధనం" = அதனல் மந்திரங்களுக்கு விரைவிலே தியென்னும் உணர்ச்சியுண்டாதலின், "గార్హపత్య" காருகபத்தியம் என்னும் சுருதியால், "ఐంద్ర్యా" என்னும் குறிக்கு வாதையுண்டாகின்றது. என்பது சித்தாந்தயுக்தியாம். ஆதலின் காருகபத்தியத்தியே உபஸ்தானஞ் செய்து கொள்ளத் தக்கது என்பது துணிபொருளாகின்றது. இனிஞூடமென்பதற்கு காரணங்கருதாதுவந்த இடுகுறி என்பாரு முளர். அவர் மதமறுப்பை ஈண்டு விரிவஞ்சிவிடுத்தாம்.

மேற்கூறிய மீமாம்ஸாதிகரண நியாயப்படி, மாலைச்சந்திவந்தனத்துள்ளும் "ఇమంమెవరుణ" என்றது முதலியவாகவரும்வருணக் குறிப்பாகிய மந்திரங்களால் சூரியப் பிரார்த்தனை செய்யவேண்டுமென்று கருதி "వారుణీభిరథాదిత్య ముపస్థాయ" என நாராயணராற் கூறப்பட்டது.

சந்தியின்விசேடம்.

இயமன் சந்தியைச் சிறப்பிக்கின்றனர். యమః॥ "సంధ్యాముపాసతెయెతు సతతంసంశితవ్రతాః। విధూతపాపాస్తెయాంతి బ్రహ్మలోకం సనాతనం। యదహ్నాకురుతెపాపం కర్మణామనసాగిరా। ఆసీనదిపశ్చిమాంసంధ్యాం ప్రాణాయామైస్తు హంతితత్। యద్రాత్ర్యాతుకురుతెపాపం కర్మణామనసాగిరా। పూర్వసంధ్యాముపాసీనస్తు ప్రాణాయామైర్వ్యపొహతి। ఋషయొదీర్ఘసంధిత్వా త్సర్వమాయురుపాయయుః। ప్రజ్ఞాంయశశ్చకీర్తించ బ్రహ్మవర్చసమెవచ"=யார் விரதநியமப்பயிற்சியுடையராய்ச் சந்தியை யுபாசிக்கின்றூர்களோ? அவர்கள் பாவத்தையுதறித்தள்ளி, அழியாத பிரமலோகத்தை யடைகின்றனர். பகலில் செய்கை, சொல், எண்ணம், என்னும் மூக்காரணத்தால் எந்தப்பாவத்தைச் செய்கின்றூனே? அதனை மாலைச்சந்தியை யுபாசித்தவன் பிராணுயாமத்தால் போக்கடிக்கின்றூன். இரவில் அங்ஙனம் குற்றஞ்செய்தோன் காலைச்சந்திவந்தனப் பிராணுயாமத்தால் ஒழிக்கின்றூன். இருடிகள் நெடுங்காலம் தவறுமலே சந்தியை யுபாசித்ததால் முற்றுநிரம்பிய ஆயுளையும், நல்லபேரறிவை

யும், பெரும்புகழையும், சீர்த்தியையும், பிரமவொளியையும் அடைந்தனர். எறு. காண்க.

சந்திசெய்யாவிடிற் பாவமென்பது.

சந்திக்கடன் செய்யாவழி வருங்குற்றத்தைத் தக்ஷராலுறிப்பிக்கப்பட்டது. దక్షుఃll "సంధ్యాహీనోశుచిర్నిత్య మనర్హస్సర్వకర్మసు। యదన్యత్కురుతేకర్మ నతస్యఫలభాగ్భవేత్" = சந்தியாவந்தன மில்லாதவன். அசூசியுடையவனுய் நித்தமும் எல்லாக் கருமங்களுக்கும் தகாதவனே யாகின்றுன். அன்றியும் வேறு எக்கருமஞ் செய்யினும் அதன்பயனை அவனடையமாட்டான். எறு. காண்க.

கோபிலர். గోభిలుఃll "సంధ్యాయేననవిజ్ఞాతా సంధ్యాయేనానుపాసితా। జీవమానోభవేచ్ఛూద్రో మృతశ్శ్వానోభిజాయతే" = சந்திக்கருமத்தை யாருணரவில்லையோ? யார்முறையே யுபாசிக்கவில்லையோ? அவன் பிழைத்திருக்குங் காலத்திற்றுனே சூத்திரனுகின்றுன். இறந்தபின்னர் நாயாகப்பிறக்கின்றுன். எறு. காண்க.

விஷ்ணுபுராணம். విష్ణుపురాణేll "ఉపతిష్ఠంతివైసంధ్యాం యేనపూర్వాం నపశ్చిమాం॥ వ్రజంతితేదురాత్మాన స్తామిస్రసంసరకలనృప" = யார்காலை மாலைச் சந்திக்கடனை அனுட்டிப்பதில்லையோ? அப்படிப்பட்ட துரான்மாக்கள், இருணரகத்துக்குப் போகின்றுர்கள். எறு. காண்க.

கூர்மபுராணம். కూర్మపురాణేll "యోన్యత్రకురుతేయత్నం ధర్మకార్యే ద్విజోత్తమః। విహాయసంధ్యాప్రణతిం సయాతినరకాయుతం" = யார் சந்தியாவந்தனத்தை விடுத்து, வேறு தருமகாரியங்களில் முயற்சிசெய்கின்றுனே? அவன் உத்தமனன விருபிறப் பாளனே யாயினும் பதினுயிர நரகத்தினுக்குஞ் செல்கின்றுன். எறு. காண்க.

இங்ஙனங் கூறிய லெல்லாம் பீடைகளுக்குத் தப்பிப் பிழைப்போன் விடயம் பற்றியது. அங்ஙனம் யாஞ்ஞவற்கியர் கூறினர். యాజ్ఞవల్క్యుఃll "అనార్తశ్చాత్మజేద్యస్తు సవిప్రశ్శూద్రసమ్మితః। ప్రాయశ్చిత్తీభవేచ్చైవలోకేభవతినిందితః" = நோய்முதலியதுன்பகாரணமில்லாதவேதியன்யாவன்சந்திவந்தனத்தைவிட்டு விடுகின்றுனே? அவன் சூத்திரனே டொத்தவனும், பிராயச்சித்தஞ் செய்துகொள்ளத் தக்கவனும், உலகத்துட் பழிப்படைந்தவனும் ஆகின்றுன். எறு. காண்க.

அத்திரி. அத்ரிரபி॥ "நோபதிஷ்ட²ந்தியேஸந்த்⁴யாம் ஸ்வஸ்தாவஸ்தாஸுவைத்³விஜா:। ஹிம்ஸந்திஹிஸதாதேவை பு⁴கவந்தம்தி³வாகரம்" = எந்த விருபிறப்பாளன் சுக மாக விருக்குங்காலத்தும் சந்தியாவந்தனஞ் செய்வதில்லையோ? அவன் பகவனுகிய சூரியனைப்பலரறிய இமிசைசெய்தவனே யா கின்றுன். எறு. காண்க.

விஷ்ணுபுராணம். விஷ்ணுபுராணே॥ "ஸர்வகாலமுபஸ்தா²நம் ஸந்த்⁴யோ⁴பார்தி³வேஷ்யதே। அந்யத்ரஸூதகாச்சௌச ஆபி⁴மாதுரபீ⁴தித:" = பிறந்தது முத லிய ஆசூசங்கள், சித்தப்பிரமை, அவசரம், பயம் இவைகளொ ழிய மற்றெல்லாக் காலத்திலும் இரண்டுசந்தி யனுட்டானங்க ளும் செய்யத் தக்கனவாம். எறு. காண்க.

சூதகமுதலிய காலவிதி.

சூதகமுதலிய உபாதியுண்டாகிய காலத்தில் சந்தியுள்ள வழியும் சந்தியை யுபாசிக்கலாகாது என்று மரீசி கூறினர். மரீசி:॥ "ஸூதகேகர்மணாம்த்யாக³ ஸந்த்⁴யாதீனாம்விதீ⁴யதே" = சூதகத்தில் சந்திமுதலிய கருமங்களை விடவேண்டுமென்று விதிக்கப் படுகின்றது. எறு. காண்க.

பிறிதுவிதி.

ஆயின், புலத்தியர் அதனைமறுத்தனர். புலஸ்த்ய:॥ "ஸந்த்⁴யாம் ஸ்பி²ஞ்சரும் ஹோமம் யாவஜ்ஜீவம் ஸமாசரேத்। நத்யஜேத்பூதகேவாபி த்யஜன்னச்யுத்யதோ⁴ கதிம்" = சந்தியா வந்தனத்தையும், வேள்விக் கருமத்தையும், சரு கருமத்தையும், ஹோம கருமத்தையும், உயிருடம்போடு கூடியுள்ள வரையில் செய்யவேண்டும், சூதககாலத்திலும் விட லாகாது. விட்டவன் கீழ்ப்போகின்றுன். எறு. காண்க.

இது மானசிக சந்தியைக்குறித்துக் கூறியது. என்று தாற் பரியப் படுகின்றனர். எனவே சூதகமுதலிய வுபாதிகள் நேர்ந்த போது, சந்திமுதலிய நித்தகருமங்களை மனத்துள்ளே செய்ய வேண்டுமென்பது கருத்து. இக்கருத்து அம்மரீசியானே கூறப் பட்டுள்ளது. வருமாறு.

மரீசி. மரீசி:॥ "ஸூதகேம்ருதகேசைவ ஸந்த்⁴யாகர்மநஸந்த்யஜேத்। மனஸோச்சா ரயேன்மந்த்ரா ந்ப்ராணாயாமமம்ருதேத்³விஜ:। ஏதத்³விதி⁴ர்வாயஸ்ஸந்த்⁴யா முபாஸ்தேஸம்ஸிதவ்ரத:।

దీర్ఘమాయుస్సవిందెత సర్వపాపైఃప్రముచ్యతె" = பிறந்தசூதகமும், இறந்த சூதகமுமாகிய விரண்டினுள்ளுஞ் சந்திக்கருமத்தை விடலாகாது. இருபிறப்பாளன் அப்பொழுது பிராணயம மொழிய ஏனையமந்திரங்களை யெல்லாம் மனத்திற் சிந்திக்க வேண்டுவது. பாவனிதையுணர்ந்து விரதநியம முடையவனுய்ச் சந்தியை யுபாசிக்கின்றனே? அவன், தீர்க்காயுளைப் பெறுகின்றன். எல்லாப் பாவங்களி னின்றும் விடப்படுகின்றன். எறு. காண்க.

செபவிதி.

சந்தியா அனுட்டானத்திற்கு அங்கமாகிய செபத்தின் விதியை மனுகூறினர். மனுஃ॥ "ఆచమ్యప్రయతోనిత్య ముభెసంధ్యెసమాహితఃl శుచౌదెశెజపన్జప్య ముపాసితయథావిధి"=நாள்தோறும் சமதமங்களையுடையவனுய்ச் சுத்தமாகிய இடத்தில் செபிக்கத் தக்கதைச் செபித்து, இரண்டு சந்திக் கருமங்களையும் விதிப்படி யுபாசனை செய்ய வேண்டும்-எறு. காண்க. சமம் = புறக்கரண மடக்கல். தமம்= அகக்கரண மடக்கல்.

செபவிலக்கணம்.

அதனைச் சங்கர்கூறினர். శంఖఃll "కుశెబృస్యాంసమాసీనఃకుశోత్తరాయాంవాకుశ పవిత్రపాణిస్సూర్యాభి ముఖోవాకుమాలామాదాయదె వతాంధ్యాన్జపఃకుర్యాత్" = தருப்பாசனத்தின்மே லாயினும், அதனைப்பரப்பிய ஆசனத்தின்மே லாயினு மிருந்து தருப்பையாற் சமைந்த பவித்திரத்தைக் கையிற்புனைந்து சூரியனுக்கு எதிர்முகமாக வாயினும் அல்லது வடக்குமுகமாக வாயினும், உருத்திராக்க செபமாலையைக் கையிற்பிடித்துத் தேவதையை தியானித்துக் கொண்டு செபிக்கவேண்டும். எறு. காண்க.

வியாசர். వ్యాసఃll "ప్రణవవ్యాహృతియుతాం గాయత్రీంచజపెత్తతఃl"= பிரணவ மந்திரத்தோடும், வியாஹிருதி மந்திரத்தோடும், கூடிய காயத்திரி மந்திரத்தைப் பின்பு செபிக்க வேண்டுவது. எறு. காண்க.

யோக யாஞ்ஞவற்கியர் மூடிவிலும் பிரணவத்தைச் சேர்க்கவேண்டு மென்று கூறுகின்றனர். యోగయాజ్ఞవల్క్యఃll "ఓంకారం పూర్వమున్చార్య. భూర్భువ స్వస్తథైవచl గాయత్రీం ప్రణవంచాంతె జపఏవముదా

ஹுதஃ" = முதலில், ஓங்காரத்தைக் கூறிப் பின்பு வியாஹிருதிகள் மூன்றினையும் அதன்பின் காயத்திரியையும் முடிவில் மீட்டும் பிரணவத்தையும் செபிக்கவேண்டும். இங்ஙனம் செபத்தினிலக்கணம் கூறப்பட்டது. எறு. காண்க.

போதாயனர். போதாயனஃ॥ "உபயதஸ் ப்ரணவாம்ஸவ்யா ஹ்ருதிகாஞ் ஜபேத்" = இருபுறமும் பிரணவத்தை யுடையதாய் வியாஹிருதியோடு கூடியதாய் உள்ளதனைச் செபிக்கவேண்டும். எ - று. காண்க.

செபவகை.

நரசிங்கபுராணத்துள் செபவேள்விகளுக்குள்ள வேறுபாடுகளைக் கூறப்பட்டது. நृసிம்ஹபுராணே॥ "த்ரிவிதோ ஜபயஜ்ஞஸ்யா து த்ரைபேதான்நிபோதத। வாசிகஶ்சோபாம்ஶுஶ்ச மானஸஸ்த்ரிவிதஸ்ம்ருதஃ। த்ரயாணாம்ஜபயஜ்ஞானாம் ஶ்ரேயாம்ஸ்யுத்தோத்தரஃ" = செபமும் வேள்வியும் மூன்று பிரிவினையுடையனவாம். அவை, வாசிகம், உபாம்சு, மானசிகம், எனவாம். அவற்றுள், ஒன்றற்கு ஒன்றுமுறையேசிறந்ததாம். எறு. காண்க.

வாசிகசெபவிலக்கணம்.

நரசிங்கபுராணம். நृసிம்ஹபுராணே॥ "யதுச்சனீசஸ்வரிதை ஶ்சபைஸ்துஷ்டம் தథார்ஷபைஃ। மம்த்ரமுச்சாரயேத்வாசா வாசிகோயம்ஜபஸ்ம்ருதஃ" = உதாத்தம்= எடுத்தல், அனுதாத்தம் = படுத்தல், சுவரிதம் = சமநிலை, என்னும் சுரங்களோடு மொழிகளாலும் எழுத்துக்களாலும் திருத்தமாக வாக்கிலுல் நல்லுணர்ச்சி யுடையவன் மந்திரங்களை நன்றாகவுச்சரிக்கவேண்டும். அங்ஙனம் செய்யப்பட்டது வாசிகசெபமென்று கூறப்படும். எறு. காண்க.

உபாம்சுசெப விலக்கணம்.

இதுவுமது. "ஶனைருச்சாரயேத்மம்த்ர மீஷத்தோஷ்டௌ ப்ரசாலயேத। அபரை ரஶ்ருதம்கிம்சி துபாம்ஶுஸ்ஸ்யாஜபஸ்ம்ருதஃ" = இதழ்களைச் சிறுக அசைத்து மந்திரங்களைச் சத்தப்படாது மெதுவாக உச்சரிக்கவேண்டும். அந்நியராற் சிறிதும் கேட்கப்படாத அது உபாம்சு என்று கூறப்படும். எறு. காண்க.

மானதசெப விலக்கணம்.

மானதசெப விலக்கணம் விசுவாமித்திராற் கூறப்பட்டது. விசுவாமித்திராः॥ "ధ్యాయేద్యదక్షరశ్రేణిం వర్ణాద్వర్ణంపదాత్పదం। శబ్దార్థచింతనంభూయ కథ్యతెమానసోజపః" = ஓரெழுத்தி னின்றும் மற்றொருவளழுத்து, ஒருமொழியி னின்றும் மற்றொரு மொழியாக முறையே மந்திர வெழுத்துக்களின் றொடர்பைத் தியானித்து ஒவ்வொருமுறைக் கும் சொல்லின் பொருளைச் சிந்தித்து வாக்கியார்த்தங்களை அநுசந்தானஞ் செய்கின்ற செபத்தை மானசமென்று கூறப்படும். எறு. காண்க.

இச்செபத்தின்தரம்.

அம்மூன்றற்கு முள்ள வேற்றக் குறைவுகளை அவ்விசுவாமித்திரானே கூறப்பட்டது. விசுவாமித்రాः॥ "ఉత్తమంమానసంజప్య ముపాంశుంమధ్యమంవిదుः। అధమంవాచికంప్రాహు స్సర్వమంత్రేషువైద్విజాः" = மானதசெபம் உத்தமமாம். உபாம்சுசெபம் மத்தியமமாம். வாசிகசெபம் அதமமாம். எல்லாமந்திரங்களிலும் இதுவேமுறையென்றுணர்க. எறு. காண்க.

அச்செபத்தின்பயனதுதரம்.

விஸ்வாமித்திரர் விசுவாமித்రాः॥ "వాచికంత్వేకమేకంస్యా దుపాంశుశతముచ్యతె। సహస్రంమానసంప్రోక్తం మన్వత్రిభృగునారదైः" = வாசிகத்தால் ஒருமொழிகூறினல் ஒரோபயன்; உபாம்சுவினல் ஒன்று நூறும்; மானசிகம் ஒன்றுசெய்தால் ஆயிரமாம் என்றுமனு, அத்திரி, பிருகு, நாரதராற் கூறப்பட்டது. எறு. காண்க.

செபத்தில்எண்ணிடும் கரஇலக்கணம்.

செபநியமங்களைச் சௌநகர் முதலியோர் கூறினர். శౌనకः॥ "కృత్వోత్తానేకరాప్రాత స్సాయంచాధోముఖాతథా। మధ్యస్తంబకరాభ్యాంతు జపపేవముదాహృతः" = உதயகாலையில் அங்கையை மேல் முகமாக வைத்தும், சாயங்காலத்தில் கீழ்முகமாக வைத்தும், உச்சிப்போதில் இருகையும் அஞ்சலியாக ஊர்த்துவமுகமாக வைத்தும் செபிக்கவேண்டும். எறு. காண்க.

செபசம்பத்தின்காரணம்.

சௌனகர் கூறினர். శౌనకः॥ "మనస్సంతోషణంశౌచం మౌనంసుంత్రార్థచింతనం। అవ్యగ్రత్వమనిర్వేదో జపసంపత్తి హేతవः" = மனம் களிப்போடு கூடியிருத்தலும், உள்ளும்புறம்பும் சுத்தமாயிருத்தலும், வாய் பேசாதிருத்தலும், மந்திரப்பொருளைச் சிந்தித்தலும், அவசரப் படாமையும், பயனைக்கருதி வைராக முண்டாகாமையும் ஆகிய இவை செபத்தால்வரும் செல்வத்திற்குக் காணமாம். எறு-காண்க.

செபகாலவனையறை.

மனு. మనుः॥ "పూర్వాంసంధ్యాంజపంస్తిష్ఠే త్సావిత్రీమార్కదర్శనాత్। పశ్చి మాంతుసమాసీన స్సమ్యగ్భూ విభావనాత్" = காலசந்தியில் சூரியனைத் தரிசிக்கும்வனையில் செபித்து நிற்கவேண்டும். சாயங்சந்தியில் நக்ஷத்திரகணங்கள் காணப்படும்வனையி லிருந்து காயத்திரி மந்திரத்தைச் செபிக்கவேண்டும். எறு. காண்க.

மத்தியாந்நசெபம்.

மத்தியாந்ந செபத்தில் நியமம் வாயுபுராணத்திற் கூறப்பட்டது. వాయుపురాణే॥ "తథామధ్యమసంధ్యాయా మాసీనఃప్రాఙ్ముఖోజపేత్" = உச்சிப்போதில் கிழக்கு முகமாக உட்கார்ந்திருந்து செபிக்கவேண்டுவது. எறு. காண்க.

செபகாலத்தில் ஒழிக்கத்தக்கன.

வியாசர் கூறினர். వ్యాసः॥ "నసంక్రామన్నచహసన్న పార్శ్వమనలోకయన్। నాయాసితోనజల్పంశ్చ నప్రావృతశిరాస్తథా। నపదాపదమాక్రమ్య నచైవహిక రాతథా। నచాసమాహితమనా నచసంశ్రావయన్జపేత్" = உலாவிக் கொண்டாயினும், நகையாடிக்கொண் டாயினும், இருபுறமும் நோக்கிக் கொண்டாயினும் இளைப்படைந் தாயினும், வேறுனை யாடிக்கொண்டாயினும், தலைக்காடை சுற்றிக்கொண்டாயினும், ஒருகாலை மற்றொருகாலால் மிதித்துக்கொண் டாயினும், கைகளை மிதித்து (அல்லது) கட்டிக்கொண்டாயினும் அடங்கி யமையாத மனத்தையுடையவனுக வாயினும் (வேறுவிடயங்களைக் கேள்விப்பட்டுக்கொண் டாயினும்,) பிறர்கேட்கத் தக்கதாக வாயினும் செபிக்கலாகாது. எறு. காண்க.

சாதத்தினம், மஹாபிரதோஷகாலம், இவைகளில் காயத்திரியை ப்பத்துமுறைச்செபித்தலேபோதும்; மற்றையவோதலாகாதநாட்களில் இருபத்தெட்டு, ஏனைய சுத்தினங்களில் முறைப்படி, செபஞ்செய்க. எறு. காண்க.

இயமன். యమః॥ "సహస్రపరమాందేవీం శతమధ్యాందశాపరాం। గాయత్రీంతుజపేన్నిత్యం సర్వపాపప్రణాశినీం" = எல்லாப் பாவங்களையும் ஒழிக்கத்தக்க காயத்திரி மந்திரங்களை உத்தமபக்ஷம் ஆயிரமுறை, மத்தியமபக்ஷம் நூறுமுறை, அதமம் பத்துமுறையாக வொவ்வொரு சந்திகாலத்திலும் தவறுமல் செபிக்கவேண்டும் எறு. காண்க.

ஆபத்தம்பர். ఆపస్తంబః॥ "దర్భేష్వాసీనోదర్భాన్ధారయమాణస్సాదకేన పాణి నాప్రాఙ్ముఖస్సావిత్రీం సహస్రకృత్వఆవర్త యేచ్ఛతకృత్వో పరిమితకృత్వోవా"= தருப்பையின்மீது இருந்துகொண்டு தருப்பையைத் தரித்து நீரோடுகூடிய கையுடையனாய்க் கிழக்கு முகனாகிச் சாவித்திரி மந்திரத்தை ஆயிரமுறையாயினும் நூறுமுறையாயினும், எண்ணிறந்தபடியாயினும் செபஞ்செய்க. எறு. காண்க.

செபமாலிகை.

செபத்திற்கு அங்கமாயிருக்கப்பட்ட மாலிகையை ஹாரீதர் கூறினர். హారీతః॥ "శంఖరూప్యమయీమాలా కాంచనైరప్యథోత్పలైః। పద్మాక్షైశ్చరుద్రాక్షై ర్విద్రుమైర్మణిమౌక్తికైః। తథాచైంద్రాక్షకైర్మాలా తద్వదంగుళిపర్వభిః। పుత్రజీవమయీమాలా శస్తావైదికకర్మణి" = சங்கு-வெள்ளி-பொன்-இவற்றுற் சமைந்தமணிகளும், நீலோற்பலம் - தாமரை - வித்துக்களும், உருத்திராக்ஷமும், பவளமும், அரதனமணிகளும், முத்துக்களும், இந்திராக்ஷமணியும், அல்லது பத்திராக்ஷவிதையும், புத்திரஜீவவிதையும் ஆகிய இவைகளாற் செய்த செபமாலைகளாலும், விரற்கணுக்களினுள்ள இரோகைகளாலும், எண்ணிக்கை வைப்பது செபகருமத்திற் சிறந்ததாம். எறு. காண்க.

செபமாலையின் பயன்.

கௌதமர் கூறினர். గౌతమః॥ "అంగుళ్యాజపసంఖ్యాన మేకమేకము దాహృతం। రేఖయాష్టగుణంపుత్ర జీవైర్దశగుణాధికం। శతంస్యాచ్ఛంఖమణిభిః ప్రవాళైశ్చసహస్రకం। స్ఫటికైర్దశసాహస్రం మౌక్తికైర్లక్షముచ్యతె। పద్మాక్షైర్దశలక్షస్తు

సావర్ణికోటిరుచ్యతే। కుశగ్రంథ్యాచరుద్రాక్షై రనంతంఫలముచ్యతే" = விரலா லெண்ணிச்செபித்தலின் பயன்ஒன்று, விரவிறை=இரேகைகளாற் செபிப்பது எண்மடங்கு, புத்திர சீவமணியாற் செய்வதுபத்து, சங்குமணிநூறு, பவளம் ஆயிரம், படிகம் பதினாயிரம், முத்து நூறுயிரம், தாமரைமணிபத்திலக்கம், பொன்மணிகோடி, தருப் பையின்பவித்திரமுடிமாலை, உருத்திராக்கமணிமாலையாற் செபிப் பதன்பயன் கணக்கற்றதாம். எறு. காண்க.

செபமாலைமணியின்கணக்கு.

பிரஜாபதிகூறினர். ప్రజాపతిః॥ "అష్టోత్తరశతంకుర్యా చ్చతుఃపంచాశి కాంతథా। సప్తవింశతివాకుర్యా త్తత్తో నైవాధికాహితా। అష్టోత్తరశతామాలా ఉత్తమా సాప్రకీర్తితా। చతుఃపంచాశికాయాతు మధ్యమాసాప్రకీర్తితా। అధమాప్రోచ్యతేని త్యం సప్తవింశతిసంఖ్యయా" = நூற்றெட்டு, ஐம்பத்துநான்கு, இருபத் தேழுமணிகளால் செபமாலை செய்யவேண்டும். அதிகமாகச் செய்வது இன்பத்தைத்தராது. இவற்றுள் நூற்றெட்டு உத்த மம், ஐம்பத்துநான்கு மத்தியமம், இருபத்தேழு அதமமாம். எறு. காண்க. அதிகத்தை மறுத்தவாறு குறைவை மறுத்த தில்லையாதலின். அநேகஞ் சிட்டர்கள் பதிறுமணிகளாலும் அமைத்து வழங்குகின்றனர்.

கௌதமர். గౌతమః॥ "అంగుష్ఠంమోక్షదంవిద్యా త్తర్జనీశత్రునాశనీ। మధ్య మాధనకామాయా నామికాపౌష్టికాతథా। కనిష్ఠారక్షణీప్రోక్తా జపకర్మణిశోభనా। అంగుష్ఠేనజపెజ్జప్యం మన్యైరంగుళిభిస్సహ। అంగుష్ఠేనవినాజప్యం కృతంతదఫలంభవేత్" பெருவிரலாற் செபிப்பது முத்தியைத்தரும், சுட்டுவிரல் சத்துரு நாசஞ்செய்யும், நடுவிரல் தனவிருப்ப முடையவனுக்கு ஆதா யத்தைத்தரும், ஈற்றயல்விரல் புஷ்டியைக்கொடுக்கும், சுண்டு விரல் காத்தலைச்செய்யும், என்று செபகருமத்தில் பயன்கூறப் பட்டது. ஆயின் பெருவிரலோடு ஏனைய விரல்களையும் சேர்த் துச் செபிக்கவேண்டும். பெருவிரலின்றி மற்றை யெவ்விரலாற் செபிக்கினும் பயனற்றதாய் முடியும். எறு. காண்க.

காயத்திரிசெபத்தின் சிறப்பு.

வியாசர் கூறினர். వ్యాసఃll "దశకృత్వఃప్రజప్తాసా త్ర్యహాద్యచ్చకృతం లఘు। తత్పాపంప్రణుదత్యాశ నాత్రకార్యావిచారణా। శతజప్తాతుసాదేవీ పాపౌఘశ

మనాస్మృతా। సహస్రజప్తానియత ముపపాతకనాశనీ। లక్షజాప్యేనరాజేన్ద్ర యదిచ్ఛేత్త దవాప్నుయాత్ ” = காயத்திரி மந்திரம் பத்துவிசை செபிக்கப்பட்டால், மூன்று தினத்திற்செய்த சிறு பாவங்களெல்லா மொழியும் இக்கருத்தை வேறு சிந்திக்கவேண்டுவதில்லை. நூறுதரம் செபிக்கப்பட்டால் பாவராசிகளைச் சாந்திசெய்யும். ஆயிரமுறை நியமமாகச் செபிக்கப்பட்டால் உபபாதகங்களையெல்லா நாசஞ் செய்யும். நூறுயிரமுறைசெபித்தால் மஹாபாதங்களையெல்லாம் ஒழிக்கும். கோடிதரஞ்செய்தசெபத்தால் இச்சித்தபயனெல்லாம் அடையக்கூடும். எறு. காண்க.

இயமன். యమః॥ “గాయత్ర్యానపరంజప్యం గాయత్ర్యానపరంధనం। గాయత్ర్యానపరంధ్యానం గాయత్ర్యానపరాహుతిః ” = செபித்தலுக்குக் காயத்திரியினும் சிறந்தமந்திரமொன்றில்லை. காயத்திரியினும் சிறந்த பொருளுமில்லை. காயத்திரியினுஞ் சிறந்த தானமில்லை. காயத்திரியினும் சிறந்த வேள்வியுமில்லை. எ–று. காண்க.

மனு. మనుః॥ “యోధీతేహన్యహన్యేతాం త్రీణివర్షాణ్యతంద్రితః। సబ్రహ్మప రమభ్యేతి వాయురూపేణమూర్తిమాన్ ” = யார்நாடோறும் தவறுதுசோம் புறக்கமில்லாம லிந்தக்காயத்திரி வித்தையினை அத்தியயனஞ் செய்கின்றானே? அவன் வாயுரூபத்தால் உடம்பை யடைந்தவனைப் பரமனை யடைகின்றான். எ-று. காண்க.

கௌதமர். గౌతమః॥ “ అనేనవిధినానిత్యం జపంకుర్యాత్ప్రయత్నతః। ప్రసన్నోఽపులాన్భోగా న్భుక్త్వాంముక్తించవిన్దతి ”=இந்தவிதியினல் முயற்சியோடு மமைந்த சித்தமுடையவனுய் நாடோறும் செபிக்கவேண்டும். அவ்வாறுசெய்தவன் மிகுந்தபோகங்களையும் இம்மையிலுண்டி முதலிய சுகத்தையும் மறுமையில் முத்தியையும் பெறுகின்றான். எ–று. காண்க.

சந்தி அங்கமாகியசெபவிதி முற்றிற்று.

ஹோமவிதி.

கூர்மபுராணம். కూర్మపురాణే॥ “ ఆధాగత్యగృహంవిప్ర స్సమాచమ్యయ థావిధి। ప్రజ్వాల్యవహ్నింవిధి వజ్జుహుయాజ్జాతవేదసం ” = பின்னர் விப்பிரனு

னவன் மனைக்குவந்து விதிப்படியாசமனஞ் செய்து அக்கினியை வளர்த்தி விதிப்படி ஹோமஞ் செய்யவேண்டும். எ-று. காண்க.

ஹோமஞ்செய்வோ னியல்பு.

தக்ஷர். தது:॥ "సంధ్యాకర్మానసానెతు స్వయంహూమోవిధీయతె। స్వయం హూమెఫలంయత్స్య త్తదన్యెననలభ్యతె। హూమెయత్ఫలముద్దిష్టం జుహ్వాతస్స్వయమెవ తు। హూయమానంతదన్యెన ఫలమర్థంప్రపద్యతె" = சந்தியாவந்தனம் முற்றியவுடனே அக்கினிஹோத்திர கருமத்தைத் தானே செய்யவேண்டுமென்று விதிக்கப்படுகின்றது. தானே ஹோமஞ் செய்தால் என்னபயன் கிடைக்குமோ? அது, தன்பொருட்டு வேறொருவன்செய்தால் அவ்வளவு பயனுகமாட்டாது; அனைப்பங்கு பயனேயாம். எ-று. காண்க.

தன்பொருட்டு ஹோமஞ்செய்வார் இவனென்பது தக்ஷர் கூறினர். தது:॥ "ఋత్విక్పుత్రోగురుర్భార్యా భాగినేయోథవిట్పతిః। ఏతైరపిహుతంయత్స్యా త్తద్ధుతంస్వయమెవతత్" = இருத்துவிக்கு, தன்மகன், ஆசிரியன், உடன்பிறந்தான், நன்மருகன், மருகன் இவர்களால் தன்பொருட்டு ஹோமஞ் செய்யப்படின் அது தான் செய்தது போலுமாம். எறு. காண்க. இருத்துவிக்கு = வேள்விசெய்யும் பொருட்டு விதிப்படி நியமிக்கப்பட்டுத் தக்ஷணைக்குரியனுவோன்.

ஆயின் தானேஹோமஞ் செய்வது சிறந்தது. அது கூடாவழி இருத்துவிக்கு முதலியோர் செய்க என்றவற்றுள்ளுஞ் சில விசேடங்கள் கூர்மபுராணத்துட் கூறப்பட்டன. కూర్మపురాణె॥ "ఋత్విక్పుత్రోథవాపత్నీశిష్యోవాపిసహొదరః। ప్రాప్యానుజ్ఞాంవిశెషెణజహుయాచ్చ యథావిధి" = இருத்துவிக்கு, மகன், மனைவி, மாணாக்கன், உடன்பிறந்தோன் இவருள் யாராயினும் தன்னுணை பெற்று வேள்வித்தீக்காரியஞ் செய்யலாம். எ-று. காண்க.

அவருள்எற்றக்குறைவு.

அங்ஙனம் வேள்வி செய்வோர் தாரதம்மியத்தையுங் குறிக்கின்றது. అనైశ్వతహుతాద్ధోమా దెకశ్శిష్యహుతొవరః। శిష్యెశ్వతహుతాద్ధోమా దెకఃపుత్రహుతొవరః। పుత్రెశ్వతహుతాద్ధోమా దెకొహ్యాత్మహుతొవరః" = அந்நியர்செய்த நூறுவேள்வியினும் மாணாக்கன் செய்த தொன்றே சிறந்தது. அம்மாணாக்கன் செய்தநூற்றினும் மகன்செய்ததொன்

றேமிக்கது. அது நூற்றினுங் தான்செய்த வொன்றே சான்றது. எ-று. காண்க.

ஹோமத்திற்குத்தானிருக்குமிடம்.

இருத்துவிக்கு முதலியோர் வேள்விசெய்யும்போதும் தலைவன் சமிபத்திலிருக்க வேண்டுமென்பது காத்தியாயனராற் கூறப்பட்டது. కాత్యాయనः॥ "ఆసమాప్తుంతుదంపత్యో హోతవ్యంనర్త్విగాదినా। ద్వయోరభ్యసమాప్తుంతు భవేద్భుతమనర్థకం" = தலைவன் தம்பதிகளாக எதிரிலில்லாமலே யிருத்துவிக்கு முதலியோர் வேள்வி செய்யலாகாது. அத்தம்பதிகளுள் ளொருவனோனு மெதிரில்லாமலே ஹோமஞ்செய்தால் அது வீணும் எ-று. காண்க.

தலைவனில்லாவழி.

தலைவன்வேறிடஞ் சென்றவழியுள்ள விசேடத்தினைமிருதி கூறிற்று. స్మృతిः॥ "నిక్షిప్యాగ్నీం త్స్వదారేషుపరికల్ప్యర్త్విజంతథా। ప్రవసేత్కార్య వాన్విప్రోవృద్ధైవనచిరంవసేత్" = ஒருதலையாகச்சிறந்தவினைமேற்செல்ல விரும்பிய வேதியன் தன் வேள்வித் தீயினை மனைவியினிடத்து விடுத்து, அக்கருமத்தைச் செய்வதற்கு ஒரு இருத்துவிக்கை நியமித்து, வெளிப்போகலாம். வீணாக நெடுங்கால மிருத்துவிடலாகாது. எ-று. காண்க.

ஹோமத்திற்குரியகாலம்.

ஹோமத்திற்குரிய காலத்தைக் காத்தியாயனர் குறிப்பித்தனர். కాత్యాయనः। "యావత్సమ్యఙ్నభావ్యంతె నభస్యృక్షాణిసర్వతः। రోహిత శ్చంచనాపైతితావత్సాయంతుహూయతె" = எதுகாறும் ஆகாயத்துள்ளஉடுக்கள் நன்றாகக் காணப்படுவதில்லையோ? சந்தியாராகம் = அந்திச் செக்கர் நிறம் எதுகாறும் ஒழிவதில்லையோ? அதுகாறுமாகிய சாயங்காலவளையில் ஹோமஞ் செய்யப்படுமாக. எ-று. காண்க.

ஆபத்தம்பர். ఆపస్తంబः॥ "సముద్రోవాఏషయద హోరాత్రస్తస్యైతె గాధ తీర్థెయత్సంధీ తస్మాత్సంధౌ హూతవ్యం" = என்று காத்தியாயனப் பிரமாணத்தை உதகரித்தனர். இனி அதன்பொருள் வருமாறு. இரவுபகல் என்பன சமுத்திரமாக விருக்கின்றன. ஆழமறியமுடியாத இப்பெருவெள்ளத்தில் இரண்டின் கூட்டமே சந்தி

யிடமாகவிருக்கின்றது. ஆதலின் சந்திகாலத்தில் வேள்விசெய்ய வேண்டும். எறு. காண்க. "నక్షత్రందృష్ట్వా ప్రదోషనిశాయాంవాసాయం"= சாயம் என்னுஞ்சொல் நக்ஷத்திரங்களின்காட்சி, பிரதோஷப் போது, இரவு என்னு மிம்மூன்றினையும் குறிக்கின்றது. சமுத் திரமாக வுவமிக்கப்பட்ட பகலிரவென்னும் காலம் நீர்ப்பெருக் கின் கூட்டமாக விருக்கும். சந்திதீர்த்தம் புகுவோர்க்கு எளிய தாக விருக்குமாதலின் வேஹாமகருமத்திற்குச் சந்தியாகாலம் முக்கிய கற்பமாக விருக்கின்றது. நக்ஷத்திரக்காட்சி முதலிய அம்மூன்றுகாலமும் சாயங்கால வேஹாமத்துள் அநுகற்பமாக விருக்கின்றன. நக்ஷத்திரக்காட்சி என்பது. ஒரு நக்ஷத்திரம் கண் ணுக்குப் புலப்படுங்காலம். பிரதோஷம் என்பது எல்லாவுடுக் களையும் நோக்கத்தக்க காலம், இரவு என்பது உறக்கம் வருங் காலம். என்றுணர்க.

உதயகால சந்தியில் செய்யும் வேஹாமத்திற் குரியகாலம் நான்குவகையாக அவ்வாபத்தம்பரானே கூறப்பட்டது. வரு மாறு. "ఉపస్యుష్టోదయం సమయాధ్యుషితేపాత్రితి" = பிராதஃ, என்னுஞ் சொல் 'உஷஎன்ற காலமும், உஷா என்ற காலமும், விடியற்கால மும், சமயாத்துயுஷிதம் என்ற காலமுமாகிய நான்கினையும் குறிக்கின்றது. எறு. காண்க.

மனு அந்நான்கனுள் முதலாவதனையும் இரண்டாவதனை யும் ஒன்றுசெய்து மூன்றுகாலமாகக் கூறினர். మనుః॥ "ఉదితేనుదితేచైవ సమయాధ్యుషితేతథా। సర్వథావర్తతేయజ్ఞ ఇతీయంవైదికీశ్రుతిః" = உதி தம், அநுதிதம், சமயாத்துயுஷிதம், என்னுமிக்காலக்களில் எல் லாவகையாலும் வேள்வி நடக்கின்றது," என்றவிது வைதிக சுருதி. எறு. காண்க.

அநுதிதகாலம்.

அவற்றி னிலக்கணங்களை வியாசர் கூறினர். వ్యాసః॥ "రాత్రే ష్టూడశభాగేతు గ్రహనక్షత్రభూషితే। కాలేష్వనుదితే ప్రాతర్హోమంకుర్యాద్విచక్షణః"= இராக்காலத்தைப் பதினாறு பங்காக்குமிடத்துக் கிரகங்களும் நக்ஷத்திரங்களும் பிறவுங் காணப்படுகின்ற கடைப்பாகம் அநு திதகால மென்னப்படும். அறிவுடையோன் காலையிற் புரியும் வேஹாமத்தை யப்பொழுது செய்யவேண்டும். எறு. காண்க.

சமயாத்துயுஷித காலம்.

வியாசர். வ்யாஸः॥ "తథాప్రభాతసమయె నష్టేనక్షత్రమండలె। రవిర్యావన్నదృశ్యేత సమయాద్ధ్యుషితస్తృతః" = கிழக்கு வெள்ளெனவெளுக்கச்சி தெ நக்ஷத்திரமண்டலம் மறைந்து சூரியன் கட்புலனுகாதவரை யிலும் உள்ளகாலம் சமயாத்துயுஷிதகாலம் என்னப்படும். எறு. காண்க.

உதிதகாலம்.

வியாசர். வ்யாஸः॥ "రేఖామాత్రస్తుదృశ్యేత రశ్మిభిస్సహితోరవిः। యదాతమదితంవిద్యా త్తత్రహోమంప్రకల్పయెత్" = சூரியன் கிரணங்களுடன் கோடுகிழித்த மாத்திரையே யெதுகாறுங் காணப்படுகின்றூரே? அப்படிப்பட்ட காலத்தை உதிதமென் றுணரத் தக்கது. அப் பொழுது ஹோமஞ்செய்க. எறு. காண்க.

ஹோமகாலத்திற்குரிய அநுகற்பம்.

வேள்வித்தியினுக் குரிய அநுகற்பத்தை ஆசுவலாயனர்கூறினர். ఆశ్వలాయనः॥ "ఆసంగవాన్తంప్రాతः" = சங்கமகாலம் வருமளவும் பிராதக்காலமாம். எ-று. ஹோமத்திற்குத் தக்ககால மென்பது கருத்து. அல்லது, இக்கால மனேகத்தும் காலவிசேடங்களேயாம். ஒவ்வொருசாகைகட்கு ஒவ்வொன்று சிறந்ததாக "உதிதானுதித ஹோமம்" போல வகுக்கப்படும் என்றுணர்க. "உதிதானுதித ஹோமம்" என்பது, வேதத்துள் உதித காலத்துள் ஹோமஞ்செய்க; அநுதிதகாலத்தி லொழிக; எனவும், மற்றூரிடத்து, அநுதிதகாலத்தில் ஹோமஞ்செய்க; உதித காலத்துட் செய்யாதொழிக எனவும் கூறப்பட்டுள்ளது. ஈண்டு இவ்விரண்டு வாக்கியங்களுந் தம்மூலொன்றேடொன்று மூரணுதலி னம்மூரணையொழிக்கும்படி ஒவ்வொன்றும் ஒவ்வொருசாகையர்க் குரித்தென மீமாம்சகர் நியாயம்வகுத்தனர் ஆதலினதுவென்றுணர்க.

எங்ஙனமாயினும் சிறந்தகாலத்தைக் கடந்து போனதாகவே யாகின்றது. என்னை? கோபிலர். గోభిలः॥ "అథయదిగృహ్యాగ్నాయంప్రాతర్హోమయోः పర్వపూర్ణమాసయోర్హవ్యం హోతారంనాధిగచ్ఛెత్" = பின்பு கிருஹியாக்கினியால் சாயங்காலத்தும் உதயகாலத்தும் செய்யும் ஹோமத்திலும் அமாவாசை பூரணையிற் செய்யும்

ஹோமத்திலும், தேவர்களைத் திருத்தி செய்தலால் ஆகும்பயன் ஹோமஞ் செய்தவனைப் பொருந்தாதொழியும். எ-று. காண்க.

அற்றேல், செய்யக்கடவதியாதெனில்? முக்கியகாலங் கிடைப்பது அருமையா மாதலின் சாமானியகாலமே யான போதினும் விடாது கருமத்தைச் செய்தலே வேண்டும். அங்ஙனஞ் செய்த பயன் தலைவனை விட்டொழிதலில்லை என்று அக்கோபிலரே அக்கால நிபந்தனை வகுத்தனர். గౌభిలः॥ "ఆసాయమాహుతెరపాగత రాహుతిర్నాస్త్యే త్యాప్రాతరాహుతెస్సాయ మాహుతిరామావాస్యా యాఽపౌర్ణమాసీనాస్త్యేత్యా పౌర్ణమాస్యా అమావాస్యేతి" = சாயங்காலஹோமம்வரையில் காலைஹோமம் கடந்து போவதில்லை. காலைஹோமம்வரையில் சாயங்காலஹோமம் தவறிப்போவதில்லை. அமாவாசைவரையில் பூரணை கடந்தொழிவதில்லை. பூரணைவரையில் அமாவாசைகடந்து ஒழிவதில்லை. எ-று. காண்க.

போதாயனரும் அவ்வாறே கூறினர். బౌధాయనः॥ "ఆసాయంకర్మణఽపాగత రాపాగతస్సాయకర్మణः। ఆహుతిర్నాతిపద్యేత పార్వణంపార్వణాంతరం" காலை வேள்வித்தீக்காரியம் மாலைவரையிலும், மாலை வேள்வித்தீக் காலைவரையிலும், அதிக்கிரமித்துப் போவதில்லை. பர்வகாலஹோமம் வேறொரு பர்வகாலம் வருமளவும் அதிக்கிரமித்துப் போவதில்லை. எறு. காண்க.

ஹோமவிடயத்தில் ஆபற்காலதருமம்.

வேள்வித் தலைவனுக்கு ஆபத்துவரின் பக்ஷஹோமஞ் செய்தல்வேண்டும். அங்ஙனம் மரீசிகூறினர். మరీచిः "శరీరాపద్భవేద్యత్ర భయాద్వార్థఽప్రపద్యతె। అథాన్యస్యాపిచాపత్సు పక్షహోమోవిధీయతె" = தன்னுடம்பினுக்கு ஓராபத்துவரினும், பயத்தினால் ஆபத்தும் பிறஆபத்தும் வரினும், பக்ஷஹோமம் விதிக்கப்படுகின்றது. எ-று. காண்க.

பக்ஷஹோமம் செய்பவனுக்கு எந்த பக்ஷத்தில் ஆபத்து விட் டொழிகின்றதோ? அதுமுதல் அவன் நித்தமும் முறையே ஹோமஞ் செய்யவேண்டும். அங்ஙனம் மரீசியே கூறினர். మరీచిः॥ "పక్షహోమానథోకృత్వా గత్వాతస్మాన్నివర్తితः। హోమంపునరథ ప్రకుర్యాత్తు న చాసౌదోషభాగ్భవేత్" = பக்ஷஹோமங்களைச் செய்திருந்து பின்பு

அவற்றினையும் விடின் மறுபடியு முறையே ஹோமஞ் செய்ய வேண்டும். அவன் குற்றமுடையவ னல்லன். எ-று. காண்க.

மீட்டும் ஆதானஞ்செய்தல்.

இப்படி ஹோமத்தினை அனுட்டிப்பவனேயாயினும், தான் வசிக்கும் ஊர் எல்லையைக்கடந்து செல்வாரையின் மறுபடியும் அக்கினியை ஆதானஞ்செய்யவேண்டும். அங்ஙனம்காத்தியாயனர் கூறினர். కాత్యాయనः ॥ "విహాయాగ్నింసభార్యశ్చే త్సీమాముల్లంఘ్యగచ్ఛతి। హోమకాలాదతీతస్య పునరాధానమిష్యతే" = அக்கினி ஹோத்திரத்தை விட்டு மனைவியோடு எல்லைகடந்து சென்றவனுக்கு ஹோம காலமாகிய பகலும் கடந்துவிட்டால் அவன்மீட்டும் அத்தீயினை விதிப்படி விச்சின்னதானஞ்செய்தல் வேண்டும். எறு. காண்க.

அங்ஙனம் ஹோமகாலம் கடந்து விடாமலிருந்தால் மீட்டும் ஆதானஞ்செய்ய வேண்டுவதில்லை. அதனைச் சௌனகர் கூறினர். శౌనకः॥ ప్రోషితెతుయథాపత్నీ యదిగ్రామాంతరంవ్రజెత్। హోమకాలెతుసంప్రాప్తె నసాదోషేణయుజ్యతె" = எப்பொழுது வேற்றிடத்திற்குப் போயிருக்கின்றானே? அப்பொழுது அவன்மனைவியும் வேறூருக்கு சென்றிருக்கினும் வந்தபின் ஹோம காலம் கிடைத்தால் அவள் குற்ற முடையவளாதலில்லை. எறு. காண்க.

ஹோமத்திரவியங்கள்.

ஹோமஞ்செய்தற் குரிய திரவியங்க ளிவையென அக்காத்தியாயனரே கூறினர். కాత్యాయనः॥ "కృతమోదనసక్త్వాది తండులాదికృతాకృతం। వ్రీహ్యాదిత్వకృతంప్రోక్త మితిహవ్యంత్రిధాబుధైः। హవిష్యేషుయవాముఖ్యా స్తదనువ్రీహయస్మృతాः। అభావెవ్రీహియవయో ర్దధ్నావాపయసాపివా।తదభావెయవాగ్వావా జుహుయాదుదకేనవా। యథోక్తవస్త్వసంపత్తౌ గ్రాహ్యంతదనుసారిచ। యవానామివగోధూమా వ్రీహీణామివశాలయः। ఆజ్యహవ్యమనాదెశె జుహోతీతివిధీయతె। మంత్రస్యదెవతాయాస్తు ప్రజాపతిరితిస్థితిः" = அவ்வியம் = ஹோமஞ்செய்யப்படுதிரவியம், இது. 'கிருதம் - எம் - கிருதாகிருதம் - எம் - அகிருதம். எனவும் மூவகைப்படும். அன்னம், நெற்பொரி, வறுத்தமாவு, முதலிய அவிசுகிருதம் என்னும் பெயரவாம். கிருதம் என்பது பக்குவஞ் செய்யப்பட்டன. அரிசிமுதலியன கிருதாகிருதம் என்

னப்பட்டது. எனவே, பக்குவப்பட்டும் படாது மாயுள்ளன. நெல்முதலியன அகிருதம்என்னப்படும். அது பக்குவப்படாதன. ஹோமத் திரவியங்களில் யவம் சிறந்தது. விரீஹியென்னு நெல் ஒருசார் சிறந்ததாம். யவமாயிலும் விரீஹியென்னு நெல்லாயினும் கிடையாவழி தயிரிலுலாயினும் பாலிலுலாயினும் ஹோமஞ் செய்க. அவையும் கிடையாவழி, கஞ்சியிலுலாயினும் நீரிலுலாயினும் செய்க. எந்த ஹோமத்திற்கு எந்தத்திரவியம் கூறப்பட்டதோ? அந்தத்திரவியம் கிடையாதபக்ஷத்தில் அதனேடு சம்பந்தமுடைய மற்றொரு திரவியத்தைக் கொள்ளவேண்டுவது. உதாரணம். யவத்திற்குக் கோதுமை எவ்வாறே? விரீஹிஎன்பதற்கு நெல் யெவ்வாறே? அவ்வாறு பொல்வனவாம். யாண்டாயினுமாக நெய்யினுக்கும், அவிசுக்கும், பிரதியாக வேறென்றினைக் கோடலில்லைகொள்ளுவதாயின் விதிக்கப்படுகின்றன. மந்திரத்திற்கு சுவாஹாகாரம், தேவர்கட்குப் பிரஜாபதிதேவதை; பிரதிநிதியாயிருப்பது மூண்டு. எறு. காண்க.

ஆகுதிக்கு அளவு.

ஆகுதிப் பொருளினளவையை விருத்தபிரகற்பதி கூறினர். వృద్ధబృహస్పతిః॥ "ప్రస్థాన్యం చతుష్టయే రాహుతెస్తుపరికీర్తితం। తిలానాంతుతదర్ధం స్యా తదర్ధంస్యాద్ఘృతస్యతు" = வள்ளம்=இருநாழிதானியம்அறுபத்து நான்கு ஆகுதிக்குக் கூறப்பட்டது. (எனவே ஆகுதி ஒன்றற்கு ஒருபலமாகின்றது. பலம் = மூன்று ரூபாயிடை). எள்ளானல் அதிற்பாதியாம். (எனவே அரைப்பலமாம்). நெய்யானல் அவ்வெள்ளினிற்பாதி (எனவே காற்பலமாம்). எறு. அல்லது, ஆகுதி ஒன்றற்கு மூன்றுவராகனிடை நெய் உத்தமகற்பமாம். இரண்டு வராகனிடை மத்தியமகற்ப மெனவும், ஒருவராகனிடை அதமகற்பமெனவும் வழங்குகின்ற வழக்குமுள்ளது என வுணர்க.

போதாயனர். బూధాయనః॥ "వ్రీహీణాంవాయవానాంవా శతమాహుతిష్యతే" = விரீஹியென்னுந் தானியமே யாயினும் யவமென்னும் தானியமே யாயினுமாக ஒருவள்ளத்திற்கு நூறுஆகுதிகள் உடன்பாடாகின்றன. எறு. எனவே இரண்டு ரூபாயிடை யாகின்றது. இது ஒருகற்பம் இன்னு மதமமாக ஒருரூபாயிடை ஆகுதிசெய்யும் வழக்குமுமுண்டு.

ஹோமஞ்செய்தற்குரியவிதி.

ஹோமஞ் செய்யும் வகை தன்சாகையின் கிரகத்த கரும விதி சம்பந்தமாகிய சூத்திரப்படி செய்யப்படும் என்பதனை கிருஹியபரிசிட்டம் என்னு நூலிற்கூறப்பட்டது. గృహ్యపరిశిష్టే॥ "స్వగృహ్యోక్తేనవిధినా హోమంకుర్యాద్యథావిధి" = தன் சாகையின் கிருஹிய சூக்தத்தில் கூறப்பட்ட விதியினல் எவ்வாறுவிதிக்கப்பட்டதோ? அவ்வாறு ஹோமத்தைச் செய்ய வேண்டுவது. எறு. காண்க.

ஹோமஞ்செய்தற்குரியதீ.

இதுவுமது. "బహుశుష్కేంధనేచాగ్నౌ సుసమిద్ధేహుతాశనే। విధూమేతు విహానేచ హోతవ్యంకర్మసిద్ధయే" = உலர்ந்த விறகுகளுமிகவு மிட்டுநன் முக வளர்க்கப்பட்டு ஹோமஞ்செய்த ஆகுதிப்பொருளைப் பக்கு வஞ் செய்யத்தக்க நிலைமையுண்டாய்ப் புகையின்றி நாவைநீட்டு வது போலுங் கொழுந்துகளை வீசுகின்ற தீயினிடத்தில் கருமங் கள் முற்றுவதற்காக ஹோமஞ் செய்யவேண்டும். ன்று. காண்க.

இதுவுமது. "యోనగ్నిష్టిజుహోత్యగ్నౌ వ్యంగారేచైవమానవః। మందాగ్నిరామయావీచ దరిద్రశ్చప్రజాయతే" = யார் எரியாத அக்கினியினிடத்தி லும் மிகுந்த தீயில்லாத விடத்தும் ஹோமஞ்செய்கிறானே? அவன் பசித்தழன் மந்தமானவனையும் தரித்திரனையும் நோயாளியாயும் பிறக்கின்றான். எறு. காண்க.

இவற்றை யெல்லாம் நன்குணர்ந்த பின்னோ அனுட்டா னஞ் செய்யவேண்டும் அங்ஙன மில்லையேற் குற்றமாம். இக்க ருத்தை அங்கிரசு கூறினர். అంగిరాః॥ "స్వాభిప్రాయకృతంకర్మ యత్కించి ద్దానవర్జితం। క్రీడార్థమివబాలానాం తత్సర్వంనిష్ప్రయోజనం" = அறிவில்லாம லே தான் கருதியபடி எவ்வளவு சிறியகருமஞ் செய்யினும் அது சிறுவர் விளையாட்டுத் தொழிற்போலும் எல்லாம் வீணும். எறு. காண்க.

சதுர்விம்சதிமதம். చతుర్వింశతిమతే॥ "హతంజ్ఞానంక్రియాహీనం హతా శ్చాజ్ఞానతఃక్రియాః। అపశ్యన్నంధకోదగ్ధో పశ్యన్నపిచపంగుకః" = தொழிலொ டொவ்வாத அறிவும் இறந்து பட்டதேயாம், அறிவில்லாமை யாற் செய்த தொழிலும் கெடுக்கப்பட்டதே யாம். பாராமல் வே

லசெய்வோன் குருடன்; பார்த்தும் தவறுனதொழில் செய்பவன் சுடப்பட்ட கண்ணுடையவனே யாம். அவ்வளவு மன்று, ஒரு தொழிலை முறையே நிறைவேற்றுதவன் முடவனுகவு மிருக்கின் றுன். எறு. காண்க.

தீயின்வகையும் தொழில்வகையும்.

சுவொளத கருமத்திற்கும் ஸ்மார்த்த கருமத்திற்கும் தக்கவ கைமையை யாஞ்ஞவற்கியர் கூறினர். యాజ్ఞవల్క్యః॥ కర్తవ్యోర్థంవినా హుగ్నా కుర్వీతప్రత్యహంగృహీ। యథాకాలాహృతెవాపి శ్రౌతంవైతానికాగ్నిషు" = இல்லறத்தான் நாடோறும் தன் மணவினைக் காலந்தொட்டுவந்த தீயினிடத்தில் ஸ்மார்த்த கருமத்தைச் செய்யக்கடவன். தகுதி யான்காலத்தில் அக்கினி ஆதானஞ் செய்துகொண்டவனே யா யினும் காருகபத்தியம் முதலிய "வைதானிகாக்கினி" யினிடத் தில் சுவொளத கருமத்தைச் செய்யவேண்டுவது. எறு. காண்க.

அவ்விருவகைத்தீயினையும் அனுட்டிக்கும்முறை.

யாருக்குச் சுவொளதாக்கினி ஸ்மார்த்தாக்கினி இரண்டுமுள் ளதோ? அவன் அவற்றை யனுட்டிக்கும் முறைமையைப் பரத் துவாசர் கூறினர். భరద్వాజః॥ "హూమంవైతానికంకృత్వా స్మార్తంకుర్యాద్విచక్షణః। స్మృతీనాంవెదమూలత్వాత్ స్మార్తంకెచిత్పురావిదః" = மனிதனுக்கு ஸ்மார்த்தாக்கினி முதற்கணுண்டாகின்றது பின்பு சுவொளதாக் கினியுண்டாகின்றதா மாகவின், நாடோறும் முதற்கண் ஸ்மார்த் தாக்கினிஹோத்திரத்தைச் செய்யவேண்டுவது என்று சிலர் கூறுகின்றனர். அறிவுடையோன் முதற்கண்ணே சுவொளதாக்கி னியை யனுட்டித்துப் பின்பு ஸ்மார்த்தாக்கினியை அனுட்டிக்க வேண்டும். என்னை? மிருதிகளுக்குச் சுருதிகளே மூலமாயிருத்த லின். எறு. காண்க.

அத்தீக்காரியஞ் செய்யத்தக்கவன்திறம்.

சாதாதபர். శాతాతపః॥ "శ్రౌతంయత్తస్వయంకుర్యా దన్యోపిస్మార్తమా చరేత్। అశక్తౌశ్రౌతమన్యస్మై కుర్యాదాచారమంతతః" = சுவொளதாக்கினி யைத் தானே செய்யவேண்டுவது ஸ்மார்த்தாக் கினியைப் பிற ரும் செய்யலாம். ஆற்றலில்லாவழி, சுவொளதாக்கினியையும் அந்

நியர் செய்யலாம். முடிவுக்கு ஆசாரத்தையாவது விடாது பற்றுக. எறு. காண்க.

வேள்வித்தீக்காரியமும் நித்தகருமமே என்பது.

கற்கர். గర్గः॥ "కృతదారోనైవత్యక్తే త్తణమప్యగ్నినాహినా। త్యక్తేతచ్చేద్విజో భాగ్య స్తథాచపతితోభవేత్। యాతాస్నానంయథాభార్యా వేదస్యాధ్యయనంయథా। తథైవాపాసనందృష్టం నస్థితస్తద్వియోగతః"=மனைவியோடு கூடியவன் அக்கினியையொழித்து ஒருகணமேனு மிருக்கலாகாது. அங்ஙனம் விட்டிருந்தால் அந்த விருபிறப்பாளன் பாக்கிய மற்றவனையும் பதிதனையும் போகின்றான். ஸ்நானம், மனைவி, வேதமோதல் எவ்வாறே? அவ்வாறேவேள்வித் தீக்காரியமாகிய ஔபாசனமும் விடப்படாத காரியமாயுள்ளது. ஆதலா லதனைவிட்டிருத்தலாகாது. எறு. காண்க.

ஆற்றலுடையவனை யிருந்தும் சுவொத கருமத்தை விட்டு ஸ்மார்த்த கருமத்தினல் மாத்திரம் திருத்தியடைய லாகாது எனக் கற்கர் கூறினர் గర్గः॥ "యోవైదికమనాదృత్య కర్మస్తౌతికహాసకం। మోహాత్పమాచరేద్విప్రో నసపుణ్యేనయుజ్యతే। ప్రధానంవైదికంకర్మ గుణభూతంతథేతరత్। గుణనిష్ఠఃప్రధానంతు త్యక్త్వాగచ్ఛత్యధోగతిం" = யார் அஞ்ஞானத்தால் வைதிககருமத்தை ஆசரியாமல் மிருதிகளிலும் இதிகாசங்களிலும் கூறப்பட்டுள்ள ஸ்மார்த்த கருமத்தை மாத்திரம் அனுட்டிக்கின்றானே? அவன் புண்ணியப்பயனை யடைவதில்லை. வைதிக கருமஞ்சிறந்தது. ஸ்மார்த்த கருமம் சாமானியமானது. சாமானியத்தைப்பற்றி சிறந்ததைவிட்டவன் அதோகதிக்குப் போகின்றான். எறு. காண்க.

அசத்தனைப்பற்றி வியாசர் கூறினர். వ్యాసः॥ "శ్రౌతంకర్తుంనచేచ్ఛక్తఃకర్మస్మార్తంసమాచరేత్। తత్రాప్యశక్తఃకరణే సదాచారంలభేద్బుధः" = சுரௌத கருமஞ்செய்வதற்கு சத்தியில்லாதவன் ஸ்மார்த்த கருமத்தையேனும் அனுட்டிக்கவேண்டும். அதற்கும் சத்தியில்லாதவன் நல்லொழுக்கத்தையேனு மடைந்திருக்கவேண்டுவது. எறு. காண்க.

ஹோமத்தின் சிறப்பு.

அங்கிரா. అంగిరాः॥ "యోదద్యాత్కాంచనంమేరుంపృథివీంచససాగరాం। తత్సాయంప్రాతర్హోమస్య తుల్యంభవతివానవా" = யார் மேருமலை யளவு

பொன்னையும், கடலோடு ஒத்தநிலத்தையும்தானஞ்செய்வானே? அவன் தானமும் சாயங்காலமும் உதயகாலமும் தவறுது செய்யும் ஹோமத்தோடு ஒக்குமோ? ஒவ்வாதோ? எறு. காண்க.

வேள்வி முடிந்தபின் திருநீறுபுனைதல்.

வேள்வித் தீக்காரியமுடிந்தபின்பு திருநீறு தரிக்கவேண்டும் என்பதனை பிரகற்பதி கூறினர். బృహస్పతిः॥ "సర్వభస్మాస్మి హూత్రాంతె ధార్యమేవాస్మి హూతృభిः। అనాహితాగ్నె ర్బ్రహ్మ ణ్యమూపాస నసముద్భవం"= சுவேளதாக்கினி ஹோத்திரஞ் செய்யும் வைதிகனுகிய இல்லறத்தான் வேள்வி செய்து முடித்த முடிவிலே "நரியம்" என்னும் பெயரையுடைய திருநீற்றைத் தரிக்கவேண்டும் "ஸ்வ" என்னும் தேற்றத்தால் திருநீறு தரியாதிருக்கலாகாது. சுவேளதாக்கினியை ஆதானஞ் செய்துகொள்ளாம லிருக்கும் ஸ்மார்த்தனவில்லறத்தான் "ஔபாசனத்தால்" பிறந்திருக்கிற "பிரமா" என்னும் பெயரையுடைய திருநீற்றைத்தரித்தல்வேண்டும். எ-று. காண்க. "హుత్వాచైవతుభ స్మనా" என்றதுமுதலிய வேறு மிருதி வாக்கியங்களால் சுவேளத ஸ்மார்த்தமென்னும் இரண்டு வேள்வித் தீயினையு முடையவன் அவ்விருவகைத் திருநீற்றினையும்தரித்தல் வேண்டும். எங்ஙனமாயும் ஸ்மிருதி சுருதி சம்பந்தமாகிய திரு வெண்ணீற்றினைத் தரித்தல் நித்திய கருமமாகிய அக்கினி ஹோத்திரம் ஔபாசனமென்பதற்கு அங்கமாக விதிக்கப்பட்டிருக்கின்றது. "ச" என்ற உம்மையால் இவ்விடயத்திற் பிரமாண வுரைகள் அனேகமாக வுள்ளன வென்பதனைக் குறிக்கப்படுகின்றது. இங்ஙனம் ஹோமவிதி முற்றிற்று.

"సంధ్యాస్నానంజపో హోమः" என்ற மூலவசனத்துட் கூறப்பட்ட கருமங்களுள் ஹோமம்வரையி லிங்ஙனம் விளக்கப்பட்டன: இவற்றினையெல்லாம், ஒருபகற்பொழுதினை எட்டுப்பங்காக்கியவழி நேரும் முதற்பாகத்தில், (எனவே காலையோரைச் சாமப் பொழுதினுக்குள்ளாக) முடித்தல் வேண்டும். ஆயின் மாத்தியாந்நிக ஸ்நானம் முதலிய சிலவற்றினையும் இதுகாறுங் கூறிப்போந்தனவற்றுள் கூறப்பட்டுள்ளனவே யெனின்? அற்றன்று அவ்வவ்வதிகாரத்துள் விசாரம் வந்தவழிக் கூறியவாறு மாதலின் அவற்றினையும் அம்மூன்றேமுக்கால் நாழிகைக்குள் முடித்

துவிடவேண்டுமெனக் கூறியவாறன்று. என்னை? "திவஸஸ்யாத்ய
ர்தாகேது கர்த்ருமந்தஸ்யாபதிஶ்யதே। த்வீதியேசதுர்தியேச சதுர்தேபஞ்சமேதர்தா। ஷஷ்டேசஸப்த
மேசைவ அஷ்டமேசபுர்தக்புர்தக்। விர்தாகேஷ்வேஷுயத்கர்ம தத்ப்ரவக்ஷ்யாம்யஶேஷதஃ"=
ஒருபகலின் முதற்பாகத்துள் செய்யத்தக்க கருமங்களைச் செய்
வோனுக்குக் கூறியது இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு,
ஏழு, எட்டு பாகங்களிலும் வேறு வேறு செய்யத்தக்க கரு
மங்க ளெல்லாவற்றினையும் ஒழியாது கூறுதும் என்று மேற்
கூறுதலின்.

இனித் தேவதார்ச்சனைக்குரிய காலமுதலியன.

இனி மூலவாக்கியத்தினைப்பற்றி ஹோமவிதியைக் கூறி
முடித்தபின்தேவபூசையைக் கூறுதல்வேண்டும். ஆகவே, அப்பூச
னையானது, காலைவேள்விக்கடனைச்செய்து முடித்தபின்னர் எனச்
சிலர் கூறுவர் அங்ஙனம் மரீசியும் கூறினர், ஸரீசிः॥ "ஏதாயதேவ
ஹுபூஜாப ப்ராதர்ஹோமாதனந்தரம்"=காலையில் ஹோமவினை முடித்த
பின்பு தேவபூசை செய்து, என்றவாறு.

பிரமவேள்வியும் செபமும் செய்தபின்னர் தேவபூசைசெய்
யவேண்டுமென மற்றொரு சாரார் கூறுகின்றனர். வருமாறு.
"குர்வீததேவதாபூஜாம் ஜபயஜ்ஞாவனந்தரம்"=செபம் வேள்வி செய்த
பின்பு தேவபூசை செய்யவேண்டுவது. என்று. ஏனைய மிருதிக
ளுட்காண்க.

கூர்மபுராணம். கூர்மபுராணே॥ "நிஷ்க்ரம்யஸ்நானவஸ்த்ரம்வை ஸமாசம்யச்ச
வாக்யதஃ। ஸ்ப்ருஷ்ட்வாத்ரிரத்ஸுயேத்தேவா ந்ருத்ரிரபுஷ்பஸ்தர்தாம்புபிः"=நீராடி ஆடை
யைப்பிழிந்து, ஆசமனஞ்செய்து, வாய்பேசாது, அவரவர்க்
குரிய மந்திரத்தோடு அந்தந்தத்தேவனைப் பத்திரம் பூ நீர் முத
லியவற்றோடு பூசித்தல்வேண்டும் என்று. காண்க. இந்தத்தேவதார்
ச்சனை அதிகாரம், பிரம வேள்வியைக் கூறியபின்னர்க் கூறுதும்.
ஈண்டுக் காலைஹோமஞ் செய்தபின் பிரம வேள்விவரையில்செய்
யத்தக்க கருமங்களை மூலவசனத்துள் கூறுதிருப்பினும், ஏனைய
சுருதி மிருதிகளால் கூறப்பட்டு அநுட்டான முறையே வரு
கின்றதாமாதலின் அக்கருமங்க ளெல்லாவற்றினையும் முறையே
கூறுதும்.

வேள்வித்தீக்கருமம் முடிந்தபின் செய்யத்தக்கன.

ஹோமஞ் செய்தபின் செய்யத்தக்கனவற்றைத் தகூஷர் கூறினர். దక్షः॥ "ఏవకార్యంతతఃకృత్వా గురుమంగళపీఃణం" = பின்பு இவ்வகருமங்களைச் செய்துமுடித்து, ஆசிரியனையும் மங்கலத் திரவியங்களையும் தரிசிக்க வேண்டும். எ-று. காண்க. மங்கலத் திரவியமென்பன கண்ணாடி முதலியன.

மங்கலப்பொருளை நோக்குதல்.

உதயகாலத்தில் மங்கலப் பொருளினை நோக்கவேண்டுமென மச்சபுராணத்துட் கூறப்பட்டது. మత్స్యపురాణే॥ "రోచనంచందనంధేనుం మృదంగందర్పణంమణిం। గురుమగ్నించసూర్యం చప్రాతఃపశ్యేత్సదాబుధః" அறிவுடையோன் பொன்னையும், சந்தனத்தையும், பசுவினையும், மத்தளமுதலிய மங்கலவாத்தியங்களையும், கண்ணாடியையும், அரசனத்தையும், ஆசிரியனையும், எரிநெருப்பினையும், சூரியனையும், நித்தமும் காலையில் நோக்கவேண்டும். எ-று. காண்க.

விஷ்ணுபுராணம். విష్ణుపురాణే॥ "స్వాచాంతశ్చతతఃకుర్యా త్పుమాన్కృ-శప్రసాధనం। ఆదర్శాంజనమాంగళ్య దూర్వాద్యాలంబనానిచ" = பின்பு ஆசமனஞ்செய்து ஆண்மகன் தன் தலையுரோமத்தைச் சீர் திருத்திக் கொள்ளவேண்டும். கண்ணாடியைப் பார்த்து மை யெழுதிக் கொண்டு மங்கலத்திரவியங்களை நோக்கி அறுகு முதலியனவற்றைக் கையிற்பற்றவேண்டும். எ-று. காண்க.

நெய்நோக்கு.

பிரமபுராணம். బ్రహ్మపురాణే॥ "స్వమాత్మానంఘృతెపశ్య స్తత్ప్రదద్యాద్య థావిధి। విప్రాయవెదవిదుషె యదిచ్ఛెచ్చిరజీవితం" = நெடுநாட்பிழைத்திருக்கவேண்டுமென்னு மிச்சையை யுடையவன் நெய்யிற் றன்னிழலை நோக்கி அந்நெய்யை வேத முணர்ந்த வேதியனுக்கு விதிப்படி தானமாகக் கொடுக்கவேண்டும். எனவே தகூஷிணையோடு மந்திரங் கூறிக்கொடுத்தல் செய்க. எ-று. காண்க,

அட்டமங்கலம்.

நாரதர். నారదః॥ "లోకేస్మిన్మంగళాన్యష్టౌ బ్రాహ్మణోగౌర్హుతాశనః। హిరణ్యంసర్పిరాదిత్య ఆపోరాజాతథాష్టమః। ఏతానిసతతంపశ్య న్మనస్యేదర్చయెచ్చయః।

ப்ரதக்ஷிணம்சகுர்வீத ததாஹ்யுயுர்னஹீயதே" = உலகத்துள் சிறந்தமங்கலப் பொருளாயுள்ளன எட்டு. அவை, வேதியன், ஆன், எரிகெருப்பு, பொன், நெய், சூரியன், நீர், அரசன், எனவாம். இவைகளை யெப் பொழுதும் தரிசித்த அளவிலே வலம்வந்து பணிந்துயார் எவ் வளவு பூசிக்கின்றனை? அவன் அவ்வளவு ஆயுள் குறையாம லே விருத்தியை யடைவன். எ-று. காண்க.

மநு. மநுः॥ "அக்நிசித்க்ருபிலாஸத்ரீ ராஜாபிக்ஷுர்ப்ரஹ்மாததிः। த்ருஷ்டமா த்ராதிபுநம்த்யேதே தஸ்மாத்பச்யேதநித்யசः" = "அக்நிசயநம்" "அக்கினி சயனம்" செய்த அக்கினிஹோத்திரியாகிய வேதியன், கபிலப் பசு, சத்திரயாகஞ் செய்தவன், அரசன், துறவி, மஹா சமுத்திரம், இவைகள் பார்த்தளவே ஒருவனைப்பரிசுத்த ஞ்செய்கின்றன. ஆதலினிவற்றை நாடோறும் தரிசிக்க வேண்டுவது. எ-று. காண்க.

வாமனபுராணம். வாமநபுராணே॥ "ஹோமம்சகுர்வ்வா லபநம்சுபாநாம்। தத்தாபஹிர்நிர்க்ரமசம்ப்ரசஸ்தம்। தூர்வாஞ்சகர்விர்த்ததிஸோதகும்பம்। தேநும்சவத்சாம் வ்ருஷ பம்சுவர்ணம்। ம்ருத்கோமயம் ஸ்வஸ்திகமக்ஷதாம்ஶ்சதைலம் மதுப்ராஹ்மணகந்யகாம்ஶ்ச। ஸ்வேதா நிபுஷ்பாணி தத்தாஶமீம்ச ஹுதாஶநம் சம்தநமர்க்கபிம்பம்। அஶ்வத்தவ்ருக்ஷம்சஸமாலபேத। ததஶ்சகுர்யாந்ந ஜநாதிதர்மம்" = வேள்விசெய்து மங்கலங்களைச் செய்து வெளிச்சென்று, அறுகு, நெய், தயிர், நீர் நிறைகுடம், கன்றோடு கூடிய ஆன், இடபம், பொன், பூமி, நல்ல மிருத்திகை, கோமயம் ஸ்வஸ்திகம் = பஞ்சவண்ணத்தோடு தேவபூசையின் பொருட்டு விதிப்படி அமைத்து வைத்த மாக்கோலம், அக்ஷதை, நல்லெண் ணெய், தேன், வேதியன், வேதியர் கன்னிகை, வெண்பூ, வன்னி விருக்ஷம், எரிகெருப்பு, சந்தனம், சூரியன், அரசமரம், இவை களைத்தரிசித்தும் பரிசித்தும் பணிந்து பின் தன்குல தருமத்தைத் தொடங்கவேண்டும். எ-று. காண்க.

பாரத்துவாசர். பாரத்வாஜः॥ "கம்டூயப்ரஷ்டகாம்காம்து க்ருத்வாசா ஶ்வத்தவந்தநம்। உபகம்யகுரூம்ஸ்தர்வா ந்விப்ராம்ஶ்சைவாபிவாதயேத்" = பசுவினைச் சொறிந்து வலம்வந்து, அரசமரத்தினை வணங்கி, ஆசிரியரை அடைந்து பணிந்து, வேதியரனைவரையும் தொழவேண்டும். எ-று. காண்க.

முதற்கண்வணங்குதற் குரியார்.

வேதியர் கூட்டத்துள்ளே முதலில் வணங்குதற்குரியா ரிவ ரென்பதனை மனுகூறினர். மநுஃ॥ "లౌకికంవైదికంవాపి తథాధ్యాత్మికమే వవా। ఆదదీతయతోజ్ఞానం తంపూర్వమభివాదయేత్" = உலகசம்பந்த மானதி லேனும், வேதசம்பந்த மானதிலேனும், ஆன்மசம்பந்த மானதி லேனும், ஞானத்தைத் தான் யாரால் பெறக்கூடுமோ? அவனுக்கு முதலிலே அபிவாதன நமஸ்காரஞ் செய்யவேண்டும். எ – று. காண்க.

அபிவாதன முறை.

மனு. மநுஃ॥ "అభివాదాత్పరంవిప్రో జ్యాయాంసమభివాదయన్। అసౌనా మాహమస్మీతి స్వంనామపరికీర్తయేత్। భోశబ్దంకీర్తయేదంతే స్వస్యనామ్నాభివాదయేత్" தன்னின் மூத்தோரை வணங்குவோன் முதற்கண் "நமஸ்கரிக் கின்றேன்" என்று கூறிப்பின்பு தன்பெயரையும் கூறவேண்டும், பின்னர் விளித்தல் வாசகத்தைக் கூறவேண்டும். இவ்வாறு தத் தம் பெயர் கூறிவணங்குதல் வேண்டும் எ-று. காண்க. விளித் தல் = அழைத்தல். உதாரணம். "అభివాదయేదేవదత్తనామాహంభో" = பணிகின்றேன் தேவதத்தனாகிய நான் ஐயா? எனவரும்.

பிறமிருதி. స్మృత్యంతరే॥ "గోత్రంస్వశాఖాంస్వంనా మకీర్తయన్న భివాద యేత్" = தன் கோத்திரத்தினையும், தன் அத்தியயன சாகையை யும், தன்பெயரினையும் கூறிப்பின்னர் வணங்கவேண்டும். எ – று. காண்க.

பணிதல்வகையை ஆபத்தம்பர் கூறினர். ఆపస్తంబఃమ॥ "దక్షి ణంబాహుంశ్రోత్ర సమంప్రసార్యబ్రాహ్మణోభి వాదయేదురస్సమం రాజన్యోమధ్యసమం వైశ్యోనీచైశ్శూద్రఃప్రాంజలిః" = வலதுகையினைச் செவிக்குச் சரியாக வுயரவெடுத்து வேதியன் அபிவாதனஞ் செய்யவேண்டும், மார் பினுக்குச் சரியாக அரசன், இடைக்குச்சரியாக வைசியன், தாழ் ந்து தாழையோடொப்பச் சூத்திரன் அஞ்சலிசெய்த கரமுடைய வனைப் அபிவாதனஞ் செய்யவேண்டும். எ-று. காண்க.

ஒற்றைக்கையால் அபிவாதனஞ் செய்யலாகாது என்பதனை விஷ்ணு கூறினர். విష్ణుఃమ॥ "జన్మప్రభృతియత్కించి చ్చేతసాధర్మమాచరేత్। సర్వం తన్నిష్ఫలంయాతి ఏకహస్తాభివాదనాత్" = பிறந்ததுமுதல் மனத்தால்

ஏதேனுஞ் சிறிது தருமஞ் செய்திருந்தாலுமதுஓற்றைக் கையால் வணங்குதலால் நசித்துப் போகின்றது. எ-று. காண்க.

எழுந்து எதிர்நின்று நமஸ்காரஞ் செய்யவேண்டும் என ஆபத்தம்பர் கூறினர். ఆపస్తంబః॥ "ఊర్ధ్వంప్రాణాహ్యుత్క్రమంతి యూనస్థనవి రఆగతె। ప్రత్యుత్థానాభివాదాభ్యాం పునస్తాప్రతిపద్యతె" = வயது மூதிர்ந்த விருத்தர்வந்தால் இளைஞராயுள்ளோர் பிராணசத்தி மேலெழும் பத் தொடங்குகின்றது. ஆதலால் பிரத்தியுத்தானத்தாலும், நமஸ்காரத்தினாலும் மறுபடியும் அந்தப் பிராணசத்தியை யவர்க ளடைகின்றார்கள். எறு. காண்க. பிரத்தியுத்தானம்=மரியாதை யாக எழுந்திருத்தல்.

இனி வணங்கப்பட்டவன் விடயம்.

நமஸ்காரஞ் செய்தவனைப்பற்றிச் செய்யப்பட்டவன்சொல் லவேண்டியதனை மநுகூறினர். మనుః॥ "ఆయుష్మాన్భవసౌమ్యేతి వాచ్యో విప్రాభివాదనె। అకారశ్చాస్యనామ్నొంతె వాచ్యఃపుర్వాక్షరప్లుతః" = "ஆயுஷ் மான்பவஸௌமியா அ-அ." ஆயுளையுடையவனேகுகநல்லோய்என் றுவேதியன்வணங்கியவழிக் கூறுதல்வேண்டும். இவன்பெயர் முடி வில், அகாரத்தைக் கூறவேண்டும். பூருவஎழுத்து அளபெடை யாக விருத்தல் வேண்டும். எறு. காண்க. பூருவஎழுத்து எனவே எது முன்னே யோரொழுத்தினையுடையது அது பூருவாக்கரம் என்றபடி. ஆகவே ஈற்றெழுத்து என்பதுகருத்து. முதலெழுத் தோவெனின்? தன்னுற்றலால் மெய்யெழுத்தாகவே யிருக்கின் றது. என்னை? உயிர்மே லுயிரேறி முடிதலின்மையின். இங்ஙனங் கூறியதனல் வணங்குவோனுடைய பெயர்க்கணுள்ளமெய்யெழுத் தினையூர்ந்த ஈற்றுயிரொழுத்தினை யளபெடையாகக் கூறவேண் டும். அகரத்தைக் கூறவேண்டுமென்றதனல், ஈற்றுயிரொழுத்து மாத்திரையே உபலக்கணவிதியாற் காணப்படுகின்றது. எல்லாப் பெயர்களுக்கும் அகரமே யிறுதியில் நிற்குமென்பது நியமமல் லாமையின். அங்ஙனமாயின். கூறுமாறென்னையெனின்? உதா ரணம். "ఆయుష్మాన్భవదేవదత్తఅ" என்று ஆயுளையுடையவனேக தேவதத்தா அ-அ. எனவரும். தேவதத்தன் என்ற பெயர்க்காக நமஸ்காரஞ்செய்வோன் பெயரைக் கூறிக்கொள்க.

அபிவாதனஞ் செய்தவனுக்கு மறுபடியும் அபிவாதனஞ் செய்யு முறைதெரியாதவன் யாரோ? அவன் அபிவாதனஞ் செய்விக்துக் கொள்ளத்தக்கவ னல்லன். அங்ஙனம் மனு கூறினர். மநுஃ॥ "యోనవేత్యభివాద్యస్య విప్రధ్రత్యభివాదనం। నాభివాద్యస్సవిదుషా యథా శూద్రస్తథైవసః" = அபிவாதனஞ் செய்தவனுக்கு எதிர் அபிவாத னஞ்செய்ய எந்த வேதியன் தெரியாதவனுவனே? அந்த வேதி யன் அபிவாதனஞ் செய்வித்துக் கொள்ளுகைக்குத் தக்கவனல் லன். (எனவே அப்படிப்பட்டவனுக்கு அபிவாதனஞ் செய்ய லாகாது என்பதுகருத்து). சூத்திரனெவ்வாறே? அவ்வாறே யவனுமாவன். எறு. காண்க.

யார் தெரிந்தவனேயாயினும் எதிர் அபிவாதனஞ்செய்வ தில்லையோ? அவனுக்குத் தோஷ முண்டாமென்று பவிடிய புராணத்திற் கூறுகின்றது. భవిష్యత్పురాణే॥ "అభివాదక్రియేయస్తు నకరో త్యభివాదనం। ఆశిషంచకురుశ్రేష్ఠ సయాతినరకాన్బహూన్" = அபிவாதனஞ் செய்யப்படும்போது யார் எதிர் அபிவாதனமாயினும் ஆசீர்வாத மாயினும் செய்வதில்லையோ? அவன் பலநரகங்களையு மடைகின் றான். எறு. காண்க.

இயமன். యమః॥ "అభివాదెతుయదిపూర్వ మాశిషంనప్రయచ్ఛతి। యద్దు ష్కృతంభవెత్తస్య తస్మాద్భాగంప్రపద్యతె। తస్మాత్పూర్వాభిభాషిస్యా చ్చండాలస్యాపిధ ర్మవిత్। సురాంపిబెతివక్తవ్య మెవంధర్మోనహీయతె। స్వస్తీతిబ్రాహ్మణోబ్రూయాదాయు ష్మానితిభూమిపః। వర్ధతామితివైశ్యస్తు శూద్రస్తుస్వాగతంవదెత్" = அபிவாதனஞ் செய்யும்போது யார் முதலில் ஆசீர்வாதத்தைச் செய்வதில்லை யோ? அவன் அபிவாதனஞ் செய்தவனுடைய பாவத்துள் ஒரு பங்கினையடைகின்றன். ஆதலின் முதற்கண் வாய்திறப்போதுக வேண்டும். தருமத்தை யுணர்ந்தவன் சண்டாளனுக் காயினும் கள்ளினைக்குடித்துச்செல்லுகளன்று இதமொழியைக் கூறவேண் டும். இங்ஙனஞ்செய்வோனுக்குத்தருமம் ஈனமாவதில்லை. வேதி யன் "స్వస్తి" "சுவஸ்தி" என்று கூறவெண்டும். அரசன். "ஆயுஷ்மான்" என்று கூறவேண்டும். வைசியன் "வர்த்ததாம்" என்று கூறவேண்டும். சூத்திரன் "சுவாகதம்" என்று கூற வேண்டும். எறு. காண்க. சுவஸ்தி = க்ஷேமம் ஆகுக. ஆயுஷ் மான்=தீர்க்காயுளுடையவனுகுக. வர்த்ததாம்=விருத்தி அடைக. சுவாகதம்=நன்றுகவந்தனையோ? என்றவாறு.

க்ஷேமம் விஞ்சுதல்.

மனு. மனுஃ॥ "ப்ராஹ்மணம்குசலம்ப்ருச்ச்வே த்க்ஷத்ரபந்துமனா மயம்। வைச்யம்சைவ மனுஸமாகம்ய சூத்ரமாரோக்யமேவச। பரபத்னீதுயாஸ்த்ரீஸ்யா தஸம்பந்தாச்சயோ நிதஃ। தாம்ப்ரூயாத்பவதீத்யேவம் சுபகேபகினீதிச"=வேதியனைக் "குசலமா" என விசாரித்தல்வேண்டும். அரசனை "அநாமயமா" எனக் கேட்க. வைசியனை "க்ஷேமமமா" என விளுவுக. சூத்திரனை "ஆரோக்கியமா" என்க. அந்நியன் மனைவியாயும் தனக்குப் பிறவிச் சம்பந்தமில்லாதவளாயுமுள்ள மாதினை "பவதீ = பவதீ" "சுபகே = சுபகே" "பகினீ = பகினீ". என விளித்து உபசரித்தல் செய்க. எறு. காண்க. குசலம் = அறிவின் சுகவிருத்தி. அநாமயம் = உபத்திரவங்களில்லாமை? க்ஷேமம் = இருந்த நிலைமை கெடாதிருத்தல், ஆரோக்கியம்=நோயில்லாமை, பவதீ = அருச்சனைக்குத் தக்கவளே! சுபகே = மங்கலமுடையவளே! பகினீ = உடன்பிறந்தாளே! என்றவாறு.

பணிவுழி மூத்தோனிலக்கணம்.

"ஜ்யாம்ஸமபிவாதயன்" = தன்னினு மூத்தோனுக்கு அபிவாதனஞ் செய்து என்று முன் கூறப்பட்டுள்ள தன்மை? அங்ஙனம் செய்யப்படுவோன் எவ்வளவு காலம் மூத்தோனாகவேண்டுமென்பதனை ஆபத்தம்பர் கூறினர். ஆபஸ்தம்பஃ॥ "த்ரிவர்ஷபூர்வஶ்ரோத்ரியோபிவாபனமர்ஹதி"= மூன்றுவருடம் மூத்தோனாகியுள்ள சுரோத்திரியன் நமஸ்கரிக்கத் தக்கவனாக விருக்கின்றான். எறு. காண்க.

மனு. மனுஃ॥ "தசாப்தாக்ஷ்யம்பௌரஸக்ஷ்யம் பஞ்சாப்தாக்ஷ்யம்கர்ஷ்ணபிருதாம்। த்ரயாப்தபூர்வம்ஶ்ரோத்ரியாணா மல்பேனாபிஸ்வயோனிஷு" = தான்வசிக்கும் ஊரின் கண்ணேயுள்ளவருள் பத்துவருடம் மூத்தோனாகவிருக்க. வாசித் துணர்ந்தவருள் ஐந்துவருடம் மூத்தோனாகவிருக்க. வேதமோதியவருள் மூன்றுவருடம் மூத்தவனாகவிருக்க. பிறவிச்சம்பந்தமுடைய தமையன் முதலிய சுற்றத்தாருள் ஒரு சிறிது மூத்தோனாயிருக்கினும் சாலும். எறு. காண்க.

பணிவுழிச் சிறியோர் விடயம்.

இருத்துவிக்கு முதலியோர் சிறியோரோயாயினும் வணங்கத்தக்கவரோயாமென்று யாஞ்ஞவற்கியர் கூறியிருத்தலின், வய

திற் சிறியோர்க்கும் அபிவாதனஞ்செய்தல் வேண்டு மன்றே எனின்? எதிரொழுதல், உளாயாடல், இவைகளால் அவர்கட்கு உபசாரஞ்செய்தல் தகுதியாதலின் அபிவாதனமுஞ் செய்யலா மென்று கௌதமர் கூறினர். గౌతమः॥ "ఋత్విక్ష్వశురపితృవ్య మాతులా నాంతుయవీయసాం ప్రత్యుత్థానాభివాదనం" = இருத்துவிக்கு, மகட்கொ டை நேர்ந்தமாமன், தந்தையுடன்பிறந்த இளையோன், தாயுடன் பிறந்த அம்மான், இவர்கள் தன்னிற் சிறியரே யாயினும் தன் னிடம் நாடிவரின் பெருமைநோக்கி எதிரெழுந்து அபிவாதனஞ் செய்யவேண்டும். எறு. காண்க.

அபிவாதனம் என்பது தனது கோத்திரம் பிரவரம்பெயர் முதலிய கூறி வணங்குதலா மாதலினிப்பொருள் இவ்விடத்துச் செல்லாது. பிறவெனின்? நல்லுக உபசரித்துளையாடலே அபி வாதனமென்க. அங்ஙனம் போதாயனர் கூறினர். బోధాయనः॥ "ఋత్విక్ష్వశురపితృవ్యమాతు లానాంతుయవీయసాం ప్రత్యుత్థానమభిభాషణంచ"= இதற்கு உளைமேலே கூறப்பட்டது. இதுவேதியர் விடயம் என்றுணர்க.

வேதியன் மாட்டேனையர் விடயம்.

சாதாதபர். శాతాతపः॥ "అభివాద్యో నమస్కార్య శ్శిరసావంద్యఏవచ। బ్రాహ్మణఃక్షత్రియాద్యైస్తు శ్రీకామైస్సాదరంసదా" = செல்வத்தை விரும் பிய அரசன் முதலிய வருணத்தர் எப்பொழுதும் வேதியனுக்கு அபிவாதனமும் நமஸ்காரமுஞ் செய்யவேண்டும். தலைகுனித்து வணங்குதலுஞ் செய்க. எ-று. காண்க.

அந்நியர் மாட்டுவேதியன் விடயம்.

சாதாதபர். శాతాతపः॥ "నాభివాద్యస్తుబ్రహ్మణ క్షత్రియాద్యైః కథం చన। జ్ఞానకర్మగుణోపేతా యద్యప్యేతెబహుశ్రుతాः" = கூடத்திரியன் முதலி யோர் நல்லஞானம், நல்லகருமம், நற்குணம், சிறந்தபுகழ்உடை யவர்களா யிருப்பினும் அவர்கட்கு வேதியன் எவ்வகையபிவாத னமும் செய்யலாகாது.. எ-று. காண்க.

சூத்திரனுக்கு வணங்கிய வேதியன்விடயம்.

இதுவுமது. "అభివాద్యద్విజశ్శూద్రం సచెలస్నానమాచరెత్। బ్రాహ్మణా నాంశతంసమ్య గభివాద్యవిశుధ్యతి" = இருபிறப்பாளன் சூத்திரனுக்கு

நமஸ்காரஞ் செய்தால் அப்போது கட்டியிருந்த வுடையோடு நீராடவேண்டும். பின் நாறுவேதியர்க்கு நன்முக அபிவாதனஞ் செய்தால் சுத்தனுகின்முன் எ-று. காண்க.

அபிவாதனஞ் செய்யத்தகாதவிடம்.

விஷ்ணு. విష్ణుః॥ "సభాసుచైవసర్వాసు యజ్ఞేరాజగృహేషుచ। నమస్కారంప్రకుర్వీత బ్రాహ్మణాన్నాభివాదయేత్" = எவ்வகைச் சபையினிடத்தும் வேள்விச் சாலையினும், அரசனரண்மனையினும் வேதியர்க்கும் நமஸ்காரஞ் செய்யலாமன்றி அபிவாதனஞ் செய்யலாகாது. எ-று. காண்க.

பாதோபசங்கிரகணம்.

ஆசிரியன் முதலியோர் விடயத்தில் முதற்கண் அவர்கள் பாதத்தைப் பற்றவேண்டுவ தென்று கௌதமர் கூறினர். గౌతమః॥ "గురోరుపాదోపసం గ్రహణంప్రాతః" = "உதயகாலத்தில் ஆசிரியன் திருவடியைப் பற்றிப் பரிசிக்கவேண்டும். எ-று. காண்க. ஈண்டு இம்மூலத்துள் குரு என்றதாசிரியனை. என்னை; அதனை மேற் கூறுப.

கௌதமர். గౌతమ:॥ "మాతృపితృతద్బంధూనాం పూర్వజానాంవిద్యా గురూణాంతద్గురూణాంచాభివాదయేత్" = தாய், தந்தை, அவர்கள் சுற்றத்தினர், தமையன்மார், தமக்கையர், ஓதுவித்தகுரவர், அவர்குரு, இவரனைவர்க்கும் அபிவாதனஞ் செய்க. எ-று. காண்க.

பாதோபசங்கிரகண விலக்கணம்.

அங்ஙனம் திருவடி பற்றிப் பரிசிக்கு மிலக்கணத்தை மனு கூறினர். మనుః॥ "వ్యత్యస్తపాణినా కార్య ముపసంగ్రహణంగురోః। సవ్యేనసవ్య స్పృష్ట్వో దక్షిణేనతుదక్షిణః" = ஆசிரியனுடைய பாதாபி வாதனத்தினைத் தன்னுடைய வியத்தியஸ்தமானகைகளினுல் செய்யவேண்டும். எனவே ஆசிரியன் வலது திருவடியைத் தனது வலக்காலும் இடது திருவடியை யிடக்காத்தாலும் மாறிப் பரிசிக்கவேண்டும். எ-று. காண்க.

போதாயனர். బోధాయనః॥ "శ్రోత్రేసంస్పృశ్యమానస్తు మూర్ధాయాథ స్తాజ్జానూన్వారా పదాభ్యమిత్యు పసంగ్రహణం" = காதினைத்தொட்டு அமைதி

யோடும் முழங்காலினுக்குக்கீழ் பாதம்வரையில் மாறித் தொட்டுத் தலைவணக்கஞ் செய்யவேண்டும். எ-று. காண்க.

இங்ஙனம் திருவடித் தொடுதல் குருபன்னி முதலியவர்க்கும் செய்யவேண்டும். அங்ஙனம் மனுகூறினர். மநுஃ॥ "குருவத்ர்து திபூஜ்யஸ்ய ஸவர்ணாகுருயோஷிதஃ। அஸவர்ணாஸ்துஸம்பூஜ்யாஃ ப்ரத்யுத்தானாபிவாதனைஃ। ப்ராதுர்பார்யோபஸம்க்ராஹ்யா ஸவர்ணாஹன்யஹன்யபி। விப்ரோப்யுபாஸம்க்ராஹ்யோ ஜ்ஞாதிஸம்பந்தியோஷிதஃ" = குருவின் சுசாதிமனைவியர், குருவைப்போலும் பூசிக்கத்தக்கவராம். அந்தியசாதி மனைவியரும், எழுந்து நின்று நமஸ்காரத்தக்கவராகின்றனர். தன் வருணத்தாளாகிய தமையன் மனைவிக்கு நாடோறும் பாதந்தொட்டு அபிவாதனஞ் செய்யவேண்டும். யாத்திரைசென்று வந்தகாலத்தின் மாத்திரம் ஞாதியர், சுற்றத்தினர்முதலிய பெரியோர் மனைவியர்க்கும் பாதந்தொட்டு அபிவாதனஞ் செய்யவேண்டும். எ-று. காண்க.

அவ்வந்தனஞ் செய்யத்தகாதவிடம்.

இம்முறை விசேடண மில்லாமலே குருமுதலிய யாவர்க்கும் பாதவந்தனஞ் செய்யவேண்டு மென்னும் சாமானியவிதிக்கு மாறுக அம்மனுவே கூறினர். மநுஃ॥ "குருபத்நீதுயுவதி ர்நாபிவாத்யேஹ பாதயோஃ। பூர்ணவிம்சதிவர்ஷேண குணதோஷாவிஜானதா। அப்யஞ்ஜனஸ்நாபனஞ்ச காத்ரோத்ஸாதனமேவச। குருபத்ந்யனகார்யாணி கேசானாஞ்சப்ரஸாதனம்" = இருபது வருட முடையவனுய்க் குணதோஷங்களையறிந்த ஆண்மகன், யௌவனப் பருவமுடைய குருபன்னிக்குப்பாதத்தைத் தொட்டு அபிவாதனஞ் செய்யலாகாது. யௌவனமுடைய குரு மனைவியும், இளமைப் பருவமுடைய மாணாக்கர்க்கு எண்ணெயிடுதல், நீர்விடுதல், உடம்பினைத் தேய்த்தல், தலைமயிர் வகிர்தல் முதலியவற்றினைச் செய்யலாகாது. எ-று. காண்க.

பிறவெனின் அம்மனு கூறினர். மநுஃ॥ "காமந்துகுருபத்நீனாம் யுவதீனாம்யுவாபவேத்। விதிவத்வந்தனங்குர்யாதஸாவஹமிதிப்ருவன்। விப்ரோப்யுபாதக்ரஹணமன்வஹம்சாபிவாதனம்। குருதாரேஷுகுர்வீத ஸதாம்தர்மமனுஸ்மரன்" = குமாரப் பருவமுடையவன், யௌவன முடைய குருபன்னியர்க்குமிகவும் பத்திமையோடும் நான் இன்னவன் என்று கூறிக்கொண்டே விதிப்படி தூரத்திருந்து வந்தனஞ் செய்யவேண்டும். யாத்திரை சென்

றுவரும்போது மாத்திரம் பாதத்தைத்தொட்டு அபிவாதனஞ் செய்க. அங்ஙனம் நாடோறும் செய்யலாகாது. எனவே தொடாமலே அபிவாதனத்தை மாத்திரம் நித்தமும் செய்யவேண்டுமென்க. தருமங்களைத்தான் அடையவிரும்பியேகல்லோன் குருமனைவியர் விடயத்தி லிவ்வாறு நடந்துகொள்ள வேண்டுவது. எ–று. காண்க.

அபிவாதனஞ் செய்யலாகாதவன், செய்யப்படாதவன்.

அபிவாதனஞ் செய்வதில் விலக்கத்தக்கவரை ஆபத்தம்பர் கூறினர். ఆపస్తంబః॥ "నస్పానడ్వాహ్యశిరో వహితపాణిర్వాభి వాదయీత"= காலில் பாதரக்ஷை பூண்டவனும், தலைமேல் ஆடைசுற்றியவனும், வேற்றுத் தொழில்பூண்ட கையுடையவனும், அபிவாதனஞ்செய்யலாகாது. எ–று. காண்க.

சங்கர். శంఖః॥ "నోదకుంభహస్తాభి వాదయేన్నాహితం చరన్నపుష్పహస్తో నా శుచిర్నజపన్న దేవపిత్ర్యకార్యం కుర్వన్నశయానః" = நீர்க்கரகம் பற்றினவன், பிக்ஷாந்நத்தோடு செல்லுவான், பூக்களைக் கையிற்கொண்டவன், அசுத்தமாயுள்ளவன், செபஞ்செய்து கொண்டிருப்பவன், தேவகாரியம் பிதிர்காரியம் செய்பவன், படுத்திருப்பவன், இவர்களெல்லாம் அபிவாதனஞ்செய்யப்படாதவர்களாம். எறு. காண்க.

ஆபத்தம்பர். ఆపస్తంబః॥ "తథానిష్ణమగతాయ గురవేనాభివాద్యంతథా ప్రయతాయాప్రయతశ్చేన ప్రత్యభివదేత్పతి వయసస్త్రియః" = ஒத்த நிலைமையில்லாத ஆசிரியனுக்கு அபிவாதனஞ் செய்யலாகாது. சரியான நிலைமையி லில்லாதவனுக்கு அவ்வாறுள்ளவன் அபிவாதனஞ் செய்யலாகாது. தன்னைடொத்த வயதினையுடைய மாதர்கட்கும் அபிவாதனஞ்செய்யலாகாது. எறு. காண்க.

அவ்வாறே வேறோரிடத்து மவர் கூறியவாறு. ఆపస్తంబః॥ "సమిత్పుష్పకుశాజ్యాంబు మృదన్నాహితపాణికః। జపంహోమంచకుర్వాణో నాభివాద్యస్సదాద్విజః। పాషండంపతితంవాత్యం మహాపాతకినంశఠం। నాస్తికంచకృతఘ్నం చ నాభివాద్యాత్కథంచన। ధావంతంచప్రమత్తంచ మూత్రోచ్చారకృతంతథా। భుంజానమాతురంనార్హం నాభివాద్యాద్విజోత్తమః। వమంతంజృంభమాణంచ కుర్వంతందంతధావనం। అభ్యక్తశిరసంచైవ స్నాస్యంతంనాభివాదయేత్। స్రుక్వాణికమవిజ్ఞాత మశ

க்ருபரிபுமாதுரம்। யோகிஸம்சதபஸ்கந்தம் கநிஷ்டம்நா பிவாதயேத்" = சமித்து, பூ, தருப்பை, நெய், நீர், மிருத்திகை, அன்னம், அகூதை, கையிற் பற்றியுள்ளவனுக்கும், செபம், ஹோமம் செய்பவனுக்கும், அவ் வாறிருக்கும் இருபிறப்பாளர் அபிவாதனஞ் செய்யலாகாது. பாசண்டர், பதிதர், விராத்தியர் = கருமங்கெட்டவர், மஹாபா தகஞ்செய்தவன், சடர் = தயவில்லாதவுலோபர், நாஸ்திகர்= கடவுளில்லையென்பவர், இப்படிப்பட்டவர்களை எவ்வகையானும் அபிவாதனஞ் செய்யலாகாது. ஓடுகின்றவனுக்கும், மயங்கியவ னுக்கும், மலமூத்திரங்களைக் கழித்திருப்பவனுக்கும், புசித்துக் கொண்டிருப்பவனுக்கும், தீவரப்படுவோனுக்கும், தக்கநிலைமை யிலில்லாதவனுக்கும்,வாந்தியெடுப்பவனுக்கும், கொட்டாவி விடு வோனுக்கும், பல்விளக்குவோனுக்கும், தலைமே லெண்ணெயிட் டுக்கொண்டிருப்பவனுக்கும், நீராடுவோனுக்கும், சிருக்கு என் னும் ஹோமஞ்செய் கருவியைப் பிடித்துள்ளவனுக்கும் தானறி யாதவனுக்கும், சத்தியற்றவனுக்கும், பகையாளிக்கும், நோயா ளிக்கும், யோகநிட்டையி லிருப்பவனுக்கும், தவத்தில் விருப்ப மூடையோனுக்கும், தனக்கினையோனுக்கும் அபிவாதனஞ் செய் யலாகாது. எ-று. காண்க.

சாதாதபர். ஊர்த்வதபஃ॥ "ஊதக்யாம்ஸூதிகாம்நாரீம் பர்த்ருஹ்நிம்கர்ப⁻ ஹூதிநீம்। அபிவாத்யத்விஜோமோஹா தஹோராத்ரேணஸத்யதி" = கைவிலக்க மான வளுக்கும், மகப்பெற்றுள்ளவளுக்கும், கணவனைக் கொன்றவ ளுக்கும் = (எனவே. விதவை, அல்லது கணவனுக்கு அவமா னம் விளைவிப்பவள் என்பதுகருத்து). கருவை யழிப்பவளு க்கும், இருபிறப்பாளன் அறியாமல் அபிவாதனஞ் செய்தால், ஒருபகலு மோரிரவும் புறம்பேகிடந்து பின்புசுத்தத்தை யடை கின்றான். எ-று. காண்க.

குரவனியல்பு.

குரவனுக்குப் பாதத்தைத் தொட்டு அபிவாதனஞ் செய்ய வேண்டுமெனக் கூறியுள்ளதன்றோ? இனி அக்குரவனுவான் யார் எனில்? மனு கூறுகின்றனர். மநுஃ॥ "நிஷேகாதீநிகர்மாணி யஃகரோதியதாவிதி। ஸம்பாவயதிசாந்நேந ஸவிப்ரோகுருருச்யதே" = நிஷேகமுதலிய கரு மங்களை விதிப்படி யார் செய்கின்றனரோ? அன்னத்தால் போஷிக்

கின்றனே? அந்தவேதியன் குருவென்று துதிக்கப் படுகின்றன். எ-று. காண்க.

யாஞ்ஞவற்கியர். యాజ్ఞవల్క్యః॥ "సగురర్యఁక్రియాఁకృత్వా వెదమ స్తైస్రయచ్ఛత" = யார்! சமஸ்கார கருமங்களைச்செய்து வேதத்தை யொருவனுக்குக் கொடுக்கின்றனே? அவன் குருவாவன். எ-று. காண்க.

வேதத்தைக் கொடுத்தல் எனவே அத்தியயனஞ் செய்வித் தலாம். இந்த அதிகாரம் வேதியன் ஒருவனுக்கே புண்டா யிருக் கின்றது. நிஷேகமுதலிய ஸமஸ்கார கருமங்களைச் செய்தலுக்கு அதிகாரம் எல்லாவருணத்தர்க்கும் பொதுவாகவேயிருக்கின்றது.

நிஷேகமுதலியவற்றைச் செய்யுந் தலைவனாகிய தந்தையி னும் வேறானவர்களைக் குருவென்பது உபசாரவழக்காக விருக் கின்றது. இங்ஙனம் உபசாரவழக்காகிய குருத்தன்மை மனு முதலியோர் கூறினர்.

மனு. మనుః॥ "అల్పంవాబహువాయస్య శ్రుతస్యోపకరోతియః। తమపీహగు రుంవిందాద్య శ్రుతోపక్రియయాధవా" = யார் சிறிதேயாயினும் பெரிதேயா யினும் வேதமுதலிய வித்தையைப் பழக்குவித்தலா லுபகரிக் கின்றனே? அவனையு மீண்டு குருவெனவுணர்க. இல்லையேல் வேதமுதலியவற்றை யோதுவித்தலே யோருபகாரமா மாதலின், அதனைச் செய்விப்போனுங் குருவெனக்கொள்க. எ-று.

குரவராவார்.

ஹாரீதர். హారీతఃఁ॥ "ఉపాధ్యాయఁపితా జ్యేష్ఠో భ్రాతా చైవమహీపతిఃఁ। మా తుశ్శ్వశురస్త్రీతా మాతామహపితామహా। వర్ణ జ్యేష్ఠఃపితృవ్యశ్చపుంస్వేతెగురవస్మృ తాఃఁ" = ஓதுவித்தவன், ஈன்றதந்தை, மூத்தசகோதரன், அரசன், அம்மான், மகட்கொடைநேர்ந்தவன், ஆபத்துக்குதவிக்காத்தவன், அன்னையையின்றபாட்டன், அத்தனையின்றபோரன், சாதியின் மூத்தோனாகிப் பிதாவோடு பிறந்தவன், இவரனைவரும் ஆண்பாற் குரவரென்ன மிருதிகளாற் கூறப்பட்டனர். எ-று. காண்க. போர ன்=பேருக்குரியவன். பாட்டன் என்றபடி.

இதுவுமது. "மாதாமாதாமஹீகுர்வீ பிதுர்ஷ்வஸாச்ச ஸோதராஃ। ஶ்வஶ்ரூஸ்பிதாமஹீஜ்யேஷ்டா ஧ாத்ரீச்சகுருவத் ஸ்த்ரியஃ" = அன்னை, அவளீன்றவள், குலத்துள் வயதுமுதிர்ந்த விருத்தை, தந்தையோடு பிறந்தோள், தாயோடு பிறந்தோள், மனைவியின் தாய், தந்தையைப் பயந்தோள், தனக்குமூன்பிறந்தோள், செவிலி, இப்பெண்பாலனைவரும் குரவரோடொப்பர். எ-று. காண்க.

இங்ஙனம் கூறியதனாற் போந்தபயன் யாதெனில்? எவ்விடத்துத் தாய்தந்தையெனக் கொள்ளப்படுகின்றனரோ? அவ்விடத்தெல்லாம் அவரோடொப்ப இங்கு குறிக்கப்பட்டாரனைவரும் பூசிக்கப்படுவோர், என்றுணரக் கிடத்தல் என்க. அதனானே அவ்வாரீதர் கூறியவாறு. ஹாரீதஃ॥ "ஆநுவர்தநமேதேஷாம்மநோவாக்காயகர்மபிஃ" மனம், வாக்கு, காயம், என்னும் இம்மூன்று கருவியாலும் செய்யப்படும் தொழிலொப்புமையாலிவர்களைத் தொடர்ந்து பற்றி நிற்றல் வேண்டும். எ-று. காண்க. எனவே பூசிக்க வேண்டுமென்றவாறு.

வியாசர் வ்யாஸஃ॥ "மாதாமஹோமாதுலஶ்ச பித்ருவ்யஶ்ஶ்வஶுரோகுருஃ। பூர்வ்வஜஸ்ஸ்நாதகஶ்சர்த்விக் ஜ்ஞாத்யாஶ்சகுருவத்ஸதா। மாதுஷ்ஷஸாமாதுலாநீஶ்வஶ்ரூ ஧ாத்ரீபித்ருஷ்ஷஸா। மாதாமஹீபித்ருவ்யஸ்த்ரீ குருஸ்த்ரீமாதுவச்சரேத்" = அன்னையீன்றோன், அம்மான், தந்தையுடன் பிறந்தோன், மகட்கொடைகோர்ந்தோன், குரவன், மூத்த சகோதரன், ஸ்நாதகனனை இருத்துவிக்கு, இவ்வாண்பாலனைவருங் குருவைப்போலும் பூசிக்கத்தக்கவராம். தாயோடு பிறந்தவள், அம்மான்மனைவி, மனையின் தாய், செவிலி = வளர்த்தவள், தந்தையோடு பிறந்தவள், தாய்க்குத்தாய், தந்தையுடன் பிறந்தோர் மனைவி, குருமனைவி, இப்பெண்பாலாரனைவரிடத்தும் தாயைப்போலும் உபசரித்தலைச் செய்க. எ-று. காண்க.

அவருள்ளற்றத் தாழ்ச்சிமுறை.

மனு. மநுஃ॥ "பிதுர்ப்கிந்யாம்மாதுஶ்சஜ்யாயஸ்யாம்சஸ்வஸர்யபி। மாதுர்வ்ருத்திமாதிஷ்டேந்நாதாப்யோகரீயஸீ। உபாத்யாயாந்தஶாசார்ய ஆசார்யாணாம்ஶதம்பிதா। ஸஹஸ்ரம்துபிதுர்மாதா கௌரவேணாதிரிச்யதே" = தந்தையோடு பிறந்தவள், தாயோடு பிறந்தவள், தனக்குமூன் பிறந்தவள், இவர்களி

டத்தில் தாயோடொத்த உபசாரஞ்செய்க. உபசரிக்கு மிடத்தில் யாரினும் தாயே சிறந்தவள். உபாத்தியாயரினும், ஆசிரியன் பதின்மடங்கு சிறந்தோன். அவ்வாசிரியனினும் தந்தை நூறு மடங்கு சிறந்தோன். தந்தையினும் தாய் ஆயிரமடங்கு சிறந்தோள். எ-று. காண்க. உபாத்தியாயன் = வேத மோதுவித்தவன். ஆசிரியன் = மந்திரோபதேசஞ் செய்தவன்.

அற்றேல் புராணமதத்துள், தாயினுந் தந்தையே சிறந்தோனெனக் கூறப்பட்டது. என்னை? "द्वौगुरूपुरुषस्येह पितामाता चधर्मतः। पितागुरुतरस्तस्या न्मातागुरुतरातथा। तयोरपिपिताश्रेया न्बीज प्रधान्यदर्शनात्। अथावेबीजिनोमाता तदधावेक्षेत्रपूर्वजः" = இவ்வுலகத்துள் ஆண்மகனுக்குக் குரவராவாரிருவர், தந்தை,தாய்ளன. அவருள். தரும விரகசியத்தை விசாரிக்குமிடத்து, தந்தையே சிறந்தோன் எனவும், அவ்வாறே தாய் சிறந்தோ ளெனவும் இருவகையும் வெளிப்படுகின்றது. ஆயினும், வித்து, நிலம் என்னும் இவ்விரண்டனுள் நிலத்தினும் வித்தே தலைமையதாகக் காட்சியளவையாற் காணப்பட்டு வருதலின், அவ்வன்னை தந்தை யிருவருள் தந்தையே சிறந்தவன். வித்து அளித்ததந்தை யில்லாவழித் தாயே சிறந்தோள். இவ்விருவரு மில்லாவழி மூத்த சகோதரனே சிறந்தவன். எ-று. என்பதே யெனில்?

இப்புராண கூற்று நிஷேகமுதலிய சமஸ்காரங்களையுஞ் செய்து, ஓதுவித்தலும் செய்ததந்தையைக் குறித்த வாறெனக் கொள்ளவேண்டுமெ. அங்ஙன மல்லாக்கால், "मातृवगरीयसी" = தாயே சிறந்தவள், என்ற கூற்றுக்கு மாறுகொள்ளலாம். அதனானேதாயின் மேன்மையை வியாசர் விரித்துக் கூறினர். व्यासः॥ "मासान्दशोदरस्थंयाधृत्वाशूलैस्सनाकुला। वेदनाविविधैर्दुखै प्रसूताचविमूर्च्छिता। प्राणैरपिप्रियान्पुत्रा न्मन्यतेसुतवत्सला। कस्तस्यानिष्कृतिंकर्तुं शक्तोवर्षशतैरपि" = பத்துத் திங்களும் தாங்கிச் சுமந்து, வயிற்றுளைச்சலால் வயாவுற்று, பலதுன்பங்களாலும் வருந்திப்பெறும் வேதனையை யனுபவித்து மூர்ச்சித்துமகப்பெற்று, மக்களின்மீது போன்போடு தன்னுயிரினும் சிறந்ததாகவெண்ணி அம்மக்களைக் காக்கின்றனளே! ஐயோ! இத்துணை யுபகாரஞ்செய்த அன்னைக்கு மகன் தான் பிழைத்திருக்கும் நூறுவயதளவிலும் வருந்தி

யுபசரித்தாலும் கைம்மாறு செய்யவல்லவனே? ஒருவனுஞ் செய்யலாற்றான். எ – று. வயா = கருநோய்வருத்தம். கைம் மாறு = பிரதியுபகாரம்.

இனி உபாத்தியாயர் இலக்கணம்.

மேற்கூறப்பட்ட உபாத்தியாயராவார் யாரெனில்? மனுகூறினர். மநுः॥ "ఏకదేశంతువేదస్య వేదాంగాన్యథవాపునः। యోధ్యాపయతివృత్త్యర్థ ముపాధ్యాయస్సఉచ్యతె" = வேதத்துள் ளொருபாதியை யேனும் வேதவுறுப்புக்களாகிய சாத்திரங்களை யேனும் தன் ஜீவனத்தின் பொருட்டு யாவன்? ஓதுவித்தனனே? அவனே யுபாத்தியாயன். எ–று. காண்க.

ஆசிரியனிலக்கணம்.

இதுவுமது. "ఉపనీయతుయశ్శిష్యం వెదమధ్యాపయెద్విజः। సకల్పంసరహ స్యంచ తమాచార్యంప్రచక్షతె" = யார் சிடனுக்கு உபநயனஞ் செய்து வேத முழுவதையும், அதன் உபயோகத்தை விதிக்குஞ் சூத்திரங்களையும், அதன் இரகசியம் = மறை பொருளையும் ஓதுவித்து உபயோகிக்கின்றானே? அவனை ஆசிரியனெகப் பெரியர் கூறுகின்றனர். எ–று. காண்க.

அன்னை தந்தையினும் ஆசிரியன் சிறந்தோனே யென அம்மனுவே கூறினர். மநுः॥ "ఉత్పాదకబ్రహ్మదాత్రోర్గరీయాన్బ్రహ్మదఃపితా। బ్రహ్మజన్మహివిప్రస్య ప్రెత్యచెహచశాశ్వతం" = தன்னைப் பெற்றவன் ஒருவன், வேதமந்திரங்களைக் கொடுத்தோ னொருவன், இவ்விருவருள் பிரமத்தைக் கொடுத்தவனே பிதாவாம். வேதியனுக்கு அப்பிரமணப் பிறப்பேயன்றே? மறுமையினும் இம்மையினும் அழிவற்றதாயுள்ளது. எ-று. காண்க. பிரமம் = வேதவுணர்ச்சி. விப்பிரன் = வேதியர்குலத்துட் பிறந்தவன்.

குரவன்வயதின்றரம்.

யார் சிறியவனே யாயினும், விருத்தனுக்கும் ஓதுவிக்கின்றனே? அவனும் அவனுக்கு உயர்ந்தவனே என்று அம்மனுவே கூறினர். மநுः॥ "బాలోపివిప్రోవృద్ధస్య పితాభవతిమంత్రదः। అధ్యాపయామాస పితౄం శ్చిశురాంగిరసఃకవిः। పుత్రకాఇతిహోవాచ జ్ఞానెనపరిగృహ్యతాన్। తెతమర్థమ

పృచ్ఛంత తెచానుగతమన్యవః। దెవాశ్చైతాంత్సమెత్యోచు ర్నాన్యయ్యంవశ్మిశురుక్తవాన్। అజ్ఞోభవతివైబాలదీ పితాభవతిమంత్రదః। అజ్ఞంహిబాలమిత్యాహుదీ పితెత్యేవచమంత్ర దం। సహాయనైర్నపలితై ర్నవిత్తైర్నచబంధుభిః। ఋషయశ్చక్రిరెధర్మం యోనూచానస్స నోమహాన్" = மந்திரத்தைக் கொடுத்த வேதியன் இளையமகனே யாயினும் விருத்தனுக்கும் தந்தையே யாகின்றான். பண்டிதரா கிய ஆங்கீரசர் பிதிரருக்கு வேதமோதுவித்தனர். ஞானத்தால வர்களைப்பற்றி "ஓ! மக்களே! என்று விளித்தனர் = அழைத் தனர். அப்போது அப்பிதிரர் கோவமடைந்தவராய்ச் சபைகூடி இச்சிறுவன் இங்ஙனம் அழைத்தன்முறையோ வெனத் தேவர் களைவிணவினர். தேவர்கள்கூறியதாவது இச்சிறுவன் நுமக்குங்கியா யமே கூறினர். உணராதோனே பாலன் என்பது யாருமுணர்ந் தபடி. மந்திரத்தை யளித்தோனே தந்தையாவன் என்றுணர்க. ஆதலிற் பெரியர், தெரியாதோனைச் சிறியவனுகவும், மந்திரத் தைக் கொடுத்தவனைப் பிதாவாகவும் கூறுகின்றனர். வருடங்களா கிய காலத்தாலும், நரையுண்டாதலாலும், செல்வப் பொருளா லும், சுற்றத்தன்மை யுடைமையாலும், அந்தப் பெருந் தன்மை யுண்டாவதில்லை. இருடிகள் எந்தத்தருமத்தை யனுட்டித்தனர் களோ? அதுவே பரிசுத்தமாகிய குரவன் குலமரபாக வருகின் றது. அதுவே யெமக்குஞ் சிறந்தவுடன்பாடாக விருக்கின்றது. என்று. காண்க.

அவ்வாறே விஷ்ணுவும் கூறினர். விஷ்ணுः॥ "బాలెసమాన వయసి హ్యధ్యాపనెగురువద్వర్తితవ్యం" = பாலனேயாக, தன்னோடொத்த வய தினை யுடையவனேயாக, தனக்கு ஓதுவித்தன் மட்டில் குரவனி டத்தி லொழுகியவாறு ஒழுகுதல் வெண்டும். என்று. காண்க.

மூத்தசகோதரன் விடயம்.

மூத்தசகோதரன் விடயத்திலும் குரவனிடத்திலொழுகிய வாறு ஒழுகுதல் வேண்டும் என்று புராணசாரத்துட் கூறப்பட் டது. పురాణసారె॥ "జ్యెష్ఠభ్రాతాపితృసమొ మృతెపితరిభూసురాः। కనిష్ఠాస్తుసమ స్తెరం శ్వర్వానందానువర్తినः। తమెవచొపజీవెర న్యద్దెవపితరంతథా" = ஓ! வே தியரே! தருமவிரகசியத்தைக் கேட்பீர்களாக. ஒருவனுக்குத் தந்தையிறந்தபின் அந்தத் தந்தையைப் பூசிக்கத் தக்க விடத்தில்

மூத்த சகோதரன் வருகின்றான். இளையோராயுள்ளவர்கள் மூத்தோன் கருத்தின்வழி நடப்போராய்நமஸ்காரஞ்செய்துகொண்டு தந்தையினிடத்தில் எவ்வாறு தற்சுதந்தர மில்லாமல் ஆணையின் வழிநடந்து வந்தனரோ? அவ்வாறே ஒழுகிவரவேண்டும். எ-று. காண்க.

சகோதரர்ஒழுக்கம்.

மனு. మనుः॥ "పితృవత్పాలయేత్పుత్రా న్జ్యేష్ఠభ్రాతాకనీయసः। పుత్రవచ్చా పివర్తెర న్యథ్తెవపితరంతథా" = தந்தை மக்களைப் புரப்பது = காப்பது, போலும் மூத்தவன் இளையோரைப் புரக்கவேண்டும். மக்கள் தந்தையரிடத்து ஒழுகியவாறு இளையோர் மூத்தோனிடத்தும் ஒழுகுதல் செய்யவேண்டும். எ-று. காண்க.

பரமாசிரியன் விடயம்.

பரமாசிரியன் விடயமும் அவ்வாறேயென அம்மனுவே கூறியுள்ளனர். మనుः॥ "గురోర్గురాసన్నిహితె గురువద్వృత్తిమాచరెత్" = தன்னாசிரியனுடைய ஆசிரியனே பரமாசிரியன் என்னப்படுவன். அவனருகிருக்கும் காலத்துத் தான் குரவனிடத்து ஒழுகியவாறு அவரிடத்தும் ஒழுகுதல்செய்க. எறு காண்க.

ஆசிரியன் முன் ஏனையர் விடயம்.

ஆசிரியன் ஆணையின்றி அம்மான் முதலிய குரவர்கட்குச் சமாவர்த்தன முற்றுதவன் அபிவாதனஞ் செய்யலாகாது என மனுகூறினர். మనుः॥ "నచానిస్టష్టోగురుణా స్వాన్గురూనభివాదయెత్" = ஆசிரியன் ஆணைபெறுதவன் தன்னுடைய ஏனையகுரவர்க்கு அபிவாதனஞ் செய்யலாகாது. எறு. காண்க. ஏனையகுரவராவார். தமையன், அம்மான் முதலியோர்.

சமாவர்த்தன முடித்தவன் அவ்வாசிரியன் சம்மதத்தைப் பெறவேண்டு மென்னும் நிர்ப்பந்தமில்லென ஆபத்தம்பர் கூறினர். ఆపస్తంబः॥ "సమావృత్తెనగురవ స్సర్వెఽపసంగ్రాహ్యాప్రాప్యచసమాగమె" = சமாவர்த்தனத்தை முடித்தவன் பிரயாணம் போகும்போதும் போய் வரும்போதும் தன் குரவரனைவர்க்கும் பாதாபிவாதனஞ் செய்யவேண்டும். எறு. காண்க. சமாவர்த்தனம். எது. ஆசிரி

யன் மனையின்கணிருந்து விதிப்படி செய்யப்படும் வேதாத்தி யயனத்தை முடித்துச் சாந்திசெய்துவிடுதல். பாதாபி வாதனம்= பாதத்தைத் தொட்டு வந்தனஞ்செய்தல்.

ஆசிரியனும் பரமாசிரியனும் ஏககாலத்தி லோரிடத்துள்ள வழிச்செய்யத்தக்கன வற்றை ஆபத்தம்பர் கூறினர். ఆపస్తంబः॥ "ఆచార్యప్రాచార్య సన్నిధానే ప్రాచార్యముపసంగృహ్యా చార్యముపసంజిఘృక్షేత்" ஆசிரியன் அவராசிரியன் என்னு மிவ்விருதிறத்தரும் ஓருகாலத் தோரிடத்துக் கூடியவழிப் பரமாசிரியனை வணங்கிய பின்னரோ தன்னாசிரியனை வணங்குதல்செய்க. எறு. காண்க.

அபிவாதனச்சிறப்பு.

அபிவாதன கருமத்தின் சிறப்பினை மனுகூறினர். మనుः॥ "అభివాదనశీలస్య నిత్యంవృద్ధో పసేవినः।చత్వారితస్యవర్ధంతె ఆయుఃప్రజ్ఞాయశోబలం" நாடோறும் அபிவாதனஞ்செய்யும் இயல்புடையோனுய்ப் பெரி யோர்களை வழிபடுவோனுக்குத் தீர்க்காயுள், ஞானம், புகழ், வலிமை இந்நான்கும் வளர்கின்றன. எறு. காண்க.

அபிவாதனமும் முதற்காலகருமமு முற்றிற்று.

வேதாப்பியாசகால நிண்ணயம்.

ஒரு பகலின் எட்டுப்பாகத்துள். இரண்டாம் பாகத்தில் செய்யத்தக்க கருமங் கூறப்படுகின்றது. దక్షः॥ "ద్వితీయెతుతథాభాగె వేదాభ్యాసోవిధీయతె" = அவ்வாறே இரண்டாங்காலத்துள் வேதாப் பியாசம் விதிக்கப்படுகின்றது. எறு. காண்க.

கூர்மபுராணம். కూర్మపురాణె॥ "వేదాభ్యాసంతతఃకుర్యా త్ర్రయత్నాచ్చ క్తితోద్విజः। జపెదధ్యాపయెచ్ఛిష్యా న్థారయెద్వివిచారయెత్। అపెక్షెతచశాస్త్రాణిధ ర్మాదీంశ్చద్విజోత్తమः" = இருபிறப்பாளன் யாமத்திற்குப் பின்னர் ஊக்கத்தோடு முயற்சித்தும் வேதாப்பியாசம் செய்யவேண் டுவது. அத்தியயனம்செய்த வேதத்தைச் செபபாராயணங்களாற் சித்திசெய்து கொள்ளவேண்டும். மாணக்கரை யோதுவித்தல்

வேண்டும். மறவாது ஞாபகத்தில் வைத்துச் சிந்தித்திருத்தல் வேண்டும். சுரம், இலக்கணம், அருத்தம், உய்க்குமிடமுதலிய வற்றை விசாரித்தல் வேண்டும். மற்றும் வேண்டுவனவாகிய தருமநூல் முதலியவற்றினை விருப்பத்தோடும் தெடிக்கொள்ள வேண்டும். இங்ஙனம் செய்வோன் இருபிறப்பாளருள் ளுயர்ந் தோன் எனப்படுவன். எறு. காண்க. சுரம்=பண்.

வேதாப்பியாசத்தின்சிறப்பு.

வேதமோதுதலை மனு சிறப்பிக்கின்றனர். మనుః॥ "వేదమేవ సమభ్యస్యే త్తపస్తప్త్వాద్విజోత్తమః। వేదాభ్యాసోహివిప్రస్య తపఃపరమిహోచ్యతె। ఋషిదేవమనుష్యాణాం వేదశ్చక్షుస్సనాతనం"=வேதியருள் ளுயர்ந்தவன்தவஞ் செய்தும் வேதத்தையே அப்பியசிக்கவேண்டும். இருபிறப்பாள னுக்கு வேதாப்பியாசமன்றே? சிறந்த தவமெனக் கூறப்படுகின் றது. இருடிகட்கும், தேவர்கட்கும், மக்ககளுக்கும் வேதமே அழிவற்றகண்ணுக விருக்கின்றது. எறு. காண்க.

வியாசர். వ్యాసుః॥ "నాన్యోజ్ఞాపయతేధర్మంవేదాదేవైషనిర్బభౌ। తస్మాత్సర్వ ప్రయత్నేన ధర్మార్థంవేదమాశ్రయేత్" = வேறுயுள்ள மற்றெல்லாமும் தருமத்தை யுணர்த்தமாட்டாது. இத்தருமம் வேதமொன்றனு லேயே யேற்பட்ட தாமாதலின், எல்லாமுயற்சியாலும் தருமத் தின்பொருட்டு வேதத்தை இறுகப்பற்றவேண்டும். எறு.காண்க.

யாஞ்ஞவற்கியர். యాజ్ఞవల్క్యుః॥ "యజ్ఞానాంతపసాంచైవ శుభానాం చైవకర్మణాం। వేదఏవద్విజాతీనాం నిశ్రేయసకరఃపరః" = வேள்விகட்கும், தவத்திற்கும், எனைய நல்ல கருமங்கட்கும், சுவர்க்கம் வீடுபேற் றிற்கும், வேதமொன்றே யிரு பிறப்பாளர்க்குச் சிறந்தகருவி. எறு. காண்க.

வேதமுணராதோனிழிவு.

வேதமுணராதவ னுடைய எல்லாத்தொழிலும் பயனற்ற தாகின்றன வென மனுகூறினர். మనుః॥ "యథాషణ్ఢోఫలఃస్త్రీషు యథా గౌర్గవిచాఫలా। యథాచాజ్ఞెఫలందానం తథావిప్రోనృచోఫలః" = பெடி மாதர் பாலெவ்வாறு பயனடைவதில்லையோ? விதையடித்த எருத்துமா டுபசுக்களினிடத்து எவ்வாறு பயனற்றதாமோ? தானம் மூடனி

டத்து எவ்வாறு பயனற்றுவிடுமோ? அவ்வாறே வேத முணராத விப்பிரனும் பயனற்றவனுவன். எ-று. காண்க.

கௌதமர். గౌతమః॥ "అనధీత్యద్విజోవేదా న్యోన్యత్రకురుతెశ్రమం। సజీ వన్నేవశూద్రత్వ మాశుగచ్ఛతిసాన్వయః। వేదానామప్యనభ్యాసా దాచారస్యచలంఘ నాత్। అనృతాదన్నదోషాచ్చ పిప్రంమృత్యుర్జిఘాంసతి"= யார்வேதத்தை யோ தாமலே வேறுவித்தைக்காக முயற்சி செய்கின்றுனே? அவன் தன்சந்ததியோடு பிழைத்திருக்கும்போதே சூத்திர னாகின்றுன் வேதமோதாமலே விட்டொழிதல், சிட்டராயுள்ளோர் ஒழுக் கத்தைக்கடந்து நடத்தல், நெடுநீர்மை = காலதாமசம், பொய் கூறுதல், குற்றமுடைய அந்தத்தைப் புசித்தல், இவ்வகைக் குற் றங்களையுடைய வேதியனை மிருத்தியு தெய்வம்=மரணதேவதை பாதிவயதினுள்ளே தானேகொன்றுவிட விரும்புகின்றது. எ-று. காண்க. "ఆలస్యాదన్నదోషాచ్చ" என்பதும் பாடம். இதுசில பிர திகளில் கைசோர்ந்திருக்கின்றது.

இன்னும் அந்தப்பகுதியில் எனவே மூன்றேமுக்கால் நாழி கைக்குமேல் ஏழரைநாழிகையினுள் செய்யத்தக்கவேறுதொழிலி னையும்தகுஷர்கூறினர். దక్షः॥ "సమిత్పుష్పకుశాదీనాం సకాలస్సముదాహృతః"= ஹோமத்திற்கு வேண்டும் சமித்து = விறகும், பூசைக்குரிய பூக்களும், கருமங்களுக்கு இன்றியமையாத தருப்பையும், ஆதி யென்றதனுல் திருமஞ்சனநீர், சுத்தமாகிய ஆடை, முதலிய வற்றையுந் திருத்திவைத்துக் கொள்ளுவதற்கும் அதுவே கால மென்று விதிக்கப்பட்டது. எ-று. கர்ண்க. இரண்டாம் பாகத் திற் செய்யுந்தொழின்முற்றியது. இனி மூன்றுங்காலம்வருமாறு.

பொருள்செய்யும் வகை.

இனி மூன்றுங்காலப்பகுதியுட் செய்யத்தக்கன வருமாறு "తృతీయెచతథాభాగె ఔష్యవర్థ్థసాధనం"= மூன்றுவது காலப்பகுதி யுள் அவ்வாறே தன்னுற் பாதுகாக்கத்தக்க சீவர்களின் பொரு ட்டு உபகரிக்க வேண்டுவனவாகிய பொருளைத் தேடுதல். எ-று. காண்க.

கூர்மபுராணம். కూర్మపురాణె॥ "ఉపెయాదీశ్వరంచాథ యోగక్షేమార్థ సిద్ధయె। సాధయెద్వివిధానర్థా న్కుటుంబార్థంతతొద్విజః"= பின்னர் இரு

பிறப்பாளன் தன்னுடைய யோககூஷமங்களுக்கும் வேண்டுவ னவாகிய பொருட்பயனை யடையும்படி உலகநாதனுகிய பரமே ச்சுரனை யடையவேண்டுவது. தன் குடும்பத்தினை காக்கும் பொருட்டு அப்பரமேச்சுரனல் பலபொருட் பேற்றினையும் பெற வேண்டுவது. எ-று. காண்க. யோகம். எ-து. இருக்கும் நிலை மைக்குச் சிறந்தநிலைமை. கூஷமம். எ-து. உள்ளன வாகிய சிறப்பினுக்குக் குறைவில்லாமை. அருத்தம். எ-து. பயன், சந்தோடம், திருத்தியுமாம். குடும்பம். எ-து, தன்னேலாம் பப்படுவோர். ஈசுவரன் = எல்லாமுடையவன்.

பகவற்கீதை. శ్రీకృష్ణుఃll "ఈశ్వరస్సర్వభూతానాం హృద్దేశేర్జునతిష్ఠతిl భ్రామయంత్సర్వభూతానియంత్రారూఢానిమాయయాl తమెవశరణంగచ్ఛసర్వభావెనభారత" ஓ? அருச்சுன? எல்லா ஆன்மக்களினுள்ளத்திலும் பரமேச்சுரனிருக்கின் றன், தன்னுடைய மாயைச் சக்கரத்துள் எல்லா வுயிர்களையும் சுழற்று கின்றனர்., எல்லா வகையாலும் அவனே காப்போன் என்று அவனை யடைக. என்று கண்ணனும்கூறினர்.

இதுவுமது. "అనన్యాశ్చింతయంతోమాం యెజనాఃపర్యుపాసతెl తెషాంనిత్యాభియుక్తానాం యోగక్షెమంవహామ్యహం"=யார் வேறுவகை யில்லாதவரா யெம்மைத் தியானித்து உபாசிக்கின்றீர்களோ? அப்படிப்பட்ட அழிவற்ற தியானவொழுக்க முடையவர்களின் யோககூஷமங்களை நடத்துவிக்கும்பாரத்தை யாம் சுமக்கின்றும் என்று அதே கண்ணன் அருச்சுனற்கு உபதேசித்தலால் அப்பரமேச்சுரனே தானென்றுணர்த்தினர். குருமுகமாதலின்.

இதுவுமது. "యద్యద్విభూతిమత్సత్వంశ్రీమదూర్జితమెవవాl తత్తదెవావగచ్ఛత్వంమమతెజొంశసంభవం" = உலகத்துள் எந்தத்தேகி ஈசுவரனருளுடையதாயும் ஆற்றலுடையதாயும், செல்வமுடையதாயும், ஒளியுடையதாயும், விருத்தியடைவதாயும் உள்ளதோ? அது என்னொளியினுடைய கூறினாற் பிறந்ததாக நீயுணரக்கடவாய். என்றனர்.

ஸ்காந்தம். స్కాందెll "ప్రాణికర్మానురూపంతు ఫలమీశఃప్రయచ్ఛతిl సర్వభూతమయశ్శంభు స్తద్బుధ్యాన్యనుపాశ్రయెత్l అస్వాతంత్ర్యెణజీవానాం రక్షకత్వంకుతొభవెత్l రక్ష్యంతెసర్వజీవాస్తు స్వతంత్రెణశివెనహి" = மக்களாயுள்ளோர் எவ்வகைத்தானதொழில் செய்கிறார்களோ? அதற்குத் தக்க பயனை யெல்லா வுயிருள்ளும் கலந்துநிற்கும் பரமேச்சுரனே தருகின்றன். ஜீவர்களனை வரும் சுதந்தரமில்லாதவராமாதலின் வினைவயப் பட்டவர்களாய்க் காக்கப் படுவோராகின்றனர். சிவன் சுதந்தரனுய் எல்லாவுயிர்களையும் தன்வழிவாக

வுடையவனுய், நிக்கிரஹம் அநுக்கிரகம் என்னும் ஆற்றலோடு காப்பவனுக விருக்கின்றுன். எறு. இக்கருத்தோடு கடவுளிடத்துத் தன்னிலக்கியத்தைச் செலுத்தி உலகவிவகாரமாக வொருவன் பிறனெருவனை யாசரிக்கவேண்டு மென்று கூறியவாறுணர்க.

பாகவதம். ஶாகவதே॥ "சரக்ஷிதாரக்ஷதியோஹிகர்ப்ப" = தான்தாய்க்கரு ப்பையினுள் விருந்த பொழுது தன்னைக்காத்த கடவுள்யாரோ? அவனை வெளிப்பட்டு வந்தபின்னுங் காப்பவனுகின்றனன். எ-று. காண்க.

சான்ரோர்கூற்று. "தைவம்மானுஷரூபேண ப்ரத்யக்ஷமிஹவர்த்தே! ஸ்வகர்மானுரூ ணாத்தஸ்ய ஫லமஸ்மைப்ரயச்ச்தி" = தெய்வம் மானுட வடிவாகக் காட்சியால் வடி வோடுங் காணப்படுகின்றது. இவன்செய்யும் தொழிலினுக்குத் தக்கபயனை அத்தெய்வமே கொடுக்கின்றது. எ-று. காண்க.

இதுவுமது. தைவன்யஸ்துபரஸ்கர்யாத்ப்ரயத்னம்லோகஸித்தயே" = இவ்வுலக காரியப்பயன் கைகூடும் பொருட்டுக் கடவுளை முன்னிட்டுத் தக்கமுயற்சி யைச் செய்தல்வேண்டும். எ-று. காண்க.

இங்ஙனம் எல்லாநூற் கருத்துமா மாதலின் நம்மனவருக்குங் காக்குந்தலைவன் கடவுளே யாமாகவே கடவுளையே நாம்டைதல் வேண்டு மென்பது மேற்கூறிய கூர்மபுராணக் கருத்து என்றுணர்க.

தன்னுற் காக்கப்படுவோ ராவார்.

யாரைத்தான் பாதுகாத்தலைச் செய்ய வேண்டுவதோ? அவர்களைத் தக்கூரால் குறிப்பிக்கப்பட்டது. ஸ்மரு॥ "மாதாபிதாகுரு ர்பார்யா ப்ரஜாதீனஸ்யமாச்ரித:। அப்யாகதோதிதிஶ்சாக்நி ர்போஷ்யவர்கஉதாஹ்ருத:" = அன்னை, தந்தை, குரு, தன்மனைவி, மக்கள், ஒன்றுமில்லாதவே ழை, தன்னைநம்பியடுத்தவன், உண்டிவேண்டி வலிதிற் றேடிவந் தோன், அதிதி = விருந்தினன், அக்கினியென்னு மிப்பதின்மரை யும் ஓம்புதல் செய்க. எறு. காண்க.

பொருளீட்டும்வகை.

இங்ஙனம் கூறிய பதின்மரையும் காத்தலின் பொருட்டு வேண்டும் பொருளைத்தனக்குரிய தொழிலானே யீட்டுதல்வேண் டும், என்பதனை "யாத்ராமாத்ரப்ரஸித்யர்த்தம் ஸ்வைஃகர்மாபிரகர்ஹிதை:। அஜுகுப்ஸி தமாரீரஸ்ய குர்வீததனஸம்சயம்" = ஜீவனம் நடக்கும் அவ்வளவே வேண்

டும் பொருளினை நிந்திக்கப்படாது தனக்குத் தக்கதாயுள்ள தொழிலால் தனதுடம்பிற் கிளைப்பு வாராமலே தேடிக்கொள்ளவேண்டும். எறு. காண்க. நிந்திக்கப்படாதது எனவே ஓதுவித்தல் முதலியன. அக்கருத்தினை முன்னரோ கூறினும்.

ஆயின், இக்கருமம் வேதிய னொருவனுக்கே பிழைக்கும் வகையோ? அல்லது. க்ஷத்திரிய வசியர்க்குமோ எனில்? மனு கூறினர். மநுः॥ "త్రయోధర్మానివర్తన్తే బ్రాహ్మణాత్క్షత్రియంప్రతి। అధ్యాపనం యాజనంచ తృతీయశ్చప్రతిగ్రహः। వైశ్యంప్రతితథైవైతే నివర్తేరన్నితిస్థితిः" = அறு தொழிலினுள் மூன்றுதொழில் அந்தணனினும் அரசர்க்குத்தவறுகின்றது. அவை ஓதுவித்தல், வேட்பித்தல், தானமேற்றல், என்னப்படும். அவ்வாறே வைசியனுக்கும் அம் மூத்தொழிலும் பிற்படுகின்றது. எ-று. காண்க. அதனினை ஓதுவித்தன் முதலியன அந்தணனுக்கே யொழிய ஏனையிருவர்க்கும் பொருளீட்டும் வழியல்லவாம்.

ஆகவே வேறுவழி மனுவாற் கூறப்பட்டுள்ளது. మనుः॥ "క్షత్రియస్యతృభృత్వంక్షత్ర స్యవణిక్పశుకృషిర్విశः" = சத்திரங்களையும், அத்திரங்களையும் தரிப்பது அரசனுக்கும், பண்டமாறுதல், பசுநிரையோம்புதல், உழவுசெய்தல் வைசியனுக்கும் சீவனவழியாக விருக்கின்றன. எ-று. காண்க.

யாஞ்ஞவற்கியர். యాజ్ఞవల్క్యः॥ " ప్రధానంక్షత్రియేకర్మ ప్రజానాం పరిపాలనం। కుసీదంకృషివాణిజ్యం పాశుపాల్యంవిశస్స్మృతం" = அரசனுக்குக் குடிகளைப் புரப்பதே சிறந்தகருமமாம். வசியனுக்கு வட்டிவாங்குதல், உழவு, பண்டமாற்றுதல், ஆனிரையோம்புதல் என்னுமிவை சிறந்தகருமங்களாம். எறு. காண்க.

பொருளீட்டுமெழுவகைவழியினையுமனுகூறினர். మనుः॥"సప్తవిత్తాగమాధర్మ్యా దాయోలాభక్రయోజయः। ప్రయోగకర్మయోగశ్చ సత్ప్రతిగ్రహ ఏవచ" = அறத்தின்வழியே பொருளீட்டும் வகை எழுவகையாகவிருக்கின்றன. அவை. தாயம், இலாபம், கிரயம், ஜயம், பிரயோகம், கருமயோகம், பிரதிக்கிரஹம். எனவாம். எறு. தாயம்= தன்முன்னையோர் தொட்டுவந்த பொருள். இலாபம் = புதை

யல் முதலியவற்று லடைந்தது. கிரயம் = பண்டமாற்று இம் மூன்றும் நால்வருணர்க்கும் ஒத்தன. ஜயம்=வெற்றியாலடைந்த பொருள். இது அரசர்க்கே யுரியது. பிரயோகம் = கடன்கொ டுத்து வட்டிவாங்குவது, கருமயோகம் = உழவு, வாணிபம், இவை வசியர்க்கே யுரியன. சற்பிரதிக் கிரஹம் = நல்லவனிடத் திருந்து நற்பொருளைப் பெறுதல். இது அந்தணர்க்கே யுரியது. எனக்கொள்க.

கூர்மபுராணம். కూర్మపురాణె॥ "ద్వివిధస్తుగృహీజ్ఞేయ స్సాధకశ్చాప్యసా ధకః। అధ్యాపనంయాజనంచ పూర్వస్యాహుణి ప్రతిగ్రహం। శిలోంఛెవాప్యుపాదద్యా ద్గృహస్థస్సాధక స్స్మృతః। అసాధకస్తుయఃప్రొక్తో గృహస్థాశ్రమసంస్థితః। శిలోంఛెతస్య కథితె ద్వొవృత్తీపరమర్షిభిః। అమృతేనాపిజీవెత మృతెనప్రమృతెనవా। అయాచితంస్యాద మృతంమృతంభైక్షంతుయాచితం "=இல்லற வொழுக்கத்தினை யுடையவர், சாதகன் எனவும் அசாதகன் எனவும் இருவகைப் படுகின்றார். அவருள் முதலாவான் ஓதுவித்தல் வேட்பித்தல், விதிப்படி தான மேற்றல் என்னு மூன்றுகருமமும்அவனுக்குசிறப்புடையபிழைக் கும் வழியாக இருக்கும். அல்லது சிலவிருத்தியா லாயினும், உஞ்ச விருத்தியா லாயினும் பொரு ளீட்டிப் பிழைக்கலாம். அது சாதகனுக்குச் சாமானிய விருத்தியாக விருக்கின்றது. அசா தகனை இல்லறத்தானுக்கு சிலவிருத்தி, உஞ்சவிருத்தி யிரண் டும் சிறப்புடைய ஜீவனவழியென்று பெரியோர்களாற் கூறப் பட்டன. அன்றியும், அமுதவிருத்தி, மிருதவிருத்தி, பிரமிருத விருத்தி, இவ்வுபாய வழிகளாலாயினும் அசாதகன் பிழைக்கலாம் இது அவனுக்குச் சாமானியமான வழியாம். தான் இரவாது பிறர் கொடுக்க வாங்கிச் சீவிப்பது அமிருதவிருத்தியாம். இரந்து சீவிப்பது மிருதவிருத்தியாம். எறு. காண்க. விருத்தி = சீவன முயற்சி.

மனு. మనుః॥ "ఋతామృతాభ్యాంజీవెత మృతెనప్రమృతెనవా। సత్యానృతా భ్యామపివా నశ్వవృత్యాకదాచన" = இருதவிருத்தி, அமுதவிருத்தி, இவ் விரண்டாற் பிழைப்பது சிறந்தது. மிருதவிருத்தி, பிரமிருத விருத்தி, இவ்விரண்டாற் பிழைப்பது இடைப்பட்டது. சத்தியா நிருத விருத்தியாற் பிழைப்பது கடைப்பட்டது. சுவவிருத்தி எப் பொழுதும் பிழைப்பாகாது.

இவ்விருத்தியிலக்கணம்.

மறு. மனுஃ॥ "ருதமுஞ்சஶிலஞ்ஜ்ஞேய மமృతஂஸ்யாదయாசிதம்। మృతంతు యாசிதంப்ரோక்தం ప్రమృతంకర్షణంస్మృతం। సత్యానృతంతువాణిజ్యం తేనచైవాపిజీవ్యతే। సేవాశ్వవృత్తిర్విఖ్యా తాతస్తాత్తాంపరివర్జయేత్" = உஞ்சவிருத்தியும் சிலவிருத்தியும். இருதமென் றுணரத்தக்கது. (எனவே சத்தியத்தோடு கூடிய சீவனமென்னப்படும்). பிறனைச்சென் றிரவாது சீவிப்பதே அமுதம். (எனவே உயிரோடுகூடிய பிழைப்பாம்). இரந்து பிழைப்பதே மிருதம் (எனவே செத்த பிழைப்பாம்). உழுது பயிரிட்டுப் பிழைப்பதே பிரமிருதம் (எனவே மூற்றுஞ் செத்த பிழைப்பாம்). வியாபாரஞ்செய்து பிழைப்பது சத்தியானிருதம். (எனவே, மெய்போலப் பிறனுக்குக் காட்டிய பொய்ச் சீவனம்). கடைமுறை யிதனாலாயினும் பிழைக்கலாம். பிறனை யடுத்துச் சேவித்துப் பிழைப்பதே சுவவிருத்தி (எனவே நாய்போல் தனக்கு யார் சோறிடுகின்றாரே? அவனைச் சேவிப்பது. இது மிகஇழிந்த பிழைப்பாமென்பது உலகமறிந்தது. ஆதலின் அதனை யொழிக்கவேண்டுவது. எறு. காண்க. "ఉంఛనికరణశిలాదానం కపోతవృత్తిరిత్యన్యే" = யாரோனும் சிந்திவிட்டதாக வாயினும் எறிந்துவிட்டதாக வாயினு மூள்ள தானியங்களை ஒவ்வொன்றாகச் சேர்த்துக்கொள்வது உஞ்ச விருத்தியாம். இதனைப் புராணங்களுள், பிபீலிகாவிருத்தி=எறும்பின் பிழைப்பெனக் கூறுவர். விளைந்து தானுகத் தனைமேல் விழுந்த கதிர்களையேனும் குலைகளையேனும் பொறுக்கிச் சேர்த்துக்கொள்வது சிலவிருத்தியாம். இவ்விருவகை விருத்தியிலும் பிறன் பொருளைக் கெடுத்துத் தான் அடைதல் என்னுங் கருத்தில்லாமையால் இவற்றினை இருதம் சத்தியமென்றும் கூறப்பட்டது. பிறனைச் சென்று இரவாதவனுடைய உயிர் ஈனத்தை யடைவதில்லையா மாதலின் அது அமுதசீவன மென்னப்படும். இரப்பவனுடைய உள்ளங் குன்றிப்போவதால் அது செத்த பிழைப்பு என்னப்படும். உழுது பயிர் செய்து பிழைப்பவன் பிறவுயிர்களின் இம்சைக்குக் காரணனாவதால் அது மூற்றுஞ் செத்த பிழைப்பெனப் பட்டது. "నానృతాత్పాతకంపరం" = பொய் கூறுவதைப் பார்க்கினுஞ் சிறந்த பாவமில்லை. என்றலின். அப்பெரும் பாதகத்தினைக் கூறி அதனை மெய்யென்று பிறர் நம்பும்படிச் செய்கின்றுதலின் வியாபா

ரம், சீவனவழிகள் பலவற்றுள்ளும் மிகத்தாழ்ந்ததாம். காய்ப் பிழைப்பான சேவக விருத்தி யுத்தம வருணத்தார் யார்க்குந் தக்க தல்லவாம். இத்துணையும் வேதியர் விடயம்.

யாஞ்ஞவற்கியர். యాజ్ఞవల్క్యుఃll "కుసూలకుంభీధాన్యోవా త్ర్యాహి కోశ్వస్తనోపివా। జీవేద్వాపిశిలోంఛేన శ్రేయాన్నేషాంపరఃపరః" = குதிர்தானி யம் வைத்திருப்பவனுக வாயினும், குடநெல்லுடையவனுக வாயி னும், மூன்றுதினம் சீவனத்திற்குப் போதுமான தானியமுடை யவனுக வாயினும், மறுநாளைக்கு இல்லாதவன். எனவே அன் றைக்குப் போதுமான நெல்லுடையவனுக வாயினும், சில விருத்தியா லேனும், உஞ்ச விருத்தியாலேனும் சீவனம் செய் பவனுக வாயினும் இருக்கவேண்டுவது.முதற்கூறியவரினும்உஞ்ச விருத்திசிலவிருத்தி சீவனம் செய்பவன் சிறந்தோனும். எனவே முன்னவர்க்குப் பின்னவர் சிறந்தவர். எறு. காண்க.

மேற்கூறியவர்களின் கரும வரிமையை மனுவினுற் கூறப் பட்டது. మనుఃll "షట్కర్మైకోభవత్యేషాం త్రిభిరన్యఃప్రవర్తతే। ద్వాభ్యామేకశ్చ తుర్థస్తు బ్రహ్మసత్రేణజీవతి" = இவருள் ளொருவன் (எனவே சுளஞ்சிய நெல்லுடையவன்) வேட்டல் முதலிய அறுதொழிலும் செய் பவனு யிருத்தல் வேண்டும். அந்தியன் (எனவே குடநெல்லுடை யவன், வேட்பித்தல், ஓதுவித்தல், தானமேற்றல், என்னும் மூன்று கருமமும் செய்பவனுக விருத்தல் வேண்டும். மற்றொரு வன் (எனவே மூன்றுநாளைய உண்டிக்குவேண்டும் நெல்லுடைய வன்) வேட்பித்தல், ஓதுவித்தல் என்னு மிரண்டு கருமத்தை மாத்திரஞ் செய்பவனுக விருத்தல் வேண்டும். காலாவான் (எனவே மறுநாளைய உண்டிக்கு வழியில்லாதவன். பிரமசத்திரம்= வேதமோது வித்தல், என்னுங் கருமமாத்திர மூடையவனு யிருத்தல் வேண்டும். எ-று. காண்க.

சூத்திரன் சீவனஞ்செய்யும் வகை.

சூத்திரன் பிழைக்கும் வகை உசனசு = சுக்கிரனுற் கூறப் பட்டது. ఉశనాఃll "శూద్రస్యద్విజశుశ్రూషా సర్వశిల్పానివాపిచ। విక్రయస్సర్వవ స్తూనాం శూద్రకర్మహ్యుదాహృతం" = அந்தணர், அரசர், வைசியர், என் னும் இருபிறப்பாளர் மூவரையும் முறைப்படி உபசரித்துப்பணிபு

ரிதல், எல்லாவகைப்பட்ட சிற்பத்தொழில் களையும் செய்தல், எல்லாப் பொருளையும் விற்றல், இவைகள்சூத்திரன் சீவனத்தொழிலென்றுகூறப்பட்டது, எறு. காண்க.

யாஞ்ஞவற்கியர். యాజ్ఞవల్క్యుఃll "శూద్రస్యద్విజశిశ్రూషా తయాజీవస్వామిగ్భవేత్। శిల్పైర్వావివిధైర్జీవేద్విజ జాతిహితమాచరన్" = சூத்திரனுக்கு இருபிறப்பாளனைச் சேவிப்பதே தக்ககருமம் அம்முயற்சியாற்பிழைப்பவன் வசியனை டொப்பாவன். பண்டங்களைக் கொடுக்கல் வாங்கலுமாகிய வாணிபமும்செய்யலாம். இருபிறப்பாளர்க்கு இன்பம் விளையும் வகையைவேண்டிப் பலவகைப்பட்ட சிற்பத்தொழிலாலாவது பிழைக்கலாம். எறு. காண்க.

வராகீதர். హారీతుఃll "శూద్రస్యధర్మోద్విజాతి శిశ్రూషాపవర్జనం కళత్రాదిపోషణం కర్షణంపశుపాలన భారోద్వహనపణ్యవ్య వహారచిత్రకర్మ నృత్తగీతవేణువీణామృదంగవాదనాదీనిచ" = இருபிறப் பாளனைச் சேவிப்பதுவே சூத்திரனுக்குச் சிறந்த தருமமாம். அது குப்பைகளைதல் முதலிய தொழில், சுவாமி குடும்பத்தைக் காத்தல், நிலத்தை உழுதல் முதலிய செய்தல், பசுநிரைகளைக் காத்தல், சுமை சுமத்தல், அங்காடித் தொழில், சித்திரவேலை, கூத்து, பாடல், குழலாதியூதல், வீணை மத்தள முதலிய வாத்தியங்களை முழக்குத லாதியுமாம். இவை சூத்திரனுக்குரிய தருமமாம். எறு. காண்க.

பிரமவேள்வி.

பின்னர், பகலின் நாலாவது பங்கில் செய்யத்தக்க தொழிலினைக் கூறத் தொடங்கினர். "చతుర్థేతుతథాభాగే స్నానార్థంమృదమాహరేత్" = நாலாம்பங்கில் அவ்வாறே நீராடலின் பொருட்டுமண்ணினைக் கொண்டுவரவேண்டும். எறு. காண்க. இந்தஉச்சி நீராடல் விதி அதிகாரப்பட்டதால் முன்னரே கூறப்பட்டுள்ளது.

பின்பு. பிரமவேள்வியின் விதி கூறப்படுகின்றது. அதன் சொரூபம், தைத்திரீயப் பிராமண மென்னும் வேதபாகத்துள் குறிப்பிக்கப் பட்டது. తైత్తిరీయబ్రాహ్మణేll "యత్స్వాధ్యాయమధీయాతే కామపృచ్ఛంయజ్ఞాస్మ వాతద్బ్రహ్మయజ్ఞస్యంతిష్ఠతే" = நன்முக வேதமோதுதலே பிரமவேள்வியாம். கடைமுறை ஒருஇருக்கு மந்திரமாயி

னும், ஒருயஜுர் மந்திரமாயினும், ஒருசாம மந்திரமாயினும் விதிப்படி, நாடோறும் ஓதுதலாகிய பாராயணம் செய்வதே பிரமவேள்வி யென்னப்படும். எறு. (பிரமம் என்பது, இவ்விடத்து வேதம் அது சாங்கோபாங்கமாக = முழுவதும் நன்முகப் பிரமத்தைப் போதிப்பதனல் பிரமம் என்னப்பட்டது. அப்படிப்பட்ட வாசகத்தால் வாக்கென்னுங் காரணத்தால் கடவுளைப் பூசிப்பதே பிரமவேள்வி என்னப்படும்).

இலிங்கபுராணம். లింగపురాణే॥ "స్వశాఖాధ్యయనంవిప్ర బ్రహ్మయజ్ఞవిధిస్మృతః" = வேதத்துள், தன்னுடைய சாகையை ஓதுவதே பிரமவேள்வியாம் என்று மிருதிகளில் விதிக்கப்பட்டது. எ – று. காண்க.

பிரம வேள்விக்குரிய காலம்.

பிரகற்பதி. బృహస్పతిః॥ "సచార్వాక్పూర్వణాకార్యే పశ్చాద్వాప్రాతరాహుతేః। వైశ్వదేవావసానేవా నాన్యదాతునిమిత్తతః" = தருப்பணஞ் செய்வதற்கு முன்னமே யாயினும், காலை வேள்வித் தீக்காரியம் முடிந்தபின்னராயினும். வைசுவதேவகருமம் முடிந்தவுடனாயினும், அப்பிரம வேள்வியைச் செய்யவேண்டும். வேறுநிமித்தத்திலல் மற்றெந்தக் காலத்தும் செய்யலாகாது. எறு. இவ்விடத்து, வைசுவதேவம் என்றதனல் மானுடவேள்வி யெனக் கொள்ளப்பட்டது.

அங்ஙனம் கூர்மபுராணத் துள்ளும் கூறப்பட்டது. కూర్మపురాణే॥ "యదిస్యాత్తర్పణాదర్వా గ్బ్రహ్మయజ్ఞవికృతోనహి। కృత్వామనుష్యయజ్ఞంతు తతస్స్వాధ్యాయమాచరేత్" = தருப்பணஞ் செய்வதற்கு முன் பிரமவேள்வி செய்யாதே யொழிந்திருந்தால் மானுட வேள்வி யாகிய வைசுவதேவம் செய்தபின்பு வேதமோதலாகிய பிரமவேள்வி செய்யவேண்டும். எறு. காண்க.

பிரமவேள்வி செய்வதற்குத் திசையும், இடமும், காலமும் சுருதியே கூறுகின்றது. శ్రుతిః॥ "బ్రహ్మయజ్ఞేనయక్ష్యమాణఃప్రాచ్యాందిశిగ్రామాదచ్ఛదిర్వ్యుదీచ్యాంప్రాగుదీచ్యాంవోదితఆదిత్యే" = பிரமவேள்வியாகிய கருமத்தால் கடவுளைப் பூசிப்பவன், ஊருக்குக் கிழக்காகவாயினும், வடக்காக வாயினும், தென்கிழக்குத் திசையாக வாயினும் திரும்பி அம்முகமாக விருந்து புல், பாய் முதலிய

மேற் கூரைகண்ணுக்குப் புலப்படாத இடத்தில் சூரிய னுதய மான பின்பு-எறு. சூரியன் உதயமான பின்பு என்பது, உதயத் துக்குமுன் ஆகாது என்றபொருளைத் தருவதன்றி உதயமான வுடனே என்று பொருள் கொள்ளலாகாது. ஏன் எனில்! உதய மானவுடனே ஹோமகால மாகின்றது ஆகலின்,

பிரமவேள்வி விடயத்தில் எந்த விடயத்திற்குச் சென்று எக்கருமஞ் செய்யவேண்டுவதோ? அதனை மனுகூறினர். மநுः॥ "அபாംసమీపెనియతో నైత్యకగ్వధిమాస్థితः। సావిత్రీమప్యధీయీత గత్వారణ్యంస మాహితः" = காட்டிற்குச் சென்று நீர்க்கரையில் நித்தகரும விதி களை யனுட்டித்து அமைந்த மனத்தோடு சாவித்திரி மந்திரத்தை யும், தன்சாகை முதலிய வேதங்களையும், ஓதுதல் வேண்டும். எறு. காண்க.

பிரமவேள்வியிற் பூணநூல எவ்வாறு தரித்திருக்க வேண்டு வதோ? எதனைச் செய்யவேண்டுவதோ? அவற்றினையெல்லாம் வரம்பறுத்து வேதமே கூறிற்று. శ్రుతిः॥ "దక్షిణతఉపవీయ" = "ఉప విశ్య" = "హస్తావవనిజ్య త్రిరాచామెద్విద్వి పరిమృజ్యాసకృ దుపస్పృశ్యేశిరశ్చక్షు షీనాసికేశ్రోత్రె హృదయమాలభ్య" = "దర్భాణాంమహదుపస్తీర్యో పస్థంకృత్వా ప్రాఙాసీనస్సావి ధ్యాయమధీయీత దక్షిణోత్తరాపాణీ పాదౌకృత్వాస పవిత్రావో మితి ప్రతిపద్యతె" = "త్రీనెవస్రా యుఙ్ఞభూర్భువస్సువः" = "అథసావిత్రీంగా యత్రీంత్రిరన్వాహ పభ్యోర్ధర్చశోనవానం" = "గ్రామెమనసాస్వాధ్యాయ మధీ యీతదివానక్తంవా"="హస్తహశౌచాహ్నాయ ఉతారణ్యేబల ఉతవాచోదతిష్ఠన్నుత వ్రజన్నుతాసీన ఉతశయానో ధీయీతైవస్వాధ్యాయం" = మథ్యందినె ప్రబలమధీ యీత" = "నమోబ్రహ్మణఇతిపరిధానీ యాంత్రిరన్వాహప ఉపస్పృశ్యగృహానెతి తతో యత్కించిద్వదాతిసాదక్షిణా" = ஊரில் மனத்திறல் வேதம் ஓதல்வேண் டும்(எனவே, ஆரணியகம் என்னும் வேதபாகத்தை உரத்துக் கூறலாகாது). (தான் ஓதியிருந்த வேதம் மறவாதபடி பகலிலே யாயினும் இரவிலே யாயினும் மனத்துள் தியானித்தலுமாம்) பரிசுத்தமானவிடத்தில், காட்டில், ஆரணியகவேதத்தினை உரத்து விசேடமாக ஓதல்வேண்டும். தேக சுகத்திற்குத் தக்க, சிறந்த நல்ல கருமத்தின்பொருட்டு, நடக்கினும், எழினும், இருக்கினும், நிற்கினும், கிடக்கினும், படுக்கினும் வேதமோதலே விடலாகாது. உச்சிப்போதில் விசேடமாக வேதமோதல் வேண்டும். இவ்

வாறு வேதமோதுதல்செய்து நாடோறும் பிரம வேள்விசெய் யும்போது, நீர்க்கருகில் கைகால் சுத்திசெய்து, சுத்தனுய், தருப் பையைப்பரப்பி அதன்மேல் இடது தொடையின்மீது வலக் கால் வரும்படி வீராசனமாக இருந்துகொண்டுவலப்பக்கங்கிடக் கும்படி இடதுதோள் தாங்கிய பூணூலோடு, கிழக்குமுகமாக இடதுதோண்மேல் மேலாடை போர்த்துக் கையலம்பி ஆசமன மூன்றுதரம்செய்து, இரண்டு விசை அதரசுத்திசெய்து, இரு கையிலும் பவித்திரம். புனைந்து, இடது கை கீழும் வலது கை மேலுமாக அவ்விடது கையில் நீர் விட்டுக்கொண்டு வலது கை விரலால் ஒவ்வொருதரமும் அந் நீரைத்தொட்டு, தலை, கண், செவி, நாசி, மார்பு என்னு மிவ்வுறுப்புக்களுக்கு ஒவ்வொரு தரம் நீர்ப்பரிசம் செய்வித்து, பின்பு தருப்பையையும் நீரையும் இடதுகரத்தில்வைத்துகொண்டு அக்கையை வலமுழந்தாளருகி விட்டு வலக்கரத்தால் அதை மூடிப்பிடித்துக்கொண்டு நியமமாக பிரமவேள்வியாகிய வேதபாராயணம் செய்யவேண்டும். இன்னும், "ஈஷ்வுத்" = "வித்திபுது" என்னும் மந்திரத்தைத்தொடங்கி, "வ்ருஷ்டி" = "விருஷ்டி" என்னும் மந்திரம் வரையில் (எனவே இவ்விரண்டு மந்திரங்களின் னடுவே கூறப்படும். மந்திரங்கள் "பிரமசத்திரம்" என்னப்படும். இதன்விதி "சுவாத்தியாயப் பிராமணம்" என்னும் ஆரணியக வேதபாகத்திற் கூறப்பட்டிருக் கின்றது. அம்மந்திரங்களுட்கூறிய முக்கியமான கருத்து என் னெனில்? "நமோப்ரஹ்மணே = நமோ பிரமணே" என்னும் சாந்தி கூறிப் பின்பு பிரணவத்தின் தோத்திரவாக்கியம் கூறி காயத் திரி மந்திரத்தைச் சாவித்திரி மந்திரமாகப் பாதம் = கால் ஆக வும் அரையாகவும், முழுதுமாகவும் மூன்றுவிசைப் பிரணவத் தோடும் வியாஹிருதிகளோடும் மாற்றிமாற்றிச் சேர்த்துக்கூறிப் பின்பு தன் சாகைமுதல் சாங்கோபாங்கமாய் நான்கு வேதங் களையும் (எனவே வேதமுதலிய மஹா வித்தைகளெல்லாவற் றினையும், பாராயணம்செய்து மறுபடியும் "நமோ பிரமணே" என்னும் சாந்திகூறி, "வ்ருஷ்டிரஸி = விருஷ்டிரசி" என்னு மந்திரத் தோடு வலமாக நீரைக் கையிலெடுத்து, உறுப்புத்தொடு மிடம் தொட்டு, அந்தவேள்வியை ஈசுவரப்பிரீதிசெய்து, அவ்வேள்வி சித்திக்கும் பொருட்டு, எவையேனுஞ் சிலவற்றைத் தகுதினை

பாக அந்தணர்க்குக் கொடுக்கவேண்டும் என்று மேற்குறித்த வேதமந்திரங்க ளெல்லாவற்றினுடைய சிறந்த கருத்தாக விருக்கின்றது.

இக்காலத்தில் சிட்டராகிய வேதியர்கள், வேதமுதலிய மஹாவித்தைக ளெல்லாவற்றினையும் ஓதுவதற்குப் பொழுதும் சுருக்கமாயுள்ளதுவே யன்றி முடியாததாயும் அருமையாயும் இருக்கின்றதென்று இருடியர்கள் ஏற்படுத்தி யுள்ள எளியவிதி வகைப்படி மேற்கூறிய முறைமையைப் பற்றிஎல்லாவித் தைகளிலு முள்ள முதற்சொற்களை மாத்திரம் கூறித்தன்சாகையில் தான் ஓதி யுள்ள வேதபாகத்திலுள்ள தோர் பிரகினத்தையாவது முற்றும் பாரா யணம்செய்து அவ்வளவில் முடிக்கின்றனர். அதற்கும் காலம் போதாதவரும், பட்டினி கிடக்கும் விரதங்களின் பாராயணதினத்தில் நித்தகருமத்தைச் சுருக் குவோரும், அந்தப்பிரகின பிரமவேள்வி செய்யாமலே, முதற்சொற்களை மாத்திரமே கூறி முடிக்கின்றனர்.

யோகயாஞ்ஞவல்கியர். యోగయాజ్ఞవల్క్యుఃll "ప్రదక్షిణంసమావృ త్య నమస్కృత్వోపవిశ్యచ। ధర్భేషుదర్భపాణిభ్యాం సంహతాభ్యాంకృతాంజలిఃl స్వా ధ్యాయంతుయథాశక్తి బ్రహ్మయజ్ఞార్థమాచరేత్" = வலமாகத் திரும்பி கீழ் விழுந்து வணங்கித் தருப்பையின் மீதிருந்து பவித்திரத்தினை யுடைய இரண்டு கைகளையும் அஞ்சலியாகப் பிடித்துக்கொண்டு பிரமவேள்வியின் பொருட்டுத் தனக்கு ஆற்றலுள்ள வளவில் வேதத்தை யோதவேண்டும். எறு. காண்க.

சௌநகர் செய்யத்தக்க னவற்றை வேறுவகையாகக் கூறினர். శౌనకఃll "ప్రాణాయామైర్దగ్ధదోష ఋక్థాంబరధరశ్శుచిఃl యథావిధ్యుపవీత మ్య ఆంహోముద్దర్భసంస్తరంl పవిత్రపాణిరికృత్వాతు ఉపస్పందక్షిణోత్తరం" = பிரா ணயாமங்களால் தன்பாவக் குற்றங்களைச் சுட்டொழித்துச் சுத்த மாகிய மடியாடையுடுத்துப் பரிசுத்தஞ்ய் விதிப்படி ஆசமித்து தருப்பையாதனத்தின் மீது ஏறி இடக்காலின்மீது வலக்காலிட்டு இருந்து கொண்டு பவித்திரம் கையிற்புனைந்து பிரமவேள்வி செய்தல்வேண்டும். எறு. காண்க.

மேற்கூறப்பட்ட சுருதியில் "நீரைத் தொட்டு," என்ற வாக்கியத்தின் பொருளோடு இட்துகையினையும் இரண்டுகால் களையும் வலக்கரத்து நீரால் புரோகூஷித்து என்ற அருத்தத்தை வருவித் துரைக்கவேண்டும். ஏனெனில், பிரமவேள்வியிற் செய் யப்படுந் தந்திரங்கள் எல்லாவற்றிற்கும் முன்னேபயனைக் கூறு

தும். சுருதியுள் சொல்லப்பட்டிருக்குந் தந்திரங்களின் வரிசையில் இந்தப் புரோகூணம் கூறப்பட்டிருக்கின்றது. தந்திரம்= கருமம், = தொழில். ஒருபொருட்கிளவி.

அப்பயனுமாறு. சுவாத்தியாயப் பிராமணம். స్వాధ్యాయబ్రాహ్మణె॥ "యత్రిరాచామతెనఋచగ్ం ప్రీణాతియద్విఃపరిమృజతెన యజూగ్ంషి యత్సకృదుపస్పృశతెన సామానియత్సవ్యం పాణింపాదౌ ప్రొక్షతియచ్ఛిరశ్చక్షుషీనాసికెక్రౌత్రెహృదయమాలభ్యతె నాథర్వాంగిరసొ బ్రాహ్మణానీతిహాసాన్పు రాణానికల్పాన్గాథా నారాశగ్ంసీఃప్రీణాతి" = மூன்றுதரம் ஆசமனம் செய்ததனல் இருக்கு வேதந்திருத்தி யடையச் செய்கின்றது. நீரால் இருகால் அதர சுத்திசெய்ததனல், யஜுர்வேதத்தைத் திருத்தி செய்கின்றன், ஒவ்வொருக்கால் ஒவ்வோரங்கத்தையும் பரிசித்தால் சாமவேதத்தைத் திருத்தி செய்கின்றன். இடது கைகால்களில் புரோக்கிப்பதால் அதர்வண வேதத்தையும் இதிகாச புராணமுதியவற்றினையும் திருத்தி செய்கின்றன். எ-று. காண்க. எனவே அந்தந்த அபிமானி தேவர்கள் திருத்தி யடைகின்றனர் என்பது கருத்து. "దర్భాణాంమహదుపస్తీర్య என்ற இருக்கின்பொருள் சௌனகாரற்குறிக்கப்பட்டது. శౌనకః॥ "ప్రాగ్వోదగ్వాగ్రామాన్నిష్క్రమ్యాపఆప్లుత్యశుచౌ దెశెయజ్ఞొపవీత్యా చమ్యాక్లిన్నవాసా దర్భాణాంమహదుపస్తీర్య ప్రాక్కూలానాంతు ప్రాఙ్ముఖ ఉపవిశ్యొపస్థంకృత్వా దక్షిణొత్తరాపాణీ పాదౌసంధాయపవిత్రవం తౌద్యావాపృథివ్యోస్యం ధిమీత్యుమాణస్యం మీల్యవాయథాయుక్త మాత్మానం మన్యెతతథాయుక్తొ ధీయీతస్వాధ్యా యమొంపూర్వావ్యా హృతయస్యావిత్రీమన్వాహ పచొఛ్ధర్చశస్సర్వామి తిత్రుతీయమితిశౌచశ్మశ్రుచెదపుత్ర ఆహ్నొయఏతన్నామక ఋషిరిత్యాహస్మెతి" = மேற் கூறப்பட்ட சுருதிகளின் கருத்தே யிதற்குங் கருத்தாக விருக்கின்றது. ஆயினும் உளருக்கு வடக்காகவாயினும் கிழக்காக வாயினுஞ் சென்று நீராடி உலர்ந்த வாடையுடுத்து கிழக்குமுக விருந்து பூமிக்கும் ஆகாயத்திற்கும் நடுவே குறிப்பு வைத்துக்கொண்டு கண்களைமூடி யாயினும் திறந்தாயினும் அனுகூலித்தபடி வேதமோத வேண்டும். இவ்விதினையச்சுதியென்பவன் மகனை ஆங்கேயன் என்ற இருடிகூறினர். என்பது. விசேடக்கருத்து என்றபடி. காண்க.

அங்கங்கள் = சாத்திரங்களை யெல்லாம் ஓதுவதற்கு ஆற்றல் போதாவென்னும் குறைவுபாட்டால் முக்கியமான வேதத்

தையாவது ஓதாமல் விடக்கூடாது. ஆனல், பிரமவேள்வியில் செபம் செய்யத்தக்க வேதமுதலிய வித்தைகள் அசுவமேத பர்வத்தில் கூறப்பட்டது. அச்வமெதே॥ வெதமாதௌ சமாரభ్య తథోపర్యుపరిక్రమాత్। యదధీతెన్వహాంశక్త్యా తత్తస్వాధ్యాయం ప్రచక్షతె। ఋచంవార్థయజుర్వాపి సామగాథామథాపివా। ఇతిహాసపురాణాని యథాశక్తినహాపయెత్." = முதலில் வேதத்தைத் தொடங்கி அவ்வாறே மேலும் மேலும் நாடோறும் ஆற்றலோடு எதனை ஓதிவருகின்றனை? அதனை ஸ்வாத்தியாயமென்று கூறுவர். இருக்குவேதத்தை யாயினும், யஜுர் வேதத்தை யாயினும், சாமவேதத்தை யாயினும், காதைகளை யாயினும், இதிகாசங்களை யாயினும், புராணங்களை யாயினும், சத்தியுள்ள வளவில் விடலாகாது. எறு. காண்க. காதை=வேதக்கதைகளுக் குடன்பட்ட பழமொழிகளையுடைய ஆரிடநூல்.

யாஞ்ஞவல்கியர். యాజ్ఞవల్క్యుః "వెదాధర్వపురాణాని నెతిహాసాని శక్తితుః। జపయజ్ఞప్రసిథ్యర్థం విద్యాంచాధ్యాత్మికించజపెత్" = மூன்று வேதங்களையும், அதர்வணத்தையும், புராணங்களையும், இதிகாசங்களையும், ஞானவித்தையையும், பிரமவேள்விசித்திக்கும்படி செபிக்க வேண்டும். எ-று. அத்தியான்ம வித்தை=வேதாந்தம்=ஞானவித்தை என்பன வொருபொருட்கிளவி.

தான் கற்றுக்கொள்வதற்காக வோதுவது போல, பிரமவேள்வியின் பொருட்டுச் செய்யும் ஓதலும் ஓதலாகாத காலத்திலும் விட்டொழிதல் வேண்டுமே யெனில்? மனு அதனை மறுத்தனர். మనుుః॥ "వెదోపకరణెచైవ స్వాధ్యాయెచైవనైత్యకె। నానురోధోస్త్యనధ్యాయె హొమమనుంత్రెషుచైవహి। నైత్యకెనాస్త్య నధ్యాయొ బ్రహ్మ సత్రం హితత్స్మృతం। బ్రహ్మహవిహవతంపుణ్య మనధ్యాయవషట్కృతం" = வேதத்தின் கருவிகள் (எனவே சிகை, வியாகரணம் முதலிய அங்கஉபாங்கநூல்கள்) இவற்றை யோதியுணர்வதற்கும், நித்தியகருமமாகிய பிரமவேள்வியிலுள்ளவேதமோதலுக்கும், ஹோமத்தின் பொருட்டுக்கூறும் மந்திரங்களுக்கும், ஓதலாகாதகாலத்தில் ஓதக்கூடாது என்னும் தடையில்லை. நித்தியகருமத்திற்கு அநத்தியாய தோஷமில்லை. நித்தமாகிய வேதாத்தியயனம் "பிரமசத்திரம்" என்னும் பெயருடையதாகக் கூறப்படுகின்றது. பிரமம் = வேதமாகிய ஆகுதியால் ஹோமஞ் செய்யப்படுவது புண்ணியமாயுள்ளது.

"வஷட்டு" என்ற மந்திரபல்லவத்தோடு வேதாத்தியயனமில் லாதகாலமே ஓதலாகாதகாலம். தீயில் ஆகுதி கொடுக்கத்தக்க திரவியமே = பொருள்களே யிவ்விடத்துப்பிரமமாக விருக்கின் றது. அதனல் ஹோமஞ் செய்யப்படுவதே "அத்தியாயம்" என்னப்படும். அதுவே "யாஜ்ஜியா" என்னும் பெயருடை யது முதலிய மந்திரத்தொகுதியாக விருக்கும். "வஷட்டு" என்பது வசிகரத்தையுணர்த்து மந்திரமுடிபு. அதனேடும் ஹோ மம் இல்லாமையால் அநத்தியாயம் என்னப்படும்.

அதனனே வேதம். அநத்தியாய விசேடங்களைக்கூறி அவற் றில் செபத்தைப் புகழ்கின்றது. శ్రుతిః॥ "యఏవంవిద్వాన్హైవర్షతి విద్యో తమానెస్తనయత్య వస్ఫూర్జతిపవమానెవావాత్య మావాస్యాయాగ్ం స్వాధ్యాయమధీతె తపఏవతత్స్యతె తపొహిస్వాధ్యాయః." = யார்? இவ்வா றுணர்ந்தவன் மேகம் மழைபெய்யும்போதும், மின்னும்போதும், குமுகும் போதும், இடிவிழும்போதும், பெருங்காற் றடிக்கும்போதும், அமாவாசையிலும், வேதமோத நினைக்கின்றனே? அவன் தவ மே செய்யவேண்டும். (எனவே சிறிது செபிக்கவேண்டும் என் றபடி) அப்போது, தவஞ்செய்வதன்றே? வேதமோதலாகின் றது. எ-று. காண்க.

அந்த வோதலாகாத காலத்தில் சிறிதே செபிக்கவேண்டு மென்பது ஆபத்தம்பர் கூறினர். ఆపస్తంబః॥ "అథయదివాతోవాయూ త్పనయెద్వావిద్యోతతె వాతథావస్ఫూర్జెద కామృచమెకంవాయ జురెకంవాసామాభి వ్యాహరేత్." = பின்பு காற்று வீசினலும், மழை பெய்தாலும். மின்னினலும், குமுறினலும், இடியிடித்தாலும், இருக்கு, யஜுஸ், சாமவேதங்களில் ஒவ்வொரு மந்திரமாயினும் கூறவேண்டும். எ-று. காண்க.

தானயினும், தானிருக்குமிடமாயினும் அசுத்தமானபோது, பிரமயாகத்தைச் செய்யாதொழிக. அங்ஙனம் சுருதி கூறிற்று. శ్రుతిః॥ "తస్యవాఏతస్యయజ్ఞస్య ద్వావనధ్యాయా యదాత్మాశుచిర్యద్దెశః." = அங் குகூறிய இப்பிரம வேள்விக்கு, இரண்டுவகை அனத்தியாய கால முள்ளன. ஒன்றுதான் அசுத்தமாயிருக்குங் காலம், மற் றொன்றுதானுள்ள விடம் அசுத்தமானது. எ-று. காண்க.

பிரமயாகத்தை வேதமே சிறப்பிக்கின்றது. ச்ருதிः॥ "ஏத்த மன்னாகக்ண்ரொஹத்ய் த்தமஸ்ஸமானா நாம்ப்வதியாவந்தக்ண் ஹவாஇமாம்இத்ரஸ்ய பூர்ணாம்ததஸ்ஸ்வக்ண் லோகம்ஜயதிபூயாக்ண்ஸம்சாத்யம் சாபபுனர்ம்ருத்யும்ஜயதி ப்ரஹ்மணஸ்ஸாயுஜ்யம்கச்ச்தி." = சிறந்த சுவர்க்கத்தை யடைகின்றான். ஒத்தவர்களுட் சிறந்தவனாகின்றான். உலகமுழுவதும் எவ்வளவு பொன்கொள்ளுமோ? அவ்வளவு தனத்தையும் நிரப்பி அந்த பூமியை நல்லோர்க்கு விதிப்படி தானஞ்செய்தவன் எவ்வளவு சுவர்க்க பதத்தையடைந்து யாவர்க்கு மேலானவன் ஆவனே? அவ்வளவு புண்ணியவுலகத்தைவென்று தலைமைபெற்றவனாவன். பலவாகிய கெடாத புண்ணிய வுலகத்தையடைவன். மேலும், மிருத்தியுவையும் வெல்லுவன். பிரமத்தோடு சாயுச்சியத்தை யும் அடைவன். இது விதிப்படி அப்பிரமவேள்வியைச் செய் வோன் அடைடயும்பயனும். எ-று. காண்க. மிருத்யு, என்ப தற்கு மரணம் என்பது வழக்குப்பொருள். அவமானம், வறு மை, தோல்வியடைதல் என்று, சில விடங்களிற் பொருள் கொள்ளப்படுகின்றது. மிருத்யு. என்பது, பிரமாதமே=குறி தப்புதல் என்று சனச்சுஜாதர் கூறினர். மோகமே மிருத்யு என்பது கவிஞர் கருத்து.

யாஞ்ஞவல்க்யர். யாஜ்ஞவல்க்யः॥ "யம்யம்க்ரதுமதீயாததஸ்யதஸ்ய புண்யாத்பலம்." = எந்த எந்த வேள்விக்கு வேண்டிய வாசகமாகிய வேதத்தை ஓதுகின்றனை? அந்தந்த வேள்வியைச் செய்தா லடையும் பயனை அடைகின்றன். எறு. காண்க.

பிரமயாக முற்றிற்று.

தருப்பண விதி.

வசிட்டர். வஸிஷ்ठः॥ ருக்ஸாமாதர்வவேதோக்தா ந்ஜப்யான்மந்த்ராந்யஜூம்ஷிச। ஜபித்ரேவந்ததஸ்குர்ய ாத்தேவர்ஷிபித்ருதர்பணம்." = வேதமந்திரங்களைச் செபித்த பின்னர் தேவர்களுக்கும் இருடிகளுக்கும் பிதிர்களுக்கும் தருப் பணம் செய்யவேண்டும். எறு. காண்க.

பிரகற்பதி. బృహస్పతిः॥ "బ్రహ్మయజ్ఞప్రసిధ్యర్థం విద్యాంచాధ్యాత్మికీం జపేత్। జప్త్వాథప్రణవంచాపి తతస్తర్పణమాచరేత్" = பிரமயாகம் சித்திக்கும் பொருட்டு ஞானவித்தையைச் செபித்துப் பின்பு பிரணவத்தைச்செபித்து, அதன்பின் தருப்பணம் செய்யவேண்டும். எறு. காண்க.

விஷ்ணுபுராணம். విష్ణుపురాణే॥ "శుచిర్వస్త్రీ థరస్స్నాతో దేవర్షిపితృతర్పణం। తేసామేవహితీర్థేన కుర్వీతసుసమాహితः। త్రిరపద్దేవానాంతు త్రిరపద్దివర్జయేత్। అథర్షీణాంయథాన్యాయ్యం సకృచ్చాపి ప్రజాతేः। పిత్యాణాంప్రీణనార్థాయ త్రిరపద్దివపృథివీపతె." = நீராடிச்சுத்தனுய் உலர்ந்த ஆடையுடுத்து தேவர், இருடி, பிதிரர்களுக்கும் அவரவர்க்கு விதித்த தீர்த்தங்களால் பொறுமையோடும் தருப்பணம்செய்யவேண்டும். திருத்தி செய்விக்கும்பொருட்டு மூன்றுதரம் நீர்விடவேண்டும். ஆதலால், முறைப்படி தேவர்களுக்கும், இருடிகளுக்கும் மூன்றுவிசையாகாது பிதிரர்களுக்கு மாத்திரம் முக்காலும் எள்ளுநீர் இறைக்கவேண்டும். எ - று. காண்க. விதித்ததீர்த்தம். மேலே கூறப்பட்டது.

வியாசர். వ్యాసः॥ "ఏకైకమంజలిందేవా ద్వౌద్వౌతుసనకాదయः। అగ్నౌంతపితరస్త్రీంస్త్రీంస్త్రియశ్చైకైకమంజలిం" = ஒவ்வொரு தேவர்க்கும் ஒவ்வொரு குடங்கைநீரும், ஒவ்வொரு இருடிக்கும் இவ்விரண்டு அங்கைநீரும், பிதிரர்க்கு மும்மூன்று சேரங்கைநீரும், மாதர்க்கு ஒவ்வோர்கை நீரும், புருடர்களுக்கு மூன்றுகை நீருமாம். எறு. காண்க.

ஆக்கிநேயபுராணம். ఆగ్నేయపురాణే॥ "ప్రాగగ్రేషుసురాంస్తర్వన్ననుష్యాంశ్చైవమధ్యతः। పిత్యాంస్తుదక్షిణాగ్రేషుచైక ద్విత్రిజలాంజలీన్." = நுனிவிரல்களிலும் தருப்பைகளிலும், ஒவ்வொருதரம் தேவர்கட்குச் சலதருப்பணம் செய்யவேண்டும். அங்கையைச் சேர்த்து நடுவே இவ்விரண்டுவகை இருடிகளுக்கு அத்தருப்பணம் செய்யவேண்டும். அங்கை வலப்பாகமாக மும்மூன்றுதரம் அத்தருப்பணம் செய்யவேண்டும். எறு. காண்க. ஒன்று, இரண்டு, மூன்று என்னும் அஞ்சலிக் கரத்தின் கணக்கு நியமம் அவரவர்சாகை விதிப்படி எற்பட்டுள்ளது. எந்தச்சாகையில் இந்தக்கணக்கு நியமம்

கூறப்பட வில்லையோ? அங்கு விகற்பமாக வரும். விகற்பம்= இரண்டு மாதல்.

அவ் விடத்து அவ்வாக்கியேயத்திற்றானே தருப்பண காலத்திற் பூணநூல் அணியும் விசேடம் குறிப்பிக்கப் பட்டது. ஆக்நேயபுராணே॥ "సవ్యేనదేవకార్యాణి వామేనపితృతర్పణం। నివీతేనమనుష్యాణాం తర్పణంతువిధీయతె" = தேவகாரியங்களைச் சரியான வலப்புறம், பிதிர்கருமங்களை இடதுபுறம் மனுடர் தருப்பணம் மாலையாகவும் பூணநூலைச் செய்யவேண்டும் என்று விதிக்கப்படுகின்றது. எறு. காண்க. சவியம் = உபவீதம். அபசவியம் = பிராசீனவீதம். நிவீதம் = சம்வீதம். என்ற வைதிகப் பெயருமுண்டு.

தேவதருப்பணம்.

சங்கலிகிதர். శంఖలిఖితౌ॥ "ఉభాభ్యాంహస్తాభ్యాంప్రాఙ్ముఖాయ జ్ఞోపవీతీపాగగ్రైఃకుశైర్దేవతాతర్పణం దెవతీర్థెనకుర్యాత్" = கிழக்குமுகமாகப்பூணநூல் கிடக்கவிட்டு முனையோடுங் கூடிய தருப்பையோடு இருகையும் அஞ்சலியாகக் கீழ்நோக்கிய விரன்முனைக் கண்ணதாகிய தேவதீர்த்தத்தினால் தேவர்கட்கு ஜலதருப்பணம் செய்யவேண்டும். எறு. காண்க.

இருடி தருப்பணம்.

விஷ்ணு. విష్ణుః॥ "తతఃకృత్వానివీతం తుయజ్ఞసూత్రమతంద్రితః। ప్రాజాపత్యెనతీర్థెన మనుష్యాంస్తర్పయెత్పృథక్" = பின்னர் பூணநூலை பிடர்மேலிருந்திருதோணடுவே மாலையாகக் கிடக்கவிட்டு உறக்கஞ் சோம்பலின்றி "பிரஜாபத்திய தீர்த்தத்தினால் எனவே குடங்கை நடுவாக விடுநீரினால் இருடிகட்குத் தருப்பணம் செய்யவேண்டும். எறு. காண்க.

பிதிர் தருப்பணம்.

போதாயனர். బొధాయనః॥ "అథదక్షిణతఃప్రాచీనావీతీ పిత్ర్యాన్స్వధానమస్తర్పయామీతి." = பின்பு தென்முகமாகப் பூணநூலினைப் பிராசீனவீதம்=வலத்தோண்மேலாக இடக்கரங் கீழ்க்கிடக்கப் பிதிர்தீர்த்தம் = பெருவிரற்சுட்டுவிரனடுநீரால் பிதிரரைக் குறித்து

"స్వధానమస్తర్పయామి" = "சுவதாநம ஸ்தர்ப்பயாமி" என்ற பல்லவத்தோடு கூடிய கிரியைக்கூறித் தருப்பணம் செய்யவேண்டும். எறு. பல்லவம் = மந்திரமுடிபு.

ఉభాభ్యామపిహస్తాభ్యాముదకంయఃప్రయచ్ఛతి। సమూఢోసరకంయాతికాలసూత్రమవాక్ఛిరాఃం." = யார் ? இருகையாலும் தருப்பணநீரைக் கொடுக்கின்றரோ? அந்தஅறிவில்லான்தலைகீழாகக்காலசூத்திரமென்னும் நிரயத்தை அடைகின்றான் என்ற இவ்வியாக்கிரபாதருரை சிராத்தாங்க தருப்பணத்தைப்பற்றிய தன்றிப்பிரமயாகம் பற்றிவந்த நித்தஜல தருப்பணத்தை இருகையாலும் செய்வதனை மறுத்தபடியன்று.

அதனாற் கார்ஷ்ணாஜினி முனியும் கூறினர். కార్ష్ణాజినిః। "శ్రాద్ధవివాహకాలేచ పాణినైకేనదీయతే। తర్పణేతూభయేనైవ విధిరేష సనాతనః." = சிராத்தகாலத்திலும், விவாககாலத்திலும், நீர்த்தாரை யொருகரத்தால் விடப்படுகின்றது. தருப்பணத்தில் இருகையாலும் கொடுக்கப்படுகின்றது. இவ்விதிபழய தொன்றுகவும் நிலைபெற்றதாகவும் உள்ளது. என்று. காண்க.

இத்தருப்பணத்தை, நிலை நீரிலிருந்து செய்யவேண்டும் என்று. கோபிலர் கூறினர். గోభిలః॥ నోదకేషున పాత్రేషు నకృష్ణాజినేషునా। నోపతిష్ఠతితద్యోయం యన్నభూమౌ ప్రదీయతే." = பாத்திரங்களிலும், நீர்நிலைகளிலும், ஒற்றைக்கையாலும், கோவத்தையுடையவனும் எந்தநீரினைத் தருப்பிக்கின்றானே ? அதுவும், எந்த நீர்நிலம் சுவறச்செய்வதில்லையோ ? அதுவும், யாரைக்குறித்துத் தருப்பிக்கப்பட்டதோ ? அவருக்குத்திருத்தியாவதில்லை. என்று. காண்க.

அதனால் நிலத்தின்மேனின்று அந்நிலத்து நிலை நீரைக் கொண்டு நிலத்தின்மேற் றானே தருப்பிக்க வேண்டுவது. நீர் முதலியவற்றுள் விழும்படி தருப்பிக்கலாகாது என்று விஷ்ணு கூறினர். విష్ణుః॥ "స్థలేస్థిత్వాజలేయస్తు ప్రయచ్ఛేదుదకంనరః। నోపతిష్ఠితద్వారి పితౄణాంతన్నిరర్థకం" = நிலத்தின்மே லிருந்து நீரினுள் விழும்படியார் ஜலதருப்பணம் செய்கின்றானே ? அத்தருப்பணநீர் பிதிருக்கு ஏற்றதாகுவதில்லை. வீணும். என்று. காண்க.

அவ்விடத்துச் சில விசேடம் ஹாரீதர் கூறினர். ஹாரீதः॥ "వసత్వావసనంశుష్కం స్థలేపస్తీర్ణబర్హిషి। విధిజ్ఞస్తర్పణంకుర్యా న్నపాత్రేషుకదాచన। పాత్రాద్వాజలమాదాయ శుభేపాత్రాంతరేక్షిపేత్। జలప్రూక్షేభవాగత్రై నస్థలేతుపబర్హిషి। కేశభస్మతుషాంగారకంటకాస్థిసమాకులం। భూవన్మహీతలంయస్తా దబర్హిషాస్తరణాతతः" உலர்ந்த வாடையுடுத்து, மிகத்தருப்பை பரப்பிய நிலத்தின் மேல் விதியுணர்ந்தவன் தருப்பணஞ் செய்யவேண்டும். என்றும் பாத்திரங்களிற் றருப்பணஞ் செய்யலாகாது. ஆயின், நிலத்தின்மேற் பரப்பத்தக்க தருப்பை கிடையாவழிச் சுத்தமாகிய கலத்தில் நீர்பெற்றுக்கொண்டு புனிதமாகிய வேறு கலத்திலாயினும் குழி நிரப்பிய நீரிலாயினும் தருப்பிக்கலாமன்றித் தருப்பை பரப்பாத நிலத்தின்மேற் செய்யலாகாது ஏனெனில்? மயிர், சாம்பல், உமி, கரி, மூட்கள், எலும்பு, முதலிய குற்றத்தோடு கூடிய நிலமிருப்பதுமா மாகலின். நிலத்தின்மேல் தருப்பை பரப்பி அதன்மேற் றருப்பிக்கவேண்டும். எ-று. காண்க.

ஆயின், "దేవతానాంపిత్యాణాంచ జలేదద్యాజ్జలాంజలిం" = தேவர்கட்கும், பிதிரர்க்கும், இருகையும் சேர்த்து நீர்த்தருப்பணம் நீரிற்றானே விழும்படிசெய்யவேண்டும். என்று கார்ஷ்ணாஜினி மிருதிவாக்கியம் உள்ளது. அசுத்தநிலத்தில் தருப்பணஞ்செய்யலாகாது. அங்ஙனஞ்செய்ய நேரிடின் நீரிலாயினும் செய்யலாம் என்ற கருத்து. என்றபடி.

அங்ஙனம் விஷ்ணுவும் கூறினர். விஷ்ணுः॥ "యత్రాశుచిస్థలంవాస్యా దుదకేదేవతాఽపిత్యాన్। తర్పయేత్తుయథాకామ మప్సుసర్వంప్రతిష్ఠితం"-எவ்விடத்து நிலம் சுத்தமாயிருப்பதில்லையோ? அவ்விடத்துத் தன்மனம் போனவழி நீரினுள்ளே தேவர்க்கும் பிதிரர்க்குந் தருப்பணம் செய்யவேண்டும். அவ்வளவிற்கே தக்கதாம் நீர்க்கே புள்ளது. எ-று. காண்க.

பாத்திர விசேடங்களை பிதாமகன் கூறினர். పితామహः॥ "హేమరూప్యమయంపాత్రం తామ్రకాంస్యసముద్భవం। పిత్యాణాంతర్పణేశస్తం మృణ్మయం తుపరిత్యజేత్" = பொன், வெள்ளி, செம்பு, வெண்கலம், இவற்றுளொன்றாற் செய்தகலம் பிதிரர் தருப்பணத்திற்குச் சிறந்ததாம். மண்பாத்திரத்தை யொழிக்க வேண்டுவது. எ-று. காண்க.

தருப்பணத்திற்குரியகாலம்.

மரீசி. மரீசிः॥ "సౌవర్ణేనచపాత్రేణ తామ్రరాప్యమయేనవా। ఔదుంబరేణ వైల్వేన పిత్ర్యాణాంనత్వనుక్రియం" = பொன், வெள்ளி, செம்பு, அத்தி மரம், வில்வமரம், இவற்றுளொன்றுற்செய்த கலத்தாற்செய்த தருப்பணம் பிதிரர்க்குக் கெடாதனவாகவிருக்கும் எ-று. காண்க.

கலமில்லாதவிடயம்.

வெற்றுக்கையால் தருப்பணம் செய்யலாகா தென்று அவரே கூறினர். மரீசிः॥ "వినారాప్యసువర్ణేన వినాతామ్రమయైస్తథా। వినామంత్రైశ్చదర్భైశ్చపిత్ర్యాణాంనోపతిష్ఠతి" = வெள்ளி, பொன், செம்பு, மந்திரம், தருப்பை, இவற்றின் சம்பந்தமின்றிக் கொடுத்த தருப்பண நீர் பிதிரர் பெறுவதில்லை. எ-று. காண்க.

வேறுமிருதியும். స్మృత్యంతరే॥ "ఖడ్గపాత్రిక హస్తేన కర్తవ్యంపితృతర్పణం। మణికాంచనదర్భైర్వా నశుక్లైర్నకదాచన" =கட்கபாத்திரம், மூத்து, இவைகளையுடைய கையால் பிதிரர் தருப்பணம் செய்யவேண்டும். அதனங்கள், பொன், தருப்பை, இவற்றோடாயினும் செய்யவேண்டும், எப்போதும் வெறுங்கையோடுசெய்யலாகாது. எ-து. காண்க. கட்கபாத்திரம். என்பது அடிசிறுத்து நடுப்பெருத்து மேல்விரித்து இருக்கும் அருக்கிய வட்டகைகள் போல்வது. கட்கமிருகத்தின் கொம்பினல் செய்யப்பட்ட பாத்திர மென்பாருமுளர்.

மேற்கூறிய பொருள்களுள் எல்லாமிருத்தல் வேண்டுமோ? ஏதேனுமொன்றுபெற்றது சாலுமோ? என்றவழி அவ்விரண்டும் ஒத்தவாறல்லவென மரீசி மறுத்தனர். மரீசிः॥ "తిలానామభ్యభావే తు సువర్ణరజతాన్వితం। తదభావెనిషించేత్తు దర్భైర్మంత్రేణవాపునః" =எள்ளில்லாவழிப் பொன்வெள்ளி யிருத்தல்வேண்டும். அவையுமில்லாவழித் தருப்பையாலாயினும் மந்திரத்தா லாயினும் தருப்பண நீர்விட வேண்டும். எ று. காண்க.

நிலதருப்பணம்.

எள்ளினைப் பெறும் வழியுள்ள விசேடத்தை யோகயாஞ்ஞவல்கியர் கூறினர். యోగయాజ్ఞవల్క్యः॥ "యద్యద్ధృతంనిషించేత్తు తిలాంస్తస్మి

శ్రయేజ్జలై। అన్యాన్యధాతుసవ్యేన తిలాగ్రాహ్యోవిచక్షణైః " = மேலெடுத்துக் கொண்ட நீரைத் தருப்பிப்பதாலல் நீரில் எள்ளினைக் கலந்து விட வேண்டும். அதனிலும் வேறுவகையாகச் செய்வதாயின் அறிவுடையோன் இடக்கரத்தால் அவ்வெள்ளினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். எ-று. காண்க.

மேற்கூறிய யோகயாஞ்ஞவற்கிய வுரை உரோமமில்லாத இடம்பற்றிய கருத்தினை யுடையது எனத் தேவலர் கூறினர். దేవలః॥ " లోమసంస్థాంస్తిలాన్కృత్వాయస్తుతర్ప యతెపిత్రూన్। పితరస్తృప్తిమాస్తెన రుధిరెణనులెనచ " = யார்? எள்ளினை உரோமத்துள் ளிருப்பவையாகச் செய்துகொண்டு பிதிர் தருப்பணஞ்செய்கின்றனரே? அவரல் பிதிரர், இரத்தத்தாலும் மலத்தாலும் தருப்பிக்கப்பட்டவராவர். எ-று. காண்க.

நிறத்தின் வேறு பாட்டால் எள்ளினை யுபயோகிக்கும் விசேடத்தினை யத்தேவலரே கூறினர். దేవలః॥ "శుక్లైస్తుతర్పయెద్దేవా న్ననుష్యాంశ్చబలైస్తథా। పిత్ర్యాణాంతర్పయెత్కృష్ణై స్సతిలైస్సర్వథాద్విజః " = இரு பிறப்பாளன் வெள்ளை யெள்ளினல் தேவனையும், கலப்புநிற வெள்ளினல் இருடிகளையும், கறுப்பெள்ளினல் பிதிரனையும் தருப்பிக்கவேண்டும். எ-று. காண்க.

கூர்ம புராணத்துள் அத்தேவர் இருடி பிதிரர் தருப்பணத்திற் சிலவிசேடம் கூறப்பட்டது. కూర్మపురాణె॥ " దెవాన్బ్రీహ్ ఋషీంశ్చైవ తర్పయెదక్షతోదకైః। పితృన్భక్త్యాతిలైర్కృష్ణై స్సవ్యసూత్రోక్తవిధానతః " தேவருக்கும், பிரமவிருடிக்கும் அக்ஷதையோடு கூடிய நீராலும் பிதிரர்க்கு காள்ளிணெடு கூடிய நீராலும் தன்சாகைக் குரிய சூத்திரத்துட் கூறிய விதிப்படி தருப்பணம் செய்யவேண்டும். எ-று. காண்க.

திலதருப்பணம் கூடாதகாலம்.

சிலதிதிகள் முதலியவற்றுள் எள்ளினெடு செய்யும் தருப்பணம் ஆகாதென்று விலக்கப்பட்டுள்ளது. வருமாறு. "సప్తమ్యాం రవివారెచగృహీజస్యదినెతథా।భృత్యపుత్రకళత్రార్థీ నకుర్యాత్తిలతర్పణం "=மனவி,

மக்கள், அடிமையர், இன்ப நிலைமையராக விருக்கவேண்டு மென்னும் எண்ணமுடையவன் சதுர்த்தமி, ஆதிவாரம், பிறந்த நாள், இக்காலங்களிலும் வீட்டினுள்ளும் திலதருப்பணம்செய் யலாகாது. எ-று. காண்க.

புராணத்துள்ளும். పురాణెపి॥ "ఉభయోరపక్షయోరాజంస్తృమ్యాంని శిసంధ్యయోఃl విద్యాపుత్రకళత్రార్థీ తిలాన్వంచసువర్జయెత్" = கல்வி, மக்கள், மனைவி வேண்டுமென்னும் விருப்பமுடையவன் இருபக்கத்துள் ளசதுர்த்தமிகள், இரவு, இருவகைச் சந்திகாலம், என்னு மிவ்வைவ ருந்திலும் எள்ளினை யொழித்துவிடவேண்டும். எ-று. காண்க.

போதாயனர். బొధాయనఃll "నజీవపితృకరిక్తేష్వస్తైలైస్తర్పణమాచరెత్l సప్తమ్యాంరవివారెచ జన్మర్క్షదివసెషుచl గృహొనిషిద్ధంసతిలం తర్పణంతద్బహిర్భవెత్l వివాహొచూపనయనె చౌలెసతియథాక్రమంl వర్షమర్ధంతదర్ధంచ వర్జయెత్తిలతర్పణంl తిథితీర్థవిశెషెషుకార్యం త్రైతెషుసర్వదా"=பிழைத்திருக்கும் இருமுதுகுர வரையுடையவன் எப்பொழுதும் காள்ளோடு தருப்பணஞ் செய்யலாகாது. சதுர்த்தமி, ஞாயிற்றுக்கிழமை, பிறந்த நக்ஷத்தி ரம், பிறந்தவாரம், இந்தக்காலங்களில் திலதருப்பணம் செய்ய லாகாது. மனைக்குள் திலதருப்பணம் செய்யலாகாது, வெளி யிற்போய் செய்தல் வேண்டும். விவாகமாலல் வருடபரியந்த மும், உபநயநமாலல் ஆறுதிங்கள்வரையிலும், சௌளம்=மூத லில் மயிர்களிக்கும் வினையாலல் மூன்று திங்கள் வரையிலும் திலதருப்பணம் செய்யலாகாது. இறந்த திதிவந்தபோதும், புண் ணியத்தலங்களுக்குச் சென்றபோதும் திலதருப்பணம் செய்ய லாம். பிரேத கருமம் எல்லாவற்றிலும் எப்போதும் காள்ளி லேயே தருப்பணம் செய்யவேண்டுவது. எ-று. காண்க. பிரே தம்=பிணம். இறந்ததிதி = மிருததிதி = வருடந்தோறும்வரும் இறந்தநாள். இருமுது குரவர்=தாய்தந்தை.

தருப்பணஞ்செய்யப்படுவோர்.

தருப்பணஞ் செய்யப்படத்தக்கவரைச் சதுர்வியவிரதர் குறிக் கின்றனர். సత్యవ్రతఃll "కృతొపవీతొదెవెభ్యొ నివీతీచభవెత్తతఃl మనుష్యాంస్తు ర్పయెద్భక్త్యా బ్రహ్మపుత్రాంఋషీంస్తథాl అపసవ్యాంతతఃకృత్వా సవ్యంజాన్వాచ్యభూ తలెl దర్భపాణిస్తువిధినా త్రైతాంస్తంతర్పయెతతఃll" = சவ்வியமாக தேவ

கருப்பணம், நிவீதத்தினுல் இருடி தருப்பணம், பவித்திரம் புனைந்து அபசவ்வியமாகப் பூணூல் தரித்து இடதுகாலை மண் மேல் மடித்து இறந்துபோன பிதிரர்க்குத் தருப்பணமும் செய்ய வேண்டும். எ-று. காண்க.

யோக யாஞ்ஞ வற்கியரும். யோகயாஜ்ஞவல்க்யபி॥ "ப்ரஹ்மாணம தருமேதுர்வ்வம் விஷ்ணுமருத்ரம்ப்ரஜாபதிம்। வேதாம்ச்சம்தாம்சிதேவாம்ச்ச ருஷிம்ச்சைவதபோத நான்। ஆசார்யாம்ச்சைவகம்தர்வா நாசார்யதனயாம்ஸ்ததா। சம்வத்சரம்சாவயவம தேவி ரப்சரசஸ்ததா। தததாதேவான்னகான்னாகாம தாநகரான்பர்வதாநபி। சரிதோதமனுஷ்யாம்ச்ச யக்ஷாம்ரக்ஷாம்சிசைவஹி। பிசாசாம்ச்சசுபர்ணாம்ச்ச பூதான்யதபசாம்ஸ்ததா। வனஸ்பதீநோ ஷதீம்ச்ச பூதக்ராமாம்ச்சதுர்விதான்। சவ்யஜானுமதோந்யாச்ய பாணிப்யாம்தக்ஷிணாமுகஃ। தல்லிம்கைஸ்தர்பயேந்மம்தைர்ஸ்ஸர்வாந்பிதருகணாம்ஸ்ததா। மாதாமஹாம்ச்சசததம்ச்ரேஷ்டயாத ர்பயேத்த்விஜஃ"=பிரமன், விஷ்ணு, உருத்திரன், பிராஜாபதி, வேதங் கள், சந்தசு, தேவர்கள், இருடிகள், தவச்செல்வர், ஆசிரியன், கந்தருவர், ஆசிரியன் மக்கள், வருடம், அதன் உறுப்பாகிய அய னம் - இருது - மாதம், தெய்வங்கள், தருக்கள், நாகசர்ப்பங்கள், கடல், மலை, யாறுகள், மனுடர், இயக்கர், அரக்கர், பைசாசர், கரு டர், பூதர், பசு, வநஸ்பதி = காட்டுச் செடிவகைகள், பயிர்கள், எனவே அண்டசம், சுவேதசம், சராயுஜம், உற்பீசமுமாகிய நால்வகையோனியுயிர்கள், இவைகளனைத்தினையும் குறித்துத்தரு ப்பணம் செய்யவேண்டும். பின்பு இடது காலைமடித்துத் தென் முகமாக அவ்வவர் பெயரைபுடைய மந்திரங்களைக் கூறி இரு கரத்திலும் பிதிரர் அனைவர்க்கும் தருப்பணம் செய்யவேண் டும். அவ்வாறே மாதாமகர் = தாயின் தந்தையாகிய பாட்டனுக் கும்சிரத்தையோடும்தருப்பணம்செய்யவேண்டும். எ-று. காண்க.

சௌனகர். சௌனகஃ॥ "அதகாண்டருஷிர்நேதா நுதகாம்ஜலிர்ஹிம்சுசிஃ। அவ்ய க்ரஸ்தர்பயேந்நித்யம் மம்தைரேவாதநாமபிஃ"=யஜுர்வேத சாகையை யுடை யவர்கள் வேதகாண்டத்தின் இருடிகள் பெயரைக்கூறி அதே மந்திரங்களாலேவினையாமல் இருகையாலும் நீர்வாங்கிக்கொண்டு இவ்விரண்டுவிதை தருப்பணம் செய்யவேண்டும். எ-று. காண்க.

பைட்டீநசி. பைடீநசிஃ॥ "அபசவ்யம்ததஃகிருத்வா ஸ்திதாச்சபிதிருதிக்முகஃ। பி தாஸ்திவ்யாநதிவ்யாம்ச்ச பிதிருதீர்தேநதர்பயேத்" = பின்பு, அபசவ்வியமாகப்

பூணூலிட்டுக்கொண்டு தென்முகமாகத் திரும்பிப் பிதிரர் தீர்த்தத்தினுல் திவ்வியபிதிரர்க்கும் அதிவ்வியபிதிரர்க்கும் தருப்பணம் செய்யவேண்டும். எ-று. காண்க. வசு, உருத்திரர், ஆதித்தர், திவ்வியபிதிரர் எனப்படுவர். இயற்கைப் பிதிராதலின். தன்தந்தைமுதலியோர் அதிவ்வியபிதிராம், கருமவகையாற் பிதிராதலின்.

யோகயாஞ்ஞவற்கியர். యాగయాజ్ఞవల్క్యుఃll "వసూన్రుద్రాంస్తథాదిత్యా న్నమస్కారసమన్వితాన్" = வசு உருத்திரர் ஆதித்தர் என்னும் தேவர்க்கு "நமஸ்தர்ப்பயாமி" என்று இரண்டாம் வேற்றுமை யுருபினைச்சேர்த்துத்தருப்பணம்செய்யவேண்டும். எ-று. காண்க.

அஷ்டவசுக்கள்.

எண்வசுக்கள் பெயர்களை பைட்டீநசி என்பவராற் கூறப்பட்டது. పైఠీనసిుll "ధృవోదమశ్చసోమశ్చ ఆపశ్చైవానిలోనలుl ప్రత్యూషశ్చ ప్రభాసశ్చ వసవోష్టౌప్రకీర్తితాుు" = துருவன், தமன், சோமன், ஆபன், அனிலன், அனலன், பிரத்தியூடன், பிரபாசன், இவ்வெண்மரும் வசுகணமாகிய பிதிர்த்தேவர்களாம். எ-று. காண்க.

ஏகாதச ருத்திரர்.

இதுவுமது. "అజైకపాదహిర్బుధ్న్యో విరూపాక్షోథరైవతుl హరశ్చబహురూపశ్చ త్ర్యంబకశ్చసురేశ్వరుl సావిత్రశ్చజయంతశ్చ పినాకీచాపరాజితుl ఏతెరుద్రాస్సుమాఖ్యాతా ఏకాదశసురోత్తమాుు" = அசைகபாதர், அகிர்ப்புத்தினர், விருபாக்கர், இரைவதர், ஹரர், வெகுரூபர், சுரேசராசிய திரியம்பகர், சாவித்திரர், சயந்தர், பிஞகி, அபராசிதர் என்னும் இப்பெயரினையுடைய பதினொருதேவச்சிரேட்டர் உருத்திரகண பிதிர்த்தேவர்கள். எ-று. காண்க.

துவாதசாதித்தர்.

இதுவுமது. "ఇన్ద్రోధాతాభగస్తిపూషా మిత్రోథవరుణోర్యమాl అర్చిర్వివస్వాంస్త్వష్టాచ సవితావిష్ణురేవచl ఎతైవైద్వాదశాదిత్యా దేవానాం ప్రవరామతాుుl ఇమెహిదివ్యాస్తపితరుు పూజ్యాస్సర్వైుప్రయత్నతుుు"=இந்திரன், தாதா, பகன், தூஷன், மித்திரன், வருணன், அரியமான், அருச்சி, விவசுவன், துவட்டா, சவிதா, விஷ்ணு, என்னு மிவர் தேவருட் சிறந்த பன்

னிரண்டு ஆதித்தகண பிதிர்த்தேவராம். இம்மூவகையாரன்றே ? திவ்வியபிதிரர் எனப்படுகின்றனர். இவர்களையும் தன்தந்தை முத லிய அதிவ்வியபிதிரரையும்தருப்பிக்கவேண்டுவது. எ-று. காண்க.

அதிவ்விய பிதிர் தருப்பணம்.

இதுவுமது. "స్వనామగోత్రగ్రహణం పురుషంపురుషంప్రతి। తలోచకాంజ లీంస్త్రీంస్త్రీను చైచురుచై చ్చిర్వినిక్షిపేత్" = அந்தந்தப் பிதிரர்களையும் ஒவ் வோர் புருடராக அவரவர் கோத்திரம் பெயர்கூறி மும்மூன் றுகை எள்ளும் நீரும் எடுத்தெடுத்துத் தருப்பணஞ் செய்ய வேண்டும். எ-று. காண்க.

யோகயாஞ்ஞவற்கியர். యోగయాజ్ఞవల్క్యః "సవర్ణేభ్యోంజలిర్దేయో నాసవర్ణేభ్యఏవచ। గోత్రనామస్వధాకారై స్తర్పయేదనుపూర్వశః" = தன்சாதி யார்க்கு நீராஞ்சலியைத் தருப்பணமாகத் தரவேண்டுவது. வேற்று வருணத்தார்க்குக் கொடுக்கலாகாது. கோத்திரம், பெயர் "స్వధా = சுவதா" என்னும் மந்திரபல்லவம் இவைகளோடு மூதற்கணிருந்து மூறை பிறழாது தருப்பணஞ்செய்து வரவேண் டும். எ-று. காண்க.

பிதிரர் பெயர் கூறுவதனுள்ளிருக்கும் விசேடத்தினைப் போதாயனர் கூறினர். బోధాయనః॥ "శర్మాంతంబ్రాహ్మణస్యోక్తం వర్మాంతంక్ష త్రియస్యతు। గుప్తాంతంచైవవైశ్యస్య దాసాంతంశూద్రజన్మనః। చతుర్ణామపివర్ణానాం పితౄణాంపితృగోత్రతః। పితృగోత్రంకుమారీణా మూఢానాంభర్తృగోత్రతః" = அந் தணன், அரசன், வைசியன், சூத்திரனுடைய பெயர்களின் முடி வில் கூறியமுறைப்படி நிரலேசருமன், வருமன், குத்தன், தாசன் என்ற சொற்களைச்சேர்த்துத்தருப்பணம் செய்யவேண்டுவது இந்நான்கு வருணத்துள்ளவர்க்கும் அந்தந்தப்பிதிரர்கட்கும் அவ் வவர் கோத்திரத்தோடும், மணம் புரியாத பெண்களுக்குத் தந் தை கோத்திரத்தோடும், மணம் புணர்ந்த பெண்களுக்குக் கண வன் கோத்திரத்தோடும் தருப்பணஞ்செய்க. எ-று. காண்க.

தருப்பணத்தில் பிதிரர் முறை.

பிதிரர் தருப்பணத்தில் முறைமையை சத்தியவிரதர் கூறி னர். సత్యవ్రతః॥ "పితృభ్యోప్రథమందద్యా త్తతోమాతృభ్యఏవచ। తతోమాతామ

ஹாச பித்ருவ்யஸ்யஸுதஸ்யச" = நித்தமும் தந்தைவருக்கத்துள் மூவர், பின் தாய் வருக்கத்துள் மூவர், அதனுக்குமேல் தாயைப்பெற்ற பிதாவருக்கத்துள் மூவர், பின் தாயின் அன்னை வருக்கத்துண் மூவர், பின் தந்தை யுடன்பிறந்த சகோதரர்கள், புத்திரர், இவ் வகையாகத் தருப்பணஞ்செய்யவேண்டும். எ-று. காண்க.

விஷ்ணுபுராணம். విష్ణుపురాణే॥ "దద్యాత్పైత్రేణతీర్థేన కామ్యానన్యాం ఛ్రియమ్వమే। మాత్రేప్రమాత్రేతన్మాత్రే గురుపత్న్యాస్తథానృప। గురవేమాతులాదీనాం స్నిగ్ధమిత్రాయభూభుజ:" = பிதிரர் தீர்த்தத்திலல் காமிய பிதிரர்கட்குத் தருப்பண நீரைக்கொடுக்கவேண்டுவது. தாய்க்கும், தந்தையைப் பெற்றவட்கும், தன் பாட்டன்தாய்க்கும், குருமனைவிக்கும், குரவனுக்கும், அம்மான் முதலியவர்களுக்கும், நட்புசெய்த மித்திரனுக்கும் தருப்பணஞ் செய்யவேண்டும். எ-று. காண்க.

ஹாரீதர். హారీతః॥ "పిత్రాదీన్మాత్రాదీన్మాతా మహాదీన్పితృవ్యాం స్తత్పత్నీర్జ్యే ష్ఠ భ్రాతౄంస్తత్పత్నీర్మాతు లాదీంస్తత్పత్నీర్గురూపాచార్యోపా ధ్యాయాదీంశ్శ్వశ్రూం బంధిబాంధవాన్స్త్రీవ్యా న్నదాతృపోషణకారిణ స్తత్పత్నీశ్చతర్పయేత్" = தந்தைவருக்கம், தாய்வருக்கம், தாயைப் பெற்றோன் வருக்கம், தாயைப்பெற்றோள் வருக்கம், தந்தையொடு பிறந்த சகோதரர், அவர்மனைவியர், ஆதியென்றதனல் தந்தை சகோதரியர், தாய் சகோதரியர் மகட்கொடை நேர்ந்தோர், மனைவியொடு பிறந்தோர் முதலியோர், அவரவர் அணுக்கச்சம்பந்தச் சுற்றத்தார், குரு, ஆசிரியன், உபாத்தியாயன், பொன்கொடுத்தோன், அன்னமிட்டவன், காத்தவன், அவன்மனைவி, இவர்க ளனைவர்க்குந் தருப்பணஞ் செய்க. எ-று. காண்க.

தந்தையுள்ளவன்செய்யும்தருப்பணம்.

தந்தை பிழைத்திருக்கையில் மகன் செய்யத்தக்க தருப்பணத்தின் முறைமையை யோகயாஞ்ஞவற்கியர்கூறினர். "యోగ యాజ్ఞవల్క్యుః॥ "కవ్యవాహోనిలస్సోమోయమశ్చైవార్యమాతథా। అగ్నిష్వాత్తాస్సమపాశ్చ తథాబర్హిషదోపిచ। యదిస్యుర్జీవపితృక స్తాన్విద్యాచ్చతథాపితౄన్! ఏభ్యోవాపి పితాదద్యా త్తేభ్యోవాపిప్రదీయతె। ఏతాంశ్చైవప్రమీతాంశ్చ ప్రమీతపితృకోద్విజుః" = கவ்வியவாகன், அனிலன், சோமன், இயமன், அரியமன், அக்கினிஷ்வாத்தர்கள், சோமபாக்கள், பரிகிஷதர்கள், இவர்களைப் பிழைத்

திருக்குந் தந்தையை யுடையவன் பிதிர்த்தேவர்களாக உணர்ச்சி கொண்டு தருப்பணம் செய்யவேண்டும். அல்லது தன் பிதா யாவர் பொருட்டுத்தருப்பணநீரைக் கொடுக்கின்றானே? அவர் களைக்குறித்து, சாமானியமாகவாயினும் தருப்பணநீரைக்கொடுத் தல்வேண்டும். தந்தையையிழந்த இருபிறப்பாளன் இறந்துவிட்ட பிதிரர் அனைவர்க்கும் தருப்பணஞ்செய்யவேண்டும். எ-று. காண்க.

மூடிவானநீராஞ்சலி.

மூடிவிற்செய்யும் நீராஞ்சலியைக் காத்தியாயனர் கூறினர். కాత్యాయనః॥ "పితృవంశ్యామాతృవంశ్యాయేచాన్యేపితరోజనాః। మత్తస్తూదకమర్థ్నాతి యేతాంస్తాంస్తర్పయామ్యహం" = பிதிர் வங்கிசத்திற் பிறந்தவர்கள், தாய்மரபிற்பிறந்தவர்கள், மற்றுமுள்ள யார் யார்? என்பிதிர்வருக் கத்திற்சேர்ந்திருக்கின்றனரோ? அவர்கள் அனைவர்பொருட்டும், என்னல் யார் தருப்பணநீரைப் பெறத் தக்கவர்களோ? அவரவ ரனைவர்க்கும்திருத்தியாகும்படிநான்செய்கின்றேன். எ-று. காண்க.

ஆதித்தியபுராணம். ఆదిత్యపురాణే॥ "యత్రక్వచనసంస్థానాం క్షుత్పిపాసా పహతాత్మనాం। తెషాంహిదత్తమక్షయ్య మిదమస్తుతిలోదకం। యెమెకులెలుప్త పిండాది పుత్రదారవివర్జితాః। తెషాంతుపత్తమక్షయ్య మిదమస్తుతిలోదకం" = யாண்டெனு மோரிடத்தி லுள்ளவர், எந்தவிடத்திலாயினும் பசியோடும் தா கத்திலேடும், கதியற்றவராயுள்ளவர் யாவரோ? அவர்க்கு இந் தத்திலோதகம் கெடாததாகுக என்மரபில்யார் மக்கள், மனைவி, இல்லாதவர்களாய், பிண்டத்திற்கு வழியற்றவர்களாய் இருக்கின் றார்களோ? அவர்கட்கு என்னல் கொடுக்கப்பட்ட இந்த எள் ளுந்தண்ணீரும் கெடற்றதாகுக. எ-று. காண்க.

மச்சபுராணம். మత్స్యపురాణే॥ "యెబాంధవాబాంధవాయె యెన్యజన్మని బాంధవాః। తెతృప్తిమఖిలాయాంతు యెవామత్తోబువాంఛితాః" = யார் சுற்றத்தி னரோ? யார் சுற்றத்தினரல்லாதவரோ? யார் வேறு பிறப்பில் சுற்றமாக விருந்தவரோ? யார் என்னல் நீர்க்கடனை விரும்புகின் றாரோ? அவர்களனைவரும் திருத்தியடைக. எ-று. காண்க.

சுருக்கமான தருப்பணம்.

விரிவாகத் தருப்பணஞ் செய்வதற்குச் சத்தியில்லாதவன் சுருக்கமாகத் தருப்பணத்தைச் செய்யலாமென்று விஷ்ணுபுரா

ணத்துட் கூறப்பட்டது. விஷ்ணுபுராணே॥ "ஆப்ரஹ்மஸ்தம்பபர்யம் தம்ஜகத்ப்ரஸ்ருதிஸ்திப்ருவன்। கிபெத்பையோஜ்ஜலீம்ஸ்ரோம்ஸ்து குர்யாத்ஸம்கேபதர்பணம்"=பிரமன் முதலாக அசைவற்ற கட்டையாக விருக்கும் அணுத்திரள் வரையிலும் சராசரமாயுள்ள எல்லாப் பிரவஞ்சமும் திருத்தியடைக என்று சொல்லுபவனுய் மூன்றுகைச் சலத்தை இறைத்துச் சுருக்கதருப்பணம் செய்யவேண்டும். எ-று. காண்க.

இயம தருப்பணம்.

இயம தருப்பணம் விருத்தமனுவாற் கூறப்பட்டது. வ்ருத்தமநுஃ॥ "தீபோத்ஸவசதுர்தஶ்யாம்கார்யம்சயமதர்பணம்। கிருஷ்ணாம்காரசதுர்தஶ்யாமபிகார்யம் ஸதைவச। யமாயதர்மராஜாய ம்ருத்யவேசாம்தகாயச। வைவஸ்வதாயகாலாய ஸர்வபூதக்ஷயாயச। ஔதும்பராயதத்நாய நீலாயபரமேஷ்டினே। வ்ருகோதராயசித்ராய சித்ரகுப்தாயதேனமஃ"=ஆசுவீஜம்=ஐப்பிசிமாசம் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியிலும், மற்றெந்த மாசங்களிலாயினும் செவ்வாய்க்கிழமையோடுங் கூடிய கிருஷ்ண சதுர்த்தசியிலும், இயமனைக் குறித்துத் தருப்பணம் செய்யவேண்டும். இயமன், தருமராஜன், மிருத்யு, அந்தகன், வைவசுவதன், காலன், சருவபூதகூடயன், ஔதும்பரன், தத்தினன், நீலன், பரமேஷ்டி, விருகோதரன்; சித்திரன், சித்திரகுப்தன், என்னும் பெயராகிய மனுக்களை நான்காம் வேற்றுமையுருபோடும் "நம" என்னும் மந்திரபல்லவத்தோடும். சேர்த்துக்கூறித்தருப்பணம்செய்யவேண்டும். எ-று. காண்க.

இந்த இயம தருப்பணஞ் செய்யவேண்டிய நியமத்தை ஸ்காந்த புராணத்துள் கூறப்பட்டது. ஸ்காம்தபுராணே॥ "தக்ஷிணாபிமுகோபூத்வா திலைஸ்ஸவ்யம்ஸமாஹிதஃ। தைவதீர்தேனதேவத்வாத்திலைஃபித்ரைதாதிஸாயச"= இயமன் இறந்தவரனைவர்க்குந் தலைவனு மாகலின் அவனைக் குறித்துத் தருப்பணம் தென்முகமாக அபசவ்விய சூத்திரமுடையவனுகி எள்ளினேடு நீர் கொடுக்கவேண்டும். இயமன் திக்குப்பாலகனுகிய தெய்வமாமாகலின் அத்தருமராஜன் பொருட்டுத்தெய்வதீர்த்தத்திலும் தருப்பணம செய்யவேண்டும். எ-று. காண்க.

இவ்வாறு இயமதருப்பணஞ் செய்பவனுக்கு உண்டாகும் பயனை அவ்வியமனே கூறினர். யமஃ॥ "யத்ரக்வசனதாவ்யம்ஹி ஸ்நாத்வா

కృష్ణచతుర్దశీం। సంతర్ప్యధర్మంరాజానం మచ్యతెసర్వకిల్బిషైఃꣳ" = தெய்பிறைச் சதுர்த்தசிதிதியில் எங்கேனும் ஒருயாற்றில் நீராடி இராஜனகிய தருமதேவதைக்குத் தருப்பணம் செய்தவன் எல்லாப் பாவத்தினின்றும் விடப்படுகின்றான். எ-று. காண்க.

பீஷ்மதருப்பணம்.

மாகம் = மாசிமீ சுக்கிலபக்ஷம் அட்டமிதினத்தில், பீஷ்மனைக்குறித்துத் தருப்பணம் செய்யவேண்டும் என்று வியாசர் கூறினர். వ్యాసఃꣳ "భీష్మాష్టమ్యాంతుమాఘస్య దద్యాద్భీష్మాయయోజలం। సంవత్సరకృతంపాపం తత్క్షణాదేవనశ్యతి। వైయాఘ్రపాదగోత్రాయ సాంకృతిప్రవరాయచ। గంగాపుత్రాయభీష్మాయ ప్రదాస్యేహంతిలోదకం। అపుత్రాయదదామ్యేత జ్జలంభీష్మాయవర్మణె" = மாசித் திங்களின் வளர்பிறை அட்டமியில் வீட்டுமன் பொருட்டு யார் தருப்பணநீரைக் கொடுக்கின்றானே? அவன் அவ்வருடத்திற் செய்த பாவங்களெல்லாம் அப்பொழுதே அழிந்துவிடுகின்றது. வையாக்கிரபாத கோத்திரன், சாங்கிருதிக இருடிப்பிரவரன், கங்கைமகன், கான்முளையில்லான், பீஷ்மவருமன், அரசகுலத்து அவதரித்திருந்த வீடுமன் பொருட்டு இத்திலோதகத்தைத் தருகின்றேன் என்றபொருளுடைய, ஆரிடமந்திரத்தைக் கூறித் தருப்பணம் செய்யவேண்டும். எ-று. காண்க. கான்முளை=புத்திரர்.

தருப்பணச்சிறப்பு.

தருப்பணத்தின் சிறப்பு புராண சாரத்துட் கூறப்பட்டது. పురాణసారె॥ "ఏవంయస్సర్వభూతాని తర్పయెదస్వహంద్విజాः॥ సగచ్ఛెత్పరమంస్థానంతె జొమూర్తినానామయం" = இவ்வாறு எந்த விருபிறப்பாளன் ஒவ்வொருபகலிலும் எல்லாவுயிர்களையும் திருத்தி செய்விக்கின்றானே? அந்த விருபிறப்பாளன் ஒளிமயமாகிய வுடம்பினையும், நோயின்மையினையும், மேலான கதியையும் அடைகின்றான். எ-று. காண்க.

தருப்பணஞ்செய்யாவழிவருங்குற்றம்.

தருப்பணம் செய்யாதொழியின் பாவம்வருகின்றதென்று புராணத்துட் கூறப்பட்டது. పురాణె॥ "దెవాంశ్చెవ ముసీంశ్చెవ పిత్యా

சூரியதருப்பணம்.

விஷ்ணுபுராணம். விஷ்ணுபுராணே॥ "ஆசம்யோச்சதோதத்வா தூர்யாய சலிலாஞ்சலிம்। நமோவிவஸ்வதேப்ரஹ்ம பாஸ்வதேவிஷ்ணுதேஜசே। ஜகத்சவித்ரேசுசயே சவித்ரேகர்ம சாக்ஷிணே" = பின்பு ஆசமனஞ்செய்து பிரமவொளியோடு விளங்கி எங்குமாகிய வொளியுண்டாய் உலகசிருட்டி செய்பவனையும், எல்லாக் கருமங்கட்கும் சான்றும், உலகத்திற்கு ஆன்மாவுமாகிய சூரியனுக்கு, ஒருகைநீரைஅருக்கியமாக இறைத்துத்தருப்பணஞ் செய்யவேண்டும். எறு. காண்க.

தருப்பணவிதி முற்றிற்று.

தேவபூசனை.

இங்ஙனமாக மூலவசனத்துள் கூறுதொழிந்த கருமங்களைத் தருப்பணம் வரையில் கூறி முடிக்கப்பட்டது. இனி மூலத்துட் கூறப்பட்ட முறைப்படி தேவபூசனையை விவரமாகக் கூறுகின்றும். அதனை நரசிங்கபுராணத்துட் கூறப்பட்டது. நரசிம்ஹபுராணே॥ "ஜலதேவான்னமஸ்கரித்ய ததோகச்சேத்க்ருஹம்புதஃ। பௌருஷேணதுசூக்தேன ததோவிஷ்ணுஂஸமர்சயேத்" = நீர்த்தேவதைகளுக்கு வந்தனஞ் செய்து பின்பு வீட்டுக்குவந்து புருடசூக்தத்தில் விஷ்ணுவை நன்றாகப் பூசிக்கவேண்டும். எறு. காண்க.

அக்கினேயபுராணம். ஆக்நேயபுராணே॥ "மந்த்ரைர்விஷ்ணவராத்ரிஸ்து சாவித்ரைஶ்சாம்பவைஸ்ததா। விஷ்ணுஂப்ரஜாபதிம்வாபி சிவம்வாபாஸ்கரம்சிவா। தல்லிங்கைரர்சயேஸ்தம்த்ரை ஸ்ஸர்வதேவான்சமாஹிதஃ" = விஷ்ணு மந்திரத்தால் விஷ்ணுவையும், இளைத்திர மந்திரத்தால் பிரஜாபதியையும், சவித்திரு மந்திரத்தால் சூரியனையும், சாம்பவ மந்திரத்தால் சிவனையும், தேவீமந்திரத்தால் பரசிவ சத்தியையும், அந்தந்தத் தேவதைகளின்பெயர் தொழில் குணங்குறிப்புத்தெரிய விருகின்ற சுருதஸ்மார்த்த புராண மந்திரங்களால் எல்லாத்தேவதையும் பூசிக்கவேண்டும். எறு. காண்க.

கூர்மபுராணம். கூர்மபுராணே॥ "ப்ரஹ்மாணஞ்சங்கரம்சூர்யம் தத்தைவமதுசூதனம்। அன்யாம்ஶ்சாபிமதான்தேவா ன்பக்த்யாசாக்ரோதனோத்வரஃ। சைவர்மந்த்ரைரர்சயேன்னி

త్యం పతే ర్లోపుష్పైస్తథాంబుభిः " = பிரமன், சிவன், சூரியன், விஷ்ணு மற்றும் முள்ள பலதேவர்கள் இவர்களைப் பத்தியோடு கோவத்தை யொழித்து, வினையாமல், அந்தந்தத் தேவதா மந்திரங்களால் நாடோறும், பத்திரம், பூக்கள், நீர்முதலிய வுபசாரத்தோடும் பூசிக்கவேண்டும். எறு. காண்க.

மிருதிசங்கிரகம். స్మృతిసం గ్రహే॥ "ఆదిత్యమంబికాంఽష్టౌం గణనాథంమహేశ్వరం। ఏతేష్విష్టంప్రథానంతు పంచాయతనమర్చయేత్ " = சூரியன், மஹாதேவி, விஷ்ணு, கணபதி, சிவன் இவ்வைந்து தேவரும் கூடினால் அது "பஞ்சாயதனம்" என்னப்படும். இவற்றுள், நான்குதிசைக்கண்ணும் நான்குதேவர். நடுவே யொருதெய்வம் இவ்வாறு வைத்துப் பூசிக்கவேண்டும். எறு. நடுவேயுள்ளது முக்கியதெய்வம், சூழவிருப்பது அங்கதெய்வமாம். இவ்வைந்தனுள் எந்ததெய்வத்தில் யார்க்கு விசேட விருப்பமும் பத்தியுமுள்ளதோ? அந்தத்தெய்வமே முதலாக வைத்துக்கொண்டு "பஞ்சாயதனம்" பிரதிமை மூர்த்தியா யிருக்கும் பரமேச்சுரனை யருசிக்கவேண்டும். எறு. காண்க.

ஆனல் முன் மூலத்திற்குப் பொருள்கூறியபோதே மிகவும் விசாரித்து முக்கியமாய் மஹாதேவனையே பூசிக்கவேண்டுமென்பது சித்தாந்தஞ் செய்யப்பட்டுள்ளது. ஆயினும் ஈண்டு, தரிசனபேதம். = சமயசாத்திர பேதங்களைப்பற்றிவிஷ்ணு, சங்கரன் முதலிய மூர்த்திபேதங்கள் கூறப்படுதலின் மூரணுவதில்லை. தரிசனம் என்பதுயாதுஎனில்? புராணமுதலியவற்றுள் கூறப்பட்டுள்ளது.

அறுவகைத்தரிசனம்.

புராணசாரம். పురాణసారే॥ "శైవంచవైవష్ణవంశాక్తం సౌరంవైనాయకంతథా। స్కాందంచభక్తిమూర్ధస్య దర్శనానిషడేవహి " = சைவம், வைஷ்ணவம், சாக்தம், சௌரம், வைநாயகம், ஸ்காந்தம். என்னும் ஆறுசமய நூல்களும் பத்திமார்க்கங்களை விளக்குவதா மதவின் சடுதரிசனம் என்று புகழ்பெற்றுள்ளது. எ-று. காண்க.

விஷ்ணு அர்ச்சனை.

அவற்றுள், வைணவமதத்தின் கொள்கைப்படி விஷ்ணு பூசையின் முறையை மஹாபாரதம் அசுவமேத பர்வத்தில் விதிக்

கப்பட்டது. பாரதஅசுவமேதபர்வணி॥ "சிருணுபாண்டவதக்ஷ்ய மர்ச்சனாக்ரமமாத்மனः। ஷட்கோணபத்மகம்கృத்வா சாஷ்டபத்ரம்ஸகர்ணிகம்। அஷ்டாக்ஷரவிதானேன அதவாத்வாதசாக்ஷரைः। வைதிகைரதவாமம்தை ர்மமஸூக்தேனவாபுனः। ஸ்தாபிதம்மாம்ததస్తస్మி న్నర்ச்சயீதவிచக్షణः। புருషంచతతస్సత్య మచ్యుతంచయుధిష்டிర। அనிருద்ధంచమాంப்రాహు ర్வ்யூహానసவிదோజనాः। அన்యేப్యేవంవిజానంతి మాంராజ-పాంచరా త్రికాः। வாசுதேவంచరాజేంద్ర సంకర్షణమథాపివా। ப்ரద்యుమ్నంచానிరుద్ధంచ చతుర్మూర్తింப்ரచక్షతే। ఏతాశ్చాన్యాశ్చరాజేంద్ర సంజ్ఞాభేదేనమూర్తయः। వినాధ్యాత్మపరాన్నవ మామేవం చార్చయేద్బుధः" = ஓய்! பாண்டவனே! என்னைப் பூசிக்கு முறையைக் கேளும் என்று கண்ணன் கூறுகின்றனர். நிலஞ்சுத்தமாகச்செய்து அரிசியைப்பரப்பி அதன்மேல், எட்டிதழாக வாயினும் பன்னிரண்டிதழாக வாயினும் தாமரைப்பூவெழுதி அதில், நாராயண அஷ்டாக்ஷர மந்திரமே யாயினும் வாசுதேவ துவாதசாக்ஷர மந்திரமாயினும் எழுதி, வைதிகமந்திரத்தா லாயினும், என்சூக்தத்தி னு லாயினும், என்னைப்பதிட்டை செய்து அறிவுடையவன் அருச்சிக்க வேண்டும். வைகாநசாகம முணர்ந்தவர்களென்னைப் புருடன், சத்தியன், அச்சுதன், அநிருத்தன், என்னு நான்குருவ முடையவனாக வுணர்வர். பாஞ்சராத்திராகமத்தையுவர்ந்தவர்கள்வாசுதேவன், சங்கரிஷணன், பிரத்தியும்நன் அநிருத்தன் என்னும் நான்குமூர்த்திமானாகக் கூறுவர். இவற்றையும் வேறுமுள்ளவற்றையும் பெயர் வேறுபாடு மாத்திரமேயுடைய எனது மூர்த்தமென்றே சொல்லுவர். ஆன்மஞானநிட்டர்க ளொழிய ஏனைய அறிவுடையவர்கள் இவ்வாறு என்னைப் பூசிக்கக்கடவர். என்று. காண்க.

பூசிக்கத்தக்கவிடம்.

ஆக்கினேயபுராணம். ஆக்னேயபுராணே। "அர்చనంసంప్రవక్ష్యామి విష్ణోరమితతేజసः। యత్కృత్వామనయస్సర్వే పరంనిర్వాణమాప్నుయుः। అస్సన్వగ్నౌ హృదయేసూర్యే స్థండిలేప్రతిమాసుచ। షట్సువేషుహరేస్సమ్య గర్చనంనునిశ్చితం" = முனிகளனைவரும் எந்தப்பூசையைச் செய்து உத்தமமான மோக்ஷத்தை யடைந்தனரோ? அந்த அளவற்ற சோதியாகிய விஷ்ணுவினுடைய பூசையைச் சொல்லுகின்றேன். நீர், நெருப்பு, உள்ளம், சூரியன், ஸ்தண்டிலம்=நிரவியஅரிசி, உருவங்கள் "ச" என்றதனால், சாளிக்கிராமம், மணிகள், இயந்திரங்கள், இவ்

வாறு வடிவங்களிடமாக விஷ்ணுவை நன்முகப் பூசிக்க வேண்டுமென்று, பெரியாற் கூறப்பட்டது. எ-று. காண்க.

அதிகாரியர் பேதம்.

ஆக்கினேய புராணம். ஆக்நேயபுராணே॥ "அக்நாக்ரியாவதாம்தேவோ ரவாதேவோமனீஷிணாம்। ப்ரதிமாஸ்வல்பபுத்தீனாம் யோகினாம்ஹ்ருதயேஹரிः। தஸ்யஸர்வகத த்வாச்ச ஸ்தண்டிலேஜ்ஞதாத்மனாம்" = கருமயோகிகட்கு, அக்கினியிலும், வித்துவான்களுக்குச் சூரியனிடத்திலும், சிற்றறிவுடையவர்களுக்கு விக்கிரக வடிவத்திலும், யோகிகட்கு உள்ளத்திலும், பாவனை செய்யும் நம்பிக்கை யுடையவர்களுக்குத் தண்டிலத்திலும் கடவுள் பூசிக்கத்தக்கவராக விருக்கின்றார். சீவர்களுடைய சமூசார துக்கங்களை நீக்குகிறவராதலாலே அரியென்னும் பெயரையுடைய விஷ்ணு எல்லாப்பொருளி னிடத்தும் கலந்திருப்பவரா யிருத்தலின் அப்படிப்பட்ட பரமான்மாவே அந்தந்த அதிகாரிகட்கு அந்தந்த அதிட்டான இடங்களில் உபாசிக்கத் தக்கவராக விருக்கின்றார். எ-று. காண்க. தண்டிலம் = பரப்பிய அரிசி.

புருட சூத்த நியாசம்.

ஆக்கிநேயபுராணம். ஆக்நேயபுராணே॥ "ருக்வேதேபௌருஷம்சூக்த மர்ச்சிதங்குஹ்யமுத்தமம்। ஆனுஷ்டுபஸ்யசூக்தஸ்ய த்ரிஷ்டுபந்தஸ்யதேவதா। புருஷோயோஜகத்பீஜ ம்ருஷிர்நாராயணஸ்ஸ்ம்ருதः। ப்ரதமாம்வின்யஸேத்வாமே த்விதீயாம்தக்ஷிணேகரே। த்ருதீ யாம்வாமபாதேது சதுர்தீம்தக்ஷிணேன்யஸேத்। பஞ்சமீம்வாமஜானாது ஷஷ்டீம்வைதக்ஷிணேன்யஸே த்। ஸப்தமீம்வாமகட்ட்யாந்து அஷ்டமீம்தக்ஷிணேததா। நவமீம்நாபிமத்ய்தது தசமீம்ஹ்ருத யேததா। ஏகாதசீம்கண்டமத்ய்ே த்வாதசீம்வாமபாஹுகே। த்ரயோதசீம்தக்ஷிணேபி ததா ஸ்யாதுசதுர்தசீம்। அக்ஷ்ணோர்பஞ்சதசீம்சைவ விந்யஸேந்ஷோடசீம்। யதாதேவா ததாதே வாந்யாஸம்கருத்வாவிதானதः। ந்யஸேனதுபவேத்ஸ்வயமேவஜனார்தனः। ஏவம்ந்யாஸவி தானம்கருத்வா பஶ்சாத்யாகம்ஸமாசரேத்" = இருக்கு வேதத்தில் புருடசூக்த மென்ப தொன்றுண்டு அது பெரியோர்களால் பூசிக்கப்பெற்றது. சிறந்ததாயும் வெளிப்படாததாயும் உள்ள இரகசியம். பிராணாயாமஞ்செய்து சங்கற்பித்துப் புருடசூக்தத்திற்கு இருடியையும், சந்தசுவையும், தேவதையையும், உச்சரித்து, அத்தச் சூக்தத்தில், பதினாறு இருக்குகள்=மந்திரங்களிருத்தலினால் அவற்றைப் பூசிக்குங்கருத்தா தன்னுடம்பிலும் தேவதா மூர்த்தியினிடத்தி

லும் அங்கநியாசம் செய்கின்றேன் என்று சங்கற்பித்து விதிப் படி ஒவ்வொருமந்திரத்தால் ஒவ்வொரு அங்கத்தையும் அபிமந் திரித்து முறையே நியாசம் செய்யவேண்டும். எவ்வாறெனில்? புருட சூக்தத்திற்கு, நாராயணோ இருடி., உலக காரணமான விராட்புருடனே தேவதை, சூக்தம் அனுஷ்டுப்பு என்னுஞ் சந்தசுவையுடையது. மூடிவில் திருஷ்டுப்பு என்னும் சந்த சும்மூடையது. நியாசத்துள். இடதுகையில் மூதலிருக்கு, வலக் கரத்தில் இரண்டாவது. இடக்கால் மூன்றுவது. வலக்கால் நான் காவது. இடது மூழங்கால் ஐந்தாவது. வலதுமூழங்கால் ஆறு வது. இடது புறத்து இடையில் ஏழாவது. வலதுபுறஇடையில் எட்டாவது. நாபியில் ஒன்பதாவது. உள்ளத்தில் பத்தாவது. கழுத்தில் பதினோராவது. இடதுதோள் பனிரண்டாவது. வலது தோள் பதின்மூன்றுவது. வாய்பதினான்காவது. கண் பதினைந் தாவது தலை பதினாறுவது. இவ்வாறுஅந்தந்தவுறுப்புக்களில் அந் தந்த எண்களையுடைய இருக்கு மந்திரங்களைத் தன்னிடத்திலும் விஷ்ணு மூர்த்தியிடத்திலும் யார் நியாசம் செய்கின்றாரே? அந்த மந்திரமேயாகி தானே விஷ்ணுவாகிறான். இவ்வாறு நியாச விதியைச்செய்து அதன்பின்பு பூசைவேள்வியைத் தொடங்கிச் செய்யவேண்டுவது. எ-று. நியாசம்=வைப்பது. மந்திரத்தைச் செபித்து அங்கத்தைப் பரிசித்து மந்திர சத்தியறிவை அங்கத் துள் வைப்பது என்பது கருத்து.

புருட சூக்தத்திறற் பூசித்தல்.

ஆக்கினேய புராணம். ஆக்நேயபுராணே॥ "పూర్వయావాహయేద్దేవ మాసనంతుద్వితీయయా। పాద్యం త్రితీయయాచైవ చతుర్థ్యార్ఘ్యంప్రదాపయేత్। పంచ మ్యాచమనంచదద్యా త్షష్ఠ్యాస్నానంసమాచరేత్। సప్తమ్యాతుతతోవాసో హ్యష్టమ్యాచా పవీతకం। నవమ్యాగంధలేపంతు దశమ్యాపుష్పకంతథా। ఏకాదశ్యాతథాధూపం ద్వాద శ్యాదీపమేవహి। త్రైవెద్యంతుత్రయోదశ్యా నమస్కారేచతుర్దశీ। ప్రదక్షిణేపంచదశీ శ యనేషోడశీతథా। స్నానేవత్రి ర్ద్విచనైవెద్యాదద్యాదాచమనంతథా। హుత్వాషోడశభిర్మం త్రై ర్షోడశాన్నస్యచాహుతీః। పునషోడశభిర్మంత్రై ర్దద్యాత్పునస్పాణిషోడశ। తచ్ఛుస ర్వంజపేద్భాయతే పౌరుషంసూక్తముత్తమం। షణ్ణాసాత్సిద్ధిమాప్నోతి హ్యేవమేవసమర్చ యేత్." = புருட சூக்கத்துள்ள பதினாறு இருக்கினால் விஷ்ணு மூர்த்தத்துக்குப் பதினாறு உபசாரத்தோடும் பூசிக்கவேண்டும்.

எவ்வாறெனில்? முதல்இருக்கினல், அத்தேவரை ஆவாஹனம் செய்ய வேண்டுவது. ஆவாஹனம்=அழைத்தல். உ - வது. ஆசனம் = பீடம்கொடுத்தல் ஊ - வது. பாத்தியம் = திருவடிக்கு நீருதவுதல். ஃ - வது. அருக்கியம் = கைக்கு நீருதவுதல். ரு - வது. ஆசமனம்=குடிநீருதவுதல் (முகசுத்தியின்பொருட்டு). ரூ - வது. ஸ்நானம் = அபிஷேகம். எ - வது. பரிவட்டம்= அணிவதற்கு ஆடை. அ - வது. பூணூல். ரூ - வது. சந்தனம். க0 - வது. பூக்கள். கக - வது. தூபம். கஉ - வது. தீபம். கஊ - வது. நைவேத்தியம். கஃ - வது. நமஸ்காரம். கரு - வது. வலம் வருதல். கரூ - வது. சயனம். இக்கணக்கினையுடைய இருக்கு மந்திரத்தால் இந்த :வுபசாரங்களைச் செய்ய வேண்டும். மேலும், ஸ்நானம், ஆடை, நைவேத்தியம், இந்தவுபசாரங்களைச் செய்யும்போது, இடை யிடையே ஆசமனம் செய்விக்கவேண்டும். பின்பு அக்கினியில் இப்பதினறு மந்திரங்களாலேயே அந்தத்தை பதினறு ஆகுதிஹோமஞ் செய்யவேண்டுவது. அன்றியும், இப்பதினறு மந்திரத்தால் பதினறுபூக்களை அத்தேவர்க்குச் சாத்தவேண்டும். பின்பு புருடசூக்த முழுவதையும் அடிக்கடி செபிக்கவேண்டுவது: இவ்வாறு நாடோறும் விஷ்ணுவை நன்முகப் பூசிக்கவேண்டும். இதுசெய்தவன் ஆறு திங்களிற் சித்தியடைவன். எனவே இச்சித்தபயன் உண்மை பெற வெளிப்படும். எறு. காண்க.

சூரியமண்டலத்துள் விஷ்ணுத்தியானம்.

ஆக்கினேய புராணம். ஆக்நேயபுராணே॥ "த்⁴யேயஸ்ஸதா³ ஸவித்ருமண்ட³ல மத்⁴யவர்தீ। நாராயணஸ்ஸரஸிஜாஸனஸன்னிவிஷ்ட:। கேயூரவான்மகரகுண்ட³ல வான்-ரீடீ। ஹாரீ ஹிரண்மயவபுர்த்⁴ருத ஶங்க²சக்ர:" = மகுடம், காதுக்கு மகரக்குழை, தோளுக்கு வாகுவலயம், என்னும் ஆபரணங்களையுடையராய்க் கையில் சங்குஞ் சக்கரமும் பிடித்துப் பொன்போலும் ஒளிவிடும் திருக்கோல முடையவராய்க் கமலபீடத்தின்மேல் வீற்றிருக்கும் நாராயணன் எப்பொழுதும் சூரியமண்டலத்தின் நடுவே யிருக்கின்றார் என்று தியானிக்கப் படுபவராம். எனவே அவ்வாறு பாவிக்கவேண்டும். எறு. காண்க.

போதாயனர் கூறிய விஷ்ணுபூசனை. போ⁴தா³யனஸ்॥ "அதா²தோ மஹாபுருஷஸ்யா ஹரஹ:பரிசர்யா விதி⁴வ்யாக்²யாஸ்யாம: ஸ்நாத்வாஶுசிர்ஜ்ஞாதா³ஶ

గోమయేనోపలిప్య "ప్రతికృతింకృత్వా శ్రుతపుష్పైర్యథా లాభమర్చయేత్" = அதனல், பின்பு, மஹாபுருடராகிய விஷ்ணுவை யொவ்வொருடாகவிலும் பூசிக்கும் பூசைவிதியை எடுத்துக் கூறுகின்றும். நீராடிச் சுத்தஞப்ப் புனிதமாகிய இடத்தில் பசுவின் சாணத்தினல் மெழுகி விஷ்ணுமூர்த்தத் திருவுருவை (எனவே, சாளிக்கிராமம், மணி, இயந்திரம், நிரவிய அரிசி, உலோகம் – தரு–சிலை முதலியவற்றுற் சமைந்தமூர்த்தி, அல்லது பூரணகலசம்) இவற்றுள் ஒன்றிற் பிரதிட்டைசெய்து புஷ்பமுதலிய பூசைத்திரவியங்கள் கிடைத்த மட்டில் கொண்டு பூசிக்கவேண்டும். எறு. காண்க.

இதுவுமது. సహపుష్పోదకేనమహా పురుషమావాహయేత్ ఓభూఃపురుషమావాహయామి, ఓంభువఃపురుషమావాహయామి, ఓంగ్సువఃపురుషమావాహయామి,ఓంభూర్భువస్సువఃమహాపురుషమావాహయామీత్యావాహ్య" = பூக்களோடும் சுத்தசலத்தைப்பெற்றுக்கொண்டு வேறுவேறுபிரணவத்தோடுங் கூடியமூன்றுவியாஹிருதிமந்திரங்களால்புருடனை ஆவானஞ்செய்கின்றேன் என்று முக்காலமழைத்துப்பின்பிரணவத்தோடு அம்மூன்றுவியாஹிருதி மந்திரங்களையும் சேர்த்துமஹாபுருடனை யழைக்கின்றேன் என்று ஆவாகனஞ்செய்து "ఆయాతుభగవాన్మహా పురుషఇత్యేతెన" = பகவராகிய மஹாபுருடன் வருக. எனக் கூறுக.

இதுவுமது. "స్వాగతెనాభినందతి స్వాగతమథునా భగవతోమహాపురుషస్యేతి" = "స్వాగతం = சுவாகதம்" = என்பது. நல்வரவான வுபசரிக்கும் உபசாரமொழி.. பகவராகிய மஹாபுருடருக்குச் சுவாகதம் என்று களிப்பித்தல்வேண்டும். எறு. காண்க.

இதுவுமது. "ఏతదాసనముపకల్పత మత్రాస్యతాం భగవన్మహా పురుషేతి కూర్చంవదతి భగవతోయంకూర్చోవర్ష మయస్త్రీవృద్ధరిత సువర్ణస్తంజుషస్వేతి"= பகவராகிய மஹாபுருடருக்கு இக்கப்பீடிகை குறிக்கப்பட்டது. ஓய்! பகவராகிய மஹாபுருடரே! இவ்விடத்தில் இருந்தருளுக என்றுகூறி, அத்தேவருக்குப் பசும்பொன்னிறத்துத் தருப்பையாலியன்ற மூன்று பவித்திரக் கிரந்தியுண்டாகியதுமாகிய இந்தக் கூர்ச்சம், சித்தமானது அன்போடு மிகன்மேலெழுந்தருளுக என்று மந்திரங்கூறிப் பவித்திராசனத்தை அற்பிக்கவேண்டும். எறு. காண்க. கிரந்தி = முடி. கூர்ச்சம்=தருப்பைப் பவித்திரகாண்டம். காண்டம் = நீட்சியுடையது.

இதுவுமது. "அத்ராதஃஸ்தானாநிகல்ப யத்யக்ரதஃ ஶங்காயபரதஶ்சக்ரா யதக்ஷிணதோகதா யைவாமதோவனமாலா யைபஶ்சிமதஃ ஶ்ரீவத்ஸாய கருத்மதெசோத்தரத ஃஸ்ரியைசரஸ்வத்யை புஷ்ட்யைதுஷ்ட்யை சகல்பயாமீதி" = ஈண்டு இக்கூர்ச்சத்துக்கீழிடத்தில் விஷ்ணுவின் பரிவாரதேவர்க்கு இடம் செய்கின்றேன். பாஞ்சசன்னியமென்னுஞ் சங்கினுக்கு முன்னிடம். அதன்பின் சுதரிசனம் என்னும் சக்கரப்படைக்கு, வலப்பால் கௌமோதகி என்னும் கதாயுதத்திற்கு. இடப்பால் வனமாலை என்னுந் துளவத்திற்கு. மெல்பால், ஸ்ரீவச்சம் என்னும் விருதுகுறிக்கும், கருடனுக்கும். வடபால், திருமகள், கலைமகள், புஷ்டிதேவி, துஷ்டிதேவியர்க்கும். இடம்செய்கின்றேன் எ-று காண்க.

இதுவுமது. "அதஸாவித்ர்யாபாத்ரமபி மம்த்ர்யப்ரக்ஷால்யத்ரிரபஃ பரிஷிச்யானீயஸஹ பவித்ரேணாதித்யம்தர்மயேத்" = பின்பு அக்கிரோதக பாத்திரத்தைச் சாவித்திரி மந்திரத்தால் அபிமந்திரித்து நன்றாக அலம்பி மூன்றுவிசை சலம்பூரித்து பவித்திரத்தோடு கொடுவந்து பிரணவம் கூறிச் சூரியனுக்குக்காட்ட வேண்டும். எ-று காண்க.

இதுவுமது. "ஸ்நானம்த்ரிணிபதாபிசக்ரமஇதி" = "திரிணிபதாவி சக்கரமே" என்ற மந்திரத்தால் அபிடேகஞ்செய்க. எ-று. "பாத்யம்தத்யாத்ப்ரணவேன" = ஓங்காரத்தால் பாத்தியம் கொடுக்கவேண்டும். எறு. "அர்க்ஷ்யம்தத்யாத்வ்யாஹ்ருதிபிஃ" = வியாகிருதி மந்திரத்தால் அருக்கியம் தரவேண்டும். எறு. "நிர்மால்யம்வ்யபோஹ்யாத்ரஸோவிஷ்வக்ஸேநாயநமஇதி" = நிருமாலியத்தைக் களைந்து விஷ்வக்சேநாயநம என்று வடக்கேஇடுக. எறு. காண்க.

இதுவுமது. "ஆதேநம்ஸ்நாபயத்யாபோ ஹிஷ்டேதிதிஸ்ருபிர்ப்ரஹ்மஜஜ்ஞானம் வாமதேவ்யம்ஜபந் பவித்ரேணேத்யேதாபிஷ்டபிஃ" = "ஆபோஹிஷ்டா" = ஆபோஹிஷ்டா என்றது முதலிய மூன்று ஜலமந்திரங்களினாலும், பிரமஞானம் - வாமதேவி - பவித்திரேண - என்ற மூன்று வேதமந்திரங்களாலும் அத்தேவனை அபிடேகித்து. எ-று. காண்க.

இதுவுமது. "ஸ்நாபயித்வாத்விஸ்தர்பயதி கேஶவம்நாராயணமித்யாதிதாமோதரம்தம்" = அபிடேகித்தபின் நீரினால், "கேசவந்தர்ப்பயா

மி = " கேசவனைத்திருத்தி செய்கின்றேன். என்றது முதலாகத் தாமோதரன்வரையுமுள்ள பன்னிருமூர்த்திகளையும் பன்னிருநாம மந்திரங்களால் தருப்பித்து. எ-று. காண்க.

இதுவுமது. "தத்விஷ்ணோரிதி பரமம்பத மித்யுப்பவித்ரே" = துவைத்துச் சுத்தஞ்செய்யப்பட்ட பவித்திரத்தையும் பூணூலையும், சலத்தால் ஆசமனீயத்தையும் வியாகிருதி மந்திரத்தால் கொடுத்து, எ-று. "வ்யாஹ்ருதிபிஸ் ப்ரதக்ஷிணமுதகம் பரிஷிச்ய" = வியாஹிருதி மந்திரங்களால் சலத்தைச்சூழக்கட்டி. எறு. "இதம்விஷ்ணுர்விசக்ரமஇதிகாயந்தம்பதாத்" = "இதம்விஷ்ணு விசக்கரமே" என்ற மந்திரத்தினால் சந்தனத்தை அற்பிக்கவேண்டும். எறு. காண்க.

இதுவுமது. "தத்விஷ்ணோரிதி பரமம்பத மித்யுப்பவித்ரம்" = "விஷ்ணுப்பவித்ரம்" என்னு மந்திரத்தால் பூக்களையும். "இராவதீத்யுத்தான" = "இராவதி" என்னு மந்திரத்தால் அக்ஷதையையும். "சாவித்ர்யா தூபம்" = "சாவித்திரியா" என்னும் மந்திரத்தால் தூபத்தையும். "உத்தீப்யஸ்வேதிதீபம்" = "உத்தீப்பியஸ்வ" என்னு மந்திரத்தால் தீபத்தையும். "தேவஸ்யத்வாஸவிதுரிதிப்ரஸ வேஷ்வினோர்பாஹுப்யாம் பூஷ்ணோஹஸ்தாப்யாம் பகவதேமஹாபுருஷாயஜுஷ்டம்சருணிவேதயாமீதிநைவேத்யம்" = "தேவவஹியத்துவா" என்ற மந்திரத்தால் நைவேத்தியத்தையும் அற்பிக்கவேண்டும். எறு. காண்க.

இதுவுமது. "அதகேசவாதித்வாதச நாமபிர்த்வாதசபுஷ்பாணி சங்காய, சக்ராய, கதாயை, வனமாலாயை, ஸ்ரீவத்ஸாய, கௌஸ்துபாய, ஸ்ரியை, சரஸ்வத்யை, புஷ்ட்யை, தத்தேயசனமஇதி ப்ரத்யேகம்புஷ்பாணிசதத்வாத்." = "கேசவாய, என்றது முதலியவாக தாமோதராய என்ற வனையிலும் உள்ளமந்திரத்தால் பன்னிருமூர்த்தி கெய்வங்களுக்கும், சங்காய என்பது முதல் துஷ்டியை என்றவனையிலு முள்ளதனால் பத்து அங்க தேவதைகளுக்கும் நமஎன்னும் மந்திரபல்லவத்தோடு நாம மந்திரங்களை தனித்தனி பூக்களால் பூசிக்கவேண்டும். எ-று. காண்க.

இதுவுமது. "அவசிஷ்டைர்கந்த புஷ்பைராவாஹ்யானலங்கருத்ய" = கடவுளைப் பூசித்து மிகுந்தசந்தனம் பூக்களால் வேதியர்களை யலங்கரித்து, "அதேனமுக்ஞ்ஜாஸ்யாமோ தர்வாபிஸ்துவந் ருவஸூக்தம் ஜபித்வாபுருஷசூக்தம் சான்யாம்ஸ்சவைஷ்ணவான்மந்த்ரானித்யேகே" = பின்பு இந்தவிஷ்ணுவைவரன்

குவேதங்களாலும் துதித்து, துருவசூக்கத்தைச்செபித்து, புருட சூக்கத்தையும் இன்னும் வேறு வைஷ்ணவ மந்திரங்களையும் பாராயணஞ் செய்யவேண்டியதென்று சிலர் கூறுவர். எறு. காண்க.

இதுவுமது. "ఓంభూర్భువస్సువరోం భగవతెమహాపురుషా యచరుముద్వా సయామీతి చరుముద్వాస్యదెవంచ ఓంభూఃపురుషముద్వాసయామీత్యాదినోద్వాస్య" = முதலிலும் முடிவிலும் பிரணவமுடைய எல்லா வியாகிருதி மந்திரங்களோடும் கடவுளுக்கு அற்பித்த சருத்திரவியங்களை (எனவே நிவேதனஞ்செய்த பதார்த்தங்களை) அவ்விடத்திருந்து வெளிப்படுத்தி வைக்கின்றேன் என்று எடுத்துவிட்டுப் பின்பு பிரணவத்தோடும் ஒவ்வொரு வியாகிருதி மந்திரத்தோடும் தனித்தனியேயனும் ஒருமிக்க வேனும், "புருஷமுத்வாசயாமி" என்று அந்தேவனை அனுப்புவித்து. எறு. காண்க.

இதுவுமது. "ప్రయాతుభగవాన్హ పురుషా నెనహ విషాతృప్తాహరిరిహపున రా గమనాయచెతి ప్రతిమాదిష్టా నెషూద్వాస్యాభ్యన్వాహ్న వావాహనవిసర్జనవర్జం సర్వంస మానం" = மஹாபுருடராகிய ஹரி இந்த ஹவிசுவில் திருத்தியுற்றவராய் மீட்டும் வரும்பொருட்டும் காட்சிகொடுத்தருளும் பொருட்டும் கடவுளிருக்கைக்கு எழுந்தருளுக, என்று திருவடிவ முதலிய மூர்த்தி விம்பங்களில் உத்துவாசனஞ் செய்யவேண்டுவது சரப்பிரதிட்டை விடயம். திரப்பிரதிட்டை மூர்த்திகளிலும், சுயம்புவாகவுள்ள சாளிக்கிராம முதலியவற்றுள்ளும், சூரியன் - அக்கினி - சலம் - இவைகளிடத்திலும் பூசிக்கும் பொழுதும், வருகவென்று ஆவாகனமாயினும் போகவென்று விசர்ஜனமாயினும் செய்வது இல்லை. எனையபூசை விதியெல்லாம் எல்லாவிடங்களிலும் ஒன்றுகவிருக்கும். எறு. காண்க.

இதுவுமது. తదెతన్మహత్స్వస్త్యయ నమిత్యాచక్షతే మహత్స్వస్త్యయనమిత్యాహ భగవాన్ బొధాయనః" = இவ்வாறு பூசிப்பது சிறந்தசெல்வத்திற்கு ஏதுவாக விருக்கின்றது என்று பெரியோர் கூறுகின்றனர். பெருஞ்செல்வத்திற்கு வழியென்று பகவராகிய போதாயனர் கூறினர். எறு. காண்க.

விஷ்ணு பூசனைச்சிறப்பு.

கூர்மபுராணம். "కూర్మపురాణె॥ నఽష్ణ్వారాధనాత్పుణ్యం విద్యతెకర్మవైదికం। తస్మాద్వినాదౌమధ్యాన్హె నిత్యమారాధయెద్ధరిం। తద్విష్ణ్వారితిమంత్రెణ సూక్తెనపురు

షణతు। నైతాభ్యాం సదృశోమంత్రో వైదేషూక్తశ్చతృష్వపి" = விஷ்ணுவை ஆராதிப்பதினும் சிறந்த புண்ணியமுடைய வைதிக கருமம் யாதொன்றுமில்லை. ஆதலின் நாடோறும் இருபிறப்பாளன் காலையேயாயினும் உச்சிக்கண்ணேயாயினும் அவ்விஷ்ணுவை "தద్విష్ణోः" என்ற மந்திரத்தினாலும் புருட சூக்தத்தினாலும் ஆராதிக்கவேண்டும். இவ்விரண்டு மந்திரத்தோடு ஒத்த மந்திரம் நான்கு வேதங்களிலும் கூறப்படவில்லை. எறு. காண்க.

இவ்வாறு வைஷ்ணவ சாத்திரங்களை அனுசரித்த விஷ்ணு பூசையின் விதியையுணரத்தக்கது.

விஷ்ணுபூசைவிதி முற்றிற்று.

சிவபூசைவிதி.

கூர்மபுராணம். కూర్మపురాణే॥ శ్రీకృష్ణః॥ "ఏషదేవోమహాదేవ స్సదా సంసారభీరుభిः। ధ్యేయశ్చపూజ్యశ్చవంద్యశ్చ జ్ఞేయోలింగేమహేశ్వరः। నచలింగార్చనాత్పుణ్యం లోకేస్మిన్నస్తిపావనం" = கடவுள்எனில் இம்மஹாதேவரே கடவுள். சமுசாரத்தில் அச்சமடைந்தவர்கள் எப்பொழுதும் மஹாதேவராகிய சிவனைத் தியானித்து, பூசித்துவணங்கவேண்டும். எல்லாந்தன்வடிவாக வுடையமகேசுரன் இலிங்கோற்பவராக வெளிப்படுகின்றார். சிவலிங்க அருச்சனைக்காயினும் மிகச்சிறந்த மஹாபுண்ணிய கருமம் உலகத்துள் ஒன்றுமில்லை, எனக் கண்ணன்கூறியவாறு. எறு. காண்க.

கூர்மபுராணம் பிரமசங்கிதை. కూర్మపురాణే॥ బ్రహ్మసంహితాయాం॥ వ్యాసः॥ "అథవాదేవమీశానం భగవంతంసనాతనం। ఆరాధయేన్మహాదేవం భావపూతోమహేశ్వరం। మంత్రేణరుద్రగాయత్ర్యా ప్రణవేనాథవాపునः। ఈశానేనాథవారుద్రం త్ర్యంబకేనసమాహితः। పుష్పైర్దశపలైర్థాద్భిర్వా చందనాదైర్మహేశ్వరం। అధోన్నమస్కివాయేతి మంత్రేణానేనవాయజేత్। నమస్కృత్వామహాదేవం భావపూతోమహేశ్వరం। నివెదయాత్తచాత్మానం థియాబ్రహ్మణమీశ్వరం। ప్రదక్షిణంద్విజంకుర్యా త్పంచబ్రహ్మణివాజపెత్। ధ్యాయాతదేవమీశానం వ్యోమమధ్యగతంశివం" =வியாசர் இருடிகட்குப் பஞ்சாயதன முதலிய தேவர் பூசாகாலக்கூறிப்

பின்பு விஷ்ணுபூசையைச் சிறப்பித்து முடிவில் சிவபூசனையைக் கூறியுள்ளனர். அறுகுணச் செல்வனுகியும் பெரியோர்க்குப் பெருமானுகியும், பெருங்கடவுளாகியும், உலகத்துக்கு இறைவனுகியும், நித்தமான வுண்மைப்பொருளாகியும் இருக்கின்ற பரமேச்சுரனைப் பரிசுத்தமாகிய மனமுடையவன் அருச்சிக்கவேண்டும். ஸ்ரீஉருத்திரமந்திரம், உருத்திர காயத்திரி, பிரணவம், ஈசானசூக்தம், திரியம்பகமந்திரம், சிவசடாக்கரமந்திரம், சிவபஞ்சாக்கரமந்திரம் இவைகளுள் ஒன்றேடாயினும் எல்லாவற்றேடாயினும் அருச்சனை வேள்வியை யனுட்டிக்கவேண்டும். பத்திரபுட்பசந்தனம் திருமஞ்சனசல முதலிய பரிசுத்தப்பொருளோடு சிவலிங்கத்தைப் பூசித்து, வேதத்துட் கூறப்பட்ட ஸ்ரீஉருத்திர நமஸ்கார மந்திரங்களால் நமஸ்காரங்களைச் செய்து, இருபிறப்பாளன், சிவலிங்கத்தினை வலம்வந்து, நல்ல விவேகமாகிய ஞானத்தோடும் பூசிக்குங் தன்ஆன்மாவைப் பரப்பிரம மாகிய சிவனுக்குஅற்பித்து, பஞ்சப்பிரம மந்திரத்தைச்செபித்து, உலகை நடத்துங் கடவுளாய்ச் சிதாகாசத்தில் விளங்கிக்கொண்ருடிக்கும் சிவனைத் தியானிக்கவேண்டும். எ-று. காண்க.

கௌதமர். గౌతమః॥ "నార్మదేవాస్వయంవ్యక్తే లింగేవాపిక్రియామయే। సావర్ణేస్ఫటికాదౌచ రుద్రాక్షేపార్థివేపిచ। ఆత్మన్యగ్నౌమహాదేవం వృషభేపిసమర్చయేత్" = நருமதை இலிங்கம், சுயம்பு இலிங்கம் = தானேதோன்றியது. கிரியாலிங்கம் = பஞ்சசூத்திர சிற்பவிதிப்படி செய்த பொன்முதலிய வுலோகலிங்கம், வெண்ணிற அழுதசிலை - சந்திரகாந்தக்கல் - மரகதமுதலிய அரதனச்சிலை படிகம் முதலியவற்றுற் சமைத்த விலிங்கம், உருத்திராக்கமணி, முதலியிட்ட லிங்கங்களிலும், சுத்தமாகிய மிருத்திகையாற் செய்த பார்த்திப விலிங்கத்திலும், அக்கினி - சலம் - சூரியன் - முதலிய மஹாபூதங்களிலும், ஆன்மா முதலிய விலிங்கத்தினிடத்திலும், வேதியன் - கோ=பசுமுதலிய சரலிங்கத்திலும், அட்டமூர்த்தியாகவும், எல்லா வுயிர்களிலும் நிறைந்துள்ளவனையும் இருக்கும், உண்மை - அறிவு-இன்ப வடிவமுமாகிய பரமான்ம விலிங்கத்திலும் அச்சிவனே பூசிக்கவேண்டும். இலிங்கபூசனையின் பேதங்கள் அவரவர் ஆசிரிய சம்பிரதாயப்படி யுண்டாகின்றது. என்றது அதன் கருத்து.

போதாயனர் கூறிய சிவபூசைவிதி. பூர்வாயணம்॥ "மஹான்யாஸ ஸ்தானேன லகுன்யாஸேனவாத்விஜஃ। சதைகாதசருத்ரைகா ப்யபிஷேகபுரஸ்சரம்। அர்ச்சயேச்சம் பவைர்மந்தைர்ஸ் ப்ரத்யஹம்பரமேச்வரம்" = மஹாந்நியாச விதிப்படியாயினும், லகுந்நியாச விதியோடாயினும் சதவுருத்ர அபிடேகம், அல்லது, பதினொருவிசை உருத்ராபிடேகமாயினும் இல்லையேல் ஏகவாரம் = ஒருவிசை யுருத்ராபிடேகமாயினும் செய்து சாம்பவ மந்திரங்களால் இருபிறப்பாளன் நாடோறும் சிவனை ஆராதிக்கவேண்டும். எ-று. காண்க.

போதாயன சூத்திரம். பூர்வாயணம்॥ "அதாதோமஹாதேவஸ்யாஹரஹஃ பரிசர்யாவிதிம் வ்யாக்யாஸ்யாமஃ స్నాத్వా சுசௌதேசேగోమయேనோ పలిప్యప్రతిக్ருతం కృత్వాக్షతపుஷ்పైర்யதாலாభంసమర్చయేత్సహ పుஷ్పైరేకేనమஹாదేవమావாహయేత்" அதனால், பின்பு. மஹாதேவனை நாள்தோறும் அருச்சிக்க வேண்டிய பூசைவிதியை விரித்துக்கூறுகின்றோம். நீராடிச் சுத்தஞெய்ப் புனிதமாகிய இடத்துப் பசுவின் சாணியால் மெழுகிச் சிறந்த பீடத்தில் பூசிக்கத்தக்க மூர்த்திவடிவத்தை ஏற்படுத்திக் கொண்டு கிடைத்தமட்டில், சாந்தம், மலர், அக்ஷதை, பழ வகை, திருமஞ்சன நீர் முதலிய பூசைத்திரவியக் கருவிகளோடும் பூசிக்கவேண்டும். நீராலும் மலராலும் மஹாதேவனை ஆவாஹனஞ் செய்யவேண்டும். எ-று. காண்க.

இதுவுமது. ஓம்பூஃமஹாதேவ மாவாஹயாமி। ஓம்புவஃமஹாதேவ மாவாஹயாமி। ஓக்ம்ஸுவஃமஹாதேவமாவாஹயாமி। ஓம்பூர்புவஸ்ஸுவஃமஹாதேவமாவாஹயாமி" = என்ற இம்மந்திரங்களாலாவாஹனஞ் செய்து. "ஆயாதுభగవాన్ మహాదేవఇత్యథ స్వాగతేనాభినందతి స్వాగతమథునా భగవతేమహాదేవాయ" என்ற மந்திரத்தால் நல்வரவு = சுவாகத உபசாரஞ் செய்து, "ఏతదాసనముపక్ల్ప్త మత్రాస్యతాంభగవన్మహాదేవ ఇత్యత్రకూర్చందదాతి భగవతోయంకూర్చో దర్భమయస్త్రివృద్ధృత సువర్ణస్తంజుషస్వేతి" = இம்மந்திரத்தால் தருப்பைப்பவித்திராசனத்தை அற்பித்து. எ-று. காண்க.

இதுவுமது. "అత్రస్థానానికల్ప యత్యగ్రతోవిష్ణవెబ్రహ్మణెచదక్షిణత స్సూర్యాయవినాయకాయ చపశ్చిమతశ్శూలాయ మహాకాలాయ చూత్తరత ఉమాయైనందికేశ్వరాయ చస్థానంకల్పయామీతి కల్పయిత్వా" = சிவனுக்குமுன் விஷ்ணு பிரமன், வலப்பக்கம் கணபதி, முருகன், பின்பக்கம் சூலம் மஹா

காளர், இடப்பால் – உமாதேவியார், திருநந்தி இவ்வாறு எண் வகை யாவரணதேவர்க்கும் தனித்தனி இடங்கற்பித்து. இவ்வா வரணதேவரோ யன்றி வேறு பரிவாரமும் அவரிடமும் உள்ளன அவை யாகமத்துட் காண்க.

இதுவுமது. "అథసావిత్ర్యా చాభిమంత్ర్య ప్రక్షాళ్యత్రిరపది పవిత్రమపఆనీ య సహపవిత్రేణాదిత్యం దర్శయేదోమితిస్నానం" = சாவித்திரி மந்திரத்தால் பாத்திரஞ் சுத்திசெய்து வியாஹிருதியால் பவித்திர உதகத் தினைப் பூரித்து, பிரணவத்தினல் சூரியனுக்குக் காண்பித்து திரு மஞ்சனத்தின் பொருட்டு அக்கிராஜலத்தைத் திருத்திவைக்க வேண்டும். "పరితరుద్రేణపాద్యందద్యాత్" = உருத்திர மந்திரத்தால் பாத்தியமும். "ప్రణవేనార్ఘ్యం" = பிரணவத்தா லருக்கியமும் கொ டுத்தல் வேண்டும். எறு. காண்க.

இதுவுமது. "అథవ్యాహృతిభిర్నిర్వాప్య మపోహ్యోత్తరతశ్చండీ శాయన మఇత్యర్ధైనం స్నాపయిత్వాపోహిష్టా మయోభువఇతి సృభిర్హిరణ్యవర్ణాశ్చ చయదిపా వకా ఇతిచతసృభిః పవమానస్సువర్జన ఇత్యనువాకేన శ్రీరుద్రాధ్యాయేన చపంచరుద్రై ర్వాస్నాపయేత్" = வியாகிருதி மந்திரத்தால் நிருமாலியங் களைந்து "சண்டேடச்சுராயநம" என்றுவடதிசையிலிட்டுப்பின்பு. மூர்த்திக்கு அபிடேகம் செய்ய வேண்டும் "ఆపోహిష్టా" என்ற மூன்றுமந்திரம், "హిరణ్యవర్ణా" என்ற நான்கு மந்திரம், "పవమానస్సువ ర్జనః" என்றதொரு அனுவாகம், ஸ்ரீ உருத்திர அத்தியாயம் இரண்டு, பஞ்ச வுருத்திரங்கள் இவைகளால் அபிடேகஞ்செய் யவேண்டும். எ–று. காண்க.

இதுவுமது. "అథైనమద్భిస్తర్పయతి। భవందేవంతర్పయామి। శర్వందేవం తర్పయామి। ఈశానందేవం తర్పయామి। పశుపతిందేవంతర్పయామి। రుద్రందేవం తర్ప యామి। ఉగ్రందేవం తర్పయామి। భీమందేవం తర్పయామి। మహాంతందేవం తర్పయా మిత్యాదిభై దికమంత్రైస్తర్పయిత్వా" = கிருஷ்ண யஜுர்வேதம் கைத்தி ரீயசாகை முடிவில். அஉ–வது. பிரசினத்தில் கூறியுள்ளபடி வை திகமந்திரத்தால் அட்டமூர்த்திகளையும் திருப்பித்து. எ–று.

இதுவுமது. "అథవస్త్రయజ్ఞోపవీతా చమనీయాన్యుదకేనవ్యా హృతిభిర్ద త్వా వ్యాహృతిభిరప్రదక్షిణ ముదకంపరిషిచ్య నమస్తెరుద్రమన్యవ ఇతిగంధంపద్యాత్సహ స్రాణి సహస్రశ ఇతిపుష్పందధ్యా దీశానంత్వాభువ నానామధిశ్రియమిత్యక్షతాన్ దద్యా

త్సావిత్ర్యా ధూపముద్వీక్ష్యస్వాహేతిదీపం" = பின்பு வியாகிருதிகளால் நீரைக் கொண்டு பரிவட்ட ஆடை, பூணூல், ஆசமனம் அற்பித்து, வியா கிருதிகளால் கடவுளுக்கு நீராவலமாகப் பரிதேஜனம் செய்து "நமஸ்தேருத்ர மன்யவே" என்ற மந்திரத்தால் சந் தனச்சாத்தும், "சஹஸ்ராணி சஹஸ்ரசஃ" என்ற மந்திரத்தால் மலரும், "ஈசானஸ்துவா" என்ற மந்திரத்தால் அக்ஷதையும், சாவித்திரி மந்திரத்தால் தூபமும், "உத்தீப்யஸ்வ" என்ற மந்திரத்தால் தீபமும் அற்பிக்கவேண்டும். எ-று. காண்க.

இதுவுமது. "దేవస్యత్వాసవితుఃప్రసవెశ్వినోర్బాహుభ్యాంపూష్ణోహస్తా భ్యాంభగవతెమహాదేవా యజుష్టంచరుంనివె దయామీత్యైవెద్యం" = இம்மந்திரத் தால் நைவேதனத்தைச் செய்யவேண்டும். "అథాష్టభిర్నామభిఃఅ ష్టాపుష్పాణిదద్యాత్" = భవాయదేవాయనమః என்றிவ்வாறு மேல் சொல் பணத்துட் கூறிய வைதிகமந்திரங்களால் அட்டபுட்பம் சாத்தி "వష్ణవెనమఇత్యాదినాం గదెవెభ్యశ్చ"=ష్ణవెనమः। బ్రహ్మణెనమः। என்றிவ்வாறு அங்கதேவதைகட்கும் பூசைசெய்து. எ-று. காண்க.

இதுவுமது. "చరుశెషెణాష్టభిర్నామభిర్మధ్యెయెరష్టావాహుతీర్జుహోతి। భవా యదెవాయస్వాహెత్యాదినాహుత్వా వశిష్టెర్గంధమాల్యైరభ్యర్చ్య హ్లాణాన్వృషభంధనుం సవత్సాంచాలం కృత్వా ధెనమృగ్యజుస్సామ భిస్తువంతిసహస్రిణిసహస్రశ ఇత్యనువాకం జపిత్వాన్యాంశ్చ రాద్రాన్మంత్రాన్యథాశక్తి జపిత్వా" = மேற்கூறிய வைதிக அட்ட நாமங்களால் சருசேடத்தை "భవాయదెవాయస్వాహా" என்று எட்டுஹோமங்களைச்செய்து, சிவபூசைச் சேடமாகிய சந்தனம் மலர்களால் வேதியர்களையும், இடபம் பசுக்களையும் அலங்க ரித்து, மூன்று வேதங்களாலும் "సహస్రాణి సహస్రశः" என்ற அநுவாகத்திலும் மற்றுமுள்ள உருத்ர மந்திரங்க ளாலும் தனக்குச் சக்தியுள்ளவரையில் செபம் பாராயணம் தோத்திரம் செய்து, எ-று. காண்க.

இதுவுமது. "ఓంభూర్భువస్సువరోం మహాదెవాయచరుముద్వాస యామీతిచరుముద్వాస్య ఉద్వాసనకాలె ఓంభూఃమహాదెవ ముద్వాసయామీతి ప్రతిమంత్రం రుద్రముద్వాస్య। ప్రయాతుభగవానీశ సర్వ్వలొకనమస్కృతః। అనెనహవిషాతృప్త్య పునరాగమనాయచ, పునస్సందర్శనాయచెతి, ప్రతిమాదిష్వానెష్వప్యెవమెవాహ్వానవిసర్జ న వర్జమన్యత్సర్వ్వం సమానం" = இம்மந்திரங்களால் சருவையெடுத்து

வைத்து கடவுளை யெழுந்தருளச் செய்யவேண்டும். நருமதை யிலிங்கம், சுயம்புலிங்கம், அக்கினி, நீர், ஸ்திரப் பிரதிட்டை செய்த மூர்த்தி விம்பங்கள் முதலியவற்றுள் ஆவாஹனம் விசர்ச்சனம் கூடாது. ஏனையவற்றிற் கெல்லாம் ஒத்தபடியே. எ – று. காண்க.

இதுவுமது. "తచ్చైతన్యమహత్త్వస్య యనమిత్యా చక్షుతెమహత్త్వస్య యనమిత్యాహ భగవాఁబోధాయనः" = இந்தச்சிவபூசைச் சிறந்த திருவுடைமைக்குவழியாகவிருக்கின்றது, என்றுபெரியர்கூறுகின்றனர். பெருஞ் செல்வத்திற்கு வழியென்று போதாயனர் கூறினர். எ-று. காண்க. (விஷ்ணு பூசைக்கும் சிவ பூசைக்கும் போதாயன சூத்திரம் ஒரே வகையாக விருக்கின்றது. ஆனல் சிலமந்திரங்களும் அங்கதேவதைகளுமாத்திரமே வேறுபாடாக விருக்கின்றது. விஷ்ணு பூசையில் பொருள்விளங்கக் கூறினமாதலின் சிவபூசையில் அந்தவாக்கியங்களுக்கு உரைசுருக்கிச் கூறினும்).

சிவபூசைச்சிறப்பு.

"యద్బ్రాహ్మణెభ్యో న్నందదాతి" என்ற சுருதியாலும், "అహరహ ర్బ్రాహ్మణెభ్యో న్నందద్యాత్" என்ற மிருதியாலும் எடுத்துக்கூறப்படுத லின் அரசன் முதலியோர் விடயத்திலாயினே? அந்தணன் மனை யில் விருந்து உபசரித்தலைப் பெறுதற்குத் தக்கவரல்லர். உணவு மாத்திரம் பெறலாம் என்று மனுகூறினர். மநுः॥ "బ్రాహ్మణస్యత్వనతిథి ర్గృహెరాజన్యఉచ్యతె। వైశ్యశూద్రౌసఖాచైవ జ్ఞాతయోగురురెవచ। యదిత్వతిథిధర్మెణ క్షత్రియోగృహమావ్రజెత్। భుక్తవత్సుచవిశ్రెషుకామంతమపిభోజయెత్। వైశ్యశూద్రావ పిప్రాప్తౌ కుటుంబెతిథిధర్మణౌ। భోజయెత్సహభృత్యైస్తౌ వానృశంస్యం ప్రకల్పయెత్। ఇతరానపిసఖ్యాదీ న్సంప్రీత్యాగృహమాగతాన్। సత్కృత్యాన్నంయథాశక్తి భోజయెత్స హభార్యయా" = அந்தணன்மனைக்கு வந்த அரசன் அதிதியல்லன், வைசியன், சூத்திரன், நண்பினன், ஞாதி, ஆசிரியன், சுற்றத்தினர் இவர்களுள் யார்வரினும் அதிதியல்லர். அரசன் அதிதி தருமத் தோடு வேதியன் மனைக்குவந்தால் வேதியர் உண்டபின்பு அந்த க்ஷத்திரியனை நன்முக உணவா லுபசரிக்கவேண்டும். அதிதிதரும முண்டாய் வைசிய சூத்திரர் வந்தார்களாயின், தன் பரிசனங்க ளோடு அவர்களை யுண்பிக்கவேண்டும். ஏனைய நட்பினர் மூத லியோர் நண்பினுல் இல்லத்திற்கு வந்தால் மனைவியோடும் அவர் களைச் சத்தியுள்ளவனையில் உபசரித்துஉண்பிக்கவேண்டும். எ-று. காண்க.

ஆசன முதலியன வுதவி யுபசரிப்பதிலுள்ள சிலவிசே டங்களை மனுகூறினர். மநுः॥ "ఆసనావసథైశ్శయ్యా మనువ్రజ్యాముపాసనం। ఉత్తమెషూత్తమంకుర్యా ద్హీనెహీనంసమెసమం" = ஆசனம், உறையுள், படுக் கை, பின்போதல், உபசரித்தல், இவைகளை யுத்தமர் விடயத் தில் உத்தமமாயும், தாழ்ந்தவர்கட்குத் தாழ்வாயும், ஒத்தவர்க்கு ஒத்தபடியாயும் செய்யவேண்டும். எறு. காண்க. (சஙஅ) (சசஅ)

விருந்துபசரியாவழி வருங்குற்றம்.

மூ॥ அதிதிர்யஸ்யభగ్నాశో గృహాత్ప్ర తినివర్తతె
పితరస్తస్యనాశ్నంతి దశవర్షాణిపంచచ. ॥రశ4॥

కాష్ఠభారసహస్రేణ ఘృతకుంభశతెనచ
అతిథిర్యస్యభగ్నాశ స్తస్యహోమోనిరర్థకః ॥రశ5॥

என்பன. அதிதியை யுபசரியாவிடின் வருங்குற்றத்தைக் கூறுகின்றன.

(இ-ள்). விருந்தினன் யார் மனையிலிருந்து ஆசைகெட்டவுப்ப் பின்னுக்குத் திரும்புகின்றானே? அந்த மனையிலிருக்கிற இல்லறத்தானுடைய பிதிரர்கள், அவன் அன்னத்தைப் பத்து வருடம், அல்லது அதன்மேலும் ஐந்துவருடம் வரையில் புசிப்பதில்லை. (எனவே அவன்செய்கிற தென்புலத்தார் கடன் பதினைந்துவருடம் வீணாய்விடும்). மேலும் யாரிடத்துவந்த அதிதி ஆசைகெடடவனுப்ப் போகின்றானே? அவன் ஆயிரம் சுமை கட்டைகளையும், நூறுகுடம் நெய்யையும் கொண்டு செய்த ஹோமமும் வீணாய்விடும். எறு. காண்க.

நான் இவன் மனையில் புசிப்பேன் என்னும் விருப்பத்தோடு வந்த அதிதி உண்டியைப்பெறுமல் அந்தமனையிலிருந்து பின்னுக்குத்திரும்பிச் செல்வானுயின் அம்மனைத்தலைவனுற் செய்யப்படுகின்ற பிதிர்கருமங்கட்குப் பயனில்லையாய் முடியும். அவ்வாறே தேவர்களைக் குறித்துச் செய்யப்படுகின்ற ஹோமமும் தகுதியான திரவியங்களோடு சாங்கமாகமுறைப்படி செய்து முற்றியதா மாயினும் வீணாய்விடும். அங்ஙனம் மனுகூறினர். మనుః॥ "శిలోంఛాచరతోనిత్యం పంచాగ్నినపిజుహ్వతః। సర్వంసుకృతమాదత్తె బ్రాహ్మణోనష్టతోవసె" = சில விருத்தி, உஞ்சவிருத்திகளைச் செய்பவனும், நாடோறும் ஐவகைத்தீயினையும் வேட்டல்செய்பவனையும் உள்ள தலைவனுடைய புண்ணியங்களெல்லாவற்றையும், அதிதியாக வந்திருந்து உபசரிக்கப்படாத வேதியன்கொண்டுபோகின்றன். எறு. காண்க. (கடோபநிஷத்து. கூ-ம். வல்லி. "పంచాగ్నయః" என்ற மொழிக்கு சங்கரபாஷியத்தின் உளையாகிய ஆனந்கிரீயத்துள் கூறப்பட்டுள்ளதாவது, காருகபத்தியம், தக்ஷிணைக்

கினியம், ஆஹவநீயம், சப்பியம், அவசத்தியம், என்ற பெயர்களை யுடைய ஐந்துதீ, யாருக்குள்ளதோ அவர்கள் பஞ்சாக்கினியர் என்னப்படுவர். அன்றியும், "ద్యౌः" = ஆகாயம். "పర్జన్యः" = மழை பெய்விக்கும் தெய்வம், "పృథివీ" = மண், "పురుషः" = ஆண்மகன், "యోషిత్" =மாது, இவ்வைந்தினிடத்து மேற்கூறிய ஐந்துதியின் பாவனையோடு தியானஉபாசனைசெய்கின்றவேள்வித் தீத்தொழில்தலைவர்களும் பஞ்சாக்கினியரென்று கூறப்படுகின்றனர். என்றவாறு. அல்லதூஉம். சாந்தோக்கியஉபநிடதம். நி-வது. பிரபாடகத்துள், பஞ்சாக்கிநி உபாசனை விரித்துக் கூறப்பட்டுள்ளது. அதுவுமன்றி, மனு ந-வது, அத்தியாயத்து, குல்லூகபட்டீயவுரையில் மேற்கூறிப்போந்த பஞ்சாக்கிநிகளையே கூறி, குளிர் போக்கடித்துக் கொள்வதுமுதலிய பயன்பொருட்டு வகுத்துக் கொண்டிருக்கும் தீக்கு; சப்பிய மென்று பெயர் என்று கூறப் பட்டுள்ளது. இம்மனு மிருதிவாக்கியத்தின் பொருள் இங்ஙனங் கொள்ளவறியாத சிலர். அதன் உளைகளை நோக்காது, "పంచా ఽగ్నినపిజుహ్వతుः" = என்றவாக்கியத்திற்கு, "பஞ்சாக்கிநிமத்தியில் தவம் பண்ணிலுலும்" என்றுபொருள் கூறுகின்றனர். அது வேறுவிடயம். இவ்விடத்திற் பொருந்தாது. மந்திரசாத்திரத்துள் அடயோகத்திலுள்ளும் புராணங்களினுள்ளும் காண்க. யோக பாதஞ்சல. சூத்திரத்து வியாச பாடியத்து வாஜஸ்பதிவியாக் கியானத்துள் அதனை விரித்துக் கூறுதலுங்காண்க.

அசுவமேதத் துள்ளும். ఆశ్వమేధికేపి॥ "సాంగోపాంగాం స్తథావేదా న్పఠతీహదివిసేదిసె। నచాతిథింపూజయతి వృథాసపఠతిద్విజः। పాకయజ్ఞైర్మహాయజ్ఞైస్సా మసంస్థాభిరేవచ। యెయజంతినచార్చంతి గృహేష్వతిథిమాగతం। తెషాంయశోభికామా నాం దత్తమిష్టంచయద్భవెత్। వృథాభవతితత్సర్వమాశయాహతయాహతం" = சாங் கமாகவேதங்களை யோதினாலும் அதிதிபூசை செய்யாவிடின் அவ்வேதல்வீணும். வேள்விகள் செய்தாலும் அதிதியைப்பூசி யாவிடின் செய்தவேள்விவீண். என்றதுகருத்து.

இவ்விடத்து, புண்ணியம் நாசமாகின்றது என்றபொருளினையுடைய வியர்த்தமென்னு மொழி பாவம் வருகின்றதென்னும் பொருளையும் இலக்கணையாற்றருகின்றது. அங்ஙனம் விஷ்ணு கூறினர், ఇష్ణుः॥ "అతిథిర్యస్యభగ్నాశొ గృహాత్ప్రతినివర్తతె। తస్మైదుష్కృతమాదా

ய தமபூ்ருத்ஂதுப்ரயச்ச்தி ” = யார் வீட்டிலிருந்து அதிதி ஆசை விட்டவுடனேயே பின்னுக்குத் திரும்புகின்றானே? அந்த அதிதி அம்மனைத் தலைவனாகிய இல்லறத்தானது புண்ணியங்களைப் பறித்துக்கொண்டு தன் பாவத்தை யவனுக்குக் கொடுத்து விட்டுப் போகின்றான். என்று. காண்க.

அசுவமேதபர்வம். அச்வமெதபர்வணி॥ “ வைச்வதெவாந்திகெப்ராப்த மதிதிம் யொனபூஜயெத்। சண்டாலத்வமாப்நொதி சத்யொவிவனசம்சயஃ। நிர்வாஸயதியொவிப்ரம் தெசகாலாகதங்க்ருஹாத்। பதிதச்தச்ய தாதெவ ஜாயதெனாத்ரசம்சயஃ ” = வைசுவதேவம்முடிவாகும் சமயத்தில் வந்த அதிதியை யார் பூசிப்பதில்லையோ? அவன் அப்பொழுதே சண்டாளனாய் விடுகின்றான். இதிலையமில்லை. தேசகாலத்திற்குச்சரியாக உண்டி வேட்டுவந்த வேதியனை மனையிலிருந்து புறம்பே யார் துரத்திவிடுகின்றானே? அப்பொழுதே அவன் பதிதனாகின்றான் சந்தேகமில்லை. என்று. காண்க. (சகூ)

விருந்தோம்பலின் சிறப்பு.

மூ॥ சுக்ஷெத்ரெவாபயெத்பீஜம் சுபாத்ரெநிக்ஷிபெத்தனம்
சுக்ஷெத்ரெசசுபாத்ரெச ஹ்யுப்தம்சன்னவினச்யதி. ॥४८५॥

என்பது. விருந்தோம்பலின் சிறப்பினைத்தொகுத்துக் கூறுகின்றது.

(இ-ள்) நல்ல நிலத்து விதையை விதைக்கவேண்டும். நல்லவனுக்குப் பொருளைக் கொடுக்கவேண்டும். அங்ஙனம் வித்தியதும் கொடுத்ததும் கெடுவதில்லை. என்று. காண்க.

இங்ஙனம், நல்லநிலத்து விதைத்தவித்து, கெடாது பெரும் பயனைத்தருவதுபோல நல்லோனாகிய விருந்தினனுக்குக்கொடுக்கப்பட்ட அந்நம், நீர்முதலிய தானம் நல்லபயனைத் தரும் என்பது கருத்து. அங்ஙனம் மனுவுங் கூறினர். மநுஃ॥ “ நைவச்வயம்த தாத்ம்னியா தமதிம்சைவபூஜயெத்। தன்யம்யச்யமாயுஷ்யம்ச்வர்க்யம்சாதிதிபூஜனம் ” தானொருவனுகவே யிருந்துண்ணலாகாது. வந்த விருந்தினைபுண்பிக்கவேண்டும். விருந்தோம்புதல், பிறந்தபயன், புகழ், ஆயுள், சுவர்க்கம் இவைகளைத் தருகின்றது. என்று. காண்க. ஓம்புதல்= உபசரித்தல். “ மண்ணின்மேற்பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்,

அண்ணலாரடியார் தமக்கமுதுசெய்வித்தல்" என்ற ஆளுடைய பிள்ளையார் புராணமுமது. "செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா, னல்விருந்து வானத்தவர்க்கு." என்பதுமது.

அசுவமேதம். ఆశ్వమెధికే॥ "పాదాభ్యంగాంబుదానైస్తు యోతిథింపూజ యెన్నరః। పూజితస్తైనరాజెంద్ర భవామీహానసంశయః" = யாவன்? விருந்தினைக் கால்வருடி யெண்ணெய்பூசி நீர்சொரிந்து, சோறுநீரைக் கொடுத்தலினல் உபசரிக்கின்றிலை? அவனல் நானே பூசிக்கப் பட்டவனேவன் இதில் ஐயமில்லை எனப்பகவர்கூறினர். எ-று. காண்க.

சாதாதபர். ఆతాతపః॥ "స్వాధ్యాయెనాగ్నిహోత్రెణ యజ్ఞెనతపసాత థా। నచాప్నొతిగృహీలొకా న్యథాత్వతిథిపూజనాత్" = இல்லறத்தான் விருந் தோம்புதலினல் எவ்வாறு புண்ணிய வுலகத்தினைப்பெறுவானே? அவ்வாறு, அத்தியயனத்தினலாயினும், வேள்வியா லாயினும், அக்கினி ஹோமத்தினலாயினும், தவத்தாலாயினும் அடைவ தில்லை. எ-று. காண்க. (கூஎ)

మూ॥ నపృచ్ఛెద్గొత్రచరణె నస్వాధ్యాయంశ్రుతంతథా
హృదయెకల్పయెద్దెవం సర్వదెవమయొహిసః॥ ॥౨౫౫॥

என்பது, விருந்தோம்புந் தலைவனெழுக்கத்தைக் கூறு கின்றது.

(இ-ள்.) வந்தவிருந்தினனுடைய கோத்திரத்தையும், ஒழுக் கத்தையும், வேதசாகையையும், கற்ற நூலையும், ஊரையும், பெயர் முதலியவற்றினையும் வினவலாகாது - அவனையே தெய்வ மென்றுகொள்ளவேண்டும். ஏனெனில்? எந்தக்காரணத்தினல்அந் தவிருந்தினன் எல்லாத்தேவர் வடிவாயு மிருக்கின்றனே? என வேதேவரனைவரும் இல்லறத்தானுக் கருள்செய்யும்படி விருந்து வடிவமாய் வருகின்றார்க ளாதலால் நீர் யாரென அவனைவினவ லாகாது. எ-று, காண்க.

சிராத்தமாகிய தென்புலத்தார் கருமத்தன்றே? முதற் கண்ணே வேதியனை ஆராய்ந்து கொள்ளவேண்டுமென்று மனு கூறினர். మనుః॥ "దూరాదెవపరీక్షెత బ్రాహ్మణంవెదపారగం। తీర్థంతద్ధవ్యకవ్యా నాం ప్రదానెసొతిథిస్తృతః" = அந்தணனைத் தூரத்தேதானே சோதிக்க

வேண்டும். வேதத்தைமுற்றும் ஓதினவனுயிருந்தால் அவ்விய கவ்வியங்களைக் கொடுக்கும் விடயத்தில் அந்த அந்தணன் சுத்த மாகிய அதிதியாக விருக்கின்றுன். எ-று. காண்க.

இயமன். యమః॥ "పూర్వమేవపరీక్షేత బ్రాహ్మణాన్వేదపారగాన్। శరీర ప్రభవైర్యైస్తై ర్విశుద్ధాంశ్చరితవ్రతాన్" = சிராத்தத்தின் பொருட்டு அந் தணனைக் கொள்வோன், முற்றுமாகிய வேதாத்தியயனம், அங்கப்பழு தின்றிச் சுத்தனு யிருத்தல், விரதசீலம் உண்டா யிருத்தல், என்னு மிந்தக் குணங்களை யுடையவராய்த்தேடி முன் பாகவே ஆராய்ந்து கொள்ளவேண்டும். எ-று. காண்க.

சிராத்த விடயத்தில் வேதியனைச் சோதிக்க வேண்டுமென்ற விதியைப்பற்றி விருந்தாகவந்தவனையும் குலங் கோத்திர முதலிய ஆராய்தல் செய்யலாமன்ரே வெனின்? அஃதொழிக்கப்படுகின் றது. கோத்திரம்=மரபை விளக்கஞ்செய்த மஹாவிருடி சம்பந் தம். சரணம் = ஒழுக்கம். சுவாத்தியாயம் = வேதசாகை விசே டம். சுருதம்=வியாகரணம், மீமாம்ஸம் முதலிய "తథాः" என்ற அவ்வியயம், இடம், பெயர். தொழில் முதலியவற்றை யுபலக்க ணத்தாலுணர்த்துகின்றது. இவ்விடயங்களெல்லாம் விஞவலா கா தென்பது கருத்து.

அதனனே இயமன் கூறினர். యమః॥ "నపృచ్ఛేద్గోత్రచరణం దేశం నామకులంశ్రుతం। అధ్వనోప్యాగతంవిప్రం భోజనార్థముపస్థితం" = வழிநடந்து வந்து உண்டியின்பொருட்டு நேர்ந்த வேதியனைக் குறித்து உன் கோத்திரம், ஒழுக்கம், தேயம், பெயர், மரபு, கல்வி என்னை? என்று விஞவலாகாது. எ-று. காண்க.

கோத்திர முதலியவற்றை விஞவலாகாது என்ற அளவே யல்ல. அதிதியினிடத்து, தேவபாவனையையும் செய்யவேண்டும். அங்ஙனம் சாதாதபரால் கூறப்பட்டது. శాతాతపः॥ "చిత్రైషాభావయేత్ స్మ్యాస్యసంస్వయనుపాగతం" = வியாசர்தாமே எழுந்தருளினர் என்று அந்த அதிதியைத்தான் தன்மனத்துள் எண்ணவேண்டும். எ-று. காண்க.

விஷ்ணுபுராணத் துள்ளும். విష్ణుపురాణేపి॥ "స్వాధ్యాయగోత్ర చర ణ మపృష్ట్వాచతథాకులం। హిరణ్యగర్భబుధ్యాతం మన్యేతాభ్యాగతంగృహీ" = இல்

லறத்தான் தன்மனைக்குவந்த அதிதியைக் குறித்து, கோத்திரம், ஒழுக்கம், வேதாத்தியயனம், குடி, பெயர் வினவாமல் இவனே பிரமதேவன் என்று, உணரவேண்டும். எ-று. காண்க.

தேவர்களே இவர்என்று அறிந்து கொள்வதற்குக் காரண மென்னெனில்? விருந்தினன் எல்லாத்தேவர் வடிவமுமாமாறு புராணசாரத்துள் கூறப்பட்டது. పురాణసారే॥ "తథా ప్రజాపతిశ్చక్రో వహ్నిర్వసుగణోయమః। ప్రవిశ్యాతిథిమేవైతె భుంజతెన్మంద్విజోత్తమ"=பிரஜாபதி, இந்திரன், அக்கினி, வசுகணம், இயமன், இந்தத்தேவர் விருந்தினருட் பிரவேசித்து அந்நத்தைப் புசிக்கின்றனர். எறு. காண்க.

கோத்திரமுதலியவற்றை வினவினால் பயனில்லை யென்று போதாயனராற் கூறப்பட்டது. బొధాయనః॥ "దెశంనామ కులంపద్యాం పృష్ట్వాయోన్నం ప్రయచ్ఛతి। నసతత్ఫలమాప్నొతి దత్వాస్వర్గంతుగచ్ఛతి"= தேயம், பெயர், மரபு, கல்வி, இவற்றுள் யாதானு மொன்றினையேனும் வினவி யார் சோறிடுகின்றூரே? அவன் அவ்வந்நதான்பயனை யடைவதில்லை, வினவாது ஊட்டிச்சுவர்க்கம் புகுகின்றூன். எறு. காண்க.

விருந்தோம்புதலாகிய வேள்விசெய்யு மில்லறத்தான் அவ் விருந்தினனைக் குடிமுதலியன வெவ்வாறு வினவலாகாதோ அவ்வாறே, அதிதியும் தன்வரலாற்றினையும் கூறலாகாது. என மனு கூறினர். మనుః॥ "నభొజనార్థంస్వెవిప్రఠ కులగొత్రెనివెదయెత్। భొజనార్థంహితెసంస నాఖ్యంతాశీత్యుచ్యతెబుధైః"= வேதியன் உணவின் பொருட்டுத் தன் குடிமரபு முதலியவற்றைக் கூறலாகாது. உண்டியின் பொருட்டுத் தன் குடிமரபு முதலியவற்றைக்கூறினவன், கான்ற சோற்றையுண்டவன் ஆவன் என்று அறிவுடையோராற் கூறப்படுகின்றூன். எறு. காண்க. கான்றல்=கக்கல்=வாந்திசெய்தல். (சுஅஉ)

பிரமசாரியன், சந்நியாசிவிடயம்.

మూ॥ అపూర్వాస్సువ్రతీవిప్రొ హ్యపూర్వశ్చాతిథిస్తథా
వెదాభ్యాసరతొనిత్యం త్రయగ్నిపూజ్యాదినెదినె. ॥౪౬॥

என்பது. விருந்தினைக் கூறுமுகத்தாலின்னும் பிச்சைபுக்க சந்நியாசிக்கும் பிரமசாரிக்கும் உபசரித்தலையும் கூறுகின்றது.

(இ-ள்). சந்நியாச விரதமுடையவனும், விருந்தினனும், வேதமோதும் பிரமசாரியும், ஆகிய இம்மூவரும் நாடோறும் பூசிக்கத்தக்கவர். இவருள், சந்நியாசியும் பிரமசாரியும் தினந்தினம் வருபவராயினும் முன்வந்தவரல்லராம். எனவே அவர் நித்தம்வரினும் பிச்சையிடத்தக்கது. ஒருதினம்வந்த விருந்தினன் மறுதினமும்வந்தால் அவனுக்கு விருந்தினர்க்குச்செய்யும் உபசாரவிசேடம் செல்லாது என்றகருத்து. எறு.

"సువ్రతీ" = முத்திக்கு ஏதுவாகிய நல்ல தருமமுடையவன். எனவே சந்நியாசி என்பதுகருத்து. சந்நியாசி=துறவி=நீத்தோன். "వేదాభ్యాసరతః" என்பது. வேதமோதுதலின்பொருட்டே பிரமசரிய நிலைமையாதலின் பிரமசாரி எனப்பொருள்படுகின்றது. இவ்விருவரும், "అభూత్వా" = முன் வந்தவராகார். எனவே புதியரோ டொப்பப்பூசிக்கத்தக்கவர் என்பதுகருத்து. அதிதி=விருந்து=புதியர், ஒருபொருட்கிளவி. அங்ஙனம் யாஞ்ஞவல்கியரும் கூறினர். యాజ్ఞవల్క్యః॥ "సత్కృత్యభిక్షవేభిక్షాం దాతవ్యా సువ్రతాయచ" =முற்றத்துறந்தோனுக்கும், பிரமசரியனுக்கும் உபசாரஞ்செய்து பிச்சையிடவேண்டும். எறு. காண்க.

நரசிங்கபுராணம். నృసింహపురాణే॥ "భిక్షాంచభిక్షవేదద్యా త్పరివ్రాడ్బ్రహ్మచారిణే। అకల్పితాన్నాదుద్ధృత్య సర్వవ్యంజనసంయుతాం" = பிச்சைக்குவந்த நீத்தோனுக்கும் பிரமசாரிக்கும் கற்பிக்கப்படாத அந்நத்திருந்து எடுத்து, (எனவே, பிறருண்ட சேடமல்லாதனன்க. அல்லது, பிறர்பொருட்டு எடுத்து வையாதசோற்றிற் சிறிதெடுத்து-எ-று). செய்யப்பட்டுள்ள கறிவகை முதலியவற்றோடும் பிச்சையிடவேண்டும். எ-று. காண்க.

மனு. మనుః॥ "భిక్షాంచభిక్షవేదద్యా ద్విధివద్బ్రహ్మచారిణే। యత్పుణ్యఫలమాప్నోతి గాందత్వావిధివద్గురోః। తత్పుణ్యంసమవాప్నోతి భిక్షాందత్వాద్విజోగృహీ" = இல்லறத்தானகிய விருபிறப்பாளன், துறவிக்கும் பிரமசாரிக்கும் விதிப்படி பிச்சையிடவேண்டும். அவ்வாறு கொடுத்தவன் தன்குரியனுக்கு விதிப்படி கோதானஞ் செய்த பயனையடைவன். எ-று. காண்க.

இயமன். యమః॥ "సృత్కృత్యభిక్షవేభిక్షాం యదిప్రయచ్ఛతిమానవః। గోప్రదానసమంపుణ్యం తస్యాహభగవాన్యమః" = பிச்சைக்கு வந்தவனுக்கு பா

வன்? பிச்சையிடுகின்றுனே? அவனுக்குக் கோதான புண்ணியத்தோடொத்த புண்ணியம் வருமென்று பகவராகிய வியமன் கூறினர். எ-று. காண்க.

பிச்சைபுக்க பிரமசரியனைப் பற்றி "స్వస్తి" = సు = நன்று அస్తి = உள்ளது. நன்மையுண்டு. எனவே. சுகமுண்டாக என்று கூறி அவன்கையில் சலம் விட்டுப் பின்பு பிச்சையிடவேண்டும். அங்ஙனம் கௌதமர் கூறினர். గౌతమः॥ "స్వస్తీతివాచ్యం భిక్షాదానమపూర్వం" = சுவஸ்தி என்று கூறவேண்டுவது. அதற்குமுன் பிச்சையிடலாகாது. எ-று. காண்க. (இவையெல்லாம் வைசுவதேவகருமமுற்றிய பின்வந்த துறவி பிரமசரியனைப்பற்றிக் கூறியது. எனக்கொள்க).

(சகஉ)

మూ॥ వైశ్వదెవెతుసంప్రాప్తె భిక్షుకెగృహమాగతె
ఉద్ధృత్యవైశ్వదెవార్థం భిక్షుకంతుసమర్పయెత్. ॥౫౦॥

என்பது, வைசுவ தேவத்திற்கு முன்வந்த துறவிக்கும்பிரமசரியனுக்கும் செய்வகை கூறுகின்றது.

(இ-ள்). வைசுவதேவஞ் செய்யும்பொழுது (எனவேசெய்வதற்கு முன்பு) பிச்சைபுகுவோன் மனைக்குவந்தால் அந்நத்தில் வைசுவ தேவபாகத்தை யெடுத்து வைத்து, மற்றப்பாகத்துள் பிச்சையிட்டு அவனையனுப்பவேண்டும். எ-று. காண்க. "సంప్రాప్తె" = ప్రాప్తె = செய்பொழுது.

நரசிங்க புராணம். నృసింహపురాణె॥ "అకృతెవైశ్వదెవెతు భిక్షుకెగృహమాగతె" = வைசுவதேவஞ் செய்வதற்குமுன் பிச்சை புகுவோன் மனைக்கு வந்தால். எ-று. காண்க. "భిక్షుకంతువిసృజెత్" = வைசுவ தேவத்துக்கு எவ்வளவு அன்னம் வேண்டுவதோ? அவ்வளவு அந்நத்தை வேறெடுத்து வைத்து மிக்கதனுள் பிச்சையிட்டுப் பின் பிச்சைபுக்கவனை யனுப்பவேண்டுவது. எ-று. இது பாராசர மூலவசனம்.

பிச்சை யிடாவிடிற் பாவம். என்பதனை மனு கூறினர். మనుः॥ "యతిశ్చబ్రహ్మచారీచ పక్వాన్నస్వామినావుభౌ। తయోరన్నమదత్వాతు భుక్త్వాచాంద్రాయణంచరెత్" = இல்லறத்தான் மனையில் அன்னம் பாக

மானவுடனே சந்நியாசியும் பிரமசாரியும் அதனுரிமை யுடையவர்களாயிருக்கின்றார்கள். அவ்விருவர்க்கும் அன்னமிடாது புசித்தால் சாந்திராயண விரதஞ் செய்யவேண்டும். எ - று. காண்க. சாந்திராயண விரத விலக்கணம் மேற்பிராயச் சித்தத்துட் கூறுதும். ஈண்டு சாந்திராயண விரதமென்னும் பிராயச்சித்தங் கூறிற்றிருத்தலின் அதற்குக் காரணமாகிய பாவம் வெளிப்படுகின்றது. பக்குவப்பட்ட அன்னம் அவர்களது உடைமையாதலால் அவர்களுக்குக் கொடாவிட்டால் பாவம் வருதல் முறைமையேயாம். (“భుక్త్వా” = உண்டால் என்றதனால், பிச்சையிடாதவன் தான் புசியாதுவிடிற் பாவமில்லை யென்பது கருத்தாக வெளிப்படுகின்றது. பிச்சையிடாத பச்சாத்தாபத்தால் பட்டினி கிடந்தவனுக்குப் பாவமில்லை யெனச் சிலர் கூறுவர். பிச்சையிட அநுகூலித் திருந்தும் இடாவிட்டால் எவ்வகையாலும் பாவமே என மற்றுஞ் சிலர் கூறுவர். உண்ணுவிட்டால் பச்சாத்தாபமும் உபவாசமும் பிராயச்சித்தமாக விருக்கின்றது. உண்டு விட்டால் சாந்திராயணம் கூறியே யுள்ளது. பிச்சையிடாமையால் நேர்ந்தபாவம் பிராயச்சித்தமின்றி நீங்காதென்பது தருமமுடிபு).

புராணம். పురాణే॥ “అహుత్వాగ్నిమసంతర్ప్య తపస్వినమపస్థితం। అశిత్వా తుపరేలోకే స్వానిమాంసానిఖాదతి” = ஹோமஞ் செய்யாதும், அன்னம் வேண்டிவந்த துதவிய தபசியைத் திருத்திசெய்யாமலும் உண்டவன்மறுமையில் தன்னுடம்பிற் றசையைத்தானே யருந்துவன். எறு. காண்க. (நo2)

మూ॥ దద్యాచ్ఛభిక్షాత్రితయం పరివ్రాడ్బ్రహ్మచారిణాం
ఇచ్ఛయాచతతోఽదాన్ని ర్విభవేసత్యవారితం. ॥౪౧॥

என்பது, பிச்சைக்குப் பலர்வந்த வழிச்சத்தியில்லாத இல்லறத்தான் செய்வகை கூறுகின்றது.

(இள்). நீத்தோருக்கும் பிரமசாரிக்கும் மூன்று பிச்சையிடவேண்டும், உணர்ந்தவன் சத்தியிருக்குமாயின் இச்சித்தவண்ணம் விசேடமாகவுஞ்செய்யலாம். அதிகம் பிச்சை யிடுவதை விலக்குவதில்லை. எறு.

சத்தியுள்ளவனாயில் பிச்சையிடலாமென்று கூர்மபுராணத்துட் கூறப்பட்டது. కూర్మపురాణే॥ “భిక్షాంవైభిక్షవేదద్యా ద్ద్విధివద్బ్రహ్మచా

ரிணே। ததா ஃதன்ன ஃயதா ஃசக்தி ஃஹ்யர்திப்ஃயோ ஃலோ ஃபவர்ஜிதஃ" = உலோபத்தைவிடுத்து, விரும்புவோருக்குத் தன்சத்தியுள்ளவளவையில் அந்நதானம்செய்யவேண்டும். துறவிக்கும் பிரமசரியனுக்கும் விதிப்படி பிச்சையிடவேண்டும். எறு. காண்க. (நிகழ)

ஸூ॥ யதிப்ஃயஸ்தேஜலந்ஃதத்ஃயா திக்ஷோ ஃந்ஃதத்ஃவாபுனர்ஜலம்
தத்தை ஃபக்ஷும்மேருணாதுல்ஃயம் தஜ்ஜலஃஸாகரோபமம். ॥ஸ்ஃபு॥

என்பது. பிச்சையிடு நியமங் கூறுகின்றது.

(இ-ள்). துறவியின்கையில் நீர்வார்க்கவேண்டும். பின்பு பிச்சையிடவேண்டும். அதன்பின்னர் மறுபடியும் நீர்வார்க்கவேண்டும். அங்ஙனம் கொடுத்த பலிமேருவோடு ஒப்பாம். அந்த நீர் கடல்போலுமாம். எறு. எனவே சிறிதேசெய்யினும் பெரிது செய்த பயனுமென்பதுகருத்து. பலி=ப்யிக்கம்=பிச்சை.

சத்தியிருந்தால் விசேடம் பிச்சை யிடவேண்டும் எனப் பிரமபுராணத்துட் கூறப்பட்டது. ப்ரஹ்மபுராணே॥ "யதிபாத்ரபூரணீம்பி ஃக்ஷாம்யதிப்ஃயஸ்ஃப்ரயச்ஃசதி। விமுக்தஸ்ஸர்வபாஃபேப்ஃயோ நாஸௌதுர்கதிமாப்ஃனுயாத்"= யார்மூற்றத் துறந்தவனுக்கு பலிபாத்திரம் நிரம்பும்வளையில் பிச்சை கொடுக்கின்றிலை? அவன் எல்லாப்பாவத்தாலும் விடப்படுகின்றான். இவனை நரகம்புகாதவன். எறு. காண்க. (நிஉ)

ஸூ॥ யஸ்ஃயச்ஃசத்ரம்ஹயாஃச்ஃசைவ குஞ்ஜராஃரோஹமஃத்ஃபிமத்
ஐஸ்ஃவர்ஃய்ஸ்தானமுபாஸீத தஸ்ஃமாத்தன்னவிசாரயேத். ॥ஸ்ஃஉ॥

என்பது, வறியோனைப்போலச் செல்வன் தன்மனைக்கு வரினும் உபசரிக்கவென்றது.

(இ-ள்). குதிரை, குடையுடையவன் பிச்சைக்குவரின் அவனுக்குப் பிச்சை கொடுத்தவன் யானையேறி அழுதமுண்ணும் இந்திரபதத்தையடைவன் ஆதலால் அவ்விடயத்து ஆராய்ச்சி வேண்டாம். எறு.

இந்தச் சுலோகத்துள் "ஸந்தம்ஃசன்யாயஃ" = சந்தமிசநியாயத்தால் "ஆதித்யஃங்குர்வன்" = என்ற இருமொழிகளையும் வருவித்துப் பொருளுரைத்துக் கொள்க. சந்தமிசம் என்பது, பற்றுக் குறடு= பற்றுக்கோல். இவ்வழக்கினால், இவ்வசனத்து முன்பின் வசனங்

கள், அதிதியை உபசரித்தல் அதிகாரப்பட்டிருத்தலின் இவ்வுரை யிலும் அதிதியைப் பூசிப்பவன் என்ற இருமொழியை வருவிப் பதாம். குடைநிழலும் குதிரையூர்தி முதலியனவுமுடையஅரசன் முதலியோர் அதிதியாக வந்தபோது அவன் இல்லறத்தானிலும் வருணச்சிரமங்களாற் முழ்ந்தோனே யாயினும் அவனை யுப சரித்தால் சுவர்க்கப்பேறுண்டா மாதலின் அந்த விருந்தினனை யிழி வெண்ணத்தாற் பூசிப்பதோ? ஒத்தபடி யுபசரிப்பதோ? என்று ஐயமுறலாகாது. கடவுட் பாவனையானே அவனையும் பூசிக்கவேண்டும். ஆனல் அவன் இப்பிறவியில் தவஞ்செய்தில னாயினும் சென்றபிறவியிற் றவமுடையனு யிருப்பன். இல்லேயே லவனுக்கு அத்துணைச் செல்வமுறுது. அதனனே செல்வமுடை யோரொல்லாம், ஈசுரன் அமிசையையுடையவர் என்று கண் ணன் கூறினர். பகவற்கீதை. భగవద్గీతాసు॥ "యద్యద్విభూతిమత్సత్వం శ్రీ మదూర్జితమేవవా। తత్తదేవావగచ్ఛత్వం మమతేజోంశసంభవం" = எந்தெந்த வுயிர் செல்வத்தை யாயினும், அதிகாரத்தையாயினும், ஆற்றலை யாயினும், அபிவிருத்தியை யாயினும் உடையதா யிருக்கின்ற தோ? அதனை என்னுடைய ஒளியின் கூற்றினற் பிறந்ததாக வுணர்க. என்று. காண்க. ஆதலால் ஐசுவரிய முடையவனுய்வந்த வனுக்கு விருந்துபசரித்தல் ஒத்தவாறேயாம். (நிக) வது சுலோ கத்துள் வைசுவதேவஞ் செய்வதற்கு முன்னமேயாயினும் துற விக்கும் பிரமசாரிக்கும் பயிக்கமிடவேண்டு என்றுகூறி யிருக்கின் ற அவ்விடத்து உத்திவகை என்னெனில்? "నైశ్వదేవకృతంపాపం శక్తోభిక్షుర్వ్యపోహితుం। నహిభిక్షుకృతాదోషా నైశ్వదే వోవ్యపోహతుం" = வைசுவதேவத்தில் நேர்ந்தபாவம் போக்கடிப்பதற்கு யாசிப்ப வன் ஆற்றலுடையவனுவன். அப்பலிபுக்கவனல் நேர்ந்த பாவத் தினை வைசுவதேவம் சத்தியுள்ளதல்லாமையின் அன்றே? என வே வைசுவதேவம் பின்செய்தால் அதனல் வருங்குற்ற மெது வோ? அதுபிச்சை யிடுதலாலொழிகின்றது. அப்பிச்சையிடாத வதனலுண்டாகின்ற குற்றம் முன் செய்யப்பட்டிருந்த வைசுவ தேவத்தினல் ஒழிவதில்லை என்பது கருத்து.

பிச்சைபுகத் தக்கோர்.

ஈண்டு "భిక్షుః" என்ற மொழியுபலக்கணத்தால் ஏதுவோ ராயுங் குறிக்கின்றது. ஏதுவோரும் பிக்ஷுகரோடு கூடினவரொன்

மு வியாசரால் கூறப்பட்டது. వ్యాసः॥ "యతిశ్చబ్రహ్మచారీన విద్యార్థిగురుపోషకः।అధ్వగఃక్షీణవృత్తిశ్చ షడేతేభిక్షుకాస్మృతాः" = துறந்தவன், பிரமசரியன், கல்வி விரும்பினேன், குருபணி செய்வோன், வழிநடப்போன், பிழைக்கும்வகை தவறியவன், என்னு மிவ்வறுவரும் பிச்சைக்குரியோரெனப்படுவர். எ-று. காண்க.

புராணசாரம். పురాణసారే॥ "వ్యాధితస్యార్థహీనస్య కుటుంబాత్పరిచ్యుతస్యచ। అధ్వానంప్రతిపన్నస్య భిక్షాచర్యావిధీయతే" = நோயாளி, வறியவன், குடும்பத்தாராற்றுறக்கப்பட்டவன், வழிநடப்பவன் இவர்கள் பிச்சைபெடுக்கலாமென்றுவிதிக்கப்படுகின்றது. எ-று. காண்க. (நகூ)

வைசுவதேவஞ் செய்யாவழி வருங்குற்றம்.

మూ॥ అకృత్వావైశ్వదేవంతు భుంజతేయేద్విజాధమాः
సర్వేతేనిష్ఫలాజ్ఞేయాస్తే పతంతినరకేఘచా. ॥౪౮౫॥

என்பது, ஞாபகத்தால் வைசுவதேவத்தைச் செய்யாவழி வருங்குற்றம் கூறுகின்றது.

(இ-ள்). எவ்விழிந்த விருபிறப்பாளர் வைசுவதேவஞ்செய்யாது புசிக்கின்றாரோ? அவரனைவரும் வைசுவதேவப் பயனற்றவராகின்றனர். அன்றியும் அசுத்தமாகிய நரகத்து வீழ்கின்றனர். எ-று.

விருந்தோம்பாக்குற்றம்.

మూ॥ వైశ్వదేవవిహీనాయే అతిథ్యేనబహిష్కృతాः
సర్వేతేనరకంయాంతి కాకయోనింవ్రజంతిచ. ॥౪౮౬॥

என்பது, அதிதி பூசை செய்யாவழி வருங்குற்றங் கூறுகின்றது.

(இ-ள்) யார் வைசுவதேவஞ் செய்வதில்லையோ? விருந்தோம்பலையொழித்தனரோ? அவரனைவரும் இரௌரவம்முதலிய நரகத்தை யனுபவித்துப்பின்பு காக்கையாகப் பிறக்கின்றார்கள். எ-று. வைசுவதேவத்தைக் கூறுமுகத்தால் இதனையும் கூறினர்.

அந்நமிடுதலின்றிறம்.

మూ॥ పాపోవాయదిచండాలో విప్రఘ్నఃపితృఘాతుకः
వైశ్వదేవేతుసంప్రాప్తే స్వాతిథిస్స్వర్గసంక్రమः. ॥౪౯౫॥

என்பது. புதியவனுக வந்தபாவிக்கும் உண்டி யுபகரிக்க வேண்டு மென்றது.

(இ-ள்.) பசுக்கொலைமுதலிய உபபாதகங்ளைச் செய்தவனே யாயினும், சண்டாளனேயாயினும், பிரமகத்தி செய்தவனேயாயினும், பிதிர்க்கொலை செய்தவனே யாயினும். வைசுவ தேவகாலத்திற்கு உண்டிவிருப்பமுடையவனுய் வந்தவன் யாரோ? அவனே சுவர்க்கம் புகுவிக்கும் அதிதியாம். எ-று.

பாவி அதிதியாகவந்தால் .அவனுக்கு உண்டி யுபசரிக்கலாமே யொழிய அதிதிக்குச் செய்யத்தக்க உபசார முழுவதுஞ் செய்யலாகாது என்பது கருத்து. இக்கருத்து அசுவமேத பர்வத்துள்ளும் கூறப்பட்டது. ஆச்வமேధికే॥ "పాపోవాయదిచండాలో కాలే యదుకశ్చిదాగతః। అన్నేనపూజనీయశ్చ పరత్రహితమిచ్ఛతా" = பாவியாயினும், சண்டாளனுயினும், யாரோயாயினும், பொழுதோடு யார்வருகின்றனே? அவனை மறுமைப்பயன் வேண்டினவன் உண்டியாலுபசரிக்கவேண்டும். எ-று. காண்க.

விஷ்ணு தருமோத்திரம். విష్ణుధర్మోత్తరే॥ "చండాలోవాశ్వపాకోవా శత్రుర్వాపితృఘాతుకః। దేశకాలాభ్యుపగో భరణీయోమతోమమ" = சண்டாளனுயினும் நாயைத்தின்போனேயாயினும், பகைவனுயினும், தந்தையைக் கொன்றேனேயாயினும், தேசகாலத்திற்குச் சரியாகவந்தால் அவனை யுபசரிப்பது எனக்குச் சம்மதம். எ-று. காண்க.

விருந்துபசரித்தல் முற்றிற்று.

ஐம்பெருமவேள்விச்சிறப்பு.

இதுகாறும் கூறிவந்த ஐம்பெரும் வேள்விகளை ஹாரீதர் சிறப்பிக்கின்றனர். హారీతః॥ "దేవానృషీన్పితౄంశ్చైవ భూతాని బ్రాహ్మణాంస్తథా। తర్పయన్విధినావిప్రో బ్రహ్మభూయాయకల్పతే" = தேவனையும், இருடிகளையும், பிதிரனையும், உயிர்களையும், வேதியனையும் விதிப்படி திருத்திசெய்யும் வேதியன் பிரமசாயுச்சியத்திற்குத் தக்கவனுகின்றனன். எ-று. காண்க.

புராணசாரம்.- పురాణసారే॥ "యత్ఫలంసోమయాగేన ప్రాప్నోతిధనవా ద్విజః। సమ్యక్పంచమహాయజ్ఞై ర్పరిప్రస్తదవాప్నుయాత్" = செல்வமுடைய இரு பிறப்பாளன் சோமயாகத்தால் எந்தப்பயனை யடைவனோ அந்தப் பயனை இவ்வைம்பெரும் வேள்வியால், ஓர்வறியவன் அடை வன். எறு. காண்க.

செய்யாவழிவருங்குற்றம்.

அவ்வைம்பெரும்வேள்விசெய்யாவழி வருங்குற்றம்வியாச ராற் கூறப்பட்டது. వ్యాసः॥ "పంచయజ్ఞాంస్తుయోమోహాన్నకరోతిగృహాశ్రమీ। తస్యనాయంచనపరో లోకోభవతిధర్మతః" = எந்த இல்லறத்தான் அஞ் ஞானத்தால் ஐம்பெரும் வேள்விகளைச் செய்வதில்லையோ? அவ னுக்குப் புண்ணியத்தினால் இம்மையும் மறுமையும் உண்டாவ தில்லை. எறு. காண்க. (ருகூ)

ஐம்பெரும் வேள்விச்சிறப்பு முற்றிற்று.

உண்டிவிதி.

మూ॥ యోవైష్టితశిరాభుఙ్క్తే యోభుఙ్క్తేదక్షిణాముఖః
వామపాదకరస్థిత్వా తద్వైరక్షాంసిభుంజతె. ॥౫-౨౫॥

என்பது. ஐம்பெரும் வேள்வியின் உண்டியைக் கருதி அரு வதித்து அதன்கணெழிக்கப்படுவன கூறுகின்றது.

(இ-ள்) யார் தலைமேலாடையோடும் தென் முகமாகவும், இடக்காலின்மேற் கைவைத்தாயினும் புசிக்கின்றானே? அவன் அந்தத்தினை யரக்கர் புசிக்கின்றனர். எ-று. (எனவே உண்டவுண் இந்திரிய அபிமானித்தெய்வங்கட்குத் திருத்தியுண்டுபண்ணி யம் முகத்தால் அறிவில் தெய்வ வுணர்ச்சிச் செல்வ முண்டாக்காது அரக்கர் பாலதாய்த் தாமதப் படுகின்றதென்றபடி).

உண்டிவிதி மநுவாற் குறிக்கப்பட்டது. మనుः॥ "భుక్తవత్సుచవి ప్రేషు స్వేషుభృత్యేషుచైవహి। భుంజీయాతాంతతఃపశ్చా దవశిష్టంతుదంపతీ" =

வேதியர் உண்டபின், தமது பரிசனர்களனைவரும் புசித்தபின் மிக்கதை இல்லத்தலைவனும் தலைவியும் புசிக்கவேண்டும். எ-று. காண்க.

விஷ்ணுபுராணம். விஷ்ணுபுராணே॥ "ततस्सुवासिनीदुःखि गर्भिणीवृद्धबाल काः। भोजयेत्संस्कृतान्सेन प्रथमंतुपरंगृहे। अभुक्तवत्सुचैतेषु भुंजन्भुंजीतदुष्कृतं। मृतश्चगत्वानरकं श्लेष्मभुग्जायतेनृप" = பின்னர் சுமங்கலியர், துக்கப்படுவோர், கருப்பிணி, விருத்தர்கள், சிறுவர் = இளையமக்கள் இவர்களுக்குச் சுத்தமாகிய உணவுகளை முன்னுண்பித்துப்பின்பு, தலைவன் புசிக்கவேண்டும். இவர்களுண்பதற்கு முன் புசிக்குந் தலைவன் பாவத்தை யனுபவிக்கின்றான். மறுமையிலும் நரகத்தை யனுபவிக்கின்றான். அதன்பின், கபத்தைத்தின்னும் செந்துவாகப் பிறக்கின்றானன்ற-று. காண்க.

மார்க்கண்டேய புராணம். மார்கண்டேயபுராணே॥ "पूजयित्वाऽतिथीस्त्वित्रौ ज्ञातीन्बंधूंस्तथार्थिनः। विकलान्बालवृद्धांश्चभोजयेदातुरांस्ततः। वांछेत्क्षुत्पुरीतात्मा यश्चान्नंरससंयुतं" = தனக்குப் பசிதாக நேர்ந்த பொழுது அறுசுவையோடுங்கூடியநல்லுண்டியைப் பெறவேண்டுமென்னும் விருப்பமுடைய விப்பிரன், அதிதிகளையும், ஞாதியையும், சுற்றத்தினரையும், பிச்சைபுக்கோரையும், உறுப்பறைகளையும்=அங்கப்பழுதினரையும், பாலரையும், விருத்தரையும், ஆதுரர்களையும்=நோயுற்றோரையும், முன்னுண்பித்துப் பின்தானுண்ணவேண்டும். எ-று. காண்க.

மண்டலம்செய்வகை.

உண்ணுங்கால் செய்வகையினைப் போதாயனர் கூறினர். போதாயனர்॥ "उपलिप्तेसमेस्थाने शुचौश्लक्ष्णसमन्विते। चतुरश्रंत्रिकोणंवा वर्तुलं चार्धचन्द्रकं। कर्तव्यमानुपूर्व्येण ब्राह्मणादिषुमंडलं" = மெழுகப்பட்டுச் சுத்தமாயும் சருச்சரையற்றதாயும் உள்ள ஒத்த நிலத்தில் உண்டியின் பொருட்டு வேதியனுக்குச் சதுரமாயும், அரசனுக்கு முக்கோணமாயும், வைசியனுக்கு வட்டமாயும், சூத்திரனுக்குப் பிறைவடிவாயும் மண்டலம் செய்யவேண்டும். எ-று. காண்க.

சங்கர். சங்கः॥ "आदित्यावसवोरुद्रा ब्रह्मचैवपितामहः। मंडलान्युपजीवंति तस्मात्कुर्वीतमंडलं" = ஆதித்தர், வசுக்கள், உருத்திரர், பிதா

மகனை பிரமன், இவர்கள் மண்டலங்களினிடத்து சீவிக்கின்றனர் ஆதலின் மண்டலஞ் செய்யவேண்டுவது. எ-று. காண்க.

உண்ணுதலின்மரபு.

கூர்மபுராணம். కూర్మపురాణే॥ "ఉపవిశ్యశుచౌదేశే పాదౌప్రక్షాళ్యవైకరా। ఆచమ్యద్విర్జినఓక్రోధఏ పంచార్ద్రోభోజనంచరేత్"=மெழுகிச்சுத்தமாயிருக்கிற விடத்தில் புசிக்கவேண்டும். கால் கை வாய் பூசி இவ்வைந்தும் ஈரத்துடன்னிருக்கையில் ஆசமனஞ்செய்து, கோவமற்றவனைப்ப் புசிக்கவேண்டும். எறு. காண்க.

வியாசர். వ్యాసుః॥ "పంచార్ద్రోభోజనంకుర్యాత్ప్రాఙ్ముఖోమౌనమాస్థితః। హస్తౌపాదౌతథైవాస్య మేషుపంచార్ద్రితానతా"=கைகால்வாய் இவ்வைந்தினையும் நனைத்து, வாய்பேசாது கிழக்கு முகமாக இருந்துகொண்டு புசிக்கவேண்டும். எறு. காண்க.

அசுவமேதம். ఆశ్వమేధికే॥ "ఆర్ద్రపాదస్తుభుంజీయా త్నాఙ్ముఖశ్చాసనేశుచౌ। పాదాభ్యాంధరణీంస్పృష్ట్వా పాదైనైకేనవాపునః"=காலலம்பிச் சுத்தமாகிய ஆசனத்தின்மீது கிழக்குமுகமாகவிருந்து, இரண்டு காலினலாயினும் ஒற்றைக்காலினலாயினும் நிலத்தினைத் தொட்டுக்கொண்டு புசிக்கவேண்டும். எறு. காண்க.

உண்கலவிதி.

அந்த வுணவைக் கொள்ளும் விதியைக் கூர்மபுராணத்துட் கூறப்பட்டது. కూర్మపురాణే॥ "ప్రశస్తశుద్ధపాత్రేషు భుంజీతాకుపితోద్విజః"=இருபிறப்பாளன் கோவமின்றி விதிக்கப்பட்ட சுத்தபாத்திரத்தில் புசிக்கவேண்டும். எறு. காண்க.

தக்கதென்ற பாசனங்களைப் பைட்டீநசி கூறினர். పైఠీనసిః॥ "సౌవర్ణేరాజతేపాత్రే కాంస్యేపద్మపలాశయోః। భోజనేభోజనేచైవత్రిరాత్రఫలమశ్నుతే। ఏకఏవతుయోభుఙ్క్తే విమలేకాంస్యభాజనే। చత్వారితస్యవర్ధంతే హ్యాయుఃప్రజ్ఞాయశోబలం"=பொன், வெள்ளி, வெண்கலம், இந்தபாத்திரங்களிலும், தாமரையிலை, முருக்கிலை இவற்றுற் சமைந்த பாத்திரங்களிலும் புசித்தால் மூன்றுதினம் தீக்ஷையோடு செய்த வேள்விப்பயனை அடைகின்றன். யார் குற்றமற்ற வெண்கல பாத்திரத்துள் ஒருவனே புசித்து வருகின்றனே? அவனுடைய ஆயு

ளும், அறிவும், புகழும், வலிமையுமாகிய கான்கும் விருத்தியடை கின்றது. எறு. காண்க.

மூருக்கிலை தாமனையிலையில் புசிக்கும்விடயம் இல்லறத்தா னுக்கன்று. எனையர்க்குக் கூறியது என மற்றோர் மிருதியுள் குறிக்கின்றது. స్మృత్యంతరే॥ "పలాశపద్మపత్రేషు గృహీత్వైవంచరేత్। బ్రహ్మ చారియతీనాంచ చాంద్రాయణఫలంభవేత్"—தாமனையிலையிலும் மூருக்கிலை யிலும் உண்ட இல்லறத்தான் சாந்திராயண விரதஞ்செய்க. பிரம சரியனும் துறவியும் அவற்றுட் புசித்தால் சாந்திராயணஞ்செய்த பயனுண்டாம். எறு. காண்க.

வெண்கல பாத்திரத்துண்பது இல்லறத்தானுக்கு அன்றித் துறவி முதலியோர்க்கன்றெனப் பிரசேதர்கூறினர். ప్రచేతాঃ॥ "తాం బాలాభ్యంజనైస్తైవ కాంస్యపాత్రేచభోజనం।యతిశ్చబ్రహ్మచారీచవిధవాచవిసర్జయేత్" வெற்றிலைப்பாக்கு, எண்ணெய்முழுக்கு, வெண்கலபாத்திரத்துண் டல் ஆகிய இம்மூன்று கருமமும் சந்நியாசி, பிரமசரியன், கைம் பெண், இவர்கள் ஒழித்தல்வேண்டும். எ-று. காண்க.

உண்கலத்தினை நிலத்தின்மேல் வைத்தல் வேண்டு மென்பது கூர்மபுராணத்துட் கூறப்பட்டது. కూర్మపురాణే॥ "పంచాద్భిర్భోజనంకుర్యా దూభమూపాత్రంనిధాయచ॥ ఉపవాసేనతత్తుల్యం మనురాహప్రజాపతిঃ"= கை கால்வாய்பூசி நிலத்தின்மேற் கலத்தையிட்டு உண்ணவேண் டும். அது உபவாசத்தோடொத்த புண்ணியமென்று சுவாயம்பு மனுகூறினர். எ-று. காண்க.

பிராணகுதி செய்யுமளவே கலத்தை நிலத்தின்மேல் வைத் தல்வேண்டும் அதன்பின் பலகைமுதலிய ஆசனங்களின்மேல் வைத்துப் புசித்தல் வேண்டுமென்று வியாசர் கூறினர். వ్యాసঃ॥ "న్యస్యపాత్రంతుభుంజీత పంచగ్రాసాన్నమోమునె। శేషమున్ధృత్యభోక్తవ్యం గ్రాయతా మత్రకారణా। విపుషాంపాదసంపర్కాన్ పాదచెలరజస్తథా। సుఖేనభుంజ్తేప్రాపిపిత్రర్థం తునలుస్యతె" = உண்கலத்தினை நிலத்தின்மேலிட்டு ஐந்துகவளம் விழுங்கிய பின்னர் அக்கலத்தினை மேலெடுத்துக்கொண்டு மிக் கதைப் புசிக்கலாம் ஏனெனில்? நீர்த்துளி சோற்றினவிழுக்கள் ஆடை, புறுப்புகளிற்சிதறுமாகலினாலும், காற்றாசு, ஆடைத்தூசு, அவ்வன்னத்திற் படுமாகலானுமென்க. உண்பதற்கும் அது ஒத்த

வாழுகவு மிருக்கும் என்னும் இன்ப நிலையின் பொருட்டேயாம். ஆயின் தென்புலத்தார்க்குரிய வுண்டியில் பாத்திரத்தினை நிலத் தின் மேற்றூனே யிடவேண்டும் என்னும் விதிக்குக் குறைவில்லை. எ-று. காண்க. எனவே மந்திர நியமத்தோடு கூடிய பிராணாகு திக்கும் சிராத்தவுண்டிக்குங்கலம் நிலத்தின்மே லிருக்கவேண்டும் இச்சையுணவுக்கு விதியின்மையின் சுகத்துக்குத்தக்கவாறு செய் யலாமென்றபடி.

கலத்திலிட்ட சோற்றினுக்கு நமஸ்காரம் செய்யவேண்டும் எனப் பிராமாண்ட புராணத்துட் கூறப்பட்டது. బ్రహ్మాండపురాణే॥ "అన్నందృష్ట్వాప్రణమ్యాదౌ ప్రాంజలిర్నకథయేత్తదా। అస్మాకంనిత్యమన్నేవ దితిభక్త్యా ధువందయేత్" = சாதத்தைமுன்னாக்கி முன்னர் வணங்கி யஞ்சலியத்த னைய் இஃதெமக்கு நித்திய மாகுகவென்று கூறிப்பத்தியோடும் தொழவேண்டும். எ-று. காண்க.

பிராணாகுதிகற்பம்.

కోపిలర్. గొబిలః॥ "అథాతఏప్రాణా హుతీర్జుహ్వాన్యా హృతిభిర్ధాయ ప్రాణాయస్వాహేతి గార్హపత్యమేవతే నాన్నేనజుహోతి - అపానాయస్వాహేత్యన్వాహార్య పచనమేవతేనజుహోతి - వ్యానాయస్వాహేత్యా హవనీయమేవతేనజుహోతి - ఉదానాయస్వాహేతి సభ్యమేవతేనజుహోతి - సమానాయస్వాహా త్యవసథ్యమేవతే నజుహోతి" = பின்பு பிராணாகுதிகற்பம் கூறப்படுகின்றது. வியா கிருதி, காயத்திரி இம்மந்திரங்களை மந்திரித்து அந்நத்தின்மீது நீரைத்தெளித்து, இரவில் "ఋతంత్వా" = ருதந்துவா, என்ற மந்தி ரத்தாலும், காலையில் "సత్యంత్వా" = சத்தியந்துவா, என்றமந்திரத் தாலும், உண்கலத்தை வலமாக நீர்வளையக்கட்டி, 'எல்லாவுயிர் களினுடைய இதயத்திலும் பிராணவடிவனுய் உலவுகின்றாய் என் பதுமுதலிய கடவுள்துதியே பொருளாகவுடைய "అంతశ్చరతి" = அந்தச்சரதி, என்றதுமுதல் வியாகிருதிப் பிரணவம் வாயுமூள் ளமந்திரத்தைத்தியானித்து "అమృతోపస్తరణమసి"=அமிர்தோபஸ் தரணமசி, என்ற மந்திரத்தைச் சொல்லி நீர்குடித்து, தசஹோ

தரு மந்திரங்களைக் கூறி அவ்வன்னத்தி லிருந்து சிறிது எடுத்து, பிராணன் முதலிய ஐந்து வாயுக்களுக்கும் சுவாஹாகாரத்தோடு உள்ளமாகிய வேள்விக்குண்டத்தில் பிராணனாகிய தீயில் அந்தமாகிய அந்த அவிசுவினை ஹோமஞ் செய்து தியானிப்பதே பிராணாக்கினி ஹோத்திர கருமமாம். ஐந்து பிராணனிடத்திலும் ஹோமஞ் செய்யப்பட்டது பஞ்சாக்கினியிலும் ஹோமஞ்செய்யப்பட்டதாகின்றது. எ-று. காண்க. பஞ்சாக்கினிமேலகூறப்பட்டது.

அவ்வைந்து பிராண மந்திரங்களுக்கும் ஒவ்வொன்றின் முடக்கத்திலும் பிரணவத்தைச் சேர்த்து முடிவில் சுவாஹாகாரத்தைச் சேர்த்து உச்சரிக்கவேண்டும் என்று சௌநகர் கூறினர். శౌనకః॥ "స్వాహాంతాదిప్రణవాద్యాశ్చ నామ్నామంత్రస్తువాయవః। జిహ్వాయైవగ్రనేదన్నం దశేనైస్తునసంస్పృశేత్" = பிரணவத்திற்கும் சுவாஹாகாரத்திற்கும் நடுவே பஞ்சப்பிராண நாம மந்திரங்களை நான்காம் வேற்றுமை யுருபோடு சேர்த்து அன்ன ஆகுதியை நாவினால் வாங்கி விழுங்கவேண்டுமே[illegible] பற்கள் படலாகாது. எ-று. காண்க.

நாவினால் வாங்கி விழுங்கும்பொ[illegible]துள்ள விசேடத்தினை அசுவமேதபர்வத்துள் கூறினர். ఆశ్వమేధికే॥ "యథారసంనజానాతి జిహ్వా ప్రాణాహుతౌనృప। తథాసమాహితఃకుర్యా త్ప్రాణాహుతిమతంద్రితః" = பிராணாகுதி யன்னச்சுவை நாவினுக்குத் தெரியாதபடி விரைவில் விழுங்கவேண்டும். எ-று. காண்க.

பிராணாகுதியின் பொருட்டு அன்னத்தை யெடுக்கும் நியமத்தைச்சௌனகர் கூறினர். శౌనకః॥ "తర్జనీమధ్యమాంగుష్ఠ లగ్నాప్రాణాహుతిర్భవేత్। మధ్యమానామికాంగుష్ఠైరపానేజుహుయాత్తతః। కనిష్ఠానామికాంగుష్ఠైర్వ్యానేతుజుహుయాత్తతః। మధ్యమానామికాంగుష్ఠై రుదానేజుహుయాత్తతః। సమానే సర్వహస్తేన సముదాయాహుతిర్భవేత్" = சுட்டுவிரல் நடுவிரல் பெரியவிரலால் பிராணனுக்கும் நடுவிரல் ஈற்றயல்விரல் பெருவிரலால் அபானனுக்கும், ஈற்றயல்விரல் கடைவிரல் பெருவிரலால் வியானனுக்கும், நடுவிரல்ஈற்றயல்விரல்ஒழியமற்றைச்சுட்டுவிரல் கடைவிரல் பெருவிரலால் உதானனுக்கும், ஐந்துவிரலாலும் சமானனுக்கும் ஆகுதிசெய்யவேண்டும். எ-று. காண்க.

பரிஷேஜனஞ் செய்தபின்பு செய்யத்தக்கதைப் பௌடிய புராணத்துள் கூறப்பட்டது. భవిష్యత్పురాణే॥ "భోజనాత్కించిదన్నాగ్రం ధర్మరాజాయవైబలిం। దత్వాథచిత్రగుప్తాయ ప్రేతేభ్యశ్చేదముచ్చరేత్। యత్రక్వచనసం స్థానాం క్షుత్తృష్ణాపహతాత్మనాం। ప్రేతానాంతృప్తయేతస్య మిదమస్తుయథాసుఖం"= பரிஷேஜனம் செய்தபின்பு கலத்தில் படைத்திருக்கும் அந்நத் திருந்து எடுத்து தருமனுக்கும் சித்திர குப்தனுக்கும், பலிகொ டுத்து, எவ்விடத் தாயினும் பசிதாகத்தோடும் வருந்தியிருக்கும் பிரேதங்கட்குத் திருப்தியுண்டாகும்படி இந்தநீர் கெடாது வளர்க என்று, நீர்விட்டுப்பின்பு ஆபோசனம் கொள்ளவேண்டும். எறு. காண்க.

கூர்மபுராணம். కూర్మపురాణే॥ "మహావ్యాహృతిభిస్తన్నం పరిధాయో దకేనతు। అమృతోపస్తరణను సీత్యపోశానక్రియాంచరేత్" = வியாகிருதியால் நீரை அந்நத்தின்மேற் றெளித்து, "அமிர்தோப ஸ்தரணமஸி" என்று ஆபோசனம் கொள்ளவேண்டும். எறு- காண்க.

போதாயனர். బౌధాయనః॥ "సర్వావశ్య కావసానేషుప్రక్షాళిత పాణిపాదోప ఆచమ్యశుచౌ సంవృతెదెశెప్రాఙ్ముఖ ఉపవిశ్యఉద్ధృత మాహ్రీయమాణంభూ ర్భువస్సువరొ మిత్యుపస్థాయవాచంయ చ్ఛెదన్యత్సమానం మహావ్యాహృతిభిద ప్రదక్షిణ మన్న ముదకంపరిషిచ్య సవ్యెనపాణినా విముంచన్నమృతొపస్తరణ మసీత్యపద పీత్వా పంచాన్నెన ప్రాణాహుతీర్జుహొతి శ్రద్ధాయాంపాణె నివిష్టొమృతంజుహొమి శిరొ మావిశాప్రదాహాయ ప్రాణాయస్వాహా పానెవ్యాన ఉదానెసమానె నిపిష్టఇత్యాదినా యథాలింగ మనుషంగ ఏవంపంచాన్నెన తూష్ణీంభూయవర్తయె త్ప్రజాపతింమనసా ధ్యాయె దథాప్యుదాహరంతి "ఆసీనఉప్రాఙ్ముఖొశ్నీ యాద్వాగ్యతొన్నమ కుత్సయన్- ఆస్కందయంస్తన్మ నాశ్నీభుక్త్వాన్నంసముపస్పృశెదితి" సర్వభక్ష్యాపూపకంద మూలఫ లమాంసానాం దంతైర్నావర్జయెన్నాతిసుహితం "అమృతాపిధానమసీ" త్యపదపీత్వా చాన్తొ హృదయదెశ మభిమృశతి "ప్రాణానాంగ్రంధిర సిరుద్రొమావిశాంతకః, తెనా న్నెనా ప్యాయస్వెతి," పునరాచమ్యాక్షిణ పాదాంగుష్ఠెపాణిం నిస్సృవయ, "త్యం గుష్ఠమాత్రద పురుషాం గుష్ఠంచసమాశ్రితః, ఈశస్సర్వస్యజగతద ప్రభుద్రీణాతి విశ్వ భుగితి" హుతాన్నానుమంత్రణ మూర్ధ్వహస్తస్సమాచరెత్, "చ్ఛ్రద్ధాయాం ప్రాణెనిష్ట శ్యా మృతగ్ంహుతం ప్రాణమన్నెనాప్యాయస్వ శ్రద్ధాయామపానె నివిశ్యామృతగ్ం హుతమపాన మన్నెనాప్యా యస్వశ్రద్ధా యాం వ్యానెనివిశ్యామృతగ్ం హుతంవ్యాన మన్నెనాప్యా యస్వశ్రద్ధాయాముదానెనివిశ్యామృతగ్ం హుతముదానమన్నె నాప్యాయ స్వశ్రద్ధాయాగ్ం సమానెనివిశ్యామృతగ్ం హుతంసమానమన్నె నాప్యాయస్వెతి" య

தாலிங்கமனுஷ்ணோ "ப்ரஹ்மணிமஆத்மாமृதத்வாயை" த்யாத்மானம்யோஜயேத்ஸர்வ க்ரது யாஜினாமாத்மயா ஜீஃசிஷ்யதே" = பிராணருகுதி ஹோத்திர வித்தையை யுபாசிக்கத்தக்க கற்பம்சுருக்கிக் கூறப்படுகின்றது. ஒருதலையா கிய கருமங்கள் முற்றியபின்பு கை கால் அலம்பி ஆசமனஞ் செய்து, சுத்தமாக்கி மேலும் சூழவும் மறைவு செய்யப்பட் டுள்ள இடத்தில் கிழக்குமுகமாக விருந்துகொண்டு, பரிமாறப் பட்டனவும் பரிமாறுவனவும் ஆகிய அவிசை மஹாவியாகிருதி யோடு பிரணவமுடிவாக மந்திரித்துச் சுத்தஞ்செய்து பிரார்த் தித்து வாய்பேசாமல் இருக்கவேண்டும். எனையவெல்லாம் மேற் கூறப்பட்டதே. மஹா வியாகிருதிகளோடு நீரை அவ்வன்னத்தை வளையப் பரிஷேஜனம்செய்து, இடதுகையால் பாத்திரங்களை விடாமல் வலக்கரத்தால் "அமிர்தோபஸ்தரணமசி" என்ற மந் திரங்கூறி ஆபோசனம் பெற்றுக்கொண்டு அந்தத்திலுல் ஐந்து தடவையில் விழுங்கத்தக்க அந்தத்தை எடுத்து பிராணனே அக் கினியென்ற பத்திரம்பிக்கையால் தொடங்கி அழுதவடிவாகிய அந்தத்தை ஹோமம்செய்கின்றேன். சுடாமலிருக்கும்பொருட்டு அந்தவடிவனகிய ஓ! சிவனே! வந்துட் புகுந்து சந்நிதிச்சம்பந் தத்தைத் தந்தருள் என்ற அருத்தமுடைய மந்திரங்கூறிப் பிரா ணதேவதையின் பொருட்டு சுவாஹா காரத்தோடும் ஹோமஞ் செய்து, அவ்வாறே, அபானதேவதைக்கும், வியானதேவதைக் கும், உதான தேவதைக்கும், சமான தேவதைக்கும் ஹோ மஞ் செய்யவேண்டும். மேற்கூறிய பிரார்த்தனை மந்திரத்தைப் பிராணனுக்குக் கூறியதுபோலவே ஏனையவற்றிற்கு சேர்த்துக் கொண்டு அவ்விதமாக ஐந்து ஆகுதிகளால் ஹோமஞ் செ ய்து பின்பு சும்மாது, ஓராகுதியிட்டு பிரஜாபதியை மனத்தி லே தியானிக்கவேண்டும். இவ்விடத்து, இருந்து கொண்டு கிழக்குமுகமாக அவ்வந்தத்தைப் பழுதுகூறுமலும், புறத்தெறி யாமலும், வாயிலிடும்போது சிந்தாமலும் அதனிடத்து மனம் வைத்துப் புசிக்கவேண்டு மென்று பெரியர் கூறுவர். உண் ணத்தக்க எல்லா உண்டிகளும், சிற்றுண்டிகளும், கிழங்குவகை களும், பழங்களும், மாமிசமும் இவைகளை பல்லால் கடித்துப் பறித்து தின்னலாகாது. (எனவே முறித்து சிறுதுணியாகச் செய்து புசிக்கவேண்டும். பல்லாற்கடித்தால் அச்சேடம் மறு

படியும் வாயில் வைக்கலாது). எல்லைகடந்த பேருண்டி தின்ன லாகாது. பின்பு "அமிர்தாபிதானமஸி" = "அமிர்தாபிதானமசி" என்ற மந்திரங்கூறி உத்தராபோசனம் கொள்ள வேண்டும். (அமிர்தத்தைப் பரப்பி அதன்மேல் ஹோமஞ்செய்து அதன் மேல் மறுபடியும் அமுதத்தை மூடியதாகப் பாவித்த பாவனை யால் உண்டிக்குமுன் பூர்வாபோசனமும், பின்னுத்தராபோ சனமும் உண்டாயிருக்கின்றது). அதன் பின்னர் ஆசமனஞ் செய்து, இதயத்தினைத்தொட்டு பிராணன் வெளிப்படாது உள் ளத்து மாட்டியிருக்கும் முடியாயிருக்கின்றீர் ஓ! உருத்திரோ! நீரோ மிருத்தியு ஆதலின் இவ்வங்க ஹோமத்தினால் நீர்திருத்தி யடைந்தவராய்த் திருத்திசெய்யும். பசிவடிவத்தோடு உட்புக வேண்டா. என்னும் பொருளுடைய மந்திரத்தைச் செபித்து மறுபடியும் ஆசமனம்செய்து அந்தக்கைநீரை வலக்காற் பெரு விரல்மீது விழும்படி விடும்போது எல்லாவுலகுக்குந் தலைவ னாகிய வள்ளல் பசிவடிவத்தால் உலகத்தை யெல்லாம் உண்டி சடராக்கினி வடிவனாய்ப் பெருவிரலங்குல அளவாக வயிற்றி னுள்ளே பிரகாசித்துத் தன்னொளியால் இரத்தசஞ்சார வழி யில் காற்பெருவிரலின் சீவநரம்பினைக் கலந்திருக்குந் தெய்வம் திருத்தியடைகின்றான். என்ற அருத்தமுள்ள மந்திரத்தைக் கூற வேண்டும். பின்பு, இந்தப்பிராணாக்கினி ஹோத்திர மென்னும் உண்டி வடிவமாகிய கருமத்தில் ஹோமஞ் செய்யப்பட்ட அன் னத்தைப்பற்றி, மேலே தோட்குச்சரியாக விரித்தெடுத்த கையு டையவனாய் மேற்கூறியபடி பிராணன் அக்கினியென்னும் நம் பிக்கையில் பிரவேசித்து அமுதம் ஹோமஞ் செய்யப்பட்டது. அன்னத்தினால் பிராணனைத் திருத்திசெய். என்ற அருத்தமுள்ள பிரார்த்தனை மந்திரங்களைப் பஞ்சப்பிராணனிடத்திலும் பஞ் சாக்கினி ஹோத்திர பாவனையோடு தனித்தனி அந்தந்தப் பெ யர்க்குறிகளைச் சேர்த்துக்கொண்டு பிரார்த்தித்துச் செபித்து, "ब्रह्मणिमऽआत्मा मृतत्वाय" = எனது ஆன்மாமுத்தியின் பொருட் டுப் பிரமத்தினிடத்தில், என்ற பொருளுடைய மந்திரத்தைக் கூறி, ஆன்மாவைப் பிரமத்தினிடத்தி லொன்று செய்யவேண் டுவது. இவ்வகையாக நாடோறும் பிராணாக்கினி ஹோத்திர வித்தையை உபாசனைசெய்யும் வேள்வித்தலைவன் எல்லாவேள்வி

களையும் வேட்டவர்களுட் சிறந்தவனுக விருக்கின்றன். எ–று. காண்க.

உண்டிச்சுவைமுறை.

விஷ்ணுபுராணம். ఇష్ణుపురాణె॥ "అశ్నీయాత్తన్మనాభూత్వా పూర్వంతుమధురంరసం। లవణాన్లూతథామధ్యే కటుతిక్తాదికాంస్తతః। ప్రాద్రీవం పురుషోశ్నీయాన్మధ్యేతుకఠినాశనం। అంతెపునర్ద్రీవాశీతు బలారోగ్యేనసుంచతి" = உண்டியினிடத்தே வைத்த மனத்தினை யுடையவனுய் முதலில் இனிப்பு= திக்திப்பினையும், நடுவே உவர்ப்பு, புளிப்பினையும், பின்னர், கைப்பு, கார்ப்பு = காரம் முதலியவற்றினையும், முதலில் நீர்த் தன்மையுள்ள பண்டங்களையும், நடுவே வலியபண்டங்களையும், முடிவில் மறுபடியும் நீர்வடிவாயுள்ள பண்டங்களையும் இவ் வாறு புசிப்பவன் வலுவையும் நோயில்லாமையும் தப்பாதுபெறு வன். எறு. காண்க.

உண்டியளவை.

உண்ணுங்கால் உண்ணத்தக்க அளவைனய ஆபத்தம்பர் கூறினர். ఆపస్తంబుః॥ "అష్టాగ్రాసామునేర్భక్ష్యా ష్షోడశారణ్యవాసినః। ద్వాత్రింశత్తుగృహస్థస్య హ్యమితంబ్రహ్మచారిణః" = முனிவர்கள் எட்டுக்கவளமும், காட்டிலுள்ளவன் பதினறுகவளமும், இல்லறத்தான் முப்பத்திரண்டு கவளமும், கொள்ளவேண்டும். பிரமசரியனுக்கு எல்லையில்லை. இவ்வகையாக, துறவி முதலியவர்க்கு உண்ணத்தக்க வுணவினளவு கணக்கிடப்பட்டது. எறு. காண்க.

அசுவமேத பர்வத்திலும். ఆశ్వమెధికెపి॥ "వక్త్రీప్రమాణపిండాంశ్చ గ్రసెదేకైకశఠపునః। వక్త్రాధికంతుయత్పిండ మాత్తోచ్ఛిష్టంతదుచ్యతె। పిండావశిష్టమన్నంచ వక్త్రానిస్రుతమేవయత్। యథాస్నానవ్యథానస్యా త్తథాభుంజీతనిత్యశః"=ஒரு வாய்கொள்ளும் கவளம் ஒன்றொன்றுக ஒத்தபடி கொள்ள வேண்டும். வாய்கொண்டது போகக் கையில் மிகுந்திருந்த வுண்டி தன்னைச்சில் என்று கூறப்படும். அவ்வாறு மிக்க அந்நத்தையும் வாயிலிருந்து வெளியில் தவறிவிழுந்த அந்நத்தினையும் உண்ணலாகாது. உண்டால் சாந்திராயண விரதஞ் செய்யவேண்டும். எப்பொழுதும், கழிமிகுதி யாகவேனும், கழிசுருக்கமாகவேனும் உண்ணலாகாது. \ எவ்வளவாற் பசிப்பீடை யொழியுமோ? அவ்வளவேயுண்க. எறு. காண்க.

பரிகலச்சேடம்வைத்தல்.

விருத்தமனு. వృద్ధమనుः॥ "పీత్వాపాశనమశ్నీయా త్పాత్రదత్తమగర్హితం। భార్యాభృతకదాసేభ్య ఉచ్ఛిష్టంశేషమేద్ద్విజः" = இருபிறப்பாளன் சிறிது நீரைக்குடித்துப் பின்பு உண்கலத்திற் படைத்திருக்கப் பட்ட நல்ல அந்நத்தினைப் புசிக்கவேண்டும். மனைவிக்கும் பணியாளர்க்கும், அடிமையர்க்கும் எச்சிலமிருத்து வைத்தல் வேண்டும். எறு. காண்க.

அச்சேடம்கூடாதவிடயம்.

புலத்தியர். పులస్త్యः॥ "భోజనంతునినిశ్శేషం కుర్యాత్ప్రాజ్ఞోకథంచన। అన్యత్రదధిసక్తూభ్యాం ఫలంక్షీరంచమధ్వపः" = தயிர், பொரிமாவு, நெய், பழம், பால், தேன், நீர், இவைகளை அறிவுடையோன் எப்பொழுதும் சேடப்படுத்தி வையாது புசித்தல்வேண்டும். எனையவற்றுட் சிறிதுவையாது புசிக்கலாகாது. எறு. காண்க.

உண்ணுங்கால அளவை.

மனு. మనుः॥ "సాయంప్రాతర్ద్విజాతీనా మశనంశ్రుతిచోదితం। నాంతరా భోజనంకుర్యా దగ్నిహోత్ర సమోవిధిः" = இருபிறப்பாளர்க்குக் காலை மாலை உண்ணுதல் வேதத்தால் விதிக்கப்பட்டது. இடையே புசித்தலாகாது. ஏனெனில்? உண்ணுதல் வேள்வித் தீக்கருமத் தோடு ஒத்தவிதியாக விருக்கும். எறு. காண்க. எனவே அகாலத்துள் புசிக்கலாகாது என்றபடி.

கௌதமர். గౌతమः॥ "సాయంప్రాతస్తు న్నమధి పూజితమనిన్ద్యమ్భుంజీత" மாலையிலேனுங்காலையிலேனும் நல்லஉண்டியைப் பழியாதுபுசிக்க வேண்டும். எறு. காண்க.

மேற்கூறிய வெல்லாவுரைகளாலும் கூறப்பட்டுள்ள உண்டியினை "యావచ్ఛీతశిరాభుఙ్క్తే" என்றமூலத்துள் அநுவாதஞ் செய்து, தோஷத்தைக் கூறுமுகத்தால் விலக்குகின்றார். (உண்ணுதலைச் செய்யவேண்டு மென்பது சுருதிமிருதிகளில் விதியில்லை. இச்சையால் உண்டிகிடைத்த வழி எவ்வாறு புசித்தால் குற்றம்வருமோ? அதனை யுணர்த்தி விலக்கப்பட்டுள்ளது. என்னில் பிராமணமொழிகளுக்கு உண்டிவிடயத்தில் நிடேதத்தில் கருத்தன்றி விதியில் கருத்தில்லை என்பது).

இந்த நிடேதம், இன்னும் ஒழிக்கத்தக்கன வெல்லாவற்றிற் கும் உபலக்கணமாக விருக்கின்றது. (எனவே, மூலத்துள் சில வற்றை யாகாதென மறுத்திருக்கும் மொழி, இன்னு மாகாதன வெவையெவை, யவற்றை யெல்லாம் விட்டொழியவேண்டுமென் பதுகருத்து).

உண்டிவிடயத்தி லுள்ள இன்னுஞ் சிலவிலக்குகளைப் பிரம புராணத்துட் கூறப்பட்டது. బ్రహ్మపురాణె॥ "యస్తుపాణితలెభుఙ్తె యస్తు పూత్కారవాయునా। ప్రసృతాంగుళిభిర్యశ్చ తస్యగోమాంసవచ్చతత్। నాజీర్ణెభోజనంకు ర్యా త్కుర్యాన్నాతిబుభుక్షితః। హస్త్యశ్వరథయానొష్ట్ర మాస్థితొనైవభక్షయెత్। శ్మశానాభ్యంతరస్థొవా దెవాలయగతొథవా। శయనస్థొనభుంజీత నపాణిస్థంనచాసనె। నార్ద్రవాసానార్ద్రశిరా నచాయజ్ఞొపవీతవాన్। నప్రసారితపాదస్తు పాదారొపితపాణి మాన్। స్వబాహుసవ్యసంస్థశ్చ నచపర్యంకమాశ్రితః। నపెష్టితశిరాశ్చాపి నొత్సంగకృత భొజనః। నైకవస్త్రొదృషన్మధ్యె సొపానత్కస్సపాదుకః। నచర్తొపరిసంస్థశ్చ చర్మపెష్టిసా ర్మ్యవాన్। గ్రాసశెషంచనాశ్నీయా త్పీతశెషంపిబెన్నచ। శాకమూలఫలెక్షూణాందన్తచ్ఛె దైర్నభక్షయెత్। బహూనాంభుంజతాంమధ్యె నచాశ్నీయాత్త్వరాన్వితః। వృథానవిసృజె దన్నం నొచ్ఛిష్టఃకుత్రచిద్వ్రజెత్। పాఠాంతరం। నొచ్ఛిష్టం స్కందయెత్క్వచిత్" = யார் அங்கையி லுண்கின்றரே? யார் ஆகாரத்தினையூதித் தின் பவரே? யார் ஆகாரத்தைக்கையிலெடுத்துக்கைவிரித்துவளைத்து நக்கித்தின்பாரே? அவனுக்கு அந்தவுண்டி பசுவின் மாமிசம் போலாம். உண்டது சமியாததபோது = அசீரணத்தில் புசிக்க லாகாது. (அசீரணமாகத் தக்கபொருளையும் புசிக்கலாகா தென் பதுஉங் கருத்தாம்). பசியெடுத்தவன் மிகப் புசிக்கலாகாது. (மிகப்பசித்தும் புசிக்கலாகாது. எனவே மிகவும் பசித்திருக்க லாகாதென்பது கருத்து). யானை, குதிரை, வண்டி, ஒட்டகம் முதலிய வாகனத்தின்மே லிருந்தும் புசிக்கலாகாது. சுடுகாட் டிலும், மனைக்குப் புறத்திலும், தேவாலயத்திலும், படுக்கை மீதும் இருக்கும்போது புசிக்கலாகாது. கையிலும், இருக்கும் ஆசனத்திலும் கிடப்பனவற்றை யெடுத்துப் புசிக்கலாகாது. (கையில் உண்டைசெய்து இடும்படி வாங்கித் தின்னலாகாது. எனவுங்கருத்து). ஈரவுடையுடுத்தும், ஈரத்தலையோடும், பூண நூலின்றியும், காலைநீட்டிக் கொண்டும், கால்மேல் வைத்துக் கொண்டும், இடதுகையூன்றியும், கட்டிலின்மே லிருந்துகொண்

டும், தலைமேலாடைசுற்றியும், யார்தொடைமீது இருந்து ஆயினும், ஒற்றை யாடையோடும், கல்லின்மீதும், படியின்மீதும், காலில் பாதக்குறடு முதலிய தரித்தும், தோலின்மீ திருந்தும், தோல்போர்த்தும், உண்ணலாகாது. வாயில்வைத்த மீதியையும் தின்னலாகாது. குடித்து மீதியானதைக் குடிக்கலாகாது. கறிவகை, கிழங்கு, பழம், கரும்பு முதலியவற்றினை பல்லால்கடித்து பறித்துத் தின்னலாகாது. (எனவே, சிறுதுண்டமாகச் செய்து தின்னவேண்டு மென்பது). பலரோடு கடுவிருந்து புசிப்பவன் விளைந்து புசிக்கலாகாது. வீணை சோற்றினை யெறியலாகாது. பிறன் எச்சிலைத் தின்னலாகாது. எச்சிலோடு எங்கும் போகலாகாது. எச்சில எங்கும் எறியலாகாது. எறு. காண்க.

பிரகற்பதி. బృహస్పతిः॥ "నస్పృశేద్వ్యమహస్తేన భుంజానోన్నంకదాచన। నపాదౌనశిరోవస్తిం నపదాభ్యాజనంస్పృశేత్" = புசித்திருப்பவன் இடதுகையால் அன்னத்தினை யொருபோதும் தொடலாகாது. கால், தலை, ஆண்குறி இவற்றினைத் தொடலாகாது. உண்கலத்தின் மேல் கால்படலாகாது. எறு. காண்க.

உசனர். ఉశనాः॥ "నాపత్వామృష్టమశ్నీయా ద్బహూనాంచైనపశ్యతాం। నాశ్నీయుర్బహవశ్చైవ తథాచైకస్యపశ్యతः" = பலபேர் பார்த்திருக்கையில் அவர்கட்குக் கொடாமல் நல்லவுணவுகளை யொருவனே புசிக்கலாகாது. ஒருவன் பார்த்திருக்கும்போதும் அவனுக்குக் கொடாமலே பலரும் தின்னலாகாது. எறு. காண்க.

ஆதித்தியபுராணம். ఆదిత్యపురాణే॥ "నోచ్ఛిష్టంగ్రాహయేదాజ్యం జఘిష్టంచసంత్యజేత్। ఊర్ధ్వభుక్తావశిష్టంతు నాద్యాద్భాండస్థితంత్వపి" = எச்சில் நெய்யை வாங்கிக் கொள்ளும்படி செய்யலாகாது. உண்டுமிக்கதை விட்டுவிடவேண்டும். சூத்திரனுக்கு உண்ணும்படி வைத்துமிக்கது பாத்திரத்துள்ளே யிருந்ததா மாயினும் அதனை விட்டுவிடவேண்டும். எறு. காண்க.

கூர்மபுராணம். కూర్మపురాణే॥ "నార్ధరాత్రేనమధ్యాహ్నే నాజీర్ణేనార్ద్రపస్రుధృత్। నభిన్నభాజనేచాద్యా న్నభూమ్యాంనచపాణిషు। నోచ్ఛిష్టంధృతమాచద్యాన్న మూర్ధానంస్పృశన్నపి। నబ్రహ్మకీర్త్యన్యాపినిశ్శేషంనభార్యయా। నాన్యాగారేనచాకాశే నచదేవాలయాదిషు" = ஒத்த நடுஇராவிலும், நடுப்பகலிலும், உண்டது சமியாத போதும், ஈரவுடையுடித்தும், ஓட்டைக் கலத்தி

லும், நிலத்திலும், கையிலும், உண்ணலாகாது. எச்சில் நெய் வாங்கலாகாது. தலையைத் தொட்டுக்கொண்டும், வேதமோதிக் கொண்டும், கலத்தில் மீதியாகாதபடி தொடைத்தும், மனைவி யோடும், உண்ணலாகாது. அயலார் மனையிலும், வெளியிலும், தேவாலய முதலியவற்றுள்ளும், புசிக்கலாகாது. எறு. காண்க.

யாஞ்ஞவல்கியர். याज्ञवल्क्यः॥ "नभार्य्यार्द्धशेषीया नैकवासःसंस्थितः" = மனைவி பார்த்திருக்க உண்ணலாகாது. ஒற்றை யாடையோடு முண்ணலாகாது. நிலத்தின்மே லிருந்தும் புசிக்க லாகாது. "நசோத்थितः" என்றது பாடமர்ந்து நின்று உண்ணலா காது. எறு. காண்க.

அற்றேல். ब्राह्मण्यासहयोश्नीया दुच्छिष्टंवाकदाचन। नतस्यदोष मिच्छंति नित्यमेवमसीषिणः। उच्छिष्टमितर स्त्रीणांयोश्नीयादाब्राह्मणक्वचित्। पा यश्चैतीसविज्ञेय स्संकीर्णोमूढचेतनः" = எந்தவேதியன் வேதியமாதி னேடு எப்போதாயினும் உண்ணுகின்றானே? எச்சிலுண்கின் றானே? அவனுக்குக் குற்றமுண்டென்று அறிவுடையோர் நித் தமாக நினைப்பதில்லை. வேற்று வருணமாதோடு எந்தவேதியன் எச்சில்மயங்க உண்ணுகின்றானே? அந்தமூடன் சாங்கரியதோ ஷம் = கலப்புக்குற்ற மூடையவனை மாதனின் பிராயச் சித்தஞ் செய்துகொள்ளத் தக்கவனென்று உணரப்படும். என்ற இதனால் வேதியன் தன்சாதி மனைவியோடு புசித்தால் குற்றமில்லையென்று ஆகின்றதே யெனில்?

அற்றன்று. அந்தவிதி, எவ்விதத்தும் குற்ற மில்லையே யில் லையென்னும், கருத்துடைய தல்ல. ஏனெனில்? "क्वचन"= எப்போதாயினும், என்று அவ்விடத்தே தானே கூறப்பட்டிருத் தலின். அதனானே ஆதித்திய புராணத்துள்ளும் கூறப்பட்டது. आदित्यपुराणे॥ "ब्राह्मण्याभार्य्ययासार्द्धं क्वचित्भुंजीतवाध्वनि। अधोवर्णस्त्री यासार्द्धं भुक्त्वापतितोभवेत्" = அந்தணன் தன்சாதி மனைவியோ டும் வழி நடையிலெப்போதாயினும் எங்காயினும் உண்டாலும் உண்பன். அன்றித்தாழ்ந்த சாதி மாதரோடு உண்டால் அப் பொழுதேபதிதன் ஆகின்றான். எ-று. காண்க.

மநு. मनुः॥ "नपिबेन्नचभुंजीत द्विजस्स्त्रैणपाणिना। नैकहास्तेनचजलं शूद्रेणावर्जितंपिबेत्। पिबन्योयत्पतेत्तोयं भोजनेमुखनिस्सृतं। अभोज्यंतद्भवे

దస్మంభోక్తాభుంజీతకిల్బిషం।క్షీపీతావశేషితంతోయం బ్రాహ్మణఃపునరాపిబేత్। పిబేద్యది హితన్తోహా ద్విజశ్చాంద్రాయణంచరేత్" = இருபிறப்பாளன் இடதுகையால் உண்ணலாகாது. குடிக்கலாகது. ஒற்றைக்கையால் நீர் குடிக்கலாகாது. சூத்திரனல் வாக்கப்பட்டநீரைக் குடிக்கலாகாது. வாயிலிருந்து மொழுகிய நீர் உண்ணத்தக்க அங்கத்தின்மீது பட்டால் அது எச்சிலாமாதலின் அதனை யுண்ணலாகாது. தின்றற்பாவத்தையனுபவிப்பவன். வேதியன், பிறர்குடித்துமிக்கநீரை மறுபடியும் குடிக்கலாகாது. அறியாது குடித்தால் சாந்திராயணவிரதஞ் செய்யவேண்டும். என்று. காண்க.

நீர்குடித்தல்.

அத்திரி. அஃறிஃ॥ "లోయంపాణినఖస్పృష్టం బ్రాహ్మణోనపిబేత్క్వచిత్। సురాపానేనచసమ మిత్యేవంమనురబ్రవీత్" = வேதியன் கைவிரல் நகம்பட்ட நீரை யாண்டுங் குடிக்கலாகாது. அதுகள்ளினைக் குடித்தலோடொக்குமென மனு கூறினர். என்று. காண்க.

சாதாதபர். శాతాతపః॥ "ఉద్ధృత్యవామహస్తేన యత్తోయంపిబతిద్విజఃl సురాపానేనతత్తుల్యం మనురాహప్రజాపతిఃl" = இடதுகையினை லெடுத்து இருபிறப்பாளன் நீர்குடித்தால் அதுகள்ளைக் குடித்தலோடொக்குமென்று சுவாயம்பு மனு கூறினர். என்று. காண்க.

அசுவமேதபர்வம். ఆశ్వమేధికే॥ "పానీయాన్నిపిబేద్యేన తచ్ఛాత్రంద్విజసత్తమఃl అనుచ్ఛిష్టంభవేత్తావద్భూమౌయావన్ననిక్షిపేత్" = இருபிறப்பாளன் நீர்குடித்த பாத்திரத்தை நிலத்தின்மேல் வைக்கும் வரையில் எச்சிலல்ல. என்று. காண்க.

பந்திபோசனம்.

சங்கர். శంఖఃl॥ "నానియక్తోగ్ర్యాసనస్థస్తు ప్రథమమశ్నీయా న్నాధికందద్యా న్న ప్రతిగృహ్ణీయాత్" = பிறர்வேண்டுகோளில்லாமலே தான்உயர்ந்த ஆசனத்தி லிருக்கலாகாது. முன்பாக உண்ணலாகாது. தன்னுடைய தரத்துக்கு மேலாகக் கொடுக்கலாகாது. அவ்வாறே வாங்குதலுமாகாது. என்று. காண்க.

சாதாதபர். శాతాతపః॥ "అగ్ర్యాసనోపవిష్టస్తు యోభుఙ్క్తేప్రథమంద్విజఃl బహూనాం పశ్యతాంసోజ్ఞ పఙ్క్త్యాహరతికిల్బిషం" = உயர்ந்த ஆசனத்தி

விருந்து பலர் பார்க்கும்போது வரிசையில் எந்த விருபிறப்பா ளன் முன்னதாகப் புசிக்கின்றானே? அந்தமூடன் அந்தவரி சையி லுள்ளார் பாவத்தை யடைகின்றான். எறு. காண்க.

கோபிலர். గొబిలः॥ "ఏకపఙ్క్త్యుపవిష్టానాం విప్రాణాంసహభోజనే। యద్యే కోపిత్యజేత్పాత్రం నాశ్నీయురితరేపునः। మోహాద్భుఞ్జేతుయస్తత్ర ససాంతపనమాచరే త్। భుంజానేషుతుసర్వేషు యస్తుపాత్రంపరిత్యజేత్। భోజనెవిఘ్నకర్తాసౌ బ్రహ్మహాపిత దుచ్యతె" = ஓரோபந்தியில் உடன் புசித்திருக்கும் வேதியர் நடுவே ஒருவன் உண்கலத்தை விடுத்தாலுயின் அனைவரும் உண்ணு தலை விட்டுவிடுவார்கள். தெரியாது பாவனையினும் புசித்தால்? அவன் சாந்தபனம் என்னும் கிருச்சிரத்தைப் பிராயச் சித்தமாக அனுட்டிக்க வேண்டும். பந்தியில் வேதியர் புசித்திருக்கும்போது யார் தன் உண்கலத்தைவிட்டு எழுந்திருக்கின்றானே? அவன் எல்லார். உண்டிக்கும் தடைசெய்தவனாகின்றான். அக்காலத்தி லவன் பிரமகத்தி செய்தவனாகவுஞ் சொல்லப்படுகின்றான். எறு. காண்க.

மௌனபோசனம்.

வாய் பேசாமையைக் கூறத்தொடங்கிப் புராணத்துள். పురాణె॥ "స్నానస్యతోవరుణశ్చక్షుం జహ్వాతోగ్నిశ్శ్రియంహరెత్। భుంజతోమృత్యురా యుష్యం తస్మాన్మౌనంచరేత్తిశు" = நீராடும்பொழுது பேசினால் வரு ணன் சத்தியைக் கெடுக்கின்றான். வேள்விசெய்யும்போது பேசி னால் அக்கினிசெல்வத்தைக் கொண்டுபோய் விடுகின்றான். உண் ணும்போது பேசினால் மிருத்தியுதெய்வம் ஆயுளைக் கொண்டு போகும். அதனால் அம்மூன்று கருமங்களிலும் வாய் பேசலா காது. மௌனமனுட்டிக்க வேண்டும். எறு. காண்க.

ஆயின். "మౌనవ్రతంమహాకష్టం హుంకారెణాపినశ్యతి। తథాసతిమహాన్దో షస్తస్మాత్తన్నియతశ్చరెత్" = மோனவிரதம் மிகவருத்தமானது எனி னில்? உங்காரஞ் செய்தாலும் கெடுகின்றது. அதனற் பெருங் குற்றம் நேரிடுகின்றது. ஆதலால் அந்தவிரதத்தினை மஹாநியம முடையவன் செய்யவேண்டும் என்ற இவ்வதிகாரியாலுரையால் மோன விரதத்தினைச் சத்தியுள்ள அதிகாரியே செய்யவேண் டும் என்றுமே? அங்ஙனமன்று. அவ்வுரை காஷ்டம் = மரத்

துண்டம்போலும் ஒலித்தாமே யில்லாமல் இருக்கத்தக்க மோன விரத விசேடத்தினைக் குறித்துக் கூறியது. என்றுணர்க.

இந்தவாய் பேசாமை ஐந்து பிராணுகுதி கொள்ளும்வரை யிலுங் கூறிய விடயம் என்று விருத்தமனு கூறினர். வ்ருத்தமனுः॥ "అనిన్దన్భక్షయెన్నిత్యం వాగ్యతొన్నమకుత్సయన్। పంచగ్రాసాన్నహోమానం ప్రాణాద్యాప్యాయనంమహత్" = உண்ணுமிடத்தில் முதற்கண் ஐந்துகவளம் புசிக்கிறவனையில் பிராணுதி தேவதைகளைத் திருத்திசெய்வது பெருங்கருமமாதலால் அப்போது அன்னத்தைப் பழியாது வாய்பேசாது. அமைதியோடும் யாரையும் குற்றங்கூறுது புசிக்கவேண்டுவதுநித்தமானவிதியாம். எ-று. காண்க.

அசுவமேதம். ఆశ్వమెధికె॥ "మౌనీవాప్యథవామౌనీ ప్రహృష్టస్సంయతెంద్రియः। భుంజీతవధివద్విప్రొ నొచ్ఛిష్టొన్యస్సహాలపెత్" = மோனவிரதமுடையவனுகவாவது, இல்லாதவனுகவாவது, இந்திரியங்களை வென்றுகளிப்போடும் இருபிறப்பாளன் விதிப்படி புசிக்கவேண்டும். எச்சின் மயங்கியுள்ள வாயினுரோடும் பேசலாகாது. (எனவே, புசிப்பவர்கள்ஒருவரோடொருவர் பேசலாகாது). எ-று. காண்க.

அன்னம்பரிமாறல்.

சாதாதபர். శాతాతపः॥ "హస్తదత్తానిచాన్నాని ప్రత్యక్షలవణంతథా। మృత్తికాభక్షణంచైవ గొమాంసాశనవత్సమృతం" = கையால்பரிமாறப் பட்ட சோறுமுதலிய வற்றையும் வேறுபதார்த்த வகைகளோடு கூடாது நேராகவிருக்கின்ற வுப்பினையும், மண்கட்டியையும், உண்பது கோமாமிசத்தை யுண்பதனைடொக்கும். எ-று. காண்க.

பைட்டீநசி. పైఠీనసిः॥ "లవణంవ్యంజనంచైవ ఘృతంతైలంతథైవచ। లెహ్యపెయంచవివిధం హస్తదత్తంనభక్షయెత్" = உப்பு, கறிவகை, நெய், எண்ணெய், முதலிய வற்றினை கையாற் பரிமாறினுற் புசிக்கலாகாது, எ-று. காண்க.

இதுவுமது. "ధర్వ్యాదెయంఘృతాన్నంచ సమస్తవ్యంజనానిచ। ఉదకంయచ్చపక్వాన్నంయొనదర్వ్యాప్రయచ్ఛతి। సఘృణాహాసురాపశ్చ స్తెయొచగురుతల్పగः" = நெய், சோறு, கறிவகை, நீர், பக்குவப்பட்ட மற்றவுண்டிகளையும் யார் கரண்டியால் படைப்பதில்லையோ? அவன் மஹாபாதகஞ்செய்தவனுவான். எ-று. காண்க. (இது சாதாரணவுணவின்

பொருட்டுப் பரிமாறும்விடயம். விசேட போசனத்தில் மந்திர விதியோடு பாகப்பட்ட வுண்டியைக் கையால் படைக்க வேண்டுவதாக அவியின்முக்கியகருமத்தில் சான்றோர்வழக்கால் உணரப்படுகின்றது. அன்றியும் சிலபதார்த்தங்களைக் கையினாலும் சிலவற்றைக் காண்டியாலும் படைக்கவேண்டும். உண்ணுவதற்கு முன்பரிமாற வேண்டிய முறைவேறு. உண்ணுங் காற்பரிமாறு முறைவேறு. அவற்றினைக்குறித்துப் புராணவாக்கியங்கள் மிக விருத்தலின் அவரவர்கள் ஆசாரவழக்கங்களே விதியாகவிருக்கின்றது).

உண்ணும்போது பார்க்கலாகாதன.

அசுவமேதம். ఆశ్వమేధికే॥ "ఉదక్యామపిచండాలం శ్వానంకుక్కుటమేవచ। భుంజానోయదిపశ్యేత్తు తదన్నంచపరిత్యజేత్" = புசித்துக்கொண்டிருப்பவன் கைவிலக்க மானவளையும், சண்டாளனையும், நாயினையும், கோழியையும், பன்றியையும், கழுதை முதலியவற்றினையும் கண்டால் அந்த அன்னத்தை விடவேண்டும். எறு. காண்க.

அரக்கவுணவு.

அசுவமேதம். ఆశ్వమేధికే॥ "కేశకీటోపపన్నంచ ముఖమారుతపీడితం। అన్నంతద్రాక్షుసంఖిందాత్తస్మాత్తంపరివర్జయేత్" = மயிர், புழு, கலந்துள்ளதும், வாயாலூதப்பட்டது மாகிய இவை இராக்கத வுண்டியென்றுணரத்தக்கது. அதனாலவற்றை யொழிக்க வேண்டுவது. எ-று. காண்க.

காத்தியாயனர். కాత్యాయనః॥ "చండాలపతితోదక్యా వాక్యంశ్రుత్వా ద్విజోత్తమః। భుంజీతగ్రాసమాత్రంతు దినమేకమభోజనం" = சண்டாளர், பதிதர், கைவிலக்கமான மாதர்இவர்களுடைய வார்த்தை செவியிற்படும்போது ஒருகவளத்தைபாவது வேதியன் உண்டால் ஒருநாள்முழுவதும் பட்டினி கிடக்கவேண்டும். எ-று. காண்க.

கௌதமர். గౌతనుః॥ "కాకశ్వభ్రామణగ్రామ్యో శ్చక్రస్యాలూఖలస్యచ। ఏతేపాంనినదంయావత్తావత్కాలమభోజనం" = காளமுதலிய ஆதுகருவி, எந்திரம், சக்காரம், உரல், இவற்றின் சத்தம் எதுவரையில் கேட்கப்படுகிறதோ? அதுகாலம்வரையில் உண்ணுதலில்லையாம் எ-று. இயந்திரம் என்பது எந்திரமென மருவிற்று. அதுஅரிசி

முதலியனமாவுசெய்யுங்கருவி.சக்கரம்ளன்பதுவண்டிமுதலியவற்றுளாயினும் ஏனைய கருவிகளிலாயினும் உள்ளனவெனக்கொள்க.

போசனபந்திதோஷம்.

கௌதமர். గౌతమః॥ "అప్యేకపఙ్క్త్యానాశ్నీయా ద్బ్రాహ్మణైస్సహజనైరపి। కోహిజానాతికింకస్య ప్రచ్ఛన్నంపాతకంభవేత్। ఏకపఙ్క్త్యుపవిష్టానాం దుష్కృతంయద్దురాత్మనాం। సర్వేషాంతత్సమంతావ ద్యావత్పఙ్క్తిర్నభిద్యతే" = அந்தணர்கருடனேயாயினும், தன்சுற்றத்தாரோடாயினும் ஒரேபந்தியிலிருந்து புசிப்பதற்கு வேதியன் போகலாகாது. ஏனெனில்? வெளிப்படாத பாதங்களை இரகசியமாக யார் என்னை செய்துள்ளாரே? அதனை யாவனறிவன். பந்திபேதமாகிற வனையில் ஒரேபந்தியில் சேர்ந்த பாவிகளுடைய பாவம் அந்தப்பந்தியிலிருப்பவர்கள் அனைவர்க்கும் ஒத்தபடியுண்டாம். எ-று. காண்க.

பந்திபேதவகை.

கௌதமர். గౌతమః॥ "అగ్నినాభస్మనాచైవ స్తంభేనసలిలేనవా। ద్వారేణచైవమార్గేణ పఙ్క్తిభేదోబుధైస్మృతః" = நெருப்பு, சாம்பல், சிறுசுவர்க்கட்டை, தூண், நீர், வாயிற்படி, நடைவழி, இவைகள் நடுவிருக்குமாயின், அப்புறத்த தொருபந்தி, இப்புறத்த தொருபந்தி என அறிவுடையோர் கூறுவர். எ-று. காண்க.

இயமன். యమః। "ఉదకంచతృణంభస్మ ద్వారంపంథాస్తథైవచ। ఏభిరంతరితంకృత్వా పఙ్క్తిదోషోనవిద్యతే" = ஜலம், புல், வெண்ணீறு, வாயிற்படி, நடக்கும்வழி, இவைகளைக் குறுக்கிட்டால் பந்திதோஷமில்லையாம். எ-று. காண்க.

மூலத்துட் கூறப்பட்ட "యోవేష్టితశిరాభుఙ్క్తే" = என்றதற்கு இலக்கியார்த்தமாகிய நிடேதங்களைக் குறித்த நியமவிசடங்களிவ்வகையாகக் கூறியவாறுயிற்று. இனி "యోభుఙ్క్తేదక్షిణాముఖః" தென்முகமாகப் புசிக்கலாகாதென்று மூலத்துட் கூறியிருப்பது நித்தமுண்ணுதலின் விடயம், ஏனெனில்? காமிய வுண்டியில் தென்முகமாகப் புசிக்கலாமென்று விதிக்கப்படுதலின்.

காமியவுண்டி.

அங்ஙனம் மனுவிதித்தனர். మనుః॥ "ఆయుష్యంప్రాఙ్ముఖోభుఙ్క్తే యశస్యందక్షిణాముఖః। శ్రియంప్రత్యఙ్ముఖోభుఙ్క్తే ఋతంభుఙ్క్తఉదఙ్ముఖః" = கிழக்கு

முகமாக பிருப்பவன் ஆயுளையும், தென்முகமா யுள்ளவன் புக ழினையும், மேற்றிசைமுகமாயுள்ளவன் செல்வத்தினையும், வடக்கு முகமாயுள்ளவன் சத்தியத்தினையும் உண்பவனுவன். எறு. காண்க.

உண்டிக்குவிலக்காகியதிசை.

கோபிலர். గౌబిలః॥ "ప్రాఙ్ముఖావస్థితోవిప్రః ప్రతీచ్యాంవాయథాసుఖం। ఉత్తరంపితృకార్యేచ దక్షిణంతుసదార్జయేత్" = வேதியன் கிழக்கு, மேற்கு, வடக்கு, என்னுமிவற்றுள் அனுகூலப்பட்ட திசை யொன்றின் முகமாக விருந்து புசிக்கலாம். தென்புலத்தார் கருமத்தில் வட முகமாக விருந்து புசிக்கவேண்டும். தென்றிசையைவிட்டு விட வேண்டும். எறு. காண்க.

இதுவுமது. "వామపాదకరోభుఙ్క్తే యశ్చోచ్ఛిష్టాభుఙ్క్తే తైస్సహైవోద్భుక్తంత ద్రక్షాంసిభుంజతె" = இடதுகாலின்மீது கைவைத்துக்கொண்டு யார் உண்ணுகின்றுரே? யார் நிலத்தின்மீ திருந்தாயினும், நின்று யினும், புசிக்கின்றுரே? அவரோடு யார் புசிக்கின்றுர்களோ? அந்த உண்டியை யெல்லாம் அரக்கர் தின்று போகின்றுர்கள். எறு. காண்க. (எனவே, அவர்களுக்குப் பிராணக்கினி ஹோத் திர பலன் வருவதில்லை அது அரக்கனையடைகின்றது என்றபடி).

கூர்மபுராணம். కూర్మపురాణె॥ "యోభుఙ్క్తెవేష్టితశిరా యశ్చభుఙ్క్తెవిది ఙ్ముఖః। సోపానత్కశ్చయోభుఙ్క్తె సర్వంవిద్యాత్తదాసురం" = யார்தலைக்கு வேஷ்டிசுற்றிக்கொண்டு புசிக்கின்றுரே? கோணத்திசைகளின் எதிர் முகமாகப் புசிக்கின்றுரே? பாதரக்ஷை பூண்டு புசிக்கின்றுரே? அவையெல்லாம், அசுரபோசனமென்றுணர்க. எறு. காண்க.

உண்டபின்செய்வன.

விருப்பத்தா லுண்டாகிய உண்டிவிதிக்கு உத்தராங்கமாகிய எச்சில் நீர்விடுதன் முதலியவற்றைச் செய்யவேண்டு மெனத் தேவலர் கூறினர். దెవలః॥ "భుక్త్వోచ్ఛిష్టంసమాదాయ సర్వస్మాత్కించిదాచమన్। ఉచ్ఛిష్టభాగధెయెభ్య స్సాదకంనిర్వపెద్భువి" = உண்டபின் எல்லாப் பதார்த்தங்களிலுந்து சிறிது சிறிது எச்சில்செய்து எடுத்துக் கொண்டு நீரோடு உச்சிட்ட பாகதேயர் பொருட்டு நிலத்தின் மேல் வடியும்படி உருட்டிவைத்தல் வேண்டும். எறு. காண்க.

(உச்சிட்ட பாகதேயர். எச்சிலே செல்வமாக முடையவர். என வே அதனற் றிருத்தியடைவோர்).

உச்சிட்டதான மந்திரம் தேவலராற் கூறப்பட்டது. మంత్రః॥ "రారవెపుణ్యనిలయె పద్మార్బుదనివాసినాం। అర్థినాముచకందత్తం (పాఠాంతరం - ప్రాణినాసర్వభూతానాం) హ్యక్షయ్యనుపతిష్ఠతు"=பாவத்திற்கு வாழிடமாகிய இரௌரவம் என்னும் நரகத்தில், பதுமம், அற்புதம் என்னும் எண்களால் வாசம் செய்திருக்கும் யாசகப் பிராணிகளுக்கும் மற்றெல்லா வுயிர்களுக்கும், என்னுற் கொடுக்கப்படும் உச் சிட்டநீர் கெடாததாக அவர்க்குச் சேர்ந்திருக்கக்கடவது. எறு. காண்க.

உத்தராபோசனம்.

வியாசர். వ్యాసః॥ "తతస్తృప్తస్సన్నమృతా పిధానమసీత్యపది శీత్వాతస్మాద్ది శాన్మానాగపసృత్య విధివదాచామెత్" = உண்டிதிருத்தலுகியபின் "அமృ తాపిధానమసి" என்ற மந்திரத்தினல் ஜலத்தையெடுத்து உத்தரா போசனஞ்செய்துகொண்டு அவ்விடம்விட்டுச்சிறுதூரம் சென்று ஒதுங்கி அந்த ஆசமனநீரை விழுங்கவேண்டும். எறு. காண்க.

உத்தராசமனம்.

அவ்வுத்தரா போசனவடிவமாகிய ஆசமனத்தைத்தேவலர் கூறினர். దేవలః॥ "భుక్త్వాచామేద్యథోక్తేనవిధానేనసమాహితః। శోధయేన్ముఖహ స్తౌచ మృదద్భిర్భుష్ణైరపి" = புசித்துக்கூறிய விதிப்படி ஆசமனஞ் செய்யவேண்டும். அமைதியுடையவனுய் நீரால் நன்றுக வாய் கொப்பளித்துக் கைக்கு மண்ணிட்டு அலம்பி எச்சிற் பூச்சின் மயக்கமில்லாதபடி சோதித்து விடவேண்டும். எறு. காண்க.

வாய்கழுவும்விதி.

கௌதமர். గౌతమః॥ "గండూషస్యాథసమయె తర్జన్యావక్త్ర శోధనం। కు ర్వీతయదిమూఢాత్మా రారవంనరకంవ్రజేత్" = கண்டூஷம் என்பது வாய் தீற்றிக்கழுவி நீரைக்கொப்புளித்து உமிழ்தல். வாய்கொப்பளிக் குஞ்சமயத்தில் சுட்டுவிரலால் வாயினைச் சோதிக்கலாகாது. அவ்வாறு செய்தால் அந்தமூடன் இரௌரவம் என்னும் நரகத் திற்குச்செல்வன். எறு. காண்க

வியாசர். வ்யாஸः॥ "ஹஸ்தம்ப்ரக்ஷால்யகண்டூஷம் யதிபிஃபேதவிசக்ஷணः। ஸதை வாம்ஶ்சபித்ர்யாம்ஶ்சைவ ஹ்யாத்மானமபிஷூதயேத்" = கையலம்பி வாய் கொப்பு ளித்தநீரை எந்த அவிவேகி, விழுங்குகின்றானே? அவன் தேவர் களையும் பிதிரர்களையும், அடித்துத் துன்பஞ்செய்தவ னவன். எறு. காண்க.

வியாசர். வ்யாஸः॥ "தஸ்மின்னாசமனங்குர்யா த்யத்ரஃபாண்டேஃதபுக்த்வான்। ய த்யுத்திஷ்ட்யனாசாம்தோ புக்த்வானா சனாத்ததः। ஸ்நானம்ஸத்யதிப்ரகுர்வீத நான்யதாப்ரய தோபவேத்" = எந்தக்கலத்தி லுண்கின்றானே? அந்தக் கலத்திற்றா னே விழும்படி ஆசமனஞ் செய்யவேண்டும். ஆசமனமென்பது ஈண்டு உத்தரா போசனமே யாம். புசிக்கும்படி யிருந்த ஆச னத்தின்மீதிருக்கும்போது உத்தராபோசனம் வாங்கிக்கொள்ள வேண்டும். அதனைப் பெறுமல் எழுந்தால் உடனே நீராடவேண் டும். அங்ஙனஞ் செய்யாவிட்டால் பிராயச்சித்தம் செய்துகொ ள்ளவேண்டும். எறு. காண்க.

புநராசமனம்.

கூர்மபுராணம். கூர்மபுராணே॥ "ஆசாம்தஃபுனராசாமே தாயம்கா₃ரிதி மம்த்ரதः। த்₃ருபதாம்வாத்ரிராவ்ருத்ய ஸர்வபாபப்ரணாஶினீம்। ப்ராணானாம்க்₃ரம்தி₂ரஸீத்யா லபே₂ த்₃ருத₃யம்ததः। ஆசம்யாம்கு₃ஷ்ட₂மானீய பாதாம்கு₃ஷ்டே₂துத₃க்ஷிணே। நிஸ்ஸி₃ஞ்சேத்₃தஸ்தஜல மூர்த்₄வ்ஹஸ்தஸ்ஸமாஹிதः। ஹுதாநுமம்த்ரணம்குர்யா ச்சி₃ரா₃யாமிதிமம்த்ரதः। அஷ்டா க்ஷரேணவ்யாத்மானம் யோஜயேத்₃ப்₃ரஹ்மணேதிஸः। ஸர்வேஷாமேவயாகா₃நா மாத்மயாக₃ஸ்பர ஸ்ம்ருதः। யோனேனவிதினாகுர்யா த்₃ருயாதிப்₃ரஹ்மணஸ்பதம்" ஆசமனஞ் செய்த வன் "ஆயம்கா₃ः" என்றமந்திரத்தை யுச்சரித்து மறுபடியும்ஆச மனஞ் செய்யவேண்டும். எல்லாப் பாவங்களையும் போக்கடிக்க வல்ல "த்₃ருபதா" எனவே "சிவேனமா" என்றமந்திரத்தை மூன்று தரம் செபித்து "ப்ராணானாம்க்₃ரம்தி₂ரஸிருத்₃ரः" என்ற மந்திரத்தால், இதயத்தைத்தொட்டுஅபிமந்திரத்து, பின்னரும்ஆசமனஞ்செய்ய வேண்டும். அந்தச்சேடமாகிய நீரை மேல்பக்கமிருக்குந் தன் கைப் பெருவிரல் மூனையால் வலக்கால் பெருவிரன்மேற் படும் படி ஒழுக்கவேண்டும். "ஹுதாநுமம்த்ரணம்" = ஹோமஞ் செய்த தை அபிமந்திரித்தல். (எனவே, உண்டவுணவைத் தேவதைப் பிரீதியாகும்படி மந்திரங்களோடு பிரார்த்திப்பது. இந்தக் கரு

மத்தை "த்ரயாம்ப" என்றது முதலிய மந்திரங்களாற் செய்து பின்னும் அஷ்டாக்ஷர மந்திரங்களால் தன் ஆன்மாவைப் பிரமத்தில் கலப்பிக்கவேண்டும். இந்த ஆன்மயாகம் எல்லாயாகங்களிலும் சிறந்தது. இவ்விதியால் யார் பிராணக்கினி ஹோத்திரத்தைச் செய்கின்றனே? அவன் பிரமலோகத்தை யடைகின்றன். எறு. காண்க.

அத்திரி. அத்ரிः॥ "ஆசாம்தோ ப்யశుచిస్తావ ద్యావత్పాత్రమనుద్ధృతం। ఉద్ధృతెప్యశుచిస్తావ ద్యావన్నోలిప్యతెమహీ। భూమావప్యవలిప్తాయాం తావత్సా ద్యదశుచిర్భవేత్। ఆసనాదుత్థితస్తావ ద్యావన్న స్పృశ్యతెమహీ" = ஆசமனஞ் செய்தவனாயினும் எச்சிற்கலத்தை யெடுக்கிறவனாயில் அசுத்தனாகவேயிருக்கின்றன். எச்சிற்கலத்தை எடுத்துவிடினும் அந்நிலஞ் சுத்தமாகச் சாந்து மெழுகுகிறவனாயில் அசுத்தனாக விருக்கிறன். நிலமெழுகினாலும் உண்ணுவதற்கிட்ட ஆசனத்திலிருந்து மெழுந்தவன் நிலந்தொடுகிறவனாயில் அசுத்தனாகின்றன். எ-று. காண்க.

சாதாதபர். శాతాతపः॥ "ఆచమ్యపాత్రమున్సృజ్య కించిదార్ద్రెణపాణినా। ముఖ్యాన్పాణీంత్సమాలభ్యనాభింపాణితలెనచ। భుక్త్వానైవప్రతిష్ఠెత నచాపార్ద్రెణపాణినా। పాణిమూర్ధ్నిసమాధాయ స్పృష్ట్వాచాగ్నింసమాహితः। జాతిశ్రెష్ఠ్యంసమాప్నోతి ప్రయోగకుశలొనరः" = ஆசமனஞ்செய்து அந்தபாத்திரத்தைவிட்டுவிட்டுச் சிறிது ஈரமுள்ள கையினல் மார்பைத்தொட்டுப்பிராணனைச் சிறிது தணியச்செய்து அங்கையால்தொப்புளைத் தடவவேண்டுவது. உண்டவுடனே வழிநடக்கலாகாது "నైఋతిశ్చెత" என்பதூஉம்பாடம். அதற்கு உண்டபின் ஓரிடத்தில் இருந்துவிடலாகாது என்பதுபொருள்). ஈரக்கையோடு வெளிப்படலாகாது. பின்புஅங்கையால்உச்சியைத்தொட்டு, அதன்பின்தீயைத்தொட்டு)எனவே. அங்கையை நெருப்பிற்காய்ச்சி) அமைந்தமனத்தோடு இவ்வாறு உண்ணுதலின் ஒழுக்கத்தினை உபயோகிப்பதில் வல்லவனையுள்ளவன் குலத்திற்சிறந்தவனாகின்றன். எ-று. காண்க.

உண்டபின்கடவுளைத்தியானித்தல்.

விஷ்ணுபுராணம். స్వస్థెనప్రశాంతచిత్తస్తు కృతాసనపరిగ్రహः। అభీష్టదెవతానాంతుకుర్వీతస్మరణంనరः। అగ్నిరాప్యాయయన్థాతూ న్పార్థివంపవనెరితः। దత్తావ

కాశానభసా జరయన్నస్తుమారుతః। అన్నంబలాయమెధూమె రపామగ్నెర్నభస్వతః। భవత్వెతత్పరిణతం మమాస్త్వవ్యాహతంసుఖం। ప్రాణాపానసమానానా ముదానవ్యానయోస్తథా। అన్నంపుష్టికరంచాస్తు మమాస్త్వవ్యాహతంసుఖం॥ అగస్తిరగ్నిర్బడబా నలశ్చభుక్తంమయాన్నం జరయత్వశెషం। సుఖంమమైతత్పరిణా మసంభవం యచ్చత్వరొగంమచా స్తుదెహె॥విష్ణుస్సమస్తెం ద్రియదెహదెహీ ప్రధానభూతొ జగతొస్యచైకః। సత్యెన తెనాత్తమశె షమన్నమారొగ్యదం స్యాత్పరిణా మవెాతుః॥ విష్ణురాత్తాతథైవాన్నం పరిణా మస్తథైవచ। సత్యెనతెనమద్భుక్తం జీర్యత్వన్నమిదంతథా। ఇత్యుచ్చార్యస్వహస్తెన పరిమృజ్యాత్తథోదరం। అనాయాసప్రదాయీని కుర్యాత్కర్మాణ్యతంద్రితః" = பின்பு சுகமாகச்சாந்த மனமுடையவனுய் ஆசனத்தின்மீது இருந்து, தன்னிஷ்ட தெய்வத்தைத் தியானிக்கவேண்டுவது. என்னுடம்பில், தியானது வாயுவினுல்தூண்டப்பட்டுப் பிருதிவிதாதுவினைத் தணித்தல் செய்க. வாயு ஆகாயத்தாலிடங்கொடுக்கப்பட்டு, அங்கத்தைச் சமிப்பித்தல் செய்க. அங்கம் எனது பிருதிவி, அப்பு, தேயு, வாயுக்களுக்குவன்மைசெய்க. அதுநன்முகப்பக்குவப்பட்டு, எனதுசுகம் கெடாதிருத்தலைச் செய்யவேண்டும். அங்கம் எனது பிராணன்முதலியவற்றிற்குப் புஷ்டியை உண்டுபண்ணி எனக்கு நீக்கமற்றதாகிய சுகமாகுக. அகத்தியனர், அக்கினி, வடவைத்தீ, இவர்கள் என் அங்கம் சேடமின்றிச் சமிக்கும்படிசெய்க. எனது உடம்பில் அன்னம் பக்குவமாய் உருவங்கடோறும் பொருந்தும்போது, அவ்வன்ன இரதம் தாதுக்களுக்கு வியாபிப்பதனல் எனக்கு நோயில்லாத சுகமுண்டாகுக. எல்லா இந்திரியங்களும் எல்லாத்தேகமும் தன்னதாகவுடைய எங்குநிறைந்த அறிவே விஷ்ணு என்னப்படும். அவர் ஒருவரே இவ்வுலகத்துக்குத் தலைவனுகவிருக்கின்றூர். எனவே மகாபூதமாய் ஏனைய பூதங்களை விழுங்குகின்றூர் என்றபடி. உண்மையாகிய அவ்வறிவினல் அதிட்டானமாகப் பொருந்தியுள்ள அங்கமெல்லாம் சுகபரிணமத்திற்குக் காரணமாகியும், நோயில்லாமையைத் தருவதாகியும் ஆகுக. ஆன்மாவும், அங்கமும், பரிணமமும், விஷ்ணுவேயாம். அச்சத்தியத்தினல் நான் உண்ட அங்கம் அவ்வாறு சீரணமாகுக (எனவே-உலகமெல்லாம் விஷ்ணுவென்னும் அதிட்டானத்தில் அமைக்கப்பட்டுள்ளதாதலின் அதிட்டானமொன்றே சத்தியமென்னு நம்பிக்கையை என்னறிவுகொள்வதற்கு நான் தின்ற அன்னங்காரணமாகுக. என்பது. என்னுகாரம் எனக்கு

பிரமஞானத்தினையுண்டுபண்ணுகவென்றகருத்து). இவ்வாறுகூறித் தன்கையினல் வயிற்றினைத்தடவவேண்டும். பின்பு உறங்காமல் இளைப்பினைத் தராத தொழிலினைச் செய்தல்வேண்டும். எ - று. காண்க.

தாம்பூலவிதி.

மார்க்கண்டேயர். மார்க்கண்டேயஃ॥ "భూయోపాద్యచమ్యకర్తవ్యం తత్తస్తాం బూలభక్షణం" = மறுபடியும் ஆசமனஞ்செய்து பின்பு வெற்றிலைப் பாக்குத்தின்னல்வேண்டும். எ-று. காண்க.

வசிஷ்டர். వశిష్ఠఃll "సుపూగంచసుపర్ణంచ సుచూర్ణంచసుగంధిమత్। అదత్వాద్విజదేవెభ్య స్తాంబూలంవర్జయెద్బుధఃl ఏకపూగంసుఖారొగ్యం ద్విపూగంనిష్ఫలం భవెత్। అతిశ్రేష్ఠంత్రిపూగంస్యా దధికంనైవదూష్యతి। పర్ణమూలెభవెద్వ్యాధిర పర్ణాగ్రెపాపసంభవఃl చూర్ణపర్ణంహరత్యాయు శ్శిరాబుద్ధినాశినీ। తస్తాదగ్రంచమూలంచ శిరాంచైవవిశెషతఃl చూర్ణపర్ణంవర్జయిత్వాతాంబూలంభూచతిద్విజఃl" = நல்லபாக்கு, நல்லவெற்றிலை, நல்லசுண்ணாம்பு, நல்லமணத்தினையுடையவேலம், தக்கோலம், இலவங்க முதலியனவும் பச்சைகர்ப்பூரமுமாகிய வாசனைப்பண்டங்களும் உடையவாகியிருக்கும் தாம்பூலத்தினை அறிந்தவன் தேவர்கட்கும் வேதியர்க்கும் உதவாதுதான் அனுபவித்தலாகாது. ஒற்றைப்பாக்கு சுகத்தையும் நோயில்லாமையையும் தரும். இரண்டுபுண்ணியத்தை ஒழிக்கும். மூன்று சிறந்தது. இதற்குமேலிட்டாற் குற்றமில்லை. வெற்றிலையின் அடியிலே=காம்பிலேநோயும், முனையில் பாவமும், உண்டாம். நடுநார் அறிவைக்கெடுக்கும். சுண்ணாம்புவைத்த வெற்றிலை ஆயுளைக் கெடுக்கும். (எனவே. மாரடைத்துப் பிராணச்சேதமுண்டாம். ஆதலால் சுண்ணாம்பு காரத்தையும் பாக்கின் துவர்ப்பினையும் கெடுத்து, குண்டலிக்குச் சொக்குதலை விடுவிக்கத்தக்க சிக்கோடும் தேங்காய்க்கொப்பரை வாதுமைவித்து, நெய், குளிர்ந்தசலம் புளித்தபண்டம் இவைகளைத் தாம்பூலவழக்கத் தொடக்கத்திலும், தேகத்திற்கு இளைப்புண்டானகாலத்திலும் புத்திமான்கள் உபயோகிக்கின்றனர்). ஆதலால் அடிக்காம்பினையும் முனையையும் நடுநாரினையையும் சுண்ணாம்பு வெற்றிலையினையும் விடுத்து அறிவுடையவன் தாம்பூலத்தைத்தின்னுகின்றுன்.எ-று. காண்க. (புத்தியுடையவன் "బుధఃl" = என்றதனல் தாம்பூலத்தைத் தின்னு

வது முகத்திற்குச் சுத்தமாயும் அழகாகிய மங்கலகரமாகியும், ஒருவகையான உச்சாகத்தை யுண்டுபண்ணுவதாயும், தேவதா யோக்கியமானதாயு மூள்ளதாதலின் திருவுடையதாயும், உள்ள தென்று குணதோஷங்களை யுணர்ந்து உடற்கூற்றுக்குத் தக்க படி உபயோகித்தல் வேண்டுமென்னுங் கருத்தாகின்றது. வெற் றிலைப்பாக்குத் தின்பது பெரும்பாலும் காம்பிய மன்றி வைதிக விதிப்பாடல்ல. ஆயின் வசிட்டமிருதி முதலியவற்றின் கருத்து என்னெனில்? அவரவர் இச்சையால் தாம்பூலம் செய்கையில் அபாயமில்லாதபடி நல்ல திரவியங்களோடு குற்றமுடைய பாகங் களை யொழிக்கவேண்டும் என்னும் நிடேதங்களைத் தெரிவிப்பதே கருத்தென் றுணரத்தக்கது. இது பிரமசரியருக்கும் விரதநியம முடைய இல்லறத்தாருக்கும், துறவிகட்கும், கைம்பெண்களுக் கும் இளைப்பும் பலகினமு முடையவர்க்கும், சிறுவர்க்கும், மிகவி ருத்தருக்கும் ஆகாதென மிருதிநூலாலும் ஆயுள்வேதத்தாலும் விலக்கப்பட் டிருக்கின்றது. இதனல் அநேகநற்குணங்க ளிருப் பினும் ஒவ்வொரு காலத்தில் பெரிய அபாயமும் உண்டாகின் றது. இதனை மிகவழக்கஞ் செய்தால் உடம்பிற்கு வினைவில் கிழத்தனம் உண்டாமென்று சிலவைத்தியநூலுட் கூறப்பட்டுள் ளது. இது காமிய்மாதலின் இவ்வழக்கம் நெடுநாளாகப் பெரு வழக்கத்திற்கு வந்தது. ஒழுக்கத்திற்கு மாறுபா டுண்டாகாதபடி கொள்ளவேண்டுவது).

கிரகணம்வரில் உண்டிவிதி.

இங்குவிரித்துக் கூறப்பட்ட வுண்டியானது கிரகண கா லத்தில் விலக்கப்பட்டதென மனுகூறினர். మనుఃఽ॥ "చంద్రసూర్యగ్రహ ణాద్యా స్నాత్వాచాద్యాద్విముక్తయోఃl అనుక్తయోరస్తగయో రథదృష్ట్వాపరేహని" சந்திரசூரிய கிரகணகாலத்தி லுண்ணலாது. இராகுவிழுல் விடப் பட்ட பின் ஸ்நாநஞ்செய்து புசித்தல்வேண்டும். விடுகையில்லா மல் கிரகணம்பற்றி யுள்ளபோதே அஸ்தமானமா யிருந்தால் மறுநாள் விடப்பட்ட அவ்விம்பத்தினைப் பார்த்து நீராடிப் புசிக்கவேண்டும். கிரகணகாலம் என்பது தொட்டதுமுதல் விடு கிறவரையில். எறு. காண்க.

இந்தப் போசனவிலக்குக் கிரகணகாலத்தில் மாத்திரமே யன்று. கிரகணத்திற்குச் சற்றுமுன்னும் ஆகாதென்று வியாசர்

கூறினர். வ்யாஸः॥ "நாச்யாத்ஸூர்யக்ரஹாத்பூர்வ மஹ்நாஸாயம்சஶிக்ரஹாத்। க்ரஹ காலேசநாஸ்நியா தாஸ்நாத்யாஸ்நியாச்சமுக்தயோः। முக்தேசஶிநிபுஞ்ஜீத யதிநஸ்யாந்ந ஹோநிசா। அமுக்தயோரஸ்நயோ ரதஶ்ருஷ்ட்வாபரேஹநி" = சூரிய கிரகணத்திற்கு முன்பகலில்புசிக்கலாது, சந்திரகிரகணத்திற்குமுன்இரவில்புசிக்க லாது. கிரகணகாலத்திலும் புசிக்கலாகாது. கிரகணம் விட்ட பின்பு ஸ்நாநஞ் செய்து புசிக்கலாம். ஆனல் சந்திரகிரகணம் விட்டுவிட்டாலும் அரையிரவாகா விட்டால் புசிக்கலாம். கிரக ணம் விடாமல் அஸ்தமய மாய்விட்டால் மறுநாள் சுத்தபிம்பத் தைப் பார்த்துப் புசிக்கவேண்டும். எறு. காண்க.

கிரகணத்திற்கு முன் புசிக்கலாகாதென்ற விலக்கிலுள்ள விசேடத்தை விருத்த வசிட்டர் கூறினர். வ்ருத்தவஶிஷ்டः॥ "க்ரஹணந்து பூவெதிந்தோர்ஸ ப்ரதமாத஧்யாமதः। பூஞ்ஜீதாவர்தநாத்பூர்வம் பஶ்சிமேப்ரதமாத஧ः। ரவெஸ்தூவர்தநாதூர்த்வமர்வாகேவநிஶீததः। சதுர்தேப்ரஹரேசேத்ஸ்யச்சதுர்தப்ரஹராத஧ः"= இராத்திரி முதல்யாமம் ஆனபின்பு சந்திரகிரகணம் வருகிற தினத்தில் பகலிலுச்சிக்கு முன்பாகவே புசிக்கவேண்டும். இராத் திரி நாலாவது யாமத்தில் சந்திரக்கிரகணம் வந்தால் இராத்திரி முதல் யாமத்துக்கு முன்பாகவே (எனிற்பகலில்) உண்ணவேண் டும். பகலில் உச்சி கழிந்த பின்பு சூரிய கிரகணம் வந்தால், முன்பாகப் பாதிராத்திரிக்காயினும்பின்புசிக்கலாம். பகல்நாலாம் யாமத்தில் சூரிய கிரகணம் வந்தால் முன்னிரவின் நாலாவது யாமத்திற்காயினு முன்பாகப்புசிக்கலாம். எறு. காண்க. (இதன் கருத்து. என்னெனில் எந்தயாமத்துள் சந்திர கிரகணம் வரு கின்றதோ! அந்த யாமத்திற்காயினும் முன்மூன்று யாமத்திலும் உண்ணலாகாது. அன்றியும் எந்தயாமத்தில் சூரியகிரகணம் வரு கின்றதோ அந்த யாமத்திற்கு முன் நாலுயாமத்துள்ளும் புசிக்க லாகாது.

விருத்தகௌதமர். வ்ருத்தகௌதமः॥ "சூர்யக்ரஹேது நாஶ்நியா தூர்வ்யாமசதுஷ்டயம்। சந்த்ரக்ரஹேது யாமாஸ்த்ரீ நாபலவ்ருத்தாதுரைர்விநா"= சூரியகிரகணத்துக்கு முன் நான்கியாமமும், சந்திர கிரகணத் திற்கு முன் மூன்றியாமமும் உண்ணுதொழிதல்வேண்டும். மா தர், சிறுவர், விருத்தர், ஆதுரர், இவர்கட்கு இவ்விதியில்லை எறு. காண்க.

பாலர்முதலியோர் காலநியமம்.

மச்சபுராணம், மத்ஸ்யபுராணே॥ "அபராஹ்ணே நமத்யாஹ்னே நசாயம்னது சங்கவே। భుజీతసంగవెచైవ స్నపూర్వంభుక్తిమాచరేత్" = சாயுங்காலயிற் கிரகணமுண்டானல் சாயுங்காலத்திலும், அபராந்நத்திலும், மத்தியாந்நத்திலும் உண்ணலாகாது. சங்கவகாலத்துள் புசிக்கலாம். சங்கவகாலத்திற் கிரகணமானல் அதற்குமுன் புசிக்கலாகாது. எறு. காண்க. இந்தவிதி சிறுவர், பாலர், விருத்தர், ஆதுரரையும் குறித்தது.

கிரகணத்திலுண்டோன் பிராயச்சித்தம்.

வல்லவன் = பசிபொறுக்க வல்லவன் உண்டால் பிராயச்சித்தம் செய்கவென யாஞ்ஞவல்கியர் கூறினர். యాజ్ఞవల్క్యః॥ "చంద్రసూర్యగ్రహేభుక్త్వా ప్రాజాపత్యేనశుధ్యతి। తస్మిన్నేవదినేభుక్త్వా త్రిరాత్రేణైవ శుధ్యతి" = கிரகணகாலத்தில் புசித்தவன் பிராஜபத்திய கிருச்சிரத்தால் சுத்தனகின்றன். அந்தத்தினத்தில் விலக்கிய காலத்துட் புசித்தால் மூன்றுதினம் பட்டினிகிடந்தாற் சுத்தனவான். எறு. காண்க.

கிரஸ்தோதயசந்திரக்கிரகணவிடயம்.

விருத்தவசிட்டர். వృద్ధవశిష్ఠः॥ "గ్రస్తోదయెవిధోరపూర్వం నాహోభ్రజ నమాచరేత్" =சந்திரன் கிரகணபரிசத்தோடு புறப்பட்டால் அதற்குமுன் அப்பகலில் உண்ணலாகாது. எறு. காண்க.

கிரஸ்தாஸ்தமானவிடயம்.

பிருகு. భృగుః॥ "గ్రస్తావెవాస్తమానంతు రవీందూ ప్రాప్నుతోయది। తయోరపరెహ్యురుదయె స్నాత్వాభ్యవహరెన్నరః" = சூரிய சந்திரர்கள் கிரகணம்பற்றி விடாமலே அத்தமானமாயினல் மறுநாள் அவ்விம்பங்கள் உதயமானபின்பு நீராடிப் புசிக்கவேண்டும். எறு. காண்க.

விருத்தகார்க்கியர். వృద్ధగార్గ్యః॥ "సంధ్యాకాలెయథారాహు ర్గ్రసెతెశశిభాస్కరా। తదహ్నైవభుంజీత రాత్రావపికదాచన" = சந்திகாலத்தில் சந்திராசூரிய கிரகணமுண்டானல் அப்பகலில் புசிக்கலாகாது. ஒவ்வொருவேளை யிரவிலும் புசிக்கலாகாது. எ – று. காண்க.

இராத்திரிசிராத்தவுண்டி விடயம்.

"స్నాత్వాచాద్యాద్విముక్తయోః" என்ற மனுவுரையாலும், "స్నాత్వాస్నా యాచ్చముక్తయోః" என்ற வியாசவுரையாலும், "ముక్తఏవస్నాతుభుంజీత స్నా నంకృత్వాతతఃపరం" என்ற விஷ்ணுதருமோத்தர வுரையாலும், "రాత్రావ పికదాచన" என்ற விருத்தகார்க்கியர் உரையாலும், "ముక్తేశశినిభుంజీత యది నస్యా న్నహానిశా" என்ற வியாசவுரையாலும் சந்திரகிரகணம் விட்டபின்பு நீராடிப்பாகஞ்செய்து உண்பதற்குப்பாதிராத்திரிக் குள்ளாகக் காலம்நேர்ந் திருந்தால் புசிக்கலாமென்று பொருள் படுகின்றது. சிராத்த வுண்டியில் "మృతేహనిపరిత్యజ్య చండాలఏకోటిజన్మసు" = இறந்த நாளில் சிராத்தஞ்செய் யாமல் விட்டாற் கோடிசன்மத்துள்ளுஞ் சண்டாளனாகின்றான். "అవంధ్యంది వసంకుర్యాత్" = இறந்தநாளை வீண்செய்யலாகாது. என்ற வுரையால் அந்த நாளில் சிராத்தத்தினைச் செய்யவேண்டுவ தென்று தெரிய வருகின்றது. "గ్రస్తోదయెవిధోరపిపూర్వం నాహార్భోజనమాచరేత్" என்ற விருத்தவசிட்ட ருரை யாலும் "తదహర్నైవభుంజీత" என்ற விருத்தகார்க்கிய ருரையாலும், பிடித்த உதயமாகிய சந்திர கிரகணத்துள் பகலுண்டி விலக்கப் படுகின்றது. "ననక్తగ్రంర్తాద్ధంకుర్వీత" இரவில் சிராத்தஞ் செய்யலாகாது என்ற சுருதி யால் இராத்திரி சிராத்தபோசனம் விலக்கப்படுகின்றது. சிராத்தத்தினை விடலாகாது பகலும் செய்யலாகாது இரவிலும் செய்யலாகாது. பிறஎன் னெனில்?

இரவின்முதல் யாமத்திற்றானே கிரகணம் விட்டதாயினும், స్నాత్వా చాద్యాద్విముక్తయోః" என்றதுமுதலிய மிருதி யுரைக்காயினும் "ననక్తగ్రంర్తా ద్ధంకుర్వీత" என்ற சுருதியுரையே சிறந்ததாமாதலின் "ప్రబలేనదుర్బలస్యబాధః" என்ற வழக்காலும் சிராத்தம் வைதிககருமமே யாதலின் வேதவுரையே சிறந்த விதியா யிருத்தலினாலும், "భుంజీతావర్తనాత్పూర్వం" என்ற விருத்த வசிட்ட வுரை, அன்று பகலினுள் சிராத்தபோசனம் செய்யலாம் என்னுமுடிவு நிலையைத் தெரிவித்தலாலும். "పరేద్యురుదయేస్నాత్వా భ్యవహరేత్" இரண் டாநாளுதயத்தில் நீராடிப் புசிக்கலாமென்ற விருத்தகார்க்கிய மொழியுள் "ఉభయే" என்றதனால் குரியவுதயம் என்று பொருள்கூறி இரண்டாநாட் பகலிலாயினும் சிராத்தம் செய்யலாமா யிருத்தலாலும் ஒருக்காலும் இர விற் சிராத்தம் செய்யலாகாதென்று சிலகேவலத் திராமிடர்கள் விலக்கு கின்றனர்.

"యదినస్యాన్నహానిశా" என்ற வியாசவுரையால் இராத்திரிமுதல் யா மத்துள் கிரகணம்விட்டால் இரண்டாவது யாமத்துள் சிராத்த போச

னத்திற்குக் காலம் இருத்தலினாலும், "భుంజీతావర్తనాత్పూర్వం" உச்சிப்போ திலுக்குள் உண்ணலாமென்ற விருத்தவசிட்ட வுரை "గ్రహణంతుభవేదింద్వో ప్రథమాదధియామతః" இராத்திரிமுதல் யாமம்கடந்தபின் சந்திரக்கிரகண முண்டான பக்ஷத்தில் என்ற அவருரையே கேவலத்திராமிடர் கூற்றுக்குத் தடையா யிருப்பதாலும், "తమోరిపరెద్యు రుదయే స్నాత్వాభ్య వహారెన్నరః" என்றவிருத்தவசிட்டவுரையில் "తమోః" அவர்களுடைய, எனவே சந்திர சூரியர்களுடைய என்றபடி "ఉదయే" மண்டலம் தோன்றுகையில் என்ற பொருள் படுதலின், அவ்வுரை கிராஸ்தாஸ்தமான விடயமா யிருத்தலாலும் இராத்திரிமுதல் யாமத்துள் சந்திரகிரகணம் விட்டவழி பகற் சிராத்தபோசனம் செய்வதற் கிடமில்லை. அன்றியும் "అపరాహ్ణే పిత్ర్యాన్యజేత్" அபரான்னகாலத்தில் பிதிர்வேள்வி செய்யவேண்டும் என்றலின் உச்சிப் போதினுக் காயினும் முன்னுகச் சிராத்தத்திற்குக் காலமில்லாமை யாலும் "యదినస్యాన్మహానిశా" என்ற வியாச வுரையாலும் இராத்தி சிராத்தத்திற்குக் காலமிருத்தலினாலும் "మృతేహనిపరిత్యజ్య చండాలదికోటిజన్మసు," "అవంధ్యంది వసంకుర్యాత్" என்னு முரைகளால்சிராத்தத்தினை விடலாகா; விட்டாற் பாவ மென்பதனாலும் "ననక్తగ్ంశ్రాద్ధంకుర్వీత என்ற சுருதிநிடேதம் "అన్యత్రరాహుద ర్శనాత్" இராகுவைப் பார்த்தால் என்பது கிரகணகாலத்தை யொழித்து மற்றைய நாளில் இராத்திரி சிராத்தம் செய்யலாகா தென்னும் மற்றோர் சுருதி மொழியால் கிரகணகால இராத்திரி சிராத்தத்திற்குத் தடையில்லை என்று தோற்றுவதனாலும். கிரஸ்தோதய சந்திர கிரகண விடயத்திலாயி னும் முதல் யாமத்துள்ளேதானே விடப்படுகின்ற சந்திரகிரகண விடயத் திலாயினும் அவ்விரவே இரண்டாம் யாமத்துள் சிராத்த போசனம் ஆகு மென்று ஆந்திர கன்னட மகராட்டிரர் முதலியர் கூறுகின்றனர்.

"తుల్యబలవిరోధేవికల్పః" ஒத்ததரமுடைய பிரமாண வுரைகட்குப் பொ ருள் மாறுபாடுவந்தவழி இரண்டிலொன்று செய்யலாமென்னும் விகற்ப நிலை யுண்டாகின்றது. கிரஸ்தாஸ்தமானசந்திரக்கிரஹணத்தில் மறுநாள்பகலுண்டி யில்லாமையால் சிராத்தஞ்செய்யலாகாது இராத்திரிசிராத்தமும் பொதுவகை யால்விலக்கப்பட்டது. அன்றிரவுஇராகு தரிசனமின்மையாலும் சிராத்தத்திற்கு விதிப்பு இல்லை. சிராத்தத்தையும் விடலாகாது எனில்? పరెద్యురుదయెస్నాత్వా என்றபிருகுமொழியால் மறுநாட்பகல் சிராத்தபோசனமாத்திரம் ஆமென்றும் மற்றவர்க்குச்சந்திரனுதயமான பின்பு ஸ்நானயாகமுதலிய செய்து இரவிலுண் டி கொள்கவென்றும், கிருஷ்ணையாற்றின்வடக்குள்ளவர்கூறுகின்றனர். கிரஹ ணம், ஆசூசம்=சூதகம்போலசிராத்தத்திற்குத்தடையாகின்றது. மறுநாள்சந் திரதரிசனகாலம் வந்தால் அத்தடையொழிகின்றது. ஆசூசமுடிவில் சிராத்தம் நேர்ந்தவாறு போலச்சுத்த சந்திரோதயம்வந்தஅளவில்அப்பகலின் சிராத்தம்

நேரிடுகின்றதென்று, கிருஷ்ணயின் தென்பாகத்துள்ளவர் கூறுகின்றனர். இவ் விடயத்தில் அவரவர்முன்னோர்வழக்கே விதியாம்.

விஷ்ணு தருமோத்திரம். விஷ்ணுதர்மோத்தரே॥ "அஹோராத்ரம்நபுங்க்த்வ்யம் சம்ப்ரஸூர்யக்ரஹோயதா। முக்தம்ஹ்யஷ்ட்வாதுபுஞ்ஜீத ஸ்நானம்க்ருத்வாததஸ்பரம்"= எப்பொழுது சந்திர சூரியகிரகணம் வருகின்றதோ? அப்போது இரவும் பகலும் புசிக்கலாகாது (எனவே சந்திர கிரகணத்துக்கு முன் அன்றிரவும் பகலும் புசிக்கலாகாது. சூரியகிரகணத்தின் முன் அப்பகலும் பின்னிரவும் புசிக்கலாகாது. சந்திர கிரஹணம் கிரஸ்தாஸ்தமானல் அன்றிராத்திரியும் மறுநாள் பகலும் புசிக்கலாகாது. சூரியக்கிரஹணம் கிரஸ்தாஸ்தமானல் அன்றை யபகலும் அவ்விரவும் புசிக்கலாகாது என்றபடி). கிரகணம் விட்டபின்பு சுத்தமண்டலம்பார்த்து ஸ்நானஞ்செய்து பின்புபுசிக்கவேண்டும். எறு. காண்க.

சுத்தமண்டலத்தைப்பார்த்து, என்றதேல், மேக முதலியதடைநேரிட்டால் பார்த்தல்கூடாதே எனில்? "த்ருஷ்ட்வா"=பார்த்து என்ற சொல்லினுக்கு நாலுணர்ச்சியே நோக்க மாதலின், நாலுணர்ச்சியாலுணர்ந்து என்றுகொள்க என விருத்தகௌதமர் கூறினர். வ்ருத்தகௌதமஃ॥ "சம்ப்ரஸூர்யக்ரஹோனாத்ய த்ஸ்மின்னஹனிபூர்வதஃ। ராஹூர்யமுக்தம்விஜ்ஞாய ஸ்நாத்வாகுர்வீதபோஜனம்" = சந்திர சூரிய கிரகணம் வந்தவழி முன்பாக அத்தினத்தில் புசிக்கலாகாது. இராகு விட்டகாலத்தை யுணர்ந்து பின்பு நீராடியுண்க. எ-று. (ஈண்டு, "விஜ்ஞாய"=உணர்ந்து, என்று நாலுணர்ச்சிக்குத்தலைமை கூறப்பட்டது).

இங்ஙனமாயின், மறுநாள் உதயத்திற்கு முன்பாகவும் நாலுணர்ச்சி யுண்டாமாதலின் கிரஸ்தாஸ்தமானத்திலும் மறுநாள் சுத்த மண்டலம் உதயகாலத்தையெதிர் பார்க்கவேண்டிய அவசியமில்லாமலே முன்பு புசிக்கலாமே எனில்? அற்றன்று.

"தயோர்திபரேத்யுருதயே ஸ்நாத்வாப்யவஹரேன்னரஃ" = மறுநாள் கிரகணம் விட்டசூரிய சந்திரர்களின்சுத்த மண்டலம் வெளிப்பட்டபின் நீராடியுண்க. "அஹோராத்ரம் நபோக்தவ்யம்" =பகலிரவு புசிக்கலாகாது, என்ற இவ்விருமொழியால் மேற்கூறிய விலுவுக்குஇடமில்லை என்று கொள்க.

ஸ்காந்தபுராணம். స్కందపురాణే॥ "యదాచంద్రగ్రహస్తాత్ర నిశీథాత్పరతోభవేత்। భోక్తవ్యంతత్రపూర్వాహ్ణోనాపరాహ్ణోకథంచన। పూర్వంనిశీథాద్గ్రహణం యథాచంద్రస్యవాభవేత்। తదాదివానకర్తవ్యం భోజనంశిఖివాహన"=மைந்த! எப்பொழுதுபாதிராத்திரியானபின்பு சந்திரகிரகணம் வருகின்றதோ? அன்றைய பகல் உச்சிப்போதினுள்ளாகவே புசிக்கவேண்டும் உச்சிகழிந்தபின்பு எவ்வகையாலும் புசிக்கலாகாது. பாதிராத்திரிக்குமுன்பாகவே சந்திர கிரகணம்வந்தால் அன்றைய பகலிலேயேபுசிக்கலாகாது. எ-று. காண்க. இந்தச்சிவவாக்கியத்திற்கு சந்திர கிரகணத்திற்கு முன் மூன்றியாமகாலம் புசிக்கலாகாதென்பது கருத்தாகக்கொள்க. என்னை? அதன்கருத்தையுணர்ந்த விருத்த கௌதமர். "చంద్రగ్రహేతుయామాంస్త్రీన్" = சந்திர கிரஹணத்து முன் மூன்றியாமம்விட்டுப் புசிக்கவேண்டும் என்று விசேடமொழி கூறியிருத்தலின்.

கிரஹணோபவாசம்.

பாவம் கெடவேண்டுமென்னும் எண்ணமுடையவன் கிரஹணம்வந்தபோதுஒருதினமுற்றும்பட்டினி கிடக்கவேண்டுமென்று தக்ஷர்கூறினர். దక్షుః॥ "అయనేవిషువేచైవ చంద్రసూర్యగ్రహేతథా। అహోరాత్రోషితస్నాత్వా సర్వపాపైఃప్రముచ్యతే"=கடகசங்கிரமணம், மகரசங்கிரமணம், துலைச்சங்கிரமணம், மேடசங்கிரமணம், சந்திரகிரகணம், சூரியகிரணம், இவ்வாறு பருவங்களிலும் நீராடி ஒருபகலும் ஓரிரவும் பட்டினி கிடந்தவன் எல்லாப் பாவங்களாலும் விடப்படுவன் என்று. காண்க. இது காமிய வுபவாசம்.

புத்திரர்கலையுடையவன் காமியவுபவாசம் செய்யலாகாது என நாரதர் கூறினர். నారదుః॥ "సక్రాంత్యాముపవాసంచ కృష్ణైకాదశివాసరే। చంద్రసూర్యగ్రహేచైవ నకుర్యాత్పుత్రవాన్గృహీ"= சங்கிராந்திகளிலும், கிருஷ்ணபக்ஷ ஏகாதசியிலும் சந்திரசூரிய கிரஹண காலங்களிலும் மக்கட்பேறுடைய வில்லறத்தான் காமியவுபவாசம் செய்யலாகாது. எ-று. காண்க. கிரஸ்தாஸ்தமான மாலையோ? "అహోరాత్రంనభోక్తవ్యం" என்றவிலக்கு விதியாலுண்டாகும் பட்டினிநித்தமான தாமாதலின் அதனைப்புதல்வர்ப் பேறுடையவனும் செய்யவேண்டும்.

தேசாந்திரகிரஹணவிடயம்.

தானிருக்கும் காட்டில் காணத்தக்ககாலத்தில் வெளிப்படாமல், உலகத்தின் ஏனைய பாகங்களில் இருப்பவர்க்குக் காணத்தக்க கிரகணம் உண்டாவதாக நூலாராய்ச்சியால் தோற்றவரின் ஸ்நாநதானமுதலிய கருமங்களை அனுட்டிக்க வேண்டுவதில்லை என்று ஷடுத்திரிம் சதுமதத்துள் கூறப்பட்டது. మట్ర్ర్ంశన్న తె॥ "సూర్యగ్రహోయదారాత్రౌ దివాచంద్రగ్రహస్తథా। తత్రస్నానఞనకుర్వీత దద్యాద్దానంన చక్వచిత్"=இரவில் சூரியகிரணம் என்று தெரியவருமாயினும், பகலில்சந்திர கிரஹண மென்று தெரியவருமாயினும் ஸ்நாநதானங்களையெங்குஞ் செய்யவேண்டுவதில்லை. எறு. காண்க. (எனவே எந்தநாட்டிற்கு நூளலவால் கிரகணம் காணப்படுவதில்லை யோ? எந்தநாட்டில் யார்க்கும் கிரஹணம் காணப்படுகிற தில்லையோ? அந்தநாட்டி லுள்ளவர்கள், மற்ற நிலத்திலுள்ளவர்க்குக் காணப் படுகின்றகாலத்தில்தருமகருமங்களையனுட்டிக்கவேண்டாவென்ற கருத்து).

உண்டியின்விதி முற்றிற்று.

உண்டபின் செய்வன.

இங்ஙனம் உண்டியின்வனையில் விதிக்கப்பட்ட தொழிலால் பகலின் ஐந்தாவது பாகத்தைக் கழிக்கவேண்டுவது. ஐந்துபாகத்திற் செய்யவேண்டுவனவாகிய தொழில்களைக் கூறியது பகலின் ஏனையமூன்று பாகத்துள்ளும் செய்வனவற்றிற்கு உபலக்கணமாக விருக்கின்றது. அவற்றினைத் தகூஷர்கூறினர். దక్షः॥ "భుక్త్వా తుసుఖమాస్థాయ తదన్నంపరిణామయత్। ఇతిహాసపురాణాని ధర్మశాస్త్రాణిచాభ్యసేత్। వృథావివాదవాక్యాని పరివాదంచవర్జయేత్"=உண்டு சுகமாக விருந்து உண்ட வுண்டியைச் சீரணிப்பித்துக்கொண்டு, இதிகாசங்களையும், புராணங்களையும், தருமசாத்திரங்களையும் பழகுதல் செய்யவேண்டும். வீணனவார்த்தைகளையும், தருக்கவாதங்களையும், பிறனைப்பழிக்கும் பழிப்புரைகளையும் விட்டுவிடவேண்டும். எறு. காண்க

விஷ்ணுபுராணம். விஷ்ணுபுராணே॥ "அனாயாஸப்ரதாயீனி குர்யாத்கர்ம்யாதந்த்ரிதஃ। நாஸச்சாஸ்த்ரவிரோதேன ஸந்மார்கார்தபரோதினா। தினனயேத்தஸ்ஸந்த்யா முபஸ்ப்ருஸ்ப்ருஸ்யமாஹிதஃ" = இளைப்பைத் தராத தொழில்களைச் சோம்பலின்றிச் செய்யவேண்டும். நன்மார்க்கத்திற் சரித்தவர்க் குண்டாகும் பயனுக்கு விரோதமாக, பயனுமுண்மையுமற்ற நூல்களில் பொழுதுபோக்கலாகாது. சாயுங்காலத்தில்அமைதியோடு சந்தியாவந்தனஞ்செய்யவேண்டும் என்று. காண்க.

போதுகழிக்கச்செய்யும் புராணதிகேள்வி.

யாஞ்ஞவல்க்கியர். யாஜ்ஞவல்க்யஃ॥ "அஹஸ்சேஷமஸமாஸீத சிஷ்டைரிஷ்டைஸ்ச பந்துபிஃ। உபாஸ்யபஸ்சிமாம்ஸந்த்யாம் க்ருத்வாஸ்நிம்தானுபாஸ்யச। ப்ருத்யைஸ்பரிவ்ருதோபுக்த்வா நாதித்ருப்தோதஸம்விசேத்" = பெரியோர்களோடும், நட்பினரோடும், சுற்றத்தினரோடும், களிப்புடனிருந்து பகலின்மற்றைப் பாகங்களைக் கழிக்கவேண்டும். பின்மாலைச்சந்திக்கடன் கழித்து, வேள்வித்தீக்கருமமுடித்து, பரிசனங்களாற் சூழப்பட்டு, சுருங்கவுண்டு பள்ளிகொள்ளவேண்டும். "உபாஸ்யச" என்புழி "ச" என்றதனல் வைசுவதேவ முதலிய கருமங்கள்செய்ய வேண்டுமென்று எதிரது தழீ இயவாறுகப்பொருள்படுகின்றது. என்று.(எனவே.இரவிலும் வைசுவதேவ முதலியசெய்து புசிக்கவேண்டும்என்றபடி).

இராத்திரி வைசுவதேவம்.

மாலையிற் செய்யத்தகுவன வாகிய சந்திக்கடன், ஹோமம், இவ்விரண்டும் மேற்கூறப்பட்டன. முற்கூறிய வைசுவதேவத்துள்ளே யிரவிற் செய்யப்படுவதனுள் சிறிது வேறுபாடுள்ளதாமாகவின் அஃதீண்டு கூறப்படுகின்றது. விஷ்ணுபுராணம். விஷ்ணுபுராணே॥ "புனஸ்பாகமுபாதாய ஸாயமப்யவனீதலே। வைச்வதேவனிமித்தம்வை பத்ன்யாஸார்தம்பலிம் ஹரேத்। ததாபிச்வபசாதிப்ய ஸ்தைவான்னம்விஸர்ஜயேத்। அதிதிஞ்சாகதம்தத்ர ஸ்வசக்த்யாபூஜயேத்புதஃ। திவாதிதௌதுவிமுகே ஹ்யதாதிதகம்நृப। தத்தைவாஷ்டகுணம்பும்ஸாம் ஸூர்யாஸ்தவிமுகேஹ்யதி। தஸ்மாத்ஸ்வசக்த்யாராஜேம்த்ர ஸூர்யோஸ்தமதிதிம்நரஃ। பூஜயேத்பூஜிதெதஸ்மி ன்பூஜிதாஸ்ஸர்வதெவதாஃ।கृதபாகாதிசௌசஸ்து புக்த்வாஸாயம்தனோகृஹீ। கச்செச்சயாம் மத்ருஷிதாம் தனோதாருமயீம்நृப" = இரவில் மறுபடியும் அங்கபாகஞ் செய்து அதில் அங்கத்தைஎடுத்து வைசுவதேவத்தின்பொருட்டு மனையாளோடு இருந்துநிலத்தின்மேற் பலியிடவேண்டும். அன்றி

யும், நாயைத்தின்போர் முதலியோர்க்கும் அங்கம்கொடுக்கவேண்டும். அதுவுமன்றி, அதிதியாகவந்தவனையும்உணர்ந்தான்னளவுக்குத்தக்கபடி உபசரிக்கவேண்டும். பகலில்வந்தவிருந்தினன் முகம்புலர்ந்து போவானையின் எவ்வளவுபாவமுண்டோ? இரவில் சூரியனுலடையப்பட்டவிருந்தினன் முகம்புலர்ந்து போவானையின் அதனிலெண்மடங்கு பாவமுண்டாகின்றது. ஆதலின் அவனை இயன்றமட்டில் உபசரிக்கவேண்டும். அதனல் எல்லாத் தேவரும்பூசிக்கப்பட்டவராவார். கைகால் சுத்திசெய்து தலைவன் இராவுண்டி வினைமுடித்துப்பின்பு முறியாதிருக்கின்ற மரப்படுக்கையின்மீது படுக்கவேண்டும். எறு. காண்க.

படுக்கைவிதி.

படுக்கையினிலக்கணத்தை ஹாரீதர் கூறினர். హారీతः॥ "సుఖప్రక్షాళితచరణ స్తతోరక్షాంకృత్వోదకపూర్ణ ఘటాదిమంగళోపెతఆత్మా భిరుచి తామనుపహతాం సుత్రామాణంపఠంచయ్యా మధిష్ఠాయరాత్రిసూక్తం జపిత్వాష్ణుంన మస్కృత్య సర్వాపసర్పభద్రంత ఇతిశ్లోకంపఠిత్వేష్ట దెవతాస్మరణంకృత్వా సమాధిమా స్థాయాన్యాంశ్చైవ వైదికాన్మంత్రాం స్సావిత్రీంచజపిత్వా మాంగళ్యంశ్రుతం శంఖంచ శ్రుణ్వీస్తకీణ శిరాస్సువెత్" = வருத்தமின்றிக் கால் அலம்பி இரக்ஷை செய்துகொண்டு நீர்நிறைகுடம் முதலிய மங்கலத் திரவியத் தோடும் தனக்கு இன்பமாகவும் வேண்டுவதாகவும், முறிவு படாதுநன்னிலையுள்ளதாகவு மிருக்கும்படுக்கையின்மேல், "சுத்ரா மாணம்" = என்றதுமுதலிய வேதவாக்கியங்களைத் துதித்து, எறி இருந்து, இருக்கு வேதத்துள்ள இராத்திரி சூக்தங்களையோதி விஷ்ணுவை வணங்கி "సర్వాపసర్పభద్రంతె" என்ற சுலோகத்தைக் கூறித்தன்னிஷ்டதெய்வங்களைத் தியானித்து, சிறிதுபோது அசைவற்றசமாதிநிலையில் இருந்து, ஏனையவைதிக மந்திரங்களையும் சாவித்திரியையும் செபித்து, மங்கலவாத்தியமும், வேதகோஷமும், சங்ககாதமும், கேட்டுக்கொண்டு தென்றிசைத் தலையாகப்படுத்து நித்திரை செய்யவேண்டும். எறு. காண்க. இரக்ஷை = ஆடைமுதலியவற்றுற்புறப்போர்வை. மந்திரங்களாலகப் போர்வையுமாம். மங்கலதிரவியம் = வெற்றிலைப் பாக்குச் சந்தனம் பூ முதலியன.

படுக்கைத்திசை.

விஷ்ணுபுராணம். விஷ்ணுபுராணே॥ "ப்ராச்யாந்திஶிரஶ்ஶஸ்தம் யாம்யா யாமத²வாந்ருப! ஸதை²வஸ்வாபதஸ்பும்ஸோ விபரீதம்துரோகதம்" = கிழக்குத் தலை வைத்திடுதல் சிறந்தது. அல்லது தெற்குத்தலை வைப்பதும்சிறந்ததாம். எப்பொழுதும் அவ்வாறு படிப்பதேநலமாம். வேறு வகையாகப்படுப்பது நோயைத்தரும். எறு. காண்க.

கார்க்கியர். கார்க்³ய:॥ "ஸ்வக்³ருஹே ப்ராக்ஶிராஶ்சை²வ த்வாக்ஶ்ர்யோதக்ஷிணாஶிரா:। ப்ரத்யக்ஶிராஸ்ததா²ப்ரவாஸேது நகதா³சிதுதக்ஶிரா:" = தன்மனையில் கிழக்குத்தலை, வேட்டகம்=மகட்கொடை நேர்ந்தோன்மனையில் தெற்குத்தலை, வெளியிற் புறப்பட்டு வழிநடக்கையில் மேற்குத்தலை, இவ்வகையாகப் படுத்தல்வேண்டும். எப்பொழுதும் வடக்குத்தலையாகப் படுக்கலாகாது. எறு. காண்க.

விஷ்ணுபுராணம். விஷ்ணுபுராணே॥ "ராத்ரிஸூக்தம்ஜபேத்ஸ்மித்வா ஸர்வாம் ஶ்சஸுக²தா³யிந:। நமஸ்க்ருத்வாவ்யயம்விஷ்ணும் ஸமாதி⁴ஸ்த²ஸ்வபேந்நிஶி" = இராத்திரிசூக்தத்தைச் செபித்து, சுகமாக நித்திரைசெய்பவரனைவரையும் தியானித்து, நாசமற்றவியாபகப்பொருளுக்கு வணக்கஞ்செய்து, மனத்தை யுள்ளத்தின் கண்ணே அசைவற நிறுத்தி யிரவில் நித்திரைசெய்யவேண்டும். எறு. காண்க.

சுகநித்திரைசெய்வோர்.

கோபிலர். கோபிலஃ॥ "அக³ஸ்த்யோமாத⁴வஶ்சை²வ முசுகுந்தோமஹாமுனி:। கபிலோமுனிராஸ்திக்யோ பஞ்சை²தேஸுக²தா³யினஃ" = அகத்தியர், திருமால், முசுகுந்தனுகிய இராஜவிருடி, கபிலமுனி, ஆஸ்திகமுனி இவ்வைவரும் சுகநித்திரை செய்பவராம். எறு. காண்க.

படுக்கலாகாதவிடம்.

மார்க்கண்டேயர். மார்கண்டே³ய:॥ "ஶூன்யாலயேஶ்மஶானேச பை³ரகவ்ருக்ஷசதுஷ்பதே²। மஹாதே³வக்³ருஹேவாபி மாத்ருவேஶ்மனினஸ்வபேத்। நயஜ்ஞநாகா³யதனே ஸ்கந்த³ஸ்யாயதனேததா²। கூலச்சா²யாஸுசததா² ஶர்கராலோஷ்டபாம்ஸுஷு। நஸ்வபேச்சததை²காந்தே நாதீ³க்ஷாங்கதா³சன। தா⁴ன்யகோவிப்ரதே³வானாம்கு³ரூணாம்சததோ²பரி। நசாஶிப⁴க்³னஶய்யாயாம் நாஶுசௌநாஶுசிஸ்வயம்। நார்த்³ரவாஸாநனக்³னஶ்ச நோத்தராஸ்தி²தமஸ்தகஃ। நாகா

"సర్వశూన్యేచ నచచైత్యద్రుమెతథా"=பாழ்மனையிலும், சுடுகாட்டிலும், ஒற்றைமரத்தடியிலும், சதுக்கத்திலும் = நாற்றெருக்கூடுமிடம், சிவாலயத்திலும், சத்திகோட்டத்திலும், இயக்கர் அரக்கர் உள்ளஇடத்திலும், பாம்பின்புற்றிடத்திலும், குமாரகோட்டத்திலும், இடுகாைச்சார்விலும், மணலிலும், மண்கட்டி, இட்டிகை=செங்கல் கிடக்குமிடங்களிலும், புழுதியிலும், எரி அருகிலும், தீைகூடியொழுக்கமில்லாதிருக்கையிலும், தானியம், பசு, வேதியன், கடவுள், ஆசிரியன் இவர்கள்மேலும், முறிந்த கட்டில்முதலிய படுக்கைமீதும், அசுத்தத்தின்மேலும், சுத்தமில்லாதவனையும், ஈரவுடையுடையவனையும், நிருவாணியாயும், வடக்குத்தலைவைத்தும், வெட்டவெளியிலும், ஒன்றுமில்லாதஇடங்களிலும், சமணராதியர்பாழியிலும், தேவரில்லாவாலயத்திலும், அங்குள்ள மரத்தடியிலும், இன்னும் அச்சத்தை விளைவிக்கத்தக்க இடத்திலும், படுத்துநித்திரைபோகலாகாது. எ-று. காண்க. சூனியாலயம்=கடவுளர், பசு, விளக்கு, மனிதர் இல்லாதஇடம் என்பதுமாம்.

விஷ்ணு. ఒష్ణుః॥ "నార్ద్రవాసాస్వపేన్న పలాశశయనె నపంచ దారుకృతె నభగ్నశయనెవిద్యుద్దగ్ధె నాగ్నిస్పృష్టె నచాలమధ్యె నచారిమధ్యె నధాన్యెనగో హుతాశన గురూణామపరినోచ్ఛిష్టొనదివా" = ஈரவுடைபோடு படுக்கலாகாது. பரப்பிய இலை, ஐவகை மரத்தாற் செய்தது, முறிந்தது, இடியால் வெந்தது, நெருப்புப்பட்டது, இவைகள்மேற் படுக்கலாகாது. சிறுவர்நடுவே, கடப்பவர் நடுவே, தானியத்தின்மீது, பசுவின்மேல், வேள்வித்தீயின்மேல் அல்லது சாதாரணத்தீயின்மீது, குரவன்மேல், எச்சிலோடு, பகலிலேயும் படுத்துறங்கலாகாது. எ-று. காண்க.

விஷ்ணு புராணம். విష్ణుపురాణె॥ "నావిశాలాంనవైభగ్నాం నాసమాంసలినాంనచ। నచజంతుమలయాంశేయ్యా మధిష్ఠాప్యనాస్తృతాం" = அகலமற்றது, முறிந்தது, ஒத்தபடியில்லாதது, மேடுபள்ளமானது. அழுக்குடையது, சிற்றுயிர்கள் விசேடமாக வுள்ளது, மேற்படுக்கைப் பாய்விரியில்லாதது முதலிய பள்ளிமேற் படுக்கலாகாது. எ-று. காண்க.

உசனர். ఉశనాః॥ "నతైలాభ్యక్తశిరాస్నవైనా దీక్షితదక్ష్మచర్మణి"= எண்ணெய்த்தலையோடு படுக்கலாது. தீைகூடியில்லாதவன் மான்

றேனின்மீது படுக்கலாகாது. எ-று. காண்க. தீனைக்ஷ = வைதிக விரதமுமாம்.

நித்திரையின்காலம்.

தக்ஷர். చతుర్థి॥ "ప్రదోషపశ్చిమాయామా వేదాభ్యాసరతోనయేత్। సార్ధ యామంశయానస్తు బ్రహ్మభూయాయకల్పతె"=பிரதோஷகாலங் கடந்தபின்பு இரண்டியாம வனையிலும் வேதமோதியிருந்து பின்பு ஒன்றரை யாமம் உறங்குமியற்கையுடையவன் முத்தியைப் பெறத்தக்கவ னவன். எ-று. காண்க.

மூலத்துள். "సంధ్యాస్నానం" என்றதுமுதல் "యోవేష్టిశిరాభుఙ్క్తె" என்ற வனையிலும் நூலின் வெளிப்பட்ட சொற்பொருளாகவும், குறிப்புப் பொருளாகவும் பகலிற் செய்யத்தக்க கருமங்க ளெல் லாவற்றையும் சுருக்கிக் கூறப்பட்டது. இதனைச் செய்தால் ந ன் மையுண்டு செய்யாவழிப்பாவம் வருகின்றது.

பகற்கருமத்தின்பயன்.

கூர்மபுராணம். కూర్మపురాణె ॥ "బ్రాహ్మణానాంకృత్యజాత మపవర్గఫల ప్రదం। ఇత్థంతదఖిలంప్రోక్త మహన్యహనియన్మయా। నాస్తిక్యాదథవాలస్యా ద్బ్రాహ్మ ణోనకరోతియః। సయాతినరకాన్ఘోరా న్కాకయోనౌప్రజాయతె। నాన్యోవిముక్తయెపం థా ముక్త్వాశ్రమవిధింస్వకం। తస్మాత్కుర్వీతకర్మాణి తుష్టయెపరమెష్ఠినః" = இங்ஙன மாக நாடோறும் வேதியர் வீடுபேற்றினுக்கு ஏதுவாகச் செய் யத்தக்க கருமங்கள் கூறப்பட்டது. நாத்திகத்தாலாயினும், சோம் பலாலாயினும் எந்தவேதியன் இதனைச்செய்வதில்லையோ? அவன் நரகத்தையனுபவித்துப்பின் காக்கையாகப் பிறக்கின்றான். தன தது வருணச்சிரமதருமங்களை வழுவாது நடத்துவதினும் சிறந் த முத்திமார்க்கம் வேறில்லை யாதலின், ஆக்கிய கடவுள் களிக் கும்படி கருமங்களைச்செய்யவேண்டும். எறு. காண்க. (நஎ)

க்ஷத்திரியதருமம்.

మూ॥ అవ్రతాహ్యనధీయానా యత్రభైక్షచరా ద్విజాః
తం గ్రామందండయెద్రాజా చోరభక్తప్రదోహిసః॥ ౪౮౫॥

మూ॥ క్షత్రియోహిప్రజారంజం చశస్త్రపాణిఃప్రదండవాన్
నిర్జిత్యపరసైన్యాని క్షితింధర్మెణపాలయెత్. ॥ ౪౯౫॥

மூ॥ புஷ்பமாத்ரம்விசினுயா ன்மூலச்சேதனகாரயேத்
மூலாகாரஇவாராமே நயதாம்காரகாரகஃ. ॥உ0புஎ॥

என்னின். அறுதொழிலும் செய்யும்படி வேதியன் அசாதாரணதருமம்கூறி அவற்றுள். ஒதலாதிப்பொதுத் தருமங்கூறுமுகத்தால்வந்த நித்தகருமங்கூறி, ஈண்டுவைப்பு முறையானே அரசதருமத்தை (எனவே அரசுரிமைபூண்ட வேந்தனது சிறப்புத் தருமத்தைக்) கூறுமுகத்தால் தீயோரைக் கடிதல், நல்லோரையோம்புதல் .என்னுமிருவகையான அரசதருமத்துள் தியரைக் கடிதலாகிய சிறப்புத்தருமம் முதற் சுலோகத்தால், கூறுகின்றது.

(இ-ள்). எந்தவூரில் இருபிறப்பாளர் விரதமும் இன்றிவேத மோதுதலுமின்றி ஐயமேற்றுத் திரிகின்றனரோ? அந்தவூர் களளருக்குச் சோறிடுகின்றவூராம். அரசன் அந்த வூரிலுள்ளவர் களைத் தண்டிக்கவேண்டும்.

அரசன்படைகளை=ஆயுதங்களை, கையிற்பிடித்துத் துட்டரைத் தண்டித்துப் பகைவனைவென்று நிலத்தையடைந்து உயிர்களைக்களிப்பித்துத்தருமத்தோடுங்காக்கவேண்டும்.

பூஞ்சோலைக்கண்ணே பூவிற்பவன் பூக்களை மாத்திரம் பறித்துக் கொள்வதுபோற் கொள்ளலாமன்றிக் கரிவிற்பானைப்போல் வேரைக்களைந்து விடலாகாது. எறு.

"व्रतं" என்றதனால் பிரமசரியன் தேன் முதலியவற்றை விட்டொழிதல் என்றவாறு. இதனையாஞ்ஞவற்கியர் கூறினர். याज्ञवल्क्यः॥ "व्रतमपीडयन्" = பீடைசெய்யா தொழிவதேவிரதம். அல்லது, விரதத்தினைப் பிடியாது என்று கூறி அவ்விரதத்தைவிளக்குகின்றனர். அதுவருமாறு. "मधुमांसाञ्जनोच्छिष्ट शुक्लस्त्रीप्राणिहिंसनं। क्षुरालोकनाश्लील परिवादांश्चवर्जयेत्" = "मधु". என்பது. ஈண்டுதேன். கள்ளன்று. என்னை? "नित्यंमद्यंब्राह्मणोवर्जयेत्" = வேதியன் என்றும் கள்ளினை யொழித்தல் வேண்டும் என்று பொதுவகையாக விலக்கப்பட்டிருத்தலின். "मांसं" எனவே ஆடுமுதலியவற்றின் மாமிசமும் ஆகாது என்றபடி. "अञ्जनं" = நெய்முதலியவற்றுல் உடம்பைப்பூசுதல். "कज्जलं" =

மைமுதலிய கண்ணுக்குத்தீட்டல். "உச்சிஷ்டம்" குரவரல்லாதாரெச் சிலுண்டல். "கலகம்" = நிட்டூரமொழி, அன்னரசமன்று. என்னை? உண்ணலாகாதன கூறுமிடத்துவேறு பிரித்துரைக்கப்பட்டிருத்தலின். ஸ்திரீ=விடயபோகத்தின்பொருட்டு மாதரைஉபயோகித்தல். "ப்ராணிஹிம்சனம்" = சீவக்கொலை. "ஊர்த்வாலோகனம்" = உதயாத்தமன மாகுஞ் சூரியனைத் தினமுநோக்குதல். "அஸ்ரீலம்" = பொய்கூறுதல். "பரிவாதம்" = பிறர் குற்றத்தை வெளிப்படச் செய்தல் = புறங்கூறுதலுமாம். "ஆதி" = முதலியன. எனவே வேறுமிருதிகளிற் கூறப்பட்ட சந்தனம் பூமுதலியனவற்றையும் பிரமசாரி விட்டுவிடவேண்டும். எறு. காண்க.

அல்லதூஉம். நன்சாகையின் கிருஹியசூத்திரத்தில் கூறப்பட்டுள்ள பிரஜாபத்திய முதலிய நான்குவேத விரதங்களையும் அந்த "வ்ரதம்" என்ற மொழிகுறித்தவா றென்பது மொன்று. நால்வகைவிரதமான. பிராஜாபத்தியம், ஆக்கிநேயம், சௌமியம், வைசுவதேவம், என்பனவாம். இவை வேதமோதிய பிரமசாரி செய்யத்தக்கன.

ஆகவே விரதமில்லாதவர் எனவே இவ்விருவகை விரதமுமில்லாதவர்கள். எறு. அத்தியயனமில்லாதவர் எனவே வேதமோதாதவர்கள். எறு. கள்ளர். எனவே கள்ளைப் போல்வார் என்றகருத்து. இச்சுலோகத்தால் விதிக்கப்பட்ட கருமம் செய்யாதிருப்பவர்களையும் விலக்கிய கருமங்களை யனுட்டிப்பவனையும் அரசன் தண்டிக்கவேண்டும் என்று இலக்கணையால் பொருள்படுகின்றது.

வருணதருமநிலைபேறு.

அதனாலே நாரதர்கூறினர். நாரதஃ॥ "யோயோவர்ணோ யதீயேத யஶ்சோத்ரேகமனுவ்ரஜேத்। தம்தம்தஷ்டஸ்வஸ்தோமார்காத்ஸ்ருச்யதம்ஸ்தாபயேத்பதி"—எந்தெந்த மரபுகுறைந்து விடுகின்றதோ? எது உயர்கின்றதோ? அவற்றையாராய்ந்தறிந்து தன்வழிதவறியுள்ளதனை அரசன் நன்மார்க்கத்தில் நிறுத்துக. எ-று. காண்க.

யாஞ்ஞவல்கியர். யாஜ்ஞவல்க்யஃ॥ "அதாஸ்ரோத்ரேஷுசான்யேஷு பாபயுக்தேஷுகர்மஸு। ப்ரஸமீக்ஷ்யாத்மநாராஜா தண்டம்தம்த்ர்யேஷுபாதயேத்। குலானிஜாதீஶ்சை

ణీశ్చ గణాన్జానపదానపి! స్వధర్మాచ్చలితాన్రాజాసీయస్థాపయేత్పథి" = நூல்களுட் கூறப்படாத தீவினைகளில் பழகியுள்ளவர்கள் தண்டனைப்படத்தக்கவனென்று, அரசன் தானுணரவரின் அவர்களைத் தண்டிக்கக் கடவன். அந்தணர் முதலிய வருணங்களும் "మూర్ధావసిక్త" = தலைமை பெற்ற மரபுகளும், தச்சர் முதலிய சிறோணியர்களும், ஐதுகர் முதலிய கணங்களும், அல்லது, படைமள்ளர்கூட்டமும், "జానపదాః" = தேயத்துள்ளவர்களும் தத்தம்மரபு ஒழுக்கந்தவறினால் அவர்களை யொறுத்து வசஞ்செய்து அவரவர்க்குரிய ஒழுக்கத்து நிறுத்துக. எறு. சிறோணியர் = ஓரோதொழிலால் சீவிப்பவர். ஐதுகர் = ஒருகாரணம்பற்றிவந்தவர் (ஏதுபற்றிவந்தவர் ஐதுகர்) கணம் = கூட்டம். தேயத்துள்ளவர் = யாவர்க்கும் வேண்டும் பொதுத்தொழில் செய்துகொண்டு அவ்வவ்விடங்களிலுள்ள கருமான் முதலியவர்கள்.

தண்டனைத்திறம்.

மனு. మనుః॥ "పితాచార్యస్సుహృన్మాతా భార్యాపుత్రఃపురోహితః! నాదండ్యోనామరాజ్ఞోస్తి యస్స్వధర్మేణతిష్ఠతి" = தந்தை, ஆசியன், நண்பன், தாய், மனைவி, மகன், புரோகிதன் இவர்களுள் யாரேயாயினுமாக ஒழுக்கந்தவறி யுள்ளவனைத் தண்டித்தல்வேண்டும். தண்டிக்கத்தகாதவன் அரசனுக்கு ஒருவனுமில்லை. எறு. காண்க.

யாஞ்ஞவற்கியர். యాజ్ఞవల్క్యః॥ "అపిభ్రాతాసుతోరొచ్యోవా శ్వశురోమాతులోపివా! నాదండ్యోనామరాజ్ఞోస్తి ధర్మాద్విచలితస్స్వకాత్" = தன்னொழுக்கத்தினின்றுந் தவறினேனென், உடன்பிறந்தவன், மகன், பூசிக்கப்படுவோன், மாமன், அம்மான் இவர்களுள் யாரேயாயினும் அவன் தண்டனைப் படத்தக்கவனேயாம். அரசனுக்குத் தண்டிக்கத்தகாதவரில்லையாம். எ-று. காண்க.

தண்டனைச்சிறப்பு.

யாஞ்ஞவற்கியர். యాజ్ఞవల్క్యః॥ "యోదండ్యాన్దండయేద్రాజా సమ్యగ్ధర్మ్యాంశ్చపూతయేత్! ఇష్టంస్యాత్క్రతుభిస్తేన సమాప్తవరదక్షిణైః" = எந்த அரசன் தன்னொழுக்கந் தவறியவாற்றால் தண்டிக்கப் படுபவராயுள்ளவர்களை நல்லநூல்வழியேதக்கதண்டஞ்செய்விக்கின்றானே? கொலைப்படத்தக்கவனைக் கொலைசெய்விக்கின்றானே? அவ்வர

சன் பெருந்தானங்களைக் கொடுத்து வேள்விசெய்வித்த பயனைப் பெறுவன். எ-று. காண்க. தக்கதண்டனையாவது, சிறையிடுதல், அடிப்பித்தல், பொருட்பறி முதலியன.

தண்டனைத்தவறு.

மனு. மநுஃ॥ "அதண்ட்யாந்தண்டயன்ராஜா தண்ட்யாம்ஶ்சைவாப்யதண்டயன்। அயஶோமஹதாப்நோதி நரகஞ்சாதிகச்சதி" =தண்டிக்கப் படாதவனைத் தண்டித்தாலும், தண்டிக்கப் படுவோனைத் தண்டியாது விட்டாலும் அரசன் பெரும்பழியையும் அடைவன். நரகத்திலும் புகுவன். எ-று. காண்க.

தண்டனைவகை.

நாரதர். நாரதஃ॥ "ஶாரீரஶ்சார்தகஶ்சேதி தண்டஶ்சத்விவிதஸ்ம்ருதஃ। ஶாரீரஸ்தாடனாதிஸ்து மரணாந்தஃப்ரகீர்திதஃ। கணாதிஸ்த்வர்ததண்டஸ்து ஸர்வஸ்வாந்தஸ்ததைவச" = அத்தண்டனை யிருவகைப்படும். அவை, அடித்தல்முதல் கொலைவரையிலும் சரீரதண்டனை யெனவும், கணத்தளவுமுதல் முற்றும்பறித்தல்வரையும் பொருட்டண்டனை யெனவும் கூறப்படும். எ-று. காண்க.

அரசனுரிமையாணை.

மனு அரசனுக்கே தண்டனையுரிமை யாணையென்று கூறுகின்றனர். மநுஃ॥ "அராஜகேஹிலோகேஸ்மிம் ஸர்வதோவித்ருதேபயாத்। ரக்ஷார்தமஸ்யஸர்வஸ்ய ராஜானமஸ்ருஜத்ப்ரபுஃ। இம்த்ராநிலயமார்காணாமக்நேஶ்சவருணஸ்யச। சம்த்ரவித்தேஶயோஶ்சைவ மாத்ராநிர்ஹ்ருத்யஶாஶ்வதீஃ। யஸ்மாத்ஏஷாம் ஸுரேம்த்ராணாம் மாத்ராபோ்யநிர்மிதோநృபஃ। தஸ்மாதபிபவத்ஏஷ ஸர்வபூதாநிதேஜஸா। தபத்யாதித்யவச்சைவ சசக்ஷூம்ஷிசமநாம்ஸிச। நசைநம்புவிஶக்நோதி கஶ்சிதப்யபிவீக்ஷிதும்। ஸோக்நிர்பவதிவாயுஶ்ச ஸோர்கஸ்ஸோமஸ்ஸதர்மராட்। ஸகுபேரஸ்ஸவருண ஸ்ஸமஹேம்த்ரதிப்ரபாவதஃ। பாலோபிநாவமம்தவ்யோ மநுஷ்யஇதிபூமிபஃ। மஹதீதேவதாஹ்யேஷா நரரூபேணதிஷ்டதி। ஏகமேவதஹத்யக்நிர்நரம்தురுபஸர்பிணம்। குலம்தஹதிராஜாக்நிஸ்ஸபஶுத்ரவ்யஸம்சயம்। கார்யம்ஸோவேக்ஷ்யஶக்திம்ச தேஶகாலோசிதத்வதஃ। குருதேதர்மஸித்ய்யர்தம் விஶ்வரூபம்புநர்திபுநஃ। யஸ்யப்ரஸாதேபத்மாஶ்ரீர்விஜயஶ்சபராக்ரமே। ம்ருத்யுஶ்சவஸதிக்ரோதே ஸர்வதேஜோமயோஹ்யஸஃ। தம்யஸ்துத்வேஷ்டிஸம்மோஹாத்ஸவினஶ்யத்யஸம்ஶயம்। தஸ்யஹ்யாஶுவிநாஶாய ராஜாப்ரகுருதேமனஃ। தஸ்மாத்தர்மம்யமிஷ்டேஷுஸத்யம்பஶ்யேன்னராதிபஃ। அனிஷ்டம்சாப்யனிஷ்டேஷு தம்தர்மம்னவிசாலயே

த்। தஸ்யாத்தைஸர்வ்வபூதானாம் கோப்தாரம்தர்ம்மாத்மஜம்। ப்ரஹ்மதேஜோமயம்தண்ட மஸ்ருஜ தூர்வ்வமீச்வரः। தம்ராஜாப்ரணயம்தஸ்ம்ய கீர்ஜ்வர்ணாஜிவர்த்தே" = உலகத்துள் அரசனில்லாது, வலியவர்களால் அச்சமுற்று எளியவர் யாவரும் ஓடும்போது, அவர்களைக் காக்கும்பொருட்டு இவ்வுலகத் தலைவர், இந்திரன், வாயு, இயமன், சூரியன், அக்கினி, வருணன், சந்திரன், குபேரன் இவ்வெட்டுத் தேவர்களினுடைய நிலைபெற்ற அமிசங்களையெடுத்து, அரசனுகப்படைத்தார். அவ்வரசன் தெய்வகலையோடு பிறந்தவனுதலின் தனது ஒளியால் எல்லாப் பூதங்களையும் பின்னிடச்செய்கின்றன். சூரியனைப்போலக் கண்ணினையும், மதத்தினையும், காய்கின்றன். இவ்வரசனை நன்றுகப்பார்ப்பதற்கு உலகத்தில், ஒருவனும் வல்லவனல்லன். வல்லமையால் அவ்வரசனே தெய்வமாக விருக்கின்றன். அவ்வரசன் இளைய மகனேயாயினும் மானுடவடிவங்கொண்ட பெருந்தெய்வ மாதலினவனை ஏனையமானிடனைப்போல மதித்து அவமானஞ் செய்யலாகாது. அருகிலேயடுத்துவந்த ஒருவனைமாத்திரமே தீயானது சுட்டுவிடுகின்றது. இவ்வரசனுகிய தீயானது ஒருவன் மேலிட்டு வந்தால் அவனையும் அவன் குடும்பத்தையும், பசுநிரைபொருள்களையும் சுட்டொழித்துவிடும். அவ்வரசன் வினைமேல் நாட்டம் வைத்து, காலதேசப்பகுதிகளையும் தன்னுற் றலையும் நோக்கித் தன்றருமத்தை முற்றிக்கொள்ளும்படி அடிக்கடியும் பலவடிவங்களையும் கொள்ளுகின்றன். (எனவே, சத்தி யில்லாதவனைப்போலும், தோழனைப்போலு, அடிமையாளைப்போலும், அசட்டைசெய்பவனைப்போலும், பகைவனைப்போலும் நடிப்பன). அதனை நம்பி, அரசனுக்கு மாறுக நடக்கலாகாது அரசனுக்குத்தயவு வந்துவிட்டால் செல்வமுண்டாம். அவன் வீரத்துள் வெற்றியுண்டாம். கோவத்துள் மிருத்தியு இருக்கின்றது. எல்லாவொளியையுமுடையவனன்றே? அரசன். யார் அறிவின்மையால் அரசனைப்பகைக்கின்றுனே? அவன் ஐயமில்லாமல் அழிந்து விடுகின்றன். பகைவனை யழிப்பதற்கு அரசன் எப்போதும் எண்ணமுடையவனுகவிருக்கின்றன். ஆதலால்அரசனனவன் தான்விரும்பினவரிடத்து எந்தத் தருமத்தை நியமிக்க முயற்சிக்கின்றனே? தான்விரும்பாதவரிடத்து எந்தக்கெடுதியைச் செய்யவிரும்புகின்றனே? அதுவேதருமமாகவிருக்கின்றது. அந்தநியமத்தை அசை

ப்பிக்கமுடியாது. (எனவே அரசனுணை யெதுவாயினும் கடக்க லாகாது என்றபடி). அவ்வரசனுக்குப் பயனுண்டாம் பொருட் டுக்கடவுள் முன்னமே பிரமவொளியை யுடையனுகியும் தன்மக னுகியும் எவ்வுயிர்களையும் காப்பவனுகியும் உள்ளதண்டனை வடி வாகிய தருமத்தினைப் படைத்தார். அரசனைவன் அந்தத்தரும மானதண்டனையைக்குற்றமுடையவர்களிடத்துமுறையே செலுத் துவித்ததனல், அறம், பொருள், இன்பம், என்னுமூன்றினலும் விருத்தியடைகின்றன். எ-று. காண்க.

மஹாபாரதம். மஹாபாரதே॥ "பரோக்ஷாதேவதாஸ்சர்வா ராஜாப்ரத்யக்ஷதே வதம்। ப்ரஸாதஶ்சப்ரகோபஶ்ச ப்ரத்யக்ஷோயத்ரத்ருஶ்யதே। ராஜாமாதாபிதாசைவ ராஜாகுலவ தாம்குலம்। ராஜாஸத்யம்சதர்மஶ்ச ராஜாஹிதகரோந்ருணாம்। காலோவாகாரணம்ராஜ்ஞோ ரா ஜாகாலஸ்யகாரணம்। இதிதேஸம்ஶயோமாபூ ராஜாகாலஸ்யகாரணம்। ராஜமூலோமஹாராஜ தர்மோலோகஸ்யரக்ஷ்யதே। ப்ரஜா ராஜபயாதேவ நபாதம்தேபரஸ்பரம்" = எல்லாத்தேவரும் பொறிகளுக்கு விடயப்படாது எட்டக்கூடாத வர்களா யிருக்கின்றனர். அரசனுகிய தெய்வம் கண்காண எதி ரிலுள்ள தெய்வமாக விருக்கின்றது. அரசனுடைய அருளும் கோவமும் கண்காணப் பயனைக் கொடுத்தே விடுகின்றன. மன் பதைக்கு = மக்களுயிர்க்கு அரசனே தந்தையாயும் தாயா யும் குலமாயும் இருக்கின்றன். அரசன்கூறியதே யுண்மை. அர சன்செய்ததே தருமம். அரசனே யாவர்க்கும் இன்பஞ்செய்ப வன். காலவியல்பைப்பற்றி அரசனுக்கு அறிவுண்டாகின்றதோ? அரச னறிவுடைமை பற்றிக் காலதருமம் உண்டாகின்றதோ? என்ற ஐயம்வேண்டா. அரசனே காலத்திற்குக் காரணைகவிருக் கின்றன். அரசன்முறை தவறுது அறவொழுக்க முடையவ னுல் உலகம் நிலைபெற்றிருக்கின்றது. அரசன் பயத்தினலே யே மனிதர் ஒருவனையொருவர் துன்பஞ் செய்வதில்லை. எ-று. காண்க.

அரசனென்னும் பெயர்த்தகுதி.

அற்றேல் "தண்டமெடாஜா" = அரசன் தண்டிக்க வேண்டு வது. என்று கூறப்பட்டது. நிலத்தினை யாள்பவனன்றே? அர சன்! தண்டனையுமாணையும் அவனுக்கன்றே? உரியது. இங்ன

மாக இது கூத்திரிய வருணத்திற்கே யுரிய சிறப்புத்தருமம் என எங்ஙனம் கூறப்படும் எனில்? அற்றன்று.

வருணதருமங்களைக் கூறவந்த நூலுட் கூறப்பட்ட "இராஜன்" என்னு மொழிக்கு கூத்திரியனே பொருளென்று தருமநூல் முடிபு. கூத்திரிய னல்லாதவனுக்கும் அரசச்செல்வ முண்டாயிருப்பின் தொழிலைப் பற்றியவாருக வுலகவழக்கினுல் அம்மொழி உபசார வழக்காகச் செல்லுமென்றுணர்க. வைதிகமாகிய "இராஜன்" என்னு மொழி கூத்திரியன் பாலதேயென்று மீமாம்ஸையில் அவேஷ்டி அதிகரணத்துள்ளும் விதிக்கப்பட்டுள்ளது.

அவேஷ்டி அதிகரணம்.

பூருவ மீமாம்ஸை, ஜைமினிசூத்திரம் இரண்டாம் அத்தியாயம். அவேஷ்டி என்ற அதிகரணம்.

விடயவாக்கியம். சுருதி. క్రుతిः॥ "ఆగ్నేయమష్టాకపాలం నిర్వపతిహిరణ్యండక్షిణా" = அக்கினி தேவதாகமாகிய புரோடாசத்தை எட்டுக் கபாலத்தில் சுத்தப்படுத்தி வைத்து ஹோமஞ் செய்கின்றுன். அதற்குப் பொன்னைத் தக்ஷிணையாகக் கொடுக்கவேண்டுவது. என்றது முதலிய சுருதிகளால் அரசன் செய்யத்தக்க இராசசூய மென்னும் வேள்வியில் அவேஷ்டியென்னும் பெயரினையுடைய வேள்விக்கருமத்தை முன்னிலை யாக்கிக்கொண்டு, "యదిబ్రాహ్మణోయజేత బార్హస్పత్యం మధ్యనిధాయాహుతిం హుత్వాతమభిఘారయేత్, యదిరాజన్యఐన్ద్రం, యదివైశ్యోవైశ్వదేవం" = வேதியன் வேள்விசெய்வதாயின் பிரகற்பதியைத் தெய்வமாகவுடையதை நடுவேவைத்து ஆகுதியை ஹோமஞ்செய்து அதனை அபிகரிக்கவேண்டும் (அபிகரித்தல் - நெய்வார்த்தல்) அரசனுயின் இந்திரனைத் தெய்வமாகவுடையதனை. வைசியனுயின் விசுவேதேவர்களைத் தெய்வமாகவுடையதனை. என்று. என்பது.

சமுசயம். அவேஷ்டி என்ற வேள்வியில், பொருந்தும் வேதியன் முதலியோர்க்கு நடுவே வைத்துக்கொள்ளும் விசேடத்தைக்குறித்த நிமித்தமே பயனுகவுடையதாய் அவர்கள் பெயர் கூறப்பட்டதோ? இல்லையேல், பொருந்தாதவர்களைப் பொருத்துவிப்பதோ? அதுசித்திக்கும்பொருட்டு மூன்றுவருணத்தார்க்கும்

இராஜ சூயத்தில் அதிகார மூடைமையோ? அல்லது, கூத்திரிய னுக்கு மாத்திரமேயோ? அதன்பொருட்டு, "இராஜ" என்னு மொழி மூன்று வருணத்தினர்க்கும் பெயரா? அல்லது கூத்தி ரியனுக்குமாத்திரமே பெயரா? அதன்பின்னரும் "இராஜ" என்னு மொழி இராச்சிய யோக்கியதையே நிமித்தமாக வுடையதா? அல்லது, கூத்திரியத்தன்மையையே நிமித்தமாகவுடையதா? என் பது. கூத்திரியத்தன்மை = பிறப்பால் அம்மரபுடைமை.

பூருவபக்கம். "இராஜ" என்னுமொழி இராச்சிய யோக் கியத்தையே நிமித்தமாகவுடையதாம். சான்ரோராட்சியுடைமை யினாலும், உலகமுழுவதும் வழங்கும் வழக்குடைமையாலும், மறுக்கப்படா திருத்தலினாலும் என்றுகொள்க. பிறப்பாலாய கூத்திரியத்தன்மையையேநிமித்தமாகவுடையதென்பதுகூடாது. இழிசனருள் வழங்குதலுடைமை சான்ரோராட்சியினும் ஆற்ற லற்ற தாமாதலினாலும், தமிழ் நூலுடையாரால் மறுக்கப்பட்டி ருத்தலினாலும், அவரல்லாத ஏனையருள்ளும் ஆட்சி யில்லாமை யாலும். என்க.

இராச்சியத்தை யுடையவனே இராஜன் என்பதற்குத் தமிழ் வழக்கு. "வேட்க்கதிபதி நாகனென்பான்" எம், "வேடர்தங் கோமானென்" எம், "மைந்தனையீண்டழைத் துறுங்கள் வனையாட்சியருளென்றூர் மகிழ்ந்து வேடர்." எம், குறுநிலமன்னர், வேளிர்குலத்தரசு, காடவர்கோன், குறும் பரசர், மலாடர்கோமான், எம், "அடிசேர்முடியினராகி யரசர்கடாந்தொழ, இடிசேர் முரசங்கண் முற்றத்தியம்ப விருந்தவர், பொடிசேர் துகளாகப் போவார்" எம். "உயர்குலமுமெல்லாந் திருமடந்தை யாம்போதவளோடு மாகும் அவள்பிரிந்து போம்போ தவளோடும் போம்". எம். கூறுப. "திருவு டைமன்னைக் காணிற் றிருமாலெக்கண்டேனே யென்னும்." என்பதுமது.

இனி அங்குள்ள, இராச்சிய சம்பந்தத்தினால் மூன்று வரு ணத்தாரும் அரசனே யாகின்றனர். "இராச்சியம்" என்னும் மொழியோ? வழக்கினால் தேயத்தின் காப்பினிடத்தே செல்லு கின்றது. அரசனுடைய சம்பந்தத்தைக் குறித்து நிற்பதில்லை. ஆயின் "ऽर्ஹ்ணி" என்னுஞ் சூத்திரமதிகாரமாக, "पत्यौ पुरोहि तादिभ्योयक्" என்ற சூத்திரத்தால் "यक्" என்ற பிரத்தியயம் வியாகரணத்துட் கூறப்பட்டுள்ளது. அக்கணத்துள் "இராஜம்" என்ற மொழியும் கூறப்பட்டது. (எனவே, அதிபதி யென்பது

கருமப் பொருளில் ஆதிபத்தியம், எம், புரோகித என்னு மொழிகருமப் பொருளில் அவ்வாறு "யக்கு" வந்து பௌரோகித்தியம் என்றுற்போல கூட்டத்துள் கூறப்பட்ட "இராச" மொழியும் கருமத்தில் "யக்கு" வந்து இராச்சியம் என முடிந்தது என்றபடி). இந்நூலு மிருதியாமாகவே, உலகவழக்கினும் செய்யுள்வழக்கு வலியதாமாதலின் இராஜசம்பந்தம்இராச்சியம் என்னும் மொழியாக்கத்திற்கு நிமித்தமாமே எனில்? அற்றன்று; சொற்களின்பொருளை நிச்சயிப்பதற்கு உலகவழக்கே யளவையாமாதலின். மிருதி = செய்யுள் வழக்கினுக்கு மதுவே காரணமாம் அன்றி, வேறல்ல. இராச்சியமுடையவனுக்கு இராஜன் என்னும் வழக்குடைமையானும் நீர்கூறிய வகையானும் இராச்சியமென்னு மொழியாக்கத்திற்கு இராஜ என்னு மொழிச் சம்பந்தங் காரண மாதலாலும் "இராஜா, இராச்சியம்" என்னு மிவ்விரண்டனுள் இராஜ மொழிக்கே சுதந்தரமுடைமை யாகின்றது அதனைப்பற்றி எழுந்த வியாகரணச் சூத்திரவிதி சொற்களின் வழுவையும் வழுவின்மையினையும் விளக்குதன்மாத்திரையே வந்தென்று அதற்குப் பொருள் கூறவேண்டும். அதனால் மூன்றுவருணத்தாரும் "இராஜா" என்னு மொழியால் கூறத்தக்கவராய் "இராஜசூய யாகத்தில்" பொருத்தமுடையவர்களா யிருத்தலின் சுருதியில் அவர்கள் பெயர் கூறப்படுவது "ப்ராஹ்மண்யம்" பார்ஹஸ்பத்திய முதலியவற்றை நடுவே வைப்பது நிமித்தமாக வுடையதே சம்பந்தமாய் நேர்ந்தது. "யதி" = ஆனால் = ஆனபக்ஷத்தில், என்ற மொழியை "இராஜா" என்றமொழிக்கு இராச்சிய சம்பந்தமென்னு நிமித்தமுடைய தென்பதற்குப் பிரமாணமுடையதாகின்றது. அங்ஙனமல்லாக்கால் "பிராமணன் முதலிய மொழிகள் ஆண்டு வாராவன்றே? "யதி" என்ற மொழியை ஆண்டு கூறியிருப்பதற்கும் நியாயமில்லாது ஒழியும். (எனவே, வேதியன் இராஜசூயம் செய்தால் என்ற மொழியினால், வேதியன் அரசனனால் என்றிவ்வாறு தோற்றுகின்ற தென்பது கருத்து). வியாகரண மிருதிக்காயினும் வைதிகவழக்குச் சிறந்தது. ஆதலின் விடயவாக்கியத்துள் கூறப்பட்ட பிராமணன் என்றது முதலிய மொழிகள் காரணப் பொருளினவாம். என்பது.

சித்தாந்தம். வேதத்துள் கூறிய மாத்திரையானே ஈண்டு வரம்பு செய்வதற்கு அமையாதன்றே? வேறுவகையால் வரம் புபெறுதலுடைமையின். "ராஜானமபிஷேசயேத்" = இராஜனுக்குப் பட்டாபிடேகஞ் செய்யவேண்டும் என்ற இவ்வபிடேக விதிவாக்கியத்துள், அரசுவருவதற்கு முன்பாகவே இராஜா என்னும் மொழி பட்டாபிடேகத்திற்குத் தகுதியுடைய கூத்திரியனுக்குக் கூறப்பட்டுள்ளது. அதனல் இராஜா "என்னுமொழிருடம் = வழக்காற்றலுடைய தென்றே கொள்ளப்படுகின்றது. இனி "ஸ" என்பதுவும் அவ்வியயமாதலின் எங்ஙனமே யாயினும் வியாகரண நியமத்திற்கு வாதையில்லாதபடி பொருட்சம்பந்த மாகின்றது. "இராஜா" என்னுஞ்சொல் வியாகரணத்தால் விவகரிக்கப்படுதலினல் சுதந்தரமுடையதல்லது இராச்சிய நிமித்தத்தினல் வந்ததன்று. இராஜமொழிக்கு கூத்திரியன் என்று பொருள்கொள்ளும் வழக்கினுக்குக் காரணமில்லை என்பது கூடாது. இராச்சிய முடைமையாலன்று பிறப்பியற்கையானே "இராஜா" என்ற மொழி கூத்திரியனுக்கே என்பதற்குத் தமிழ்நூல் வழக்குடைமையே காரணமாக விருக்கின்றது. "ஸோ நயஞ்சார்த்தோ ஸ்மரணஸ்யுப்ரமாணமஸ்தி" = வழக்கு உண்மையே யான வழி மிருதிபிரமாணமாகாது. (எனவே, உண்மையான வுலக வழக்குச் செய்யுள் வழக்கினுஞ் சிறந்ததென்பது கருத்து). என்று சான்றோராகிய அவ்வியாகரண வாசிரியரானே கூறப்பட்டிருத்தலின். உலகவழக்கு ஈண்டுச் சம்பந்தப்படுகின்றது. வழக்கு என்பது எப்பொருளை யெம்மொழியாற் கூறிவந்ததோ? அது. பொதுவாகிய மயக்கவகையால் மருவியதற்குத் தடையுண்டாகின்றது. ஆதலின், "இராஜா" என்ற மொழியின் காரணசம்பந்தத்தானே "இராச்சியம்" என்னுமொழியாக்கப்பட்டது. சுதந்தரமொழி = வேறுகாரணத்தால் தோன்றுத சொல்லாகிய இராஜாளன்றது பிறப்பால் கூத்திரியனனவனைக் குறிக்குஞ் சொல்லாகின்றது. மேற்கூறிப் போந்த சுருதி மொழியாகிய விடயத் தொடர் மொழியால் கூறப்பட்டுள்ள வேதியன் முதலியமொழிகள் அவேஷ்டியென்ற வேள்விக்கருமத்தில் அவ்வேதியன் முதலியோர்க்கு இல்லாதபேற்றைப் பெறுவிக்கின்றது. என்பது சித்தாந்தம்.

இராஜன் என்பது மரபுபற்றிய கூடத்திரியனுக்கே யெனத் தமிழினுள் ளும் "அரசிளங் குமரன்போது மணிமணிமாட்வீதி" எம், "உரிமையர சர் தொழில்புரியார்" எம், "வளநாடெல்லாங் கவர்ந்து முடியொன்று மொ ழியவரசர் திருவெல்லாமுடையராயினர்." எம், "செம்பியர்தந் தொல்லை நீடிங்குலமுதலோர்க் கன்றிச்சூடோ முடியென்று" எம், "பார்த்திபன் றென்னன் பாண்டியற்காகவே." எம், "நாவலந்தீவகத்தினுக்கு நாதரான காவலரோயேவி விடுத்தாரோனும் கடவமலோம்." எம், "முடியாலுலகாண்ட மூவேந்தர்முன்னே" எம், "வேந்தராயுல காண்டறம்புரிந்து" எம், "திரு வும்வண்மையுந் திண்டிறலரசுஞ் சிலந்தியார்செய்த செய்பணிகண்டு, மருவு கோச்செங்க ணன்றனக்களித்த வார்த்தைகேட்டு." எம், "தெருண்டவா யிடைநூல் கொண்டுசிலந்தி சித்திரப்பந்தர் சிக்கெனவியற்றச் சுருண்ட செஞ்சடை யாயதுதன்னைச் சோழனுக்கிய தொடர்ச்சிகண்டு அடியேன்" எம், "வேந்துவினையியற்கை வேந்தனெரீஇய, வேனோர்மருங்கினு மெய்திட னுடைத்தே" எம், பொருளதிகாரம் மரபியன் முதலியவற்றுள்ளும் வரு வனகாண்க.

அவ்வாறே யீண்டும் "இராஜா" என்றமொழி கூடத்திரி யனுக்கே உரியபெயராகின்றது.

ஆயின், மன்னுயிர்க்கு இரஞ்சனம் செய்தல் = இனியன செய்து இன்பச்சுவை விளைவித்தலின் இராஜத்தன்மை யுண் டாயதென்று மகாபாரதத்துட் கூறப்பட்டது. மஹாபாரதே॥ "ரம் ஜனாத்துலராஜத்வம் ப்ரஜானாம்பாலனாதபி" = சந்தோடஞ் செய்து சுவைப் படுத்தலினாலும் மன்னுயிர்களைக் காத்தலாலு மன்றே? இரா ஜத்தன்மை. எறு. என்னெனில்?

ஆம், உண்மையே! மூலம் - நுகூ - வது சுலோகத்துள். "க்ஷத்ரியோஹிப்ரஜாரக்ஷன்" = மன்னுயிரைக் களிப்பிப்பவ னன்றே? கூடத்திரியன் என்று கூறி, மன்னுயிரைக் களிப்பித்தல் வடிவாகிய சிட்டரைப் புரத்தல் கூடத்திரியனுக்குத் தருமமென்று கூறப் பட்டதாகலின் கூடத்திரியனுக்கு அங்ஙனம் இனிமைசெய்தலு மூண்டாகின்றது.. ஆயின், ஈண்டு துட்டரையொறுத்தன் மூன் னிலையாகிய நல்லோரைக் காத்தல் கூறப்பட்டது. பாரதத்துள் அரசநீதியில் சிட்டரைக் காத்தலின் பொருட்டே துட்டரை யொறுத்தலென்று மன்னுயிர்க் கினிமைசெய்தலைச் சிறந்ததாக வெண்ணியதனை மூன்னர் கூறப்பட்டது. என்க.

யாஞ்ஞவற்கியரும். యాజ్ఞవల్క్యుఃll "ప్రధానఃక్షత్రియెధర్మఃప్రజానాంపరిపాలనం" = கூத்திரியனுக்கு மன்னுயிரைக் காத்தலே சிறந்த தருமமாக விருக்கின்றது. எறு. காண்க.

மனுவும் அங்ஙனமே கூறினர். మనుఃll "ప్రజానాంరక్షణందాన మిజ్యాధ్యయనమెవచ। విషయెష్వప్రసక్తిశ్చ క్షత్రియస్యసమాదిశెత్" = மன்னுயிரைக்காத்தல், கொடை, வேள்வி, ஓதல், புலன்வழி மனஞ்செல்லாதடக்கல் அரசனுக்குத் தருமமென்று விதிக்கப்படுகின்றது. எறு. காண்க.

இது பாரதத்திற்கு மாறுகொளலன்று சாந்தி பருவத்திலும் இங்ஙனமே கூறியிருக்கின்றது. శాంతిపర్వణిll "నృపాణాంపరమొధర్మఃప్రజానాంపరిపాలనం। నిర్దిష్టఫలభొక్తాహి రాజాధర్మెణయుజ్యతె। వర్ణానామాశ్రమాణాంచ రాజాభవతిపాలకఃl స్వెస్వెధర్మెనియుంజానఃప్రజాస్వాఃపాలయెత్సదా। పాలనెనైవభూతానాం కృతకృత్యొమహీపతిఃl సమ్యక్పాలయితాభాగం ధర్మస్యాప్నొతిపుష్కలం। యజతెయదధీతెచ యద్దదాతియదర్చతిl రాజాషడ్భాగభాక్తస్య ప్రజాధర్మెణపాలయన్। సర్వాశ్చైవప్రజానిత్యం రాజాధర్మెణపాలయెత్। ఉత్థానెనప్రసాదెనపూజయెచ్చాపిధార్మికాన్। రాజ్ఞాహిపూజితొధర్మస్తస్సర్వత్రపూజ్యతె। యచ్యదాచరతెరాజా తత్ప్రజానాంచరొచతె" = மன்னுயிர்களைப் புரப்பதே அரசர்க்குத்தலை சிறந்ததருமமாம். அப்படிப்பட்ட அரசன் கூத்திரிய தருமத்துட் கூறியுள்ள பயனை யடைகின்றான். வருணச்சிரம வொழுக்கங்களுக்கு அரசனே காவலனதலால் அவரவர்தருமத்தில் அவரவனை நிறுத்தித்தன் குடிகளை யெப்பொழுதும் காக்கவேண்டும். அரசன் உயிர்களைக் காத்தலால் செய்வனசெய்துமுடித்தவனாகின்றான். நன்றுகவுலகோம்பு மரசன் மன்பதை = மக்கள்கூட்டம் செய்கின்ற வேள்வி, ஓதல், கொடை, தூசை, முதலிய தருமங்களில் ஆறிலொரு பங்கினை யடைகின்றான். ஆதலால், எல்லா வுயிர்களையும் தருமமாகவே காக்கவேண்டும். தருமசீலர் தன்னிடத்திற்கு வந்தபோது தக்கபடிஎழுந்திருத்தல், முகமலர்ச்சி, உபசாரம், முதலியவற்றால் உபசரிக்கவேண்டும். அரசனால் உபசரிக்கப்பட்ட தருமம் எல்லாவிடங்களிலும் பூசிக்கப்படும். அரசன் எதனைஎதனைச் செய்பதைதொடங்குகின்றானோ? அதனை அதனைக்குடிகளும் செய்யத்தொடங்குகின்றனர். எறு. காண்க.

மார்க்கண்டேய புராணம். மார்க்ண்டேயபுராணே॥ "வத்ஸராஜ்யாபிஷிக்தேன ப்ரஜாரஞ்ஜனமாதிதः। கர்தவ்யமகிலோத்தன ஸ்வதர்ம்யமஹீபுதா। பாலனேனைவ பூதானாம் கிருதக்ருத்யோஸுஹீபதिः। ஸம்யக்பாலயிதாபாகம் தர்ம்யஸ்யாப்நோதிபுஷ்கலம்"= மகுடஞ்சூடிய அரசன் தனது தருமத்திற்குக் கேடில்லாமல் மன்னுயிர்க் கினிமையை முன்னர்ச் செய்யவேண்டும். எல்லா வுயிர்களையும் காத்தல் செய்தால் அரசன் கடமை அவ்வளவோடு போதுமான தாகின்றது. நன்முகவுலகோம்பும் அரசன் ஓம்பப் பட்டவர்கள் செய்ததருமத்தில் முழுப்பங்கினை யடைகின்றன். எறு. காண்க.

பிரமாண்ட புராணம். ப்ரஹ்மாண்டபுராணே॥ "யவஹ்நிகுருதெதர்ம்ம ப்ரஜாதர்மேணபாலயன்। தசவர்ஷ ஸஹஸ்ராணி தஸ்யபுஜேதுமஹத்பலம்। ஸர்வதோதர்மஷடாபாகோ ராஜ்ஞோபவதிரக்ஷதः।ரக்ஷன்தர்மேணபூதானி ராஜாவத்யாம்ச்சபூதயன்। யஜதெஹாரஹர்யஜ்ஞை ஸஹஸ்ரசததக்ஷிணைः। யோரக்ஷன்பலிமாதத்தெ கரம்சுல்கம்சபார்திவः। ப்ரீதிம்போகம்சதண்டம் ச ஸஸத்யோனரகம்வ்ரஜேத்" = தருமத்தோடு மன்னுயிரோம்பும் அரசன் ஒரு நாள் செய்த அத்தருமத்திற்கு உண்டாகும் பெரும்பயனைப் பதினாயிரம் வருடம் அனுபவிக்கின்றன். காப்பவனுக்கு எல்லார் புண்ணியத்துள்ளும் ஆறிலொரு பங்குவரும். தருமத்தோடு எல்லாவுயிர்களையும் பாதுகாத்து, கொலைப்படத்தக்க பாவியர் களைக்கொன்று, நூறு ஆயிரமாகக் கொடைகொடுத்து நாடோறும் வேள்விக்கருமத்தால் கடவுளைப் பூசிக்கவேண்டும். மன்னுயிர்களைக் காவாமலே யெந்த அரசன் அம்மன்பதையிடத்திருந்து கையடைப்பொருள், இறைப்பொருள், ஆயத் துறைச் சுங்கப் பொருள் பெறுகின்றனே? விரும்பியவற்றையும் துயப்பனவற்றையும் = போகத்தையும் அடைகின்றனே? தண்டிக்கின்றனே? அந்த அரசன் அப்போதே நரகத்தை யடைகின்றன். எ - று. காண்க.

அரசனால் காக்கப்படுவோர் அச்சமுற்றவர்களே யாம். அந்த அச்சம் இருவகைப்படும். கள்ளராலும், துட்டராலும், கொடிய மிருகங்களாலும் உண்டாவது எனவும், பகைவர்சேனை யாலுண்டாவதெனவுமாம். இவ்விருவகை யச்சத்தினையும் ஒழிக்கும்பொருட்டு, "ப்ரசண்டவாத" = நல்லதண்டனையை யுடைய வனை யிருத்தல்வேண்டும் என்றும், "நிர்திஷ்யபரஸைன்யானி" = பகை

வர் படையெவென்று என்றும் கூறப்பட்டன. மக்கட்டொகுதியின் அச்சத்தை யொழித்தலாகிய இவ்வினை கூடத்திரியனுக்கே உரியதருமமென்பதெங்ஙனமென்னும்வினை வருவித்துக்கொண்டு, அதற்குக் காரணமாக, "க்ஷத்ரபாணிः" ஆயுதங்களைக் கையிற் பிடிக்கவேண்டும் என்று அரசதருமம் கூறப்பட்டது.

படைக்கலம் தொடுதல் அரசனுக்கே யுரியதென்று மனு கூறினர். மநுः॥ "சஸ்த்ரீக்ருத்யுத்யுங்க்ருத்ரஸ்ய"=சத்திரங்களையும் அத்திரங்களையும் தரிப்பது கூடத்திரியனுக்குரியதருமம். எ – று. காண்க.

படைக்கலவுரிமை.

அநுசாசனீக பருவத்திலும். வேந்தனைப்பற்றிக் கூறப்பட்டது. ஆநுசாஸநிகே॥ "உத்யாஹஸ்த்ரபாணித்வம் தஸ்யதர்ம்யஸ்நாதநः"=மேலானதுன்பத்தைப் பொறுத்துச் சிறந்த புகழை யடையவேண்டுமென்னும் களிப்போடுங் கூடிய எண்ணம் "உத்யாஹः" ஊக்கம் என்னப்படும். ஆதலினிதுவும், (எனவேபோர்விருப்பம்). படைக்கலங் கைப்பற்றலும், அந்த அரசனுக்குத் தொண்டுதொட்டுவந்த அழிவற்ற தருமமாம். எ–று. காண்க.

சத்திரம் என்றதனால் போருக்குவேண்டிய கருவிகளெல்லாமும் இலக்கணையாற்கொள்ளப்படுகின்றது. அவை. சாந்திபருவத்துட் கூறப்பட்டது. ஶாந்திபர்வணி॥ "யஷ்டயஸ்தோமராஸிக்ஷ்டா ஸ்நாதநாநி பரஶ்வதாः। ஫லகாந்யத்தவர்ணி பரிகல்ப்யான்யநேகஶः"=ஈட்டி, சவளம், வாள் முதலியவாகப் பகைவனைவெல்லத்தக்க கருவிகள். மழு=கண்டக்கோடாலி, கேடகம்=பலகை, கவசம், முதலியவற்றினைப் பலவாறுகச்சமைத்துக்கொள்ளவேண்டும். எ–று. காண்க.

"ப்ரசண்ட" = சிறந்ததண்டனை யுடையவன் என்றதனால் கள்ளர்முதலியோரை ஒறுப்பது என்றகருத்தாகின்றது. ஆயின் இப்பொருள் முன்னரே கூறப்பட்டதாயினும், அது அங்கு பொதுவகையாற் கூறப்பட்டது. ஈண்டு மன்பதை புரத்தலுக்கு இன்றியமையாததென்று சிறப்பித்துக் கூறப்படுகின்றது. ஆதலிற் கூறியது கூறலன்று.

ஒறுத்தலின்வகை.

அவ்வொறுத்தலின் வகையை மனுகூறினர். மநுஃ॥ "அநுபந்தம் ஞாபரீக்ஷ்யாததேசகாலாசலத்வதஃ। ஸாபராதமதாலோச்யதண்டந்தண்ட்யேஷுபாதயேத்" குற்றத்திற்கும் குற்றவாளிக்குமுள்ள சம்பந்தத்தைச் சோதித்து, தேயவியற்கையையும் காலவியற்கையையும் சீர்தூக்கி உண்மையாகவே குற்றமுண்மை துணிவாகத் தோற்றப்பட்டால் தண்டனைக்குத் தக்கவர்களைத் தக்கபடி தண்டிக்கவேண்டும். எ - று. காண்க.

விஷ்ணு. விஷ்ணுஃ॥ "அகஸ்ஸ்வபிததா வ்யேஷுஜ்ஞாத்வாஜாதிந்தனம்வயஃ। தண்டம்ப்ரகல்பயேத்ராஜா ஸாமந்தப்ராஹ்மணேஷ்வஸ்ருக்" = வேறு குற்றங்களிலும் வருணத்தினையும், பொருளுடைமையையும், வயதினையும் அறிந்துகொண்டு தன்னை டிருக்கும் அந்தணரோடு ஆராய்ந்து அரசன் சிக்ஷையை நன்முகவிதிக்கவேண்டும். எ-று. காண்க.

பிரகற்பதி. பிருஹஸ்பதிஃ॥ "வாக்தண்டஞ்தனுர்தண்டஞ்சைவ சதுர்தாகல்பிதோதமஃ। புருஷதோஷவிபவம் ஜ்ஞாத்வாஸம்பரிகல்பயேத்। குரூன்புரோஹிதாஞ்சிஷ்ரான்வாக்தண்டேனைவதண்டயேத்। ஏவாதினோனராஞ்சான்யான்ஸ்தோஷிணோர்தேனதண்டயேத்। சோராதீனங்கதண்டேன வதேனாபிசஷூதுஷாஞ்ச" = உடற்றண்டம், வாய்த்தண்டம், பொருட்டண்டம், மரணதண்டம், எனத்தண்டம் நால்வகைப்படும். ஒருவனிடத்துள்ள குற்றத்தின் தரத்தை விசாரித்து அதற்குத்தக்கபடியொறுத்தல் வேண்டும். குரவர்களையும், புரோகிதர்களையும், வேதியர்களையும் சொல்லால் தண்டித்தல்வேண்டும். வழக்காளிகளையும் ஏனையசாதாரண குற்றமுடையவர்களையும் தக்கபொருட்பறிமுதலிய தண்டஞ் செய்தல்வேண்டும். கள்ளர்முதலியோரை அங்கங்களில் குறைத்தல் முதலிய உடற்றண்டஞ் செய்யவேண்டும். பெருங்கொலை முதலிய குற்றமுடைய காதகர்களைக் கொலைத் தண்டஞ்செய்ய வேண்டும். எறு. காண்க.

சிக்ஷையின்வேறுபாடு.

காத்தியாயனர். காத்யாயனஃ॥ "மித்ராதிஷுப்ரயுஞ்ஜீத வாக்தண்டந்திக்ருபஸ்விநாம்। யதோக்தந்தஸ்யதத்கார்ய ரநுக்தஞ்சாதுகல்பிதம்। அதார்மிகம்த்ரிபிர்ந்ந்யூனை ர்நிகृஹ்ணீயாத்ப்ரயத்நதஃ। நிரோதநேனபந்தேன விவிதேனவதேனச" = நட்பினர் முதலியோரிடத்து வாக்குத்தண்டஞ் செய்யவேண்டும் தவமுடை

யாரைக்கடிந்து கொள்வதேபொதும். எந்தக்குற்ற வாளிக்கு எந்தத்தண்டனை செய்யவேண்டுமென்று மிருதிகளிற் கூறப்பட்டுள்ளனவோ? அவனுக்கு அந்தத்தண்டனை செய்யவேண்டுவது. அப்போதைக்கப்போது நேரிடும் குற்றவகைகளுக்குத் தக்கபடி மிருதிகளிற் றண்டனை கூறுவிட்டால் நல்லோராகிச் சபைக்கணுள்ள சான்றோர் விதித்த தண்டனையைச் செய்யவேண்டும். இவையெல்லாம் தருமத்தோடு நடந்து வருபவன் எப்போதாயினும் மயக்கமுதலிய ஏதுக்களால் குற்றஞ் செய்தவழி, கூறப்பட்டது. அதருமம் = பாவத்தைச் செய்வதேயியல் பாகவுடையவன் ஒருகுற்றஞ் செய்தால், அவனைக் கட்டுதல், சிறையிடுதல் பலவகையாலும் கொலைசெய்தல் என்னும் மூவகையால் ஒறுத்தல்வேண்டும். எ-று. காண்க.

தண்டிக்கத்தக்க விடம்.

மனு. మనుఃll "దశస్థానానిదండస్య మనుస్సాస్వయంభువోబ్రవీత్। త్రిషువర్ణేషుతానిస్యు రక్షతోబ్రాహ్మణోవ్రజేత్। ఉపస్థముదరంజిహ్వా హస్తౌపాదౌచపంచమం। చక్షుర్నాసెచకర్ణౌ చధనందెహస్తథైవచ" = தண்டனை செய்தற் குரிய இடம் பத்தென்று சுவாயம்பு மனுகூறினர். அவை, மூன்றுவருணத்தார்க்கும் ஒத்தபடியாம். வேதியன் ஒருவனும் அப்பத்திடங்களினும் ஊறுபாடில்லாதொழிக. பத்திடங்களாவன, உபத்தம் = மறைவிடம், வயிறு, நாக்கு, கை, கால், கண், மூக்கு, செவி, பொன், உடம்பு. எறு. காண்க.

கொலைத்தண்டஞ் செய்யலாகாதார்.

மனு. మనుఃll "మౌండ్యంప్రాణాంతికోదండో బ్రాహ్మణస్యవిధీయతె। పురుషాణాంకులీనానాం నారీణాంచవిశెషతః"=வேதியனுக்குத் தலைமழித்துத் துரத்துதலே கொலைத்தண்டத்தோடொப்பென்று விதிக்கப்படுகின்றது. நல்லமரபிற் பிறந்தவர்களுக்கும் பெரும்பாலும்மாதர்க்கும் கொலைத்தண்டம் ஆகாது. எ-று. காண்க.

பிரகற்பதி. బృహస్పతిఃll "జగత్సర్వమిదంహన్యా ద్బ్రాహ్మణస్యనతత్సమం। తస్మాత్తస్యవధంరాజా మనసాపినచింతయెత్। అవధ్యాన్బ్రాహ్మణానాహు స్సర్వపాపెష్వపిస్థితాన్। యద్యద్విద్వైషుకుశలం తత్తద్రాజాసమాచరెత్। రాష్ట్రాదెనంబహిష్కుర్యా త్సమగ్రధనమక్షతం" = உலகையெல்லாம் கொலைசெய்யினும் அது

வேதியனுக் கொப்பல்லவாதலின் வேதியன்கொலையை அரசன் மனத்தால் எண்ணவும்படாது. எல்லாப் பாவங்களையும் செய்தாலும்வேதியனைக்கொல்லலாகாதென்று பெரியர்கூறுவர். வேதியரிடத்து எது எது நன்மையோ? அவற்றையரசன் நன்றாகச் செய்யவேண்டும். பாவியான வேதியனைத் தண்டிக்காமல் அவன் சொத்துக்களோடும் அவனைத்தன் னரசாட்சியினின்றும் வெளிப்படுத்திவிடவேண்டுவது. எ-று. காண்க.

நற்றண்டனையின் பயன்.

இயமன். యమ:॥ "ఏవంధర్మప్రవృత్తస్య రాజ్ఞోదండధరస్యచ। యోస్తి స్వర్గతలోకే స్వర్గవాసస్తథాక్షయ:"=இங்ஙனமாக அல்லாதாரை யொறுத்துத் தருமத்தோடு நடக்கும்அரசனுக்கு இவ்வுலகத்தில்புகழ் வளரும். சுவர்க்கத்தும் கெடாத வாழ்வுண்டாம் எ-று. காண்க.

பகைவர்மேற் சேறல்.

சாந்திபர்வம். శాంతిపర్వణి॥ "చైత్రెవామార్గశీర్షేవా సేనాయోగదిప్రశస్యతె। పక్వసస్యామహీపృథివీ భవత్యంబుమతీతథా। నైవాతిశీతోనాత్యుష్ణది కాలోభవతిభారత। తస్మాత్తదాయోజయీత పరెషాంవ్యసనెషువా। ఏతెహియోగాస్సెనాయాది ప్రశస్తాదిపరబాధనె। జలవాంస్తృణవాన్మార్గ స్సమోగమ్యదిప్రశస్యతే। చారైస్సవెదితోభ్యాస కుశలైర్వనగోచరైఃl సప్తర్షీన్పృష్ఠతదికృత్వా యుధ్యేయురచలాఇవ। యతోవాయుర్యతస్సూర్యో యతశ్శుక్రస్తతోజయఃl అకర్దమామనుదకా మమర్యాదామలోష్టకాం। అశ్వభూమిగ్రశంసంతి యెయుద్ధకుశలాజనాఃl సమానిరుదకాచైవ రథభూమిదిప్రశస్యతె। నీచద్రుమమహాకక్షా సొదకాహస్తియోధినాం। బహుదుర్గామహావృక్షా వెణువెత్రతిరస్కృతా। పదాతీనాంతుమాభూమిది పర్వతోపవనానిచ। పదాతిబహుళాసెనా ప్రభావతిచభారత। తథాశ్వబహుళాసెనా సుదినెషుప్రశస్యతె। పదాతినాగబహుళా ప్రావృట్కాలె ప్రశస్యతె। గుణానెతాన్పరిసంఖ్యాయ యుద్ధంశత్రుషుయోజయెత్"=படை செலுவதற்குச் சித்திரைமாசமும், மார்கழிமாசமும் சிறந்தவாம். அப்போது மண்ணில் பயிர், நீர், இருக்கின்றன. அதிக குளிர்ச்சியேனும் அதிகவெப்பமேனும் இல்லாத அக்காலத்தில் சேனைகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். அல்லது, பகைவர்க்குத் துக்கமுண்டாயிருக்கும் காலமும் படையையெடுக்கலாம். நீரும், புல்லு முண்டாயிருக்கும் ஒத்தமார்க்கத்தைக் காட்டிற்றிரிந்தவழக்க முடையவொற்றர்களாலுணர்ந்து செல்லவேண்டும். சத்த

விருடிகளையும் முதுகின்புறமாக்கி மலைபோல நின்றுபோர்செய்யவேண்டும். காற்று எத்திசைக்கணின்று வருகின்றதோ? சூரியனும் சுக்கிரனும் எந்தப்புற மிருக்கின்றார்களோ? அந்தப்புறம் வெற்றியாம். (எனவே எதிர்காற்று, எதிர்வெய்யில், எதிர்வெள்ளிகூடாது என்றபடி). சேறு, நீர், வரப்பு = தடை, கட்டியில்லாதபூமி குதிரைப் படைகளுக்குத் தக்கதாம். நீரில்லாதவொத்தபூமி தேர்ப்படைக்குத்தக்கது. குற்றுச்செடிகளும் நீருமுள்ளவிசாலபூமி யானைப்போருக்கு நல்லதாம். அனேகம் மலைகள் பெருஞ்செடிகள், அல்லது மரங்கள், மூங்கல், பிரம்பு, இவற்றின்புதர்கள், மறைவு=ஒதுங்கிடம், மலை, சோலை, முதலியனவுடையபூமி காற்படைகளுக்குச் சிறந்ததாம். காலாள்களின்போருக்கு வெளிச்சமுள்ள பொழுதும் ஓடுவதற்கு வழிகளுமிருத்தல் வேண்டும். பகலில் குதிரைப்படையின் போர் உயர்ந்தது. காற்படை, யானைப்படை மிகுதியும் உடைய சேனைகட்கு மழைகாலம் சிறந்தது. இந்த வியல்புகளை நன்குணர்ந்து பகைவர்மேற் படையெடுத்துச் செல்லுக. எ-று. காண்க.

மநு. மநுः॥ "యదాతుయానమాతిష్ఠే దరిరాష్ట్ర ంప్రతిప్రభుः। తదానెనవిధానెన యాయాదరిపురంశనైः। మార్గశీర్షెశుభెమాసె యాయాద్యాత్రాంమహీపతిः। ఫాల్గునెవాథచైత్ర్యెవా మాసెప్రతియథాబలం। అన్యేష్వప్యృతుకాలెషు యదాపశ్యేద్ధ్రువంజయం। తథాయాయాద్విగృహ్యైవ వ్యసనెచొత్థితెరిపోः। కృత్వావిధానంమూలెతుయాత్రికంచయథావిధి। ఉరుగృహ్యాస్పదంచైవబాహ్యాంసమ్యగ్విధాయచ। సంశొధ్యత్రివిధంమార్గం షడ్విధంచస్వకంబలం। సాంపరాయికకల్పెన యాయాదరిపురంశనైः" = சமர்த்தனை அரசன் பகைவர்மேற் போருக்குப்படையெடுத்துச்செல்லவேண்டின், மார்கழி, பங்குனி, சித்திரை, அல்லது, மற்றைய இருதுக்களும் பகைவர்கள் துன்பமுற்றிருக்குங் காலமும், தனக்கு மிகவும் அனுகூலித்த காலமுமாக நல்லவேளையில் மெதுவாகப் புறப்பட்டுக் காலம் பார்த்து வலிதில் பகைவர்மேற் செல்லவேண்டும். போர்க்குப் போவோன் மூலப்படைகளைச் சேதமுறுதபடி வைத்து, தன்னிருப்பிடத்தை நன்முகக்காக்கும்படிசெய்து, உடன்வரத்தக்க படைகளையும், அதற்குவேண்டும் உண்டி முதலியவற்றையும், அங்கங்கு நடக்கும் செய்திகளையறிந்து வரவல்லவொற்றர்களையும் சீர்பெறவைத்துக்கொண்டு, மூன்று புறமும்வழிகளைச் சோதித்துக்கொண்டு, தன்னது வகைப்படைகளை

யும் போருக்கு வேண்டும் முயற்சியோடும் வினாயாது=அவசரப் படாதுபகைவர் பட்டணத்தின் மேற்செலுத்தவேண்டும். எ-று. காண்க.

அறுவகைப் படையாவன.

உசனர். ఉశనాঃ॥ "మూలబలం శ్రేణిబలం శత్రుబలం ఆటవికబలంచేతి"= உள்ளூரிலுள்ளவர்களாலியன்ற மூலப்படையும், வாணிபஞ்செய் பவராலாகிய சிரோணிப்படையும், நட்புப்படையும், கூலிப்ப டையும். பகைவரிடத்திருந்தும் கிடைத்தபடையும், கானவப்ப டையும், என அறுவகைப்படையாம். எ-று. காண்க.

படைஅணிவகுத்தன் முதலியன.

போரின் பொருட்டுப் படைகளைச் சேகரித்துப் பலவகை யாக அணிவகுத்தலை மனுகூறினர். మనుঃ॥ "దండవ్యూహేనతన్మార్గం యాయాత్తుశకటేనవా। వరాహమకరాభ్యాంవా సూచ్యావాగరుడేనవా। యతశ్చభయ మాశంకేత్తతోవిస్తారయేద్బలం। పద్మేనచైవవ్యూహేన వివిశేతతథాస్వయం। సేనాపతీన్చ లాధ్యక్షాం స్సర్వదిక్షునివేశయేత్। యతశ్చభయమాశంకేత్తాంప్రాచీంపరికల్పయేత్। గు ల్మాంశ్చస్థాపయేదాప్తా న్కృతసంజ్ఞాంత్సమన్తతః। స్థా నేయుద్ధేచకుశలా నభీమానవికారి ణఃl సంహతాక్విభజేదశ్వా న్కామంవిస్తారయేద్బహూక్। సూచ్యావ్రజేణచైవైతా న్వ్యూహేనవ్యూహ్యయోధయేత్। ఉపరుధ్యారిమాసీత రాజ్యంచాస్యోపపీడయేత్। దూ షయేచ్చాస్యసతతం యవసాన్నోదకేంధనం। ఛింద్యాచ్చైవతటాకాని ప్రాకారపరిఖాం స్తథా। సమవస్కందయేచ్చైనం రాత్రౌవిత్రాసయేవథ।ఉపజాప్యానుపజపేద్భేద్యాశ్చైవ హితక్కృతం। యుక్తైచదైవేయుధ్యేత జయప్రేప్సురపేతభీఃl సామ్నాదానేనభేదేన సమ స్తైరథవాపృథక్। విజేతుంప్రయతేతారీ న్నయుధ్యేతకదాచన।అనిత్యోవిజయోయస్తాద్దృశ్య తేయుధ్యమానయోఃl పరాజయశ్చసంగ్రామే తస్మాద్యుద్ధంవివర్జయేత్। త్రయాణామప్యు పాయానాం పూర్వోక్తానామసంభవే। యుధ్యేతసమసంపత్యా విజయేతరిపూంస్తథా। జి త్వాసంపూజయేద్దేవా న్బ్రాహ్మణాంశ్చైవధార్మికాన్। ప్రదద్యాత్పరిహారార్థం ఖ్యాప యేదభయానిచ। సర్వేషాంతువిదిత్వైషాం సమాసేనచికీర్షితం। స్థాపయేత్తత్రతద్వంశ్యం కుర్యాచ్చసమయక్రియాం। ప్రమాణానిచకుర్వీత తేషాంధర్మానథోదితాన్" = தண் டவியூகம்: சகடவியூகம், வராகவியூகம், மகரவியூகம், சூசீவி யூகம், கருடவியூகம், இவற்றுள் யாதானுமொன்றுக அணிவகுத் துவழிச்செல்லவேண்டும். எத்திசையில் அச்சமுண்டாமென்று சந்தேகப்படுகின்றதோ? அத்திசையில் சேனைகளை அதிகப்ப

டுத்தி பலஞ்செய்ய வேண்டும். அரசன் பதுமவியூகத்தைக்கற் பித்துஅதனுட்டா னிருக்கவேண்டும். சேனதிபதியையும், பலாத் தியகூனையும், எல்லாத்திசைகளிலும் வைக்கவேண்டும். எத்தி சையில்பயமுண்டாகுமோ? அத்திசை நோக்கித்தானும் பெரும் படையுமாக இருத்தல்வேண்டும். நம்பிக்கையுள்ளவர்களாயும். சண்டைக்குறிப்பை நன்குணர்ந்தவர்களாயும், தக்கவிடம், நிற் குநிலை, போர்செய்யும் உபாயவகைஇவைகளில் கை தேர்ந்தவர்க ளாயும், தன்னரசு, அல்லது, தலைவன்என்னும் உரிமையோடு தன்னுயிருள்ள வரையும் போர்விடாத மறத்தையுடைய மள் ளர்களாயும், உள்ள படைஞர்களை அங்கங்கு கூட்டங் கூட் டமாகச் சேர்த்து வைக்கவேண்டும். குதிரைப் படைகளை யும், காலாட்படைகளையும் ஓரேபக்கஞ் சிறிதாகவே யுள்ளது போற் காணும்படி சேர்த்துவைத்து, காலம் வாய்த்தபோது வேண்டியவாறு மிகுதியாகக்காணும்படி விரித்துக் காட்டவேண் டும். சூசிவியூகமாயும், வச்சிரவியூகமாயும் படைகளைச் சேர்த் துக்கொண்டு போர்செய்யவேண்டும். பகைவனைக் குறுக்கிட்டு மறித்துக்கொண்டு, அவனது இராச்சியத்தை யலைக்கவேண்டும். பகைவர்க்கு உதவியாகவந்த புல், விறகு, சோறு, நீர் முதலிய வைகளை உதவவொட்டாது கெடுக்கவேண்டும். எரிகள்முதலிய நீர் நிலைகளையும், கோட்டையையும், சுற்றுமதில்களையும், அகழி களையும், ஆரற் சுவர்களையும் பிறவற்றையும் இடித்துவிடவேண் டும். பகைவர்கள் ஆற்றலற்றவர்களாய் ஓடிவிடும்படி வழிகாட் டித் தப்பித்துக்கொள்ளும்படி செய்துவிடவேண்டும். இராக்கா லங்களில் திடீரென்று மேற்சென்று அச்சம்=வெருட்சி யுண்டு பண்ண வேண்டும். பகைவர் பக்கத்தாருள் தன்போதனைக்குட் பட்டத்தக்கவர்கள் தன்வசமாகும்படி தக்கவைகளைப் பிறரறியாவ கைபோதிப்பிக்கவேண்டும். பகைவர்கள் செய்யுஞ் செய்கையெல் லாவற்றினையும் முயற்சியோடும் எவ்வகையானும் தான் அறிந்து கொள்ளவேண்டும். தன்பக்கத்து முயற்சிக்குத் தெய்வ முதவி யாக விருப்பது தானுணரவரின் அப்போது அச்சமின்றிச் சமர் செய்யவேண்டும். ஐயமுண்டானால் இளைத்தபடி எதிரிக்குக்காட் டாமல் காலத்திற்குத் தக்கபடி, சாம வுபாயத்தாலாவது, பேத வுபாயத்தாலாவது, தான வுபாயத்தாலாவது, இல்லாக்கா லெல்

லாவுபாயத்தாலுமாவது, எவ்விதத்தாயினும் பகைவர்களை வெல்லத்தக்க வுபாயவழிகளைத் தேடிச் செய்யவேண்டும். சண்டைப்பயத்தைக் காட்டவேண்டுமே யொழிய எப்போதும் சண்டையையே செய்யலாகாது. இருவர் போரிட்டவழி ஒருவனுக்கே வெற்றி யுண்டாமென்பது நிச்சயமானதல்ல. தோல்வி யடைந்தால் பெரிய நஷ்டமுண்டாம் "ச" என்றதனால் போரிட்டு வெற்றியையே அடைந்தாலும், பெருத்த நஷ்டமும் = இழப்பும் கஷ்டமும் = வருத்தமும் அனுபவியாமல் ஒழியாது. ஆதலால் சண்டைசெய்யலாகாது. மேற்குறித்த மூவகை யுபாயமும் நேரிடாவிட்டால், ஒத்ததரமான வலிமையா யிருக்குமிடத்தில், போராவது செய்து வெற்றியடைந்து, தேவர்களையும் வேதியர்களையும் பூசித்துத்தானதருமங்களைச் செய்து பழிபாவங்களைப் போக்கடித்துக் கொள்ளவேண்டும். வெற்றியடைந்துவந்த அரசன், தோற்றுவிட்ட நாட்டினர் யாவர்க்கும், "அபயம்" அச்சமில்லையென்று முதலில் பறைசாற்றுவிக்கவேண்டும். அந்நாட்டுக்குடிகளனைவருடைய கருத்தினையும் ஒருமிக்க அறிந்துகொண்டு, தோற்ற அரசன்மரபினனையே அரசாக ஏற்படுத்தவேண்டும். காலெல்லை, தொழிற் கட்டுப்பாடாகிய எல்லை, அதற்கு வேண்டுவனவாகிய சத்தியப் பிரமாணமுதலிய சபதங்களையும் அவனைக்கொண்டு செய்துவைக்கவேண்டும். பின்பு பகையரசன் செய்துள்ள தருமங்களையெல்லாம் நடத்திவரவேண்டும். எ-று. காண்க.

பகைவர்க்குத் துன்பமுண்டானபோது, என்பது - பொருள்வலி, படைவலி, அறிவுடைமை, குறைந்தகாலமும். தன்சுற்ற முதலியவருள் விரோதமுடைமை, தெய்வவலி குறைதலுமாகிய காலமுமாம். உலோப முதலிய தீக்குணமும், பாவச்செய்கையும் அவற்றிற்குக் காரணமாம்.

மூலப்படையைக் காக்கவைத்தல் என்பது - தனது துருக்கத்தினையும், நாட்டினையும், சூழ்ந்த இகலரசர்கள் கைவசஞ் செய்யாதபடி காத்தலாம்.

"த்ரிவிதமார்கம்" = ஒத்தவழி, நீர்வழி, காட்டுவழி, இவைகளை வழி நடைக்கு ஒத்துவரும்படி சீர்ப்படுத்திவைத்தல்.

"ஷட்விதம்பலம்" = யானை, குதிரை, தேர், காலாள், சேனைத்தலைவர், ஏவலாட்கள், என்பன அறுவகைவலி.

தண்டவியூகம், எது - தடியைக் கிடத்தியவாறுபோல ஒரேவரிசையாகவொருவன்பின் ஒருவன் நிற்கச்செய்தல்.

சகடவியூகம். எது - பாண்டில்=வண்டிகளைப்போல வளையநிறுத்தல்.

முன்பக்கத்தில் "பலாத்தியகூன்" நடுவே அரசன், பின்னே சேனை பதி, பக்கங்களில் யானைப்படை அதற்கடுத்து குதிரைப்படை, அதன்பின் காலாள் இவ்வாறுகத் தண்டவியூகஞ்செய்து, எல்லா முகத்தும் பயமுண்டாகுங் காலத்தில் வழிநடக்கவேண்டுவது. இவ்வகையாகவே முன்பக்கத்தில் ஊசியைப்போல் கூர்த்துச் சிறியதாயும், பின்பக்கம் விரிந்து பெரியதாயும் சகடவியூகம் செய்து பின்புறம் அச்சமுண்டானபோது வழிநடக்கவேண்டும்.

வராகவியூகம். எது - முன்னும் பின்னும் ஊசிபோற் சிறுத்து இருக்கநிறுத்துவது. ஆயின் நான்குகாலும் வாலுமுகமும் தோன்றநடுவே பருத்து இருப்பது.

கருடவியூகம். எது. வராகவியூகமேபோலும். ஆயின், இருபக்கஞ் சிறகுகள் அதிகமாம். இரண்டுகாலும் இருகோதைப்பற்களும் குறைவாம். வாற்புறம் சிறிது தடிப்பும், தலைப்புற மூக்கின் வளைவுமாம். பக்கங்களில் அச்சமுண்டாகும்போது. இவ்வராக கருடவியூகத்தால் வழிநடக்கவேண்டும்.

மகரவியூகம். எது. வராகவியூகத்திற்கு மாறுபாடாக விருக்கின்றது. என்னை? முன்னும் பின்னும் அகன்றும், நடுவே சுருங்கியும் இருக்கும்படி நிறுத்தவேண்டும். முன்னும்பின்னும் அச்சமுண்டானபோது இந்தவியூகத்தால் செல்லவேண்டும்.

சூசிவியூகம். எது - எறும்பொழுக்கைப்போல ஒன்றோடொன்று தொடர்ந்து ஊசியைப்போலச் சேனைகளை நிறுத்தி, விளைவுடைய இலகுத்தன்மை, வீரம், வலிமையுமுடைய போர் மள்ளரை முன்பாகத்தி லுடையதாக நிறுத்தல், இது முன்பக்கம் அச்சம் உண்டானபோது செல்லுவது.

பதுமவியூகம். எது - தாமரைவடிவாகவும் ஒத்தபடியாகவும், விரிவாகவும், வட்டம் வட்டமாகவும், வீதி வீதியாகவும், மண்டலங்களை வகுத்து அவற்றினைச்சூழ மேல் பாகத்தில் இதழ்களையமைத்து அதனுள் தாதுக்களில் அடங்கிக் கிடக்குங் கொட்டையை வகுத்து, போய் வருதற்குத் தக்கவழியாகத் தண்டும் அமைந்திருக்க நிறுத்துவது. அந்தத்தண்டாகிய வழி வேண்டியவாறு விரித்துக் கூட்டவும், சுருக்கி முடிக்கவும் கூடுமானதாக விருக்கும். இதனுல் வேண்டுமானதிசையில் வேண்டுமானபடி போர்செய்யலாம். இதனுட் புகுவதே அருமை. உட்புகுந்தவன் வெளிவருதல் அதனினும் அருமையாம். இதனடுவே யிருப்பவன் வெளியுள்ளவர்களுக்கு=அரியவனையிருப்பான்.

வச்சிரவியூகம். எது - இது சூசிவியூகமே போலும். ஆயின் முட்களைப்போல எவ்விடங்களினு முகமுடையதாக விருக்கும். இது பெருத்தஉடம்பு, தக்கவலிமை, போர்க்கல்வி தேர்ச்சி, தலைவனிடத்தன்பு, மானமுடைமை, ஊக்கமுடைமை, நுண்ணுணர்வு, சோர்வில்லாமையும் உடைய சிறந்த வீரர்களையே தேர்ந்தெடுத்து வேண்டுங் கருவியோடு தொகுக்கப்பட் டுள்ளது. அரியபோரில் பகைவனையிடித்துச் செல்லவாம்.

சேநாபதி. எது - யானை, குதிரை, தேர், காலாள், இவைகளின் உறுப்பான பரிவாரங்களும் கூடியது சேநாங்கமாம். அது பத்துகூடினால், பத்தி யென்னப்படும். அப்பத்தி பத்துகூடினால் ஒருசேனையாம். அதற்குத் தலைவனே சேநாபதியாம். அப்பத்துச் சேநாபதிகளுக்குத் தலைவனே சேனாநாயகன். அவனே பலாத்தியகூன் என்னப்படுவன்.

போர்ச்சங்கேதம். எது - சேனைகள் எழுந்துநிற்பதற்கும், அடங்குவதற்கும், வெளிப்படுவதற்கும், இடமாற்றுவதற்கும், நெருங்கிக் கொள்ளுவதற்கும், பிரிந்து தூரப்படுவதற்கும், முன்பின் பக்கம் இவ்விடங்களைச்சார்ந்து ஒதுங்குவதற்கும், நகர்வதற்கும், குதித்துத்தாண்டுவதற்கும், பகைவர்மேற் பாய்தலுக்கும், முன் வீழவொட்டாது பற்றுவதற்கும், படைக்கலந் தொடுவதற்கும், விடுவதற்கும், ஊர்தி = வாகனங்களைச் செலுத்துவதற்கும், ஒரு புறங்காட்டி மற்றொருபுறம் வினைமுடித்தலுக்கும், ஓரிகாலத்தி லனைவரும் மேற்செல்லுவதற்கும், முறையே செல்வதற்கும், முன்னின்றவர் ஆனபின், பின்னின்றவர் செல்வதற்கும் ஓடிப்போவதற்கும், போர்தொடங்குவதற்கும், விடுவதற்கும், கோட்டையைப் பிடிப்பதற்கும், வெற்றிக்கும், தோல்விக்கும், நால்வகைச்சேனைக்கும், படைக்கலங்களுக்கும் வெவ்வேறுக ஒவ்வொன்றற்கும், தலைவன்கருத்துக்கு மாறுபாடின்றி வினைமுடிவதற்கு வாத்தியங்களாலுங் கொடிமுதலிய குறிகளினுலும் சங்கேதம் = குறிப்புரைகளை நியமித்து அக்குறியின்படி நடக்கும் வழக்கம் படைஞர் அனைவர்க்கும் ஓரேவகையாற் பயிற்றுவிக்கப்பட் டிருக்கவேண்டும்.

போருக்குவேண்டும் கருவிகளாவன, படைகளிலுள்ளவர்கட்கு உயிரைக் காப்பதுவாயுள்ள சோறுந் தண்ணீரும், உடம்பைக் காப்பதுவாயுள்ள கவசமுதலியவும், இளைப்பொழிக்கத்தக்க வுபசாரங்களும், வருத்தந்தோன்றுதவுணர்ச்சியை நிலைபெறுத்துக் கொள்ளுவதும், மருந்தும்பிறவுமாம். இவையுயிர்காப்புக்கருவிகள். இனிபடைக்கலங்களும், அவற்றையுய்க்குங் கருவிகளும், விடப்பொடிகளும், அக்கினிசம்பந்தப் பொருள்களும், புகைசெலுத்துந்திறம், கல்செலுத்துந்திறம், இயந்திரம் - பொறிகள் செலுத்தும் திறமும் சுருங்கைகளும் பிறவும், பகையையழிக்குங் கருவிகளாம். அமைச்சர், வைத்தியர், மாந்திரிகர், சோதிடர், இவர்கள் இருவகைக்கும் பொதுக்கருவியாம். அரசனே ஆன்மா, படைகளேயாக்கை = உடம்பு என்றுகொள்க. சுருங்கை = நிலவறை.

தன்வினைக்குத் தெய்வசம்மதமறிதல். என்பது - செய்தமுயற்சி கைகூடிவருகை, சோதிடநூல், சகுநநூல், சாரநூல் இவைகளால் தனக்குவெற்றிக்குறிப்புத்தோன்றுவது. இங்ஙனம் கூறியவற்றினையு மற்றுமுள்ளவைகளையும், மனுவியாக்கியானம் மேதாதிதி, குல்லூகபட்டீயம், பாரதம் நீலகண்டீயமுதலிய நூல்களுட் கூறியிருத்தலின் ஆண்டுணர்க.

மேற்கூறியபடி அரசன் பகைவர் நிலங்களை வென்றுஅதனையும் தனதுநாட்டினையும் தருமத்தோடும் காத்துவரவேண்டும்.

எங்ஙனமெனில். முன் சுo - வது. சுலோகத்தில், "புஷ்பமூத்ரம்" என்றுற்போல்வனவற்றுற் கூறப்பட்டது. மலர்மாலைதொடுப் பவன்பூஞ்சோலையுள் மரத்தின்மலர்ந்த பூக்களைமாத்திரம் பறிப் பானன்றி அம்மரத்தைக் களைதல்முதலிய துன்பஞ்செய்யாத வாறுபோல, நாட்டின்கண்ணே விளைபயிர் முதலியவற்றுல்மன்ப தைக்கு = மானுடர்க்கு, எவ்வெவ்வளவு இலாபம் உண்டாவ தோ? அவ்வம்மட்டில் அவர்கள் விருத்தியைவேண்டி இறை கூறு வாங்கிவரும்மரசன் (எனவே, குடிகளிடத்தில் ஆறிலொ ருகூறுக்கு அதிகப்படாது வாங்குபவன். என்றபடி) அவர்கள் புண்ணியத்திற்கு முரியவனுவான்.

கரிகளைச்சமைப்போன். மரங்களைவேரோடு பறித்துச்சு டுவதுபோலஅரசன் மன்பதைதேடியபொருளை யெல்லாம்தான் பறித்துக்கொண்டு, அவர்கள் உண்டிக்கே வருத்தப்படும்படிசெ ய்யலாகாது. மரத்தைவளர்த்துப் பூப்பறிப்பதுபோலக் குடிகளை ப்புரந்து வரியிறைவாங்கிக் கொள்ளவேண்டும். என்றுசாந்திபர் வத்திலுங்கூறப்பட்டது.

இறைகூறு.

శాంతిపర్వణి॥ "మధుదోహందుహోద్రాష్ట్రం భ్రమరాన్నప్రతాపయేత్। నచైన మ్లువత్పీడయేత స్తనాంశ్చనతుకుట్టయేత్। జలూకావత్పిబేద్రాష్ట్రం మృదునైవనరాధిపః। వ్యాఘ్రీవాపహరేత్పుత్రం నదంశేన్నచపీడయేత్। యథాచలెఖకరిపర్ణ మాఖుర్నపాత్రత్వ చంయథా। అతీక్ష్ణేనాప్యుపాయేన వర్ధమానంప్రదాపయేత్। తతోభూయస్తతోభూయస్ క్రమాద్వృద్ధింసమాచరేత్" = வண்டு பூவைக் கெடுத்தல் செய்யாது முகந்து தேனைக்கொள்ளுவதுபோல, மன்பதைக்குத் துன்பமி ன்றி வரியிறையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கரும்பைக் கோதுவேறு சாறுவேறு பிழிந்துகொண்டாற்போலும் கொள் ளலாகாது. பால்குடிப்பவன் மூலைகொய்துவிடலாகாது. அட் டை நோய்தோன்றுது இரத்தங் குடிப்பதுபோல நாட்டிலுள் ளபயனை மெல்லக் கொள்ளவேண்டும். புலிப்பிணை, கடியாதும் அறையாதும் தன்குழவியைக் காப்பதுபோல நோய்த் தோற்ற மில்லாமலே மன்பதையைத் தன்வயமாக்கி நடத்த வேண் டும். எழுதுவோன் ஓலையைக் கிழியாமலெழுதுகின்ற வாறு போல் குடிகளுக்குத் துன்பமுண்டாகாதபடித் தன்னுணையைச் செலுத்தவேண்டும். எலிகள் உமியைக்கொறித்துத் தின்றுபோ

வதுபோல அரசன் குடிகளது செலவுக்குப் போதுமானது போக மிக்கவற்றைக் கொள்ளவேண்டும். குடிகளுக்கு வரவு மிகுதியானல் மெதுவான வுபாயவகையால் தான் பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறே, காட்டிற்செல்வம் மிகுதியா மளவு தனதுவரும்படியை அப்போதைக்கப்போது விருத்தி செய்துகொண்டு முறையே விருத்தியடைய வேண்டும். எ-று. காண்க.

மனு. மனுஃ॥ "క్రయవిక్రయమధ్వానం భక్తంచసపరివ్యయం। యోగక్షేమం చసంప్రేక్ష్య వణిజోదాపయేత్కరాన్। యథాఫలేనయుజ్యేత రాజాకర్తాచకర్మణాం। తథావేక్ష్యనృపోరాష్ట్రే కల్పయేత్సతతంకరాన్। యథాల్పాల్పమదంశ్యద్యం ఖార్యాంకోవత్సషట్పదాః। తథాల్పాల్పోగృహీతవ్యో రాష్ట్రేష్వాజ్ఞాబ్దికఃకరః" = கொள்ளல், விற்றல் எவ்வளவு, வாடகை எவ்வளவு, படிச்செலவும் மற்றையசெலவும் எல்வளவு, பண்டம் சேதப்படாது வந்துசேருவதற்கு ஆள் காவற்செலவு எவ்வளவு, எல்லாம்போக வாணிபஞ்செய்வோனுக்கு வரும் இலாபம் எவ்வளவு என்பதனை ஆராய்ந்து, வணிகனுக்குவரி ஏற்பாடுசெய்து, இறுக்கச்செய்ய வேண்டும். பொருள் வரவுக்கு வேண்டுமானதொழில் செய்தவன், அரசன் இவரிருவர்க்கும் பயனுண்டாகும்படி யோசித்து இறைமகன் தன்னாட்டுக் குடிகளுக்குக் கப்பம்விதிக்க வேண்டும். அட்டை, கன்று, வண்டு, இவைகள் சிறுகச் சிறுகக் கொண்டு உண்பதுபோல அரசன் தேயத்தில் வருடத்துப்பகுதிப்பணத்தைச் சிறுகச் சிறுக (எனவே மாதவாரியாய்) பெற்றுக்கொள்ள வேண்டுவது. எ - று. காண்க.

மார்க்கண்டேயர். మార్కణ్డేయః॥ మాసానష్టౌయథాసూర్య స్తోయంహర తిరశ్మిభిః। సూక్ష్మైర్జీవాభ్యుపాయేన తథాశుల్కాదికంనృపః" = சூரியன் எட்டுத்திங்கள் படிப்படி வெய்யலதிகரிப்பித்தும்குறைப்பித்தும் உபாயத்தால் நிலத்தின்கணுள்ள நீரைவரளச்செய்திழுத்துக்கொண்டு மீட்டும் மழைக்குக் காரணமாய்எவ்வாறு உலகத்தைக் குளிர்விக்கின்றானே? அரசனும் அவ்வாறே படிப்படி ஆயத்துறை வரவும், இறைப்பொருளும் விருத்தியாகச்செய்தும் குறைத்தும் தான்தேடிய பொருளைமீட்டும் அக்குடிகளுக்கேயுதவிக் காத்தும் வரவேண்டுமென்றது கருத்து.

இங்ஙனம், அரசிறை பெற்றுக்கொள்வது மலர்மாலைதொடுப்பவனேவுவித்துக்கூறுவது, ஏனைய அரசொழுக்கமெல்லாவற்றிற்கும் உபலக்கணமாக விருக்கின்றது.

அரசனுக்குரிய அகப்பாட்டொழுக்கவியல்பு.

முடிசூட்டல் முதலிய சிறப்போடுங் கூடியிருக்கும் இல்லறத்தாகிய அரசனுடைய வெளிப்படாத விசேட தருமங்களை யாஞ்ஞவல்கியர் கூறினார். యాజ్ఞవల్క్యః॥ "మహోత్సాహస్థూలలక్షకృతజ్ఞోవృద్ధసేవకః। వినీతస్సత్వసంపన్నఃకులీనస్సత్యవాక్శుచిః। అదీర్ఘసూత్రస్మృతిమానక్షుద్రోపరుషస్తథా। ధార్మికోవ్యసనశ్చైవ ప్రాజ్ఞశ్శూరోరహస్యవిత్। స్వరంధ్రిగోప్తాస్వీకృత్యాందండనీత్యాంతథైవచ। వినీతస్త్వథవార్తాయాంత్రయ్యాంచైవనరాధిపః" "ఉత్సాహః" = புருடார்த்தங்களுக்கு எதுவாகிய தொழில்களைத் தொடங்கச் சோராதவெண்ணம் = பெரியவூக்க முடையவன். எறு. "స్థూలలక్షః" = பெரியதனைப் பார்ப்போன், என்பது, பெருங்கொடைப் பொருளையே நோக்குவோன். எறு. "కృతజ్ఞః"= பிறர்செய்த நன்மை தீமைகளை மறவாதவன். "వృద్ధసేవకః"=தவம், அறிவு, முதலியவற்றுற் சிறந்தோர் வழிநடப்பவன். எறு. "వినీతః" சந்தேகப்பட்டலாகாது, தீடீரென்று இனிமை கூறலாகாது, பெரியோர்க்கு அடங்கி யொழுகவேண்டுவது, உத்திகளையும் வழக்கினியல்பையும் உணர்தல், யென்பது முதலிய மிருதிவாக்கியங்களா லுண்டாகிய நீதியோடும் இளகிய கருத்தினையு முடையவன். எறு. "సత్వసంపన్నః" = செல்வத்திலும் வறுமையிலும் சுகதுக்கங்களில் அழுந்தாதவலியை யுடையவன். எறு. "కులీనః"= தாய்தந்தையர் என்னும் இருவகைமரபினும் நல்லோரை யுடையவன். எறு. "సత్యవాక్" = மெய்பேசுமியற்கை யுடையவன். எறு. "శుచిః"=உள்ளும் புறம்புஞ் சுத்தமானவன். எறு. "అదీర్ఘసూత్రః" ஒருதலையாகச் செய்யவேண்டுங் கருமத்தைத் தொடங்குவதிலும், தொடங்கிய கருமத்தை முடிப்பதிலும் வீண்காலங்கழியாதவன் = தூங்காமுயற்சியுடையவன் எறு. "స్మృతిమాన్" = உணர்ந்தபொருளை மறவாதவன். எறு. "అక్షుద్రః" = நற்குணங்களில் வெறுப்பற்றவன். எறு. "అపరుషః" = பிறர்குற்றங் கூறாதவன். எறு. "ధార్మికః" = வருணச்சிரமதருமங்களை யுடையவன். எறு "అవ్యసనః" = பதினெட்டுவகைத் துக்கமுமில்லாதவன். துக்

கம் பதினெட்டாவன. க - மிருகவேட்டை, உ - சூதாடுதல், ஈ - பலதொழிற்றடையாகப் பகலுறங்கல், ச - பிறர்பழிகேட்டுக்களித்தல், ஞ - மாதரோடுகலந்து களித்திருத்தல், ரு - கட்குடியால் மயங்கி வீழ்ந்திருத்தல், எ - ஆடல், அ - பாடல், கூ - வாத்தியங்களில் மனஞ்செலுத்தல், க0 - வீண்காலங்கழித்தல், இப்பத்தும் இன்பம் வேண்டுமென்னும் இச்சையாற் பிறந்தகுணங்களாம். இவற்றினைக்காமத்துன்ப மென்னப்படும். க - கோள் = அறியாக்குற்றங் கூறல், உ - ஆராயாது துணிந்தொறுத்தல்= நல்லோனைத் துன்பமுறுத்தல், ஈ - வஞ்சம் = கபட்டிறற் கொல்லல். ச - ஈர்ஷை = பிறர்குணங்கண்டு அழுக்காறடைதல். ஞ - அசூயை=பிறர்குணங்கண்டு, அருவருத்துக்கூறல். ரு - பிறர்பொருளைக் கெடுத்தல். அது மூவகை, பிறர்பயனைக்கவர்தல் எ - ம். பிறர்பொருளைக்கவர்தல் எ - ம். பிறருக்குக் கொடுக்கத்தக்கனவற்றைக் கொடாதுகவர்தல் எனவுமாம், எ - வைதல் = திட்டுதல், அ - கோவத்தால் அடித்தல். இவ்வெட்டும் வெகுளியாலாவது. இவ்வெட்டுமே குரோதவியசனம் = வெகுளித்துன்பமாம். ஆகப்பதினெட்டு. இப்பதினெட்டினுள் பழகிலுலும் இடையிலே விடத்தக்கனவாயுள்ளன பதிஞென்று. எழுமாத்திரம் பழகியபின் தாவெழியாது முற்றுங்கெடுத்தே விடுவனவாம். அவை கட்குடி, சூதாடல், பெண்புணர்ச்சி, வேட்டை, எனக்காமத்துட்பிறந்தன நான்கும், ஆராயாது துணிந்தொறுத்தல், அடித்தல், வைதல், என்னும்வெகுளியாற் பிறந்தன மூன்றும் ஆகளழுமாம்). "ప్రాజ్ఞుఃడ" = ஆராய்ச்சியுடையுவன். = ஆழ்ந்தகருத்தையறிந்து துணிதல். எ - று. "శూరుఃడ" = அச்சமில்லாதவன். எ-று. "రహస్యఞ్ఞ" = உணர்ந்தவற்றுள் வெளிப்படுத்தப்படாதனவற்றை யுள்ளடக்கவல்லவன். "స్వరంధ్రగోప్తా" = தன் அற்றமறைப்பவன் = சோர்வை மறைப்பவன். (எனவே அரசன் தன் "படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண், தான், என்னும் எழனுள்ளும் பிறர்புகாவகைகாத்தல் என்று கொள்க). "ఆన్వీక్షక్యం" = தன்னை யறிந்திருத்தல் (எனவே தன்னைப்பற்றி யாராயும் தருக்கநூலுணர்ச்சியாலும்). "దండనీత్యం"= தண்டனை நீதிநூலிலும். (எனவே அருத்தநூல், என்பது, பொருளைத் தேடுதல், அதனைக் கெடுக்காது காத்தல், வளரச்செய்

தல், இம்மூன்றினையும் உணர்த்துநூல்). "ధాన్యం" = பொருள் சேர்ப்பதற்கு ஏதுவாகிய நிலத்தையுழுதல், வாணிபஞ் செய்தல், பசுக்காத்தல், இவற்றையுணர்த்துநூலிலும், "జ్ఞాన్యం" பாவத்தை யொழிப்பதற்கும் புண்ணியத்தைத் தேடி ஞானமுன்னிலையாக முத்தியடைவதற்கும் ஏதுவாகிய இருக்கு, யஜுஸ், சாமவேதங்களிலும். "ఏనీతః"=விசேட முறுத்தப்பட்டவன். (எனவே அவற்றினை யுணர்ந்தோரால் உணர்த்தப்பட்டுச் சமர்த்தனாக்கப்பட்டவன். கேள்வியிற் சிறந்தோன் என்றபடி). இக்குணங்களை யுடையவனே மன்பதையையாளும் அரசாக விருப்பான். இவைஅரசனுக்கு அகப்பாட்டு ஒழுக்கமாம். எ–று. காண்க.

அதனனே. "షష్టి ంశద్గుణోపేతోరాజా"=மூப்பத்தாறு குணங்களோடு கூடினவன் அரசன். என்ற சூத்திரத்தின் வியாக்கியானத்துள், மிகுந்த ஊக்கமுதலிய குணங்கள் உசனரால் கூறப்பட்டன.

அரசனது புறப்பாட்டொழுக்க வியல்பு.

அரசன் வெளிப்பட்ட ஒழுக்கத்தினையும் யாஞ்ஞவற்கியரரற் குறிப்பிக்கப்பட்டது. యాజ్ఞవల్క్యః॥ "సమాత్రిణఃప్రకుర్వీత ప్రాజ్ఞాన్వృద్ధాన్నరాంశుచీన్। తైస్సార్ధంచింతయేద్రాజా విద్రైణాథతతస్స్వయం"=பெருக்கமுதலிய குணங்களோடுங் கூடியஅவ்வரசன் இது இதம், இது அகிதம் என்று பகுத்தறியவல்ல கூரியரும், பரம்பரையாக வந்தவரும், பெருஞ்சுகதுக்கங்கள் வந்தாலுமயங்காதவரும், மாபுசுத்தமும் மனச்சுத்தமு முண்டானவர்களுமாயுள்ளவரை அமைச்சராக்கி அவர்களோடும் ஆராய்ச்சிசெய்யவேண்டும். பின்புஎல்லாவிலக்கணங்களோடுங்கூடிய வொரு வேதியனோடு ஆலோசிக்கவேண்டும். அதன்பின் தானே சிந்திக்கவேண்டும். எ–று. காண்க.

மந்திரர் தொகை.

மனு. మనుః॥ "మూలాంశాస్త్రవిదశ్శూరా ంస్థూలలక్షాన్కులోద్గతాన్। సచివాన్సప్తవాష్టౌవా ప్రకుర్వీతపరీక్షితాన్"=தொண்டு தொட்டுத் தன் குலமுறை யோடொத்து வந்தவர்களும், எல்லாநூல்களையு முற்றுணர்ந்தவர்களும், சுத்தவீராயுள்ளவர்களும், தடையற்றபெருத்தஆராய்ச்சி யுடையவர்களும், நல்லமரபிற் பிறந்தவர்களும், எல்லாவகையாலும் ஆராய்ந்து தேர்ந்துகொள்ளப் பட்டவர்க

ளும் ஆத்தருமாகிய மந்திரியர் எழுவரை அல்லது எண்மரையா வது ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். எ-று. காண்க.

மந்திரா லோசனை.

மனு. మనుఃll "తైస్సార్థచింతయేన్నిత్యం సమాధింసంధివిగ్రహం। స్థానంస ముదయంగుప్తిం లబ్ధప్రశమనానిచ। తేషాంస్వంస్వమభిప్రాయ ముపలభ్యపృథక్పృథక్। సమస్తేషుచకార్యేషు విదధ్యాధితమాత్మనఃll" = அவர்களோடு நாடோறும் மன்பதையின் ஆக்கத்தின் பொருட்டும், பகைவரோடு சந்தி, போர், சேனை, பண்டாரம், பட்டணம், நாடு, முதலிய விடயங்களைப்பற்றியும், அரைகளைக் காத்தலின் பொருட்டும், இலாபநட்டங்களைப் பற்றியும், மனிதர் பசுக்களின் காப்பைப் பற்றியும், தேயத்தில் வரவுவிளைவைப் பற்றியும், செலவைப்பற்றியும் ஆராய்ச்சி செய்யவேண்டும். "సామాన్యం" என்றதுபாடமாயின், எல்லாரும்கூடியபொழுது முழுவதும் மறைவில்லாத வெளிப்பட்ட விடயங்களைப் பற்றியே ஆலோசிக்கவேண்டும். என்க. அவர்களுள்ஒவ்வொருவனை வேறுவேறுகத்தனித்தவிடத்திருந்து இவ்விருவராகவே வெளிப்படாத விடயங்களை ஆராய்ச்சி செய்து, தனித்தனி அவ்விடயம் பற்றியஅவரவர்கள் கருத்தின்மேல் அனைவருனடைய கருத்தினையும் ஒரோகாலத்தி லறிந்துகொண்டு குணகுற்றங்களின் உயர்வுதாழ்வுகளைக்கண்டு பிடித்து, அதனுள், தனக்கு இதமாவது எதுவோ? அதனைத் தீர்மானித்துக் கொண்டுஅவ்வாறே நடத்தவேண்டும். எ-று. காண்க.

முதல் அமைச்சன்.

மனு. మనుఃll "సర్వేషాంతుసశిష్టేన బ్రాహ్మణేనసపశ్చితా। మంత్రయేత్పరమం మంత్రం రాజాషాడ్గుణ్యసంయుతం। నిత్యంతస్మింత్సమాశ్వస్త స్సర్వకార్యాణినిక్షిపేత్। తేనసార్థంవినిశ్చిత్య తతఃకర్మసమారభేత్" = அவ்வமைச்சருள் சிறந்தகுணத்தகுதி யுடையவனையும் "షాడ్గుణ్యం" = சந்தி, விக்கிரஹம், யானம், ஆசனம், துவைதீபாவம், சமாச்சிரயம் என்னும் அறுவகைப்பட்ட இராச்சிய தந்திரங்களையும் அறிந்தவனையுமிருக்கிற ஒருவேதியனை முதல் அமைச்சனாக்கிக்கொண்டு அவனோடு இன்றியமையாத விடயவாராய்ச்சியைச் செய்து அவனிடத்து நம்பிக்கைவைத்துத் தான் பார்க்கத்தக்க கருமங்களை அவன் வசமாக்கி அவனுடன்பாட்டினாலேயே கருமமுடித்து வரவேண்டும். எ-று. காண்க.

வினைமுடிப்போனை நியமித்தல்.

மனு. மநுः॥ "நிர்வர்த்திதாஸ்யயாவதி³ தி³திகர்தவ்யதாநுபி⁴ः" = செய்து முடிக்கத்தக்க கருமங்களெல்லாம், வழுவாது நடக்கும்படி எந்தெந்தத் தரமுடைய எத்தனைதொழிற் றலைவர்களை நியமித்தாற் போதுமோ? அவர்களை அந்தந்தக்கருமங்களுக்குத் தக்க ஆற்றல் தகுதிமுதலியனவுடையவர்களாய்ச் சோதித்து, நியமிக்கவேண்டுமென்பது முதலிய பலவினைகள் பெருநூல்களாற் கூறப்பட்டன. எறு. காண்க.

அரசன் தொடங்கவேண்டியகருமம் யாதெனில்? முதலாவது, தக்கவிடம், கோட்டை, முதலியவற்றினைச் சோகரித்துக் கொள்ளவேண்டுவது என்று யாஞ்ஞவல்கியராற்கூறப்பட்டது. யாஜ்ஞவல்க்யः॥ "ரம்யேபஶவ்யமாஜீவ்யம் ஜாங்க³லம்தே³ஶமாவஸேத்। தத்ரது³ர்கா³நிகுர்வீத ஜநகோ³ஷ்டா²தி³கு³ப்தயே" = சண்பகம், பாடலம், அசோகுமுதலிய பூமரங்களால் அழகுசெய்யப்பெற்றதும், பசுமுதலிய பிராணிகளுக்கு நோயின்றி விருத்தியாவதற்கு ஏதுவாகியும், உண்ணுதற்குரிய பலபண்டங்களும் விளைவுள்ளதாகியும், புல்விறகுநீர் நிரம்பியதாயும், மலைச்சார்புள்ளதாயுமிருக்கிற இடங்களில் அரசன் வாசஞ்செய்யவேண்டும். அவ்விடத்துத்தனக்கும், தன்சனங்களுக்கும், தன்பொருளுக்கும், காப்புண்டாகும் பொருட்டு, அரண்களை யேற்படுத்திக் கொள்ளவேண்டும். எ – று. காண்க. அரண்=கோட்டை.

அரண்.

அரண்வகைகள் மனுவாற் கூறப்பட்டன. மநுः॥ "த⁴நுர்து³ர்க³ம் மஹீது³ர்க³ மப்து³ர்க³ம்வார்க்ஷ மேவவா। நृது³ர்க³ம்கி³ரிது³ர்க³ம்வா ஸமாஶ்ரித்யவஸேத்புரம்। ஸர்வேணது ப்ரயத்நேந கி³ரிது³ர்க³ம்ஸமாஶ்ரயேத்" = "த⁴நுர்து³ர்க³ம்" = சுற்றிலும் ஐங்காத வழி வாயில் நீரற்றவெறுவெளியாகிய நிலக்கோட்டை. (தன் கோட்டையில் மாத்திரம் தீருடையது). "மஹீது³ர்க³ம்" = கல்லாலும் இட்டிகையாலும், விசாலமாகவும், பன்னிருமுழ முதலிய தக்க வுயரமுள்ளதாகவும், மேலே நின்று போர் செய்வதற்கும் போக்குவரவுக்கும் தக்கவழி, மறைவான பதணம், சுருங்கை பல்கணிமுதலிய வுடைய ஞாயில்களுமுடைய மதிலரண் "அப்து³ர்க³ம்" ஆழமுள்ள நீராற் சூழப்பட்ட நீரரண் "வார்க்ஷ ம்" = வெளியிற்சூழ

ஒருகாதவளையிலும் நெருக்கமுள்ள பெருமரங்கள், முட்கள், புதர்கள் முதலிய நிரம்பி உட்புகலாகாத காட்டரண். "நிருர்கம்" நாற்புறமும்சூழ நால்வகைச்சேனையும் நித்தமும் காத்திருக்கும் படையரண். "கிரிதுர்கம்" = எங்கும் ஏறி உட்புக முடியாததாய் அறிந்தவர்க்கே அடையவல்ல சிறுகவர்வழியதாய், உள்ளேயாறு, ஊற்று, சுனைமுதலிய நீர் நிலையதாய், பயன்தரும் மரங்களோடுங் கூடியவிரிந்த நிலமுடைய மலையரண், இவற்றுளொன்றனை யேற் படுத்திக்கொண்டு பட்டணஞ் சமைத்தல் வேண்டும். எல்லா முயற்சியாலும். மலைக்கோட்டையை யடைவதே சிறந்தது. எறு. காண்க.

அரண்களைச்சமைக்கவேண்டும்வகை.

சாந்திபருவத்திற் கூறப்பட்டது. శాంతిపర్వణి॥ "ధృఢప్రాకారపరిఖం హాన్యశ్వరథసంకులం। ఊర్జస్వినంనాగరంచ చత్వరాపణశోభితం। ప్రసిద్ధవ్యవహారంచ ప్రశాలతమకుతోభయం। తూర్ణాధ్యంప్రాజ్ఞసంపూర్ణంతత్పురంస్వయమావిశేత్" = வலிமையுள்ள மதிலும், அகழியும் உடையதும், யானை குதிரைகள் நிரம்பியதும் நாடோறும் விருத்தியாவதும், நாகரீகமுள்ளமாந்தர்களையுடையதும், விரிந்தவெளியிடங்கள், வீடு, கடைத்தெருமுதலிய அணிகளுடையதும், சிறந்துபேர்பெற்ற வாணிபமும்,நியாய விசாரமுநடந்து வருவதும், எந்தப்புறத்தும் அச்சமில்லாததும், வீரமுடையவர்களையும் பொருளுடையவர்களையும் உடையதும், கற்றோரால் நிரம்பியுள்ளதுமாகிய பட்டணத்துள் அரசன் தான் இருப்பிடஞ்செய்து கொள்ளவேண்டும். எ-று. காண்க.

மனு. మనుः॥ "కుర్యాదాయుధసంపన్నం ధనధాన్యేనవాహనైः। బ్రాహ్మణైశ్చ వివిధైర్యుక్తైర్యవసాన్నోదకేంధనైः" = படைக்கலச்சாலை, பண்டாரச்சாலை, தானியங்கள் நிரம்பிய களஞ்சியமுதலியவைகள், மற்றை எல்லாப்பண்டங்களுநிரம்பியபண்டசாலை, வாகனசாலை, பார்ப்பாரவீதி, சிற்பம்வல்ல கம்மியர் முதலிய வினைவல்லோர்கள், இயந்திரம், செக்கு, ஏற்றம், சிவிறிமுதலியகருவிகளும், புல்லைவைக்கோற்போர்கள், உணவுப்பொருள்கள், பாகசாலைகள், நீர்நிலைகள், நீர்க்கால்வாய்கள், விறகுகள்முதலிய எல்லாநிரம்பிய பட்டணத்தைக் கட்டுவிக்கவேண்டும். எறு. காண்க.

அரண்மனை.

மனு. மநுஃ॥ "தஸ்யமத்ய்துபர்யாப்தம் காரயேத்க்ருஹமாத்மநஃ। குப்தம்ஸர்வர்துகமம்ப ஭ர்ஜிஜலவ்ருக்ஷஸமன்விதம்"=அவ்வூர்நடுவே உட்கோட்டை செய்து அதற்குக் காப்புகளைச் செய்து அதனுள்ளே மிகுதியாக அந்தப்புரம் = மாதரிருக்குமிடம், தேவகோட்டம், படைக்கலச்சாலை, படைபயிலிடம், பாகசாலை, களிசெய்மண்டபம், நிதியறை, அரசாட்சிமண்டபம், காவலிடம், மேல்மாவிளை, எல்லாப்பருவங்களிலும் மலர், பழம், நிழலுமுண்டாகிய சிங்காரவனம், நல்லநீர்நிலை, நீர்க்கால்வாய், கீழ்வீடு, நிலவறை, உடையதாய் வெண்சுண்ணந்தீற்றிச் சித்திரமுதலியவற்றால் அணிசெய்து, நோயில்லாமையைத் தரத்தக்க நல்லிடங்களை வலுவான கட்டடவகைகளோடு அரண்மனையாக அமைத்துக் கொள்ளவேண்டும். எ-று. காண்க. கோட்டம் = கோயில். படைபயிலிடம்=சிலம்பக்கூடம். பாகசாலை = சமையலிடம். நிலவறை = சுரங்கம்.

அரசன்மணவினைவிதி.

மனு. மநுஃ॥ "தமத்ய்ஸ்ய்ஸ்த்வஹேத்பார்ய்ம் ஸவர்ணாம்லக்ஷணான்விதாம்। குலே மஹதிஸம்பூதாம் ஹ்ருத்ய்ம்ரூபஸமன்விதாம்"=அரசன் அவ்வரண்மனையிலிருந்து தன்வருணத்தரும், நல்லவிலக்கண வுறுப்புகளோடும் கூடியவரும், பெருத்தமாபிற் பிறந்தவரும், நல்லெண்ணமுடையவரும், அழகுள்ளவருமாகிய மாதினை மணம் புணரவேண்டும். எறு. காண்க.

அரசன்ஒழுக்கம்.

மனு. மநுஃ॥ "புரோஹிதஞ்சகுர்வீத வ்ருணுயாதேவ சர்த்விஜஃ। தேசக்ருத்ய்ஸ்ய்ணிக்ர்மாணி குர்ய்ர்வ்ய்தாநிகாநிச। யஜேதராஜாக்ரதுபி ர்விஸ்ருஷ்டாப்தக்ஷிணைஃ। யஜ்ஞாம்ஸ்சைவவிதாநைர்போ ஭ாக்ஷ்யதாநிச। ஸ்ய்ச்சாம்ந்ய்யபரோலோகே.வர்தேதபித்ருவந்ந்ருஷு"=புரோகிதனை வகுத்துக்கொள்க. இருத்துவிக்கையும் அமைத்துக்கொள்க. அவர்கள், அரசன் கோயிலில் நடத்தவேண்டுவனவாகிய நித்தவேள்விகளையும், சுரொளதஸ்மார்த்த கருமங்களும், எனவே, வேள்வித்தீக்காரியம், தேவபூசை, கோபூசை, வாஸ்துபூசை, ஆயுதபூசை, மனைச்சாந்தி, முதலியவற்றைச்செய்துவருவர். அரசன் குறைவறத்தக்ஷிணைகொடுத்து, எவ்வகைப்பட்டவேள்விகளையும் செய்யவேண்டும். வேள்வியின்பொருட்டு வேதியர்க்கு

வேண்டுமான போகப்பொருளையும் பொன்னையும் தரவேண்டுவது. வேதமோதி, அவ்வேதமேசிறந்த அளவையாகக்கொண்டு அவ்வாறேநடந்து கொள்ளவேண்டும். உலகத்தில்மன்பதைக்குத் தந்தையைப்போலிருக்கவேண்டும். எறு.காண்க.

இராஜபுரோகிதன்.

யாஞ்ஞவல்கியர். యాజ్ఞవల్క్యుఃll "పురోహితంచకుర్వీత దైవజ్ఞముదితోదితం। పండనీత్యాంచకుశల మధర్వాంగిరసెతథా" = கோள்களினது நிலைமை, அவற்றின்பயன், உற்பாதங்கள், அவற்றின்பரிகாரங்கள், கனவு, சகுனம்முதலியவற்றையெல்லாம் நன்குணர்ந்தோனும், கல்வி, மரபு, அனுட்டானம், இவைகளால் தொண்டுதொட்டுவந்தகுறைவில்லாமையையுடையவனும், அருத்தநூல் = பொருள்வளர்க்குநூலில் தேர்ச்சியுடையவனும், பகையறுதி-நோயறுதி-பயமறுதிமுதலிய வினைகளிலும், சுரொனதஸ்மார்த்த கருமங்களைச் செய்வித்தலிலும், நீதிநூல்களிலும்தெளிவுணர்ச்சியுடையோனும் உள்ள புரோகிதனைவகுத்துக்கொண்டு தக்கவுபசாரங்களால் தன்னவனாகவைத்துக்கொள்ளவேண்டும். எ-று. காண்க.

நாட்டிலிருக்கத்தக்கவர்கள்.

இதுவுமது. "సదానమానసత్కారై ర్వాసయేచ్ఛ్రోత్రియాంస్తదా। భోగాంశ్చదద్యాద్విప్రేభ్యో వసూనివిధానిచ" = கொடையாலும், சிறப்புச்செய்தலாலும், இனியவைசெய்தலாலும், வேதமுற்று முணர்ந்தவர்களைக்களிப்பச்செய்து, எப்பொழுதும் தன்னிடத்திருக்கும்படி செய்துகொள்ளவேண்டும். பொதுவாகவே தன்னாட்டில் வேதியர்க்கு வேண்டுவனவாகிய போகங்களையும் பலவகைப்பட்ட தனங்களையும் கொடுக்கவேண்டும். எ-று. காண்க.

இறையொழிப்பு.

வேதமுணர்ந்தவரால் வரியிறை பெறலாகாதென்று மனு கூறினர். మనుఃll "మ్రియమాణోప్యాదదీత నరాజా శ్రోత్రియాత్కరం" = அரசன் தான் இறக்கவரினும் வேதமுணர்ந்த வேதியனிடத்திருந்து வரிவாங்கலாகாது. எ-று. காண்க.

வேதியர்க்கு ஜீவனங்களை வகுக்கவேண்டுமென்று மனு கூறினர். మనుఃll "నచక్షుధాస్వవిషయే సీదేచ్ఛ్రోత్రియోవశే। యస్యరాజ్ఞస్తువిష

యె శ్రోత్రియస్సీదతిక్షుధా। తస్యాపిసత్క్షుధారాష్ట్ర మచిరాదవసీదతి। శ్రుతవృత్తేచవిత్వా స్వవృత్తింధర్మ్యంప్రకల్పయేత్। సంరక్షేత్సర్వతశ్చైనం పితాపుత్రమివౌరసం" = தன தூநாட்டில் வேதமுணர்ந்த வேதியன் பசியோடு இருத்தலாகாது. எந்த அரசனது நாட்டில் வேதமுணர்ந்த வேதியன் பசியால் துன்பப் படுகின்றானே அவ்வரசனது நாடு அப்பசித்திருந்த வேதியனல் விரைவில் துன்பமடையும். வேதமோதலும், நல் ஒழுக்கமுடைய வியல்பும், உணர்ந்து, அவன் தரும அநுட்டானங்களுக்குத் தக்க ஜீவனமார்க்கத்தைக் கற்பிக்கவேண்டும். அரசன் வேதியனைத் தந்தை மூத்த மகனைக் காப்பதுபோல் எல்லாவகையாலும் காக்கவேண்டும். எ-று. காண்க.

அரசன்செய்கை.

அநுசாசனிகம். ఆనుశాసనికే॥" శాలాప్రపాతటాకాని దేవతాయతనాని చ। బ్రాహ్మణావసథంచైవకర్తవ్యంనృపసత్తమైః। బ్రాహ్మణానావమంతవ్యాభస్మచ్ఛన్నాఇవాగ్నయః। కులముత్పాటయేయుస్తే క్రోధావిష్టాద్విజాతయః। దుష్టానాంశాసనంధర్మ్యం శిష్టానాంపరిపాలనం। కర్తవ్యంభూమిపాలేన నిత్యంకార్యమచార్జవం" = தருமசாலை, அந்தசாலை, கல்விச்சாலை, தண்ணீர்ப்பந்தர், வரிகள், தேவகோட்டங்கள், வேதியர்க்குமான, இந்தத்தருமகாரியங்களை அரசருள்ளுயர்ந்தோன் செய்க. வேதியர் நீறுபூத்த நெருப்பைப் போலு மிருக்கின்றனர். அவர்கள் வெகுண்டாற் குலத்தை வேருடன் களைகின்றனர். ஆதலினவர்களை அவமானஞ் செய்யலாகாது. அரசன் தீயோரை யொறுத்தலும் நல்லோரைப் புரத்தலுஞ் செய்யவேண்டும். எப்பொழுதுஞ் செய்யுங்கருமம் செவ்வனே யிருத்தல்வேண்டும். எ-று. காண்க.

இனியகாப்பு.

சாந்திபர்வம். శాంతిపర్వణి॥ "బాలాతురేషుభూతేషు పరిత్రాణంకురూద్వహ। శరణాగతేషుకారుణ్యం కుర్యాత్త్రసమాహితః। భరణంసర్వభూతానాం రక్షణం చాపిసర్వశః। యష్టవ్యంక్రతుభిర్నిత్యం దాతవ్యంచాప్యపీడయా। ప్రజానాంరక్షణంకార్యం నకార్యంకర్మగర్హితం" = சிறுவர், நோயாளிகள், மாதர், அச்சமுற்றோர் முதலிய ஆதுரர், ஆதாரமற்றவர்கள், அங்கவீனர், அசத்தர்முதலியோர், பசுமுதலியவுயிர்களையும், மற்றெல்லாவுயிர்களையும் அரசன் பாதுகாத்துப் புரத்தல்வேண்டும். அடைக்கலம் புக்கவரிடத்து இரக்கம்வைத்து அவனைக்காக்கவேண்டும்.

எப்போதும்வேள்விசெய்து வரவேண்டும். வருத்தப்படத்தாது கொடுத்துவர வேண்டும். மன்பதையைப் புரத்தல்வேண்டும். பழிக்கிடஞ்செய்து கொள்ளலாகாது. எ-று. காண்க.

வேதியனைப் புரத்தல்.

இதுவுமது. "అగ్రిమెషుయథాకాలం చెలంభోజనభాజనం। స్వయమెవాహరేద్రాజా సత్కృత్యవిధిపూర్వకం। ఆత్మానంసర్వకార్యాణి తాపసేరాజ్యమెవచ। నివేదయేత్ప్రియత్నేన తిష్ఠేత్ప్రహ్వశ్చనిత్యదా।విక్రమెణమహీంలబ్ధ్వాప్రజాధర్మెణపాలయన్" வேதமுனிவர் தவஞ்செய்யும் ஆச்சிரமங்கட்குத் தானேசென்று, அவர்களுக்குவேண்டிய ஆடை, உணவு, கலமுதலிய கருவிகளைக் கொடுத்து விதிப்படி யுபசரித்து, யானுமென்னரசும் நும்மதே யென்று கூறிவணங்கி நிற்கவேண்டும். வீரத்தால் நிலத்தைச் சம்பாதித்துத் தருமத்தோடு குடிகளைப் பாதுகாக்கவேண்டும். எ - று. காண்க.

வீரதருமம்.

இதுவுமது. "ఆహవెనిధనంకుర్యా ద్రాజాధర్మపరాయణః। ఆహవెచమహీంలబ్ధ్వా శ్రోత్రియాయోపపాదయేదిత్యాది"=அரசன் போர்செய்ய வேண்டுவது. இறந்தால் சுவர்க்கமடைகின்றான். வெற்றியடைந்து பிழைத்தால் தான்தேடிய பூமியை வேதமுணர்ந்த வேதியர்க்குக் கொடுத்துவிடவேண்டும் என்பதுமுதலியன வருமாறு. எ - று. காண்க.

கொடுங்கோல்.

மனு. మనుः॥ "మోహాద్రాజాస్వకంరాష్ట్రం కర్శయత్యనవెక్షయా। సోచిరాద్భ్రశ్యతేరాజ్యా జ్జీవితాచ్చసబాంధవః। శరీరకర్శనాత్ప్రాణాः క్షీయంతెప్రాణినాంయథా। తథారాజ్ఞామపిప్రాణాः క్షీయంతెరాష్ట్రకర్శనాత్" = அரசன் தனது நாட்டினை அறிவின்மையால் வெறுத்து உலரச்செய்வானையின் விரைவிலே தானும்தன்சுற்றமுமாக அரசையும்உயிரையும் இழப்பன். உடம்பு சுருங்கிக்கெடுற்றால் உயிரழிவதுபோல நாடு கேடுற்றால் அரசனுங் கேடுறுவன். எ-று. காண்க.

அரசன்நித்தகருமம்.

மனு. మనుः॥ "ఉత్థాయపశ్చిమెయామె కృతశౌచస్సమాహితః। హుత్వాగ్నీన్బ్రహ్మణాంశ్చార్చ్య ప్రవిశెత్తుసభాంతతః" = இரவின் நான்காவது யாமத்தில் எழுந்து சௌசமுதலிய கடன்கழித்து வேள்விக்கரு

மஞ்செய்து வேதியனைப் பூசித்து, இராஜிய விசார சபைக்குப் போகவேண்டும். எ–று. காண்க.

பிறமிருதிகளிலும். స్మృత్యంతరే॥ "ప్రాతరుత్థాయనృపతిర్ధ కుర్యాద్విధ్యంత ర్యభావనం। స్నానశాలాంసమాగమ్య స్నాత్వాపూతేనవారిణా। అర్ఘ్యందత్వాథదేవా యభాస్కరా యసమాహితః। తతోలంకృతగాత్రస్సన్వక్ష్యమాలోక్యమంత్రవత్। ఘృత పాత్రంతుప్రాయ దద్యాత్సకనకంనృపః" = அரசன் உதயத்தெழுந்து பல் தீட்டி நீராடிச் சுத்த சலத்தால் சூரியனுக்கு அருக்கியம் கொடுத் துப் பின்பு அலங்கரித்துக்கொண்டு, நெய்யில் முகம்பார்த்து அந்த நெய்யோடு பாத்திரத்தையும். பொன்னையும் வேதியர்க்குக் கொடுத்துவிடவேண்டும். எ–று. காண்க.

நித்தகானம்.

யாஞ்ஞவற்கியர். యాజ్ఞవల్క్యుఃll "ఋత్విక్పురోహితాచార్యై రాశీర్భిర భినందితః। దృష్ట్వాజ్యోతిర్విదోవైద్యాన్ దద్యాద్ధేనుకాంచనంమహీం। నైవేశికానిచతథా శ్రోత్రియాణాంగృహాణిచ" = இருத்துவிக்குகள், புரோகிதர், ஆசிரியர், இவர்களால் ஆசிமொழிபெற்று, சோதிடனையும் வைத்தியனையும் நோக்கி, கோதானம், சுவணதானம், பூதானம், "నైవేశికాని" = கன்னியாதானம் (எனவே கன்னிக்குத்தரத்தக்க பூணைடமுத லிய கொடை.) வேதமுணர்ந்த வேதியர்க்கு மனைத்தானம் "చ" என்றதனாற் பிறதானங்களையும் செய்ய வேண்டும். எ – று. காண்க.

தேயவிசாரம்.

மனு. మనుఃll "తత్రస్థిత్వాప్రజాస్సర్వాస్ ప్రతినంధ్యావిసర్జయేత్" =சபையி லிருந்து யாவனையும் விசாரித்துக் களிப்பச்செய்து அனுப்ப வேண்டும். எ–று. காண்க.

மந்திராலோசனை.

மனு. మనుఃll "గిరిప్రదేశమారుహ్య ప్రాసాదంవారహోగతః। అరణ్యేనిశ్శ లాకేవా మంత్రయేతాఽవిభావితః। మధ్యందినేర్ధరాత్రేచ విశ్రాంతోవిగతశ్రమః। చింతయే ద్ధర్మకామార్థా న్సార్ధంతైరేకఏవవా" = மலைமேலாயினும், மேன்மாடத்தி லாயினும், ஆரணியத்திலாயினும், வேறுமனுடசஞ்சாரமில்லாத விடங்களிலாயினும், பிறரறியாதபடி இரகசியமானவிடத்தி லிரு ந்து, கவலைப்படாமல் பகலிலாயினும், பாதிராவிலாயினும், தனித்

திருந்து இளைப்பாறி அறம், பொருள், இன்பங்களைப் பற்றி அமைச்சர்களோடாயினும் தான் தனியேயாயினும் ஆலோசிக்க வேண்டும். எ-று. காண்க.

ஆராய்ச்சிவிடயம்.

மனு. மனுः॥கన్యానాంసంప్రదానంచ కుమారాణాంచరక్షణం। దూతసంప్రైషణంచైవకార్యశేషంతథైవచ। అంతఃపురప్రవాసంచప్రణిధీనాంచచెష్టితం।కృత్స్నంచాప్తవిధంకర్మ పంచవర్గంచతత్త్వతः। అనురాగాపరాగౌచ ప్రచారంమండలస్యచ। అరేరనంతరంమిత్రముదాసీనంతయోరపరం। తాంస్సర్వానభిసందధ్యా త్సామాదిభిరుపక్రమైः। వ్యస్తైశ్చైవ సమస్తైశ్చ పౌరుషేణనయేనచ। సంధించవిగ్రహంచైవ యానమాసనమేవచ। ద్వైధీభావంసంశ్రయంచ షడ్గుణాంశ్చింతయేత్సదా। ఆసనంచైవయానంచ సంధాయచవిగృహ్యచ। కార్యంవీక్ష్యప్రయుంజీత ద్వైధంసంశ్రయమేవచ। ఉపేతారముపేయంచ సర్వోపాయాంశ్చకృత్స్నశः। ఏతత్త్రయంసమాశ్రిత్య ప్రయతేత్కార్యసిద్ధయే।ఏవంసర్వమిదంరాజా సహసమ్మంత్ర్యమంత్రిభిः ” = கண்ணிகைகளைத் தக்க மருகருக்குக் கொடுத்தல், புதல்வனைக் காத்தல், தூதனை விடுத்தல், தொழிற் குறைவு, அந்தப்புரத்து விடயம், கரந்துறையொற்றர் செய்தி, (கரந்துறையொற்றர் = மறைந்து திரியும் தூதர்.) ஏண் வகைக்கருமம், ஐவகைவருக்கம், சூழ்ந்துள்ள அரசர் நட்பு – பகை – செய்கை, பகைவன் – நண்பன் – உதாசீனன் = இரண்டுமில்லாதவன், அப்பகை, நண்பினர்க்கு நடுவாவோன், இவர்களனைவரையும், சாமமுதலிய நால்வகை யுபாயத்தோடாயினும், வீரத்தாலாயினும், நீதியாலாயினும், சந்திசெய்து வைத்துக்கொள்வது. தன் மேற்படையெடுத்து வந்தவனைச் சந்தி செய்வது. போர்செய்வது. தான்பிறர்மேற்படையெடுத்துச் செல்வது.தன்படையை வேறோரிடத்துக் காவல் நிறுத்துவது. பிறருள் ஒருவர்க் கொருவரைப் பகைசெய்விப்பது. தன்னினும் வலியமற்றோரரசனைத் தானடைவது. பகைவரைப் பொருட்படுத்தா தொழிவது. தன்படையை இரண்டாகப் பிரித்து வைப்பது. இவற்றுளெதனைத் தான் கடைப்பிடித்தால் தனக்கு ஆக்கமும், பகைவர்க்குக் கேடுமுண்டாகுமோ? அவ்விடயங்களையும், தனது அளவு - தான் அடையவிரும்பிய பயனளவு - அதற்குவேண்டும் உபாயவகைகள் - அவற்றுள், எதுதக்கது - எது எவ்வளவு - என்பது முதலிய எல்லாவிடயமும் அரசன் மந்திரிகளோடு ஆலோசிக்கவேண்டும். எ–று. காண்க.

அந்தப்புரத்து விடயம். எது. "శస్త్రైణవేణీవినిగూహితేన। విదూరథంవైను హిహీజఘూన। విపప్రధిగ్ధేనచనూపురేణ। దేవీవిరక్తాకిలకాశిరాజం" = விரோதன் என்னும் அரசனை அவனது பட்டத்தரசியாகிய மனைவி தன் கூந்தலிலிட்ட பின்னலுண்மறைத்து வைத்திருந்த படைக்கலத்தாற் கொன்றனள். காசிராஜன் மனைவி, விரத்தியடைந்தவளைப்போல நடித்துக்காட்டிக் கடைமுறை விடம் பூசிய காற்சிலம்பாற் கணவனைக் கொன்றனள். என்பவாகலின், மாதர்கள் பால் உண்டாகும் கொடியசேட்டைகளைச் சோர்வில்லாமற்கண்டுபிடிக்கவேண்டும். என்றபடி.

"అష్టకర్మాణి" = எண்வகைக் கருமமாவன. உசனர். ఉశనాঃ॥ "ఆదానే చవిసర్గేచ తథాప్రైషనిషేధయోঃ। పంచమేచార్థవచనే వ్యవహారస్యచైవహి। దండశుధ్యోస్తదాయుక్తస్తైనాష్టగతికోనృపఃꣳ = ஆதானம்" = வரிஇறை - கப்பம் - அபராதம் - கையடை - பகுதிமுதலியவற்றைப் பெறுதல், "విసర్గঃ" = பரிசனர் - கூலியாளர்முதலியோர்க்குச்சம்பளம் - கூலி - வெகுமதி முதலியகொடுத்தல், "ప్రైషঃ" அமைச்சர் - இராயபாரி = தூதர் - ஒற்றர் முதலியோனைச் செலுத்துதல், "నిషేధঃ" = உலகியல், வேதவியலாகிய கருமங்களைச் செய்பவர்களை வேண்டாமெனத்தடுத்தல், "అర్థవచనం" = தன்னுணைப்படி தொழில் நடத்துவோர்க்கு அவ்விடத்துண்டான ஐயம் ஒழிப்பதற்குக் கூறவேண்டுவனவாகிய முடிபு மொழி, "వ్యవహారస్యచైవహి" = இருதலை வழக்காளிகளின் விசாரணை, "దండঃ = தண்டமிட்டுப் பொருள் முதலியன வாங்குவது. அல்லது, சிறையிடுதல் முதலிய வாகத்தண்டித்தல், "శుద్ధిঃ"- = குற்றஞ்செய்தவன் குற்ற மொழிப்பித்தல், அல்லது சிறைவிடுவித்தல். எனவாம்.

இனி இவ்வெண்வகைக் கருமத்தினை மேதாதிதியுரையுட் கூறுமாறு. அதுகாறுஞ் செய்திராத தொழிலினைச்செய்தல், செய்துவந்த பழையதொழிலைச் செய்தல், அப்பழையவற்றினை முன்னினும் சிறப்பச்செய்தல், செய்தொழிலின் பயனையடைதல், சாமம், பேதம், தானம், தண்டம், என்பனவாம்.

இனி அரசநீதி நூலுட்கூறப்பட்டன என்னெனில்? வாணிபஞ்செய்வதற்குத் தக்கவழிகளைக் கற்பித்தல், அல்லது, நடக்கும்வழிதிருத்தல், யாறு கால்களுக்குப் பாலம்கட்டுதல், (பாலம் = வாராவதி) கோட்டை அரண் காப்பிடம் சமைத்தல், பழுமைப்பட்டுக் கெடுவனவற்றைப் புதுப்பித்தல். இதுவே சீர்ணோத்தாரம், யானைமுதலியவற்றைப் பிடித்துவரச்செய்தல் பழக்குவித்தல் முதலியன, ஆகரங்களிலிருந்து பொன் வெள்ளி இரும்பு முதலிய வுலோகங்களை யெடுப்பித்தல், படைக்கலஞ் செய்வித்தல், வெளி யான நிலங்களைக்காத்தல், காடுசெடிகளை வளர்ப்பித்தல், குறைப்பித்தல், எனவாம்.

ஐவகை வருக்கம். "పంచవర్గః" = ஐவகைவருக்கமாவனஒற்றர்கூட்டம். அவையாவன, "కాపటికః" = காபடிகன் = கபடியாகிய வொற்றன். என்வே அந்நியன்கருத்தைக்கண்டு கொள்ளத்தக்க நுண்ணறிவினை யுடையனுய்க் கல்விகற்கும் வித்தைவிருப்பமுடையவன், பிறரறியாதபடி அரசனுல் சீவனமுதலிய பொருளுபகாரம்பெற்று ஆசிரியன் முதலிய பெரியோர்களிடத்துச் சோர்வுமுதலிய குற்றம் உண்டாயவழிப்பிறர் அறியாது வினைவில் அரசனுக்குத் தெரிவிப்பவனும். "ఉదాస్థితః" = உதாஸ்திதன் = பெரியநிலைமையிலிருந்தவன். எனவே சந்நியாசம் சமயதீக்ஷைநிலைமைபெற்றும் மடத்தலைமை ஆசிரியத்தலைமைபெற்றும் பலரானன்குமதிக்கப்பட்டு ஏதேனும் பழிகூறப்பட்டதனுல் இழித்துவிடப்பட்ட விவேகிக்கு அரசன் பிறரறியாதபடி உதவிசெய்து மடமுதலியநிலைமை கற்பித்துவைத்துக் கரந்துறைசந்நியாசிகள், கபடதீக்ஷிதர், கபடவிரதமுடையவர்கள், வேடதாரியர், முதலியவேவுகாரருக்கு ஆடை யுண்டி யுதவிசெய்து அவரால்சிறந்த பலவகைச்செய்திகளையும்உண்மை யோடுபாயத்தாலுணர்ந்து அரசனுக்குத் தெரிவிப்போன். (பெருஞ்செல்வத்திருந்து இழிந்த இழிகுலத்தன், வேற்றரசனுல் வெறுக்கப்பட்டு வந்தவன் முதலியோனெனவும் கூறுவர்). (கெட்டுப் பிழைத்தவன் என்பாருமுளர்). "గృహపతిః" = கிருகபதி = உழுதுபயிரிடும் குடித்தனக்காரன் தெய்வகதியால் வறுமையுற்றுப்பிறரறியாது அரசனுபகாரத்தைப்பெற்று ஆக்கமுற்றுத் தலைவனுய் ஊர்க்குடிகள் கருத்தையறிந்து அரசனுக்கு முன்தெரிவிப்போன். வாணிபஞ்செய்வாருள்ளும் அவ்வாறுனவனுமாம். "వైదికః" = வைதிகன் = புரோகிதன் - சோதிடன் - வைத்தியன். மாந்திரிகன் - புராணிகன் - தேவபூசைசெய்வோன் முதலியோர் இடருற்றவழி அரசனுல் இரகசியத்தில் உபகாரம் செய்யப்பெற்று, பலர்செய்திகளையும் அரசனுக்கு அப்போதைக்கப்போது தெரிவிப்பவருள் ஒருவனுவான். "తాపసవ్యంజనః" = தபவேடம் பூண்டவன் = சாலவித்தைமுதலிய வித்தைகளிற் சிறந்தவனுய் விரதி சந்நியாசி வேடம்பூண்டு மாணக்கரோடு வேற்றரசர் நாட்டிச்சென்று செய்தியறிந்துவந்து அரசனுக்குக் கூறுவோன்.

இனி பகை நண்பு நடு என்னும்பகுதி எழுபத்திரண்டாவன. மூலப்பகுதி. நண்பன் - பகைவனுக்கு நண்பன் - நண்பனுக்கு நண்பன் - பகைவனண்பனிவர்களனன்பன், என்னுநான்கு எனவும் - மற்றொருசாரார், நண்பன் - பகைவனுக்குப்பகைவன். தன்பகைவன் - நண்பனதுபகைவன். எனநான்கு எனவும் நால்வகைப்பகுதியென்பர். இந்நால்வரும் தன்னரசுக்கும் - தன்எதிரரசுடையவனுக்கும் - தன்பின்னுள்ள அரசுடையவனுக்கும் எனப்பகுதி பன்னிரண்டு. உசனர் கருத்தின்படி, பகைவன் - நண்பன் - உதாசீனன் = இரண்டுமல்லாதவன் - நடுவன் - இந்நால்வரும் நாற்பகுதியராம். பிரகற்பதிகருத்து. வெளிப்பட்ட பகைவன் - வெளிப்படாத பகைவன் - வெல்லும்படி படை

யெடுத்தேவந்தவன் - சிறுநண்புடையவனுய் பகைவர்க்குந் தனக்குநடுவுள் ளவன். எனநாற்பகுதியாம். தனக்கு - தனக்குமுன், தனக்குப்பின் னரசர்க் குமாகப் பன்னிருபகுதியரும் மூலப்பகுதியனெப்படுவர். இவரோ கிளைப்ப குதியருமாவர் - அமைச்சன் - நாடுவிசாரத்தலைவன் - கோட்டைவிசாரத்தலை வன் - பொருள்வரவு விசாரத்தலைவன் - சேனைத்தலைவன். இவ்வைவரும் பொருட்பகுதியர் என்னப்படுவர். ஒவ்வோர்கிளைப் பகுதியர்க்கும் ஐவைந் துபொருட் பகுதியராகப் பொருட்பகுதியர் அறுபதின்மர். ஆகப்பகுதி எழு பத்திரண்டு. இவைகளைப்பற்றி யாராய்தலாம்.

அரசனுண்டி.

மனு. మనుः॥ "వ్యాయామ్యాప్లు త్యమధ్యాన్నై భోక్తుమంతఃపురంవ్రజేత్। త్రాత్మభూతైఃకాలజ్ఞై రాహారైఃపరిచారకైఃి। సంపరీక్షితమన్నాద్యమద్యాత్" = முய ன்றிளைத்துவந்து, அல்லதுதிரிந்து களைத்துவந்து உச்சிப்போதில் நீராடி உண்டிக்குஅந்தப்புரத்துக்குச் செல்லவேண்டுவது. அங்கு தன்னைபொத்தவனும் (எனவேவிசேடநம்பிக்கையுள்ளவன்) கால மறிந்தவனுமாயுள்ள சிறந்த மடைப்புலவனல். தன்னுடம்பின் கூறுபாட்டிற்கும் காலதேய வேறுபாட்டிற்கும் தக்கதாயுள்ள உணவுப்பொருளைச்சமைக்கப்பட்டுக் குற்றமறச்சோதிக்கப்பட்ட அந்நமுதலிய ஆகாரங்களைப் புசிக்கவேண்டும். எ - று. காண்க.

உண்டிசோதனை.

மனு. మనుः॥ "మంత్రైర్విషాపహైాः। విషఘ్నైరుదకైశ్చాపి సర్వదర్వ్యాణినె జయెత్। విషఘ్నానిచరత్నాని నియతోధారయెత్సదా। పరీక్షితాఃస్త్రియశ్చైనం వ్యజనో దకధూపనైఃి। వెషాభరణసంయుక్తా స్సంస్పృశెయుస్సమాహితాఃి। ఏవంప్రయత్నంకుర్వీ త యానశయ్యాసనాశనె। శుస్నానెప్రసాధనైచైవ సర్వాలంకరణెషుచ" = விடம் போக்கு மந்திரங்கள், விடங்களை யொழிக்கும் நீர்வகைகள், விடங்களைப் போக்கும் மூலிகைகள் = பூண்டு செடிவகைகள், இவைகளால் எல்லாப் பண்டங்களையும் தக்கபடி சுத்திசெய் வது. விடத்தைப் போக்கும் இரத்தினங்களை எப்பொழுதும் விடாமலுடம்பிலணியவேண்டும். (விடமொழிக்கும் இரத்தினம் எனவே, ஈ, வண்டுமுதலியவிடங்களைப் போக்கும் மரகதம், பாம் புவிடத்தைத் தடுக்கும் வைடூயம்முதலியபோல்வன.) பரீக்ஷிக் கப்பட்டமாதர்கள் (எனவே விடமூச்சு, விடவேர்வை, விடப் பார்வை, விடவாக்கு, கெட்டசுழி, முதலிய இயற்கைக் குற்ற மும், வஞ்சகங்கபடமுதலிய செயற்கைக்குற்றமு மில்லாதவர்க

ளாகச் சோதிக்கப்பட்டு விடவொழிப்பாகிய அலங்காரமுடைய மாதர்கள்). சிவறி – சாந்தாற்றி – கவரிமுதலிய வீசுதல், பன்னீர் தெளித்தல், நறும்புகை கமழச்செய்தல், அணி செய்தல், உபசரித்தலின் பொருட்டுத் தொடுதல், ஆடைதரித்தல் முதலிய வுபசாரத்தொழில்களைச் சுத்தமாகச் செய்தல். உண்டல்-குடித்தல் – நீராடல் - ஆசனம் = பீடம், படுக்கை – போர்வை-அழகுசெய்தல் – மயிர்கழித்தல் வினை – எண்ணெய் முழுக்கு-சௌசம் - சிகை கோதல், பூ – சந்தனம் - வெற்றிலைப்பாக்கு-மருந்துமுதலியவாக அரசனுக்கு வேண்டுவனவாகிய எல்லாவற்றுள்ளும் முயற்சியோடும் விடமுதலிய குற்றங்களில்லாதபடியாயும், உடம்புக்கும், அறிவுக்கும், இன்பமும் விருத்தியும் உண்டாகும்படியாயும், நான்முறைப்படி நன்முகப்பரிசோதிக்கப்பட்டு உபயோகித்துக் கொள்ளவேண்டும். எ–று. காண்க. விடம் = விஷம். அது பாஷாணம், மருந்தீடுமுதலியன.

அரசன்விஹாரம். (விஹாரம்=பொழுதுபோக்கு.)

மனு. மநுஃ॥ "భుక్త్వానథతాభిశ్చ స్త్రీభిరంతఃపురేసహ। విహృత్యచయథా కామం పునఃకార్య్యమిచింతయేత్" = உண்டபின் அந்தப்புரத்தில் மாதரோடு வேண்டியவாறு விநோதமாகச் சிறுபொழுது போதுகழித்தபின்பு, மீட்டும் உலககாரியங்களை ஆராய்தல் வேண்டும். எ–று. காண்க.

அரசன்கண்ணேணக்கம்.

மனு. மநுஃ॥ "అలంకృతశ్చసంపశ్యే దాయుధీయంపృథగ్జనం। వాహనానిచసర్వాణి శస్త్రాణ్యాభరణానిచ" = ஆடை முதலியவற்றால் அலங்காரமுடையவனாய்ப் படைக்கலச் சாலையினையும், தன் பரிவாரமான அதிகாரி முதல் ஏவலர் வரையுமுள்ள கூட்டங்களையும், சேனைகளையும், ஊர்தி = வாகனங்களையும், ஆபரணம் ஆடை புத்தகம் பொருள் முதலியவகைகளையும், ஏனைய போர்க்கருவிகளையும் கண்ணேணக்கஞ் செய்யவேண்டும். எ-று. காண்க.

அரசனது மாலை வைதிகவினை.

மனு. மநுஃ॥ "సంధ్యాంచోపాసనంకుర్య్యా దంతర్వేశ్మనిశస్త్రభృత్" = சந்தியாவந்தனம், ஔபாசனம், கடவுட்டரிசனை, முதலிய கருமங்களை அந்தப்புரத்துட் செய்யவேண்டும். எ-று. காண்க.

அரசனது தனிவிசார விருப்பு.

மனு: மநுः॥ "రహస్యాఖ్యాయినాంచైవ ప్రణిధీనాంచచేష్టితం। గత్వాక ష్ట్యాంతరంసమ్య క్సమనుజ్ఞాయతంజనం"=அதன்பின் தனியாராய்ச்சி யிருப் பிடஞ் சென்றிருந்து, மந்தணம் கூறவந்தவர்க்கும், வெளிப்ப டாவொற்றர்க்குஞ் சிறிதுபொழுது உதவி, அவர்கள் செய்தியை யறிந்து விடைகொடுத்து அனுப்பவெண்டும். எ-று. காண்க. மந்தணம்=இரசியம்.

அரசன் இராத்திரிவினை.

மனு. మనుः॥ "ప్రవిశేద్భోజనార్థంతు స్త్రీభిరంతఃపురంనిజం।తత్రభుక్త్వావునఃకించి త్తూర్యఘోషేణప్రహర్షితः। సంవిశేచ్చయథాకాలముత్థిష్ఠేద్విగతశ్రమः"=பின்னர் மாதர்களோடு அந்தப்புரஞ்சென்று உண்டு, சிறுபோது மங்கலப்பாடல், மூரசுமுதலியவைகளை யனுபவித்து, இளைப்புச் செய்து கொள்ளாது சுகமாகப் படுத்திருந்து உதயகாலத்துவழ க்கப்படி எழுந்திருக்க வேண்டும். எ-று. காண்க.

அரசாட்சிகருமத்தைநடத்துவோர்.

மனு. మనుः॥ "ఏతద్వృత్తంసమాతిష్ఠేదరోగఃపృథివీపతిः। అస్వస్థస్సర్వమేవైత ద్భృత్యేష్వవినివేశయేత్"= இவ்விடத்துக் கூறிய நித்தகருமங்களை யெல்லாம் நோயற்றுச்சுகமாயுள்ள அரசன் செய்யவேண்டுவது. தேகசுகந்தப்பிய காலத்தில் தக்கஅதிகாரிகளை நியமித்து அவர் வசத்தில் விட்டுவிடவேண்டும். எனவே அவர்கள் அரசனுக்கு உத்திரவாதிகளாய் இன்றியமையாதனவற்றை நடத்தவேண்டு வது. எறு. காண்க.

அரசன்வினையதருமம்.

மனு. మనుः॥ "సంగ్రామేష్వనివర్తిత్వం ప్రజానాంచైవపాలనం। శుశ్రూషా బ్రాహ్మణానాంచ రాజ్ఞాంశ్రేయస్కరంపరం। అలబ్ధంచైవలిప్సేత లబ్ధంరక్షేచ్ప్రయత్నతः। రక్షితంవర్ధయేచ్చైవ వృద్ధంపాత్రేషునిక్షిపేత్। అమాయయైవవర్తేత నకథంచనమాయయా। బుధ్యేతారిప్రయుక్తాంతు మాయాంనిత్యంసుసంవృతः"= போரில் முதுகு காட்டாது இருத்தல், மன்பதைபுரத்தல், வேதியர் கூறியவாறு கேட்டொழுகுதல், "శుశ్రూషా"= என்றபாடத்தில், வேதியர் பணிசெய்தல், இவைஅரசனுக்கு ஆக்கத்தைத்தருகின்ற சிறந்த தருமங்களாக விருக்கின்றன. அரசன் எப்பொழுதும் தானடை யாத புதுப்புதுபயன் பலவற்றினையு மடைய விரும்பவேண்டும்.

கிடைத்த பொருளை முயற்சித்தும் கெடாதவகை காப்பாற்ற வேண்டும். அதனை மேலுமேலும் வளரச்செய்ய வேண்டும். அதிகமாகக் கிடைத்தனவற்றை நல்லோர்க்குப் பயன் படுத்த வேண்டும். அரசன் எவ்வகையாலும் (மாயை) வஞ்சகம்பொய் யில்லாதவனுயிருத்தல் வேண்டும். பகைவர்செய்யும் (மாயங்கள்) வஞ்சகம், கபடு, பொய் முதலியவற்றை முன்னுகவுணர்ந்து தன்னை மூடவேண்டும் (எனவே காத்துக்கொள்ள வேண்டு மென்பது). எறு. காண்க.

சாந்திபர்வம். శాంతిపర్వము॥ "వ్యసనానిచసర్వాణి నృపతిఃపరివర్జయేత్। లోకసంగ్రహణార్థాయ కృతకవ్యసనీభవేత్" = அரசன் எல்லாவியசனங் களையும் ஒழித்துவிட வேண்டுவது. உலகம் வசப்படும் பொ ருட்டு வஞ்சகமான வியசனமுடையவனுக விருக்க வேண்டும். (அவ்வியசனமாவன, வேட்டைமுதலிய காமங்காரணமாகப் பிறந் தனபத்தும், "பிசுநம்" = அருவருப்பு முதலிய வெகுளிகார ணமாகப்பிறந்த எட்டும், ஆகப்பதினுறு மெனமேற் கூறப்பட் டன). எறு. காண்க.

இதுவுமது. "వియుజ్యతెర్థధర్మాభ్యాం క్రోధజెష్వాత్మనైవతు। ద్వయోరప్యే తయోర్మూలంయంసర్వైకవయోవిదుః। తంయత్నెనజయెల్లోభంతజ్జ్ఞౌహ్యేతౌగుణావుభౌ" காமவியசனங்கள் அறம் பொருளைக் கெடுக்கின்றன. வெகுளிவிய சனங்கள்தன்னைக்கெடுக்கின்றன. இவ்விரண்டிற்கும் எதுகாரண மென்று அறிவுடையோர் கூறுவரோ? அப்படிப்பட்ட வுலோ பமாகிய கெட்டகுணத்தை எவ்வித முயற்சியாலாயினும்ஒழித்து விடவேண்டும். எறு. காண்க, இவறலு மாண்பிறந்த மானமு மாணு வுவகையு மேத மிறைக்கு." என்பதுமது.

இதுவுமது. "వ్యసనస్యచమృత్యోశ్చ వ్యసనంకష్టముచ్యతె। వ్యసన్యధోహి వ్రజతి స్వర్యాత్యవ్యసనీమృతః" = வியசனமும் மரணமுமே இன்னுமை பலவற்றுள்ளுஞ் சிறந்த வின்னுதனவாம் இவ்விரண்டி னுள்ளும் சாவினும் பெரியதுவியசனமாம். என்னையெனில்? வியசனமுடை யவன் கீழ்ப்போகின்றுன். அஃதில்லாது இறந்தவன் சுவர்க்கம் பெறுகின்றுன். எறு.காண்க." சாதலின்னுததில்லை யினிததூஉ மீத லியை யாக்கடை". என்பதுமது. ஈதலியையாக்கடை யென் றதனுல் உலோபமுடைமையும் என்றவாறுயிற்று.

மார்க்கண்டேயர். மார்க்கண்டேயம்॥ "வ்யஸனானிபரித்யஜ்ய ஸப்தமூலஹராணிச। ஆத்மாரிபுபக்ஷஸ்ஸம்ரக்ஷ்யோ பஹிர்மந்த்ரவிநிர்கமாத்। ஸ்தானவ்ருத்திக்ஷயஜ்ஞான ஸாத்குண்யாவிஜிதாத்மனா। பவிதவ்யம் நரேந்த்ரேண ப்ரஜாஸுஸமவர்தினா। ப்ரோகாத்மாமந்த்ரிணஸ்சைவ ததோ பக்ருத்யாமஹீபக்ருதா। ஜ்ஞேயாஸ்சானந்தரம்பௌரா விருத்யாதததோரிபிஃ। யஸ்தை ர்தானவினிர்ஜித்ய பைரிணோவிஜிகீஷதே। ஸோஜிதாத்மாஜிதாமாத்ய ஶ்சத்ருவர்கேணபாத்யதே" = மூலக்கூறைக் கெடுப்பதாகிய எழுவகை வியசனங்களை விட்டு (எனவே காமத்துணுன்கும், வெகுளியில் மூன்றும் பெருவருந்தம் விளைக்கும்வியசனமென்பது மேலே கூறப்பட்டது) செய்த சூழ்ச்சிவெளிப்பட்டுப் பகைவர்க்கு இடனுண்டாகாத படிதன்னைக் காத்துக் கொள்ளவேண்டும். இருக்குமிடம், ஆக்கம், கேடு, இவற்றை யுணர்தலாலும், அறுவகைக் குணத்தாலும், மனத்தைத் தன் வசஞ் செய்திருக்கும் அரசன் குடிகளிடத்து நடுநிலை யுடையவனை விருக்கவேண்டும், (எனவே அவரவர் நிலைமைக்குத் தக்கவாறு செய்தல் என்பது). முதல் தான், பின்மந்திரியர், அதன்பின் ஏவலர், அப்பால், நகரவாசியர், இவர்களைவர் கருத்தினையு முணர்ந்து அனுகூலப்படுத்தி இவர்களை வென்று தன் வசஞ் செய்து கொண்டபின், பகைவரை வெல்லுமுயற்சி செய்யவேண்டும். அவ்வாறு செய்யாதவன் பகைவரால் துன்புறுத்தப்படுகின்றன். எறு. காண்க.

உலகோம்பலின் பயன்.

சாந்திபர்வம். சாந்திபர்வணி॥ "ஸ்த்ரியஶ்சபுருஸாமார்கம் ஸர்வாலங்காரபூஷிதாஃ। நிர்பயாஸ்ப்ரதிபத்யந்தே யதாரக்ஷதிபூமிபஃ। தர்மமேவப்ரபத்யந்தே நசாம்சயந்தி பரஸ்பரம்। அனுக்ருஹ்ணந்திசான்யோன்யம் யதாரக்ஷதிபூமிபஃ। யஜந்தேசமஹாயஜ்ஞை ஸ்த்ரியோவர்ணாஸ்பருதக்விதைஃ।யுக்தாஶ்சாதீயதேவேதா ந்யதாரக்ஷதிபூமிபஃ। யதாராஜாதுரம்ராஷ்ட்ரே மாதாயவஹதிப்ரஜாஃ। மஹதாபலவேகேன ததாலோகாஸ்தமஸ்ருதே"= அரசன் உலகோம்புவானையின் மாதர், ஆடவர், அனைவரும் கருமத்தை யுடைக் கலமடைவர். ஒருவரை யொருவர் வருந்துதல் செய்யார். ஒருவருக்கொருவர் உபகரிப்பார்கள். மூன்று வருணத்தரும் புண்ணியகருமங்களையே செய்வர். வேதமோதல் வழுவாது நடக்கும். அரசன் வலியனுய் வினைவில் உலகபாரம் எல்லாவற்றினையும் சுமந்து தனது குடிகள் என்னும் அபிமானத்தோடு காத்துவந்தால் புண்ணிய லோகத்தை யனுபவிக்கின்றன். எறு.

வான்மீகராமாயணம். వాల్మీకిరామాయణే॥ "యఃక్షత్రియస్య స్వధర్మేణ పృథివీమనుశాస్తివై। సలోకేలభతేకీర్త్యం యశ్చదిత్యచసద్గతిం" = எந்த அரசன் தனக்கு நூல்களால் விதிக்கப்பட்ட தருமத்தோடு உலகினைப் பாதுகாப்பனே? அவன் இவ்வுலகத்தில் வீரம், புகழ்அடைவன். மறுமையில் நற்கதிபெறுவன். எறு. காண்க.

காவாவழி வருங்குற்றம்.

சாந்திபருவம். శాంతిపర్వణి॥ "యానంవస్త్రీణ్యలంకారా స్త్రత్నానివిధానిచ। హరేయుస్సహసాచోరా యదిరాజానపాలయేత్। పతేచ్చహవిధంశ్రేష్ఠం నకృషిర్నవణిక్పథః। మధ్యేధర్మస్త్రయీనాస్యా ద్యదిరాజానపాలయేత్" = அரசன் காவாவிட்டால், ஊர்தி, ஆடை, அணிகள், பலவகைப்பட்ட மணிகள் முதலியவற்றை வினைவில் கள்ளர் திருடுவர். பலவகைப்பட்ட படைக்கலம் மேல்விழும். உழவுத்தொழில் நடவாது. வாணிபஞ்செய்வோர் வழித்துறைகெடும். தருமம் மூழ்கிவிடும். வேதமில்லா தொழியும். எறு.காண்க. (எனவே அப்பாவம் முற்றும் அரசனுக்காம் ஆதலின் அரசன் காக்கவேண்டு மென்பது கருத்து). (கூ0ஒ)

அரசன் தருமம் முற்றிற்று.

வைசியதருமம்.

மூ॥ లాభకర్మతథారత్నం గవాంచపరిపాలనం
కృషికర్మచవాణిజ్యం వైశ్యవృత్తిరుదాహృతా. ॥౬౧౫॥

என்பது. வைப்புமுறையே வைசியனது சிறப்புத்தருமங் கூறுகின்றது.

(இள்.) வட்டிவாங்குதல், இரத்தின முதலிய மணிச்சோதனை, பசுநிரைகளைக் காத்தல், உழுதல், கொள்ளல் விற்றலாகியபண்டமாற்று, இவைகள் வைசியன் தருமமாகக் கூறப்பட்டது.

"లాభకర్మ" = இலாபத்தின் பொருட்டுச் செய்யுந்தொழில். எனவே கடன்கொடுத்து வட்டிவாங்குதல், நெல்முதலிய தானி

யங்களைக்கொடுத்து நெல்வாங்குதல் முதலியன. (இது, தலவாசி, காங்குயென விக்காலத்து வழங்குகின்றது.)

"ரத்நம்" = வச்சிரம், நீலம், மாணிக்கம் = செம்மணி, மரகதம், கோமேதகம், வைடூயம், புட்பராகம், பவளம், முத்து முதலியன. இம்மொழி இலக்கணையால் அவற்றைச் சோதித்தல், விற்றல், வாங்கல் என்ற பொருளைத்தருகின்றது.

பசு நிகைகளைக் காத்தலாவது, வைக்கோல் புல்லிடுதல், நீர்குடிப்பித்தல், மேய்த்தல், தேய்த்தல், சொறிதல், சுத்தஞ் செய்தல், நீராட்டல், பால்கறத்தல், புலிமுதலியவற்று வினை யூறு வராமற்காத்தல், முதலியனவைகளாம்.

"க்ருஷிகர்ம" = நிலத்தையுழுது பக்குவஞ்செய்து விதை வித்தி, பயிர் வளரக்காத்துப் பயனைப்பெறுதல்.

"வாணிஜ்யம்" = தானியம், பாக்கு, ஆடை முதலியவற்றைக் கொள்ளல்விற்றல் இவையே வைசிய தருமமாம்.

இவ்வட்டிவாங்குதல் முதலியகருமங்கள் வைசியனுக்குந் தருமமென்று யாஞ்ஞவற்கியரும் கூறினர். யாஜ்ஞவல்க்யः॥ "குஸீத கृஷிவாணிஜ்ய பாஶுபால்யंவிஶஸ்ம்ருதं" = வட்டிவாங்குதல், உழவு, கொள்ளல்விற்றல், பசுக்காத்தல், வைசியனது என்று கூறப்பட்டது. எறு. காண்க.

மனு. மநுः॥ "பஶூனாம்ரக்ஷணंதான மிஜ்யாத்⁴யயனமேவச। வணிக்பथंகுஸீதंச வைஶ்யஸ்யகृஷிமேவச" = பசுக்களைக்காத்தல், தானம்கொடுத்தல், வேட்டல், வேதமோதல், கொள்ளல்விற்றல், வட்டிவாங்குதல், இக்கருமங்களை வைசியனுக்கு விதிக்கத்தக்கது. எறு. காண்க.

வராகபுராணம். வராஹபுராணे॥ "ஸ்வாத்⁴யாயंயजनंதா நंகுஸீதंப ஶுபாலनं। கோரக்ஷாंகृஷிவாணிஜ்யं குர்யாद்வைஶ்யோயथாவிधி" = வேதமோதல், வேள்விசெய்தல், தானமீதல், வட்டிவாங்குதல், பசுநிரைமேயாம்பல், ஆனிரைகாத்தல், உழவு, வாணிபம், இவைகளை விதிப்படி வைசியன் செய்தல்வேண்டும். எறு. காண்க. ஆனிரைகாத்தலை வேறுகூறியிருத்தலின், பசுநிரைமேயாம்ப லென்பது, யாடு, குதிரைமுதலியவற்றை மேயாம்புதலெனக்கொள்க.

விற்றற்குரிய பண்டங்கள்.

அநுசாசனபர்வம். ఆనుశాసనికే॥ "తిలచర్మరసాశ్చైవ విక్రేయాస్తిల పశవాజినః। వణిక్పథమువాసీనై ర్వైశ్యై ర్వైశ్యస్థితైరపి" = எள், தோல், இரசவருக்கங்கள், பசுக்கள், குதிரை முதலியவற்றினை ஆவணத்திருந்த வசியராயினும் அவர்களிடத்து அம்முயற்சியின் பொருட்டு நின்ற மற்றையர் யாவராயினும் விற்றல்வேண்டும். எறு. காண்க. ஆவணம் = கடைவீதி.

சாந்திபர்வதத்தில் ஜாபாலி யுபாக்கியானப் பிரசங்கத்தில் துலாதாரன் என்பவனால் வைசியதருமங் கூறப்பட்டது. శాంతిపర్వణి॥ తులాధారః॥ "యద్దదామినతన్న్యూనం యద్గృహ్ణామినచాధికం। విక్రీణామిరాసాంశ్చాహమన్నవర్జనుమాయయా। క్రీత్వావైప్రతివిక్రీణే పరహస్తాద్వనంబహు" = நான் எதனைக் கொடுக்கின்றேனே அது குறைவாகவிராது. நான்எதனைக் கொள்ளுகின்றேனே அது மிகுதியாக விராது. சமைத்தசோறென்றழிய மற்றைய இரசவருக்க மனைத்தினையும்வஞ்சிப்பின்றி விற்கின்றேன். ஆயின், கொண்டதிலும் அதிகபொருளைப் பிறன் கையிற் பெற்று விற்கின்றேன். எறு. காண்க.

ஆனைபோம்புதல்.

சங்கலிதர். శంఖలిఖితౌ॥ "గారక్షితాస్వపీతాసు నపిబెన్నతిష్ఠెన్నతూపవిశెన్న స్వయముత్థాపయేన్నైవార్ద్రశాఖయానపలాశయాపృష్ఠతోభిహన్యాత్తీక్ష్ణవిషమేణాల్పదకేనైవతారయేదాబల వృద్ధరోగార్తానాం శక్తితదప్రతీకారం కుర్యాదన్యథావిప్లవః" = ஆனைகாத்தல் வேண்டும். அவை நீர்குடிக்குமளவுந்தான் நீர்குடிக்கலாகாது. அவை படுக்காவிட்டால் தான் உட்காரலாகாது. படுத்திருப்பதனைத் தான் எழுப்பலாகாது. பசிய சிறுவளாரிலையும் இலையற்ற கட்டைக்கோட்டிலையும் அதனைத் தீண்டாது, உலர்ந்த இலைகளோடுங் கூடியஉலர்ந்த சிறுவளாரினுல் அதன்கால் முதலிய விடங்களின் மெல்லப்பரிசித்துச் செலுத்தவேண்டும். విషమం = பெருஞ்சிறுமேடுபள்ளம் அழுக்கு உள்ள முதலியவுடைய நீர் நிலைகளில் இறங்கவிடலாகாது. நீரில்லாதநிலைகளிலும் விடலாகாது. இளங்கன்று, கிழப்பசு, நோயுடையன இவற்றிற்குத் தன்னுலியன்றமட்டில் அவற்றின்றுன்பத்தை யொழிக்கத் தக்கவுபாயமு முபகாரமுஞ்செய்யவேண்டும். செய்யாவிடின் பாவத்துள் அழுந்துவன். எறு. காண்க.

வசியன் அறுதொழில் மூவகைச்சீவனம்.

வட்டிவாங்குதன் முதல் வாணிபம்வரையில் எந்தெந்தக் கருமம் வசியனுக்குக்கூறப்பட்டதோ அவையெல்லாம் "வृத்திः" சீவனோபாயம் = பிழைக்கும் வழியாம். இது மார்க்கண்டேயபுராணத்துட் கூறப்பட்டது. మార్కండేయపురాణే॥ "దానమధ్యయనంయజ్ఞో వైశ్యస్యాపిత్రిధైవసా। వాణిజ్యంపాశుపాల్యంచ కృషిశ్చైవాస్యజీవికా" = தானமீதல், வேதமோதல், வேள்விசெய்தல், இம்மூன்று வசியன் வைதிககருமமாம். வாணிபம், பசுநிரைகாத்தல், உழவுத்தொழில் இம்மூன்றும் சீவனத்தொழிலாம். என்று.

வசியன் சிறப்புத்தருமம்.

மனு. మనుः॥ "వైశ్యస్తుకృతసంస్కారఃకృత్వాదారపరిగ్రహం। వార్తాయాంనిత్యయుక్తస్యపశూనాంచైవరక్షణే। ప్రజాపతిర్హివైశ్యాయసృష్ట్వాపరిదదేపశూన్। నచవైశ్యస్యకామస్యాన్నరక్షేయంపశూనితి। వైశ్యేచేచ్ఛతినాన్యేనరక్షితవ్యాదికథంచన। మణిముక్తాప్రవాళానాం లోహానాంతాంతవస్యచ। గంధానాంచరసానాంచవిద్యాదక్ష్యబలాబలం। బీజానాముప్తిమావిద్యాక్షేత్రబీజగుణస్యచ। మానయోగాంశ్చజానీయాత్తులాయోగాంశ్చసర్వశః। సారాసారంచభాండానాం దేశానాంచగుణాగుణం। లాభాలాభంచపణ్యానాం పశూనాంచవివర్ధనం। భృత్యానాంచభృతింవిద్యాద్భాషాశ్చవివిధానృణాం। ద్రవ్యాణాంస్థానయోగాంశ్చ క్రయంవిక్రయమేవచ। ధర్మేణచద్రవ్యవృద్ధావాతిష్ఠేద్యత్నముత్తమం। దద్యాచ్చసర్వభూతానా మన్నమేవ ప్రయత్నతః" = வசியன் தக்கவிதியோடு உபநயனமுதலிய சமஸ்கார கருமங்கள் செய்யப்பட்டு மணம்புணர்ந்து (பிரமசாரியாகவாயினும் சந்நியாசியாகவாயினுமிருந்தாலாகாதென்றுதோற்றுவது. கிரகத்ததருமத்தையேஅனுட்டிக்க வேண்டுமென்பது சித்தமாகின்றது) உழவு, வாணிபம், ஆனிரைகாத்தல்என்னும்"வார்த்தை" யிலும், யாதுகுதிரை முதலிய பசுக்காத்தலிலும் தவறுது எப்போதும்நடத்தல்வேண்டும். பிரமன் பசுக்களைப்படைத்து வசியனுக்குக்கொடுத்தனர். பசுவை நான்காக்கமாட்டேன் என்றுவசியனுக்குஎண்ணம்பிறவாது, வைசியன் விரும்பிநிற்கையில் ஏனையோரால்பசுக்களையோம்பச்செய்யலாகாது. வயிர முதலிய மணிகள் சந்திரகாந்தம், சூரியகாந்தம்,படிகம், அயக்காந்தமுதலிய உபமணிகள் முத்து, சங்கு, பவளம்முதலியவும், வெள்ளி, பொன்முதலியவுலோகங்களும், நார்ச்சீலை, நூலாடை, பட்டுக்கோசிகம், மயிர்க்

கம்பளம், அகில், சந்தனம், குங்குமப்பூ. கஸ்தூரி, பச்சைக் கருப்பூரம், புழுகு=புனுகு, சவ்வாது, விலாமிச்சம், முதலிய வாசனைப்பண்டமும், வெல்லம்-சருக்கரை - உப்பு-புளிப்பு - கரரம்-நெய்-எண்ணெய்-தேன்- அரக்கு-கந்தகம் முதலிய இரசவருக்கங்களும், தானியங்களும், பிரம்பு - மூங்கல்முதலிய மரவகைகளும் பிறவுமாயுள்ள பண்டங்களின் விலைகளும், அவற்றின் தரங்களும், நிலத்தின்குணங்களும், எந்தநிலத்தில், எந்தகாலத்தில்எதனை விதைத்துப்பயிர்செய்துபயன்கொள்ளவேண்டுவதோ அதனையும், தானியமுதலிய பண்டங்களைச் சுத்தஞ்செய்து வைத்தலும், வித்துக்களைச் சீர்செய்து வைத்தலும், முகத்தலளவையின் வேறுபாடுகளும், நிறுத்தலளவை வேறுபாடுகளும், கணித வேறுபாடுகளும், ஆக்கப்பட்ட பண்டங்களின் நன்மைதீமைமுதலியநிலைமைகளும், நிறவண்ணங்களின் ஏற்பாடுகளும். "ச" என்றதனாற் சிற்பபேதங்களும், தேயவியற்கைகளும், கொள்ளல் விற்றலின் நயநஷ்டங்களும், பசுக்களைக்காக்கத்தக்க வகைமைகளும், கூலித்தொழில் செய்பவர்களுக்குக் கூலியேற்பாடுகளும், எந்தெந்த நாட்டில் யார் யார் எந்தெந்தப்பாஷைகள் பயின்று எந்தெந்த வொழுக்கமுடையவர்களா யிருக்கின்றார்களா அவற்றினை யறிந்து பழகுதலும், அவ்வப்பண்டங்கள் பிறக்குமிடமும், கொள்ளுமிடமும்கொள்ளத்தக்கபண்டமும், விற்குமிடமும், கொள்வோனைப் பெறும்வகைமைகளும், முதலிய பிறவெல்லாமும் சான்றோர் வழியாலுணர்ந்து அனுபவத்தால் அறிவுணர்ச்சியடைந்து, தருமத்தோடும் "ச" என்றதனல் தருமத்திற்கு மாறுபாடில்லாததாகிய பொய்முதலியவற்றோடும் கடத்தியும் தன் பொருள் விருத்தியாகும்படி நல்ல முயற்சிகளை யெப்பொழுதும் செய்துவரவேண்டும். இப்படிப்பட்ட வசியன் விசேடம் பொருளைத்தேடி எல்லாமுயற்சியாலும் அந்தப்பொருளினை வேதியன் முதலிய எல்லாவுயிர்களுக்கும் தக்கவாறு சோறிடுதன் முதலிய வேளாண்மை செய்யவேண்டும். எ-று. காண்க. வேளாண்மை= உபகாரம். "வாளார்கண்செந்துவர்வாய் மாமலையான்றன்மடந்தை, தோளாகம்பாகமாப் புல்கினன்றொல்கோயில், வேளாளன்றவர்கள் வள்ளன்மையான்மிக்கிருக்குந், தாளாளராக்கூரிற் றொன்றோன்றிமாடமே"-எம், வேளாளர்-ஏது,வசியர்க்கு உபகாரங்

காரணமாக வந்ததோர் குறியீடு. " காளாற்றித்தந்தபொருளெல் லாந்தக்கார்க்குவேளாண்மைசெய்தற்பொருட்டு" என்பனவுமது.

இனிமூலத்துள் "లాభకర్తృ" என்றதனை "లోహకర్తృ" எனவும் சிலர்பாட மோதுகின்றனர். "లోహానాంచ" எனமனுவுங் கூறி யிருத்தலின் உலோகங்களைச் சோதிக்கும் அறிவு தொழிலென அதற்குப் பொருள் கூறுக.

வைசியதருமத்தின்பயன்.

வைசியன் மேற்கூறிய தன் கருமத்தினை நான்முறையே அனுட்டித்து வருவானுயின் அவனுக்குண்டாம்பயனைப் பற்றி அசுவமேத பர்வத்துட் கூறப்பட்டது. అశ్వమేధికే॥ "వైశ్యధర్మమముం చస్తై వైబ్రాహ్మణపూజకః। సనణిక్స్వర్గమాప్నోతి పూజ్యమానోపురోగణైః"= வசியதருமத்தை விடாமல் தேவர்களையும் வேதியரையும் பூசித் துக் கொண்டிருக்கும் வசியன் அரமாதரால் பூசிக்கப்பட்டுச்சு வர்க்கம் புகுவன். எறு. காண்க. அரமாதர்=தெய்வப்பெண்கள்.

வசியன் இவ்விதிதவறிய வழிவருங்குற்றம்.

சாந்திபர்வம். శాంతిపర్వణి॥" యదికరోతిజడాన్నాధ న్వణిక్కర్మణివంచి శ॥ సయాతినరకంఘోరం ధనంతస్యాపిహీయతె"= எந்தவசியன், சாதுக் களாயும் தெரியாதவர்களாயு முள்ளவர்களை வஞ்சிக்கின்றனே அந்தவசியன் அச்சத்தைத் தருகின்ற நரகத்திற்குச் செல்வன். அவன் பொருளும் அழிந்துவிடும். எ-று. காண்க. " வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப் பிறவுந் தமபோற் செயின்." என்பதுமது. (சுகஉ)

வசியதருமமுற்றிற்று.

சூத்திரதருமம் வருமாறு.

మూ॥ శూద్రస్యద్విజశుశ్రూషా పరమోధర్మఉచ్యతె
అన్యధాకురుతెకించి త్తస్యఫలవెత్తస్యనిష్ఫలం॥ ॥౬౨౫॥

என்பது. நிறுத்தமுறையானே சூத்திரன் சிறப்புத்தரு மங்கூறுகின்றது

(இ-ள்.) வேதியன் கூறியவாறு ஒழுகுதல் (“శుశ్రూషా” என்றது பாடமாயின், வேதியனிட்ட பணிபுரிந்துநிற்றல்) சூத்திரனுக்குச் சிறந்ததருமமென்று கூறப்படுகின்றது. அங்ஙனமன்றி வேறுவகையால் எந்தக்கருமஞ்செய்தாலு மதற்குப் பயனில்லையாய் முடியும். எ-று. காண்க

“ద్విజ” = இரண்டாற் பிறந்தவன். எனவே பிறப்பாலுந்தொழிலாலும் பிறந்தவன். என்றவாறு. உபநயன முடையவன் என்பது கருத்து. இக்காரணக் குறியில் “ద్విజ” = துவிஜஎன்பதற்கு அந்தணன்அரசன்வசியனுமாகியமூவருமெனப்பொருள்படுகின்றது.அம்மூவர்க்கும்பணிசெய்தல்சூத்திரனுக்குச்சிறந்ததருமமல்லவாதலாலும் (పంచస్రోండజాద్విజాः” “பற்கள், வேதியன், முட்டையிலிருந்தும் பிறக்கும் பறைவைமுதலியன துவிஜ என்பதன் பொருள்) என்ற “ அமரநிகண்டி “ லுலும் அம்மொழி வேதியன் மாட்டு உலகவழக்காதலின், காரணவாற்றலினும் வழக்காற்றல் சிறந்ததாமாதலானும் மனுமுதலியோர்கருத்தினைப்பற்றி, ஈண்டு துவிஜ என்னுமொழிக்கு வேதியன்மாத்திரமே யென்று பொருள்படுகின்றது. “పరమः” = சிறந்ததெனவே முத்திக்கு ஏதுவாகிய தருமம். எ-று. காண்க.

வேதியன் கூறியவாறுஒழுகி அவன் பணி புரிவதே சூத்திரன் ஆக்கத்திற்குஏதுவாகிய சிறந்ததருமமென்று மனுகூறினர். மனుः॥ “విప్రాణాంవేదవిదుషాం గృహస్థా నాంయశస్వినాం। శుశ్రూషైవతుశూద్రస్య ధర్మోనై శ్రేయసఃపరః। శుచిరుత్కృష్టశుశ్రూషు ర్మృదువాగ్వినీతోనహంకృతః। బ్రాహ్మణోపాశ్రయోనిత్య ముత్కృష్టాంజాతిమశ్నుతే” = வேதத்தை யுணர்ந்தவர்களாயும், புகழுடையவர்களாயுமிருக்கும் இல்லறவேதியனைச் சேவிப்பதே சூத்திரன் ஆக்கத்திற்குக் காரணமாகிய சிறந்ததருமம். பரிசுத்தனையும், தன்னினும் உயர்ந்தவருணத்தினருக்கு ஏவல் செய்வோனையும், மெதுவானவனையும், சாந்தமுடையவனையும், ஆணவமற்றவனையும், வேதியனேயே யெதிர்பார்த்திருப்பவனையும், உள்ளசூத்திரன் தாழ்ந்தசாதியானேயாயினும், உத்தமவருணத்தானடையும் பயனை அனுபவிக்கின்றான். எறு, காண்க.

విష్ణుపురాణம். విష్ణుపురాణే॥ “ద్విజశుశ్రూషయైవైష పాకయజ్ఞాధికారవాన్। నిజాన్ల్యతివైలోకాన్ శూద్రోధన్యతరఃస్మృతః” = இந்தச்சூத்திரன்

வேதியர்பணி செய்தலினனே பாகளச்சத்துள் அதிகாரமுடை யவனுய்த்தானடைய வேண்டுவனவாகிய புண்ணியவுலகத்தினை வென்றுகொள்கிறுன். ஆதலால், சூத்திரன் சுத்தருளெல்லாஞ் சுத்தரும். எறு. காண்க.

சூத்திரனியல்பு.

அனுசாசனிக பர்வம். ஆநுசாஸநிகே॥ "రాగోద్వేషశ్చమోహశ్చ పారుష్యంచనృశంసతా। శాఠ్యంచదీర్ఘవైరత్వ మతిమానమనార్జవం। అనృతంచాతివాదశ్చ పైశున్యమతిలోభతా। వికృతిశ్చాప్యవిజ్ఞాన జననేశూద్రమావిశత్। ధృష్ట్వాపితామహశ్శూద్ర మభిభూతంచతామసైః।ద్విజశుశ్రూషణంధర్మంశూద్రాణాంతుప్రయుక్తవాక్। నశ్యంతితామసాభావాశ్శూద్రస్యద్విజభక్తితః।ద్విజశుశ్రూషయాశూద్రదపరంశ్రేయోధిగచ్ఛతి" இச்சை, வெறுப்பு, வேட்கைப்பெருக்கம், வன்சொல், இரக்கமின்மை, தேறுது செய்தல், தீராப்பிடிவாதம், கழிமானம், செவ்வனைழுகாமை, பொய்கூறல், அதிகவாதஞ்செய்தல், கோள், பெருமுலோபம், அறியாமை, முதலிய தீக்குணங்கள் சூத்திரன் பிறந்தளவில் வந்தனவாம். தாமசகுணங்களால் மூடப்பட்டிருந்த சூத்திரனை பிரமதேவன் நோக்கி, அவனுக்கு வேதியன் பணியைக்கொடுத்தனன். வேதியன்பணியால் சூத்திரனுக்கு அத்தாமசகுணங்கெடுகின்றது. இருபிறப்பாளன் பணியால் சூத்திரன் சிறந்தபெருமையை யடைகின்றுன். எறு. காண்க.

சூத்திரன் விசேடதருமம்.

தேவலர். దెవలః॥ "శూద్రధర్మాఃత్రివర్ణ శిశ్రూషాకళత్రాది పోషణకర్షణ పశుపాలన భారోద్వహనపణ్యవ్య వహారచిత్రకర్మ నృత్తగీతవేణువీణాముర జ మృదంగవాదనాదీని" = சூத்திரதருமமாவன, உயர் மூவருணத்தருக்கும் பணிபுரிதல், மனைவிமுதலாயினோரைக் காத்தல், நிலத்தையுழுதல், பசு மேய்த்தல், பாரஞ்சுமத்தல், அங்காடிவிற்றல், சித்திர மெழுதல், கூத்து, பாட்டு, குழலூதல், (எனைபதுகலைக்கருவியூதலுமாம்). வீணை வாசித்தல், மத்தளமுழக்கல், முரசுமுதலிய தோற்கருவி முழக்கன்முதலியனவாம். எ-று. காண்க.

சூத்திரனுக்குரிய கருமாதிகாரம்.

விஷ்ணு புராணம். విష్ణుపురాణే॥ "దానంచదద్యాచ్ఛూద్రోపి పాకయజ్ఞైర్యజేతచ। పిత్ర్యాదికంచసర్వం వైశూద్రఃకుర్వీతనేతరత్" = சூத்திரனும் தானம்

கொடுக்கவேண்டும். பாகளச்சங்களால் தேவபூசை செய்யவேண்டும். பிதிர் கரும முதலியவெல்லாம் செய்யவேண்டும். ஏனைய ஓதல் முதலிய நான்கு கருமங்களும் செய்யலாகாது. எ – று. காண்க. பாகவெச்சம், என்பது – சமைத்த பதார்த்தங்களால் தேவர்களுக்குச் செய்யும் பலிமுதலிய கருமங்களாம்.

யாஞ்ஞவற்கியர். యాజ్ఞవల్క్యః॥ "భార్యారతశ్చుచిర్భుత్వా భక్తాగ్ని క్రియాపరః। నమస్కారేణ మంత్రేణ పంచయజ్ఞాన్నహాపయేత్"=மனைவியிடத்து அன்புடையவனாய் (எனவே மணம் புணர்ந்துகிரகத்தனாக விருக்கவேண்டுமேயன்றி பிறனில் விழைதல் செய்யலாகாது என்பது) சுத்தனாய் (எனவேநீராடன் முதலியவற்றால் தேக சுத்தனுதலும், பொய் கூறாமையால் நாக்குச் சுத்தனுதலும், தேவர், வேதியர் ஆசிரியர் பத்தியால்மனச்சுத்தனுதலுமாம்.) கூலிவேலையாளனாக் காப்பவனாய், சிராத்தமுதலியகருமங்களைச் செய்பவனையுள்ள சூத்திரன் "நமஃ" என்றமந்திரத்தால் ஐம்பெரும் வேள்விகளைத் தவறுது செய்யவேண்டும். எ–று. காண்க.

சாந்திபர்வம். శాంతిపర్వణి॥ "స్వాహాకారనమస్కార మాత్రంశూద్రవిధియతె। తాభ్యాంశూద్రపాకయజ్ఞై ర్యజెత బ్రాహ్మణాంస్వయం। సంచయాంశ్చనకుర్వీత జాతుశూద్రనికథంచన। సెవయాహిధనంలభ్యా వజెకుర్యాద్ధరీయసః। రాజ్ఞాదానమనుజ్ఞాతడ కామంకుర్వీతధార్మికః"=="స్వాహా"=" நமஃ "= என்ற இவ்விரண்டுமந்திரங்கண்மாத்திரமே சூத்திரனுக்குவிதிக்கப்படுகின்றது. அதனற் சூத்திரன் பாகளச்சஞ் செய்யவேண்டும். வேதியனைத் தானேசெவிக்கலாம். (எனவே தக்ககாலத்தில், படிக்கையிடுதல் கால்வருடல் முதலியனவாகத் தொட்டுச்செய்தலாம்). தான்செய்யும் தொழிலில் எவ்வகையாலேனும் மிகுதிசெய்து சேர்த்துவைத்துக்கொள்ளலாகாது. சேவித்தலால் திரவியத்தைக் சம்பாதித்துப்பெரியோர் பக்கலாகவைத்தல்வேண்டும். அரசனேயாயினும், தலைவனேயாயினும், உன்பொருளைக் கொண்டுபோ என்றபின் கொண்டுவந்து மனம்போல் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். ஆயின் தருமத்தோடொழுகவேண்டும். எ–று. காண்க.

அநுசாசனம். ఆనుశాసనికె॥ "అహింసకశ్శుభాచారీగోదెవద్విజపూజకః। శూద్రొధర్మఫలైరిష్టైస్స్వధర్మెణైవయుజ్యతె"=கொலைசெய்யாதவனாய், நல்

லஆசாரமுடையவனுய், தேவரைப் போலும் வேதியரைப்பூசிப் பவனுய், தன்தருமத்தை விடாதவனுயுள்ள சூத்திரன், தான் செய்த கருமங்களின் புண்ணியப்பயனை முற்றும் பெறுவன். எறு. காண்க.

சூத்திரன் ஜீவனமார்க்கம்.

சூத்திரன் வேதியர் பணிபுரிதல் மறுமைப்பயன் ஒன்றற் கேஎதுவாதலன்றி, இம்மைப்பயனுகிய சீவனவழியாகவு மிருக் குமென மனு கூறினர். మనుः॥ "ప్రకల్పితస్తైర్వృత్తిः స్వకుటుంబాధ ర్హాతः। శక్తించావేక్ష్యభక్తించ భృత్యానాం చపరిగ్రహం। ఉచ్ఛిష్టమన్నందాత వ్యం జీర్ణానివసనానిచ।పులాకాశ్చైవధాన్యానాం జీర్ణాశ్చైవపరిచ్ఛదాः" = வேதி யர்தமது பணிசெய்புஞ் சூத்திரனுக்குத் தமது குடும்பத்தி லிருந்து தக்கசீவனவழியை யுண்டுபண்ணவேண்டும். அவன் செய் யும்பணிக்கும், அவனுக்குண்டாயிருக்கும் பத்திக்கும், அவன் குடும்பத்திற்கும் தக்கவாறு தன்னளவையும் அறிந்து கொடுக்க வேண்டும். உண்டுமிக்கசிற்சில், பழையது, அனுபவித்து மிருந்த பண்டங்கள், பழையஆடைகள், சோறு, அல்லது, அவல்பொரி முதலியன, தானியவகைகளிற் சிறிது சிறிது, பழுமைப் பட்ட ஏனையகருவிப் பொருள்களும் கொடுக்கப்படுவனவாம். ஏ–று. காண்க.

சாந்திபர்வம். శాంతిపర్వణి॥ "యశ్చకశ్చిద్విజాతీనాం శూద్రశ్శ్రుశ్రూషురా వ్రజేత్। ప్రకల్పితస్తైరాహు ర్వృత్తిర్ధర్మవిదోజనాः। ఛత్రవేష్టనమాంజాని హ్యు పానడ్వ్యజనానిచ। యాతయామానిదేయాని శూద్రాయపరిచారిణే" = யாரோ னுஞ் சூத்திரன் அந்தணனுக்குப் பணிசெய்வோனுகவரின் அவ னுக்குச் சீவனத்தை யுண்டுபண்ண வேண்டுமென்று தரும முணர்ந்தவர்கள் கூறுகின்றனர். குடை, தலைக்காடை, அரை ஞாண், பாய், செருப்பு, விசிறி, உடுக்குமாடை இவைகள்பழை மைப்பட்டால் பணிவிடைசெய்யும் சூத்திரனுக்குக் கொடுக்க வேண்டும். எறு. காண்க.

சூத்திரன்கடன்.

மனு. మనుः॥ "విప్రసేవైవశూద్రస్య విశిష్టంకర్మకథ్యతే। యత్తోన్యద్ధికురుతే తద్భవేత్తస్యనిష్ఫలం" = சூத்திரனுக்கு வேதியன் பணியேயெல்லாக்

கருமமாகவுமிருக்கின்றது. அதனைவிட்டு வேறுளந்தத் தொழில் செய்தாலும்வீணும். என்று. காண்க.

சூத்திரனுக்குவேதியன் பணியேசிறந்ததருமம்.

அரசவணிகர் பணிசீவனத்தின் பொருட்டாமாதலால் பொதுத்தருமம். என மனுகூறினர். మనుః॥ "శూద్రస్తువృత్తిమాకాంక్షన్ క్షత్ర మారాధయేద్యది। ధనినంవాప్యుపారాధ్య వైశ్యంశూద్రోజిజీవిషేత్। స్వర్గార్థముభయా ర్థంవై విప్రానారాధయేత్తుసః। జాతబ్రాహ్మణకబ్దస్య సాహ్యస్యకృతకృత్యతా" சூத்திரன் சீவனத்தை விரும்புவானாயின் பொருளுடையவனை அரசனேயெனும், வசியனேயெனும், அடுத்துப் பிழைக்கவேண்டும். இம்மையிற்சீவனமும் மறுமையில் நற்கதியையும் விரும்பினவன் வேதியர்களை அடுத்திருக்கவேண்டும். இவன் அந்தணன் ஏவல் செய்வோன் என்னும் பெயரைப்பெறுதலேயன்றே? அவனுக்குச் சுத்தத்தன்மை. என்று. காண்க. (கூஉ)

మూ॥ లవణంమధుతైలంచ దధితక్రంఘృతంపయః
నదుష్యేచ్ఛూద్రజాతీనాం కుర్యాత్సర్వాపణక్రయం.॥౬౨౫॥

என்பது, அந்தணன் பணியிற்சீவிக்க முடியாவழிச் சூத்திரன் செய்கை கூறுகின்றது.

(இ-ள்.) உப்பு, தேன், எண்ணெய், தயிர், மோர், நெய், பால், இவைகளை யாவர்க்கும் விற்கலாம். சூத்திரர்க்கு அதுகுற்றமன்று. என்று.

இருபிறப்பாளரேவல்கேட்டு அவர்கள்பணி செய்வதற்பிழைக்கமுடியாத சூத்திரன் தன்சீவனத்தின் பொருட்டு, உப்பு முதலியவற்றை விற்றலாம்.

ஆயின். உப்புமுதலியன தன்னைவிற்றவனுக்குக் குற்றத்தை யுண்டு பண்ணுகின்றது என யாஞ்ஞவற்கியர் கூறினர். యాజ్ఞవల్క్యుఃll "ఫలూపలక్షౌమసామ మనుష్యాపూపవీరుధః। తిలౌదనరసక్షారా దధిక్షీరంఘృతంజలం। శస్త్రాసవమధూచ్ఛిష్ట మధులాక్షాశ్చబర్హిషః। మృచ్చర్మపుష్పకు తప కేశతక్రవిషక్షితీః। కౌశేయనీలలవణ మాంసైకశఫసీసకాఃl శాకాద్యౌషధిపి ణ్యాక పశుగంధాంస్తథైవ చ। వైశ్యవృత్యాపిజీవన్నో విక్రేణీతకదాచన। లాక్షాలవణ మాంసానిపతనీయానివిక్రయే।పయోదధిచమద్యంచహీనవర్ణకరాణితు" = "ఫలం"

இலந்தைக்கனி தாபதக்கனி தவிர ஏனைய வாழைக்கனி முதலியவற்றினையும், "ஔபலம்" மாணிக்கமுதலிய மணிகளையும், "க்ஷௌமம்" கார்ச்சீலை, பருத்தியாடை, செவ்வாடை முதலிய வற்றையும், "ஸோமஃ" = சோமக்கொடியையும், "மநுஷ்யஃ" = ஆண், பெண், அலியராகிய அடிமைகளையும், "அபூபம்" = அதிரச முதலியதின் பண்டங்களையும், "ஸிருதஃ"=பிரம்பு, சீந்தில்முதலியகொடிவகைகளையும், "தில்ஃ" எள்ளினையும், "ஓதநம்" = சோற்றினையும், "ரஸஃ" = வெல்லம், சருக்கரை, கருப்பஞ்சாறு முதலியவற்றினையும், "க்ஷாரஃ" = யவாசாரம், சத்திசாரம், வெண்காரமுதலியவற்றினையும், "ததி" = தயிரையும், "க்ஷீரம்" = பாலினையும், உபலங்கணத்தால் பாலேடு – தயிர்க்கட்டிமுதலியபால், தயிர்ச் சிதைவுகளையும் "க்ருதம்" = நெய்யையும், உபலக்கணத்தால் எண்ணெய் முதலிய சிக்குப் பண்டங்களையும், "ஜலம்" = நீரையும், "சஸ்த்ரம்" = வாள்முதலிய ஆயுதங்களையும் "ஆஸவம்"= கள்ளையும், "மதூச்சிஷ்டம்" = மெழுக்கினையும், "மது" = தேனையும், "லாக்ஷா" = அரக்கினையும், = "பர்ஹி ஃ" = தருப்பையையும், "ம்ருத்" = மண்ணினையும், "சர்ம" = தோலினையும், "புஷ்பம்" மலர்களையும், "குதபஃ" = கம்பளங்களையும், "கேசாஃ" = சாமரை கவரிகண் முதலியவற்றினையும் "தக்ரம் = உதஸ்வித்" = மோரினையும், "ஃஷம்" = சிங்கிமுதலிய விடத்தினையும், (எனவே வசநாபிமுதலியன) "க்ஷிதிஃ" = நிலத்தினையும், "கௌசேயம்"= கோசத்தாற் பிறந்தது = பட்டுகளையும், "நீலம்" = நீலத்தினையும், "லவணம்" = ஐவகைஉப்புகளையும், "மாம்ஸம்" = ஊனையும், "ஏகச஫ஃ" = குதிரை, கழுதை முதலியவற்றினையும், "ஸீஸம்"= ஈயமுதலிய வுலோகங்களையும், "ஶாகம்" = காய்கறி வகைகளையும், "ஔஷதி" =பச்சைப் பயற்றினையும், "பிண்யாகம்" = இலைக் கறிகளையும், "பஶுஃ" = காட்டுப் பசுக்களையும், "சந்தஃ" = சந்தனம் அகில்முதலிய வற்றினையும், வைசிய விருத்தியாற் பிழைக்கவேண்டினவனும் எப்பொழுதும் விற்றலாகாது. அவற்றுள், அரக்கு, உப்பு, ஊன் இம்மூன்றனையும் விற்றவனை ; அவையப் பொழுதே நிலைமை கெடுத்து விடுகின்றன. பால், தயிர், கள், இம்மூன்றும் விற்றவனையுடனே தாழ்ந்தசாதியா னக்குகின்றன. என்னெனில் ? ஈனசாதி சூத்திரன் என்பது.

அற்றன்று. இந்தயாஞ்ஞவற்கியவுரை ஆபத்து இல்லாதவே நியன்விற்றலாகாதென்று கூறியதன்றிச் சூத்திரனைப் பற்றிக்கூறி யதல்லவா மாதலின் மனுவுங்கூறினர். மநுஃ॥ "సమ్యక్ప్రతితిమాంసెన లాక్షయాలవణెనచ। త్ర్యహెానశూద్రొభవతిబ్రాహ్మణఃక్షీరవిక్రయీ। శూద్రస్తులవణా దీని విక్రీణన్నహిదుష్యతి" = ஊன், அரக்கு, உப்பு, இவைகளைவிற்ற வேதியன் முழுவதும் பிரஷ்டனே யாகின்றான். வேதியன் மூன்றுநாள் பால்விற்றால் சூத்திரனேயாகின்றான். உப்புமுதலிய வற்றினைச்சூத்திரன் விற்றாற்குற்ற முடையவ னவதில்லை. எறு. காண்க. [பால்விற்ற வேதியன் மூன்றுநாள்வரையிற் சூத்திரனாக விருக்கின்றான் என்பது சிலர் கருத்து.

சூத்திரன் வாணிபம்.

ஏவற்பணியால் பிழைப்பதற்குச் சத்தியில்லாத சூத்திர னுக்கு யாஞ்ஞவற்கியர் வாணிபத்தை விதித்தனர். యాజ్ఞవల్క్యఃll "శూద్రస్యద్విజశుశ్రూషా తయాజీవన్వణిగ్భవెత్। శిల్పైర్వావివిధైర్జీవెత్ ద్విజాతిహిత మాచరన్" = சூத்திரனுக்கு வேதியன் பணிசெய்வதே தருமம். அதனால் பிழைக்கமாட்டாதவன் வாணிகஞ்செய்யலாம். எந்தத் தொழிலால் இருபிறப்பாளர் ஏவலைத்தான் செய்யக்கூடுமோ? அப்படிப்பட்ட பல சிற்பத்தொழிலாலாயினும் பிழைக்கலாம். எறு. காண்க.

மனு. మనుఃll "అశక్నువంస్తుశ్రూషాం శూద్రఃకర్తుంద్విజన్మనాం। పుత్రదారా త్యయంప్రాప్తొ జీవెత్కారుకకర్మభిఃl యైఃకర్మభిస్తుచరితై శ్శుశ్రూష్యంతెద్విజాతయఃl తానికారుకకర్మాణి శిల్పానివివిధానిచ" = இருபிறப்பாள ரேவலைச்செய்யுந் திறமில்லாத சூத்திரன் மனைவி மக்களுக்குச் சீவனங் கிடை யாதஆபத்தினையடைந்தபோது, தச்சவேலை, மண்வேலை, உலோ கவேலை, முதலியவற்றாலாயினும் பிழைக்கலாம். நல்லஒழுக்கமு டையனத்தொழிலால் இருபிறப்பாளர் சேவிக்கப்படுகின்றாரோ? அப்படிப்பட்ட தச்சுமுதலிய காருகவினையாயினும், பலவகைப் பட்டசிற்பம் (எனவே படமெழுதல் முதலிய கைவேலையாயி னுஞ்செய்யலாம். எ-று. காண்க. (கூகூ)

சூத்திரன் விலக்கு.

మూ॥ విక్రీణన్మద్యమాంసాని హ్యభక్ష్యస్యచభక్షణం
కుర్వన్నగమ్యాగమనం శూద్రదీపతతిత్వ్ణాత్. ॥౯౪॥

மூ॥ కపిలాక్షీరపానేన బ్రాహ్మణీగమనేనచ
వేదాశ్వరవిచారేణ శూద్రదీపతతితత్త్వ ణాత్. ॥౬౫౫॥

என்பன. சூத்திரன் ஆபற்காலத்திலுஞ் செய்யலாகாதன கூறுகின்றன.

(இ-ள்). கள், ஊன், விற்றலும், தின்னப் படாதனவற்றைத் தின்றலும், புணரத்தகாதவளைப் புணர்ந்தாலும் சூத்திரன்அப் பொழுதே கெடுகின்றான். கபிலப்பசுவின் பால்குடித்தலி லும், அந்தணமாதினைப் புணர்தலாலும், வேதத்தை விசாரித்த லாலும் சூத்திரன் அந்தக்கணமே நிலைதவறினவனுவான். எ-று. காண்க.

"மத்யம்" =மத்தியமென்பது, பனங்கள், பலாச்சாறு, முந்தி ரிச்சாறு, இலுப்பைப்பூச்சாறு, பேரீச்சஞ்சாறு, தென்னங்கள், ஈச்சங்கள், முதலியவாகப் பலவகைப்படும்.

"அభక్ష్యం" = உண்ணலாகாதன. பசுவூன் முதலியன.

"అగమ్యా" = புணர லாகாதவள். அந்தணர் மாதுபோ ல்வாள். (சுருஉ)

சூத்திரதருமம் முற்றிற்று.

ఇతిశ్రీప రాశరస్మృతౌ ప్రథమాధ్యాయః॥ பராசரமிருதி முதலத்தியா யம் முற்றிற்று.

మాధవీయశ్లోకః॥ "ప్రఖ్యాతాహిపరాశరస్మృతి రిహస్మృత్యా గమాఖ్యాపనే ధర్మావర్ణచతుష్టయీబహుమతౌ సాధారణార్థా భిధా। ఆద్యస్త్వాహ్నికశిష్టనా మవిహి తష్టక్కర్మ పూర్వోపరణ పూర్వాధ్యాయనిరూపితం తదఖిలంవ్యాఖ్యా త్సుధీర్మాధవః॥

அம்மாதவிய சுலோகவுரை.

மிருதிகளால்வந்த ஆசாரங்களையும் (சுருதி மிருதிகளின் கருத்து) நன்றுவிளக்குவதில் பராசரமிருதி சிறந்ததாம். அத னுள் நான்குவருணத்தருக்கும் ஒத்த பொதுச்சிறப்புத் தருமங்